தாயுமானவர் இயற்றிய

பராபரக்கண்ணி



விரிவுரை

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

தாயுமானவர் இயற்றிய

பராபரக்கண்ணி

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்களின்
விரிவுரையுடன்

प्रज्ञानं ब्रह्म

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை-639 115
எலமனூர் ரயில்வே ஸ்டேஷன், திருச்சி மாவட்டம்.
1989

தபோவனத் தொடர் 128

முதல் பதிப்பு 1989 4000 பிரதிகள்

திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
காரியதரிசியால் பிரசுரிக்கப்பட்டது.

விலை ரூ. 22-00

தபோவன அச்சுப்பள்ளி, திருப்பராய்த்துறை.

4-3

முகவுரை

இந்த நில உலகமானது நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்து பூதங்களால் ஆனது. இவ்வுலகம் தோன்றித் தோன்றி மறையும் பாங்கு உடையது. ஆனால் இவ்வுலகிற்கு ஆதாரமாய் இருக்கிற பரவஸ்து யாண்டும் இருந்தது இருந்தபடி நிலைத்து இருக்கிறது.

இந்நில உலகம் முற்றிலும் நல்லதுமன்று; கெட்டதுமன்று. எப்பொழுதுமே நலம், கேடு ஆகிய இரண்டு பாங்குகளும் சேர்ந்து அமைந்து இருப்பது இதன் பாங்கு.

உயிர்கள் அனைத்தும் இவ்வுலகில் தோன்றியுள்ளன. அவைகளுள் சிற்றுயிர்கள் பேருயிர்களாகப் பரிணமிப்பது இப்பிரபஞ்சத்தின் பெருந் திட்டமாம். உலகை நடுநிலையில் இருந்துகொண்டு ஆராய்ந்து பார்க்கின்றவர்களுக்கு இவ்வுண்மை தெளிவுற விளங்கும்.

இவ்வுலகிலே நல்ல பொருள்கள் பல இருப்பது போன்று கெட்டவைகளும் உள. சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். கற்களுள் விஷம் நிறைந்தவைகள் உண்டு. அவைகளினின்று விலகி இருப்பதே நன்று.

இனி, நல்லியல்பு படைத்துள்ள கற்களும் இயற்கையில் இருக்கின்றன. அவைகளுள் சிலவற்றை எடுத்து மனிதன் தன் கழுத்தில் அணிந்துகொள்வானாகில் அவனைப் பிடித்துள்ள நோய் தானே மறைந்து பட்டுப்போம்.

நலலார்கள் உய்வு அடைவதற்கான உபாயங்கள் சிலவற்றை ஆன்றோர்கள் கையாண்டு இருக்கிறார்கள். அந்த முறைகளுக்குச் 'சமய அனுஷ்டானங்கள்' என்று பெயர். அவைகளுள் வேறுபாடுகளும் பல உள. ஆயினும் ஆன்றோர்கள் அமைத்து வைத்துள்ள முறைகள் அனைத்தும் நல்லவைகளேயாம். அவைகளை முறையாக அனுஷ்டிக்கின்ற அளவிற்கு மக்கள் மேலோர் ஆகின்றனர்.

இயற்கையிலே தாமாக விளைந்த கற்களுள் மரகதம், ரத்தினம், வைடூரியம் ஆகியவைகள் மகிமை மிக வாய்ந்தவைகளாம். அத்தகைய கற்களை ஆன்றோர்கள் வழிபாட்டிற்காகப் பயன்படுத்தி இருக்கிறார்கள். அரிய பெரிய தத்துவங்களுக்கு வடிவங்கொடுத்து இக்கற்களைச் செதுக்கி எடுத்து இருக்கிறார்கள். ஆன்றோர்கள் தவத்தின் வாயிலாக அவைகளுள் அருள்நிலையை வழங்கி இருக்கிறார்கள். பிராணப் பிரதிஷ்டை வாய்க்கப்பெற்ற அவைகள் 'அர்சாவதாரங்கள்' என்று அழைக்கப்படுகின்றன.

இத்தகைய வடிவங்களை காசி, ராமேஸ்வரம் போன்ற புண்ணிய ஸ்தலங்களில் பிரதிஷ்டை செய்து இருக்கின்றார்கள். இச்செயல் இந்து மதத்தின் தனிச் சிறப்பாம். பல்லாயிரக்கணக்கான மக்கள் பல்லாயிரம் ஆண்டுகளாக இத்தகைய புண்ணியத் தீர்த்தங்களுக்கு யாத்திரைபோய் பயனடைந்து வருகிறார்கள். இந்தப் புண்ணிய ஸ்தலங்களில் உறைந்து இருக்கும் தெய்வீக மகிமைகளை யாருமே எக்காலத்திலும் துடைத்துவிட முடியாது.

இதற்கு அனுபந்தமாக ஆன்றோர்கள் பாடிய அருள்நிறைந்துள்ள பாடல்கள் பல உள. அவைகளை ஓதி ஓதி ஆத்மசாதகன் மனபரிபாகம் அடைகிறான். எவ்வளவுக்கெவ்வளவு உள்ளுணர்ச்சியோடும், தூய மனப்பான்மையோடும் இந்த அருட்பாடல்கள் பயன்படுத்தப்படுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு சாதகன் முன்னேற்றமடைவது திண்ணம். அத்தகைய அரிய பெரிய நூல்களுள் ஸ்ரீ தாயுமானவர் பாடி அருளிய பராபரக் கண்ணிகள் ஒன்றாகும்.

அவை யாவும் தொகுக்கப் பெற்றுப் பொருத்தமான விளக்கங்களுடன் ஈண்டு வெளியிடப்பெறுகின்றன. பக்தர்கள் இந்த அரிய நூலை நன்கு பயன்படுத்தி முன்னேற்றம் அடைவார்களாக!

ஸ்ரீ தாயுமானசுவாமிகளின் வரலாறு

தமிழ் நாட்டிலே தஞ்சாவூர் மாவட்டக் கடற்கரை ஓரத்தில் வேதாரண்யம் என்னும் பெயர்படைத்துள்ள ஊர் ஒன்று இருக்கிறது. வேதாரண்யம் என்றால் வேதங்களை வளர்த்த வனம் என்று பொருள்படுகிறது. ஆதலால் இவ்வூரைத் 'திருமறைக்காடு' என்று அழைப்பது மரபு. இது சிறந்ததொரு சிவ க்ஷேத்திரமாகும். இவ்வூரிலே சுமார் முந்நூறு வருஷங்களுக்கு முன்பு சைவவேளாளர் குலத்துக்குரிய சகோதரர்கள் இருவர் இருந்தார்கள். அவர்களுள் மூத்தவர் பெயர் வேதாரண்ய பிள்ளை. இளையவர் பெயர் கேடிலியப்ப பிள்ளை. இப்பெயரை வடமொழியில் பெயர்த்து அமைத்தால் அக்ஷய குமாரர் எனப் பொருள்படும். அவருக்கு அமைந்திருந்த பெயருக்கு ஏற்பஅவர் குற்றம் சிறிதும் இல்லாத நல்வாழ்வு வாழ்ந்து வந்தார். கல்வியிலும் கேள்வியிலும் இவர் சிறப்புற்று விளங்கினார். வேளாண்மை இவருடைய குலத்தொழில் எனினும் இவருடைய ஊக்கத்தையும் நிர்வாகத் திறமையையும் காணலுற்ற பொதுமக்கள் அவ்வூரிலுள்ள சிவஸ்தல நிர்வாகத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இவரை வேண்டினார்கள். இறைபணியை ஒருபொழுதும் புறக்கணிக்கலாகாது எனக் கருதி அக்கடமையைக் கேடிலியப்ப பிள்ளை முழுமனதுடன் ஏற்றுக்கொண்டார். ஊக்கத்துடன் ஆண்டவனுடைய அந்த அரும்பணியை நிறைவேற்றி வந்தார். அப்பணியை இவர் ஏற்றுக்கொண்ட பிறகு ஆலயத்திலேயே புதியதோர் ஒழுங்குப்பாடும் துப்புரவும் தோன்றுவனவாயின.

அக்காலத்தில் திருச்சிராப்பள்ளியில் விஜயரங்கசொக்கநாத நாயக்கர் ஆட்சிபுரிந்து வந்தார். அந்த வேந்தர் கடலில் நீராடுதற்பொருட்டும், வேதாரண்யத்தில் எழுந்தருளியிருக்

கும் சிவனுரைச் சேவித்தல் பொருட்டும் அவ்வூருக்கு யாத் திரை போனுர். அரசருடைய வருகையைப் பற்றிக் கேள்வி யுற்ற கேடிலியப்பபிள்ளை பொருத்தமான கோவில் மரியாதை யுடன் அவரை வரவேற்ருர். வேதாரண்யத்தில் அந்த வேந் தர் வதிந்திருந்த காலமெல்லாம் அவருக்குத் தக்க முறையில் கேடிலியப்பபிள்ளை உபசாரங்கள் செய்து வைத்தார். கோவில் வழிபாட்டையும் அவ்வரசருக்கு முறையாக நிறை வேற்றி வைத்தார். வந்திருந்த விஜயரங்க சொக்கநாத நாயக் கர் கோவில் நிர்வாகியின் திறமையையும், அவர் கல்வி அறி வில் பெற்றிருந்த தேர்ச்சியையும் நன்கு கவனித்தார். அதன் விளைவாகக் கேடிலியப்ப பிள்ளையைத் திருச்சிராப்பள்ளிக்கு வந்து அரசாங்கத்தின் சம்பிரதி உத்தியோகத்தை ஏற்றுக் கொள்ளும்படி வேந்தர் வேண்டினுர். கேடிலியப்ப பிள்ளைக் குச் சம்மதம் தருவதைத் தவிர வேறு உபாயம் ஏதும் இல் லாது போயிற்று. வேதாரண்யத்தில் கோவில் நிர்வாகத் துக்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் தகுதிவாய்ந்த வேறு ஒருவரிடம் ஒப்படைத்துவிட்டு மன்னருடைய விருப் பத்துக்கு இணங்கிக் கேடிலியப்பபிள்ளை திருச்சிராப்பள்ளிக் குப் போகத் தீர்மானித்தார்.

கேடிலியப்பபிள்ளையின் வாழ்க்கைத் துணைவியாக வாய்த்தவர் கெஜவல்லியம்மை என்னும் மங்கை. இத்தம்பதி களுக்குத் தலைபேருக வாய்த்தவன் சிவசிதம்பரம் என்னும் மகன். கேடிலியப்பபிள்ளையின் தமையனுராகிய வேதாரண்ய பிள்ளைக்கு மகப்பேறு ஏதும் வாய்க்கவில்லை. ஆதலால் இக் குடும்பத்துக்குப் பேறு ஆக வாய்த்திருந்தவன் சிவசிதம்பரம் என்னும் ஒரே மகன். இப்பிள்ளையைப் பெற்ருேர் நேசித் ததைவிடப் பன்மடங்கு அதிகமாகப் பெரியப்பாவும் பெரியம் மாவும் நேசித்து வந்தார்கள். அதன் விளைவாகச் சிவசிதம்

பரத்துக்கும் பெரியப்பாவிடத்தும், பெரியம்மாவிடத்தும் பற்றுதல் மிகுந்திருந்தது. இந்தச் சூழ்நிலேக்கு இடைஞ்சல் ஏதும் ஏற்படாது இருத்தல் பொருட்டுக் கேடிலியப்ப பிள்ளே திருச்சிராப்பள்ளிக்குப் புறப்படுதற்கு முன்பே தம் செல்வனேத் தம் தமையனுருக்கு மனமுவந்து சுவீகாரம்செய்து வைத்தார். தமையனிடம் தம்பி வைத்திருந்த பேரன்புக்கும், மரியாதைக்கும் இது நல்லதோர் எடுத்துக்காட்டு ஆகும்.

திருச்சிராப்பள்ளியிலே அரசாங்கத்தில் சம்பிரதி உத்தியோகம் வகித்துவந்த கேடிலியப்ப பிள்ளேயும் அவருடைய மனேவியாரும் சிவபக்தி மிகப் பூண்டிருந்தனர். திருச்சிராப்பள்ளியிலே எழுந்தருளியிருக்கும் சிவனூர் பெயர் தாயுமான சுவாமிகள் என்பதாகும். உலகனேத்துக்கும் சிவனூர் தந்தை மட்டுமல்லர் தாயும் ஆனவர் என்பது இதன் பொருள். சிவனுருக்கு இப்பெயர் வந்ததற்கு ஐதிகம் ஒன்று யாண்டும் விளங்கி வருகிறது. சிவபக்தி பூண்டிருந்த செட்டிப்பெண் ஒருத்தி கருத்தரித்திருந்தாள். குழந்தை பிறப்பதற்கு முன்பு தன்னேப் பெற்றெடுத்த தாய் வந்து தனக்குத் தக்கமுறையில் உதவி புரியவேண்டும் என்று சிவனூரிடம் அப்பெண்மணி பிரார்த்தனே பண்ணிவந்தாள். காவிரி நதி அப்பொழுது பெருக்கெடுத்துப் பாய்ந்துகொண்டிருந்ததினுல் அவளேப் பெற்றெடுத்த தாய் குறித்த சமயத்தில் மகள் வீட்டுக்கு வந்து சேர முடியவில்லே. அக்குறையை நிறைவேற்றுவதற்கு அண்ட நாயகனுகிய சிவனூர் தாமே அந்தத் தாயின் வடிவத்தில் வந்து தம்முடைய பக்திமதியாகிய செட்டிப் பெண்ணுக்குப் பணிவிடை பண்ணினூர். அதனுல்தான் அவர் தந்தை மட்டும் அல்லர் தாயும் ஆனவர் என்னும் பெயர் பெற்றூர்.

சம்பிரதியாகிய கேடிலியப்ப பிள்ளேயும் அவருடைய வாழ்க்கைத் துணேவியும் காலே மாலே இரண்டு வேளேகளிலும்

மலைக்கோட்டையில் எழுந்தருளியுள்ள தாயுமானசுவாமி களிடம் பக்தி பூர்வமாகத் தங்களுக்கு மகப்பேறு ஒன்று வாய்க்கவேண்டும் என்று பிரார்த்தனை பண்ணி வந்தார்கள். கொஞ்ச காலத்துக்குப் பிறகு அவர்களுடைய வேண்டுதலுக்கு ஒப்ப அவர்களுக்கு ஆண் மகப்பேறு ஒன்று அமைந்தது. இறைவனாகிய தாயுமானசுவாமிகளின் திருவருளால் வாய்த்த மகப்பேறு ஆதலால் அந்தக் குழந்தைக்கும் தாயுமானவன் என்னும் நாமத்தைப் பெற்றோர்கள் சூட்டினார்கள்.

சிவபக்தி பூண்டிருந்த இத்தம்பதிகளுக்கு வாய்த்த செல்வனிடம் அங்க அடையாளங்களில் நிறை நிலைகள் பல தென்பட்டன. பரநாட்டத்தில் அவன் மேன்மை மிக எய்துவான் என்று ஜோதிட நிபுணர் ஒருவர் கணித்துச் சொன்னார். பெற்றோர்களுக்கு அது பெருமகிழ்வை உண்டுபண்ணிற்று.

தாயுமானவன் என்னும் இளைஞனுக்கு வயது ஐந்து பூர்த்தியானவுடன் பெற்றோர்கள் அவனுக்கு வித்யாரம்பம் செய்து வைத்தார்கள். திருச்சிராப்பள்ளியில் சிறப்பான பாங்கில் பாடசாலை நடாத்தி வந்த சிற்றம்பலதேசிகர் இந்த மாணாக்கனுக்கு முதல் ஆசானாக வாய்த்தார். கல்வியிலும், கேள்வியிலும் இம்மாணாக்கன் அறிவுத்திறம் மிக வாய்க்கப் பெற்றிருந்தான். நாள் ஏற ஏற கலைஞானமும் இச்சிறுவன் பால் அதிவேகமாக ஓங்கி வளர்ந்து வந்தது. தமிழிலும் சம்ஸ்கிருதத்திலும், கணித சாஸ்திரத்திலும், ஜோதிட சாஸ்திரத்திலும் நிபுணனாகத் தாயுமானவன் வடிவெடுத்து வந்தான். நாளடைவில் சைவ நூல்களாகிய தேவாரம், திருவாசகம், சைவ ஆகமங்கள், அருணகிரிநாதருடைய திருப்புகழ் முதலிய நூல்களையும் இவ்விளைஞன் கசடறக் கற்றுவந்தான்.

தாய் தந்தையர்களுக்கு வாய்த்திருந்தபடியே அவர்களுடைய அருட்செல்வனாகிய தாயுமானவனுக்கும் சின்னஞ்சிறு

வயதிலேயே தெய்வ பக்தி மிக அமைந்திருந்தது. நாள் தோறும் மலைக்கோட்டைச் சிவன்கோயிலுக்குச் சென்று இறைவழிபாடு பண்ணுவதும், திருவானைக்காவுக்குச் சென்று அகிலாண்ட நாயகியை வழிபட்டு வருவதும் இந்த இளைஞனுடைய நித்திய கர்மமாக அமைந்திருந்தன. ஒருநாள் இவன் மலைககோட்டையில் சிவனார் தர்சனம் செய்துவிட்டுக் கீழே இறங்கி வந்துகொண்டிருந்தபொழுது இடைவழியில் சான்றோர் ஒருவர் நின்றுகொண்டிருந்ததைக் கண்டான். காந்தம் ஊசியைக் கவர்ந்திழுத்தல் போன்று இந்த இளைஞனுடைய உவளத்தை அங்கு நின்றுகொண்டிருந்த முனிவர் அறவே கொள்ளைகொண்டுபோனார். அவருடைய முன்னிலையில் இளைஞன் ஐயம் சிறிதேனும் இன்றி வீழ்ந்து அஷ்டாங்க நமஸ்காரம் பண்ணினான். சின்னஞ்சிறு வயதிலேயே இவனை ஆட்கொள்ளவந்த பரமாசாரியர் ஆவர் அந்த முனிவர். அவர் பேசுவது மிகக் குறைவு. அவசியம் ஏற்படுகின்றபொழுது இரண்டொரு வார்த்தைகளுக்குமேல் அவருடைய வாயினின்று சொற்கள் வெளியே வரமாட்டா. ஆதலால் அவரை 'மௌன குரு' எனக் கருதி மாணாக்கன் அவருக்கு ஆட்பட்டான். அம்முனிவர் திருமூலர் மரபில் வந்தவர். ஆதலால் பிற்காலத்தில் இம்மாணாக்கன் பகர்ந்தருளிய பாடல்களில் 'மூலன் மரபில் வரு மௌன குருவே' என்று போற்றுதலைக் காண்கிறோம்.

குருவுக்கும் சிஷ்யனுக்கும் இணக்கம் ஆழ்ந்து வலுத்து வந்தது. आश्चर्यो वक्ता कुशलोऽस्य लब्धा "ஆச்சர்யோ வக்தா குசலோ அஸ்ய லப்தா" என்பது உபநிஷத் வாக்யம். ஞானக் கனியாய் இலங்கும் குருமூர்த்தி அரியருள் அரியராய் அமைகிறார். அவரிடமிருந்து ஞானப் பேற்றினை ஏற்றுக்கொள்ளும் சிஷ்யன் திறமைமிக வாய்க்கப்பெற்றவன் என்பது இந்த

உபநிஷத் வாக்யத்தின் உட்பொருளாகும். இக்கோட்பாடு இந்தக் குருவுக்கும் சிஷ்யனுக்கும் முற்றிலும் பொருத்த முடையதாகும். ஆட்கொள்ளப்பட்ட சிஷ்யன் தாயுமானவன் ஆத்ம சாதனங்களில் அதிவேக முன்னேற்றமடைந்து வந்தான். ஆழ்ந்து தியானம் பண்ணுவஃது, ஆசாரியர் மௌன குருவின் முன்னிலையில் அடக்க ஒடுக்கத்துடன் அமர்ந் திருந்து ஐயங்களை அகற்றிக்கொள்ளுதல், ஆட்கொண்ட வருக்குப் பக்திபூர்வமாகப் பணிவிடைகள் பண்ணுதல் ஆகியவைகள் ஒழுங்காக நடைபெற்று வந்தன. சிஷ்யன் தாயுமானவனிடம் தலைமாணுக்கனுடைய பாங்குகள்யாவும் நன்கு தென்பட்டன. இதற்கிடையில் குருவும் சிஷ்யனும் சிறிதுகாலம் பிரிந்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. பிரிவாற்ருமையை முன்னிட்டுச் சிஷ்யன் மனம் மிகக் குழம்பி இருந்தான் பிரிந்திருக்கும் இடைக் காலத்தில் சிஷ்யன் தன்னுடைய பிராரப்த கர்மங்களின் பெரும் பகுதி யைப் பூர்த்திபண்ணியிருப்பான் என்றும், அதன் பிறகு அமையும் குரு சிஷ்ய இணக்கத்தில் தெய்வீகச் சிறப்பு மிக வாய்த்திருக்கும் என்றும் குருமூர்த்தி உறுதிமொழி கூறினர். பிரியும் வேதனையில் குழம்பியிருந்த சிஷ்யனைப் பார்த்து "சும்மா இரு" என்று இயம்பிவிட்டுக் குருமூர்த்தி புறப் பட்டுப் போனர். இந்த உபதேசமொழி தாயுமான சுவாமி களின் பாடல்கள் பலவற்றிற்குப் பீஜமந்திரமாக அமைந் திருக்கிறது என்பது பக்திபூர்வமாக அப்பாடல்களை ஓது கிறவர்களுக்குத் தெளிவாக விளங்கும்.

தக்க வயது வந்திருந்ததினல் தாயுமானவனுக்கு மணம் முடித்துவைக்க வேண்டுமென்று பெற்ருேர்கள் விரும்பினர். செல்வனுடைய மனப்பாங்கு உலகப்பற்று அற்றதாக இருந்தது. ஆயினும் தாய் தந்தையருடைய விருப்பத்துக்குச்

செல்வன் உட்பட்டவனானன். அதற்கிடையில் இறைவனிடம் அவன் உலக பந்தபாசத்தில் அகப்பட்டுக்கொள்ளலாகாது என்னும் பிரார்த்தனையை ஊக்கத்துடன் செய்து வந்தான்.

தாயுமானவனுக்கும், மட்டுவார்குழலிஅம்மை என்னும் மங்கைக்கும் ஐதிகப்படி பெரியோர்கள் மணம் முடித்து வைத்தார்கள். தம்பதிகள் இருவரும் இல்வாழ்வை இனிது நடாத்தி வந்தார்கள். இல்லறத்துக்குரிய கடமைகளையும் அவர்கள் நன்கு நிறைவேற்றி வந்தார்கள். நாளடைவில் அவர்களுக்கு மகப்பேறு ஒன்று வாய்த்தது. அச்செல்வனுக்குக் கனகசபாபதி என்னும் நாமம் சூட்டினார்கள். ஆனால் தன் தாயின் பராமரிப்பில் இச்சிறுவன் வளர்ந்தவன் அல்லன். இவனை ஈன்று எடுத்த சில வருஷங்களுள் தாய் தேகவியோகமானாள். கனகசாபாபதிக்குத் தாயின் பராமரிப்பைத் தாண்டிய பருவம் இன்னும் வரவில்லை. ஆதலால் தாயுமானவனுடைய தமையன் சிவசிதம்பரமும், அவருடைய மனைவியும் இச்சிறுவனைப் பேணும் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர். இவ்விதத்தில் ஆத்மசாதகனாகிய தாயுமானவனுக்குப் பிராரப்த கர்மமாயிருந்த இல்வாழ்க்கை ஒரு போக்கில் அதிவிரைவில் முற்றுப் பெற்றது.

இதற்குச் சற்று முன்பே தாயுமானவனின் தந்தையாகிய கேடிலியப்ப பிள்ளை சம்பிரதி ஸ்தானத்தில் இருந்தபடியே உடலை நீத்துப் பரகதி அடைநதார். அது திருச்சிராப்பள்ளி அரசாங்கத்துக்குப் பெரிய நஷ்டமாயிற்று. அப்பதவிக்கு அவருடைய மைந்தனாகிய தாயுமானவனே தகுதி வாய்ந்தவன் என அறிந்திருந்த அரசர் அவனை அழைத்து அப்பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டினார். தன்னிடத்துப் பேரன்பும் பேரபிமானமும் வைத்திருந்த வேந்தருடைய வேண்டுதலை மறுக்கத் தாயுமானவனுக்கு இயலவில்லை. அரை மனதுடன்

அப்பொறுப்பை அவன் ஏற்றுக்கொண்டான். தன் தந்தையார் திறமையுடன் நிர்வகித்து வந்த உத்தியோகம் அது. அக்காரணத்தை முன்னிட்டே மைந்தனும் அத்துறையில் முன்னரே பட்டும் படாதும் சிறிது பயிற்சி பெற்றிருந்தான். இப்பொழுது அப்பொறுப்பு தன்மீது சுமத்தப்பட்டதை முன்னிட்டுத் தன் பெரும்பகுதி கவனத்தை அதனிடத்துச் செலுத்தினன். அதிவிரைவில் அதன் நிர்வாகம் யாவும் அவன் மனதில் படிந்தன. அதன் விளைவாக அந்த உத்தியோக நிர்வாகத்தில் மைந்தன் தந்தைக்கும் மிக்கான் ஆகிவிட்டான். இவ்வேளையில் அரசரும் திடீரென்று காலமானர். அரசருக்கு மகப்பேறு ஏதும் இல்லை. ஆதலால் அந்த அரசர் ஆணைப்படி அவருடைய ராணி மீனுக்ஷியம்மை நாட்டின் ஆட்சிமுறையை மேற்கொண்டாள். தகுதி வாய்ந்த சம்பிரதியும் ஏனைய மந்திரி பிரதானிகளும் வாய்த்திருந்ததினல் சிரமம் ஏதுமின்றி ராணிமீனுக்ஷி செங்கோல் செலுத்திவந்தாள்.

தாயுமான பிள்ளை என்னும் சம்பிரதி தம் போக்கில் ராஜப்பிரதிநிதி ஸ்தானத்தை வகித்து வந்தார். ஆட்சிமுறை யாவும் ஒரு விதத்தில் அவர் கையில் அடங்கியிருந்தன. ஆயினும் அவர் அதில் பற்று ஏதும் வைக்கவில்லை. உலக வியவகாரங்கள் அனைத்தும் அவருக்கு உப கடமைகளாக அமைந்திருந்தன. அவருடைய மனத்தின் பெரும்பகுதி பரநாட்டத்திலேயே ஈடுபட்டு இருந்தது. அப்படி அது ஈடுபட்டிருந்ததைக் கடலின் கீழ்ப்பகுதியோடு ஒப்பிடலாம். அவர் புரிந்துவந்த ராஜ்ய பரிபாலனங்களைக் கடலின் மேற்பரப்போடு ஒப்பிடலாம். அத்தகைய பண்பாடடைந்த பெருமகனைத் தாயுமான பிள்ளை இருந்து வந்தது உலகத்தவர்களுக்குத் தெரியாது.

அக்காலத்தில் அரசாங்க சம்பந்தமான அரிய பெரிய குறிப்புக்கள் பனையோலையில் பதிவு செய்து வைக்கப்பட்டிருந்தன. ஒருநாள் சம்பிரதியானவர் அத்தகைய அரிய அரசாங்கப் பத்திரம் ஒன்றை ஆராய்ச்சி பண்ணிக்கொண்டிருந்த பொழுது அதைத் தம்முடைய இரண்டு கரங்களாலும் கசக்கித் துகள்துகளாகப் பாழ்படுத்தினர். அருகில் இருந்த ஏனைய உத்தியோகஸ்தர்கள் இச்செயலைக் குறித்துத் தடுமாற்றமடைந்து தங்கள் வியப்பைத் தெரிவித்தனர்.

சம்பிரதியாருக்கு இப்பொழுது தாம் செய்த பிழையைப் பற்றிய உணர்வு ஒருவாறு மனத்தில் உதயமாயிற்று. அவர் இயம்பியதாவது: "திருவானைக்கா அம்பிகை அகிலாண்டேஸ்வரியின் துகிலில் வீழ்ந்து பற்றிய கற்பூரத் தீயைக் கசக்கி அணைக்க முயன்றேன்; என்னையறியாது என் கையிலிருந்த இந்த அரிய அரசாங்கப்பத்திரம் பாழ்படுத்தப் பட்டது. அதைக் குறித்து நான் மிகவும் வருந்துகிறேன்."

சிறிது நேரத்திற்குள் திருவானைக்காவிலிருந்து ஆங்கு நிகழ்ந்த சிறிய விபத்தைக் குறித்த செய்தி அரண்மனைக்கு வந்தது. அர்ச்சகர் கற்பூர தீபாராதனை பண்ணிக்கொண்டிருந்தபொழுது அந்த நெருப்புத் தவறி அம்பிகையின் ஆடையின்மீது வீழ்ந்தது. ஆடையும் தீப்பற்றிக் கொண்டது. சிரமப்பட்டு அது அணைக்கப்பட்டது. இதுவே அங்கிருந்து வந்த செய்தியாகும்.

சம்பிரதியின் செயலும், இந்த நிகழ்ச்சியும் ஒன்றை ஒன்று ஒத்து இருந்தன. இதை முன்னிட்டு அரண்மனையில் உத்தியோகஸ்தர்களிடத்திலும் அரசியாரிடத்திலும் பதை பதைப்பும் வியப்பும் எழலாயின. ராணி மீனாக்ஷி சம்பிரதியார் தாயுமானபிள்ளையைத் தகுந்த ஆசனத்தில் அமரச் செய்துஅவருடைய பக்தியையும், பரகாட்டத்தையும் பெரிதும்

பாராட்டினர். "தங்கள் ஆணைப்படி நாங்கள் அனைவரும் நடந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்" என்று ராணி யார் விண்ணப்பித்தார்.

"தாயே! இனி, என் மனம் உலக வியவகாரங்களில் செல்லாது. நான் முற்றிலும் பரத்துக்கு உரியவனாகும் காலம் வந்துள்ளது. என் போக்கில் போக எனக்கு அனுமதி கொடுப்பதே இவ்வரசாங்கம் எனக்குச் செய்யும் பேருபகார மாகும்" என்று சம்பிரதியார் தம் சித்தத்தில் இருந்ததைத் தெரிவித்தார். அவர் விருப்பப்படி வெளியேற அவருக்கு அரசாங்கத்தில் அனுமதி அரைமனதோடு வாய்ப்பதாயிற்று. இதுகாறும் நாடாளும் வேந்தன் ஸ்தானத்தில் இருந்த தாயுமானவர் இப்பொழுது துறவி வேந்தராக வெளியேறி னார். இதனோடு அவருடைய உலக வாழ்க்கை சம்பந்தமான பிராரப்த கர்மமும் பூர்த்தியாயிற்று.

இறைவனுடைய திருவருளுக்கு ஒப்ப மௌனகுரு மாமுனிவரும், அவரிடத்து ஏற்கனவே அடைக்கலம் புகுந் திருந்த தாயுமானத் துறவி வேந்தரும் இப்பொழுது ஒருவரை யொருவர் மீண்டும் சந்தித்தார்கள். இது ஒப்புயர்வற்ற இணக்கம். சிஷ்யனாக வாய்த்தவருடைய பிராரப்த கர்மங் கள் யாவும் முடிவு பெற்றுவிட்டன. ஆதலால் அவர் முற்றும் பரத்துக்கே உரியவரானார். அவரை ஆட்கொண்டவர் முன்பே கூறி இருந்ததும் அதுவே. கங்கை நதியில் யமுனாநதி சங்கமமாவது போன்று இப்பொழுது தாயுமான சுவாமிகள் மௌனகுருவிடம் சரண்புகுந்தார். சம்ய அனுஷ்டான ஐதி கப்படி குருவானவர் சிஷ்யனுக்குச் சந்நியாச ஆச்ரம சம்ஸ்கா ரங்கள் செய்து வைத்தார். அதன் பிறகு சிறிதுகாலம் குருவும் சிஷ்யரும் ஒன்று சேர்ந்து பாரமார்த்திக வாழ்வில் ஈடுபட்டு இருந்தனர். அன்னவர்களின் மேனிகள் வாழ்ந்திருந்தது

மண்ணுலகில். ஆனால் அன்னவர்களின் அந்தரங்க அமைப்புக்கள் பரநாட்டத்தில் முற்றிலும் ஒன்றுபட்டிருந்தன. ஏற்கனவே இயம்பிய உபநிஷத வாக்கியமாகிய "ஆச்சர்யோ வக்தா, குசலோஸ்ய லப்தா" என்னும் கோட்பாடு இப்பொழுது முற்றிலும் நிறைநிலை அடைவதாயிற்று.

தக்ஷிணாமூர்த்தியின் மானுடப் பிரதிநிதியாகிய மௌன குரு பேசாதிருந்தார். அவர் பேசாதிருந்தது ஆன்மீகப் பெருநிலை. அதற்கு நிகரான பரஞான வியாக்கியானம் வேறு ஏதும் இல்லை. அத்தகைய மௌனோபதேசம் அதிவிரைவில் மாணாக்கருடைய மன அமைப்பைச் செப்பனிட்டு வந்தது. சூரிய உதயத்தில் யாரும் புகட்டாமலேயே பாருலகின் அமைப்பு அனைத்தும் உள்ளபடி தென்படுவது போன்று பரதத்துவங்கள் யாவும் சிஷ்யர் உள்ளத்தில் தெற்றென விளங்கின. அந்தத் தத்துவ சொரூபமாகவே சிஷ்யரும் விரைந்து திருந்தி அமைந்து வந்தார்.

குருவும் சிஷயரும் பரசொரூபத்தில் அத்வைத நிலையை அடைந்தான பிறகு திருமேனி தாங்கிய இவ்வுலக இணக்கத்துக்கு அவசியம் ஏதுமில்லை. ஆகவே திருமேனிகள் இரண்டும் ஒன்றினின்று மற்றொன்று பிரிந்து போயின. அது எங்ஙனம் நிகழ்ந்தது என்பதை நில உலகத்தார் யாரும் அறியார். அறியவேண்டிய அவசியமும் இல்லை.

சந்நியாசஆச்ரமம் பூண்டநாள் முதற்கொண்டு தாயுமான சுவாமிகள் வெறும் கௌபீனதாரியாக இலங்கினர். அக்கோலத்திலேயே பல ஆண்டுகள் திருச்சிராப்பள்ளியில் அவர் வசித்து வந்தார். அதே ஊரில் அரசனுக்கு அடுத்த ஸ்தானத்தில் உலக வைபவங்கள் யாவும் சிறப்பாக அமையப் பெற்றவராக ஆரம்பத்தில் சில ஆண்டுகள் அவர் வசித்து வந்தார். அத்தகையவருக்கு இவ்வுலக வாழ்வு வெறும்

விளையாட்டு என்னும் மனத்தெளிவு வாய்க்கப்பெற்றிருந்தால் ஒழிய வெறும் ஆண்டியாக அதே ஊரில் வாழ அவருக்கு இயலாது. ஆனால் அவர் அப்படி வாழ்ந்திருந்ததே அவர் பெற்றிருந்த பரிபாகத்துக்கு எடுத்துக்காட்டு ஆகும். பூர்வத்தில் இருந்த பகட்டான பார் உலகவாழ்வைப் பாராட்டியவர்களுள் ஒரு சிலர் அவருடைய பரதேசி வாழ்வைப் பார்த்து அவரைப் பைத்தியம் எனக் கருதி எள்ளி நகையாடினர். வேறு சிலர் அவருடைய வைராக்கியத்தைப் பாராட்டிப் போற்றினர். ஆனால் தாயுமான சுவாமிகள் தூற்றுதலையோ போற்றுதலையோ பொருட்படுத்தவில்லை. தாம் அடைந்திருந்த பாரமார்த்திகப் பரிபாகத்துக்கு ஏற்ப அவருடைய மனம் யாண்டும் அதீதத்திலேயே நிலவி இருந்தது.

உடைமை ஏதும் இல்லாதவராக வெறும் கௌபீனதாரியாகத் திருச்சிராப்பள்ளியில் தற்செயலாய் வாய்த்த பிக்ஷான்னத்தைப் புசித்துப் பிரபஞ்ச வாழ்வில் சிறிதும் கருத்தைச் செலுத்தாதவராகப் பரபோதத்திலேயே யாண்டும் திளைத்திருந்தார். குளிர்காலத்தில் அதிகாலையில் போர்வையேதும் இல்லாது நடமாடிக்கொண்டிருந்த அவர் மேனியின்மீது அன்பர் ஒருவர் விலை உயர்ந்த காஷ்மீர்சால்வையைச் சாத்தினர். சிலதினங்களுக்கு அச்சால்வை தாயுமானவர் தேகத்தின்மீது இடம் பெற்றிருந்தது. அடுத்த சிலதினங்களுள் அதே சால்வையைக் கட்டழகு வாய்ந்த வேலைக்காரி ஒருத்தி அணிந்துகொண்டு வந்ததைச் சிலர் கவனித்தனர். அந்தச் சால்வை அவளுக்கு எப்படி அகப்பட்டது என்று விசாரித்தார்கள். தன் உடலை மூடப் போதிய அளவு துணியில்லாது காலை வேளையில் வீதியில் அவள் நடுங்கிக்கொண்டு வந்தபொழுது பரதேசி ஒருவர் அதைத் தனக்குக் கொடுத்ததாக அவள் தெரிவித்தாள். அப்படி விசாரித்தவர்கள்

முற்றத்துறந்த தாயுமான சுவாமிகளிடம் சென்று அவருக்குக் கொடுத்திருந்த சால்வையின் கதி என்ன ஆயிற்று என்று கேட்டார்கள். அதற்கு அச்சான்றோர் கொடுத்த விடையாவது: "அன்னை பராசக்தி அகிலாண்டேஸ்வரி அன்றொரு நாள் குளிரில் நடுங்கிக்கொண்டு அதிகாலையில் வீதியில் வந்தாள். நான் வணங்கும் தெய்வமாகிய அந்த அம்பிகைக்கு அதை நான் சாத்தினேன்." ஒரே உலகம் அவரவர் மனப்பான்மைக்கு ஏற்ப வெவ்வேறு காட்சி கொடுக்கிறது என்பதற்கு இது நல்லதோர் எடுத்துக்காட்டு ஆகும்.

சான்றோர்கள் சாதாரணமாகக் கையாளுகிற முறைப்படி தாயுமான சுவாமிகளும் தமிழ் நாட்டிலுள்ள சில புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை சென்றார். ஞானிகள் இம்முறையைக் கையாளுவதால் பார் உலகில் ஆங்காங்குப் பக்குவப்பட்டிருக்கிறவர்களுக்குச் சான்றோரின் சேர்க்கை பெருநலனை விளைவிக்கிறது.

யாத்திரை போய்க்கொண்டிருந்த தாயுமான சுவாமிகள் திருச்சிராப்பள்ளிக்குத் தென்மேற்கில் உள்ள விராலிமலைக்குச் சென்றிருந்ததாகவும், அங்குச் சித்தர்கள் சிலருடைய கூட்டுறவு இவருக்கு வாய்த்ததாகவும் கர்ண பரம்பரைச் செய்தி நிலவி வருகிறது. தென்திசையில் இவர் செய்த தீர்த்த யாத்திரையின் முக்கிய நோக்கம் இராமேஸ்வரத்தைச் சென்று தரிசித்தல் பொருட்டேயாம். அந்த ஸ்தலத்துக்குத் தேவை என்பது மற்றொரு பெயர். ஆங்கு எழுந்தருளி இருக்கும் அன்னை பராசக்திக்குப் பர்வத வர்த்தினி என்பது பெயர். 'மலைவளர்காதலிப்பெண் உமையே' என விளித்து இவர் பாடியுள்ள பாடல்கள் ஆத்ம சாதகர்களுக்கு என்றென்றும் அருள்விருந்து ஆகும்.

பிறகு இராமநாதபுரத்துக்குத் திரும்பி வந்து தம்முடைய வாழ்க்கையின் இறுதிப் பகுதியைப் பரநிஷ்டையில் கழித்து

வந்தது தாயுமான சுவாமிகளின் வாழ்க்கையில் நிகழ்ந்த இறுதிச் செயலாகும். பரபோதத்தில் மூழ்கிய்வராக அவர் இவ்வூரில் யாக்கையை ஒதுக்கித் தள்ளிவிட்டுப் பரத்தினில் இரண்டறக் கலந்தார். அவருடைய திருமேனி இராமநாத புரத்துக்கு வெளிப்பட்டணமாக இருக்கும் பகுதியான லக்ஷ்மி புரம் என்னும் ஊரில் சமாதி வைத்துத் திருக்கோயில் எழுப்பப் பெற்றிருக்கிறது.

இதுகாறும் பலப்பல திருக்கூட்டத்தார்களால் நிர்வகிக் கப்பட்டு வந்திருக்கும் இந்தச் சமாதித் திருக்கோயில் ஸ்தா பனம் இப்பொழுது திருப்பராய்த்துறை, ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனத்தின் நிர்வாகத்துக்கு வந்துள்ளது.

சுபகிருது வருஷம் தை மாதம் விசாக நக்ஷத்திரத்தன்று ஸ்ரீ தாயுமான சுவாமிகள் மகாசமாதி அடைந்தார். சரித்திர வரலாற்றின்படி விஜயரங்க சொக்கநாதர் திருச்சிராப்பள்ளி யில் அரசாண்ட காலம் கி. பி. 1704 முதல் 1731 வரையிலா கும். இந்த அரசரது காலத்தில் கேடிலியப்பபிள்ளை சம்பிரதி யாக உத்தியோகம் பார்த்திருக்கிறார். சுமார் கி. பி. 1707ல் தாயுமானவர் இவருக்குப் பிள்ளையாகப் பிறந்திருக்க வேண் டும். விஜயரங்க சொக்கநாதரின் மனைவி ராணி மீனாக்ஷி அரசாண்ட காலம் கி. பி. 1731 முதல் 1736 வரையிலாகும். இந்த ராணியின் ஆட்சி முடிவதற்கு முன்பே தாயுமானவர் சம்பிரதி உத்தியோகத்தினின்று விடுபட்டுத் துறவியாகக் கிளம்புகிறார். அப்பொழுது தாயுமானவருக்கு வயது சுமார் முப்பது. கி.பி. 1736ஆம் ஆண்டிற்குப் பிறகு வரும் சுபகிருது வருஷத்தில் ஸ்ரீ தாயுமான சுவாமிகள் மகாசமாதி அடைந் துள்ளார். அது கி. பி. 1783 ஆக அமைகிறது. எனவே ஸ்ரீ தாயுமான சுவாமிகளின் காலம் கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டாகும்.

பராபரக் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

1. சீராரும் தெய்வத் திருவருளாம் பூமி முதற்
பாராதி யாண்ட பதியே பராபரமே.

சீர் ஆரும் - ஒழுங்குப்பாடு நிறைந்துள்ள. பார் ஆதி-நிலவுலகு முதலாக.

அனைத்தையும் தன்னகத்தடக்கி அனைத்துக்கும் மேலாக இருக்கும் பெரிய பொருளே, நீ ஏழு ஞானபூமிகளாக இலங்குகின்றாய். அவையாவும் ஒழுங்குப்பாடே நிறைந்திருக்கின்றன. பொன்னால் செய்த நகைகளெல்லாம் பொன்மயமாய் இருப்பது போன்று ஏழு ஞானபூமிகளிலும் தெய்விகமே திகழ்கிறது. ஜீவாத்மாக்களைப் படிப்படியாகப் பக்குவப்படுத்துதற்கென்றே அந்த ஞானபூமிகள் அமைந்திருப்பதால் அவையாவும் திருவருள் நிறைந்தவைகளாம். நமக்குக் கண்கூடாக விளங்கும் இந்த நிலவுலகம் ஏழு ஞான பூமிகளில் அடங்கியிருக்கிறது. இதன் முறையான இயக்கமே இறைவன் இதை ஆண்டுவருகிறார் என்பதற்கு அறிகுறியாகும். இதற்குத் தலைவா, கட்புலனாகின்ற இப்பாருலகின் வாயிலாகவே உன் மகிமை புலனாகிறது என்பது கருத்து.

2. கண்ணாரக் கண்டோர் கருப்பொருள் காணுமலருள்
விண்ணூடி ருந்தவின்ப வெற்பே பராபரமே.

கருப்பொருள்-பிறவிக்கூறு. வெற்பு-மலை.

அதீதத்திலிருக்கும் பரம்பொருளே, நீ யாண்டும் அசையாது இருக்கிறாய். வெற்பு அல்லது மலையைச் சான்றாக வைத்துக்கொண்டே உன் பெருமையைக் கிரகிக்கவேண்டும். மலைக்கு அசலம் என்று பெயர். எக்காரணத்தை முன்னிட்

டும் அது அசைவதில்லை. அதுபோன்று நீ அசையாப் பொருள். மேலும் உன்னை ஆனந்தகிரி எனல் வேண்டும். ஜீவர்களின் ஆனந்தம் அசையும் தன்மையது. உனது ஆனந்தமோ யாண்டும் அகண்டாகாரமாய் இருந்து வருகிறது. நீ சிதாகாசம். ஆதலால் விண் என்னும் அடைமொழி உனக்கே பொருந்தும். உயிர்களை ஓம்புவதால் நீ அருட்பெருவெளியாகின்றாய். இத்தகைய பெருமை வாய்ந்த நீ வெறும் கற்பனை வஸ்து அல்லன். அனுபூதியில் ஆன்றோர்கள் உன்னை அறிந்துள்ளனர். ஆதலால் அவர்கள் கண்ணாரக் கண்டோர் எனப் போற்றப்படுகின்றனர். உன்னை அனுபூதியில் அறிகின்றவர்களுக்குப் பிறவிப்பெருங் கடல் பொருளற்றதாகிறது. ஆதலால் அன்னவர்கள் கருப் பொருள் காணாதார் ஆகின்றனர். அத்தகைய பெருமை வாய்ந்த உன்னை உன்னி உன்னி உய்தல் வேண்டும்.

3. சிந்தித்த எல்லாமென் சிந்தை அறிந்தே உதவ
வந்த கருணை மழையே பராபரமே.

அனைத்துமாய் இலங்குபவனே, அனைத்துக்கும் அப்பாலுமாய் இருப்பவனே, உன்னைக் கருணை மழையே என்று கூறுவது பொருந்தும். மழை பெய்வதாலேயே உடல் எடுத்துள்ள உயிர் வகைகள் உணவு பெற்று வாழ்ந்து வருகின்றன. ஐம்பூதங்களில் ஒன்றாகிய மழையை உனது கருணை எனல் வேண்டும். அதற்குமேல் ஜீவர்களைப் பக்குவப்படுத்துவதை முன்னிட்டு உன்னைக் கருணை மழை என்று கூறுவது முற்றிலும் பொருந்தும். ஆசையினால் தூண்டப்பெற்று எனக்குச் சிந்தனை வளர்ந்தது. ஆதலால் என் சிந்தனையும் ஆசையும் ஒன்றேயாம். பல பிறவிகளில் நான் ஆசைப்பட்டவைகளை எல்லாம் நீ அன்பு கூர்ந்து நிறைவேற்றி வைத்தாய். ஏதேனும் ஓர் ஆசைப்பொருள் அகப்பட்டபொழுதெல்லாம்

எனக்கு நிரந்தரமாகத் திருப்தி வாய்க்குமென்று அப்பொழுது கருதினேன். ஆனல் பிரபஞ்சப் பொருள்களில் நான் நிரந்தரமான திருப்தியைப் பெறவில்லை. அனுபவித்து, அனுபவித்து ஒவ்வொரு பொருளையும் நான் ஒதுக்கிவைத்தேன். புதியது புதியதாக நான் விரும்பிய பொருள்களை நீ எனக்காகப் படைத்து வைத்தாய். அவையாவையும் பெற்று அனுபவித்து இப்பொழுது ஆசையைத் துடைத்த நிலையில் இருக்கின்றேன். இனி, எனக்கு நிலையற்ற உலகப் பொருள்களில் ஆசையில்லை. உன்னையே நான் நாடி நிற்கின்றேன். எனக்குப் பாரமார்த்திகப் பெருவாழ்வு வழங்கக் காத்திருக்கும் கருணை மழை நீயாவாய்.

4. ஆரா அமுதே அரசே ஆனந்த வெள்ளப்
பேராறே மோனப் பெருக்கே பராபரமே.

ஆரா அமுது-தெவிட்டாத பெருவாழ்வு, மோனம்-பிரபஞ்ச ஓசைகளையெல்லாம் கடந்த அதீத நிலை.

பெரிய பொருளே, உன்னோடு யோகம் பண்ணுவதற்கேற்ப உனது மகிமை தெளிவுற விளங்குகிறது. நான் உலக வாழ்வை நாடிய பொழுது நீ உணவு என்னும் அமிர்தமாய் இருந்து என்னை ஆதரித்து வந்தாய். உணவு உண்டதனலேயே எத்தனையோ கோடி உலக வாழ்வு எனக்குச் சாத்தியமாயிற்று. ஆனல் வல்வினை தேய்ந்ததும் உடலை மேலும் காப்பாற்ற எனக்கு இயலவில்லை. தளர்ந்த தேகத்திலும் அதைப் பேணுதற்கான உணவின் நாட்டமும் ஒவ்வொரு பிறவியிலும் என்னை விட்டு அகன்று போயின. ஆதலால் முடிவுறும் அமிர்தமாக உலகில் நான் பெற்ற உணவு இருந்து வந்தது. இப்பொழுதோ உலக வாழ்வை ஒதுக்கி வைத்துவிட்டு நான் உன் சொரூபத்தில் ஒன்றுபட்டவனாக இருக்கின்றேன். அமுது என்னும் சொல் உபசாரத்

துக்காக உணவுக்கு வழங்கப்படுகிறது. உண்மையான அமிர்தம் நீயே. ஏனென்றால் நீ தெவிட்டாதவன். உன்னைப் பெற்றபின் உன்னை இழப்பது கிடையாது. ஆதலால் நீ ஆரா அமுதாக இலங்குகின்றாய். பிறவிகள் பல எடுத்துக்கொண்டிருந்தபொழுதும் நீ என்னைக் காத்து ஆண்டாய். பிறவிகளை ஒதுக்கி வைத்துவிட்டு உன்னைச் சார்ந்திருக்கிற பொழுதும் நீ என்னை ஆண்டு வருகின்றாய். ஆதலால் உன்னை அரசே, என்று அழைப்பது பொருந்தும். உலகில் எத்தனை எத்தனையோ பொருள்களினின்று நான் ஆனந்தத்தைப் பெற்றேன். அப்பொருள்களும் அழிந்துபட்டுப் போயின; அவைகளினின்று நான் பெற்ற ஆனந்தமும் அழிந்துபட்டுப்போயிற்று. அவைகள்பால் நான்பெற்ற ஆனந்தத்தைச் சிற்றின்பம் எனல் வேண்டும். உன்னை அடையப் பெற்றான பிறகு நான் பேரானந்தம் துய்க்கிறேன். சிற்றோடை ஒன்று மாரிக்காலத்தில் நீர்ப்பெருக்கெடுத்து ஓடுகிறது; கோடைக்காலத்தில் அது வறண்டு போகிறது. ஆனால் கங்கை போன்ற பேர் ஆறு அல்லது மகாநதியோ எக்காலத்திலும் நீர்ப்பெருக்கெடுத்துப் பாய்ந்துகொண்டிருக்கிறது. நீ கங்காதரன். அதன் வாயிலாக ஆனந்த வெள்ளத்தை நீ விளக்கிக்கொண்டிருக்கின்றாய். ஆனந்தம் பெருகப் பெருக அது மௌனமாக வடிவெடுக்கிறது. அகண்டாகாரமாக விரிவடைகின்ற ஆனந்தம் ஆழ்ந்த மௌனமாகத் திகழ்கிறது. உன்னை மோனப் பெருக்கு என்று பகர்வதும் பொருந்தும். அத்தகைய அண்ணலே, உன்னை நான் அடையப்பெற்றவன் ஆகின்றேன்.

5. ஆரறிவார் என்ன அனந்தமறை ஓலமிடும்
பேரறிவே இன்பப் பெருக்கே பராபரமே.

பரம்பொருள் மானுட அறிவிற்கு எட்டாததென்பது வேதங்கள் அனைத்தின் முடிவாகும். மானுட அறிவைச்

சிற்றறிவு என்றும் மானுடனைக் கிஞ்ஜிக்ஞன் என்றும் வேதங்கள் சாற்றுகின்றன. ஆழாக்கைக்கொண்டு எப்படிக் கடலை அளக்க முடியாதோ அப்படி மானுட அறிவைக் கொண்டு பேரறிவாக அல்லது சர்வக்ஞனாக இருக்கின்ற இறைவனை அறிந்துகொள்ளமுடியாது. வாலறிவன் என்னும் பதம் பரமனை முற்றிலும் விளக்கமாட்டாது. மேலும் பரம்பொருளை ஆனந்தம் என்று விளக்குகின்றவிடத்தும் அவ்விளக்கம் முழுமையானதாகாது. பரம்பொருளின் அகண்டாகாரமாயுள்ள ஆனந்தத்தை யாரே விளக்க வல்லவர்?

6. உரையிறந்த அன்பருளத் தோங்கொளியா யோங்கிக்
 கரையிறந்த இன்பக் கடலே பராபரமே.

வேதநூல் அறிவைக் கொண்டு பரம்பொருளை எவ்வளவுதான் விளக்கினாலும் அந்த விளக்கம் பரவஸ்துவின் எல்லைப்புறத்தையும் எட்டுவதில்லை. பரம்பொருள் தன் மஹிமையைத் தானே விளக்கவேண்டும். தக்ஷிணாமூர்த்தியாக எழுந்தருளியுள்ள பரசிவம் மௌனோபதேசம் பண்ணுகிறார். அவரது மகிமை சொல்லில் அடங்காதது என்பது அதன் பொருள். அத்தகைய வியாக்கியானத்தை அறிய வருகிற அன்பர்கள் தாங்களும் சொல்லிறந்தவர்களாக மௌனத்தில் திளைத்திருக்கின்றனர்.

7. எத்திக்குந் தானாகி என்னிதயத் தேயூறித்
 தித்திக்கும் ஆனந்தத் தேனே பராபரமே.

எல்லாத் திக்குகளிலும் நிறைந்துள்ள இறைவன் மானுட நெஞ்சத்திலும் நிறைபொருளாய் நிறைந்துள்ளான். மானுடன் அனுபவிக்கின்ற தெவிட்டாத ஆனந்தமே பரம்பொருளாம். அது நாவால் சுவைக்கின்ற தேனோடு ஒப்பிடப்படுகின்றது. உணவுவகைகளுள் தேன் குற்றமற்றது. அங்ஙனம்

ஞானங்களுள் பரஞானம் குற்றமற்றது. பரஞானத்திற்கு மதுவித்யா என்று பெயர்.

8. திக்கொடுகீழ் மேலும் திருவருளாம் பொற்பறிந்தோர்
கைக்குள்வளர் நெல்லிக் கனியே பராபரமே.

திருவருளை அதாவது பொற்பை அனுபூதியில் அறிகின்ற சான்றோர்களுக்கு இறைவன் உள்ளங்கை நெல்லிக் கனி போன்றவன். பரவஸ்து எத்தகையது என்பதை அதை அடைந்தவர்கள் அறிந்துகொள்கின்றனர். அடையப்பெற்றவர்களுக்கு கைக்குள் வளர் நெல்லிக்கனி போன்றது அது.

9. முத்தே பவளமே மொய்த்தபசும் பொற்சுடரே
சித்தேஎன் னுள்ளத் தெளிவே பராபரமே.

முத்தும் பவளமும் நீரினுள் உருவெடுக்கின்ற செல்வங்களாகின்றன. பொன் நிலத்தினின்று எடுக்கின்ற செல்வமாகிறது. மொய்த்தல் என்னும் சொல்லுக்குக்கொடுத்தல் என்பது அர்த்தம். மண்ணினின்று எடுத்த பொன்னுக்குப் பளபளப்பைத்தர மனிதனுக்கு இயலுகிறது. சித் என்னும் சொல் அறிவு சொருபமாகிய ஆன்மாவைக் குறிக்கிறது. மானுட சரீரத்தில் நீர்த்தத்துவம், நிலத்தத்துவம் ஆகிய இரண்டு பூதங்களும் முக்கியமான இடம் பெறுகின்றன. அத்தகைய மானுட உடலினின்று சித் அல்லது அறிவுப் பொருளாகிய ஒப்பற்ற செல்வத்தைத் தோற்றுவிக்க மனிதனுக்கு இயலுகிறது. "உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்" என்பது ஆப்தவாக்கியம். கட்புலனாகாத ஆத்மாவானது கட்புலனாகின்ற முத்து, பவளம், பசுஞ்சுடர் நிறைந்த பொன் ஆகியவைகளோடு ஒப்பிடப்படுகிறது. ஆத்மபோதம் ஓங்குதற்கு ஏற்ப உள்ளத் தெளிவு அதிகரிக்கிறது. ஜீவர்களுக்கிடையில் உள்ள வேற்றுமை மனத்தெளிவை அடிப்படை

யாகக் கொண்டது. மனம் தெளிவடைவதற்கேற்ப ஜீவன் மேல்நிலையடைகிருன். முற்றிலும் தெளிந்த நிலையில் ஜீவன் சிவ சொரூபம் ஆகின்ருன். தோன்ரு நிலையிலிருந்து தோன்றி யுள்ள நிலைக்கு ஆத்மபோதம் உயர்வது இக்கண்ணியில் அடங்கியிருக்கிறது.

10. கண்ணே கருத்தேயென் கற்பகமே கண்ணிறைந்த
விண்ணே ஆனந்த வியப்பே பராபரமே.

உடலமைப்பில் உயர்ந்த நிலையைப் பெற்றிருப்பது கண். புறஉலகம் முழுதையும் பார்த்துப் பொருள்படுத்துதற்கு அது உதவுகிறது. கண்ணுக்கு அதிஷ்டான தெய்வமாக இருப்பது சூரியன். சூரியன் இல்லாவிட்டால் உலகம் விளக்கப்பெறமாட்டாது. கண்ணில்லாவிட்டால் சூரியனல் விளக்கப்பெறுகிற உலகம் காணப்பெறமாட்டாது. புறத்தில் சூரியனும் மானுட அமைப்பில் கண்ணும் சேர்ந்திருப்பதனல் உலகம் பொருள்படுத்தப்படுகிறது. அத்தகைய கண்ணேடு பரமாத்மா ஒப்பிடப்படுவது பொருத்தமானது. புறக்கரணங் களில் முக்கியமானது கண். அதேபாங்கில் அந்தக்கரணத் தின் முக்கியமான செயல் சிந்தனை. சிந்தனையானது ஈண் டுக் கருத்து என்று கூறப்பட்டிருக்கிறது. கருதுவது அல் லது எண்ணுவது மனிதனுடைய சிறந்த செயலாகிறது. கருத்து மேன்மையுறுதற்கேற்ப மனிதன் மேலோன் ஆகி ருன். கருத்தின் உச்சநிலை வாலறிவு என்றும் பிரக்ஞானம் என்றும் பகரப்பெறுகிறது. இந்த இரண்டு சொற்கள் பரவஸ்துவையே குறிப்பனவாம். கற்பகம் என்பது ஒரு அலாதி மஹிமை வாய்ந்த விருக்ஷம். அது தேவலோகத்துக் குரியது என்று சிறப்பித்துக் கூறப்படுகிறது. உண்மையில் கற்பகவிருக்ஷம் ஜீவர்கள் அனைவர் உள்ளத்திலும் இருக் கிறது. விரும்பியனவெல்லாம் வழங்கவல்லது கற்பகவிருக்ஷம்.

ஒவ்வொரு ஜீவனும் அணு உயிர்நிலையில் வாழ்வைத் துவக்கிப் படிப்படியாக மேல்நிலைக்கு வருகிறான். அந்த மேல்நிலைகளை யெல்லாம் அவனுக்குத் தந்தது அவன் உள்ளத்தில் குடிகொண்டிருக்கின்ற கற்பக விருக்ஷம் என்று கூறப்பெறுகிற பரம்பொருளேயாம். விண் என்பது ஆகாசம். ஐம்பூதங்களுள் அது மிக சூட்சுமமானது. எங்கும் வியாபித்திருக்கின்றது. ஜடப்பொருள் எனினும் பரம்பொருளுக் கண்மையில் இருப்பதால் பரம்பொருளின் தன்மையெல்லாம் அதனிடத்திருக்கிறது. நுண்ணியதில் நுண்ணியதாய் இருப்பது; நீக்கமற எங்கும் நிறைந்திருப்பது; கர்மங்களையெல்லாம் கடந்திருப்பது ஆகாசத்தின் இயல்பு. ஒரே ஒரு பாங்கில் ஆகாசத்துக்கும் பரமாத்மாவுக்கும் வித்தியாசம் இருக்கிறது. பிரபஞ்சத்தோடு கூடிய ஆகாசம் ஜடஆகாசம் எனப்படுகிறது. உணர்வற்ற நிலையிலிருக்கும் வெளி என்பது அதன் பொருள். பின்பு பரமாத்மா சித் ஆகாசம் என்று அழைக்கப்பெறுகிறார். அறிவுப் பெருவெளி என்பது அதன் பொருள். கண்நிறைந்த விண்ணே என்று சிதாகாசத்தைத் தாயுமானவர் கூறுகின்றார். கண்நிறைந்த விண் சிதாகாசத்துக்குப் பொருத்தமான மொழிபெயர்ப்பாகும். பரம்பெருளுக்கு ஏற்றவாறு முற்றிலும் பரிபாகமாயிருக்கின்ற ஜீவாத்மாவிடம் ஆனந்தமானது தடைப்படாத பெருநிலை யெய்துகிறது. அத்தகைய பேரானந்தத்தை 'ஆனந்த வியப்பே' என்கிறார் அண்ணல்.

11. வாக்காய் மனதாய் மனவாக் கிறந்தவர்பால்
தாக்காதே தாக்குந் தனியே பராபரமே.

வேத வேதாந்தங்களெல்லாம் பரவஸ்துவைப்பற்றிய வாக்காய் அமைந்திருக்கின்றன. ஆதலால் கருவிகளுள் பெரிய கருவியாகிய வாக்கானது கடவுளோடு ஒப்பிடப்படு

கிறது. வாக்கின் துணைகொண்டு வருகிற கருத்தை ஏற்க வல்லது மனது. நல்ல மனம் படைத்திருப்பவர்களும் நல்ல ஜீவாத்மாக்களாகின்றனர். மனதை மகோன்னத நிலைக்குக் கொண்டுபோவது சாத்தியம். பரமனுடைய சாந்நித்தியத் துக்கு அருகிலே செல்லவல்லது மனது. வாக்கினின்று பெற்ற கருத்தைப் பயன்படுத்தி மனது அந்த உயர்நிலையை எய்துகிறது. உயர்நிலையில் தங்களது அரிய பெரிய செயல் களைச் செய்துமுடித்துவிட்டு மனதும் வாக்கும் செயலற்று நின்றுவிடுகின்றன. இந்த அரிய அனுபவத்தை 'மனம் வாக்கு இறந்தவர்கள்பால் தாக்காதே தாக்கும் தனியே' என்று தாயுமானவர் பகர்கின்றார்.

12. பார்த்தவிட மெல்லாம் பரவெளியாய்த் தோன்ற
வார்த்தைசொல்ல வந்த மனுவே பராபரமே. [வொரு

மனு என்னும்சொல் மந்த்ரம் என்று பொருள்படுகிறது. பரஞானத்தை அடையப்பெற்ற குருவானவர் பரஞானம் அடைவதற்குப் பக்குவமாய்க்கொண்டிருக்கின்ற சிஷ்ய னுக்கு மஹாவாக்கியம் உபதேசம் பண்ணுகிறார். அது மந்த்ரங்களுள் மேலானது. எதை நீ நாடுகின்றாயோ அது வாகவே நீயும் இருக்கின்றாய் என்பது அந்த மஹாவாக்கி யத்தின் கருத்தாகும். அக்கருத்தினை உன்னி அதன் மயம் ஆகும் ஆத்மஞானி காண்கின்ற காட்சி ஈண்டு விளக்கப் படுகிறது.

13. வானந்தம் மண்ணினந்தம் வைத்துவைத்துப் பார்க்க
ஆனந்தம் தந்த அரசே பராபரமே. [வெனக்கு

பிரபஞ்சம் ஐந்து பூதங்களினின்று உருவெடுத்திருக் கிறது. மாயாகாரியங்களாகிய பூதங்களைந்தும் ஒடுங்கு

மிடத்துப் பரவஸ்துவே எஞ்சிநிற்கிறது. அப்பரவஸ்துவோ ஆனந்த சொருபம். அப்பரவஸ்துவே ஜீவாத்மனுடைய நிஜ சொருபமாகிறது. மாயாகாரியங்களை ஒதுக்கி வைத்துப் பார்க்குமிடத்துப் பரவஸ்துவின் சொருபமாகிய ஆனந்தமே எஞ்சிநிற்கிறது. அதை அரசே! என்றழைப்பது பக்தியின் பாங்கு ஆகும். சுசுப்தி அல்லது கனவற்ற உறக்கத்திலும் இந்த ஆனந்தம் ஓரளவு அனுபவத்திற்கு எட்டுகிறது.

14. அன்பைப் பெருக்கியென தாருயிரைக் காக்க வந்த
இன்பப் பெருக்கே இறையே பராபரமே.

ஜீவாத்மன் படைத்திருக்கின்ற குறுகியநிலை சங்கோசம் எனப்பகரப்படுகிறது. சுருங்கியநிலை என்பது அதன் பொருள். ஜீவாத்மனுடைய குறுகியநிலை விரிவடைந்த நிலையாகத் திருந்தியமைவதற்கு உபாயம் ஒன்றுண்டு. தன் மீது வைத்துள்ள அன்பைத் தன் உறவினர்களுக்கும் உரிய அன்பாக விரித்தல் வேண்டும். பிறகு தொடர்பு வைக்கும் ஜீவர்கள் அனைத்திடத்திலும் வைக்கின்ற அன்பாக அது விரிவடைய வேண்டும். அன்பு விரிவடைவதற்கேற்ப உயிர் வாழ்க்கைக்கு வலிவு அதிகம் உண்டாகிறது. ஜீவகோடிகள் அனைத்தையும் நேசிக்கிற பாங்கு ஆத்மசாதகனுக்கு வந்தமையுங்கால் அவன் அருமையாகக் கருதுகின்ற உயிரும் அழிவற்றதாக மேலோங்குகிறது. பிறவுயிர்களிடத்து அன்பு பாராட்டுதற்கு ஏற்ப ஆனந்தம் தன்னிடத்து ஓங்குவதை ஆத்மசாதகன் அனுபவத்தில் காண்கின்றான். 'அன்பும் சிவமும் ஒன்று' என்பது ஆப்த வாக்கியம். 'ஆனந்தமும் பரமும் ஒன்று' என்பதும் ஆப்தவாக்கியம். ஆதலால் அன்பை வளர்க்கின்றவர்கள் எல்லாரும் பரம்பொருளைச் சாரும் பாங்குடையவர் ஆகின்றனர்.

15. வானமெல் லாங்கொண்ட மௌனமணிப் பெட்டகத்துக்
கானபணி யான அணியே பராபரமே.

வானம் என்பது சிதாகாசம். பேச்சற்றநிலை மௌனம் எனப்படுகிறது. பரவஸ்துவுக்கு அமைந்துள்ள விளக்கங்களுள் மௌனமும் ஒன்று. இயற்கைக்கு அப்பால் இருப்பதனிடத்தே மௌனம் சாத்தியமாகிறது. பேசாதிருக்கும் மனிதன் மௌனத்தில் இருப்பதாகச் சொல்லப்படுகிறுன். ஆயினும் உண்மையில் அவனிடத்து மௌனமில்லை. தன் காதுகளைக் கைவிரல்களால் அடைத்துக்கொண்டு தன் உடலினுள் அவன் கவனத்தைச் செலுத்தினுல் ஆங்கு எவ்வளவு ஓசை உண்டாய்க்கொண்டிருக்கிறது என்பதைக் காண்பான். அதேபாங்கில் பிரபஞ்சம் முழுதும் ஓசைமயம். பிரபஞ்சத்திலுள்ள சலனமே அதற்குக் காரணமாகும். எது சலித்துக்கொண்டிருக்கிறதோ அது ஓசையை உண்டு பண்ணுகிறது. பரப்பிரம்மம் ஒன்றே சலனமில்லாதது. ஆதலால் அதனிடத்து ஓசையில்லை. தக்ஷிணுமூர்த்தி மௌனியாய் வீற்றிருப்பதன் உட்பொருள் அதுவாம்.

மேம்பட்ட நிலையில் இருக்கிற பொருள் ஒன்று மணியெனப் போற்றப்படுகிறது. இங்கு மௌன மணிப்பெட்டகம் என்று பகரப்பெறுவது தேங்கிய தூய நிலையில் உள்ள ஹிருதய கமலமாம். பணி, அணி என்று இரண்டு பதங்கள் இக்கண்ணியில் வந்துள்ளன. இவ்விரண்டு சொற்களும் ஆபரணத்தைக் குறிக்கின்றனவெனினும் அமைப்பில் சிறிது வேற்றுமை இருக்கிறது. அதிசயக்கத்தக்க வேலைப்பாட்டின் விளைவாக வந்திருப்பது பணி. ஈண்டுப் பணி என்னும் சொல் பரமனையே குறிக்கிறது எனினும் அப்பரமன் வேலைப்பாட்டின் விளைவாக வந்த காரியப்பொருள் அல்லன். சாதனங்

கள் பல புரிந்தது பணி அல்லது பணிவிடையாகும். சாதனம் என்னும் அரும்பெரும் வேலைப்பாட்டின் விளைவாக மனது நன்கு திருந்தியமைகிறது. நன்கு திருந்தியமைந்த மனது அருமையான ஆபரணத்துக்கு ஒப்பானது. அத்தகைய மனதினுள் பரம்பொருள் யாண்டும் குடிகொண்டிருக்கிறது. பண்பட்ட மனதிலோ அதன் சொரூபம் உள்ளபடி வெளியாகிறது. அதற்கு நிகரான நகை வேறு ஒன்றும் இல்லை என்பது அப்பொழுது வெளியாகிறது. அணி அல்லது நகை என்று அப்பொருள் ஒன்றைத்தான் குறித்துச் சொல்லவேண்டும். பரம்பொருள் என்னும் அணியோ யாண்டும் தன்மயமாகச் சுடர் விளக்காக ஒளிர்ந்து கொண்டிருக்கிறது. அதற்கேற்ற பெட்டகமாக மனதைத் திருத்துவது செயற்கரிய செயலாம்.

16. ஓடும் இருநிதியும் ஒன்றாகக் கண்டவர்கள்
நாடும் பொருளான நட்பே பராபரமே.

உடைந்த மட்பாண்டத்தை ஓடு என்கிறோம். அது ஒன்றுக்கும் உதவாது. ஈண்டு இருநிதி என்பது பெரிய திரவியம். வெள்ளி, தங்கம் இரத்தின வகைகள் இருநிதி எனப்படுகின்றன. நகைகள் பண்ண அவைகள் உதவுகின்றன. நாணயம் பண்ணுவதற்கும் வெள்ளியும் பொன்னும் பயன்படுகின்றன. நகைகளையும் நாணயங்களையும் வேண்டும் பொழுதெல்லாம் புதுப்பிக்கலாம். ஆயினும் மூலகாரணமாய் இருக்கிற அந்த நிதிக்கு மதிப்புப் போவதில்லை. ஆதலால் உலகத்தவர் ஓட்டைப் புறக்கணிக்கவும், இருநிதியைப் பாராட்டவும் செய்கின்றனர். ஆனால் ஞானிகளின் காட்சி வேறானது. பரம்பொருளை அனுபூதியில் கண்டவர்கள் ஞானிகள். பரம்பொருளின் திருக்காட்சி அடையப் பெற்றவர்க்குப் பிரபஞ்சத்தின் காட்சி மாறியமைகிறது.

ஓட்டுக்கும் பொன்னுக்குமிடையில் அவர்கள் உயர்வு தாழ்வு காண்பதில்லை. பரம்பொருளே பிரபஞ்சமாகக் காட்சி கொடுக்கிறது. ஜடம் சேதனம் என்று சொல்லப்படுபவை கள் யாவும் சின்மயமாக மிளிர்கின்றன. சின்மயமாக மிளிரும் பரவஸ்துவினிடத்தில் ஞானிகள் பேரன்பு வைக் கின்றனர். அப்பரவஸ்துவானது ஈண்டு நட்பு என்று பாராட்டப்படுகிறது. அகம் புறம் ஆகிய எங்குமே சித்சொரு பத்தைப் பரஞானிகள் காண்கின்றனர். மெய்ப்பொருள் ஒன்றே யாவுமாய் மிளிர்கிறது. அம்மெய்ப்பொருளிடத்து ஞானியர்கள் பேரன்பு வைத்து அம்மெய்ப்பொருள் மயமாய் மிளிர்கின்றனர்.

17. சித்த நினைவும் செயும் செயலும் நீ எனவாழ்
உத்தமர்கட்கு ஆன உறவே பராபரமே.

சித்த நினைவு என்று குறிப்பிடுவது மனதின் செயலா கிய சூட்சும கர்மமாம். காயத்தைக் கொண்டு செய்யும் செயல் ஸ்தூல கர்மம். சித்த நினைவே பிறகு செய்யும் செய லாக வடிவெடுக்கிறது. ஜீவாத்மனாகிய மனிதன் கர்ம சொரு பியாய் இருக்கிறான். சூட்சும சரீரமாகிய மனதிலும், ஸ்தூல சரீரமாகிய சரீரத்திலும் அவனது கர்மம் சதா நிகழ்ந்து கொண்டு இருக்கிறது. சத்கர்மத்தின் வாயிலாகத் தன்னை உயர் நிலைக்கு எடுப்பது வாழ்க்கையின் குறிக்கோள். பிறகு கர்மத்தையும் ஒரு பந்தமாகக் கருதி கர்ம அதீதத்திற்குப் போவது வாழ்க்கையின் முடிந்த குறிக்கோள் என்பது ஐதிகம்.

பசு, பதி, பாசம் என்னும் முப்பொருள் உண்மையை நிலைநாட்டுபவர்கள் கர்மத்தைப் பாசத்தோடு சேர்க்கின்ற னர். ஆனால், கர்மயோகக் கோட்பாடு அக்கொள்கை யினின்று சிறிது மாறுபடுகிறது. சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம்,

திரோதானம், அனுக்கிரகம் ஆகிய பஞ்சகிருத்தியங்கள் ஈசன் செயல்கள் ஆகின்றன. அச் செயல்களை முன்னிட்டு ஈசன் ஜீவாத்மனைப் போன்று கர்மத்தில் தளைக்கப்பட்டவன் அல்லன். அகிலாண்டம் எங்கும் நிகழ்ந்து வருகின்ற செயல்கள் ஈசனுடைய செயல்கள் என்பது ஞானியர் களுடைய அனுபவம். ஈசன் செயல் ஈசனைப் பந்தப்படுத்து வதில்லை. ஈசன் செயலே ஜீவாத்மாக்களின் மூலமாக நிகழ்ந்து வருகிறது என்பதை அறிகிற கர்மயோகிகள் கர்மம் செய்துகொண்டு இருக்கும்பொழுதும் கர்மத்தில் பந்தப்படுவது இல்லை. ஆட்சி முறையும் அரசனும் ஒன்றாகக் கருதப்படுவது போன்று ஈசனும் ஈசன் செயலும் ஆத்ம சாத கர்களால் ஒன்றாகக் கருதப்படுகின்றன. தங்களைக் கருவி களாக வைத்துக்கொண்டு ஈசன் தன் செயலைச் செய்து வருகின்றான் என்று கர்மயோகிகள் கருதுகின்றார்கள். கர் மமே கடவுள் சொரூபமாகக் கருதப்படுகின்றது. அத்தகைய பேரறிவு வாய்க்கப்பெற்றவர்களே உத்தமர்கள். இறைவ னோடு தங்கள் கர்மத்தின் வாயிலாக உறவு கொண்டாடவும் தகுதியுடையவர்கள் அன்னவர்களேயாம். அத்தகைய கர்மங் களிலிருந்து பாசம் என்கின்ற கீழ்மை அகலுகிறது. கர்மத் தைக் கடவுள் எனக் காண்கின்ற மேன்மை உருவெடுக் கிறது. வினைத்தளை என்பது அன்னவர்களுக்குப் பொருளற் றது. அன்னவர்களின் உறவும், சூட்சும கர்மமும் ஸ்தூல கர்ம மும் கடவுளின் சொரூபமேயாம்.

18. போதாந்த புண்ணியர்கள் போற்றி சயபோற்றி
வேதாந்த வீட்டின் விளக்கே பராபரமே. [யெனும்

உணர்ச்சியோடு செய்கின்ற செயல்களுக்குப் போதம் என்னும் பெயர் வந்துள்ளது. ஆனால் போதம் என்பது பெரிதும் சூட்சும சரீரமாகிய மனதுக்குள்ளேயே நிகழ்கின்ற

நிகழ்ச்சியாம். போதாந்தம் என்பது மனதின் உணர்ச்சிக்கு அப்பால் உள்ள நிலை. போதத்தின் அந்தம் போதாந்தம் எனப்படுகிறது. தீ சுடர்விட்டு எரிவதற்கு நிகர் மனதின் போதம். தீ எரிந்து ஓய்ந்து போவதற்கு நிகர் போதாந்தம். மனதற்றநிலை போதாந்தம் எனப்படுகிறது. மனோ நாசம் அமையப்பெற்றவர்களெல்லாம் புண்ணியாத்மாக்களாம். இறைவனைக் குறித்து அப்பெருமக்கள் 'போற்றி! ஜய போற்றி!' என்று வாழ்த்துவது மனதின் கடைசிச் செயல் ஆகிறது. மனோ நாசம் உண்டுபண்ணுவதற்குக் கடவுள் வழிபாடே உற்ற உபாயமாகின்றது.

வேதம் என்பது அறிவுமயமாய் இருக்கின்ற ஜீவாத்மனையும், ஜகத்தையும் குறிக்கின்றது. ஜகத்தையும் ஜீவனையும் பொருள்படுத்துவது மனது. மனதற்ற நிலை போதாந்தம். ஜகத்தும் ஜீவனும் வேத சொரூபமாய் இருப்பதால் அவை இரண்டும் ஒடுங்கியநிலை வேதாந்தம். வேதத்தின் அந்தமே வேதாந்தம் எனப்படுகிறது. பரவஸ்துவிற்குப் போதாந்தம் என்பதும் வேதாந்தம் என்பதும் அடைமொழிகளாம். பரவஸ்து வீடு என்றும் ஞானவிளக்கு என்றும் போற்றப்படுகின்றது.

19. முத்தாந்த வீதி முளரிதொழும் அன்பருக்கே
சித்தாந்த வீதிவருந் தேவே பராபரமே.

முந்தாந்த வீதி - மோக்ஷமார்க்கம். முளரி – தாமரை. சித்தாந்த வீதி – சித்தம் அல்லது மனது ஒடுங்கிய இடம். முக்தியை நாடுகின்ற பரம பக்தர்கள் தங்களுடைய மனது என்னும் எழில் நிறைந்த மலரைக்கொண்டு சதா பரமனைத் தொழுது கொண்டிருக்கின்றனர். மலர்போன்று மனது தூயது ஆதற்கு ஏற்ப வழிபாட்டில் அது ஆழ்ந்து ஈடுபடுகின்றது. அப்பொழுது தற்போதம் பரபோதமாக மேலோங்கு

கிறது. அப்படித் தொழுவதின் விளைவாகத் தூய மனது பர வஸ்துவில் கரைந்து போகின்றது. மனது மறைந்துபோன நிலையில் பரவஸ்துவாகிய நீயே எஞ்சி நிற்கின்றாய். வழிபடு பவர் வழிபடு தெய்வத்தில் ஒன்றுபடுவது வழிபாட்டின் விளைவு ஆகும்.

20. ஈனம் தரும்உடலம் என்னதுயான் என்பதற
ஆனந்தம் வேண்டி அலந்தேன் பராபரமே.

அலந்தேன்-துன்பப்பட்டேன்.

மனிதன் உண்மையில் ஆத்ம சொரூபம். அக்ஞானத் தால் அவன் வினையை வளர்த்தான். வினையின் விளைவாக உடல் உண்டாயிற்று. அந்த உடலே சிறுமைகள் அனைத் திற்கும் இருப்பிடமாயிற்று. அணு உடலில் ஜீவபோதத்தைத் துவக்கி மானுட உடல் எடுக்கும் வரையில் அவ் உடலைத் தான் என்றும் தனது என்றும் அகங்காரத்தையும் மமகாரத் தையும் வளர்த்து ஜீவாத்மன் எத்தனை எத்தனையோ துன் பங்களுக்கு ஆளானான். அவ்வத் துன்பங்களின் வாயிலாக அவன் அடைந்துள்ள நலனும் ஒன்றுண்டு. சிற்றுயிர் மய மாக இருந்த உடலை பேருயிர் மயமான உடலாக உயர்த்து தற்கு அகங்காரமும் மமகாரமும் பயன்பட்டன. தான் அல் லாத உடலைத் தான் என்று கருதுவது அகங்காரம். தன் னுடையன அல்லாத உலகப்பொருள்களைத் தன்னுடையவை களாகக் கருதுவது மமகாரம். ஜீவன் எடுத்த எண்ணிறந்த உடல்களின் வாயில்களாக மின்னல் போன்று அப்போதைக் கப்போது சிறிது ஆனந்தத்தை அனுபவித்தான். ஆனந்தம் இம்மியளவென்றால் துன்பம் மலையளவு மிகப்பெரியதாம். பகுத்தறிவு படைத்த மனிதன் ஆன பிறகு விவேகத்தால் அகங்காரத்தையும் மமகாரத்தையும் ஒழித்தல் வேண்டும். அப்பொழுது பேரானந்தம் தானாக நிலைபெற்றிருக்கிறது.

பரம்பொருளே! அத்தகைய பேரானந்தத்தை நாடி நிற்கின்றேன்.

21. என்புருகி நெஞ்சம் இளகிக் கரைந்து கரைந்து
அன்புருவாய் நிற்க அலந்தேன் பராபரமே.

மானுட அமைப்பில் ஐம்பூதங்களால் ஆகிய ஸ்தூல சரீரமும், ஐம்பூதங்களின் தன்மாத்திரைகளாகிய சூக்ஷ்ம சரீரமும் இடம்பெற்றிருக்கின்றன. மேனி, ஸ்தூல சரீரம் எனப்படுகிறது. நெஞ்சம் சூக்ஷ்ம சரீரமாகிறது. உடல் உள்ளம் ஆகிய இவ்விரண்டிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. உடல் உறுதி பெற்ருல் உள்ளமும் உறுதிபெறுகிறது. உடல் தளர்வுற்ருல் உள்ளமும் தளர்வுறுகிறது. இனி உள்ளத்தில் ஏற்படுகின்ற விகாரங்களுக்கும் மாறுபாடுகளுக்கும் ஏற்ப உடலிலும் மாறுதல் உண்டாகின்றது. காமம், கோபம் போன்ற சிறு நிலைகளை முன்னிட்டு உடல் உருகுவதுண்டு. உடலிலுள்ள எலும்பும் உருகுவதுண்டு. உள்ளத்தில் பெருங் குழப்பமும் அதன் விளைவாக வந்தமைகிறது. உடல், உள்ளம் ஆகிய இரண்டையும் உருக்கும் தன்மை பக்திக்கும் உண்டு. பக்தியின் வசப்பட்டு உருகுவதால் தெய்வீகம் ஓங்குகிறது. காமக் குரோதங்களால் உருகுவதால் அரக்க இயல்பு ஓங்குகிறது. இறைவா! எனது உடலும் உள்ளமும் பக்தியின் மேலீட்டால் கரைந்து கரைந்து உருகவேண்டுமென நான் உன்னை நாடி வருந்தி நிற்கின்றேன்.

22. சுத்த அறிவாய்ச் சுகம் பொருந்தின் அல்லால் என்
சித்தம் தெளியாதுஎன் செய்வேன் பராபரமே.

சுத்த அறிவு—சுத்த சைதன்யம். சித்தம் — மனம்.

பரவஸ்து சுத்த சைதன்யம் என்றும், வாலறிவு என்றும், பிரக்ஞை என்றும், பிரக்ஞானம் என்றும் பகரப்பெறுகின்

றது. அந்தச் சுத்த சைதன்யமானது சித்தம் அல்லது மனதில் பிரதிபலிக்கின்றபொழுது அல்ப சுகமாகவும், துக்கமாக மாறும் தன்மை உடையதாகவும் அமைகிறது. இதற்குச் சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். சந்திரனுடைய பிம்பம் தெளிந்த நீரில் உள்ளபடி தென்படுகிறது. அலை வீசுகின்ற நீரிலோ சிதறடைந்த சந்திரனைப் பிரதிபலிக்கின்றது. மனதில் உண்டாகின்ற கொந்தளிப்புகள் யாவும் அக்ஞானத்தில் தோன்றியவைகளாம். அந்த மனத்தைச் சுத்த சைதன்யத்தில் லயப்படுத்துமளவு அது தெளிவடைகிறது. விகாரப்பட்ட அறிவு, சுத்த அறிவாக நடுநிலை எய்துகிறது. மனதை உலக வியவகாரங்களில் செலுத்துகின்ற அளவு அது கொந்தளிப்பு அடைகிறது. அதற்கு ஏற்பச் சுத்த சைதன்யத்தைப் பிளவுபட்டது போன்று தோற்றுவிக்கும் தன்மையும் அதனிடத்து உண்டு. புறவுலகில் உலவுகின்ற சித்தத்தை ஆத்ம சொரூபத்தில் ஒடுங்கும்படி செய்யுமிடத்து இயல்பாக உள்ள பரமசுகம் தானாகத் தோன்றுகின்றது. மனவொடுக்கமும் ஆத்மாவின் ஆனந்தமும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டிருக்கின்றன. ஈசா! நான் மனம் தெளிந்த ஆத்மானந்தத்தில் திளைத்திருப்பேனாக.

23. மாறாஅநுபூதி வாய்க்கின் அல்லால் என்மயக்கம்
தேறாதுஎன் செய்வேன் சிவமே பராபரமே.

அநுபூதி – பரமாத்ம சொரூபத்தைத் தனது நிஜ சொரூபம் என நேரில் உணர்வதாம். பரவஸ்து ஒன்றே யாண்டும் இருந்தபடி இருக்கிறது. மனதில் உண்டாகிற விகாரத்தை முன்னிட்டு விகாரப்படாத பரவஸ்து விகாரப்பட்டது போன்று காட்சிகொடுக்கிறது. கோணலான கண்ணாடியில் நேராயுள்ள முகம் திரிவுபட்டது போன்று தென்படுவதற்கு நிகர் அக்காட்சி. தன்மயமாயுள்ள ஆத்மா மனது என்னும்

கண்ணுடியின் வாயிலாகக் கணக்கற்ற விகாரங்களை எடுத் திருப்பதாகக் காட்சிகொடுக்கிறது. (விகாரமான தோற்றங் கள் மன மயக்கத்தின் விளைவு ஆதலால்) பிரபஞ்சமாகத் தென்படுகின்ற காட்சிகளெல்லாம் மனமயக்கத்தின் விளைவு களாம். பாம்பாகத் தென்படுகின்ற வேளையிலும்கயிறு பாம் பாக மாறவில்லை. அது கயிருகவே இருக்கிறது. ஆதலால் இடைபருது ஆத்மசொருபத்தையே தரிசித்து அதில் திளைத் திருக்குங்கால் மனதின் மயக்கம் ஒழிந்து பொருளின் நிஜ ஸ்வருபமே எஞ்சி நிற்கிறது. அத்தகைய பரமஅனுபூதியை நான் வணங்கும் சிவமே! எனக்குத் தந்தருளுவாயாக.

24. தாகம்அறிந்து இன்பநிட்டை தாராயேல் ஆகெடுவேன்
தேகம் விழுந்திடின்என் செய்வேன் பராபரமே.

தேகம் எப்பொழுது வேண்டுமானாலும் அழியும் பாங்கு உடையது என்கின்ற பேருண்மையை ஞாபகத்தில் வைப்ப தற்கு ஏற்ப அருள் தாகம் உள்ளத்தில் உருவெடுக்கிறது. பருக நீர் வேண்டுமென்று தாகமெடுக்கின்றபொழுது அதற்கு மனிதன் எத்தகைய அரும்பாடுபடுகிருனே அதே பாங்கில் பரமனைக் குறித்து அருள்தாகம் வளருமாகில் அது வாய்ப் பதற்கரிய பேறு ஆகும். அதன் வேகத்திற்கு ஏற்றவாறு பாரமார்த்திகத்தில் மனிதன் விரைந்து முன்னேற்றம் அடை கின்ருன். சாதகனுடைய நாட்டத்திற்கு ஏற்றவாறு இறை வன் அருள் சுரக்கிருன். தாகத்தால் வருந்துகின்றவன் நீர் பருகிய பிறகு பரம திருப்தி அடைகிருன். அங்ஙனம் அருள் தாகம் நிறைவேறப் பெற்றவனுக்கு வீடுபேறு வாய்க்கிறது. மானுடப் பிறவியின் குறிக்கோள் அதுவே. அதை அடை யப்பெருதவன் கெட்டொழிந்தவனுகிருன். இந்த நெருக் கடியான நிலையை உள்ளம் கனிந்த பிரார்த்தனையாகத் தாயுமானவர் பரமனிடம் சமர்ப்பிக்கிருர்.

25. அப்பாஎன் எய்ப்பில்வைப்பே ஆற்றுகிலேன் போற்றி [என்று
செப்புவதல் லால்வேறென் செய்வேன் பராபரமே.

எய்ப்பு-வறுமைக்காலம். வைப்பு-சேகரித்த செல்வம். ஆற்றுகிலேன் என்பதன் அடிப்படைக் கருத்து. உலக வாழ்க்கையில் ஏதேதோ வரும் துன்பத்தை முன்னிட்டுச் சகிக்க முடியாமல் உலகத்தவர்கள் புலம்புவதுண்டு. அதே பாங்கில் பக்தனும் அருள்பேறு வாய்க்கவில்லை யென்று புலம்புவதுண்டு. பக்தன் தன்னுடைய வருத்தம் முழுவதை யும் தெய்வத்திடத்து மட்டும் தெரிவிக்கிறான். அப்பா என் னும் சொல் உலகத் தந்தைக்கு உரியதாய் இருப்பதைவிட அருள் தந்தையாகிய இறைவனுக்கு உரியதாகிறது. இளமையில் சம்பாதித்த செல்வம் முதுமையில், வறுமையில் உதவுகிறது. ஆனால் அது அழியும், அபகரிக்கும் பாங் குடையது. இறைவனைக் குறித்து எய்ப்பில் வைப்பு என்று இயம்புவது முற்றிலும் பொருத்தமானது. எல்லாப் பிறவி களிலும் எய்ப்பில் வைப்பாக இருப்பவன் இறைவன். மனம் தளர்வுற்றிருக்கும் காலமெல்லாம் எய்ப்பில் வைப்பாக இருப் பவன் இறைவன். அப்படி இறைவனைக் குறித்துத் தன் குறைநிலையை முறையிட்டுக் கதறிப்பதறி அழுகின்றவர்கள் பாக்கியவான்கள். அத்தகையவர்களுக்கு இறைவனிட மிருந்து உறுதியாக ஆறுதல் வருகிறது.

26. உற்றுஅறியும் என்அறிவும் உட்கருவிபோல் [சவிமாண்டு
அற்றும்இன்பம் தந்திலையே ஐயா பராபரமே.

உற்று அறியும் என் அறிவு-புறத்தில் உள்ள பொருள் களைப் பொருள்படுத்துகின்ற கண் காது போன்ற புறக்கருவி கள். உள்கருவி-மனம், புத்தியாகிய அந்தக் கரணங்கள்.

சவி-ஒளி அல்லது அழகு. சவிமாய்தல்-ஒளி குறைதல். அந்தக் கரணம், புறக்கரணம் ஆகிய கருவிகளை நன்கு பயன் படுத்தவேண்டும். மேலான பாங்கில் அவைகளை வைத் திருக்கவேண்டும். இறைவழிபாட்டிற்கென்றே அவைகளைப் பயன்படுத்த வேண்டும். அத்தகைய பயிற்சியில் தேர்ச்சி யடைந்தான பிறகு அக்கருவிகரணங்களை அறவே செயலற்ற வைகளாக ஒதுக்கிவைத்துப் பழகுதல் வேண்டும். உயிரோடு இருக்கும்போதே செத்த பிணத்திற்கு நிகராகச் செயலற் றிருந்து பழகுதல் வேண்டும். அப்படிக் கருவிகரணங்களைச் செயலற்றவைகளாக்குமிடத்து, ஆத்மானந்தம் தன்னில் தானாகத் திகழ்கிறது. அத்தகைய பெருநிலையை நான் எப் பொழுது பெறுவேன் என்று அண்ணல் விண்ணப்பிக்கிறார்.

27. சொல்லால் அடங்காச் சுகக்கடலில் வாய்மடுக்கின்
அல்லால் என்தாகம் அறுமோ பராபரமே.

இவ்வுலகம் தருகின்ற சுகங்களையெல்லாம் சொற்களைக் கொண்டு சித்திரிக்கலாம். அப்படிச் சித்திரிப்பதிலேயே ஒரு சுகம் இருக்கிறது. அதைச் சொற்சுவை என்று கூறுவதுண்டு. சொற்சுவை, பொருட்சுவை ஆகிய இருசுவைகளும் கூடிய உலக இன்பங்கள் இருக்கின்றன. ஆனால் பாரமார்த்திகச் சுகத்தைப் பொருட்சுவை என்று மட்டும் கூறலாம். ஆங்குப் பொருள் என்பது பரவஸ்துவை மட்டும் குறிக்கிறது. பரம் பொருள் தன்னில் தானாய் இருக்கின்றபொழுது அது சுகக் கடல். ஜீவாத்மனுக்கு அதில் உரிமையுண்டு. சொல்லையும் சிந்தையையும் ஜீவாத்மன் எப்பொழுதெல்லாம் ஒதுக்கி வைக்கின்றானோ அப்பொழுதெல்லாம் அவன் பாரமார்த்தி கச் சுகக் கடலில் வாய் வைத்துத் தாகசாந்தி செய்பவனாகின் றான். வாய் மடுத்தல் அல்லது வாய் வைத்தல் என்பது ஸ்தூல உடலைக் குறிப்பதன்று. சொரூபத்தில் இருந்தபடி.

இருப்பதெனை அது பொருள்படுகிறது. அதுவே பெறவேண்டிய பேறும்.

28. பாராயோ என்னைமுகம் பார்த்தொருகால் என்கவலை
தீராயோ வாய்திறந்து செப்பாய் பராபரமே.

சாமானிய நிலையில் இருக்கின்றவர்களிடத்துப் பெருநிலையில் இருப்பவர்கள் ஏதோ ஒருவேளையில் சிறிது கவனம் செலுத்தினுல் சிறுநிலையில் இருப்பவர்களுடைய குறைகளையெல்லாம் நிறையாக்குவது அவர்களுக்கு மிக எளிது. அதே கோட்பாடு ஆண்டவனுக்கும் ஆருயிர்களுக்குமிடையில் இருக்கிறது. தாய் தந்தையர்களை நாடிச் சேய் அழுது முறையிடுவது போன்று பரமனை நாடி, வேண்டினுல் அப் பரமனிடமிருந்து அருள் சுரக்கிறது. பரமனை நாடி அழத் தெரிந்து கொள்கிறவர்கள் பாக்கியவான்கள். அப்படி அழுகின்றவர்களுக்கு ஆறுதல் வருகிறது. கவலை ஒழிகிறது. மனிதனேடு மனிதன் பேசுவது போன்று பரமன் உள்ளத்தினுள்ளே இருந்துகொண்டு பேசுவதற்கு நிகராகக் குறைகளைக் களைவதுண்டு. புறத்தில் மூர்த்தியாய்த் தோன்றிப் பேசுவதும் உண்டு. இது பக்தர்களின் அனுபவம். இக் கண்ணியை அவரவர்களுக்குரிய விண்ணப்பமாகக்கொள்ளலாம்.

29. ஓயாதோ என்கவலை உள்ளே ஆனந்தவெள்ளம்
பாயாதோ ஐயா பகராய் பராபரமே.

கவலையுற்றிருப்பது ஜீவாத்மாக்களின் இயல்பு. பிரபஞ்ச வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் வரையில் கவலைக்கு ஒரு முடிவு இல்லை. பிறவிதோறும் கவலைப்பட்டுக்கொண்டே இருக்கின்ற மானுடன் பரமனை நாடிக் கவலைப்படுவானுகில் அவன் பாக்கியவானுகிருன். கடலில் அலைகள் எழுவது போன்று உள்ளத்தில் கவலைகள் எழுந்துகொண்டிருக்கின்

றன. அவைகள் உள்ளத்தினுள்ளே இருக்கின்ற பேரானந்தத்தை மறைக்கின்றன. அத்தகைய கவலையை ஒழித்துத் தள்ளுவது மிகக் கடினம். ஒதுக்குதற்குப் பதிலாக உலகக் கவலைகளை அருள் துறைக்கு உரிய கவலையாக மாற்றுவது மிகச் சுலபம். அதுவும் கவலைதானே என்னும் ஐயம் எழலாம். ஆனால் கடவுளைக் குறித்துக் கவலைப்படுகின்ற அதே வேளையில் ஆனந்தமும் உருவெடுக்கின்றது. இதை ஆத்மசாதகன் தன் அனுபவத்தில் கண்டுகொள்ள முடியும்.

30. ஓகோ உனைப்பிரிந்தார் உள்ளம் கனலில்வைத்த
பாகோ மெழுகோ பகராய் பராபரமே.

தாயைப் பிரிந்த சேய் உள்ளம் உருகி, உடல் கொதித்துப் படாதபாடு படுகிறது. அதே மனநிலையைக் கடவுள் நாட்டத்தில் கொண்டுவர வேண்டும். உலக இணக்கத்தை ஒட்டிய உருக்கம் உடலையும் உள்ளத்தையும் தேய்க்கிறது. பரம்பொருளை ஒட்டிய உருக்கம் உடலையும் உள்ளத்தையும் தூய்மையடையும்படி செய்கிறது. இந்நிலையை வருவித்துக்கொள்வது நல்ல ஆத்ம சாதனமாகும்: அதற்கு முதலில் அழுகின்ற குழந்தையின் மனநிலையைப் பற்றித் தியானம் பண்ணவேண்டும். அதே மனநிலையைப் பிறகு தெய்வத்தின்பால் செலுத்தவேண்டும். குழந்தையின் உருக்கம் அக்ஞானத்தில் பிறந்தது. சாதகனுடைய உருக்கம் விவேகத்தில் உருவெடுக்கிறது.

31. கூர்த்த அறிவு அத்தனையும் கொள்ளை கொடுத்து
உன்னருளைப்
பார்த்தவன் நான் என்னை முகம் பாராய் பராபரமே.

உலக இன்பங்களை அறிவுத் திறனைக்கொண்டு வளர்ப்பதற்கேற்ப அதே அளவில் துன்பங்களையும் துய்த்தாக வேண்டும். அருள் நாட்டத்திற்கு உலக நுண்ணறிவு இம்மி

யளவும் பயன்படாது. "A learned ignorance is the end of philosophy and the beginning of religion" என்கிறார் சுவாமி விவேகானந்தர். தத்துவ ஆராய்ச்சியை நிறுத்தி வைத்துவிட்டு அருள் நாட்டம் கொள்ளுகிறவன் ஆத்ம சாதனத்தில் புகுகின்றனர் என்பது இதன் கருத்து. நான் கற்றறிந்தவன் என்னும் உபாதியை ஒதுக்கி வைத்து விட்டுப் பரமனை நாடுவது அவசியமாகிறது.

32. கடலமுதே தேனேஎன் கண்ணே கவலைப்
படமுடியா(து) என்னைமுகம் பார்நீ பராபரமே.

கடலமுது, தேன், கண் என்று தாயுமானவர் இறைவனைக் குறிக்கிறார். கடலமுது என்னும் சொல் பாற்கடலைத் தேவர்களும், அசுரர்களும் கடைந்தபொழுது தோன்றிய அமிர்தத்தைக் குறிக்கிறது. பிரபஞ்சத்தில் பாற்கடல் இல்லை. ஆனால் வாழ்வு என்னும் கடலுக்கு உருவகமாக அமைந்துள்ளது. பெற விரும்புபவைகளில் பெரும்பகுதி வாழ்க்கையில் வந்து வாய்க்கின்றன. அப்படி வாய்க்காவிடில் எந்த உயிரும் வாழ்வை விரும்பாது. உயிரனைத்தும் வாழ்வை விரும்புதற்குக் காரணம் வாழ்வின் லக்ஷியம் அதன் மூலம் நிறைவேறுதலேயாம். அத்தகைய அமிர்த சொரூபமாய் இருப்பது பரம்பொருள். அது அனுபூதிமான்களுக்கே விளங்குகிறது. உணவு வகைகளுள் தேன் உயர்ந்தது. உறுப்புக்களுள் கண் முக்கியமானது. அமுது, தேன், கண் போன்று சிறந்த வாழ்விற்கு முக்கியம் வாய்ந்த இறைவா! என் பிரபஞ்சக் கவலையை மாற்றுதற்கு உன் திருக்கருணை முகங்கொண்டு என்னைப் பார்ப்பாயாக என்று அண்ணல் விண்ணப்பிக்கிறார்.

33. உள்ளம் அறிவாய் உழப்பு அறிவாய் நான் ஏழை
தள்ளிவிடின் மெத்தத் தவிப்பேன் பராபரமே.

உழப்பு—வருத்தம். உள்ளிருப்பதால் மனம் உள்ளம் எனப்படுகிறது.

மக்களுள் பெரும்பாலோர் தாங்கள் படைத்துள்ள மன நிலைக்கு அதிக மதிப்புக் கொடுத்துச் செருக்குறுகின்றார்கள். தான் படைத்துள்ள மனத்திற்கு மதிப்பு மிகக் கொடுப்ப வன் விரைவில் மேன்மையுற மாட்டான். பக்தன் ஒருவன் கொண்டுள்ள பான்மையே பாராட்டத்தக்கது. நான் படைத் துள்ள மனத்தை நான் அறிந்து கொள்வதை விட நன்றாக, இறைவா! நீ அறிகிறாய் என்று தாயுமானவர் பகர்வது முற்றி லும் பொருத்தமானது. இறைவன் எல்லா ஜீவர்களின் உள்ளத்தையும் உள்ளபடி அறிகிறார். கருணாமூர்த்தியாகிய இறைவனிடம் தன்னை ஒப்படைப்பவன் விரைவில் பண்பாடு அடைகிறான்.

உழப்பறிவாய் என்று அடுத்தப்படியாக அண்ணல் இறைவனிடம் முறையிடுகின்றார். வருத்தப்படாத மனம் யாரிடத்தும் இல்லை. ஏதேனும் ஒன்றைக் குறித்து மனிதன் ஒவ்வொருவனும் வருத்தப்பட்டுக் கொண்டே இருக்கிறான். வருத்தப்படுபவர்களுள் கடவுளை நாடி வருத்தப்படுபவர்களே பாக்கியவான்கள். உலக இன்பங்களை நாடி வருத்தப்படுவ தெல்லாம் விழலுக்கிறைத்த நீர்போன்று வீணாகப் போகி றது. நான் படும் வருத்தம் உலகத்தைப் பற்றியதா அல்லது அருள் நாட்டத்தைப் பற்றியதா என்பதை இறைவா! நீ நன்கு அறிந்து கொள்கின்றாய் என்று தாயுமானவர் இயம்பு கிறார். உலகத்தவன் எண்ணத்தில் பொருள்படையாதவன் ஏழை. சான்றோர்களின் எண்ணத்தில் பரம்பொருளுக்குப் புறம்பாயிருப்பவன் ஏழை. உன்னை நான் இன்னும் அடை யாமையினால் நான் ஏழையாய் இருக்கின்றேன். அத்தகைய என்னை நீ ஏற்றுக்கொண்டால் நான் பாக்கியவான். எக்கார

ணத்தை முன்னிட்டாவது இறைவா! நீ என்னைத் தள்ளிவிடு வாயாகில் நான் மிகப் பரிதவிப்பேன். என் நிலையை உள்ள படி அறிகின்ற நீயே என்னைக் காப்பாற்றியருள்வாயாக.

34. கன்றினுக்குச் சேதா கனிந்திரங்கல் போல எனக்(கு)
என்றிரங்கு வாய்கருணை எந்தாய் பராபரமே.

ஈன்ற பசு மைதானத்தில் புல் மேய்ந்தான பிறகு மாலையில் வீடு திரும்பியவுடன் தன்னுடைய கன்றைக் காணாவிடில் என்னபாடுபடும்! அதே போன்று மாலை நேரத்தில் பசு வராவிடில் அதற்குரிய கன்று என்ன பாடுபடும்! இப்படிப்பட்ட பரிதாபகரமான காட்சிகளைக் காணும் கல்நெஞ்சக்காரர்களின் மனமும் கரையும். இதே மனநிலையினைப் பக்தன் கடவுள்பால் கொள்ளவேண்டும். அவரை அடையப்பெருததை முன்னிட்டு அவன் அலறிப்பதறிக் கொண்டு இருப்பானாகில் விரைவில் அருளுக்குப் பாத்திரமாவான்.

கடவுள் கருணையே வடிவெடுத்தவர். அவர் உலகுக்கெல்லாம் தந்தையாக இருப்பதுபோன்று தாயும் ஆனவர். கடவுளை நோக்கிப் பக்தன் ஓர் அடி சென்றால் அவனை நோக்கிக் கடவுள் பத்தடி முன்வருகிறார் என்பது கோட்பாடு.

35. எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியெண்ணி [ஏழைநெஞ்சம்
புண்ணாகச் செய்ததினிப் போதும் பராபரமே.

இடையறாது, ஏதேதோ எண்ணங்களையெல்லாம் எண்ணிக்கொண்டிருப்பது மனத்தின் பாங்கு. ஓய்வின்றிக் கடலில் எப்படி அலைகள் உதித்துக்கொண்டிருக்கின்றனவோ அப்படி உள்ளத்தினுள் எண்ணங்கள் உருவெடுத்துக்கொண்டிருக்கின்றன. அவைகளில் பெரும்பான்மையானவைகள் புல்லியவைகளாம். புல்லிய எண்ணங்களே நெஞ்சத்தைப்

புண்ணுக்குகின்றன. நெஞ்சம் புண்ணுறுமளவு மனிதன் ஏழையாகிறான். படைத்திருக்கும் பொருளை முன்னிட்டு மனிதனைப் பணக்காரன் என்று இயம்பலாகாது. திண்ணிய நெஞ்சம் படைத்தவனே பெரிய பேறு படைத்தவனாகிறான். பொருள் மிகப் படைத்திருப்பதற்கிடையில் அற்ப எண்ணங்களில் மனம் உழன்றுகொண்டிருக்குமாகில் அம் மனிதன் வறுமை நோயில் வருந்துபவனாகிறான். அப்படியல்லாது மனத்தில் திட்பம் ஊட்டும் மேலான நல்ல எண்ணங்களையே எண்ணவேண்டும். அத்தகைய நல்ல எண்ணங்களின் எண்ணிக்கையும் குறையவேண்டும். கடைசியாகக் கடவுளைப்பற்றிய ஒரே எண்ணம் நெஞ்சில் நிலைத்திருக்குமாகில் அம்மனிதன் பேறு மிகப் படைத்தவனாகிறான். அப்பெரிய நிலையை வரவழைத்துக்கொள்வது ஆத்ம சாதகனுக்குச் சாத்தியமாகிறது.

36. ஆழித் துரும்பெனவே அங்கும்இங்கும் உன் அடிமை
 பாழில் திரிவதென்ன பாவம் பராபரமே.

ஆழி-கடல். பாழில்-பிரபஞ்ச வாழ்வில்.

கடலிலே போடப்பட்டுள்ள குச்சி ஒன்று அலைக்கழிக்கப்படுவதைப் போலப் பிரபஞ்ச வாழ்வாகிய பாழில் பெரும்பான்மையோர் அலைக்கழிக்கப்படுபவர்களாக வாழ்ந்து வருகிறோம். பிரபஞ்ச வாழ்வு பிறவியைப் பெருக்கிக்கொண்டே போகிறது. ஏதேதோ காரணங்களை முன்னிட்டு இன்ப துன்பங்கள் மாறிமாறி வந்துகொண்டிருக்கின்றன. பிரபஞ்ச வாழ்வில் அலைக்கழிக்கப்படுபவர்கள் "பாவம் அனுதாபத்துக்குரியவர்கள்" என ஆன்றோர்கள் இயம்புகின்றனர். இறைவா! உன்னடிமையாகிய நான் அத்தகைய இரக்கத்திற்குரிய இழிநிலையில் இருக்கலாகாது. யாண்டும் உன்னுடைய சாந்நித்தியத்திலேயே வைக்கப்பட்டவனாக நான்

இருப்பேனுகில் அதுவே நான் பெறக்கூடிய பேறுகளுள் மிகப் பெரியது ஆகும்.

37. கற்றஅறிவால் உனைநான் கண்டவன்போல் கூத்து
[ஆடில்
குற்றம்என்று என்நெஞ்சே கொதிக்கும் பராபரமே.

ஏட்டுக் கல்வி வேறு, சுவானுபூதி வேறு என்பது வாசா ஞானிகள் பலருக்குப் புலப்படுவதில்லை. நூலறிவோடு இருப்பவன் உலகப்பற்று இருக்கலாகாது என்று பேசுவான். அப்பேச்சுக்கிடையில் உலகப்பற்றை வளர்ப்பது அவனுடைய போக்காக இருக்கும். சாதனங்களின் வாயிலாக முறையான விவேகம் வாய்க்கப் பெற்றவன் தன்னைப் பிரபஞ்ச வாழ்வில் இருந்து பிரித்தெடுத்துப் பரத்தில் நிலைத்திருக்கச் செய்கிருன். இதுவே பக்குவப்பட்டிருக்கும் ஆத்ம சாதகனுக்கும் பக்குவப்படாத ஏட்டுக் கல்வியாளனுக்கும் இடையில் உண்டான வித்தியாசமாகும். சாதகன் ஒருவன் தன்னுடைய வாழ்வின் வாயிலாகத் தான் பிரபஞ்சத்துக்கு உரியவன் அல்லன்; பரத்திற்கு உரியவன் என்று நிரூபிப்பது பெருவாழ்வாகும். சொல்லுவது போல் வாழ்வு அமையாவிடில் அவனுடைய சொரூபத்தில் பிளவு உண்டாகும். ஆத்ம சாதகர்கள் அப்பிளவிற்கு இடந்தரல் கூடாது. பேசுகின்ற பேச்செல்லாம் தம்முடைய வாழ்வோடு பொருந்தியதாக இருக்கவேண்டும்.

38. ஐயோ உனைக்காண்பான் ஆசைகொண்டது
அத்தனையும்
பொய்யோ வெளியாய்ப் புகலாய் பராபரமே.

வெளியாய்ப் புகலாய்-வெளிப்படையாகப் பகர்ந்தருள்விர்களாக.

மனிதன் எதை லக்ஷியமாகக்கொண்டாலும் அவனுடைய திரிகரணங்கள் அந்த லக்ஷியத்தின்பால் ஒப்படைக்கப்படவேண்டும். இராவணன் சந்நியாசி போன்று வெளிக்கு வேஷம் போட்டான். உள்ளத்தில் காமநோய்க்கு உடந்தையாய் இருந்தான். அந்த முரண்பாட்டின் விளைவாக அவன் தனக்குத் தானே அழிவைத் தேடிக்கொண்டான். ஆத்மசாதகன் ஒருவன் யாண்டும் கடவுள் நாட்டம் ஒன்றிலேயே கண்ணுங்கருத்துமாய் இருக்கவேண்டும். பாசாங்குக்காகக் கடவுள் நாட்டம் கொள்ளுகின்றவனுக்குக் கடவுளின் அருள் வாய்க்காது. தன்னிடத்துப் பாசாங்கு ஒன்றும் இருக்கலாகாது என்று ஆத்மசாதகன் தெய்வத்தினிடத்து விண்ணப்பித்துத் தன்னை நேர்மைப்படுத்திக் கொள்ளவேண்டும். பாசாங்கு நீங்கி உண்மையான நாட்டம் உண்டாகும்பொழுது சாதனையில் விரைவில் முன்னேறலாம்.

39. துன்பக் கண்ணீரில் துளைந்தேற்குன் ஆனந்த
இன்பக்கண்ணீர் வருவது எந்நாள் பராபரமே.

துளைந்தேற்கு—அழுந்திக்கிடக்கின்ற என் போன்றவனுக்கு.

துன்பத்தில் இருவிதம் உண்டு. இவ்வுலக வாழ்வில் விரும்பியவையெல்லாம் வாய்க்கவில்லை என்பது ஒன்று. பாரமார்த்திகப் பெருவாழ்விற்கு ஏற்ற தகுதி வாய்க்கவில்லை என்பது மற்றொன்று. முதலில் மொழிந்த துன்பத்தை இராவணாகாரத் துன்பம் என்று கூறுவதுண்டு. இரண்டாவது மொழிந்த துன்பத்தை ருத்ராகாரத் துன்பம் என்று கூறுகிறோம். இராவணனும் உலகத்தவரை அழச் செய்கின்றான்; ருத்ரனும் அழச் செய்கின்றான். முன்னவன் மூலம் வரும் அழுகை உலகபந்தபாசத்தை வளர்க்கிறது. பின்னவன்

வாயிலாக வரும் அழுகை ஜீவாத்மனைப் பந்த பாசத்திலிருந்து விடுவிக்கின்றது. உலகுக்குரிய அழுகை துன்பக் கண்ணீ ராகவே பெருகிக்கொண்டு போகிறது. பரத்துக்குரிய அழுகை துவக்கத்தில் துன்பம்போன்று தென்படுகிறது. ஆயினும் அதில் சிறப்பு ஒன்று உண்டு. உலக அழுகை, அறி வைத் தேய்த்து அழிக்கிறது. பரத்துக்குரிய அழுகை, அறி வைத் தீட்டித் தெளிவுடையதாக்குகிறது.

உலக நாட்டத்தில் சிந்துகிற கண்ணீர் துன்பக் கண் ணீர். கடவுள் நாட்டத்தில் சிந்துகிற கண்ணீர் இன்பக் கண்ணீர். துன்பக்கண்ணீர் மூக்குப் பக்கத்தில் உள்ள கண் முனையில் வரும். இன்பக் கண்ணீர் காதுக்குப் பக்கத்தில் உள்ள கண்முனையில் வரும். இரண்டு நிலைகளும் கண்ணீர் சிந்துகிற நிலைகள் என்றாலும் வடதுருவம் தென்துருவம் போன்று அவ்விரண்டிற்குமிடையில் பெரிய வேற்றுமை உண்டு. பல்கோடிப் பிறவிகளில் துன்பக் கண்ணீரில் தோய்ந்து கிடந்த ஜீவாத்மன் பரம்பொருளை நாடி வருந்து கின்றபொழுது ஆனந்தம் ததும்புகின்ற இன்பக்கண்ணீர் சொட்டுகின்றான். அத்தகைய நாட்டம் என்றைக்கு வருமோ என்று பாடியிருப்பது நல்ல ஆத்ம சாதனமாகிறது.

40. வஞ்சனையும் பொய்யும்உள்ளே வைத்தழுக்காறாய்
உளறும்
நெஞ்சனுக்கும் உண்டோ நெறிதான் பராபரமே.

வஞ்சனை-பிறருக்குக் கேடுசூழ நினைத்தல். பொய்-உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசுதல். அழுக்காறு-பொறாமை. உளறுதல்-பொருந்தாத பேச்சு.

சித்த சுத்தி அல்லது அந்தக்கரணத் தெளிவு உண்டா வதற்கு ஏற்ப ஆத்ம சாதகன் பரவஸ்துவை அனுபூதியில்

அறிந்துகொள்ளத் தகுதி உள்ளவனுகின்ருன். சுத்தி அடையாத மனத்தில் குறைநிலைகள் பல இடம் பெறுகின்றன. அக்குறைநிலைகளுள் மூன்று குறைகள் ஈண்டு எடுத்து இயம்பப்படுகின்றன. வஞ்சனை, பொய், அழுக்காறு என்பன அவைகளாகும். இக்குறைநிலையுடையவர்களின் அழிவை அல்லது தாழ்வை இராமாயணம், மஹாபாரதம் போன்ற நூல்களின் வாயிலாகவும், நமது நித்திய வாழ்விலும் நாம் காணலாம்.

நெறி என்பது சன்மார்க்கம். எது மனிதனைக் கடவுளுக்கு அருகில் எடுத்துச் செல்லுகின்றதோ அது சன்மார்க்கம். வஞ்சனை, பொய், பொருமை ஆகிய கேடுகளை உள்ளத்தினுள்ளே வைத்துக்கொண்டு மேலாம் தத்துவங்களைப் பற்றிப் பேசுகிற பேச்சு உளறுதலுக்கு ஒப்பாகிறது. இக்கேடுகளை நெஞ்சத்தினின்று ஒதுக்கித் தள்ளாதவனுக்குச் சன்மார்க்கம் வாய்ப்பதுமில்லை; அவன் சத்பொருளை அடையப்போவதுமில்லை. ஈசா! இக்கேடுகளினின்று என்னைக் காப்பாற்றுவாயாக என்பது இக்கண்ணியில் அமைந்துள்ள பிரார்த்தனையாம்.

41. பாசம்போய் நின்றவர்போல் பாராட்டி ஆனுலும்
மோசம்போ னேன்நான் முறையோ பராபரமே.

பாசம்-உலகப்பற்று.

படகு ஒன்றைக் கடலிலோ நதியிலோ செலுத்துதற்கு முன்பு அதன் நங்கூரத்தை நீக்கவேண்டும். நங்கூரம் பூமியில் புதைந்து கிடப்பதற்கிடையில் படகுக்கு எவ்வளவுதான் துடுப்புப் போட்டாலும், பாய் கட்டினுலும் அது இருந்த இடத்தை விட்டு நகராது. மானுடன் தனது வாழ்வைக் கடவுள்பால் செலுத்துவது படகு ஓட்டுவதற்கு ஒப்பானது. உலகப்பற்று என்னும் நங்கூரம் மனிதனுடைய

உள்ளத்தில் ஆழ்ந்து புதைந்து கிடப்பதற்கிடையில் மனிதன் சாதனங்கள் எவ்வளவு செய்தாலும் அவன் இம்மியளவும் முன்னேற்றமடைவதில்லை. ஆயுட்காலம் முழுதும் வந்தனை, வழிபாடு, ஜபம், தபம், தீர்த்த யாத்திரை முதலிய சாதனங்களை விடாது செய்துகொண்டிருப்பவர்களைக் காணலாம். ஆயினும் அன்னவர் உலகப் பாசத்திலேயே உழன்று கொண்டிருக்கின்றனர். அன்னவர் பரமனுக்குப் பக்கத்தில் ஒருபொழுதும் போவது இல்லை. கிடைப்பதற்கரிய மானுடப் பிறவியில் அது பெரிய ஏமாற்றமாக முடிவுறுகிறது. ஆதலால் இறைவா! நான் பாசம் போனவன் போன்று பாசாங்கு பண்ணலாகாது. உண்மையாகவே பாசம் அறுபடவேண்டும். அதற்கு நீ அனுக்கிரகம் செய்வாயாக என்று தாயுமானவர் இறைவனிடம் பிரார்த்திக்கின்றார்.

42. நன்றறியேன் தீதறியேன் நான்என்று நின்றவன்ஆர்
என்றறியேன் நான்ஏழை என்னே பராபரமே.

எது நலம் எது கேடு என்று நாம் ஒருவாறு அறிகிறோம். இவை இரண்டிற்குமுள்ள பாகுபாட்டை நாம் முற்றிலும் அறிந்தவர்கள் அல்லோம். விபீஷணன் கேடுடைய தமையனை விட்டுப் பிரிந்ததோடு அவனை அழித்தற்பொருட்டுக் காட்டிக் கொடுத்தான். பீஷ்மர் கேடுகளுடைய துரியோதனாதியர்களுக்குத் துணைபுரிந்ததுடன் உத்தமர்களாகிய பாண்டவர்களுடைய சேனையின் பெரும்பகுதியை அழித்துத் தள்ளினார். விபீஷணன், பீஷ்மர் இவ்விரு பாத்திரங்களையும் பார்க்குமிடத்து நலத்தையும் கேட்டையும் சில சூழ்நிலைகளில் சரியாக அறிந்துகொள்ள முடியாது என்பது வெளியாகிறது. நமது வாழ்க்கையிலும் சில சமயங்களில் நெருக்கடி வரும் போது எவற்றைச் செய்தால் நலம்; எவற்றைச் செய்தால் தீமை என்பதை அறிந்துகொள்ள இயலாதவர்களாக இருக்

கிறோம். விவேகத்தில் நிலைநிற்கின்ற சாதகனுக்கே நலனையும் கேட்டையும் சரியாகப் பாகுபடுத்த இயலுகிறது. அத்தகைய விவேகம் பெறுதற்குச் சுயமுயற்சியோடு ஈசனுடைய அனுக்கிரகமும் தேவையாய் இருக்கிறது.

‘நான் என்று நின்றவன் ஆர் என்று அறியேன்’ என்று அடுத்தபடியாகத் தாயுமானவர் உரைக்கிறார். ஒவ்வொரு மனிதனும் தன்னைப் பற்றி முழுதும் அறிந்தவனாக எண்ணிக்கொள்கிறான். ஆயினும் அவ்வாறு அறிந்துகொண்டது மிகக் குறைவு. மானுடர்கள் கனவு, நனவு, உறக்கம் என்னும் நிலைகளில் வெவ்வேறு பாங்குகள் உடையவர்களாக இருக்கிறார்கள். இம்மூன்றிற்கும் பொதுவாயுள்ள சொரூபத்தை அறிய மானுடர்களில் பலருக்குச் சாத்தியமில்லை. ஆத்ம ஞானம் அடையப்பெற்ற சான்றோர்களே இம்மூன்றிற்கும் பொதுவாயுள்ள சொரூபத்தை அறியவல்லவர்களாய் இருக்கிறார்கள். நான் ஏழை என்று தாயுமானவர் தவிக்கிறார். இறைவா! உன் கருணையினால் நலனையும் கேட்டையும் அவைகளைச் செய்வதற்குக் கர்த்தாவாய் இருக்கின்ற என் ஜீவ சொரூபத்தையும் நான் உள்ளபடி அறிந்துகொள்ள அருள்வாயாக என்று பிரார்த்தனை செய்கிறார்.

43. இன்றுபுதிது அன்றே எளியேன் படும்துயரம்
ஒன்றும்அறி யாயோ உரையாய் பராபரமே.

துயரப்படுவது பிரபஞ்ச வாழ்வின் கூறு. உடல் எடுத்துள்ள உயிர்கள் அனைத்தும் திரும்பத் திரும்பத் துயரத்திற்கு ஆளாகின்றன. படுந்துயரத்துக்கிடையில் மின்னல் போன்று ஏதோ சிறிது இன்பம் வாய்க்கிறது. அந்த அல்ப சுகத்திற்காகப் பெருந்துயரம் என்பதை ஈடுகொடுத்து உயிர்கள் வாழ்வில் பற்று வைத்திருக்கின்றன. அதன் விளைவாகச் சிற்றுயிர்கள் பேருயிர்களாகப் பரிணமித்து வருகின்றன.

பேருயிர் ஆவதற்கு ஏற்பத் தொல்லையும் பன்மடங்கு அதிகரிக்கிறது. துயரப்படும் உயிர்களுள் துயரத்தின் உச்சநிலையில் இருப்பவன் மனிதன். அதற்கிடையில் தான் படும் துயரத்தை மனிதன் மறந்திருப்பதே பெரும் விந்தையாகும். இவன் பட்ட துயரத்தையும் இப்போது படுகிற துயரத்தையும் மனிதன் அறிந்துகொள்வதைவிட இறைவனே நன்கு அறிந்தவனாகின்றான். ஆதலால் அவன் தம்மீது இரக்கங் கொண்டு இதுகாறும் தாம் பட்ட துயரத்தை யெல்லாம் துடைத்தருள வேண்டும் என்று தாயுமானவர் தெய்வத்திடம் வேண்டுகின்றார்.

44. எத்தனை தான் ஜன்மம்எடுத்து எத்தனை நான் பட்ட துயர்
அத்தனையும் நீஅறிந்தது அன்றோ பராபரமே.

கல், புல் நிலையினின்று மானுட நிலையை எட்டும் வரையில் மனிதன் எடுத்துள்ள ஜன்மங்கள் எண்ணிக்கைக்கு எட்ட மாட்டா. அவையாவற்றையும் சர்வக்ஞனாகிய சர்வேசுவரன் ஒருவரே அறிய வருகிறார். பிறவித் துயரத்தைத் துய்க்கும் மனிதன் அவைகளை அறிந்துகொள்ள முடிவதில்லை. துயரப்பட்டுக்கொண்டிருப்பது ஒன்றையே ஒருவாறு அவன் அறிகின்றான். இறைவா! எடுத்த ஜன்மம் போதும், அதன் விளைவாக வருகின்ற துயரமும் போதும். அதன் முழு வரலாற்றையும் அறிகிற நீ என்னை ஆட்கொண்டு அருள்வாயாக என்று அண்ணல் விண்ணப்பிக்கின்றார்.

45. இந்தநாள் சற்றும் இரங்கிலையேல் காலன்வரும்
அந்தநாள் காக்கவல்லார் ஆர்காண் பராபரமே.

மானுட வாழ்க்கை ஒரு விதத்தில் கிளிப்பிள்ளையின் வாழ்க்கையை ஒத்திருக்கின்றது. கிளிப்பிள்ளைக்குச் 'சிவசிவ'

என்றோ 'நாராயணா' என்றோ பேசக் கற்பித்தால் அந்தச் சொல்லை அது அடுத்தடுத்து ஓதிக்கொண்டேயிருக்கிறது. ஆனால் அக்கிளியினைத் தாக்கப் பூனை ஒன்று பாய்ந்து வந்தால் அப்பறவையானது பரமனுடைய நாமத்தை மறந்து விட்டுக் 'கீச்கீச்' என்று கத்தும். அதற்கு வேறு கதியில்லை. இறைவனுடைய அருளுக்குப் பாத்திரமாகாத மானுடன் பூஜை பண்ணுகிறான்; ஜபம் செய்கின்றான்; தவம் புரிகின்றான். ஆயினும் என்ன பயன்? காலன் என்னும் பூனை அவனைப் பிடிக்க வரும்பொழுது அவன் கடவுள் ஞாபகத்தை மறந்துவிடுகிறான். அவன் புரிந்த வினையே முன்னணியில் வந்து நிற்கிறது. கதறிப் பதறி மனிதன் மரண வேதனைப் படுவான். கடவுளின் எண்ணம் வராது. இறைவா! நான் இப்பொழுது உன் அருளிற்குப் பாத்திரமாகி விட்டேனாகில் காலன் வரும் நாள் என் நினைவிற்கு வாராது. அப்படி அவன் வரும்பொழுது உன் அருளே யாண்டும் என்நினைவில் நிலைத்து நிற்கும். ஆகையால், இன்றே இரங்கி என்னை ஆட்கொள்வாயாக என்று தாயுமானவர் பரிந்து விண்ணப்பிக்கிறார்.

46. உற்றுஉற்று நாடி உளம்மருண்ட பாவியைநீ
சற்றுஇரங்கி ஆளத் தகாதோ பராபரமே.

துன்பத்தில் வருந்துகின்ற ஜீவன் ஒருவன் வருந்துகின்ற வேளையில் அத்துன்பத்திற்கு ஆதியையோ அந்தத்தையோ காணாதவனாக இருக்கிறான். அந்த நிலையைத்தான் 'மருண்ட நிலை' என மொழியவேண்டும். பிறவிப்பிணியின் கொடுமையை உலகப்பற்றுடையவன் அறிந்துகொள்வதில்லை. ஒட்டகத்தின் நிலையில் அவன் இருக்கிறான். முள்செடியைத் தின்று அதன் உதட்டில் ரத்தம் வடியும். ஆயினும் முட்செடியைத் தின்பதை ஒட்டகம் நிறுத்துவதில்லை. முக்தியை

நாடுகின்றவன் அதன் கொடுமையை ஆழ்ந்து உணர்கின்ருன். இறைவனுடைய அருள் என்னும் மருந்தே அந்த மருளுக்கு முரி ஆகின்றது. இறைவா! கிருபை கூர்ந்து என்னைப் பிடித்துள்ள மருளை மாற்றியருள்வாயாக என்பது பிரார்த்தனை.

47. எள்அளவும் நின்னைவிட இல்லா எனைமயக்கில்
தள்ளுதலால் எனன்பலன் சாற்ருய் பராபரமே.

சாற்ருய்-சொல்வாய். ஜீவாத்மனுக்கும் பரமாத்மனுக்குமிடையில் உள்ள தொடர்பு எத்தகையதென்பதை ஆத்ம சாதகன் அறிந்திருத்தல் வேண்டும். கடலிற்கு ஒப்பானவர் பரமாத்மா. அதில் சதா உருவெடுக்கும் அலைகளுக்கு ஒப்பானவைகள் ஜீவாத்மாக்கள். கடலைவிட்டுக் கணப்பொழுதும் அலை பிரிந்திருக்க முடியாது. கடலிற்கும் அலைக்கும் உள்ள இணக்கம்போன்றது பரமாத்மனுக்கும் ஜீவாத்மனுக்கும் இடையில் உள்ள இணக்கம். எள்ளளவாவது பிரிந்திருப்பது உபமானம் உபமேயம் ஆகிய இரண்டிலும் சாத்தியமன்று. கடலும் அலையும் உபமானம்; பரமாத்மனும் ஜீவாத்மனும் உபமேயம். இதுதான் உண்மையென்ருல் ஜீவாத்மன் பரமாத்மனிடமிருந்து தள்ளப்படலாகாது என்ற பிரார்த்தனை எதற்காகப் பிறக்கவேண்டும்? பிரியாதிருக்கிற இரண்டு பொருள்களைக் குறித்து இங்ஙனம் பிரார்த்தனை பண்ணுவது பொருளற்றதாகத் தென்படுகிறது. ஆனல் ஜீவாத்மனுக்கு எப்படியோ மயக்கம் வருகிறது. பத்திரமாகப் படுக்கையில் படுத்துறங்குபவன் காட்டில் கரடியின் கையில் அகப்பட்டுக்கொண்டதாகக் கனவு காண்கின்ருன். அந்நிலையில் அவன் கதறிப் பதறி அழுவது இயல்பு. அத்தகைய மயக்கத்தில் ஜீவாத்மன் தள்ளுண்டு கிடக்கிருன். மயக்கத்தில் இருக்கிறபொழுது அவன் பிரார்த்தனை பண்ணுதிருக்க

முடியாது. அந்த மயக்கத்தை அகற்றி வைக்க வேண்டுமென தாயுமானவர் விண்ணப்பிக்கின்ருர். இறைவா! மயக்கத்தில் உன்னிடமிருந்து பிரிவுபட்டவனைக் கருதிப் பதை பதைக் கின்ற என்னை அந்த மயக்கத்தில் தள்ளாதிருப்பாயாக என் பது பிரார்த்தனை.

48. பாடிப் படித்துஉலகில் பாராட்டி நிற்பதற்கோ
தேடி எனைஅடிமை சேர்த்தாய் பராபரமே.

பேரரசன் ஒருவன் உலகில் இருக்கிருன். அவனேடு மனைவி மக்கள் எல்லாரும் வேண்டும் பொழுதெல்லாம் வேண்டியவாறெல்லாம் இணக்கம் வைக்கின்றனர். இனி மந்திரி பிரதானி முதலிய உத்தியோகஸ்தர்கள் குறிப்பிட்ட வேளையில் அலுவலுக்கேற்றவாறு அந்த அரசனேடு இணக் கம் வைக்கின்றனர். ஆனல் அரண்மனைக்கு வெளியே வாயில் காப்பாளர்களாக இருப்பவர்கள் அரசனைப் பார்ப் பதுமில்லை; அரசனேடு இணக்கம் கொள்ளுவதுமில்லை. ஆனல் அரசனுடைய பெருமைகளை அவர்கள் பறைய ப்ப துண்டு. பக்தன் ஒருவன் அந்நிலையில் வைக்கப்படுவா கில் அது பரிதாபகரமானது. கடவுளைக் குறித்துத் தாளம் ராகம் பிசகாது பாடினல் போதாது. கடவளைக் குறித்து நூல்கள் பல படித்து நுட்பங்கள் பலவற்றை எடுத்துப் பேசினல் போதாது. பாடல் திறனிலும் பாண்டித்தியத்திலும் உறுதி பெற்றவர்கள் பலர் பரமனைக் குறித்துக் கசிந்துருகிப் பாட வும், வல்லுநர்களாக விளக்கங்கள் பல கொடுக்கவும் செய்கின் றனர். அத்தகைய வாய்ப்பேச்சுக் கூட்டத்தில் இறைவா என்னைச் சேர்த்து வைக்க வேண்டாம். உன்னுடைய அரு ளிற்கு நேராகப் பாத்திரமானவர்களின் கூட்டத்தில் என் னைச் சேர்த்து வைக்கவேண்டும் என்பது இப்பிரார்த்தனை யின் பாங்கு ஆகும்.

49. சொன்னத்தைச் சொல்வதுஅல்லால் சொல்அறஎன் சொல்இறுதிக்கு
என்னத்தைச் சொல்வேன் எளியேன் பராபரமே.

வழிமுறை வழிமுறையாக வந்த சான்றோர்கள் செம் பொருளைப் பற்றிச் சொன்னதையே மற்றவர் சொல்லுவது கிளிப்பிள்ளை பேசுதற்கு நிகராகும். அதன் குறைநிலை ஒன்றுண்டு. பூனையைக் கண்டதும் கிளி பேச்சை மறந்து விட்டுக் கீச்கீச் என்று கத்துகிறது. தாயே என்று குழந்தை கூவி அழைக்கிறது. தாய் தென்பட்டவுடன் சேயின் சொல் முடிவுறுகிறது. மேலும் அது பேசவேண்டிய அவசிய மில்லை. அங்ஙனம் பரமனுடைய தரிசனம் அடையப்பெற்ற வர்கள் சொல்லை ஒதுக்கி மௌனத்தில் நிலைபெறுகின்றனர். அத்தகைய பெருநிலை எனக்கும் வாய்க்கவேண்டும் என்பது இக்கண்ணியின் கருத்து ஆகும்.

50. சொல்லும் பொருளும்அற்றுச் சும்மா இருப்பதற்கே
அல்லும் பகலும்எனக்கு ஆசை பராபரமே.

சொல்லைக்கொண்டு அமைந்தது மொழி. மொழியின் துணையால் மனிதன் கருத்தை ஏற்கவும் வழங்கவும் செய் கின்றான். மொழியே இல்லாது போய்விட்டால் ஒவ்வொரு மனிதனும் மற்றவர்களிடமிருந்து பிரித்து எடுக்கப்படுவான். உயிர் வாழ்க்கையில் பற்றுள்ள மனிதர்களுக்கு இந்நிலை பொருந்தாது. சிறைச்சாலையில் அடைக்கப்படுபவர்களுள் யாரோ சிலருக்கு ஏகாந்தவாசத் தண்டனை (**Solitary confinement**) கொடுக்கப்படுகிறது. அத்தகைய தண்டனையின் கொடுமை அதில் அவதிப் படுபவர்களுக்கே விளங்கும். ஆனால் ஆத்ம பரிபாகம் அடைகிறவர்களுக்கு அதற்கு நிக ரான ஆனந்தம் இல்லை. ‘இனிது இனிது ஏகாந்தம் இனிது’ என்னும் கோட்பாடு மனபரிபாகம் அடைந்தவர்களுக்கே

உரியதாகும். உள்ளத்தினுள்ளே இறைவனேடு இணைந் திருக்க அவர்கள் பெரிதும் அவாவுறுகின்றனர்.

சொல்லும் அச்சொல்லிற்கு உரிய பொருளும் இணைபிரியாதவைகள். பசித்திருக்கின்றவர்களிடத்துச் சோறு என்று சொன்னவுடன் அதற்கேற்ற சித்தவிருத்தி அவர்களிடம் உருவெடுக்கிறது. சித்த விருத்திகள் தடாகத்தில் அலே வீசுதற்கு நிகர். அலே அடித்துக்கொண்டிருக்கும் தடாகத் தின் அடிபாகம் காட்சிக்கு எட்டாது. விருத்தி மயமாய் இருக்கும் மனத்துக்கு ஆதாரமாய் இருக்கும் ஆத்ம சொரூபம் அனுபவத்திற்கு எட்டாது. பின்பு மனம் ஒடுங்கிய நிலே யிலோ சொல் பொருளற்றதாகிறது. மனத்தை வென்றவர் களுக்கே இந்நிலே சாத்தியமாகிறது. மனமடங்கிய நிலேயும் சும்மா இருப்பது என்னும் பாங்கும் ஒன்றேயாம். சாதாரண மனிதன் ஒருவனுக்குச் சொல் ஒரு பெரிய பந்தபாசமாகிறது. ஏனென்ருல் அதைக் கேட்கும் பொழுதெல்லாம் அதற்கேற்ற விகாரத்தை மனம் எடுக்கிறது. சொல்லின் அதாவது மொழியின் வாயிலாகச் சாதாரண மனிதர்கள் கருத்தை ஏற்கும்பொழுதெல்லாம் இன்பத்தையோ துன்பத்தையோ மாறி மாறி அனுபவிக்கிருர்கள். போற்றுதல் இன்பத்தை யும் தூற்றுதல் துன்பத்தையும் ஊட்டுகின்றன.

இரவும் பகலும் சொல்லே ஒதுக்கித் தள்ளுதலில் ஈடுபடு கிறவர்கள் மௌனம் சாதிக்கின்றனர். தாங்கள் பேசுவது மில்லே; பிறர்பேசுவதை அவர்கள் பொருட்படுத்துவதுமில்லே. அத்தகைய சாதனத்தில் தீவிரமாக ஈடுபடுங்கால் சித்த விருத்தி தானுக ஒடுங்குகிறது. சொரூப தரிசனமும் தானுக வந்தமைகிறது. அத்தகைய பெருநிலே விரைவில் வந்து வாய்க்கவேண்டுமென்பதே இப் பிரார்த்தனேயின் நோக்க மாகும்.

51. நேச நிருவிகற்ப நிஷ்டையல்லால் உன்னடிமைக்கு
ஆசைஉண்டோ நீ அறியாதது அன்றே பராபரமே.

விகற்பமற்றநிலை நிருவிகற்பம் அல்லது நிர்விகல்பம் என்பதாம். எங்கு விகல்பம் இல்லையோ அங்கு நிர்விகல்பம் கூடுவதாகிறது. விகல்பம் என்ருல் என்ன என்பதை ஆராய் வோம். ஒருவனுடைய கூற்றை மற்றொருவன் தவறுதலாகப் பொருள்படுத்துகிருன். தன் கூற்றை விகல்பமாக எடுத் துக்கொள்ளலாகாது என்று முதலில் கூறியவன் மேலும் மொழிகிருன். திரிவுபட்டுப் பொருள்படுத்துவது விகல்ப மாம். மேடு பள்ளமாயிருக்கும் கண்ணுடியின் வாயிலாகப் புறப் பொருள்களைப் பார்க்குமிடத்து அவைகள் திரிவுபட்டுத் தென்படுகின்றன. கண்ணுடியில் இருக்கும் விகல்பம் அதற் குக் காரணமாகிறது. கண்ணுடிக்கு ஒப்பானது மனம். மனத் தில் இருக்கும் விகல்பத்திற்கு ஏற்பப் புறவுலகம் திரிவு பட்டுக் காட்சி கொடுக்கிறது. எத்தனை கோடி மக்கள் உலகில் இருக்கின்றனரோ அத்தனை கோடி மன விகல்பங் களும் இருக்கின்றன. அவரவர் மன விகல்பத்திற்கேற்ற வாறு உலகைப் பொருள்படுத்துவதும் வெவ்வேறு விதங் களில் அமைகிறது. விகல்பமற்ற மனம் தேங்கிச் செயலற்ற மனமாகிறது. தேங்கிச் செயலற்ற நிலை மனோநாசத்திற்கு ஒப்பானது. மனத்தில் நாசம் அமையுமிடத்து ஆத்ம சாதகன் பரத்தை அடையப்பெற்றவனுகின்ருன்.

நிஷ்டை என்பது இடையரு முயற்சி. முயற்சிக்கு ஏற்ற வாறு நாடுகிற லக்ஷியம் நிறைவேறுகிறது. நிர்விகல்ப நிலை யில் நிஷ்டை வைக்கின்ற சாதகன் அந்த நிர்விகல்பத்தையே நேசிக்க வேண்டும். நேசம் வலுப்படுதற்கேற்ப நேசிக்கப்படு கின்ற பொருள் உள்ளத்தில் உறுதியாக இடம் பெறுகிறது. ஒரு லட்சியத்தை நேசிப்பதும் அதில் ஆசை கொள்வதும்

ஒன்றேயாம். ஆத்ம சாதகன் ஒருவன் முழு மனத்தோடு நிர்விகல்பத்தையே நேசிக்கவும் அதில் ஆசை கொள்ளவும் செய்வானுகில் அவன் அதை அதிவிரைவில் அடையப்பெறு கிருன். இறைவா! நீ ஆண்டான்; நான் அடிமை. உன் அடிமையாகிய நான் நிர்விகல்ப நிஷ்டையிலேயே கண்ணுங் கருத்துமாக இருக்கிறேன் என்பதைத் தேவரீர் நன்கு அறி வீர். அப்படி அறிகிற தாம் எனது லக்ஷியத்தைப் பூர்த்தி பண்ணி வைக்க வேண்டும் என்று இப்பிரார்த்தனை பொருள் படுகிறது.

52. நுச்சன்என வேண்டாம்இத் தொல்உலகில் அல்லல்கண்டால்
அச்சம் மிகஉடையேன் ஐயா பராபரமே.

துச்சன்-அற்பன், ஒன்றிற்கும் உதவாதவன். இறைவ னுடைய மகிமையோடு சீர்தூக்கிப் பார்த்தால் அண்டங்கள், அதில் உள்ள ஜீவன்கள் யாவுமே ஒன்றிற்கும் உதவாதவை களாய்ப் போகின்றன. இறைவனுடைய சிருஷ்டியில் மனித னுக்கும் ஒரு நாளில் தோன்றியழியும் பூச்சிக்கும் வித்தியாசம் ஏதுமில்லை. அழிந்து பட்டுப்போம் பூச்சியை நாம் பொருள் படுத்தாது இருப்பது போன்று இறைவா, என்னை நீ பொருள்படுத்தாது ஒதுக்கி வைக்கவேண்டாம். ஏனென்றால் இப்பழைய உலகில் அல்லல் அல்லது துன்பங்கள் ஏராள மாக உண்டு என்பதை நான் அறிகின்றேன். பிறவிப் பெருங்கடலில் துன்பத்திற்கு ஒரு வரம்பு கிடையாது என்ப தையும் உணருகிறேன். திரும்பத் திரும்பப் பிறப்பெடுப்பது துன்பம். உடல் வாழ்வு வாழ்வது துன்பம். தேய்வது துன்பம். மாய்வது துன்பம். அவை யாவையும் எண்ணி நான் அஞ்சுகிறேன். ஆகையால் ஐயனே, என்னை நீ ஆட் கொண்டு உன் மயம் ஆக்குவாயாக.

53. கண் ஆவா ரேனும்உனைக் கைகுவியார் ஆயின்அந்த
மண் ஆவார் நட்பை மதியேன் பராபரமே.

இந்திரியங்களுள் சிறந்ததான கண்ணிற்கு ஒப்பான நண்பர்கள் உலகில் உண்டு. அவர்கள் எல்லாக் காரியங்களுக்கும் உதவும் தன்மையுடையவர்கள் ஆவார்கள். அத்தகைய முதன்மை வகிப்பவர்களாக இருந்தாலும் அன்னவர்களிடம் கடவுள் பக்தி இல்லாவிடில் அவர்கள் ஒன்றுக்கும் உதவாதவர்களாவார்கள். வீணில் பிறந்து வாழ்ந்திருந்து மண்ணில் புதையுண்டு மறைந்து போகின்றனர். கடவுள் பக்தியில்லாத அம்மனிதர்களின் உறவுக்கு நான் மதிப்பு ஒன்றும் தரமாட்டேன். இறைவா! உன்னை நான் நேசிப்பது போன்று உன்னைக் கைகுவித்து வணங்குகின்ற பக்தர்களையே நேசிப்பேன். மற்றவர்களைப் பொருள்படுத்தமாட்டேன் என அண்ணல் இயம்புகின்றார்.

54. கொல்லா விரதம் குவலயம்எல்லாம் ஓங்க
எல்லார்க்கும் சொல்லுவதுஎன் இச்சை பராபரமே.

குவலயம்—உலகம். விரதங்களுள் சிறந்தது கொல்லா விரதம். இவ்விரதத்தை உலக நடைமுறையோடு சீர்தூக்கிப் பார்க்குமிடத்து வாழ்வில் பெரிய முரண்பாடு ஒன்றைக் காண்போம். மண்ணிலுள்ள பேக்டீரியா (bacteria) என்னும் அணுவுயிரைத் தின்று புல் பூண்டுகள் பயிர் பச்சைகள் உயிர்வாழ்கின்றன. அவைகளைத் தின்று மான் முதலியன உயிர்வாழ்கின்றன. மானைத் தின்று சிங்கம் புலி முதலியன உயிர் வாழ்கின்றன. பூச்சியைத் தின்று பல்லி உயிர்வாழ்கிறது. பல்லியைத் தின்று கோழி உயிர் வாழ்கிறது. கோழியைத் தின்று பருந்தும் மனிதனும் உயிர் வாழ்கின்றனர். இங்ஙனம் வாழ்வென்பது உயிரை உயிர் மாய்ப்பதின் வாயிலாக அமைந்துள்ளது. இத்தகைய

நெருக்கடியான திட்டத்தில் அகப்பட்டுக்கொண்டிருக்கிற மனிதன் எங்ஙனம் கொல்லா விரதத்தைக் கடைப் பிடிக்க முடியும்? கொல்லா விரதம் மனிதனுக்கே சாலும் என்பது சான்ரேூர் துணிபு. எல்லா உயிர்களிடத்தும் அன்பாயிருக்க மனிதனுக்கு இயலும். எவ்வுயிர்க்கும் மனம் மொழி மெய்யால் தீங்கு செய்யாதிருக்க மனிதனுக்கு இய லும். தான் உணவுண்பதையே தனது சுக ஜீவனத்துக்காக வென்று கருதாது ஈஸ்வர ஆராதனைக்கென்று கருதி உண்ப வன் அச்செயலிலுள்ள தோஷத்தினின்று விடுபடுகிருன். தான் உயிர் வாழ்ந்திருப்பது தனக்காகவன்று. கடவுள் வழிபாட்டிற்கே தன் உயிர் வாழ்வு அமைந்திருக்கிறது. இடையருது கடவுள் வழிபாடு செய்வதற்கிடையில் தன் னுடைய ஜீவ வியக்தியைச் செத்ததற்கு நிகராக ஒதுக்கி வைக்க வல்லவன் கொல்லா விரதத்தில் நிலைபெற்றவனுகி ருன். அஹிம்சையிலே நன்கு நிலைபெற்றிருக்கும் யோகி ஒருவனுடைய முன்னிலையில் ஏனைய உயிர்களும் பகைமையை ஒழித்து விடுகின்றன என்பது கோட்பாடு. ஆக, ஆழ்ந்து கடவுள் பக்தியில் ஈடுபட்டிருப்பவர்களெல்லாம் கொல்லா விரதியர் ஆகின்றனர். அவர்களின் எண்ணிக்கை உலகெங் கும் அதிகரிக்கவேண்டும் என்பது அடியேனது பிரார்த்தனை என்கிருர் தாயுமானவர்.

55. எத்தால் பிழைப்பேனே எந்தையே நின்அருட்கே
பித்துஆனேன் மெத்தவும்நான் பேதை பராபரமே.

எத்தால்-எவ்வித உபாயத்தால். பிழைப்பேனே-வாழ்ந் திருப்பேனே. மெத்தவும் - மிகவும். பேதை - அறிவிலி. இறைவா! நான் நல்வாழ்வு வாழ்ந்திருக்கும் உபாயத்தை எங் ஙனம் அறிந்துகொள்வேன். பாட்டனுரையும் குருவையும் எதிர்த்துப் போர்புரியும் கொடிய செயலில் கிருஷ்ண

பரமாத்மாவால் அர்ஜுனன் தூண்டப்பட்டான். அக்கொடிய செயலைப் புரிந்தும் அவன் பாவியாகவில்லை, அச்செயலின் மர்மத்தை அறிந்துகொள்வதற்கு முன்பு அவன் பேதையாய் இருந்தான். அவனுடைய நிலையில்தான் மக்கள் எல்லாரும் இருக்கின்றனர். அர்ஜுனன் இறைவனுடைய அருளிற்குப் பித்துப் பிடித்தவன் போன்று ஆனான். அவன் பூண்ட அருள் தாகத்திற்கு ஆறுதல் வாய்த்தது. வாழ்வின் மர்மத்தை அவன் அறிந்துகொண்டான். இறைவா! நானும் அங்ஙனம், அருள்தாகம் பூண்டு அதில் பித்துப் பிடித்தவனாக இருப்பேனாக. அப்பொழுது உன்னருளால் நான் அறிய வேண்டியதை அறிபவன் ஆவேன் என்பது தாயுமானவர் கூற்று.

56. வாயினால் பேசா மவுனத்தை வைத்துஇருந்தும்
தாய்இலார் போல்நான் தளர்ந்தேன் பராபரமே.

மனிதன் அடைய வேண்டிய பெரு நிலை மௌனமாகும். பேசாதிருத்தல் என்பது அதன் பொருள். பேசும்போது ஸ்தூல ஓசை உண்டாகிறது. பேசாதிருந்தால் ஸ்தூல ஓசை ஒடுங்குகிறது. ஆனால் மனம் அசைகிறது. அதன் அசைவுக்கு ஏற்பச் சூட்சும ஓசை உண்டாகிறது. மனம் அசைவற்று இருக்கும்போது ஆனந்தம் உண்டாகிறது. ஆகையால் மனிதன் வாய், மனம் அடங்கி மௌனத்தில் நிலைபெற்றிருக்கக் கற்றுக்கொள்வானாகில் அவன் தானாக ஆனந்தத்தில் நிலைபெற்றவனாகிறான். அந்நிலையை அடைய முயலாமல் அல்லல் படுவது தாயிலாச் சிறார் தளர்வுறுவதற்கு ஒப்பாகும் என்பது இக்கண்ணியின் பொருளாம்.

57. அன்னைஇலாச் சேய்போல் அலக்கண்உற்றேன் கண்ஆர
என்அகத்தில் தாய்போல் இருக்கும் பராபரமே.

அலக்கண்-துன்பம். கண்ணார-காட்சிக்கு இலக்காக.

எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருள் எல்லா ஜீவர்களின் உள்ளத்திலும் தெளிவுறத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. அத்தனை ஜீவர்களையும் பரிபாலிக்கும் பாங்கு அதற்கு உண்டு. அந்த இனிய பாங்கை அருள்நிலை என்று கூறுவது மரபு. புறவுலகில் அன்னையை இழந்துவிட்டு அனுதை போன்று அல்லல்படுவது இயல்பு. ஆனல் அகவுலகில் ஜீவாத்மனை யாண்டும் ஆதரித்து வருகிற அருள் சொரூபமான பரதேவதையை மறந்துவிட்டு அல்லல் படுவது பரிதாபகரமான நிலையாம். பரம்பொருளே அத்தகைய அல்லல் எனக்கு வேண்டாம் என்பது இப்பாடலின் கருத்து.

58. உற்றுநினைக் கில்துயரம் உள்உள்ளே செந்தீயாய்ப்
பற்றநொந்தேன் என்னைமுகம் பார்நீ பராபரமே.

மனத்தினுள் செந்தீயைப்போன்று துயரம் ஓயாது உதித்துக்கொண்டிருக்கிறது. அப்படி உள்ளத்தினுள் துயரம் உருவெடுத்திருக்கையில் மனிதன் துன்பத்திற்கு ஆளாகிறுன். தன்னுடைய யதார்தத நிலையாகிய பேரியல்பிற்குப் புறம்பானவன் ஆகிறுன். துயரம் என்னும் உள்ளக் கனல் எங்கிருந்து உதித்தது என்று ஆராய்ந்து பார்க்குமிடத்து அது அஞ்ஞானத்தில் தோன்றியது என்பது வெளியாகும். மனிதன் படுகிற துன்பம் அனைத்துக்கும் அஞ்ஞானமே மூல காரணமாகிறது. அக்ஞானத்தைத் துருவி ஆராய்ந்து பார்க்குமிடத்து அதற்கு ஆதரவு எதுவுமே இல்லை என்பது வெளியாகும். துன்பத்திற்கு இடம் தராது பேரானந்தத்திலேயே திளைத்திருக்கவேண்டிய நாம் துன்ப நெருப்பில் நொந்துகொண்டிருப்பது விந்தையாம். பரம்பொருளே! உன்னுடைய பேரருளால் இந்த மயக்கம் என்னிடத்து அகன்று போய்விடுக என்று வேண்டுகிருர் தாயுமானவர்.

59\. பொய்யன் இவன் என்றுமெள்ளப் போதிப்பார் சொல்கேட்டுக்
கைவிடவும் வேண்டாம்என் கண்ணே பராபரமே.

பொய்யன் இவன் என்பது இவன் ஜடப்பொருள் சொரூபமானவன் என்று பொருள்படும். பொய்யான ஜடம் என்பதும் சேதனத்தின் ஒரு பாங்காய் இருக்கையில் பண்படாத மனக்கண் படைத்திருப்பவனுக்கு அது பொய்யாகிய ஜடமாகப் புலனுகிறது. ஆனல் நிறைந்த ஞானக் கண்ணை அடையப்பெற்றவனுக்கு எங்குமே ஜடம் இல்லை. யாண்டும் சேதனமே உள்ளது. ஜீவனுகிய நான் உடலமைப்பை முன்னணியில் வைக்குமிடத்துப் பொய்யனுகிறேன். எனக்குக் கண்ணுக உள்ளே ஒளிர்கின்ற சேதனமாகிய உன்னை முன்ன்ணியில் வைக்குங்கால் நான் பொய்யன் அல்லன்; சேதனமாகிய மெய்யன் ஆகிறேன். ஆதலால் உள்ளத்தினுள்ளே ஞானக் கண்ணுக இலங்குகின்ற சேதன வஸ்துவே, நான் யாண்டும் உன்னுடைய சைதன்யத்திலேயே திளைத்திருப்பேனுகில் எக்காரணத்தை முன்னிட்டும் நான் பொய்யன் ஆக மாட்டேன். ஆதலால் யாண்டும் உன்னுடைய சேதன சொருபத்திலேயே என்னை நீ வைத்திருப்பாயாக என்கிருர் தாயுமானவர்.

60\. எண்ணம் அறிந்தே இளைப்புஅறிந்தே ஏழை உய்யும்
வண்ணம் திருக்கருணை வையாய் பராபரமே.

மானுடநிலையை எட்டிய ஜீவனுக்கே கடவுளைப்பற்றிய கருத்து வருகிறது. கடவுளுக்கும் தனக்குமுள்ள இணக்கத்தை மனிதன் அறிகிருன். கடவுளின் மகிமையோடு சீர் தூக்கிப் பார்க்குமிடத்துத் தான் பெற்றுள்ள பேறு எவ்வளவு அற்பமானது என்பது அவனுக்கு விளங்குகிறது. எண்ணிப் பார்க்கும் திறன் சிற்றுயிர்களுக்கில்லை. ஜீவன்

செய்கின்ற செயல்களிலெல்லாம் மிக மேலானது எண்ணம். அந்த எண்ணம் கடவுளைக் குறித்ததாகுமிடத்து அதன் சிறப்பு இன்னும் அதிகரிக்கிறது. மேலான எண்ணம் எண்ணிச் சோர்வடைவது மனிதனுடைய தனிச் செயல். அந்தச் சோர்வே இளைப்பென ஈண்டு இயம்பப்படுகிறது. கடவுளிடத்துத் தன் எண்ணத்தைத் திருப்புதற்கு ஒப்பான செயல் ஏதுமில்லை. மகோன்னத நிலைக்கு வந்திருக்கும் மனிதன் தான் இன்னும் தெய்வீகம் எதையும் பெருததால் கடவுளிடம் தன்னை ஏழையென்று இயம்புவது முற்றிலும் பொருத்தமானது. கருணாகரனாகிய கடவுளே உன்னை அடைதற் பொருட்டு நான் எடுத்துக்கொள்ளும் முயற்சி எத்தகையதென்பதை அறிந்து என்னை நீ காப்பாற்றுவாயாக என்பது இக்கண்ணியின் கருத்தாகும்.

61. நாட்டாதே என்னைஒன்றில் நாட்டி ஹிதம்அஹிதம்
காட்டாதே எல்லாம்நீ கண்டாய் பராபரமே.

நாட்டாதே - அல்பனாகிய என்னை முக்கிய பிரமுகன் என்று பொருள்படுத்த வேண்டாம். ஹிதம் அஹிதம்-நன்மை தீமை. தன்னைப் பெருமிதமாகக் கருதி வந்துள்ள ஜீவன் ஒருவன் கடவுள் முன்னிலைக்குப் போகுங்கால் தன்னுடைய மனப்பான்மையை அறவே மாற்றிக்கொள்ளவேண்டும். அப்படி மாற்றிக்கொள்ளுவதால் அவன் கருணைக்குப் பாத்திரமாகின்றான். இறைவா! என்னுடைய அறியாமையால் என்னை நான் இதுகாறும் பெருமிதப்படுத்தி வந்துள்ளேன். ஆதலால் நீயும் நான் எண்ணியபடியே என்னை ஒரு முக்கியமான பிரமுகன் என்று மனத்தில் வைக்கவேண்டாம். அதற்கு மாறாக யாண்டும் உன்னைச் சார்ந்துள்ள தொண்டன் என்று என்மீது இரக்கம் வைப்பாயாக.புதிய பிறப்பெடுக்கப் போகும் ஜீவன் ஒருவனுடைய நல்வினை தீவினைகளைக் கணக்

கெடுத்து வினைக்கேற்றபடி அந்த ஜீவனுக்கு மறுபிறப்பு அமைப்பது நியதி. இறைவா, அந்தப் பாங்கில் என்னை எந்த வினையிலும் கட்டி வைக்க வேண்டாம். என்னுடைய நல்வினை தீவினைகளையும் கணக்குப் பார்க்க வேண்டாம். உன்னை அடைவதிலேயே நான் கண்ணுங் கருத்துமாய் இருக்கின்றேன். யான் எனது என்பவைகளையெல்லாம் நான் ஒதுக்கித்தள்ளியாய்விட்டது. உலக வாழ்வு இனி எனக்கு வேண்டாம். கர்மபந்தம் எதுவாயினும் அதை ஒதுக்கித் தள்ளுக. உன் அருள் ஒன்றே எனக்குத் தேவை. அத்தகைய நிலையில் நான் இருப்பதைத் தேவரீர் நன்கு அறிகின்றீர். ஆதலால் என்னைக் காப்பாற்றி அருள்வீராக என்பது பிரார்த்தனை.

62. உன்னை நினைந்து உன் நிறைவின் உள்ளே உலாவும் என்னை
அன்னைவயிற்று இன்னம்அடைக் காதே பராபரமே.

ஜீவன் ஆசைகளின் வசப்பட்டு எடுத்த பிறவியும் இனி எடுக்கப்போகும் பிறவிகளும் எண்ணிக்கையில் அடங்கா. இறைவா, இப்பொழுது படைத்துள்ள மனப்பான்மையை உன் முன்னிலையில் சமர்ப்பிக்கிறேன். உலக ஆசைகள் எல்லாம் மனத்தினின்று அகன்று விட்டன. இடையருது உன்னையே நினைந்து கொண்டிருக்கின்றேன். உன்னை நான் வேண்டியவாறு நினைந்து மகிழ்வுறுவதற்கு உன் நிறைவு, அல்லது இறைமை இடங்கொடுக்கிறது. அதை எண்ண எண்ண அது அகண்டாகாரத்தில் விரிந்தோடுகிறது. உன்னுடைய பாரமார்த்திகப் பெருநிலையிலேயே நான் சர்வகாலமும் உலாவிக் கொண்டிருக்கிறேன். இப்பொழுது உன்னையன்றி வேறு எதனிடத்தும் என் மனத்தை நான் பங்கிட்டுக் கொடுக்கவில்லை. அத்தகைய்

என்னை மறுபிறப்பு எடுத்தல் பொருட்டு மீண்டும் அன்னை வயிற்றில் அடைக்க வேண்டாம் என்பதே எனது விண்ணப்பமாம்.

63. பரம்உனக்குஎன்று எண்ணும் பழக்கமே மாரு
வரம்எனக்குத் தந்துஅருள்என் வாழ்வே பராபரமே.

பரம்—காத்தருளும் கடமை. குழந்தை ஒன்று முற்றிலும் தன் தாயையே சார்ந்திருக்கிறது. அங்ஙனம், கடவுள் நாட்டத்தில் உச்சநிலைக்குப் போகிறவன் தன்னைப் பாதுகாப்பது, வழி நடத்திச் செல்வது எல்லாம் இறைவனுடைய கடமையே எனத் தெய்வத்திடம் ஒப்படைப்பது சிறந்த ஆத்ம சாதனமாகிறது. இவ்வாறான மனப் பழக்கத்தை உடையவனாக இருப்பேனாக. இறைவா, இவ்வாறான மனப்பாங்கையே என்றென்றும் உடையவனாக இருக்கும் வரத்தை எனக்கு வழங்குவீராக. இத்தகைய வரம் கேட்பது முற்றிலும் தெய்வத்திடத்து ஒப்படைப்பதற்கு நிகராகும். சரணாகதி அல்லது அடைக்கலத்தின் உச்சநிலை இது. நிலையற்ற நிலவுலக வாழ்வில் உள்ள பற்றுதலை அறவே ஒழித்தவர்களுக்கு இத்தகைய வரம் கேட்கும் எண்ணம் உண்டாகும். என் வாழ்வே என்று தெய்வத்தைக் கூறுகிற சாதகன் தனக்கும் தெய்வத்திற்குமுள்ள இணக்கத்தை அறிந்தவனாகிறான். கடலிற்குப் புறம்பாக அலைக்கு வாழ்வு இல்லாதது போன்று இறைவனுக்குப் புறம்பாக சாதகனுக்கு வாழ்வு இல்லை.

இறைவா! முற்றிலும் உன் மயமாக்கு; தனி வியக்தி வேண்டாம். என்பதே தாயுமானவரின் பிரார்த்தனை ஆகும்.

64. வந்தித்து நின்னை மறவாக் கடன்ஆகச்
சிந்திக்க நின்னதுஅருள் செய்யாய பராபரமே.

வந்தித்தல்—வணங்குதல். மானுடர்களின் மனப்பரிபாகங்களுக்கு ஏற்ப நம்பிக்கை வெவ்வேறு வடிவெடுக்கிறது.

மனிதன் எதன்மீது நம்பிக்கை வைக்கிருனே அதனை ஏதே னும் ஒரு விதத்தில் வணங்குகிருன். பொருள், போகம் பதவி, பேர், புகழ் ஆகியவைகளை முன்னிட்டு அலைந்து திரிவதையும் அவைகளை வாழ்விற்கு ஆதாரமென நம்பியும் வணங்கியும் பலர் வாழ்கின்றனர். ஆனல் பரமனைக் குறித் துச் செய்கின்ற வந்தனையே சிறந்த வந்தனையாம்.

பரமனை யாண்டும் மறவாதிருப்பது சாதகர்களின் பாங்கு ஆகிறது. 'இறைவா, உன்னை நான் மறந்தால் உயிர் துறப்பேன்' என்று பக்தர் ஒருவர் பகர்ந்துள்ளார். சிந் தனையை இறைவன் என்னும் செம்பொருளுக்கே உரியதாக்க வேண்டும். அப்படிச் செய்வது ஜீவப்பிரயத்தனமாகும். ஜீவப்பிரயத்தனம் தன்னளவில் பெரிய காரியத்திற்கு உத வாது. தெய்வத்தின் அருளும் உறுதுணையாகவேண்டும். அருளை மறந்திருந்து செய்யும் செயல்களெல்லாம் அற்பச் செயல்களாகும். அருள்துணைகொண்டு செய்கின்ற செயல் களெல்லாம் தெய்விகச் செயல்களாகும். இறைவா, உன் னுடைய அருளைத் துணையாகக்கொண்டு நான் யாண்டும் உன்னையே வணங்கியிருப்பேளுக என்பது இதன் கருத்து.

65. எவ்உயிரும் என்உயிர்போல் எண்ணி இரங்கவும்நின்
தெய்வ அருள்கருணை செய்யாய் பராபரமே.

உலக நடைமுறையினை ஆராய்ந்து பார்த்தால் அதிசயம் ஒன்று வெளியாகும். அனந்தங்கோடி உயிர் வகைகள் உல கில் வாழ்ந்து வருகின்றன. அவையாவும் தற்காப்பிலே கண்ணுங்கருத்துமாய் இருக்கின்றன. ஓர் உயிர் ஓங்குதற் பொருட்டு ஏனைய உயிர்கள் மடிந்தாக வேண்டிய குறைநிலை இவ்வுலகில் உள்ளது. இக்குறை நிலையை உள்ளபடி அறியும் பாங்கு உடையவர்களுக்கு இப்பிரபஞ்சத்தில் உள்ள பற்று தல் குறைந்து தேய்ந்து போகிறது. இப்பிரபஞ்சத்திற்கு அப்

பாலுள்ள பெருநிலையை எட்டினல் ஒழிய அஹிம்சா தர்மம் சாத்தியமன்று.

இவ்வுலகில் வாழ்ந்திருக்கும் போதே மற்ற உயிர்களை யெல்லாம் தன்னுயிருக்கு நிகராகக் கருதி அவைகளிடத்து அன்பு வைத்துப் பழகுவது ஆத்மசாதனமாகிறது. தெய் வீக அன்பு ஓங்க ஓங்க தன் வாழ்வைப் பிறர்க்குரிய வாழ் வாக மாற்றியமைக்கும் மனப்பான்மை வருகிறது. பிற உயிர் களின் நலத்துக்கென்றே வாழ்ந்திருக்கும் பக்தர்களின் வாழ்வே பெருவாழ்வு ஆகிறது. பிற உயிர்களின் நலத்தை முன்னிட்டுத் தன் நலனைத் தியாகம் பண்ணும் அளவு பக்தன் அருள் துறையில் மேலோங்குகிறன். இத்தகைய பரந்த மனப்பான்மை வருதற்கும் அதற்கேற்ற பெருவாழ்வு வாழ் தற்கும் தெய்வத்தின் அருட்கருணை வேண்டும் என்பது கோட்பாடாகும்.

66. வெட்டவெளிப் பேதையன்யான் வேறுகபடு
ஒன்றுஅறியேன்
சிஷ்டருடன் சேர்அனந்தம் தெண்டன் பராபரமே.

பேதையன் - அறிவிலி. கபடு - கோணலான மனப் பான்மை. சிஷ்டர்-நல்லொழுக்கத்தில் யாண்டும் நிலைத்தி ருப்பவர்.

தன்னைப் பெருமிதமாக மதிப்புப் போட்டு வீண் கர்வம் கொள்வது மாந்தர் பலரின் இயல்பாம். ஆத்மசாதகன் இந்த விதிக்கு விலக்காகிறன். ஏராளமான அறிவைப்பெற் றிருந்தாலும் அவற்றைத் துடைத்துத் தள்ளிவிட்டுத் தன் னிடம் எந்த விதமான உயர்ந்த தரமும் இல்லை என்பதாக நினைப்பது ஆத்மசாதகனது மனப்பாங்கு ஆகும். வெட்ட வெளிப் பேதையன்யான் என்னும் கூற்றின் வாயிலாகத் தாயுமானவர் தனது உள்ளத்தில் நிறைத்து வைத்திருந்த

கலைஞானங்களையும் அவையொட்டிய சித்தவிருத்திகளையும் ஒதுக்கித் தள்ளுகிறார். இம் முறையைக் கையாளுதல் சாதகர்களின் கடமையாம்.

வக்ரபுத்தி அல்லது கோணலான மனப்பான்மை முற்றிலும் பொல்லாதது. பொருளை உள்ளபடி அறிந்துகொள்ளுதற்கு மாறாக அதைத் திரிவுபடுத்தி அறிந்துகொள்வது கபடம். கபடத்தை நீக்கிச் சரள சுபாவமாகிய குழந்தையின் மனப்பான்மையைப் பெறும்போது சாதகன் அதிவிரைவில் ஆண்டவனின் அருளுக்குப் பாத்திரமாகிறான்.

சாதகன் தன்னை நேரான மனப்பான்மையுடன் வைத்திருப்பதோடு கூட சிஷ்டருடன் (நல்லாருடன்) சேர்வது அவசியமாகிறது. நல்லாரிணக்கம் (சத்சங்கம்) தெய்வபக்தியை விரைந்து வளர்க்கிறது. தன்னைத் திருத்தி அமைத்தல், சான்றோர்களுடன் சேர்ந்து இருத்தல், தெய்வத்தினிடத்துப் பரிந்து விண்ணப்பித்தல் ஆகிய மூன்று செயல்களையும் முறையாக கையாளுகின்ற ஆத்மசாதகன் விரைந்து முன்னேற்றமடைவான். இக் கண்ணியில் தாயுமானவர் செய்கின்ற விண்ணப்பம் இதுவாம்.

67. இரவுபகல் அற்றஇடத்து ஏகாந்த யோகம்
வரவும் திருக்கருணை வையாய் பராபரமே.

ஏகாந்தம்-ஜீவாத்மன் பரமாத்மனோடு ஒன்றியிருப்பதைத் தவிர வேறு எந்தவிதமான சித்தவிருத்தியும் இல்லாத தூய உயர்ந்த நிலையாம். புறவுலகில் சூரியனையோ பிறவற்றையோ பாராது குகையொன்றில் நெடுங்காலம் தியானத்தில் இருக்கின்ற ஒருவனுக்கு இரவும் பகலும் பொருளற்றவைகள். ஒரு விதத்தில் அவன் காலத்தைக் கடந்தவனாகிறான். எப்பொழுதெல்லாம் ஆழ்ந்த தியானம் கூடுகிறதோ அப்பொழுதெல்லாம் ஆத்மசாதகன் கால அதீதத்தில் இருக்

கிருன். முறையாக மனம் செயல்புரியுமிடத்துக் காலம் போவது தெரிவதில்லை. முறை தவறி அது செயல்புரியுமிடத்துக் குறுகிய காலம் நீண்ட காலமாகத் தென்படுகிறது. மனம் ஒடுங்கித் தியானம் கைகூடும்பொழுது காலம் கருத்தில் வருவது இல்லை. அந்நிலையைத்தான் தாயுமானவர் இரவுபகலற்ற இடம் என்கிருர்.

ஜீவாத்மன் பரமாத்மனேடு இணைந்திருப்பதில் இரண்டு நிலைகள் இருக்கின்றன. ஜீவாத்மன் தன்னையும் உணர்கின்ருன், தன் தெய்வத்தையும் உணர்கின்ருன். இவ்வுணர்ச்சியில் ஜீவாத்மன் பரமாத்மன் என்னும் இரண்டு பொருள்கள் இருக்கின்றன. அயர்ந்த உறக்கத்தில் ஜீவாத்மன் தன்னை மறக்கின்ருன். அந்நிலையில் ஜீவன் இருந்தும் இல்லாததற்கு நிகர். ஆழ்ந்த தியானத்தில் ஜீவன் தன்னை மறக்கிருன். ஆனல் பரத்தை ஆழ்ந்து உணர்கிருன். பரத்தைப் பற்றிய ஆழ்ந்த உணர்வில் ஜீவபோதம் அடிபட்டுப் போகுமாகில் அது ஏகாந்த யோகம் எனப்படுகிறது. ஏகாந்த யோகத்தில் பரபோதம் ஒன்றே திரண்டு வடிவெடுத்திருக்கிறது. அத்தகைய பாரமார்த்திகப் பெருநிலை தமக்கு வாய்க்கவேண்டுமென இக்கண்ணியில் விண்ணப்பிக்கிருர் அண்ணல் அவர்கள்.

68. மால்காட்டிச் சிந்தை மயங்காமல் தின்றுசுகக்
கால்காட்டி வாங்காதே கண்டாய் பராபரமே.

மால்—மயக்கம், கால்—பிறப்பிடம். இனபததை நாடுவது உயிர்களின் இயல்பு. சிற்றுயிர் பேருயிர் ஆகிய அனைத்தும் இன்பத்தைத் தேடி அலைந்து திரிகின்றன. அம்முயற்சியில் வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வந்துகொண்டேயிருக்கின்றன. சிற்றுயிர்கள் பேருயிர்களாகப் பரிணமிப்பதற்கு இன்ப நாட்டம் ஒரு முகாமையாக இருந்து

வருகிறது. பெருநிலை அடையப்பெற்ற உயிர்கள் இன்பத்தை எளிதில் பெறுகின்றன. மற்ற உயிர்களையெல்லாம் விட அதிகமாக மனிதன் இன்பத்தைப் பெறுகிருன். ஆனல் அவ் இன்பம் நிலையற்றது என்பதையும் மனிதனே அறிய வருகிருன். பிரபஞ்சத்தில் பெறுகிற இன்பங்கள் அனைத்தும் மயக்கத்தின் விளைவாம். பஞ்சேந்திரியங்களின் மூலமாக வருகின்ற இன்பங்கள் அனைத்தும் பின்பு துன்பங்களாக முடிகின்றன. பஞ்சேந்திரியங்களை அடக்கிப் பழகுமிடத்து உண்மையான இன்பம் ஆத்மசொரூபத்தில் இருப்பது அறியப்படுகிறது. ஆதலால் தான் சுகத்திற்கு உண்மையான பிறப்பிடம் ஆத்மா என்னும் விவேகம் வருகிறது. அத்தகைய விவேகத்தை உறுதியாகப் பெறுகிறவன் மீண்டும் இந்திரிய சுகங்களில் மயக்கங்கொள்வதில்லை. விவேகத்தை ஏகதேசம் பெறுகிறவன் சிற்றின்பத்தையும் பேரின்பத்தையும் மாறிமாறி நாடுகிருன். பேரின்பத்திலேயே நான் நிலைத்திருப்பதற்கு அருள்புரிவாயாக என்பது இக் கண்ணியில் அடங்கியுள்ள கருத்தாகும்.

69. எப்பொருளும் நீஎனவே எண்ணிநான் தோன்ருத
வைப்பைஅழி யாநிலையா வையாய் பராபரமே.

வைப்பு-இடம். ஆதிபகவன் முதற்றே உலகு என்பது பொய்யா மொழி. கடவுள் தான் சேதனம், அசேதனமாகிய பிரபஞ்சப் பொருள்கள் அனைத்துமாக இலங்குகின்ருர். நம் காட்சியில் கேடுடையவைகளாகத் தென்படுபவைகள் தம் அளவில் கேடுடையவைகள் அல்ல. கெட்டவைகளாகத் தென்படுபவைகளிடத்தும் நலம் இருக்கிறது என்பது நமக்குப் புலனவதில்லை.

ஆத்ம சாதனம் பயிலுகிற நாம் அனைத்தையும் கடவுள் சொரூபமாகக் கண்டு பழகுதல் வேண்டும். அப்படிக் காண

பது கற்பனையாக நமக்கு இருப்பினும் யாவுக்கும் ஆதிமூலம் கடவுள் என்பது தான் உண்மை. புலியாக வந்திருப்பதும் கடவுளின் திருவிளையாடல் என்னும் உறுதியை நாம் உள்ளத்தில் நிலைநாட்டவேண்டும். அப்படிச் செய்து வருகிற நாம் புலிநாராயணனுக்கு அருகில் போகாதிருப்பதும் நமது கடமையாகும்.

கடவுளே அனைத்துமாய் இருக்கிறார் என்னும் எண்ணத்தை வளர்ப்பதற்கேற்ப அகங்காரம் அகலுகிறது. முற்றிலும் அகங்காரம் அழிந்த பின்பு கடவுள் காட்சியே தென்படுகிறது. அப்படித் தெளிவடைந்த கடவுள் காட்சி அழிந்து பட்டுப்போவதில்லை. நிரந்தரக் கடவுள் காட்சி வைப்பு என்றும் அழியாத பெருநிலை என்றும் ஈண்டு பகரப் பெறுகிறது. வேற்றுமை நிறைந்த பிரபஞ்சக் காட்சியைக் கண்டு வருகிறேன். அவ்வாறு காண்பது மனமயக்கம். ஈசா! யாவும் நீயே என்னும் மெய்க்காட்சி எனக்கு வாய்க்கவேண்டும் என்பதே இக்கண்ணியின் கருத்தாகும்.

70. சும்மா இருப்பதுவே சுட்டுஅற்ற பூரணம்என்று
எம்மால் அறிதற்கு எளிதோ பராபரமே.

சுட்டற்ற-அந்தக்கரணம். புறக்கரணங்களுக்கு எட்டாத நிலை. சும்மா இரு என்னும் அரிய உபதேசத்தைத் தாயுமானவரின் குரு அவருக்கு உபதேசித்தார். மௌனியான அவர் தாயுமானவரிடம் இரண்டு சந்தர்ப்பங்களில் மட்டும் பேசினார். நமசிவாய என்னும் மந்திரத்தை ஓதியது முதல் பேச்சு. சிஷ்யரிடமிருந்து அவர் பிரிந்து போனபோது சிஷ்யனாகிய தாயுமானவர் குருவிடமிருந்து பிரிவதில் மனத்தளர்ச்சி மிக அடைந்தார். எதை முன்னிட்டும் சித்தத்தில் விருத்தி வரலாகாது என்ற கோட்பாட்டை உணர்த்தும்பொருட்டுச் சும்மாயிரு என்னும் சொல்லை உபதேசித்தது இரண்டாவது

பேச்சு. வாழ்க்கைக்கு அதுவே சிறந்த லட்சியமாகிறது. அக்கோட்பாட்டை அடிப்படையாகக்கொண்டே தம் பாடல் களில் பெரும்பாலானவைகளைத் தாயுமானவர் இயற்றினார்.

தடாகத்தில் அலை வீசிக்கொண்டிருந்தாலோ அல்லது அந்நீர் மாசு படிந்திருந்தாலோ அடிப்பாகம் தெளிவாகத் தெரியாது. மனத்தில் எண்ணங்களாகிய அலை வீசுமாகில் ஆத்ம சொரூபம் விளங்காது. எண்ணங்கள் அனைத்தை யும் ஒதுக்கிய நிலையைத் தான் "சும்மாயிருத்தல்" என்னும் சொல்லைக்கொண்டு விளக்கியுள்ளார் மௌன குரு. எண் ணங்கள் ஓய்ந்த அந்தக்கரணத்தில் ஆத்ம சொரூபமே எஞ்சி நிற்கிறது. ஆத்ம சொரூபமோ காலதேசத்தில் கட் டுப்படாதது. ஜீவ உபாதிக்கு அப்பாற்பட்டது. திரையற்ற கடல் போன்று அகண்டமானது. அகண்டமான பொருளே பூரணம் எனப்படுகிறது. மனோநாசம் அடையப்பெற்ற ஆத்ம சாதகன் பூரணத்தில் ஒன்றுபடுகிறான் என்பது இவ்வரிய கண்ணியின் கருத்தாகும்.

71. முன்னொடுபின் பக்கம் முடிஅடி நாப் பண்அறநின்
தன்னொடு நான் நிற்பதுஎன்றோ சாற்றாய் பராபரமே.

நாப் பண்ணற-நா பண் அற-நாவினின்று சொல் வடி வெடுப்பதற்கு இடமில்லாதபடி செய்து. நின்றன்னொடு-நின் தன் ஓடு-உன்னோடு. சாற்றாய்-சொல்லாய்.
பரமன் சகுணப் பிரம்மமாகத் திகழுங்கால் அவன் பிரபஞ்ச மாகவும், அதில் அனந்தங்கோடி ஜீவர்களாகவும் காட்சி கொடுக்கிறான். சகுணமாக இருக்கிற பரமனுக்கு மக்களா கிய நாம் நமது வடிவத்தைக் கொடுக்கிறோம். பரமன் அரங் கத்தில் பள்ளி கொண்டிருப்பதைச் சான்றாகக் கூறலாம்.

படுத்திருக்கும் பரமனை ஒரு மூர்த்தியாகப் பொருள் படுத்துமிடத்து மேல் என்றும், கீழ் என்றும், முடி என்றும்

அடி என்றும், முன்பக்கமென்றும், பின்பக்கமென்றும் கருத்தில் கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம். அப்படி அமைந்துள்ள சொருபத்தை வர்ணிப்பதற்கு நா உதவுகிறது. கணக்கற்ற பண்களையும் அது உருவாக்குகிறது. அதே பரமனை அகண்ட சச்சிதானந்தமாக அநுபூதியில் உணருமிடத்து அப்பரமனைப் போற்றிய ஜீவாத்மன் பரமாத்மனில் லயமாகிறான். அதன் பிறகு பேசுதற்கு நா இல்லை. மொழி வடிவெடுப்பதற்கு ஓசை இல்லை. முடி அடி என்று பொருள் படுத்துதற்கு இடமில்லை. முன்பு பின்பு என்று காலத்தை அளக்க அந்த நிலையில் சாத்தியமில்லை. இங்ஙனம் ஜீவாத்மன் பரமனில் ஒன்றுபடுவதுதான் முடிந்த நிலை. அந்நிலை எனக்கு எப்போது வாய்க்கும் பகர்ந்தருள்வாயாக என்னும் விண்ணப்பம் இக் கண்ணியில் அடங்கியுள்ளது.

72. மைவ்வண்ணம் தீர்ந்த மவுனிசொன்னது
எவ்வண்ணம்
அவ்வண்ணம் நிஷ்டை அருளாய் பராபரமே.

மைவ்வண்ணம்—அஞ்ஞான இருள். பாரமார்த்திகப் பேருண்மைகள் இரண்டு விதங்களில் நிலைபெற்று வருகின்றன. சாஸ்திரங்களைக் கசடறக் கற்றுத் தெளிந்து அவ்வுண்மைக்கேற்ப வாழ்ந்து வருவது ஒருமுறை. இரண்டாம் முறையானது ஒரு தீபத்தில் இருந்து மற்ற ஒரு தீபத்தை ஏற்றுதற்கு நிகர் ஆகும். இதற்கொப்ப குரு சிஷ்ய பரம்பரையாக பாரமார்த்திகம் வளர்க்கப்பட்டு வருகிறது. மௌனியாகிய தாயுமானவரின் குரு ஆத்ம அனுபூதி பெற்று அஞ்ஞானம் நீங்கப்பெற்றவர் ஆவார். பஞ்சேந்திரியங்கள் வாயிலாகப் புறவுலகில் சிதறடைந்து போகும் மனத்தை வாரியெடுத்து அந்தர் முகமாகத் திருப்பி ஆத்ம சொரூபத்தில் லயித்திருக்கச் செய்வது நிஷ்டையாகும். மௌனகுரு தாமே நிஷ்டை

யில் இருந்து சிஷ்யருக்கு அதைக் காட்டிக் கொடுத்தார். அவ்விதமாகவே தாமும் தியான அவஸ்தையில் ஆத்ம சொரூபத்தில் மூழ்கியிருக்க வேண்டுமென இக்கண்ணியின் வாயிலாகத் தாயுமானவர் தெய்வத்தினிடம் பிரார்த்தனை செய்கிறார்.

73. வித்துஅன்றி யாதும் விளைவதுஉண்டோ
நின்அருள்ஆம்
சித்துஅன்றி யாங்கள்உண்டோ செப்பாய் பராபரமே.

வித்து—விதை. சித்து-சித்—ஆத்ம சைதன்யம். பிரபஞ்சமெங்கும் வித்தின் வாயிலாக உயிர்வகைகள் விருத்தியடைவது போன்று பரமாத்மாவின் ஆத்ம சைதன்யமே அனந்தங்கோடி ஜீவ சைதன்யங்களாக இலங்கிக் கொண்டிருக்கிறது. இவ்வுண்மை ஜீவனுக்கு விளங்குதற்குப் பரமனின் அருள்வேண்டும். அருளை அடையப்பெற்றவர்களுக்கே தாங்கள் பரத்தின் தோற்றங்கள் என்னும் உண்மை விளங்குகிறது. பரம்பொருளே! ஜீவர்களாகிய நாங்கள் அனைவரும் உன்னுடைய புறத்தோற்றங்கள் என்னும் பேருண்மையில் திளைத்திருக்கச் செய்வாயாக என்னும் பிரார்த்தனை இக்கண்ணியில் அடங்கியிருக்கிறது.

74. ஆங்காரம் அற்றுஉன் அறிவுஆன அன்பருக்கே
தூங்காத தூக்கம்அது தூக்கும் பராபரமே.

ஆங்காரம்—அகங்காரம். தான் அல்லாத உடலைத் தான் என்று கருதுவது அகங்காரம். தடித்த உடல் படைத்தவன் தன்னைத் தடித்தவனாகக் கருதுகிறான். மெல்லிய சரீரத்தை உடையவன் மெல்லியனாகத் தன்னைக் கருதுகிறான். அகங்காரம் என்பது இதுவாம். மனிதனுடைய உண்மையான சொரூபம் சச்சிதானந்தமேயாம். அஞ்ஞானத்தால் மனிதன் அதை மறந்திருக்கிறான். பேரறிவுப் பெரும்பொருளாகப்

பரவஸ்து இருப்பது அதனுடைய சித் சொரூபம். உடலைத் தான் என்கின்ற அகங்காரத்தை ஒதுக்கிவிட்டுப் பேரறிவுப் பெருவெளியில் திளைத்திருப்பவர்களே மெய்யன்பர்கள் என ஈண்டு இயம்பப்பெறுகின்றனர்.

அவ்வன்பர்கள் அடையப்பெற்றுள்ள பெருநிலையானது தூங்காத தூக்கம் என இயம்பப் பெறுகிறது. தூங்குகின்ற தூக்கம், தூங்காத தூக்கம் என்று இரண்டு நிலைகள் சீர் தூக்கப்படுகின்றன. தூங்குகின்ற தூக்கம் ஜீவகோடிகள் அனைத்திற்கும் பொதுவானது. தூக்கத்தில் ஜீவன் தன் உடலையும் ஜீவவியக்தியையும் மறக்கிறான். அந்த மறதி யின் வாயிலாக அவன் தன்னைத் தானே புதுப்பித்துக்கொள் கிறான். ஆதலால் தூங்குகின்ற தூக்கம் இயற்கைத் தாய் கொடுத்துள்ள வரப்பிரசாதமாகிறது.

ஆத்மசாதனத்தில் முன்னேறியவன் தன் உடலை மறக் கிறான். உடலை மறந்த நிலை தூக்கம் என இயம்பப்படு கிறது. ஆனால் அவன் தனது நிஜசொரூபமாகிய ஆத்ம சொரூபத்தை முற்றிலும் உணர்கிறான். ஆதலால் அந்நிலை தூங்காத தூக்கம் என்று தூக்கி வைத்துப் பேசப்படு கிறது. இக்கண்ணியில் அடங்கியுள்ள தூக்கும் என்னும் சொல்லிற்குத் தூக்கி வைத்தல் என்பது பொருளாம். தூக்கி வைத்துள்ள மேலான அந்நிலையை எட்டுவதே வாழ்வின் குறிக்கோள் என்னும் கோட்பாடு இக்கண்ணியில் அடங்கி யுள்ளது.

75. சிந்தை அவிழ்ந்துஅவிழ்ந்து சின்மயம்ஆம் நின்அடிக்கே
வந்தவர்க்கே இன்பநிலை வாய்க்கும் பராபரமே.

சிந்தை-சித்தவிருத்தி அல்லது மனத்தின் செயல். யோக: சித்த விருத்தி நிரோதக: என்பது யோக சூத்திர

மாகும். மனத்தில் உதித்து வருகிற விருத்திகளை ஒதுக்கித் தள்ளுவது யோகம். மனம் முற்றிலும் தூயதாகவேண்டும். அதில் எண்ணங்கள் என்னும் அலை வீசலாகாது. அப்போது ஆத்ம சொரூபம் உள்ளபடி ஒளிர்கிறது. தடாகத்தில் அலை வீசுகின்றபொழுது அடிப்பாகம் தெரிவதில்லை.

சிந்தை அவிழ்ந்தவிழ்ந்து என்று தாயுமானவர் கூறுகிருர். சிந்தை அல்லது மனத்தில் இரண்டுவித செயல்கள் நிகழ்கின்றன. உலகியல் ஆசை அதிகரிப்பதற்கு ஏற்ப மனத்தில் திரைகள் (பதிவுகள்) அதிகரிக்கின்றன. இனி கடவுள் சிந்தை வளர்வதற்கு ஏற்ப உலகியல் ஆசையாகிய மனத்திரைகள் ஒன்றன்பின் ஒன்ருக அவிழ்க்கப்படுகின்றன. ஈசனது நாட்டத்தில் உலகியல் சிந்தை அவிழ்ந்தவிழ்ந்து செயலற்றுப் போகுமாயின் அக்ஞானத்திரை அறவே அகற்றப்படுகிறது. அச் சிந்தைக்கு ஆதாரமாய் இருக்கும் ஆத்மப் பிரகாசம் தெளிவுற ஒளிர்கிறது. அந்த ஆத்மப் பிரகாசமே சின்மயமாம் நின்னடி என்று ஈண்டு இயம்பப்படுகிறது.

இந்த ஆத்மப் பிரகாசமே சத்சித் ஆனந்த சொரூபமான இஷ்டமூர்த்தியாம். இஷ்ட மூர்த்தியின் ஆனந்த சொரூபத்தில் சொக்கி இருக்கும் பக்தன் இன்ப நிலையை உணர்கிருன். ஈசனது நாட்டத்தில் உலகியல் சிந்தையை அவிழ்த்துத் தள்ளுவது நல்ல ஆத்ம சாதனமாகிறது.

76. சொல்ஆடா ஊமரைப்போல் சொல்இறந்து நீஆகின்
அல்லால் எனக்குமுக்தி ஆமோ பராபரமே.

சொல் ஆடுதல் - சொல்வடிவெடுத்தல்; சொல் ஆடா- பேச்சுத் திறமையற்ற. நல்ல ஆத்ம சாதகன் முதலில் தெளிவுறப் பேசிப் பழகுகின்ருன். பிறகு பேச்சுத்திறன் முழுதை

யும் பாரமார்த்திகப் பேச்சாக அமைக்கின்றான். அந்த அளவில் நாவுக்கு அரசனாகிறான். அடுத்தபடி அனுமதிகொடுக்கும் போது நாவானது பேசவேண்டும். மற்ற வேளைகளில் சொல்லாடா ஊமையைப்போல் நாக்குச் சும்மா இருக்கவேண்டும். பேசும் திறமைக்கிடையில் பேசாது மௌனமுற்றிருப்பது நல்ல ஆத்மசாதனமாகும். சித்த விருத்தி சூக்ஷ்ம நிலையில் உள்ளபோது எண்ணம் என்னும் பெயர் பெறுகிறது. ஸ்தூல வடிவெடுக்கும்போது பேச்சாகிறது. சூக்ஷ்மநிலையில் உள்ள எண்ணத்தையும் ஸ்தூலநிலையில் உள்ள சொல்லையும் ஒதுக்கித் தள்ளுதல் வேண்டும். இப்பழக்கம் கைகூடுதற்கேற்ப மனோநாசம் உண்டாகிறது. மனம் ஒதுக்கப்படுமிடத்து ஜீவாத்மனுக்கும் பரமாத்மனுக்கும் யோகம் உண்டாகிறது. அந்த யோக நிலையை 'நீ ஆகின் அல்லால் எனக்கு முக்தி ஆமோ' எனத் தாயுமானவர் பரமனிடம் விண்ணப்பிக்கிறார். சொல்லை ஒதுக்கித் தள்ளிவிட்டு ஜீவன் சிவபோதத்தில் ஒன்றியிருக்கவேண்டும் என்பதே இக் கண்ணியில் அமைந்துள்ள பிரார்த்தனையாம்.

77. பேச்சுஆகா மோனம் பிறவா முளைத்ததுஎன்றற்கு
ஆச்சுஆச்சு மேற்பயன்உண் டாமோ பராபரமே.

பேச்சாகா மோனம் பிறவா-சொல்லிற்கு அப்பாலுள்ள மௌன நிலையானது வாய்ப்பதற்கு இடமில்லை. முளைத்தது என்றற்கு ஆச்சாச்சு-மனதின் செயல் வடிவெடுத்து என்னதான் ஆயிற்று? என்னதான் ஆயிற்று? மேற்பயனுண்டாமோ? மனம் கூத்தாடிக்கொண்டிருப்பதால் அது பிரபஞ்ச வாழ்வில் நிலைபெற்றிருக்கும்; அதிலும் உயர்ந்தநிலை வாய்க்காதல்லவா? மனத்தின் ஸ்தூலத் தோற்றம் சொல்லாகும். நான் இப்போது பேச்சுச் சொரூபமானவனாக இருப்பதால் பரமாத்மனுக்குப் புறம்பானவனாக இருக்கிறேன். மனத்தின் செயல்களாகிய

உணர்வுகளும் எண்ணங்களும் திரும்பத் திரும்பத் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. மனம் கூத்தாடுதற்கு இன்னும் இடம் கொடுத்துக் கொண்டே போனல் பிறப்பு இறப்பு மயமான பிறவிக் கடலேத் தவிர வேறு ஒரு பயனும் வாய்க்காது. ஆதலால் மனமற்ற, உயர்நிலேயைப் பராபரமே நீ எனக்குக் கொடுத்தருள்வாயாக என அண்ணல் விண்ணப்பிக்கிருர்.

78. கெட்டிஎன்றுஉன் அன்பர்மலம் கெட்டுஅயர்ந்தோர் [பூரணம்ஆம்
தொட்டிலுக்குள் சேய்போல் துயின்ருர் பராபரமே.

கெட்டி—சமர்த்தன். மலம்—அந்தக் கரண சுத்தி அடையாத நிலே. அயர்ந்தோர்—பரத்தில் ஆசை கொண்டவர்கள். கெட்டிக்காரனுக இருக்கிற ஆத்மசாதகன் யாண்டும் தன்னேத் தானே திருத்தியமைக்கிருன். மனம் முற்றிலும் திருந்தியமையுமானுல் அது மலம் கெட்ட நிலேயாகிறது. சித்தமலம் அறுபடுகிறவன் அகம் புறம் எங்கும் சிவனேக் காண வல்லவனுகிருன். மனத்தைத் திருத்தி அமைத்தான பிறகு பரத்தில் ஒன்றுபட அவாவுறுதல் வேண்டும். அப்படி அவாவுறுதலே ஈண்டு அயர்தல் என்று இயம்பப்படுகிறது. பரத்தில் ஒன்றுபட அயர்ந்தோருக்கும் பரம் வாய்க்கிறது. அவர்கள் அடையப்பெறும் பெருநிலே பூரணம் என்று இயம்பப்படுகிறது.

தொட்டிலிற்குள் தூங்கும் சிசுவானது உலகியல் கவலேகள் அற்று இருப்பது போன்று பூரணத்தில் ஒன்றுபடுகிற ஆத்மசாதகன் உயர்ந்த பாரமாத்திகச் சித்தியை அடையப் பெறுபவனுகிருன். இன்னல்கள் நிறைந்த இவ்வுலகைக் கருத்தில் வாங்கிக்கொள்ளாது பாரமார்த்திகப்பெருநிலேயில் அவன் பரமானந்தத்தில் திளேத்திருக்கிருன். பூரணத்தை

அடைந்தவர்கள் யாவரும் பெற்றுள்ள பெரிய பேறு அதுவே யாம். அப்பெரிய பேற்றினைப் பெற்றாகவேண்டுமென பரம னைச் சார்ந்திருந்து ஆத்மசாதகன் பிரார்த்தனை பண்ண வேண்டும் என்பதே இக்கண்ணியின் உட்கருத்தாம்.

79. காட்ட அருள் இருக்கக் காணாது இருள்மலத்து
நாட்டம் எனக்குவரல் நன்றோ பராபரமே.

காட்சி இருவகைப்படுகிறது. ஒன்று அருள்காட்சி; மற்றது மருள்காட்சி. இவ்விருகாட்சிகளுள் ஒன்று நிலை பெறும்போது மற்றது மறைகிறது. கயிற்றைப் பாம்பாகப் பொருள்படுத்துவது இதற்கு நல்ல உதாரணம். பாம்பாகக் கண்டபோது கயிறு இல்லை. கயிறாகக் கண்டபோது பாம்பின் காட்சி மறைபடுகிறது. அருளைச் சார்ந்திருப்பவனுக்கு மெய்க்காட்சி கிட்டுகிறது. அருளைச் சார்ந்திருத்தல் என்றால் என்ன? அகக்கரணமாகிய மனதும் புறக்கரணமாகிய பஞ்சேந்திரியங்களும் பரமனுக்கென்றே ஒப்படைக்கப்பட வேண்டும். உள்ளத்தில் உள்குவதெல்லாம் பரமனைப்பற்றிய உணர்வேயாம். புறத்தில் புலப்படுபவைகள் எல்லாம் பரமனுடைய பெருமைகளாம். இத்தகைய இயல்பை உருவாக்குபவன் அருளைச் சார்ந்திருப்பவனாகிறான்.

இருள் மலம் என்பது அஞ்ஞானத்தில் திளைத்திருக்கிற மன விகாரமாம். சகோதரனும் சகோதரியும் ஓர் இடத்தில் பக்கம் பக்கம் அமர்ந்திருக்கிறார்கள். பரஸ்பரம் அவர்கள் கொண்டுள்ள பான்மை அருளைச்சார்ந்ததாகும். வழியில் போகிற ஒருவன் அவர்களைக் காதலர்கள் எனக்கருதுகிறான். அவன் உள்ளத்தில் பூண்டது இருள்மலம் அல்லது அறிவின்மையில் உதித்த கோணலான மனப்பான்மை.

எவ்வளவுக்கெவ்வளவு ஒருவன் அஞ்ஞானத்தில் தோன்றியுள்ள மனம் என்னும் மலத்தைக்கொண்டு பிரபஞ்

சத்தில் உழல்கின்ருனே அவ்வளவுக்கவ்வளவு அவன் கீழ்மையுறுகிருன். பிரபஞ்ச நாட்டம் உள்ளத்தில் உருவெடுக்க இடந்தரலாகாது. பிரபஞ்ச நாட்டம் உள்ளத்தில் தீமையை வளர்க்கிறது. அருளைத் துணையாகக்கொண்டு பரத்தையே காண முயலுகிறவனுக்கு மேலும் மேலும் நன்மை உண்டாகிறது. நன்மையை வளர்ப்பதற்கான பேரருள் எனக்குச் சொந்தமாயிருக்கையில் தீமையை வளர்ப்பதற்கான கோணலான மனப்போக்கில் நான் போய்க்கொண்டிருப்பது பொருந்துமா? அது ஒருநாளும் பொருந்தாது என்பதே இக்கண்ணியின் கருத்தாம்.

80. எத்தன்மைக் குற்றம் இயற்றிடினும் தாய்பொறுக்கும்
அத்தன்மை நின்அருளும் அன்ருே பராபரமே.

உலக நடைமுறையைப்பற்றிய கோட்பாடு ஒன்றுண்டு. குபுத்திரனை உலகில் காணலாம். ஆனல் குமாதாவை உலகில் காண்பது அரிது. மகன் எவ்வளவு கெட்டவனுக இருந்தாலும் அவனை நல்லவன் என்று பொருள்படுத்துவதே பெற்றெடுத்துள்ள தாயின் போக்காம். இப்போக்கை அடிப்படையாகக் கொண்டே 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்னும் பழமொழி வந்துள்ளது. தாயின் உள்ளத்தைப் படம் பிடித்துப் பார்க்கவேண்டும். ஒவ்வொரு தாயும் தான் பெற்றெடுத்துள்ள மகனை மேலோன் என்றே பொருள் படுத்துகிருள். அவன் எத்தகைய துஷ்டனுக இருந்தாலும் அவனைச் சான்ருேன் என்றே தாய் பொருள் படுத்துகிருள். பெற்றெடுத்த தாய்க்கே மகன் குற்றம் செய்தாலும் அது அவளுக்குக் குணமாகத் தோன்றுகிறது. குற்றத்தை மன்னிக்கும்படி மகன் கேட்பதற்கு முன்பே அவள் மனம் உருகித் தன் மைந்தனை ஆட்கொள்ளுகிருள். ஆதலால்தான் உலகத் தாயின் உள்ளம் கிட்டத்தட்ட தெய்வத்தின் அருளிற்கு நிகரானது என்று அறிஞர் போற்றுகின்றனர்.

தாயின் அன்பு பந்தபாசத்தினின்று பிறந்தது. விவே கத்திற்கு ஆங்கு இடமில்லை. பிறவிதோறும் பந்தபாசம் மாறி மாறி அமைகிறது. ஒரு பிறவியில் உண்டாகிற தாய் சேய் பாசம் அடுத்த பிறவியில் நிலைத்திருப்பது இல்லை. புதிய பிறவியில் புதிய தாய் சேய் இணக்கம் உண்டாகிறது. ஆதலால் தாய் சேய் இணக்கம் நிலையற்றது. ஜீவாத்மனுக் கும் பரமாத்மனுக்கும் இடையில் உள்ள இணக்கம் எக்காலத் தும் ஜீவனுடைய எப்பிறப்பிலும் மாருது இருக்கிறது. தான் அருளிற்குப் பாத்திரமாகவேண்டுமென ஜீவாத்மன் பரிந்து வேண்டும்போது பரமன் அவ்வருளை வாரிக் கொட்டுகிருன். ஜீவாத்மன் பரமனை நோக்கி ஓரடி வைத்தால் பரமன் பத்தடி வருகிருர் என்று ஆன்ருேர்கள் பகர்கிருர்கள். அத் தகைய அருளைப் பயன்படுத்தக் கற்றுக்கொள்வேனுக என் பது கோட்பாடு.

81. எத்தனையோ தேர்ந்தாலும் என்னுலே
இன்பம்உண்டோ
சித்துஉருவே இன்பச் சிவமே பராபரமே.

சித்துரு—சித் + உருவம் = அறிவு வடிவம். ஜீவபோதம், சிவபோதம் என இரண்டு நிலைகள் உள்ளன. முந்தியது பிரபஞ்சமானது. பிந்தியது பரம்பொருள் சம்பந்தமானது. ஒவ்வொரு ஜீவனும் இந்நிலவுலகில் ஜீவபோதத்தை வளர்த்து அதை நெடிது வைத்திருக்கும் உபாயங்களைத் தேர்ந்து எடுத்துக்கொண்டே இருக்கிறது. ஆனுல் இயற் கைத் தாயின் திட்டம் வேறு விதமானதாகும். நிலைத்துள்ள வாழ்வு இந்நிலவுலகில் இல்லை. எப்போது வேண்டுமானு லும் வாழ்விற்கு முடிவு வரக்கூடும். இன்பத்தை நாடுகிற ஜீவர்களுக்கு அதே வேளையில் துன்பமும் தவருது வந்து சேர்கிறது. இவ்வுண்மையை அறிந்துகொண்ட ஆத்மசாத

கன் எத்தனைத் தேர்ந்தாலும் என்னாலே இன்பமுண்டோ என்று தெய்வத்திடம் விண்ணப்பிக்கின்றான்.

அவ்வாறு விண்ணப்பித்த பின்பு ஆத்ம சாதகன் தன்னுடைய ஜீவபோதத்தைப் பரமனிடம் ஒப்படைக்க முயலுகிறான். பரம்பொருளே! மாயப்பிரபஞ்சத்தையும் மாயா ஜீவபோதத்தையும் சார்ந்திருந்து நான் வீணிலே உலக வாழ்வையும், சிற்றின்பத்தையும் தேடியலைந்தது போதும். இனிப் பேரறிவுப் பேரின்பப் பொருளாகிய உன்னையே சார்ந்திருந்து பெருவாழ்வையும் பேரின்பத்தையும் பெறுவேனாக என்பது பிரார்த்தனை.

82. மண்ணோடுவிண் காட்டி மறைந்துமறை யாஅருளைக்
கண்ணோடுகண் ஆகஎன்று காண்பேன் பராபரமே.

பஞ்சபூதங்களால் ஆகியது இப்பிரபஞ்சம். நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாசம் என இந்த ஐம்பூதங்கள் விளக்கப்படுகின்றன. அவைகளை மண்ணோடு விண்காட்டி என்கின்றார் தாயுமானவர். பஞ்சபூதங்களாகிய பிரபஞ்சத்தில் விசித்திரம் ஒன்றுண்டு. நாம் நாடுபவைகள் எல்லாம் இப்பிரபஞ்சத்தில் இருக்கின்றன. முயன்றால் அவைகள் யாவையும் நாம் பெறலாம் என்னும் ஊக்கம் உண்டாகிறது. முயற்சி பண்ணும்போது நாம் நாடுவது நமக்கு அகப்படுகிறது. அகப்பட்டது திடீரென்று மறைகிறது. அதை மறைத்து வைப்பது பிரகிருதித்தாயின் விளையாட்டாகலாம். மறைத்தல் என்னும் செயல் திரோதானம் என்னும் பெயர் பெறுகிறது. நாம் நாடுவதைக் காட்டுவதும், பின்பு மறைப்பதும் ஆகிய செயல்கள் இடையறாது இயற்கையில் நிகழ்ந்து வருகின்றன. நாடியது எத்தனை தடவை மறைந்து போனாலும் நமது முயற்சியை நாம் நிறுத்துவது இல்லை. பல பிறவிகளில் நாடியவைகளைப் பெறவும் இழக்கவும் செய்து வருகிறோம்.

அவ்வாறு இழந்து இழந்து சலித்துப்போய்ப் பிரகிருதி வாழ்வில் விரக்தி உண்டாகிறது. அப்போது மறையாத அருளை மட்டும் நாடுகிறோம். மறையாத அருள் அனுக்ரகம் என்று இயம்பப்படுகிறது. அருள் நாட்டம் வரும்போது பாரமார்த்திகப் புது வாழ்வு துவங்குகிறது. அப் புதுவாழ்வு பிரத்யக்ஷமாவதைக் கண்ணொடு கண்ணாக என்று காண்பேன் என்று தாயுமானவர் கூறுகிறார். இறைவா! ஞானக்கண் கொடுத்து உனது அருளையே நாடுகின்ற வாய்ப்பை எனக்கு நல்குவாயாக என்பது கருத்தாகும்.

83. பஞ்சரித்து நின்னைப் பலகால் இரந்ததுஎல்லாம்
அஞ்சல் எனும்பொருட்டே அன்றோ பராபரமே.

பஞ்சரித்தல்-வற்புறுத்தி விண்ணப்பித்தல். பலகால்-எப்பொழுதும். இரந்தது-யாசித்தது. அஞ்சல்-பயப்பட வேண்டாம். உலகநாட்டம் அற்றுப்போன பிறகு பாரமார்த்திக நாட்டம் உருவெடுக்கிறது. பாரமார்த்திக நாட்டம் எவ்வளவுக்கெவ்வளவு வலிவு அடைகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு ஜீவாத்மன் பரமாத்மனிடம் விரைந்து செல்லுகிறான். ஆத்மானுபூதி வாய்க்கப்பெற்றவர்கள் இதற்குச் சரியான சான்று சொல்லுகின்றனர். இனி, வலிவு படைத்தவைகளுள் முன்னணியில் இருப்பது மனம். வலிவு படைத்துள்ள மனத்தை விரைந்து இறைவன்பால் செலுத்தினால் அது கணப்பொழுதில் இறைவனுடைய திருவடியைப் பற்றிப் பிடிக்க வல்லது. செயற்கரிய அந்த அரிய செயலைப் பஞ்சரித்து நின்னைப் பலகால் இரந்தது என்று தாயுமானவர் விளக்குகின்றார்.

ஜீவாத்மன் ஒருவன் கடவுளை அணுகுவதற்கேற்ப அவன் படைத்துள்ள அச்சங்களெல்லாம் அகன்றுபோகின்றன. அச்சம் ஊட்டும் பாங்கிலேயே பிரபஞ்சப் பொருள்

கள் அனைத்தும் அமைந்திருக்கின்றன. எங்குத் திரும்பி எதைப் பார்த்தாலும் அது மானுடனுடைய வாழ்விற்கு இன்னல் விளைவிப்பதாய் இருக்கிறது. உயிரைப் பேணும் உணவே முறைதவறிக் கையாளுமிடத்து நஞ்சாக மாறுகிறது. அங்ஙனம் நன்னீர் நச்சு நீராக மாறக்கூடியது. தெள்ளிய காற்று நச்சுக் காற்றாக மாற வல்லது. உயிரைப் பேணுபவைகளே உயிரை மாய்ப்பவைகளாக மாறுகின்றன. ஆதலால்தான் அச்சம் நிறைந்தவைகளாக உயிர்வகைகள் அனைத்தும் இருக்கின்றன. மனிதன் கொள்கின்ற அச்சத்திற்கு அளவில்லை.

ஆனால் கடவுளை அணுகுதற்கேற்ப அச்சம் அகலுகிறது. அபயகரம் படைத்தவராகக் கடவுள் இருக்கிறார். அவர் எந்த வடிவத்தில் இருந்தாலும் அபயகரம் படைத்திருப்பது அவருடைய பேரியல்பாகும். கடவுளை அணுகுகிற ஆத்ம சாதகனுக்கே அச்சம் நீங்குகிறது. கடவுளை அடையுங்கால் அவன் அபயத்தில் நிலை பெற்றவனாகிறான். அபயம் அல்லது பிரபஞ்சத்தில் எதற்கும் அஞ்சாமை பரமனை அடைந்ததின் விளைவாம். ஈசா! நான் ஆழ்ந்து விண்ணப்பித்ததெல்லாம் உன்னை அடைந்து அபயத்தில் நிலைபெற்று இருத்தல் பொருட்டு அல்லவா! என்பது இக்கண்ணியின் கருத்தாகும்.

84. எங்குளங்கே பார்த்தாலும் எவ்உயிர்க்கும் அவ் உயிராய்
அங்குஅங்கு இருப்பதுநீ அன்றோ பராபரமே.

பரவஸ்துவே உலகனைத்தும் ஆகியுள்ளது என்பது கோட்பாடு. கருவி கரணங்களின் பேதத்தை முன்னிட்டு ஜீவர்கள் பலப்படித்தரங்களில் விளங்குகின்றனர். புழுவாகவும், பூச்சியாகவும், பறவையாகவும், விலங்காகவும், மனித

ஞகவும், தேவஞகவும் ஜீவாத்மாக்கள் அமைந்திருக்கின்றன. அத்தனைவித உயிர்களுக்கும் மூல உயிராய் இருப்பது பரம்பொருள். ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் பரம்பொருள் வீற்றிருக்கிறது. ஆயினும் ஜீவபேதத்தை முன்னிட்டு உள்ளிருக்கும் பரமாத்மா விகாரப்படுவதில்லை. அதனுடைய சாந்நித்தியத்தைப் பயன்படுத்தி அனந்தங்கோடி ஜீவர்கள் அத்தனைவித உயிர்களாக இலங்கிக்கொண்டிருக்கின்றன. அவ்வுயிர்களுக்கு உயிராய் இருக்கும் பரமனைக் கருத்தில் எடுத்துக்கொள்வதே நல்ல வழிபாடு ஆகின்றது. இறைவா! நீயே உயிரனைத்திற்கும் உயிராய் இலங்குகின்ருய் என்பது இக்கண்ணியின் கருத்து.

85. அனைத்துமாய் நின்ருயே யான்வேருே நின்னை
நினைக்குமாறு எங்கே நிகழ்த்தாய் பராபரமே.

மேலே பகர்ந்துள்ள கண்ணி உயிர்கள் அனைத்திற்கும் பொதுவாயுள்ள உண்மையைக் கூறுதற்கு உதவிற்று. இனி ஆத்ம சாதகன் தன்னை எங்ஙனம் பொருள்படுத்தவேண்டும் என்னும் கோட்பாடு இக்கண்ணியில் அடங்கியிருக்கிறது. அனைத்துமாய் நின்ருயே என்பது பாரமார்த்திக உண்மை. இறந்த காலத்தில் சொல்லப்பட்டது முக்காலத்திற்கும் பொருந்திய உண்மையாம்.

இறைவா! நீயே எல்லாவித ஜீவர்களாக இலங்குகின்ருய். ஆகையால் நான் எங்ஙனம் உனக்கு வேற்ருன் ஆக முடியும்? நான் என்று என்னை அபிமானிக்கும்போது உன்னைப் புறக்கணிக்கவும் எனக்குத் தனி அந்தஸ்து கொடுக்கவும் செய்கின்றேன். அப்படிச் செய்வது உண்மையோடு ஒவ்வாத கற்பனை ஆகும். நான் என்று தனி வியக்தி கொடுத்துள்ளது உன் மகிமை. உன்னை அடையவேண்டுமென அருள்நாட்டம்கொண்டிருப்பதும் உன் மகிமை. ஆகை

யால் உன் அருளால் தனி வியக்தியைப் பெற்றுள்ள நான் உன் அருளாலேயே உன்னை வழுத்தவும் செய்கின்றேன். நான் செய்கின்ற வழிபாட்டிற்குச் செவி சாய்ப்பவனாகவும் நீ நடந்துகொள்கின்றாய். இப்படியெல்லாம் நீ செய்வது உன்னுடைய திருவிளையாடல் அல்லவா! இதை நீ எடுத்து இயம்புவாயாக.

பரமனுக்கும் ஜீவனுக்கும் உள்ள இணக்கத்தை உள்ள படி அறிந்து அந்த இணக்கத்தில் ஜீவாத்மன் ஆழ்ந்து ஈடுபடுவது நல்ல வழிபாடு ஆகிறது.

86. நின்போதத் தாலே நினைப்பும் மறப்பும்என்றால்
என்போதம் எங்கே இயம்பாய் பராபரமே.

ஜீவாத்மனுடைய தரம இக்கண்ணியில் மேலும் துருவி ஆராயப்படுகிறது. பரபோதம் என்றும், ஜீவபோதம் என்றும் போதத்தை ஆத்ம சாதகனுடைய வசதிக்காக இரண்டு படித்தரங்களில் வைத்துக்கொள்கிறோம். பரபோதம் என்றைக்கும் மாறாத் தன்மையுடையது. ஜீவ போதத்திற்கோ நினைப்பும் மறப்பும் மாறி மாறி வந்தமைகிறது. ஜாக்கிரதா அவஸ்தையில் (நனவில்) ஜீவன் நினைப்பைப் படைத்திருக்கிறான். சுஷுப்தி அவஸ்தை அல்லது கனவற்ற உறக்கத்தில் ஜீவன் தன்னை மறந்து இருக்கிறான். இப்படி அவன் நினைப்பிலும் மறப்பிலும் மாறி மாறி அமைவது அவனுடைய முன்னேற்றத்திற்கு இன்றியமையாத செயல்களாம். சர்வ. காலமும் ஜீவன் நினைப்பு நிலையில் இருந்தால் அவனுக்கு விரைவில் பைத்தியம் பிடிக்கும். சர்வகாலமும் மறப்பு நிலையில் (உறக்கத்தில்) கிடந்தால் முன்னேற்றத்திற்கு இடமில்லை. இரண்டு அவஸ்தைகளும் மாறி மாறி அமையும் பொழுதே ஜீவன் சிறிது சிறிதாக முன்னேற்றமடைந்து வருகிறான். செயல் புரிதலும் ஓய்வு எடுத்துக்கொள்வதும்

முற்றிலும் அவனுக்கு அவசியம். நினைப்பு நேரத்தில் செயல் புரிந்து ஜீவன் முன்னேற்றமடைகிறான். இங்ஙனம் ஜீவனுக்கு அமைகிற நனவும், உறக்கமும் பரமனிடத்திருந்தே வந்துள்ள மாயா விசித்திரமாம். எந்த ஜீவனும் நனவிற்கும் உறக்கத்திற்கும் உரிமை பாராட்ட முடியாது. ஜீவர்கள் விரும்பினாலும் தொடர்ந்தாற்போல் நனவு நிலையிலோ உறக்கத்திலோ இருப்பது சாத்தியமில்லை. விவேகமற்ற நிலையில் நான் விழித்திருக்கின்றேன் என்றும் நான் உறங்குகிறேன் என்றும் தன் செயலிற்கு உரிமை பாராட்டுகின்றான். விவேகம் வந்த பிறகு இறைவா, உன் அருளால் நான் இப்பொழுது நினைப்பு நிலையில் உள்ளேன். இறைவா, உன் அருளால் இனி நான் மறப்பு நிலையில் மறந்து கிடப்பேன் என்று தெய்வத்திடம் அவன் தன்னை ஒப்படைக்கின்றான். இறைவா, என்போதம் என்று என்னிடத்து வைத்துள்ள மயக்கமும் உன் அருளால் வந்தது அல்லவா என்று இறைவனிடம் விண்ணப்பிப்பது நல்ல வழிபாடு ஆகிறது. இந்த உண்மையை எனக்கு எடுத்துச் சொல்வாயாக என்று விண்ணப்பிக்கிற பொழுதே ஜீவன் அந்த உண்மையை ஏகதேசம் அறிந்தவன் ஆகிறான் என்பது இக்கண்ணியின் கருத்து.

87. ஒன்றைநினைந்து ஒன்றைமறந்து ஓடும்மனம் எல்லாம்நீ
என்றுஅறிந்தால் எங்கே இயங்கும் பராபரமே.

கல் புல் நிலைகளிலிருந்து சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மா நிலை பரியந்தம் பலப்பல நிலைகளிலே ஜீவாத்மாக்கள் இலங்குகின்றன. மனித நிலையில் எண்ணவும் ஓர்ந்துபார்க்கவும் ஆத்ம சாதனங்கள் செய்யவும் சாத்தியப்படுகிறது. நினைக்கவும் மறக்கவும் செய்வது மனதின் போக்கு ஆகும்

ஒரு நாளில் மனிதனுடைய மனமானது எத்தனை எத்தனை நினைவுகளையும், எத்தனை எத்தனை மறதிகளையும் உண்டு பண்ணிக்கொண்டு இருக்கிறது! இதுவே மனத்தின் விசித்திரமான செயலாம். நினைப்பு மறப்பு வாயிலாக ஜீவாத்மா பலப்பல நிலைகளில் பரிணமித்து வருகிறது. மனிதநிலையில் அந்த ஜீவாத்மா உச்சநிலை எய்துகிறது. மனித நிலையிலே ஆத்ம சாதனமும் செய்கிறது. நினைவு மறதிமயமாய் இருக்கின்ற மனத்தின் செயல்கள் எல்லாம் இறைவனுடைய திருவிளையாடல்கள் என்று அறிகின்றபொழுது அந்த மனத்தின் வேகம் ஒடுங்குகிறது. மனத்தின் வேகம் ஒடுங்கும்போது ஜீவன் நல்ல பக்குவம் அடைகிறான். இவ்வரிய கருத்து இக்கண்ணியில் அடங்கியுள்ளது.

88. கொழுந்தில் வயிரம்என்னக் கோதுஅற உள்அன்பில்
அழுந்தும்அவர்க் கேசுகம்உண் டாகும் பராபரமே.

கொழுந்து - புதிதாக வடிவெடுத்துள்ள இலை. வைரம்- முதிர்ந்து விளைந்த மரம். கோதற-குற்றம் நீங்க.

செடியானது முதலில் கொழுந்துவிடுகிறது. பிறகு மரமாகி வைரம் ஏறுகிறது. வைரம் பாய்ந்த மரத்திற்குக் கொழுந்தே முதற்காரணம். ஆத்ம சாதனத்தில் ஈடுபடுகிற மனிதன் ஆரம்பத்தில் கொழுந்துவிட்டு வளருகிற செடியின் நிலையில் இருக்கிறான். அன்பை வளர்ப்பது அவன் புரிகிற முதல் சாதனமாகிறது. அவ்வன்போ குற்றமற்றதாய் இருக்கவேண்டும். காமம் போன்ற உலகப்பற்றோடு கூடிய அன்பு குற்றம் நிறைந்த அன்பு ஆகும். உயிர்கள் அனைத்தையும் இறைவனுடைய சொருபமாகக் கருதி அவைகளிடத்துத் தூய அன்பு வைப்பது கோதற்ற (குற்றமற்ற) அன்பாகிறது. இத்தகைய தூய அன்பைச் சர்வகாலமும் வளர்த்து வர

வேண்டும். அப்படி வளர்ப்பதே அன்பில் அழுந்தியிருத்தல் என்று ஈண்டு இயம்பப்படுகிறது. சான்றோர்கள் யாண்டும் பேரன்பிலேயே அழுந்தியிருக்கின்றார்கள். ஆதலால் அவர்கள் பேரானந்தத்தைப் பெறுகின்றனர்.

89. பற்றும் பயிர்க்குப் படர்கொழுந்து போல்பருவம்
பெற்றவர்க்கே நின்அருள் தான் பேறுஆம் பராபரமே.

பற்றும் பயிர்க்குப் படர் கொழுந்து போல் என்பது ஒரு பழமொழி. நிலத்தைப்பற்றிச் செழிப்புற்று வளருகிற பயிர் நன்கு கதிர்பிடிக்க வல்லது. அப்படிச் செழிப்புற்று வளர்கின்ற பயிர் விரிவடைந்த கொழுந்துகளைத் தோற்றுவிக்கிறது. விரிவடைந்த கொழுந்து ஈண்டு படர்கொழுந்து எனப் பகரப்பெறுகிறது. விளையும் பயிர் முளையிலே என்பது இதை யொத்த பழமொழி. இது வாழ்க்கைத் தத்துவம். இந்தத் தத்துவமானது சாதனத்தில் ஈடுபடுகின்றவர்களிடம் வேறு ஒரு பாங்கில் பொலிகிறது. ஆத்மசாதனத்தில் பரிபக்குவம் அடைந்து வருபவர்கள் பருவம் பெற்றவர்களாவர். ஆத்ம சாதனத்தில் தீவிரமாக ஈடுபாடுகொண்டவர்கள் ஒவ்வொரு படித்தரத்திலும் தங்கள்பால் உள்ள பரிபக்குவத்தைப் புலப்படுத்துகின்றனர். புல்லிய பாங்கு எதையும் அவர்கள்பால் காணமாட்டோம். பரந்த பெருநிலையையே யாண்டும் காண்போம். அங்ஙனம் பெருநிலை பெயராத ஆன்றோர்களுக்குத் திருவருள் என்னும் பெரிய பேறு வந்தமைகிறது. மனிதன் தன்னை எதற்கு ஆயத்தப் படுத்துகிறானோ அது உறுதியாக அவனுக்கு வந்தமைகிறது. சான்றோர்கள் இறைவனின் அருளிற்கே சர்வகாலமும் தங்களை ஆயத்தப்படுத்திக்கொண்டிருக்கின்றனர். அத்தகைய பேறு எனக்கும் வாய்ப்பதாகுக என்பது இக்கண்ணியின் கருத்தாம்.

90. யோகியர்க்கே ஞானம் ஒழுங்குஆம்பே ரன்புஆன
தாகியரும் யோகம்முன்னே சார்ந்தோர் பராபரமே.

யோகம் படைத்தவர்கள் யோகியர் எனப்படுகின்றனர். ஜீவாத்மனைப் பரமனோடு இணைக்கும் முயற்சி யோகமாகும். அம் முயற்சியில் ஈடுபாடுகொண்டவர்கள் யோகியர் என இயம்பப்படுகின்றனர். அம் முயற்சியின் வாயிலாகப் பரம்பொருளைச் சுவானுபூதியில் அறிதல் ஞானமாம். யோகத்தைத் தீவிரமாக அனுஷ்டிக்கின்றவர்களே ஞானவான் ஆகின்றனர்.

இனி, தாகியர் என்பாரும் ஈண்டு இயம்பப்பெறுகின்றனர். தாகம் பிடித்தவர் தாகியர். தாகத்தில் இரு தாகம் உண்டு. விஷயதாகம், வஸ்துதாகம் என வகைப்படுத்தப்படுகின்றன. உள்ளன்போடு பரம்பொருளில் நாட்டம் வைப்பது வஸ்து தாகம். பஞ்சேந்திரியங்கள் மூலம் உலகப் பொருள்களில் நாட்டம்கொள்வது விஷயதாகம். அருள் தாகம் பிடித்திருப்பவர்களை ஜிக்ஞாசுகள் என்று சொல்லுவது மரபு. யோகம் வாய்க்காவிடத்தும் யோகத்தில் ஈடுபடவேண்டும் என்ற வேட்கை வளர்ந்து வருமானல் அது நல்ல அறிகுறியாகிறது. ஜிக்ஞாசுவாக இருக்கிறவன் பின்பு நல்ல சாதகன் ஆகிறான். நல்ல சாதகன் பின்பு சித்த புருஷனாகிறான். சித்த புருஷனே நிறை ஞானி ஆகிறான். இங்ஙனம் பெருநிலை அடைதற் பொருட்டு நல்லியல்பு வாய்க்கப்பெற்றவர்கள் படிப்படியாகப் பாடுபட்டு வந்திருக்கின்றனர். அத்தகைய வாய்ப்பு எனக்கும் அமையவேண்டும் என்பது இக்கண்ணியின் கருத்தாம்.

91. அல்லும் பகலும் அறிவுஆகி நின்றவர்க்கே
சொல்லும் பொருளும் சுமைகாண் பராபரமே.

அறிவாகி நிற்பது ஆத்ம சாதனத்தின் குறிக்கோள். சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே என்று

தாயுமானவர் வேறோர் இடத்தில் இயம்புகிறார். ஈண்டு அறிவு என்னும் சொல் நாம் படைத்துள்ள புத்தியைக் குறிப்ப தன்று. இங்குப் பகர்ந்துள்ள அறிவு ஆத்ம சைதன்யத்தைக் குறிப்பதாகும். அதற்குப் பிரக்ஞானம் என்றும் சித் என்றும் விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

எது கருவிகரணங்களின் துணையின்றித் தன்னைத்தானே உணருகின்றதோ அது ஆத்மா. அயர்ந்த உறக்கத்தில் ஆத்மா தன்னில் தானாய் இருக்கிறது. ஆனால் தமோகுணம் அப்பொழுது அதை மூடிக்கொண்டிருக்கிறது. குணாதீதத் தில் தன்னில் தானாய் இருப்பது ஈண்டு இயம்பியுள்ள அறிவு ஆகிறது. அந்நிலையை எட்டுகின்ற ஆத்ம சாதகன் அந்தக்கரணம் புறக்கரணம் ஆகியவைகளையெல்லாம் ஒதுக்கி வைத்தவன் ஆகின்றான். பேச்சற்றுப் பரத்தில் திளைத்தவனாகிறான். மூட்டையைச் சுமப்பது சாதாரண மனிதனுக்குச் சங்கடமாய் இருப்பதுபோன்று சொல்லில் ஈடுபடுவது பூரணத்தை எட்டியவனுக்குச் (அறிவாகி நின்ற வனுக்கு) சங்கடமாய் இருக்கிறது. சொல்லும் பொருளும் சுமைகாண் என்னும் கூற்றில் பொருள் என்னும் பதம் பர வஸ்துவைக் குறிப்பதன்று. சொல்லிற்கு விளக்கம் எதுவோ அது பொருள் எனப்படுகிறது. பேச்சற்று இருப்பதே முடிந்த நிலையாகும்.

சாதனத்தில் ஈடுபடுகின்றபொழுது பஜனை பண்ணு வது ஸ்தோத்திரங்கள் பாடுவது அர்ச்சனை பண்ணுவது போன்ற பேச்சுக்கள் நிகழ்கின்றன. அங்ஙனம் வாய்விட்டுப் பேசுதலில் சாதகன் பரம திருப்தி அடைகிறான். உள்ளத்தி னுள் ஆத்ம போதம் ஓங்குதற்கேற்ப இப்பேச்சுக்களும் பாடல்களும் ஸ்தோத்திரங்களும் முடிவுறுகின்றன. மனம் அறவே ஒடுங்குமிடத்துச் சொல்லும் தானாக ஒடுங்குகிறது.

பேரானந்தமே எஞ்சி இருக்கிறது. இங்ஙனம் மௌனத்தில் திளைத்திருப்பது முடிந்த நிலையாம்.

92. எச்சில்என்று பூவை இகழ்ந்தோர்க்கு உளைப்போற்றப்
பச்சிலையும் கிள்ளப் படுமோ பராபரமே.

கடவுள் வழிபாட்டிற்குப் பூக்கொய்பவர்கள் அதிகாலையில் அன்று அலர்ந்த பூவை அல்லது அலர்தற்கு இருக்கும் பூவை எடுப்பார்கள். அவர்கள் அப்படிச் செய்வதின் நோக்கம் தேன் அருந்த வரும் தேன் ஈயின் எச்சில் அப்பூவின்மீது படியாது இருக்கும் பொருட்டேயாம். தேன் ஈயினல் தீண்டப் பெற்ற மலரை எச்சில் பட்டதென்று அவர்கள் புறக்கணிக்கின்றனர். புஷ்பம் தேடுதலில் இத்தகைய வரம்பு கடந்த ஆசார நியமத்தோடு கூடி இருக்கிறவர்கள் வழிபாட்டிற்காக வில்வம், துளசி போன்ற பச்சிலை எதையும் கிள்ளி எடுக்க முடியாது. ஏனென்றல் ஓர் இரவில் எச்சில் படாத பச்சிலை உருவெடுக்க முடியாது. கொழுந்தாகத் தோன்றுவது முதிர்ந்த பச்சிலையாவதற்கு இரண்டு மூன்று நாட்கள் எடுத்துக்கொள்ளும். அந்த இரண்டு மூன்று நாட்களில் அப்பச்சிலைமீது தேன் ஈ, வண்டு, பறவை முதலியன அசுசி செய்யக்கூடும். அப்படி அசுசியான இலைகள் அந்த மனிதனுடைய தீவிர நியமனம் நிறைந்த வழிபாட்டிற்கு உதவமாட்டா. பூஜா திரவியங்களைச் சேகரிப்பதில் இத்தகைய மிகைப்பட்ட ஆசார நியதியை அனுஷ்டிக்க வேண்டிய அவசியமில்லை. அசுசியான காற்று மோதும் போதும் அன்று அலர்ந்த பூ ஓரளவிற்கு அசுசியாகக் கூடும். ஆதலால் குற்றம் பார்க்கும் பாங்கிற்கு ஓர் எல்லையுண்டு. அந்த எல்லையைக் கடந்து ஆசார நியதியைக் கருத்தில் செலுத்துகிறவர்கள் பூஜைக்குப் பூதப்பொருள் எதையும் பயன்படுத்த முடியாது. அகப்படும் வஸ்துக்களில் கூடிய அளவிற்கு நல்ல

வைகளை எடுத்து வழிபாட்டிற்குப் பயன்படுத்துவதும் தோஷம் காணுது நிறைநிலையையே காண்பதும் முறை என்று இக்கண்ணி கூறுகிறது.

93. அந்தக் கரணம் அடங்கத் துறப்பதுவே
எந்தத் துறவினும்நன்று எந்தாய் பராபரமே.

துறவைக் குறித்துப் பலர் பலவிதமான வியாக்கியானங்கள் செய்திருக்கிருர்கள். ஒவ்வொரு வியாக்கியானத்திலும் ஓரளவு உண்மையுண்டு. ஈண்டு துறவின் முடிந்த நிலையை இக்கண்ணி விளக்குகிறது.

மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் ஆகிய உட்கருவிகளைத் தொகுத்து அந்தக்கரணம் என்கிறோம். செவி, கண், மூக்கு, வாய், தோல் முதலியன புறக்கரணங்கள். ஜீவன் தன் ஆசைக்கு ஏற்பப் புதிய புதிய பிறவிகளை உண்டாக்கிக்கொண்டே போகிருன். பிறவிகள் தோறும் புறக்கரணம் நீங்குகிறது. ஆனல் அந்தக்கரணம் நீங்குவதில்லை. முன் பிறப்பில் பெற்ற பண்பாட்டின் விளைவினையொட்டிப் புதிய பிறப்பில் புதிய அந்தக்கரண அமைப்பு வந்து அமைகிறது. கீழான மனப்பான்மைக்கு ஏற்பக் கீழான பிறவியும் மேலான மனப்பான்மைக்கு ஏற்ப மேலான பிறவியும் வந்தமைகின்றன. பிறவிப் பெருங்கடல் நீந்த முற்படும் ஜீவன் மேலான மனப்பான்மையையும் அறவே நீக்கி மனோநாசம் செய்தல் வேண்டும்.

அந்தக்கரணத்தை அறவே அழித்து விடுவது மனிதனுக்குச் சாத்தியம். வறுத்த விதை மறுபடியும் முளைப்பது இல்லை. அங்ஙனம் ஞானக்னியில் அழிந்துபட்டுப்போகிற அந்தக்கரணம் மறுபடியும் வித்து ஆவதில்லை. சாதனங்கள் பல செய்து சமாதியில் மனம் அழியுமாயின் மீண்டும் பிறவி

யில்லை. அப்படி மனோநாசம் பண்ணுவதே வாழ்வின் குறிக்கோள். மனம் அழிந்த நிலையில் அகத்திலும் புறத்திலும் இருப்பது ஆத்ம சொருபம். ஆக அந்தக்கரணத்தை அழிப்பதே சிறந்த துறவாகிறது.

94. தன்னை அறிந்தால் தலைவன்மேல் பற்றுஅலது
பின்னைஒரு பற்றும்உண்டோ பேசாய் பராபரமே.

மனிதர்களுக்குத் தன்னை யார் என்று வஸ்து விசாரம் செய்வது வாழ்க்கையின் தலையாய குறிக்கோள் ஆகும். பொருளின் பாங்கை உள்ளது உள்ளபடி சரியாகத் தெரிந்து கொள்ளுதல் வஸ்து விசாரமாம்.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

மனிதனுக்கு ஆராய்ச்சி செய்யக் கைவசம் உள்ளது தன்னுடைய சொந்த சொருபமாம். மனிதன் ஜீவாத்மன் எனப்படுகிறான். ஜீவாத்மனுடைய கூற்றை ஆராய்தல் வேண்டும். அழியும் பகுதி அழியாப் பகுதி ஆகிய இரண்டு கூறுகளை உடையவனாக மனிதன் இருக்கிறான். உடல் அழியும் பகுதி. அது தோன்றுகிறது, வளர்கிறது, தேய்கிறது, மாய்கிறது. அத்தனைவித மாறுபாடுகள் உடலில் வந்துகொண்டு இருப்பதற்கிடையில் நான் குழந்தையாய் இருந்தபொழுது, சிறுவனாய் இருந்தபொழுது, யுவனாய் இருந்தபொழுது, முதியோனாய் இருந்தபொழுது இன்னவைகளையெல்லாம் கண்டு அனுபவித்தேன்; இவைகளுக்குச் சாட்சியாய் இருந்தேன் என்கிறான். உடல் மாறியமைவதற்கிடையில் அதற்குச் சாட்சியாய் இருந்த வஸ்து நிலைபேறு உடையது. சின்னஞ் சிறு வயதில் மனம் உருவெடுப்பது இல்லை. வயதிற்கு ஏற்ப மனம் வடிவெடுக்கிறது. ஆயுள்காலம் முழுதும் அமைந்

திருந்த மனத்தை ஆராய்ந்து பார்க்குங்கால் அந்த மனமும் மாறியமையும் பாங்குடையதாய் இருக்கிறது. ஆக, மனம் தோன்றி, இருந்து, அழியும் தன்மையுடையது. அதற்குச் சாட்சியாய் இருந்த வஸ்து நிலைபேறு உடையது. ஆக, ஜீவாத்மாவின் அமைப்பில் நிலையற்ற பகுதி உண்டு; நிலையுற்ற பகுதி உண்டு.

நிலையுற்ற பகுதியில் மேலும் சிந்தனையைச் செலுத்த வேண்டும். அது அறியும் தன்மையுடையது. யாண்டும் சாட்சியாய் இருக்கிறது. அந்தக்கரணம் என்னும் நுண் பொருளில் அறியும் தன்மை மாறி மாறி அமைகிறது. அது புத்தி என்று கூறப்படுகிறது. புத்திக்கு அறியும் தன்மையை வழங்குகின்ற பேரறிவுப் பொருளே நிலைபேறு உடையது. அதற்குப் பிரக்ஞை என்றும், பிரக்ஞானம் என்றும், சைதன்யம் என்றும், சேதனம் என்றும் பெயர்கள் வந்துள்ளன. ஜீவாத்ம சொரூபத்தில் சேதனம், அசேதனம் ஆகிய இரண்டும் இடம் பெறுகின்றன. உடலும் உள்ளமும் அசேதனம். உணரும் பொருள் சேதனம். அந்த அழியாப் பொருளாகிய சேதனத்தை அறிந்த பின்பு தலைவன் என்று சொல்லப்படும் பரம்பொருளை அறிவது மிக எளிது. அறியும் பாங்குடைய ஜீவாத்மா வேறு பரமாத்மா வேறு அல்ல. தன்னைச் சரியாக அறிகிறவன் கடவுளை அறிந்தவனாகிறான்.

95. அன்பால் கரைந்துகண்ணீர் ஆறுகண்ட
புண்ணியருக்கு
உன்பால் வரவழிதான் உண்டோ பராபரமே.

ஆத்ம சாதனத்தில் ஞான மார்க்கத்தை நெருப்போடும், பக்தி மார்க்கத்தை நீரோடும் சீர்தூக்கிச் சொல்லுவது உண்டு. ஞானக்னியானது கர்மம் என்னும் விறகுக் கட்டையைப் பொசுக்கிச் சாம்பலாக்குகிறது. பக்தி என்னும்

சுகவாரியானது ஜீவவியக்தியைக் கரைத்துத் தன் மயமாக்கு கிறது. பரம்பொருளைச் சுகவாரி அல்லது ஆனந்தக்கடல் எனலாம். பக்தியில் திளைத்துள்ள ஜீவாத்மன் பரம்பொருள் என்னும் சுகவாரியிலே மூழ்கி விளையாடும் சர்க்கரைப் பொம் மைக்கு ஒப்பாகிறான். சர்க்கரைப் பொம்மை நீரில் தன் வடிவத்தை இழக்கிறது. அதுபோல பக்தனே சுகவாரியில் தனது ஜீவ போதத்தைக் கரைத்து விடுகிறான். கண்ணீரில் இரண்டுதரம் உண்டு. ஒன்று துன்பக் கண்ணீர்; மற்றது இன்பக் கண்ணீர். துன்பக் கண்ணீர் பிறவியைப் பெருக்கு கிறது. பரமனிடம் பக்திபூண்டு சிந்துகின்ற இன்பக் கண்ணீர் பாபங்களைத் துடைத்துத் தள்ளுகிறது. கரும மூட்டை எவ் வளவு பெரியதாய் இருந்தாலும் பக்தியினால் பெருக்கெடுக் கிற ஆனந்தக் கண்ணீர் ஆறாகப் பெருகிக் கரும மூட்டைகளை யெல்லாம் தூக்கிக்கொண்டு போகிறது. கருமம் நீங்கப் பெறுகிற அளவு ஆத்ம சாதகன் புண்ணியன் ஆகிறான். பரம் பொருள் கர்மாதீதமானது. கர்மத்தையெல்லாம் பக்தியினால் ஒதுக்கித் தள்ளிய ஆத்ம சாதகனும் கர்மாதீதனாகிறான். பின்பு அவன் பரத்தில் ஒன்றுபடுகிறான். ஆதலால் பரத்தில் ஒன்றுபட்டு முக்தனாவதற்கு இன்பக் கண்ணீர் மயமாய் இருக்கிற தீவிர பக்தியானது சிறந்த உபாயமாம்.

96. தன்னை அறிந்துஅருளே தாரகமா நிற்பதுவே
உன்னை அறிதற்கு உபாயம் பராபரமே.

தாரகம் என்னும் சொல் ஆதாரம் என்னும் பொருள் படுகிறது. தன்னையறிதல் ஞானவிசாரம் ஆகிறது. ஜீவாத் மன் நித்தியம் அநித்தியம் ஆகிய இரண்டு தத்துவங்களின் இணக்கத்தால் அமைந்தவனாகிறான். ஜீவனிடத்து அமைந் துள்ள சேதனம் அல்லது அறிவுப் பொருள் நித்திய வஸ்து. அவன்பால் அமைந்துள்ள உடல், உள்ளம் ஆகியவை

ஜடவஸ்து. சேதனத்திற்கும் ஜடத்திற்கும் உள்ள பாகு பாட்டை அறிந்துகொள்ளாமையினுல் ஜீவாத்மன் தன்னு டைய ஜீவ வியக்தியை வளர்த்துக்கொண்டே போகிருன். யாண்டும் சேதனம் ஜடம் அல்ல என்னும் நினைவில் நிலை பெற்றிருக்கும்பொழுது அந்த ஜீவன் தன்னை அறிந்தவனு கிருன். இதற்கு மாருக உடலைத் தான் என்று குழம்பியிருக் கிறவன் ஒருபொழுதும் தன்னையறிந்தவன் ஆகான். சேதன சொரூபியாகிய ஜீவாத்மன் அகண்ட சேதனமாகிய சச்சிதா னந்த சாகரத்தில் ஒரு திவலை போன்றவன். கடல் ஆதார மாகவும் அலை ஆதேயமாகவும் இயற்கையில் இடம்பெற்றி ருப்பது தெளிவு. அங்ஙனம் பரமாத்மன் ஆதாரமாகவும், ஜீவாத்மன் ஆதேயமாயும் அமைந்திருப்பது பாரமார்த்திகப் பேருண்மை. ஆதாரமாய் இருக்கின்ற பரமாத்மா ஆதேய மாயுள்ள ஜீவாதமனுடைய ஜீவவியக்தியைத் தன்னில் ஒன்றுபடுத்தும் பாங்குடையதாய் இருக்கிறது. அந்த ஒன்றுபடுத்தும் பாங்குதான் அருள் எனப்படுகிறது. அந்த அருளை ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் கூற்றில் வைத்து இயம்புங்கால் பக்தன் பரமனை நோக்கி ஓரடி வைத்தால் பரமன் பக்தனை நோக்கிப் பத்தடி வைக்கிருர். பரமனுடைய இந்தப் பரந்த பாங்கே அருள் எனப்படுகிறது. அருளைச் சார்தல் வேண்டும்.

97. கற்றகலை யால்நிலைதான் காணுமோ காண்பது எல்லாம்
அற்றஇடத் தேவெளிஆம் அன்ரூே பராபரமே.

பிரபஞ்சத்தைப் பற்றிய கல்விகள் யாவும் கலைஞானங் கள் எனப்படுகின்றன. பிரபஞ்சப் பொருள்களைக் காண்ப தற்கே கலைஞானங்கள் பயன்படுகின்றன. பிரபஞ்சப் பொருட்கள் யாவும் காணப்படு பொருள்கள் ஆகின்றன.

வேதாந்த பரிபாஷையில் அவையாவும் த்ருசியம் எனப் படுகின்றன. அவைகளைப் பொருள்படுத்துகின்ற ஆத்மா விற்கு த்ருக் என்று பெயர். த்ருக் த்ருசிய விவேகம் சிறந்த ஆத்ம சாதனமாகிறது. த்ருக் ஆகிய ஆத்மா சர்வகாலமும் த்ருசியமாகிய பிரபஞ்சப் பொருள்களிலேயே உழன்று கொண்டிருக்குமாகில் அது தன்னை மறந்து பிரபஞ்சப் பொருள் மயமாய் மயங்கிக் கிடக்கிறது. மற்றும் பிரபஞ் சப் பொருள்களைப் பஞ்சேந்திரியங்கள் மூலமாக வாங்கிக் கொள்ளாது ஜீவாத்மன் தன்னில் தானய் இருந்து பழகுமா ஞல் தன்னை அறியும் பரிபாகம் எளிதில் வந்தமைகிறது. பொறிகளைப் புலன்கள்பால் மயங்கிப் போகவொட்டாது தடுத்து ஆட்கொள்ளுதல் வேண்டும் என்பது இதன் கோட் பாடு.

98. கண்மூடிக் கண்விழித்துக் காண்பதுஉண்டோ
நின்அருள்ஆம்
விண்மூடின் எல்லாம் வெளிஆம் பராபரமே.

விண் என்பது இங்கு சிதாகாசம் எனப் பொருள்படு கிறது.

ஜீவாத்மன் காண்போன் என்னும் நிலையில் இருக் கிருன். பிரபஞ்சம் காணப்படுபொருளாக இலங்குகிறது. வேதாந்தக் கோட்பாட்டில் இந்நிலை த்ருக், த்ருசியம் எனப் பகரப்படுகிறது. த்ருக் அல்லது காண்போனுக இருப்பவன் ஜீவாத்மா. த்ருசியம் அல்லது காணப்படுபொருளாயிருப் பது பிரபஞ்சம். ஆத்ம சாதகன் புறக்கரணமாய் இருக்கும் கண்ணை மூடிக்கொண்டு அகக்கரணமாகிய மனத்தால் பரம னைக் கிரகிக்க முயலுகிருன். ஆனல் பரமனைக் கிரகிப்ப தற்கு அகக்கரணமாயிருக்கும் மனம் உதவாது. தியாளு வஸ்தையில் மனம் கற்பனை பண்ணுவது சூட்சுமமாயிருக்கும்

பிரபஞ்சமே யொழிய அது பரவஸ்து அன்று. சாதகர்கள் மற்றும் அல்லாதவர்கள் எல்லாருமே கண்விழித்துக் காண்பது பிரபஞ்சமேயாம். ஆயினும் இவ்விருவர்களுக்குமிடையில் வேற்றுமையொன்று உண்டு. உலகத்தவன் பிரபஞ்சத்தைத் தனது மனப்பான்மைக்கு ஏற்ப நல்லதாகவோ, கெட்டதாகவோ, நலம் கேடு இரண்டும் கலந்ததாகவோ காண்கிருன். ஆனல் ஆத்மசாதகன் அதே பிரபஞ்சத்தைக் கடவுள் மயமாகக் காண முயலுகிருன். காண்போனுடைய மனபரிபாகத்திற்கு ஏற்பப் பிரபஞ்சத்தின் காட்சி மாறியமைகிறது. நல்லானுக்குப் பிரபஞ்சத்தில் நலனே இலங்குகிறது. பொல்லானுக்கோ அதே பிரபஞ்சம் தீங்கு நிறைந்ததாகத் தென்படுகிறது. இனி முற்றிலும் மனபரிபாகம் அடைந்திருப்பவனுக்கு இப்பிரபஞ்சம் பரம்பொருள் மயமாம். இது மேலான நிலையெனினும் முடிந்த நிலையாகாது. இறைவனின் திருவருளைத் துணையாகக் கொண்டு தூய மனத்தை விண் அல்லது சிதாகாசத்தில் ஒன்றுபடும்படி செய்தால் முடிந்த உண்மை அனுபூதிக்கு எட்டுகிறது. தூய மனத்தை இந்நிலைக்குக் கொண்டுவருங்கால் அத்தகைய சாதனம் மனத்தின் அகண்டாகார விருத்தி யென்னும் பெயர் பெறுகிறது. ஆக முடிந்த உண்மையை உள்ளபடி அறிந்து கொள்வதற்கு அகண்டாகார விருத்தியே உற்ற உபாயமாகிறது. கருவி கரணங்களை ஸ்தூல நிலையில் வைத்துப் பரமனைக் காண முயலுதல் சாதனத்தின் ஆரம்ப தசையாம். கண்மூடி அந்தக்கரணம் கொண்டு காண்பது முன்னேற்றமடைந்த சாதனமாகிறது. ஆனல் சாதனத்தின் பூர்த்தியோ அகண்டாகார விருத்தியில் நிலைபெறுகிறது. ஆங்குப் பரத்திற்குப் புறம்பாக ஒன்றுமே இல்லை. த்ருக், த்ருசியம் ஆகியவை பரத்தில் ஒடுங்கிவிடுகின்றன. ஆங்குக் காண்

போனும் இல்லை; காணப்படு பொருளும் இல்லை. அகண்ட சத் சித் ஆனந்தமே இருக்கிறது.

99. நேரே நினதுஅருள்என் நெஞ்சைக் கவரின்ஒன்றும்
பாரேன் சுகமும் படைப்பேன் பராபரமே.

இறைவனுடைய திருவருள் ஆத்மசாதகனுடைய உள்ளத்தைத் தன்மயமாக்கிக்கொள்ளுமாகில் அவனுடைய கருவி கரணங்களுக்குத் தென்படுகிற யாவும் பரப்பிரம்ம சொரூபமாம். பிறப்பு எடுக்கும் போதே யாரோசிலர் சித்தர்களாய் இருக்கின்றனர். சுகப்பிரம்மம், ஆதிசங்கரர், ஞானசம்பந்தர், விவேகானந்தர் ஆகியவர்கள் சித்தபுருஷர்கள். அவர்களுக்கு இப்பிரபஞ்சம் நலனும் கேடுமற்ற பரப்பிரம்ம சொரூபமாய்க் காட்சி கொடுத்தது. பேரின்ப சுகத்தைப் படைத்தவர்களாய் இருந்தார்கள்.

இறைவா! நானும் அப்பேரின்ப சுகத்தைப் பெறவேண்டும். என்னுடைய ஜீவ முயற்சியினல் பேரின்ப சுகத்தைப் பெற முடியாது. உனது திருவருள் என் மனத்தை மாயக் காட்சியினின்று நீக்கி நேரடியாகப் பரத்தின் காட்சி காணுமாறு ஆட்கொள்ள வேண்டும் என்று தாயுமானவர் விண்ணப்பிக்கிறுர்.

100. வான்காண வேண்டின் மலைஏறல் ஒக்கும்உன்னை
நான்காணப் பாவனைசெய் நாட்டம் பராபரமே.

பாவனை செய் நாட்டம் என்னும் சொல்தொடர் மனத்தில் கருதி முயற்சி பண்ணுவது எனப் பொருள்படுகிறது. மலையின்மீது கட்டியுள்ள கோயில் ஒன்றைப் பார்ப்பதற்கு மலையேறுவது பொருந்தும். ஹிமாசலத்தில் பத்தாயிரம் அடி உயரத்தில் பத்திரிநாத் கோயில் இருக்கிறது. பன்னிரண்டாயிரம் அடி உயரத்தில் கேதார்நாத் கோயில் உள்ளது.

பக்தர்கள் மலையேறி ஆங்குச் சென்று இறை தரிசனம் செய்து வருகின்றனர். வான் என்பது மேலே தென்படுகிற நீல நிறமான பரப்பு. அதைக் காண்பதற்கு இக்காலத்தில் சந்திரலோகம் சென்றவர்களுக்கும் சாத்தியப்படவில்லை. சுமார் நான்கு லக்ஷம் மைல் போனார்கள். வான் ஆனது அவர்களுக்கு எட்டாததாய் இருந்தது. எத்தனையோ கோடி கோடி மைல் போனாலும் வானிற்கு எல்லை காணமுடியாது. பிரபஞ்ச அமைப்பில் அது அகண்டாகாரமானது. இனி, பரம்பொருளோ இந்த ஜடாகாசத்திற்கு நிகர் ஆன சித் ஆகாசம் ஆகும். அகம் புறம் என்றபடி அது அகண்ட சச்சிதானந்தமாம். ஜீவாத்மன் தனது ஜீவ வியக்தி என்னும் குறுகிய நிலையில் இருந்துகொண்டு அகண்ட சச்சிதானந்தத்தை ஆழம் பார்க்க முயல்வது ஆகாத காரியமாம். ஆழாக்கைக்கொண்டு ஆழ்கடலை அளக்க முடியாது. ஜீவாத்மன் ஜீவவியக்தியில் இருந்து கொண்டு பரம்பொருளைக் கிரஹிக்க முடியாது. இதுவே இக்கண்ணியின் உட்கருத்து.

101. வாதனைவிட்டு உன்அருளின் மன்னின்அல்லால் வேறும்ஒரு
சாதனைதான் உண்டோநீ சாற்றாய் பராபரமே.

வாதனை—வாசனை அல்லது துன்பம்; மன்னுதல்—நிலை பெறுதல்; சாற்றாய்—சொல்லாய்.

வாதனை என்னும் சொல்லிற்கு இரண்டு பொருள்கள் இருக்கின்றன. முற்பிறவிகளில் செய்த செயலின் விளைவாக வந்துள்ள இயல்பிற்கு வாசனை என்று பெயர். வழக்கில் வாசனையென்னும் சொல் வாதனையெனத் திரிவுபட்டுள்ளது. இனி, மனிதன் படுகிற துன்பத்திற்கே வாதனை யென்னும் பெயர் வந்துள்ளது. வாதனையும் வேதனையும் ஒன்றேயாம்.

வாசனக்ஷயம் அல்லது வாசன நாசம் என்பது தீவிர மான ஆத்ம சாதனங்களுள் ஒன்ருகும். தங்கத்தில் பலப்பல நகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. நாமரூபத்தை முன் னிட்டு ஒரு நகை மற்ருெரு நகையாகாது. அவைகளின் நாம ரூபங்களை அழித்தால் யாண்டுமுள்ள தங்கம் எஞ்சி நிற் கிறது. அங்ஙனம் வாசனை அல்லது மனப்பான்மையை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு ஜீவனும் ஒவ்வொரு தனி வியக்தியைப் பெற்றவனுக இருக்கிருன். வாசனக்ஷயத் தில் மனோநாசம் உண்டாகிறது. பின்பு எஞ்சி நிற்பது ஆத்ம சைதன்யம். ஆத்ம சைதன்யமோ பரமாத்மா சொரூபத்திற் குப் புறம்பானதன்று. அலையானது கடலைப் பற்றிநிற்பது போன்று ஜீவாத்மா பரமாத்மாவைப் பற்றியிருக்கிறது. இவ் விளக்கத்தை அறிவதே மஹாயோகமாகிறது.

வாதனை அல்லது துன்பம் மனிதனுக்கு எங்கிருந்து வருகிறது? அறியாமையால் மனிதன் துன்பங்களைத் தனக் குத் தானே வருவித்துக் கொள்கிருன். ஆக, மனிதன் படுகிற ஒவ்வொரு துன்பத்திற்கும் அவனே பொறுப்பாளியாகிருன். புறத்திலிருந்து வரும் துன்பங்களைப் பொருள்படுத்தாது இருப்பது அவனுக்குச் சாத்தியமாகும். அதற்குப் பிரஹ்லாத னும், அப்பரும் நல்ல சான்றுகளாகின்றனர். ஆக, எக்கார ணத்தை முன்னிட்டும் துன்பங்களை ஏலாதிருக்க அவனுக்கு இயலும்.

இனி, வாசனக்ஷயம் பண்ணுகிறவனும் துன்பங்களை ஏலாதிருப்பவனும் யாண்டும் பரம்பொருளின் அருளைச் சார்ந்தவனுகிருன். இந்நிலையை அடைகிறவன் புரிதற்கு ஆத்ம சாதனம் வேறு ஒன்றும் இல்லை. அவன் பரத்தி லேயே நிலைபெற்றவனுக இருக்கிருன். இறைவா! உனக்கும் எனக்குமுள்ள தொடர்பு இவ்வளவு எளியது என்பது

உண்மையல்லவா? நீ இதைப் பகர்ந்தருள்வாயாக என்பது இக்கண்ணியின் கருத்து.

102. பார்அகமும் விண்அகமும் பற்றுஆக நிற்பதுஅருள்
தாரகத்தைப் பற்றிஅன்றோ சாற்றாய் பராபரமே.

பாரகம் — மண்ணுலகம்; விண்ணகம் — வெட்ட வெளி; தாரகம் — ஆதாரம்.

இயற்கையின் அமைப்பை ஆராய்ந்து பார்க்குமிடத்து அது எண்ணிறந்த கோளங்களை ஆங்காங்கு வெட்டவெளியில் வைத்திருப்பதைக் காண்கிறோம். கோளங்களுக்குச் சான்றாக மண்ணுலகம் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. எல்லைகாணாத வெட்ட வெளியிலே அண்ட கோடிகள் அனைத்தும் ஆங்காங்கு எப்படி ஒழுங்காக நிலைபெற்றிருக்கின்றன என்பது கேள்வி. இறைவனுடைய அருளே ஆதாரமாகும்.

இக்கோட்பாட்டைக் கிரகித்துக்கொள்ளுதற்குச் சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். இக்காலத்தில் எங்கும் நிலவி வருகிற திரைப்படக்காட்சி இக்கோட்பாட்டிற்கு நல்ல எடுத்துக்காட்டு ஆகும். விதவிதமான படக்காட்சிகளைப் பார்க்கிறோம். உலக சம்பவங்களனைத்தையும் படக்காட்சியில் பார்க்கிறோம். கோளங்களின் அமைப்பையும் அவைகளின் இயக்கங்களையும் படக்காட்சியில் காண்கிறோம். அவை யாவற்றிற்கும் ஆதாரமாயிருப்பது திரை. திரையில்லாவிடில் எக்காட்சிகளையும் காணமுடியாது. இனி, திரையோ காட்சிகளனைத்திற்கும் ஆதாரமாயிருப்பதற்கிடையில் அது யாண்டும் தன்மயமாய் இருக்கிறது. அதே பாங்கில் இறைவனுடைய அருள் அல்லது அறிவுப் பெருவெளி பிரபஞ்சத்திற்கு ஆதாரமாயிருக்கிறது. பிரபஞ்சத்தின் அம்சங்களாகிய மண்ணகம், விண்ணகம் ஆகியவைகள் தோற்றத்திற்கு

வருகின்றன; நிலைபெற்றிருக்கின்றன; பிறகு தோன்ரு நிலை எய்துகின்றன. பிரபஞ்சத்தில் இத்தகைய மாறுதல்கள் உண்டாகிக்கொண்டிருப்பதற்கிடையில் அவைகளுக்கு ஆதாரமாய் இருக்கின்ற அருள்தாரகமானது யாண்டும் இருந்தபடி இருக்கின்றது. அருள்தாரகத்திற்குச் சிதாகாசம் என்பதும் அறிவுப் பெருவெளி என்பதும் வேறு பெயர் களாம். ஆத்ம சாதகன் யாண்டும் நிலைத்துள்ள அருள் தாரகத்தையே பற்றி நிற்கவேண்டும். ஒரு காலத்தில் இருந்து மற்ருெரு காலத்தில் மறைந்துபட்டுப் போகின்ற பிரகிருதி தத்துவத்தைச் சார்ந்திருக்கலாகாது என்பது இக் கண்ணியின் கருத்தாம்.

103. .விளக்கும் தகளியையும் வேறுஎன்ஞர் நின்னைத்
துளக்கம்அற ஜீவன்என்று சொல்வார் பராபரமே.

விளக்கு — ஒளிப்பிழம்பு; தகளி — அகல்; துளக்கமற — அச்சம் நீங்க.

இக்கண்ணிக்குத் துவைத நிலையில் வைத்துப் பொருள் ஒன்று பகரலாம். அத்வைத நிலையில் வைத்து மற்ருெரு பொருள் கொடுக்கலாம். துவைத நிலைக்கு வியவஹாரிக சத் என்று பெயர். அத்வைத நிலைக்குப் பாரமார்த்திக சத் என்று பெயர். ஒரு நிலைக்கு மற்ருெரு நிலையின் விளக்கத்தைத் தரலாகாது. நனவில் நாம் எரிகின்ற விளக்கைப் பார்க்கின் ரேம். அதில் ஒளிப்பிழம்பு, எண்ணெய், அகல் ஆகிய மூன்று வஸ்துக்கள் இருக்கின்றன. ஒரு வஸ்து இன்னொரு வஸ்து ஆகாது. கனவில் எரிகின்ற விளக்கைப் பார்க்கிறபொழுது ஆங்கு ஒளிப்பிழம்பும், எண்ணெயும், அகலும் மனத்தின் கூறுகளாம். மனத்திற்குப் புறம்பாக அந்த மூன்று வஸ்துக் கள் இல்லை. கனவற்ற உறக்கத்தில் மனே விகாரமும் இல்லை. ஆங்கு எஞ்சியிருப்பது சைதன்யம் அல்லது

பிரக்ஞை. இந்தப் பிரக்ஞையோ ஜாக்கிரதாவஸ்தையிலும் இருக்கிறது; சொப்பனவஸ்தையிலும் இருக்கிறது; சுஷுப்தி அவஸ்தையிலும் இருக்கிறது; அவஸ்தாத்திரயத்திற்கு அப்பாலும் இருக்கிறது. அப்படி இருக்கும் பிரக்ஞை சுத்த சிவமாம். அதனுடைய சந்நிதானத்தில் ஜகத்தும் ஜீவனும் தோன்றி, இருந்து ஒடுங்குகின்றன. ஜகத், ஜீவன், சிவம் ஆகிய மூன்றிற்கும் மதிப்புத் தருவது துவைத மதம். ஜகத்தையும் ஜீவனையும் வியவஹாரிக சத்தாகப் பொருள்படுத்துவது அத்வைத மதம். சாதன தசையில் இருப்பவனுக்கு ஜகத்தும், ஜீவனும் நித்திய வஸ்துக்களாம். சமாதி நிலையை அடைந்த பிறகு ஜகத்தும் ஜீவனும் இல்லை. சுத்த சிவமே எஞ்சி இருக்கிறது. உலக நடைமுறைக்கு விளக்கு, எண்ணெய், அகல் ஆகியவைகள் தேவையாயிருப்பதுபோன்று உன்னைச் சாதனதசையில் நான் நாடி நிற்கும் நிலையில் எனக்கு ஜீவபோதம் தேவையானது. உன்னுடைய நாட்டத்தில் அந்த ஜீவபோதத்தை நான் நன்கு பயன்படுத்துவேனாக என்பது இக்கண்ணியின் கோட்பாடு.

104. பார்ஆதி நீயாப் பகர்ந்தால் அஹம்எனவும்
ஆராயும் ஜீவனும்நீ ஆம்காண் பராபரமே.

பாராதி-நிலம் முதலிய ஐம்பூதங்கள்.

உலகனைத்தும் ஆனாய் நீயே என்பது ஆப்தவாக்கியம். ஐம்பூதங்களாலாகிய உடலிலே சிவ சைதன்யம் பிரதிபிம்பிக்கின்றபொழுது அப்பிரதிபிம்பம் ஜீவன் எனப் பகரப்படுகிறது. ஸ்தாவர, ஜங்கமங்களாயிருக்கின்ற ஜீவகோடிகளின் தொகை மஹேஸ்வரன் என ஆராதிக்கப்படுகிறது. முட்டை என்னும் ஒரு வஸ்து பரிணமிக்குமிடத்து அது பறவையாகிப் பலப்பல வஸ்துக்களாகக் காட்சி கொடுக்கிறது. சிறகு, எலும்பு, தோல், ரத்தம், தசை ஆகிய பல பொருள்களாகப்

பரிணமித்திருப்பது மூலநிலையில் ஒரே வஸ்துவாம். அங்ஙனம் சுத்த சிவம் ஜகத்தாகவும், ஜீவனாகவும் விளையாடுவது அவன் படைத்துள்ள சக்தியின் சிறப்பாலேயாம். ஆத்மசாதகன் தோன்றியுள்ள அனைத்தையும் பரம்பொருளின் விகாரங்களெனப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறான்.

105. பொய்யைப்பொய் என்றுஅறியும் போதத்துக்கு-
[ஆதரவுஉன்
மெய்அருளே அன்றோ விளம்பாய் பராபரமே.

போதத்துக்கு-பேரறிவுக்கு. விளம்பாய்-சொல்வாயாக.

ஒரு காலத்தில் இருந்து மற்றொரு காலத்தில் எது இல்லாது போகின்றதோ அது பொய். அதைப்பற்றிய ஆராய்ச்சி இன்னும் ஒருபடி மேலே போகவேண்டும். அதற்கேற்ற உபமானம் கனவினின்று கிடைக்கிறது. ஏழை ஒருவன் கனவிலே பணக்காரனாகிறான். கனவு நிலைபெற்றிருக்கும் பரியந்தம் அது மெய்யென்றே தோன்றுகிறது. அப்படித் தோன்றினாலும் உண்மையில் அது மெய்யன்று. கனவிலே பணக்காரனான ஏழை உண்மையில் பணக்காரன் அல்லன். தன்னைப் பணக்காரன் என்று எண்ணியது வெறும் பிராந்தி அல்லது மயக்கம். கனவைப்பற்றிய இக்கோட்பாடு நனவிற்கும் பொருந்துகிறது. உற்றார் உறவினர்களுடன் வாழ்ந்திருக்கும் வாழ்வு மெய்யென்று தோன்றுகிறது. ஆனால் அன்னவர்கள் ஒருவர் பின் ஒருவராக மடிந்துபோகின்றனர். அப்படி மடிந்துபோனவர்கள் நாளடைவில் கனவில் தோன்றியவர்களுக்கு நிகராகக் காணப்படுகின்றனர். நாம் வாழ்ந்து வரும் பிரபஞ்ச வாழ்வு நீண்டதொரு கனவாம். முற்பகுதியில் வந்தவைகள் பிற்பகுதியில் கனவுபோன்று மறைந்துபட்டுப் போகின்றன. கடைசியில் பிரபஞ்ச வாழ்வு முழுதுமே மறைந்துபட்டுப்போம். இங்ஙனம் யுக்தியின்மூலம் பிரபஞ்சம்

பொய்யென முடிவுகட்டுகிறோம். இறைவனுடைய மெய்யருளைப் பெற்றான பிறகு மயக்கம் அறவே அற்றுப்போகின்றது. பிறகு பொய்யான பிரபஞ்ச வாழ்வில் ஆத்மசாதகன் மயக்கம்கொள்வதில்லை. மெய்ப்பொருளாகிய பரத்தையே அவன் நாடி நிற்கிறான். இறைவா, மெய்க்காட்சியைத் தந்தருளுவாயாக என்பது இக்கண்ணியின் கருத்து.

106. வருவான்வந் தேன்எனல்போல் மன்னிஅழி
[யும்ஜகத்தைத்
தெரிவுஆக இல்லைஎன்ற தீரம் பராபரமே.

மன்னியழிதல்-நிலைத்திருந்து பிறகு இல்லாது போதல். ஜகத்து-பிரபஞ்சம். தீரம்-பேரறிவு.

முதியோன் ஒருவன் பக்கத்து அறையிலிருக்கும் இளையவனை வாவென்று கூப்பிடுகிறான். வந்து சேர்வதற்கு இருக்கிற அவன் வந்தேன் என்று இறந்த காலத்தில் இயம்புகிறான். அவன் இனி வந்து சேர்வது அவனுக்கு நிச்சயமாதலால் எதிர்காலத்தில் ஆவதை ஆய்விட்டதாகவே கருதி இறந்த காலத்தில் வைத்து இயம்புகிறான்.

இப்பொழுது நிலைபெற்றிருக்கிற ஜகத் இதே பாங்கில் எதிர்காலத்தில் இருக்கமாட்டாது. ஆதலால் அதன் இருப்பை இப்பொழுதே பொருள்படுத்தாது விட்டுவிடுவது நல்ல ஆத்ம சாதனமாகும். இதையொட்டிய மற்றொரு சாதனமும் உள்ளது. மனிதனுடைய மேனி இப்பொழுது நிலைபெற்றிருக்கும்பொழுதே அதைச் செத்துப்போனதாக எண்ணுவது ஒரு தீவிரமான சாதனமாகிறது. அதற்குத் தீரம் அல்லது அறிவுத்திறன் வேண்டும். கண்கூடாகப் பிரபஞ்சக் காட்சியும் வாழ்வும் இடம்பெற்றிருக்கும்பொழுதே இப்பிரபஞ்சத்தையும் அதில் நடந்து வருகிற வாழ்க்கையையும் பொருள் படுத்தாது இருந்து பழகுவது சிறந்த ஆத்மசாதனமாகிறது.

**107. மாயா ஜகம்இலையேல் மற்றுஎனக்குஓர் பற்றும்இல
நீயேநான் என்றுவந்து நிற்பேன் பராபரமே.**

எது ஓயாது உருமாறிக்கொண்டிருக்கிறதோ அது மாயை. எது இடையறாது சலித்துக்கொண்டிருக்கிறதோ அது ஜகத். ஒரு பொருளை உண்மையானது என்று கருதினால் அதில் பற்று வருகிறது. அது வெறும் தோற்றமென அறியும் போது அதில் பற்று உண்டாவதில்லை. இதற்குச் சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். தங்கத்திலும் வெள்ளியிலும் உருவாக்கிய நாணயங்கள் ஓரிடத்தில் குவித்து வைக்கப்பட்டிருக்கின்றன. மனிதன் அக்குவியலுக்கு மதிப்புத் தருகிறான். கூடுமானால் அதைக் கைப்பற்றவும் நினைக்கிறான். இனி இந் நாணயங்களுக்கு நிகராக இதே தோற்றத்தில் அட்டையில் மாதிரி நாணயம் (**Token coin**) செய்து குவித்து வைக்கப் பட்டிருக்கிறது. அந்நாணயங்கள் நன்கு அமைக்கப்பட்டிருக் கின்றன என்று ஒருவன் பாராட்டலாம். ஆனால் அவைக ளிடத்து அவன் பற்று வைப்பதில்லை. ஏனென்றால் அவை கள் வெறும் தோற்றமான நாணயங்கள். உண்மையான தங்கமும் வெள்ளியும் அன்று. விவேகம் படைத்தவனுக்கு இப்பிரபஞ்சம் தோற்றமான நாணயம் போன்று பொருளற் றது. ஆகையால் அதில் அவன் பற்று வைப்பதில்லை. அவன் புரிகிற வேறு ஒரு அரிய சாதனம் இருக்கிறது. நீயே நான் 'ஸோஹம்' என்னும் பாவனையை அவன் வளர்க்கிறான். அழுக்குப்படிந்த நீரும் தண்ணீர் என்று சொல்லிக்கொள்வ தில் தோஷமில்லை. ஏனென்றால் அழுக்கை அகற்றிச் சுத் தப்படுத்துவது சாத்தியம். அதே பாங்கில் சித்த மலம் நீங் கப் பெற்ற ஜீவன் சிவமாகிறான். பின்பு சித்த மலத்தோடு கூடியிருக்கும்பொழுதும் அவன் 'சிவோஹம்' நான் சிவம் என்னும் எண்ணத்தை வளர்த்து வருவது நல்ல ஆத்மசாதன

மாகிறது. அந்த எண்ணம் உறுதி பெறுவதற்கேற்பச் சித்த மலம் அறுகிறது; சிவபோதம் ஓங்குகிறது. இறைவா, நான் பிரபஞ்சப் போதத்தை அகற்றிச் சிவபோதத்தை வளர்த்து வருவதற்குத் துணைபுரிவாயாக என்பது இக்கண்ணியின் கருத்து.

108. வான்ஆதி நீஎனவே வைத்தமறை என்னையும்நீ
தான்ஆகச் சொல்லாதோ சாற்றுய் பராபரமே.

வானதி-வானம் முதலிய பஞ்சபூதங்கள். சாற்றுய்-சொல்லுவாயாக.

ஆகாசம், வாயு, அக்னி, அப்பு, பிருதுவி ஆகிய ஐம் பூதங்களாய்ப் பரம்பொருளே காட்சிக்கு வந்துள்ளது என் பது வேத வாக்கு. அப்பஞ்ச பூதங்களால் ஆகிய பிரபஞ்சம் முழுதும் ஜடவஸ்து. சேதனமாகிய பரவஸ்துவே ஜடமா யுள்ள ஜகத் ஆகவல்லது என்பது மறைமொழி. இனி, ஜீவதத்துவமானது ஜடத்தையும் சேதனத்தையும் கொண்டு அமைந்தது. ஜீவனுடைய உடல் ஜடவஸ்து. அவன் படைத் திருக்கின்ற ஜீவபோதம் சேதனத்தின் கூறு. பிரபஞ்சத் தையே பரமனகக் கருதுவதில் இழுக்கு இல்லையெனில் ஜீவ னைப் பரமாகக் கருதுதலில் யாது இழுக்கு உளது? இழுக்கு ஒன்றுமில்லை. உலகனைத்தும், உயிரனைத்தும் ஆனய் நீயே என்பது ஆப்த வாக்கியம். ஆதலால் மாயா காரியமாயிருக் கிற ஜகத்தையும் ஜீவனையும் பரவஸ்து சொரூபமாகக் கருதிப் பழகுதல் நல்ல ஆத்ம சாதனமாகும்.

109. வெள்ளக் கருணைமத வேழம்ஆம் நின்அருட்குஎன்
கள்ளக் கருத்தே கவளம் பராபரமே.

வெள்ளக் கருணை—பேரருள். மதவேழம்—மதம் பிடித் துள்ள யானை. கவளம்—சிற்றுண்டி.

இறைவா, நீ மதம் பிடித்துள்ள யானைக்கு ஒப்பானவன். மதம் பிடித்துள்ள யானை காட்டில் எதையும் பொருள்படுத்தாது அழித்துத் தள்ளுகிறது. இறைவா! உன் கருணை அத்தகையது. உன் கருணைக்கு இலக்காகிற எப்பொருளும் மிஞ்சுவதில்லை. உயிர்களையெல்லாம் எடுத்து ஆட்கொண்டு உன்மயம் ஆக்கும் அருள்திறன் உன்னிடம் உள்ளது. மதம் பிடித்துள்ள யானை அகப்பட்டதையெல்லாம் ஒடித்துத் தின்று ஜீரணமாக்குகிறது. அங்ஙனம் உன்னுடைய பெருங் கருணைக்கு இலக்கு ஆகின்றவர்கள் எல்லாரும் உன்மயம் ஆகின்றனர். மதம் பிடித்த யானையிடம் ஒருதார் வாழைப் பழம் தந்தால் ஒரே கவளத்தில் அதை விழுங்கி விடுகிறது. நான் செய்யக்கிடக்கும் அரிய செயல் ஒன்றுள்ளது. எனது கள்ளக் கருத்தை (மன அமைப்பை) என்னோடு வைத்திருந்தால் அது எனக்கு ஓயாத தொல்லை. அத்தகைய சித்த விருத்தியை நான் உனக்குக் கவளமாகக் கொடுத்து விடுவேனாகில் நொடிப்பொழுதில் நீ அதனை உண்டு ஜீரணம் பண்ணி விடுவாய். என்னுடைய பிறவித்தொல்லை அதனோடு ஒழிந்து பட்டுப்போம். மனோநாசம் பண்ணியவனுக்கு ஜீவன் முக்தி என்பது இக்கண்ணியின் கருத்து.

110. வண்டாய்த் துவண்டு மவுன மலர்அணைமேல்
கொண்டார்க்கோ இன்பம் கொடுப்பாய் பராபரமே.

துவளுதல்-நெளிதல். மலரணை-பூம்படுக்கை.

வண்டானது தேனை நாடிப் பூவிடம் போகிறது. அதை அணுகிய பின் ரீங்காரம் செய்துகொண்டு சுற்றிச் சுற்றிப் பறக்கிறது. பிறகு மலரின்மீது அமர்கிறது. தேனை அருந்துகிறது. அவ்வேளையில் வண்டு இடுகிற ஓசை நின்றுவிடுகிறது. மௌனம் நிலவுகிறது. பின்பு மலரில் உள்ள மகரந்தத்

தூளைத் தன் பின்னங்கால்களில் உள்ள கூடைகளில் நிரப்பு தற் பொருட்டுப் படுக்கை போன்று இருக்கிற மலரில் நெளி கிறது. அவ்வேளையிலும் ஒரே மௌனம். வேலை செய்து களைத்துப் போயுள்ளவர்கள் வசதியான படுக்கையில் படுத் துப் புரளும்பொழுது மௌனமுற்று இருக்கின்றனர். இந்த உபமானங்கள் ஆத்ம சாதனங்கள் புரிகின்றவர்களுக்குப் பொருந்துகின்றன. உலக வியவகாரங்களில் உழல்கின்ற வர்கள் அதன் பொருட்டுப் பெருமிதமாகப் பேசியாக வேண் டும். பேச்சுக்களில் துன்பத்திற்கு இடமுண்டு. கடவுளை நாடுதற்கேற்பப் பேச்சில் வேகம் தணிகிறது. கடவுளோடு யோகத்தின் வாயிலாக இணக்கம் கொள்கின்றவர்களுக்கு மௌனம் தானாக வாய்க்கிறது. உழைத்துக் களைத்துள்ள வன் பூம்படுக்கையில் கிடந்து எங்ஙனம் சுகம் பெறுவானோ அங்ஙனம் உலக அல்லல்களைத் துடைத்து இறைவன் சந் நிதியில் இளைப்பாறுகின்றவர்களுக்குப் பேரானந்தம் வாய்க் கிறது. உலக நாட்டம் துன்பத்தையும், தெய்விக நாட்டம் இன்பத்தையும் கொடுப்பதுதானே வாழ்க்கையைப்பற்றிய உண்மை. இறைவா, இவ்வுண்மையை எனக்குத் தெளிவு படுத்துவாயாக என்பது இக்கண்ணியின் கருத்து.

111. மாயைமுதல் ஆம்வினைநீ மன்உயிர்நீ
மன்உயிர்தேர்ந்து
ஆயும்அறிவு ஆனதுநீ அன்றோ பராபரமே.

மாயை — பிரபஞ்சம். வினை — கர்மம். மன்உயிர் — ஜீவாத்மன். ஆயும்அறிவு — பகுத்தறிவு அல்லது விவேகம்.

நிலைகள் எத்தனை எத்தனையாயினும் அத்தனை அத்த னைக்கும் அடிப்படையாய் இருக்கும் வஸ்து ஒன்று என் பதே பழங்காலத்து ஆன்றோர்கள் அனுபூதியில் கண்டறிந்த

உண்மையாகும். அதே உண்மையை இக்காலத்துப் பௌதிக விஞ்ஞானிகளும் ஆராய்ச்சியில் கண்டறிந்துள்ளனர். தோன்றியுள்ள யாவற்றிற்கும் அடிப்படையான வஸ்து ஜடம் (உலகப் பொருள்) என்று விஞ்ஞானிகள் கூறுவதை மெய்ஞானியர்கள் (சித்து) பரம்பொருள் என்கிறார்கள்.

தோன்றியுள்ள உயிர்வகைகளுள் மனிதன் பகுத்தறிவு படைத்துள்ளான். பகுத்தறிவைக்கொண்டு மெய்ப்பொருள் எது? அதனின் விகாரங்கள் யாவை என்பதை அவன் ஓர்ந்து உணர்கிறான். பரம்பொருள் ஒன்றே மெய்ப்பொருள் என்றும், அதன் முன்னிலையில் தோற்றத்திற்கு வருகின்ற ஜகத்தும் ஜீவனும் அப்பரவஸ்துவுக்குரிய மகிமையினால் உண்டானவை என்றும் விவேகத்தின் துணைகொண்டு மனிதன் முடிவுகட்டுகிறான். இவ்விவேகமும் (ஆயும் அறிவு) பரமனிடத்திருந்தே வந்ததாம். ஆக, தோற்றத்திற்கு அப்பால் உள்ள நிர்விகாரியாய் இருப்பதும் தோற்றத்திற்கு வந்துள்ள மாயை முதலானவைகளும் ஒரே பரம்பொருளாம். இவ் உண்மையை யாண்டும் தெளிவுபட உணர்வேனாக என்று தாயுமானவர் கூறுகிறார்.

112. என்அறிவும் யானும்எனது என்பதுவும்
ஆம்இவைகள்
நின்னவையே அன்றோ நிகழ்த்தாய் பராபரமே.

நிகழ்த்தாய்-தெரிவிப்பாய்.

தனக்குத் தனி வியக்தி இருக்கிறதென்றும், தன்னறிவிற்கும் செயலிற்கும் தானே கர்த்தாவென்றும், தான் தேடிய பொருள்கள் தனக்கே உரியவைகள் என்றும் ஜீவாத்மன் மயக்கம் கொள்கிறான். இம்மயக்கம் நிலைத்திருக்கும் வரையில் பிறவிப் பெருங்கடலில் உழலுகிறான். ஜீவவ்யக்தி

வெறும் தோற்றம். அதற்கு மூலப்பொருளாகிய பரம் ஒன்றே நித்தியமானது. ஜீவனுக்கு வந்துள்ள அறிவு பரமனது பேரறிவின் விகாரமாம். ஜீவன் தனக்குச் சொந்தமானது என்று தனது தேட்டையை அபிமானிப்பது வெறும்கற்பனை யாம். பரம்பொருளானது தன்னைப் பலப்பலப் பொருள் களாகவும், ஜீவர்களாகவும் தோற்றுவித்துக் கொண்டிருப் பது அப்பரமனின் திருவிளையாடலாம். பரமனது அருளால் இவ் உண்மையை அனுபூதியில் அறிகின்றவனுக்கு ஜீவ வியக்தி அடிபட்டுப் போகிறது என்பது இக்கண்ணியின் கருத்து.

113. பார்அறியாது அண்டப் பரப்புஅறியாது உன்
பெருமை
யார்அறிவார் நானே அறிவேன் பராபரமே.

பார்-மண் உலகு; அண்டப் பரப்பு-எண்ணிறந்த உல கங்களின் தொகையாகிய எங்கும் பரந்துள்ள அகிலாண்ட மாம்.

ஜீவபோதத்தில் நான் பெற்றிருக்கும் அறிவைக் கொண்டு நான் உன்னை அறியமுடியாது. ஜீவபோதத்தில் நான் பெற்றிருக்கும் அறிவு என் மனம் சிருஷ்டிக்கும் பொருளை அறிந்துகொள்வதற்குப் பயன்படுகிறது. உனது உண்மை சொருபத்தை அறிந்துகொள்வதற்கும் அந்த அறி வால் இயலாது. நான் ஜீவபோதத்தை ஒழித்துப் பரபோதம் அடையப் பெறுவதே உன்னை அறிவதற்கு உற்ற உபாயமாம்.

114. அண்டம் அனைத்திலுமாய் அப்பாலுக்கு அப்பாலும்
கொண்ட நின்னை யார்அறிந்து கொள்வார் பராபரமே.

உடலாயும் உடலிற்குள் உயிராயும் இருப்பது ஜீவாத்மா. அங்ஙனம் உலகனைத்தும் ஆயிருப்பது நீயே. அவ்வுலகி

னுள் உயிர்த்தத்துவமாய் ஊடுருவியிருப்பதும் நீயே. இங்ஙனம் தோற்றத்திற்கு வந்துள்ள அண்டங்கள் யாவும் நீயாகி அவைகளுக்கப்பால் தோன்ருநிலையிலும் நீ இருக்கிருய். தோற்றத்திற்கு வந்துள்ள பகுதியையே முற்றிலும் அறிந்துகொள்ள யாருக்கும் இயலுவதில்லை. இக்கோட்பாட்டை அரியதோர் உபமானத்தின் மூலமாக இராம கிருஷ்ண பரமஹம்சர் விளக்குகிருர். ஒரு திராம் சாராயம் குடித்தவுடன் குடிகாரனுக்குப் போதை தலைக்குமேல் ஏறுகிறது. அதற்குமேல் பீப்பாய் பீப்பாயாகக் கிடைக்கும் சாராயத்தைச் சுவை பார்ப்பது அவனுக்கு எங்ஙனம் சாத்தியமாகும்? பரமனுடைய மகிமையில் ஒரு சிறு பகுதியை அறிந்துகொள்வதற்கு மானுட அறிவிற்கு இயலுவதில்லை. இனி அவனுடைய அகண்டாகாரத் தத்துவத்தை முழுதும் அறிந்துகொள்ளுதற்கு மனிதனுக்கு எப்படிச் சாத்தியமாகும்? அவனுடைய சிற்றறிவிற்கு எட்டுவதே போதுமானது. அதைக் கொண்டு அவன் உய்வு அடையலாம்.

இறைவா, நீயே அனைத்துமாயிருக்கிருய் என்கின்ற எண்ணத்தில் ஊறி நான் உன்னை வழுத்துவேனுக என்பது இக்கண்ணியின் கருத்து ஆகும்.

115. ஒப்புஉயர்வுஒன்று இன்றி ஒலிபுகா மோனவட்டக்
கப்பலுக்குஆம் வான்பொருள் நீ கண்டாய் பராபரமே.

மோனம்-மௌனம்; வட்டக் கப்பல்-ஒருவகைப் புகையிலை வட்டக்கப்பல் எனப்படுகிறது. ஆனல் ஈண்டு வட்டமாக அமைந்துள்ள மரக்கலம் குறிப்பிடப்படுகிறது. வான் பொருள்-மேலான சரக்கு.

வட்டக் கப்பலுக்கு நிகரானது ஹிருதய கமலம். அதனுள் தெய்வ சாந்நித்தியத்தைச் சதா வளர்த்து வரவேண்டும். மானுட வாழ்வோ கப்பல் பயணத்திற்கு ஒப்பானது.

கப்பலானது நாடிய கரையைச் சென்று அடைவது போன்று மானுட ஜீவிதம் பிறவிப் பெருங்கடலைத் தாண்டி இறைவனது திருவடி என்னும் கரையை எட்டவேண்டும். இறைவனது சாந்நித்தியத்தை உள்ளத்தினுள் உறுதிப்படுத்துவதே வாழ்வு என்னும் கப்பல் பயணத்தின் நோக்கமாகும். ஈசுவர சாந்நித்தியத்திற்கு இணையாவது வேறு எதுவும் இல்லை. ஆதலால் அது ஒப்பு உயர்வு ஒன்றுமில்லாதது என்று இயம்பப்படுகிறது. ஓசை, ஒலியெல்லாம் பிரகிருதியின் கூறுகளாம். பரமாத்ம சாந்நித்தியமோ ஓசை ஒலிக்கு அப்பாற்பட்டது. ஆதலால் அதுவே உண்மையான மௌன மாகிறது. ஜீவபோதத்தை அமைதியாகப் பரபோதமாக மாற்றுவது வாழ்வின் சிறந்த குறிக்கோள். இக்கோட்பாடு இக்கண்ணியில் அடங்கியுள்ளது.

116. என்போல் எளியவரும் எங்குளங்கும் பார்த்தாலும்
உன்போல் வலியவரும் உண்டோ பராபரமே.

மனபரிபாகம் அடைந்துள்ள ஜீவாத்மன் தன்னை வலியவனென்று செருக்குக் கொள்வதில்லை. தன்னிடத்து அமைந்துள்ள ஆற்றல் முழுவதும் இறைவனிடத்திருந்து வந்ததென அவன் உணருகிறான். சாதனத்தில் ஆழ்ந்து ஈடுபடுகிற யாவரும் அறியக்கூடிய, உணரக்கூடிய விஷயமாகும் இது.

117. பார்க்கின் அண்டபிண்டப் பரப்புஅனைத்தும் நின்செயலே
யார்க்கும் செயல்இலையே ஐயா பராபரமே.

எங்கும் நிறைந்து ஸ்தூலக் காட்சி தருவது அண்டம். கணக்கிலடங்காத சூரிய மண்டலங்கள் அகண்டத்தின் கூறுகளாம். ஆகையால் பெரியதில் மிகப் பெரியது என்று அகிலாண்டத்தின் தொகையை இயம்பலாம். இனி மானுட

அமைப்பானது 'பிண்டம்' எனப் பகரப்படுகிறது. அண்டத்தின் அமைப்பே பிண்டத்திலும் இருக்கிறது. அண்டம் முழுவதையும் நாம் அறிந்துகொள்ள முடியாது. அது நம் ஆராய்ச்சிக்கு எட்டாதது. பிண்டமோ யாண்டும் நம் கைவசத்தில் உள்ளது. எப்போது வேண்டுமானுலும் எப்படி வேண்டுமானுலும் அதை நாம் ஆராய்ச்சி பண்ணலாம். ஆராய்ந்து பார்க்குமிடத்து அரியதோர் உண்மை வெளியாகும். பிண்டத்தில் நிகழும் செயலை அக்ஞானத்தால் மனிதன் தன் செயல் என்கிருன். உண்மையில் அது அவன் செயலன்று. சான்று ஒன்று எடுத்துக் கொள்வோம். உண்பதற்கு உணவு மனிதனுக்குக் கிடைக்கிறது. அது உணவாக அமைந்தது. இறைவன் செயலென்று ஓர்ந்து பர்ர்ப்பவனுக்கு விளங்குகிறது. அதை வாயில் போட்டு விழுங்குவதை மனிதன் தன் செயல் எனலாம். அது செரித்து உடல் மயம் ஆவது இறைவன் செயல். அது தன் செயலென்று மனிதன் உரிமை பாராட்ட முடியாது. இனி உணர்கின்ற செயலிற்கும் அருளின் துணையில்லா விட்டால் மனிதன் அதைத் தன் இச்சா சுதந்திரத்தோடு செய்ய இயலாது. ஆதலால் அண்டத்திலும், பிண்டத்திலும் நிகழ்ந்து வருகின்ற செயல்கள் யாவும் உண்மையில் ஈசன் செயல்களே. அதை உணருமளவு மனிதன் உண்மையை அறிகிருன். உண்மையை அறிதற்கு ஏற்ப அவனுக்கு அமைதி உண்டாகிறது.

இக்கோட்பாட்டை உணருமளவு தஞ்சம் புகும் மனப்பான்மை தாஞக வந்தமைகிறது. தஞ்சம் புகுதற்கு ஏற்ப மன அமைதி உண்டாகிறது. அமைதியுற்ற மனத்தில் தத்துவம் உள்ளபடி விளங்குகிறது. ஆதலால் சரணுகதியின் வாயிலாக மனிதன் படிப்படியாகப் பரவஸ்துவில் லயமாகிருன். அது முக்தியில் கொண்டு சேர்க்கிறது

118. ஒன்றே பலவே உருவே அருவேயோ
என்றே அழைப்பதுஉன்னை என்றோ பராபரமே.

என்றே-இவ்வாறெல்லாம்; என்றோ-எக்காலத்திலோ.

இறைவன் எப்படி எப்படி யெல்லாம் விளங்குகிறான் என்பதை நாம் அறிந்துகொள்ளுமளவு நம்முடைய வழிபாடு பொருத்தமுடையது ஆகிறது. மெய்ப்பொருள் ஒன்று எனினும் அது தன்னைப் பல பொருள்களாகவும் காட்டிக்கொள்ள வல்லது. உதாரணம் ஒன்று எடுத்துக்கொள்வோம். சூரிய கிரணமானது நிறமற்ற வெளிச்சமாகும். அதை முப்பட்டைக் கண்ணாடியில் செலுத்தினால் ஏழு நிறங்களாகச் சிதறடைகிறது. மூலநிலையில் சூரிய கிரணம் ஒன்று; சிதறடைந்த நிலையில் ஏழு நிறங்களாக அது நிலவுகிறது. பரவஸ்து ஒன்று. அது சலிக்கும் தன்மையுடையது. சலிக்கும் பொழுது அதைச் சக்தி யென்கிறோம். சக்தியோ சித்சக்தியாகவும் ஜடசக்தியாகவும் தோற்றுவித்துக்கொள்கிறது. எத்தனை யெத்தனை மனிதர்கள் எத்தனை யெத்தனை மனப்பங்கு படைத்தவர்களாக இருக்கிறார்களோ அத்தனை யத்தனை சித்சக்திகள் உலகில் காட்சி கொடுக்கின்றன. பின்பு ஜடசக்தியானது ஒலி, ஒளி, வெப்பம், காந்தம், மின்னல் இப்படியெல்லாம் வடிவெடுக்கிறது. இவ்வுண்மையை அறிந்திருப்பது சாதனத்திற்கும் மனத்தெளிவிற்கும் உதவுகிறது.

மூலப்பொருள் ஒன்று. அது முக்குணங்களுக்கு அப்பாற்பட்டது. பின்பு முக்குணங்களை உடையதாகவும் தன்னைத்தானே விளக்கிக்கொள்கிறது. முக்குண பேதத்தால் அகிலாண்டமெங்குமுள்ள இத்தனையித்தனை ஜடப்பொருள்கள், சேதனப் பொருள்கள் வடிவெடுத்திருக்கின்றன. ஆதலால் பரவஸ்துவை 'ஒன்றே, பலவே' என்று பகர்வது பொருந்தும். ஒரு நாமமும் ஓர் ஊரும் இல்லாதவருக்கு

ஆயிரம் திருநாமங்களை நாம் வழங்குகிறோம். ஒவ்வொரு திருநாமத்திலும் ஒரு தனி மகிமையுடன் அப்பரவஸ்து மிளிர் கிறது. இதற்கு இயற்கையில் சான்று ஒன்று எடுப்போம். கடல் நீர், மழைநீர், ஆற்றுநீர், சேற்றுநீர், சாக்கடைநீர் இப் படிப் பலப்பல நீராக மாறுவது ஒரே நீராம். பரவஸ்துவைப் பற்றிய உண்மையும் இதுவே. நீர் உறைபனியாகும்பொழுது அது உருவம் எடுக்கிறது. ஆவியாகும்போது அது அருவ மாகிறது. அங்ஙனம் பரவஸ்து உருவத்திலும் இலங்கு கிறது; அருவத்திலும் இலங்குகிறது. நம் போன்றவர்களுக்கு உருவம் விளங்குகிறது. சிவன், விஷ்ணு, அம்பிகை போன்ற வடிவங்கள் நமக்கு நன்கு விளங்குகின்றன. அருவம் எளிதில் விளங்குவதில்லை. ஆயினும் இரண்டு நிலைகளிலும் இறை வன் உள்ளான். எல்லா நிலைகளிலும் அவர் வழுத்துதற் குரியவன்.

119. செப்புவதுஎல்லாம் ஜெபம்நான் சிந்திப்பது எல்லாம்நின்
ஒப்புஇல் தியானம்என ஓர்ந்தேன் பராபரமே.

செப்புவது-சொல்லுவது; ஒப்பில் தியானம்-நிகரற்ற தியானம்.

ஆத்ம சாதனம் வேறு, உலக வாழ்க்கைமுறை வேறு என்னும் கொள்கை மக்களிடத்து இருந்து வருகிறது. ஆனல் சாதனத்தில் மேல்நோக்கிப் போகப் போக இவ்விரண்டிற் கும் இடையிலுள்ள வேற்றுமை தானக அடிபட்டுப் போகிறது. உலக வியவகாரங்களாக இருப்பவைகளும் கடவுள் வழிபாடாக மேன்மையுறுகின்றன. அது எப்படி யென்று பார்ப்போம்.

இறைவனுடைய திருநாமத்தைத் திரும்பத் திரும்ப உச் சரிப்பது ஜபம் என்னும் சாதனமாகிறது. 'ஓம் நமச்சிவாய'

அல்லது 'ஓம் நமோ நாராயணய' என்பன இறைவனுக்குரிய மந்த்ரங்களாகின்றன. இம்மந்திரங்களைக் குறிப்பிட்ட வேளைகளில் 108 முறை அல்லது 1008 முறை உச்சரிப்பது ஜபம் என்னும் பெயர் பெறுகிறது. இச்சாதனம் முதிர்ச்சியடைகின்றபொழுது ஜபிப்பதற்கு எண்ணிக்கை வரையறையில்லாது போகிறது. பின்பு கால வரையறையும் இல்லாது போகிறது. இடையருது மனத்தின் ஒரு பகுதி இறைவனுடைய திருநாமத்தை ஓதிக்கொண்டிருக்கிறது; மற்றொரு பகுதி உலக வியவகாரங்களைச் செய்கிறது. இத்தகைய பரிபக்குவத்திற்கு ஜபசித்தி என்னும் பெயர் வந்துள்ளது. இதற்கு மேல் மற்றொரு நிலைக்குச் சாதகன் போகமுடியும். இறைவனுடைய திருநாமம்மட்டுமன்று அவர் பேசுகிற பேச்சும் கடவுளைப்பற்றிய பேச்சாகவே இருக்கிறது. வேறு பேச்சு அவன் நாவில் உருவெடுப்பதில்லை. அத்தகைய பெருநிலையடைகின்றவன் செப்புவது ஜபமாகிறது. தனியாக ஜபம் பண்ணும் பழக்கத்தை அவன் தாண்டியவனுகிருன்.

வாய்விட்டுப்பேசாது மனத்துக்குள்ளேயே எண்ணுகின்ற எண்ணம் சிந்தனை எனப்படுகிறது. பேச்சைக் கடவுளுக்கு உரியதாக்குவது போன்று சிந்திப்பதையும் கடவுளுக்கு உரியதாகப் பண்ணச் சாதகனுக்கு இயலுகிறது. தைலதாரை போன்று உள்ளத்தில் உதிக்கிற எண்ணங்களெல்லாம் கடவுளைப்பற்றியவைகளாக இருக்குமாகில் அவ்வெண்ணங்கள் மனத்தைச் சிதறடைய விடமாட்டா. பரம்பொருளைப் பற்றிய ஒரே எண்ணம் தியானம் எனப் பெயர் பெறுகிறது. பின்பு எண்ணங்கள் பலப்பலவாக இருப்பினும் அவை யாவும் கடவுளைப்பற்றிய எண்ணங்களாகவே இருக்குமாகில் அது சாமானியமான தியானமன்று; ஒப்பற்ற தியானமாகிறது. சுருங்கச் சொல்லின் பேச்சும், எண்ணமும் கட

வுளைப்பற்றியனவாக அமையுமாயின் அதில் சிறப்பு மிக உண்டு. பேசுகிற பேச்செல்லாம் ஜபமாகிறது. எண்ணு கிற எண்ணமெல்லாம் தியானமாகிறது. இவ்வுண்மையை அறிந்து இதன்படி ஒழுகுகிறவன் தலைசிறந்த ஆத்மசாதக னாகிறான். அப்பெரு நிலையை அடையவேண்டும் என்பது இக்கண்ணியின் கருத்தாம்.

120. ஆர்இருந்துஎன் ஆர்போய்என் ஆர்அமுதுஆம் நின்அருளின்
சீர்இருந்தால் உய்வேன் சிவமே பராபரமே.

ஆரமுதம்—ஒப்பற்ற அமிர்த சொரூபமாகிய இறைவன்; அருளின் சீர்-அருள் திறன்; உய்வேன்-கடைத்தேறுவேன்.

இக்கண்ணி சாதகனுக்கு நித்திய அநித்திய வஸ்து விசாரம் செய்யத் தூண்டுகோல் ஆகிறது. பிறவிப் பெருங் கடலில் அழுந்திக்கிடக்கின்றவர்களுடைய போக்கும் வரவும் (இறப்பும், பிறப்பும்) ஆத்ம சாதகனுக்கு முக்கியமானவை களல்ல. அவர்களின் ஜனன மரணத்தால் அவனுக்கு லாப நஷ்டம் ஏதுமில்லை. பின்பு இறைவனே போக்கு வரவற்ற வன். அவன் அமிர்த சொரூபம். இறைவனை நாடுகின்ற ஆத்ம சாதகர்களுக்கு அவனே அந்நாட்டத்தில் உறுதிப் பாட்டையும் நல்குகிறான். அந்த உறுதிப்பாடே அருளின் சீர் என ஈண்டு இயம்பப்படுகிறது. ஆழ்ந்து ஆத்ம சாதனம் செய்யும் தீவிர சாதகன் அருளின் சீர்மையில் ஒன்றுபட்டவ னாக இருக்கிறான். மாந்தர்க்கு இடையறாது நிகழும் ஜனன மரணம் அவனுடைய அருள் நாட்டத்தைக் கலைப்பதில்லை. அருள் நாட்டத்தை வளர்க்க அவைகள் உதவுகின்றன. நிலையற்ற இந்நிலவுலகிலே நிலையுற்ற அருள்நோக்கத்தில் அவன் கண்ணுங் கருத்துமாயிருக்கிறான். அமிர்த சொரூபம் என்பது மரணமிலாப் பெருநிலை. கடவுள் நாட்டத்தில்

நிலேத்திருப்பவன் மரணமிலாப் பெருநிலேக்குத் தகுதியுடைய வனுகிருன்.

121. வஞ்ச நமன் வாதனேக்கும் வன்பிறவி வேதனேக்கும்
அஞ்சி உனேஅடைந்தேன் ஐயா பராபரமே.

நமன்-கூற்றுவன் (எமன்); வாதனே-கபடச் செயல்; வேதனே-துன்பம்.

மனிதனேப் பாரமார்த்திக வாழ்வில் தூண்டுதற்குக் காரணங்கள் இரண்டு உள. முதல் காரணம் இவ்வுலக வாழ்வு நீர்க்குமிழி போன்று நிலேயற்றது என்பதாம். இரண்டாம் காரணம் வாழ்வில் ஏராளமான துன்பங்கள் உண்டு என அறிதலும் ஆகும். புத்த பெம்மானின் சிந்தனேயைக் கவர்ந்தவை: அதுவரை தாம் கண்டிராத பாடையில் வைத்து எடுத்துச் சென்ற பிணம்; மற்றும் கூன் விழுந்து தள்ளாடி நடந்து சென்ற வயோதிகன். இவ் இரு காட்சிகளேயும் பார்த்தவுடன் அவரது சிந்தனே வாழ்வின் பேருண்மைகளேக் கண்டுபிடிப்பதில் தீவிர நாட்டம் கொண்டது.

ஆத்மசாதகர்கள் நமனின் வாதனேயையும் வாழ்வின் வேதனே (துன்பம்) யையம் நீக்கி இறைவனின் பேரானந்தத்தில் திளேத்திருக்க விரும்புவதாக முறையிடுவது பொருத்தமானதாகிறது.

122. எந்தப் படிஉன் இதயம் இருந்ததுஎமக்கு
அந்தப் படிவருவது அன்றோ பராபரமே.

இதயம்-திருவுளம்.

ஒவ்வொரு ஜீவனும் தன்னுடைய பிராரப்த கர்மத்தைப் பூர்த்தி பண்ணுவதற்குப் புதிய பிறவி எடுக்கிறுன். அவனுடைய வினேப்பயன் நிறைவேறுதலும் பிரபஞ்ச நடைமுறையைப்பற்றிய ஈசனது திட்டமும் ஒன்றோடொன்று சம்மந்தப்

பட்டிருக்கின்றன. ஒரு சான்றின் மூலம் இக்கோட்பாட்டை விளக்குவது பொருந்தும். மஹாபாரதக் கடும்போரின் விளைவாகக் கயவர்களைத் துடைத்துத் தள்ளுவது கண்ணபிரானுடைய பெரிய திட்டமாகும். கெட்டவர்களை எதிர்த்துப் போர்புரிவது அர்ஜுனனின் பிராரப்த கர்மமாகும். அக்கர்மத்தைச் செய்து முடிக்காது அவன் வினைத்தளையினின்று தப்பித்துக்கொள்ள முடியாது. அவ்வுண்மை அவனுக்குத் தெளிவுறுத்தப்பட்டபோது போரில் அவன் துணிந்து தன் கடமையை நிறைவேற்றினன். அதே வேளையில் இறைவனிடம் கருவியாயிருந்து, இறைவனுடைய பெரும் திட்டம் பூர்த்தியாவதற்கும் அவன் நிமித்தமானன்.

இக்கோட்பாட்டைப் பக்தன் ஒருவன் பரமனிடம் செய்கின்ற பிரார்த்தனையின் வாயிலாக நிறைவேற்றுகிறுன். இறைவா, உன்னுடைய திருவுளம் யாதோ அதன்படியே என்னுடைய இப்பிரபஞ்ச வாழ்வு அமைந்திருப்பது ஆகுக என்பது இக்கண்ணியில் அடங்கியுள்ள கருத்து ஆகும்.

123. எந்தெந்த நாளும் எனைப்பிரியாது என்உயிராய்ச்
சிந்தைகுடி கொண்டஅருள் தேவே பராபரமே.

ஜீவாத்மனுக்கும் பரமாத்மனுக்கும் உள்ள தொடர்புஇக் கண்ணியின்வாயிலாக வெளியாகிறது.எரிகின்றதீபம் உயிர்த் தத்துவத்திற்கு ஒப்பானது. தீபத்தில் இருக்கின்ற எண்ணெய் பரதத்துவத்திற்கு ஒப்பானது. எண்ணெய் இல்லாது விளக்கு எரியாது. அங்ஙனம் உயிருக்குயிராய் இருக்கின்ற பரதத்துவத்தினின்று ஜீவாத்ம தத்துவம் உருவெடுக்கிறது. பரதத்துவத்திற்குப் புறம்பாக ஜீவாத்மனுக்குத் தனி வியக்தி ஏதுமில்லை. ஜீவாத்மன் பிறவி எடுத்திருக்கும்பொழுது தோற்றத்திற்கு வந்துள்ள வியக்தியாகிறுன். மரணவஸ்தையில் அவன் மறைந்துள்ள வியக்தியாகிறுன். இவ்வுண்மையை

அறிகிற ஆத்மசாதகன் தன்னுடைய ஜீவவியக்தியைப் பரம்பொருளுக்கு உரியதென அதனிடம் ஒப்படைக்கிருன். இச்செயல் சரணுகதி யென்ருே அடைக்கலம் என்ருே இயம்பப்படுகிறது. தனக்கு மூலமூர்த்தியாய் இருப்பது கடவுள் என்னும் உண்மையை அறிகிற ஆத்மசாதகன் அல்லல்களுக்கு ஆளாவதில்லே.

124. அஞ்சல்அஞ்சல் என்றுஅடிமைக்கு அப்போதைக்கு [அப்போதே
நெஞ்சில் உணர்த்தும் நிறைவே பராபரமே.

அஞ்சல் அஞ்சல்-பயப்படாதே பயப்படாதே. நிறைவு-பூரணம்.

பயப்படும் பாங்கு ஜீவாத்மனுக்குரிய இயல்புகளில் ஒன்ருகும். உலகில் உள்ள உயிர்வகைகளே ஆராய்ந்து பார்த்தால் அவைகள் எங்ஙனம் ஓயாது அச்சத்திற்கு ஆளாகின்றன என்பது வெளியாகும். சத்துருவைப்பற்றிய அச்சம், உணவு அகப்படாததைப்பற்றிய அச்சம், நோயைப் பற்றிய அச்சம், சாவைப்பற்றிய அச்சம்—இப்படிப் பலப்பல பாங்குகளில் ஜீவனுக்கு அச்சம் வந்துகொண்டே இருக்கிறது. அச்சத்தைத் தவிர்க்க அவன் சதா முயன்றுகொண்டிருக்கிருன்.

இனி, அச்சத்தை நிரந்தரமாக அகற்றுதற்கு உபாயம் ஒன்றுள்ளது. கடவுளேச் சார்ந்திருப்பதற்கு ஏற்ப அச்சம் வெல்லப்படுகிறது. கடவுள் தாமே அபயகரம் படைத்தவராகப் பக்தர்களுக்குக் காட்சி கொடுக்கிருர். அஞ்சவேண்டாம் என்னும் செய்தியைக் கையின் மூலமாக விளக்குகிருர். அப்படி விளக்கிக்கொண்டிருக்கிற கைக்கு அபயகரம் என்று பெயர். கடவுளேயணுகுதலும் அச்சத்தைத் தவிர்த்தலும் ஒன்றேயாம். அச்சம் பூணுதல் அஞ்ஞானத்தின் விளேவு.

கடவுளை அணுகுதல் ஞானத்தின் விளைவு. கடவுளின் சாந் நித்தியத்தை உணருகிற சாதகன் எவ்வுயிரையும் எதிரியாக நினைப்பதில்லை. ஆகையால் சத்துரு பயம் அவனிடம் உரு வெடுப்பதில்லை. உயிர்கள் அனைத்திற்கும் உணவு அளித்து வருவது இறைவனின் பேரருள் திட்டம் என்னும் உண் மையை அறிகிற ஆத்மசாதகன் தனக்கு உணவு கிடைக் காதோஎன்று அஞ்சுவதில்லை. நோய்வாய்ப்படுவதும், சாவ தும் இறைவனுடைய பெருந்திட்டங்கள் ஆகின்றன. ஆத லால் இறைவனை அறிகிறவன் நோய்க்கோ மரணத்திற்கோ அஞ்சுவதில்லை. அபயம் அல்லது அஞ்சாமையே கடவுளை யறிந்து அவரையணுகியதின் விளைவாம். ஆதலால் கடவுளை அணுக அணுக அச்சமின்மை உறுதி பெற்றுவருகிறது.

125. என்னைஉந்தன் கைக்குஅளித்தார் யாவர்என்னை
யான்கொடுத்துப்
பின்னைஉன்னால் பெற்றநலம் பேசேன் பராபரமே.

கைக்கு அளித்தவன் யாவர்—கையில் பிடித்துக்கொடுத் தவர் எவர், யாருமில்லை. ஜீவாத்மனுக்கும், பரமாத்மனுக் கும் இடையிலுள்ள இணக்கத்தை உள்ளபடி அறிந்துகொள் கிறவன் சாதனத்திற்கு முற்றிலும் தகுதி வாய்ந்தவனாகிறான். கடலில் உருவெடுக்கின்ற அலையொன்றைச் சுட்டிக்காட்டி 'கடலே! இந்த அலையை உனக்கு நான் கொடுக்கிறேன்' என்று கரையிலிருக்கும் ஒருவன் பகர்வதில் பொருள் இல்லை. அலை கடலுக்கே சொந்தமானது. வேற்றான் ஒருவன் அதைக் கடலுக்கு உரியதாக்குவது பொருளற்றது. அங்ஙனம் ஜீவாத்மன் யாண்டும் பரமனுக்கே உரியவன். பரமாத்மன் உடையவன்; ஜீவாத்மன் உடைமை. இதையறிந்து ஆத்ம சாதகன் ஒருவன் தன்னைப் பரமனுக்கே உரியவன் என ஒப்படைப்பானாகில் அச்செயலில் அவன் சாதனம் பூர்த்தியா

கிறது. பேசாத மோன நிலையில் அது அவனைக் கொண்டு சேர்க்கிறது. இக்கண்ணியில் அடங்கிய கருத்து இதுவாம்.

126. வாய்பேசா ஊமைஎன வைக்களன்றோ நீமவுனத்
தாய்ஆக வந்துஅருளைத் தந்தாய் பராபரமே.

ஜீவன் ஒருவன் படிப்படியாகப் பரிணமித்து மேல் நிலைக்கு வரும்பொழுது பேசா நிலையிலிருந்து முன்னேற்ற மடைந்து பேசுகின்ற நிலைக்கு வருகின்றான். தெளிவுறப் பேசுதல் மானுடன் பெற்றுள்ள முன்னேற்றமாம். ஆயினும் மானுட வடிவெடுத்துள்ள ஜீவன் ஒருவன் செவிடாய்ப் பிறப் பதும் அதன் விளைவாக வாய்பேசா ஊமையாவதும் இயல்பு. ஊமை ஒருவனுக்கு உலக ஞானம் மிகக் குறைவுபட்டதாகும். பரஞானத்தைப்பற்றிய பேச்சிற்கு அவன்பால் இடமில்லை. ஆதலால் அவன் மானுட வடிவத்தில் உள்ள சிற்றுயிருக்கு ஒப்பாகிறான்.

தெளிவுபடப் பேச வல்லவன் ஒருவன் பரஞானத்தைப் பெறுதல் பொருட்டு மௌனம் சாதிப்பது அவசியமாகிறது. மௌன விரதம் கடினமான ஆத்ம சாதனமாகும். தாயுமான வரின் குரு யாண்டும் மௌனியாய் இருந்தார். ஆயினும் வாய் பேசா ஊமைக்கும் அந்த மௌன குருவிற்கும் வெகு தூரம். ஒன்று அக்ஞானத்தின் கீழ்ப்படி; மற்றது ஞானத் தின் உச்சநிலை. பேச்சில் ஈடுபட்டிருந்த தாயுமானவரைப் பேச்சையெல்லாம் கடந்த பாரமார்த்திகப் பெருநிலையில் தூண்டுதற்கென்றே அவர்க்கு ஞானாசாரியனாக மௌனகுரு வாய்த்திருக்கக்கூடும். இச்சீரிய உணர்வை இக்கண்ணி யின் வாயிலாக அவர் வெளியிடுகின்றார்.

127. தன்னைத்தந்து என்னைத் தடுத்துஆண்ட
நின்கருணைக்கு
என்னைக்கொண்டு என்னபலன் எந்தாய் பராபரமே.

தடுத்தாண்ட — தடுத்து + ஆண்ட.

வலிய வந்து பரத்துக்குரியவனுக ஆத்ம சாதகனைத் திருத்தியமைத்தல் தடுத்து ஆட்கொள்ளுதல் என்னும் பெயர் பெறுகிறது.

ஜீவாத்மனைப் பரமாத்ம சொரூபத்தில் ஒன்றுபடுத்துதல் அருள் குருவின் செயலாகும். அருள் மூர்த்தியாகப் பரவஸ்துவே வடிவெடுத்து வருகிறது என்பது ஐதிகம். அதன் விளைவாக ஆத்ம சாதகனுக்கு ஜீவபோதம் அழிந்து பட்டுப் போகிறது. பரபோதம் ஓங்கி நிலைத்திருக்கிறது. இப்படிச் செய்வதனுல் பரம்பொருளிற்கு இலாபம் ஒன்றுமில்லை. இச் செயலைச் செய்யாவிட்டால் பரம்பொருளிற்கு நஷ்டம் ஒன்றுமில்லை. ஆயினும் பரமன் அருள் குரு வடிவாயிருந்து இவ்வரிய செயலை யாண்டும் செய்து வருகிருன்.

ஓர் உபமானம் இதற்கு நன்கு உதவும். பெருக்கெடுத்து வருகின்ற நதியைக் கடல் வாங்கித் தன்மயமாக்குகிறது. நதியானது நதியென்னும் வியக்தியை இழந்து கடல் சொரூபம் ஆகிறது. நதி பெறுகின்ற பெரும் பேறு அதுவாம். நதி ஒன்றுமே கடலிற்குள் யாண்டும் வாராது நின்று விடுமானுல் அதை முன்னிட்டுக் கடலுக்குக் குறையொன்றுமில்லை. அது யாண்டும் தன்மயமாயிருக்கிறது. இறைவன் ஜீவனை ஆட்கொள்வது இது போன்றது.

இறைவா, உன்னைக் கொடுத்து என்னை நீ ஆட்கொண்டுள்ளாய். அதன் விளைவாக நான் அகண்ட சச்சிதானந்த சொரூபமாயிருக்கிறேன். என்னை ஆட்கொண்ட உனக்கோ புதிய வாய்ப்பு ஏதும் உண்டாகவில்லை. இதுவே உனது கருணைத் திறனும்.

128. மார்க்கண்டர்க்கு ஆக மறலிபட்ட பாட்டைஉன்னிப்
பார்க்கின் அன்பர்க்குளன்ன பயங்காண் பராபரமே.

மறலி–யமன்; உன்னிப்பார்க்கின்-ஆலோசித்துப் பார்த்தால்.

மிருகண்டு மகரிஷியின் புதல்வன் மார்க்கண்டன். அவனுக்கு மண்ணுலக ஆயுள் பதினறே. ஆயினும் சிவபக்தியில் ஆழ்ந்திருந்த அவன் காலத்திற்கு அப்பாற்பட்ட பாரமார்த்திகப் பெருநிலையிலேயே யாண்டும் ஊறியிருந்தான். ஆதலால் யமன் அவனுடைய ஆயுளை அளக்க முடியவில்லை. அவனுடைய ஆயுள் பதினறு முடிந்ததாகக் கணக்கிட்டு அவன்மீது மரணபாசத்தை வீசிய யமனே அடிப்பட்டுப்போனன். ஏனென்ருல் காலனுக்கும் காலனுகச் சிவனுர் உளர். அச்சிவ சொருபத்தில் மார்க்கண்டன் ஒன்றுபட்டுவிட்டான். ஆதலால் மார்க்கண்டனை மரணத்துக்கு உட்படுத்துவது சிவனுரை அதில் உட்படுத்துவதற்கொப்பாகும். அது சாத்தியமன்று. ஆகவே மறலி மடியவேண்டியதாயிற்று. பின்பு ஏனைய அஞ்ஞான உயிர்கள் மீது அவன் ஆணை செலுத்துதற்பொருட்டு அம்பிகையின் அருளால் அவன் உயிர்ப்பிக்கப் பட்டான்.

பரமனை அடைதல் ஒன்றே மரணத்தை வெல்லுதற்கு உற்ற உபாயம். மார்க்கண்டன் அதற்குச் சான்று ஆகிருன். இறைவா, நானும் சதா உன்னைச் சார்ந்திருந்து உன் மயம் ஆவேனுக. பிறகு மரணத்தைப்பற்றிய பேச்சு எழ இடமில்லை.

ஜீவர்களனைவரும் பயப்படும் பாங்குடையவர்களாக இருக்கின்றனர். பயங்கள் அத்தனையும் மரண பயத்தில் ஒடுங்குகின்றன. மரணபயத்தை வென்றவன் பயங்கள்

அனைத்தையும் வென்றவனாகிறான். அபயகரம் தாங்கியவராக இறைவன் இருக்கிறார். பயத்திற்கு எதிரிடை அபயம். இறைவனை அடைவதும் மரணபயத்தை வெல்லுவதும் ஒன்றாம்.

129. சுட்டிஉணா ராமல் துரிய நிலை யாய்வெளியில்
விட்ட நின்னை யானோ வியப்பேன் பராபரமே.

துரியநிலை-ஜாக்கிரதம், சொப்பனம், சுஷுப்தி ஆகிய மூன்று அவஸ்தைகளுக்கும் பொதுவாயுள்ள பிரக்ஞானமே துரியமெனப்படுகிறது. வெளியில் விட்ட-பிரபஞ்சத்திற்கு அப்பாலுள்ள பெருநிலையில் வைத்த; வியப்பேன்-புகழ்ந்து பேசுவேன்.

பிரபஞ்ச வாழ்க்கை முழுதும் ஐம்பொறிகளால் சுட்டி உணர்த்தப்படுகிறது. அந்தக்கரணமாகிய மனமும் புத்தியும் பிரபஞ்ச வாழ்வைச் சுட்டிக் காட்டுகின்றன. ஆனால் பிரக்ஞானம் அல்லது பேரறிவுப் பெருநிலையோ ஐம்பொறிகளுக்கு எட்டாதது. அந்தக்கரணத்திற்கும் அது எட்டாதது. அது தன்னில் தானாய் உள்ள பரநிலையாம். பிரபஞ்சத்தில் அது அடங்குகிறதில்லை. பிரபஞ்சமோ அதைச் சார்ந்திருக்கிறது. பிரபஞ்சத்தில் அது அடங்காததால் வெளியென்று விளக்கப்படுகிறது. ஜீவனாகிய நான் ஐம்பொறிகளிலும் அந்தக்கரணத்திலும் கட்டுண்டவனாக இருக்கிறேன். ஆதலால் இப்பிரபஞ்சத்தையும் என்னுடைய ஜீவவியக்தியையும் நான் விளக்க வல்லவன். பரம் ஆகிய துரியம் என்னுடைய விளக்கத்திற்கு எட்டாதது. என்னுடைய ஜீவவியக்தியைத் துடைத்துத் தள்ளும்போதே நான் துரியமாகின்றேன். அந்நிலை அனுபூதிக்குரியது; விளக்கத்திற்கு உரியதன்று. இதுவே இக்கண்ணியின் கருத்தாம்.

130. சூதுஒன்றும் இன்றிஎன்னைச் சும்மா இருக்க
வைத்தாய்
ஈதுஒன்றும் போதாதோ இன்பம் பராபரமே.

சூது-வஞ்சகம். சும்மா இருத்தல்-மனத்தின் வேகம் அடி பட்டுப் போதல்.

பொய்யை நிலைநாட்டுதற்குச் சூழ்ச்சிகள் பலவற்றைக் கையாளுதல் அவசியமாகிறது. மெய்யை மொழிதற்குத் தர்க்கம் ஒன்றும் தேவையில்லை. பேச்சுத்திறமை படைத் திருக்கவேண்டிய அவசியமில்லை. மழலைச் சொல்லும் மெய்யை நிலைநாட்டுதற்கு உதவுகிறது. எளியவைகளில் மிக எளியதாய் இருப்பது உண்மை. பின்பு மனிதனைப்பற் றிய உண்மைதான் என்ன? மனிதனைப்பற்றிய உண்மையே பரப்பிரம்மத்தைப்பற்றிய உண்மையுமாம். மனிதன் இன்ப சொரூபம். இதுவே அவனைப்பற்றிய உண்மை. ஆனந்தம் பிரம்மம். இது பிரம்மத்தைப்பற்றிய உண்மை. இனி, இன்பமும் ஆனந்தமும் ஒன்றேயாம். சொற்கள் இரண்டு. அவைகளின் பொருள் ஒன்று.

மனிதன் இன்ப சொரூபம் என்பதற்கு அத்தாட்சி என்ன? அவன் இன்ப சொரூபம் என்பதற்கு அவனே அத் தாட்சி. அயர்ந்த உறக்கத்தில் அவன் தனது நிஜசொரூபத் தில் இருக்கிறான். சும்மா இருத்தல் என்னும் நிலை ஆங்குத் தானாக அமைகிறது. மனத்தின் சூதுக்கு ஆங்கு இடமில்லை. மனிதன் தனது யதார்த்த நிலையிலிருக்கிறான். சுஷுப்தி யிலுள்ள இந்த நிலையை ஜாக்ரதாவஸ்தையில் நிலைநாட்டு வானாகில் அவன் குறியை எட்டியவனாகிறான். இது இக் கண்ணியின் கோட்பாடாம்.

131. வாய்ஒன்றும் பேசா மவுனியாய் வந்துஆண்ட
தேஒன்றும் போதாதோ இன்பம் பராபரமே.

தாயுமானவரின் குரு மௌனவிரதம் பூண்டவர். பேசாத நிலையில் இருந்துகொண்டே சிஷ்யராகிய தாயுமானவருக்கு அரிய பெரிய விஷயங்களை ஊட்டி வந்தார். அது எப்படிச் சாத்தியம் என்னும் ஐயம் எழக்கூடும். பேச்சின் மூலம் புகட்டுவதைவிடச் சிறந்தது மௌன நிலையில் இருந்து கொண்டு புகட்டுவது. சிஷ்யன் மட்டும் பக்குவமடைந்தவனாக இருப்பானாகில் குருவினுடைய மௌனோபதேசம் அவனுடைய உள்ளத்தில் வடிவெடுக்கிறது. பேச்சின் துணையின்றி மனத்தோடு மனம் பேசுகிற பெரிய நிலை பக்குவமடைந்திருப்பவர்களுக்குச் சாத்தியமாகிறது. இந்நிலையை அடைந்திருப்பவர்களுக்கு மொழி இடைஞ்சலாகிறது.

இங்கு மௌன குருவினுடைய பரிபாகத்திற்கு அருகில் வந்துள்ள நிலையில் தாயுமானவர் இருந்தார். ஆதலால் அவருடைய கருத்துக்களையெல்லாம் சொல்லின் உதவியின்றிச் சிஷ்யர் ஏற்றுக்கொண்டார். அப்படி ஏற்றதின் விளைவாக ஞானத்தெளிவும், பரமானந்தப்பேறும் சிஷ்யர்க்கு வந்து வாய்த்தன.

இறைவா, வாய்பேசா நிலையில் இருந்து என்னை நீ ஆட்கொண்டாய். அதன் விளைவாகப் பேரறிவையும் பேரானந்தத்தையும் நான் பெறலானேன். இதற்குமேல் பெறுதற்கு என்ன இருக்கிறது என்பது இக்கண்ணியின் கருத்தாம்.

132. **என்றும் இருந்தபடிக்கு என்னை எனக்குஅளித்தது**
ஒன்றும்போ தாதோ உரையாய் பராபரமே.

ஜீவாத்மாவுக்கு ஆதிமூலமாய் இருப்பது அகண்ட சச்சிதானந்தம். அப்பெருநிலையில் இருந்து இறங்கி ஜீவர்கள் மாயாகாரியாகிய இறைவனின் திருவிளையாடலில்

ஈடுபடுவதற்குக் காரணம் கூற முடியாது. நமக்கு ஏற்படும் கனவிற்குக் காரணம் கூறமுடியாதது போலவே மாயா காரியம் ஏன் நிகழ்கிறது என்று காரணம் கூறமுடியாது.

தன்னில் தானய் இருப்பது முடிந்த நிலே. இதுவே ஈண்டு என்றும் இருந்தபடிக்கு என்னே எனக்கு நீ அளித்துள்ளாய் என்று தாயுமானவர் கூறுகிருர். உண்மையில் அதைவிடப் பெரிய பேறு ஒன்றுமில்லே. நீ எனக்கு அந்த அரிய பெரிய நிலேயைத் தந்தருளியுள்ளாய் என்பது இக் கண்ணியின் கருத்தாம்.

133. எண் திசைக்கீழ் மேல்ஆன எல்லாம் பெருவெளியாக்
கண்ட இடத்து என்னேயும் நான் கண்டேன்
பராபரமே.

வெட்டவெளியானது எட்டுத் திக்குகளாக உலகெங்கும் பரவுகிறது. அதே திசை பூமியைப் பொத்துக்கொண்டு போகுமானல் அது கீழ் எனப்படுகிறது. அதே திசை பூமியினின்று அப்பால் போகுமாகில் அது மேல் எனப்படுகிறது. எட்டுத் திக்குகள், கீழ், மேல் ஆகியவைகள் என்று கூடித் திக்குகள் பத்தாகக் கணக்கிடுவதுண்டு. துர்க்காதேவி பத்துக்கரங்களுடன் இருப்பதன் கருத்து இதுவேயாம். எட்டுத் திக்குகள், கீழே பாதாளம் ஏழினுக்கு அப்பாலும், மேலே இறைவனின் மணிமுடிக்கு மேல் இருப்பவளும் பராசக்தி. அதை நாம் நம்முடைய ஊனக்கண்கொண்டு பார்க்கும்போது ஜடாகாசமாகத் தோன்றுகிறது. இதே பெருவெளியை ஞானக்கண்கொண்டு பார்த்தால் அது சிதாகாசமாக மிளிர்கின்றது. சிதாகாசமே சிதம்பரம் எனப் படுகிறது. சிதம்பரத்திற்குப் புறம்பாகப் பொருள் ஒன்றுமில்லே. சித்து ஆபாசங்களாக உள்ள அனந்தங்கோடி ஜீவர்கள் எல்லாம் சித்து அம்பரத்திற்குப் (சிதம்பரத்திற்கு) புறம்

பானவர்கள் அல்லர். சித்து அம்பரமே சித்து ஆபாசங்களாகத் தோன்றிக்கொண்டு இருக்கிறது. அதாவது உள்ளது ஒன்று. அது பரவஸ்து. அது இகமாக வடிவெடுத்து அதில் எண்ணிறந்த ஜீவர்களாகத் தன்னைத் தோற்றுவித்துக் கொண்டிருக்கிறது. தோற்றத்தளவில் தனி வியக்தி படைத்தவர்களாகத் திகழ்கின்ற ஜீவகோடிகளில் நானும் ஒருவன் என்னும் உண்மையை இறைவா உன்னுடைய பேரருளால் நான் காணலாயினேன் என்பது இக்கண்ணியின் கருத்து.

134. பித்தனைஏ தும்அறியாப் பேதையனை ஆண்டஉனக்கு
எத்தனைதான் தெண்டன் இடுவேன் பராபரமே.

தெண்டன்—வணக்கம். ஞான சாதனத்தில் மேல்நிலைக்கு வந்துள்ள ஜீவாத்மன் ஒருவன் தான் முன்பு படைத்திருந்த கீழ்நிலைகளை எண்ணிப்பார்த்து வியப்படைகிறான். அந்த வியப்புக்கு அறிகுறியாகத் தாயுமானவர் ஈண்டுத் தம்மைப் பித்தன் என்றும், ஏதும் அறியாப் பேதையன் என்றும் பகர்கிறார்.

வஸ்துவானது தோன்றிய நிலையில் சக்தியாகவும் தோன்றாத நிலையில் சிவமாகவும் மிளிர்கிறது. சக்தியின் கூறுகள் பலப்பல. அக்கூறுகளை அறிந்துகொள்ளாது பேத புத்தியோடு பொருள்படுத்துவது பேதமையாகும். இங்ஙனம் பித்தனுடைய நிலையிலும் பேதையினுடைய நிலையிலும் இருந்த என்னை இறைவா, நீ ஆட்கொண்டு மெய்யறிஞனாக்கினாய். இதை முன்னிட்டு உனக்கு எத்தனை முறை வந்தனை செலுத்தினாலும் போதாது. உன் அருளுக்குக் கைம்மாறு இல்லை என்றுதான் இறைவா, நான் உணர வேண்டியிருக்கிறதென்பது இக்கண்ணியின் கருத்து.

135. தாயர்கர்ப்பத் தூடுஅனமும் தண்ணீரும் தந்துஅருளும்
நேயஉனை யாரே நினையார் பராபரமே.

கர்ப்பத்தூடு – கருப்பையினுள், அனமும்–அன்னமும்–சோறும்.

தாயினுடைய கர்ப்பத்திலே சிசுவானது உருவாகி வரும் செயல் ஒன்றே இறைவனுடைய பேரருளிற்குச் சிறந்த சான்றாகும். பிறந்து உலகின்கண் வந்துள்ள சிசு ஒன்றை நீர்ப்பாண்டம் ஒன்றனுள் அமுக்கிச் சில நிமிஷங்கள் வைத்திருந்தால் அச்சிசு மடிந்து போவது திண்ணம். ஆனல் அதே சிசுவானது தாயின் வயிற்றில் 'கரு' என்னும் நீர்ப்பையினுள் உருவெடுத்து வருவது அதிசயங்களுள் பேரதிசயமாகும். மானுடச் சிசு மட்டும் அல்லாது ஏனைய உயிர்வகைகளுக்குரிய சிசுக்களின் தோற்றம், வளர்ச்சி, ஜனிப்பு இவைகளின் நிலைகளை எண்ணிப் பார்ப்பவர்கள் இறைவனுடைய திருவருளைப் பாராட்டியாக வேண்டும்.

இந்த அதிசயத்தைக்கண்டு வியப்பதுவும் பரமனைப் போற்றுவதும் ஒன்றேயாம். ஜடநிலையில் இருக்கும் மாக்கள் தாம் பரமனுடைய திருவருளைப் போற்றிப் பாராட்டாது பாராமுகமாயிருப்பர். அறிவு படைத்திருக்கும் அனைவரும் இறைவனுடைய அதிசயச் செயல்களைப் போற்றிப் பாராட்டுவார்கள். அப்படிப் பாராட்டுவது வழிபாடாகும்.

136. விரிந்த மனம்ஒடுங்கும் வேளையில்நான் ஆகப்
பரந்தஅருள் வாழி பதியே பராபரமே.

அந்தக்கரணம் மனம் என்று மொழியப்படுகிறது. அண்டம் எவ்வளவு பெரியதோ அவ்வளவு பெரியதாக மனம் விரிவடைய வல்லது. எவ்வளவுக்கெவ்வளவு பெரியதாக

மனமானது விரிவடைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு பெரிதாகப் புறவுலகம் புலப்படுகிறது. வான சாஸ்திரிகள் வான வெளியை ஆராய்தற்கு ஏற்ப அவர்களுடைய மனம் விரிவடைகிறது. மனத்தை அகண்டாகார விருத்தியில் விரிவடையச் செய்யலாம் என்கிறது ஞானசாதனம். மனத்தை ஆழ்கடலிலும் ஆழமானதாகச் செய்தவர்களே ஆழ்வார்கள் ஆயினர். ஆக, மனமானது ஓர் அதிசயச் சிருஷ்டியாம். இந்த மனம் ஒடுங்குதற்கேற்ப அண்டத்தின் காட்சியும் ஒடுங்குகிறது. பின்பு மனதற்ற நிலையில் அண்டத்தின் காட்சியும் அடிபட்டுப் போகின்றது. ஆக, மனமும் அதன் துணை கொண்டு காண்கின்ற அண்டமும் இணை பிரியாதவைகள். மனத்தின் புறத்தோற்றமே அண்டம் என்று பெயர் பெறுகிறது.

மனம் செயல்புரிகின்ற வேளையில் அதற்கு ஆதாரமாக இறைவனுடைய அருள் உள்ளது. மனதற்ற நிலையிலும் இறைவனின் அருள் உள்ளது. மனத்திற்குப் போக்கு வரவு உண்டு. ஆனல் இறைவனுடைய அருளுக்கோ போக்கும் வரவும் புணர்வுமில்லை. இந்த அருளானது அகண்டமானது. அதற்கு எல்லை கட்ட யாருக்குமியலாது. இனி, அருளும் அருளாளனுகிய இறைவனும் ஒன்றேயாம். இறைவன் பதியென ஈண்டுப் பகரப்பெறுகிருன். பதியை ஆதாரமாக வைத்துக்கொண்டு அதன்மீது மனம் தோன்றவும் ஒடுங்கவும் செய்கிறது. யாண்டும் இருந்தபடி இருக்கிற பதியே போற்றுதற்குரிய பொருளாம். மனமும் அதனுடைய இனமாகிய உலகமும் ஒதுக்கித் தள்ளுதற்கு உரியவைகளாம்.

**137. சிந்தனைபோய் நான்எனல்போய்த் தேக்கஇன்ப
மாமழையை
வந்து பொழிந்தனைநீ வாழி பராபரமே.**

மனம் போன இடத்தில் அந்த மனத்தின் செயலாகிய சிந்தனையும் போய்விடுகிறது. பலப்பல எண்ணங்களே சிந்தனை என்று சொல்லப்படுகின்றன. எண்ணம் என்று அது பொருள்படுகிறது. மனத்தோடு கூடிய ஆத்மாவுக்கு ஜீவாத்மா என்றும், பசுஎன்றும் பெயர்கள் வந்துள்ளன. மனம் போன இடத்தில் ஜீவாத்மனும் மறைந்துபட்டுப் போகிறான். சமாதி நிலையில் ஒடுங்குகின்ற ஜீவாத்மா மீண்டும் உருவெடுப்பதில்லை. தேக்கவின்பம் என்பது சிதறடையாத பேரானந்தமாம். மாமழையென்பது எல்லையிலடங்காத அருள் பிரவாகமாம். நீ வந்து பொழிந்தனை என்பதன் பொருள் இருந்தபடி இருந்து உன்னுடைய பாரமார்த்திகப் பெருநிலையை நீ விளக்கிக் காட்டியருள்கின்றனையென்பதாம். போற்றுதலுக்குரிய பொருள் நீயே யாவாய் என வாழி என்னும் சொல் பொருள்படுகிறது. மனதற்ற பரிசுத்த நிலையில் பேரானந்தமே எஞ்சியிருக்கிறது. அப்பேரானந்தமே பரம்பொருள் எனப்பொருள்படுகிறது.

138. தந்தேனே ஓர்வசனம் தந்தபடிக்கு இன்பமுமாய்
வந்தேனே என்தனைநீ வாழி பராபரமே.

'தந்தேனே ஓர் வசனம்' என்னும் கோட்பாடு வேதாந்த தர்சனப்படி மஹாவாக்கியம் எனப்படுகிறது. வசனம் என்றாலும் வாக்கியம் என்றாலும் பொருள் ஒன்றே. 'தத் துவம் அஸி' என்பது வேதாந்த மஹாவாக்கியம்.

சாதகனுடைய பரிபாகத்திற்கேற்பப் பரமனே அருள் கூர்ந்து தனக்கும் சாதகனுக்கும் இடையிலுள்ள இணக்கத்தைப் பகர்ந்தருளுகிறார். அப்படிப் பகர்வது ஒரு குருமூர்த்தியின் வாயிலாக நிகழலாம் அல்லது உள்ளத்தினுள்ளேயுள்ள சாந்நித்தியத்தின்மூலம் நிகழலாம். ஒவ்வொரு சாதகனுக்கும் இந்தச் செய்தி பிழைபோகாது எட்டுகிறது. தீவிரமாகச்

சாதனத்தில் ஈடுபடுகின்றவர்களுக்கு இறைவனது அருள் வெவ்வேறு விதங்களில் முன்வந்து நிற்கிறது. அடிப்படைத் தத்துவத்தையொட்டிய ஒரு சிறந்த சொல்லே நான் பகர்ந்தேன். அதற்கேற்ப உனக்கும் எனக்கும் இடையிலுள்ள பேரானந்தப் பெருநிலையை நிரூபித்துள்ளேன்' என்று இறைவா! நீ எனக்குத் தெரிவித்துள்ளாய். அதை முன்னிட்டு நீ சாசுவதமாக வாழ்ந்திருப்பாயாக என்பது இக்கண்ணியில் அடங்கியுள்ள கருத்தாம்.

139. மண்ணும்விண்ணும் வந்து வணங்காவோ நின் [அருளைக்
கண்ணுறஉள் கண்டவரைக் கண்டால் பராபரமே.

கண்ணுற-பிரத்தியட்சமாக. உள்-உள்ளத்தினுள்ளே. கண்டவரை-அனுபூதியடையப் பெற்றவரை.

பரஞானம் (இறைவனைப்பற்றிய ஞானம்), அபரஞானம், (பிரபஞ்சத்தைப்பற்றிய ஞானம்) ஆகிய இரண்டும் வாய்க்கப் பெற்றவனே உண்மையாகக் கண்படைத்தவனாகிறான். ஜீவாத்மன் ஒருவன் அடைகிற பெருநிலைகளுள் பரஞானம் உச்ச நிலையில் இருக்கிறது. பரஞானத்தை அடைந்துள்ள ஞானி முக்கண்ணனாகிய சிவனாருக்கு நிகர். அந்த ஞானியைக் கண்ணுறஉள் என்றும் கூறலாம்.

பரஞானம் அடையப்பெற்றவன் அகம், புறம் எனாதபடி அனைத்தையும் ஒரு பொருளாகப் பார்க்கிறான். பேத புத்தி அவனிடமில்லை. மண்ணுலகில் இருப்பவர்களும் விண்ணுலகில் இருப்பவர்களும் அந்த ஞானியினுடைய ஒற்றுமையுணர்வைத் தங்கள் உள்ளத்தில் வாங்குகிறார்கள். அதனால் அவர்கள் மன அமைதி எய்துகின்றனர். அம் மன அமைதியே வழிபாடு ஆகிறது. சந்திரன் எட்ட இருந்தாலும் அதன்

வெளிச்சம் பயிர் பச்சைகளை ஓம்புகிறது. அங்ஙனம் பர ஞானி காட்சியிலிருந்தாலும் மறைந்திருந்தாலும் அவனுடைய ஞானநிலை மற்ற சாதகர்களுக்கு அருள்துறையில் தூண்டுதல் அளிக்கிறது. ஆத்மானுபூதி அமையப்பெற்ற சான்றோரை மண்ணுலகத்தவர்களும் விண்ணுலகத்தவர்களும் வணங்கு கிறார்கள் என்பது இக்கண்ணியின் கருத்தாம்.

140. என்றும் கருணைபெற்ற இன்பத் தபோதனர்சொல்
சென்றசென்ற திக்குஅனைத்தும் செல்லும் பராபரமே.

தபோதனர்-தவத்தையே செல்வமாக உடைத்திருப்ப வர். திக்கு-திசை.

மனிதனால் நாடப் பெறுபவைகளுள் உச்சத்தில் இருப் பது பாரமார்த்திகப் பெருநிலை. அதை நாடுபவன் இறை வனை அடையப் பெறுகிறான். அதைவிடப் பெரிய பேறு இல்லை. அதையடைவதற்கு உற்ற உபாயம் தபசு. தவத் தின் வாயிலாகவே மனிதன் இகத்திற்கு உரியவைகளையெல் லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டுப் பரத்திற்குத் தன்னைத் தகுதி யுடையவனாக்குகிறான். பரமோ ஒப்பு உயர்வு அற்ற செல்வம். பரத்தையடைகின்றவன் பரம்பொருள் சொரூபமாகிறான். பேரானந்தத்தில் திளைத்திருப்பது அதை அடையப்பெற் றதன் அறிகுறியாகும். பரம்பொருள் கருணாகரன். ஆத லால் பரத்தையடைகிறவன் கருணை சொரூபமாகிறான். கருணை வடிவினனாய் இருப்பவனும் யாண்டும் பேரானந்தத் திலே திளைத்திருப்பவனும் ஆகிய சான்றோன் எங்குச் சென்றா லும் மக்களுக்கு உவந்தவனாகிறான். தேன் ஈ மலரை நாடுவது போன்று நல்லார்கள் அச்சான்றோரை நாடுவார்கள். அச் சான்றோரின் சொல்லுக்கு அன்னவர்கள் இனிது செவி சாய்ப் பார்கள். இனி அச்சான்றோரின் சொல்லோ ஆப்தவாக்கியம்

என்று இயம்பப்படுகிறது. நிறைமொழி என்றும் அதை நவிலலாம். மக்களுக்கு அந்நிறைமொழி நலன் தருவதாகும். கருணை, ஆனந்தம், தபசு ஆகியவைகளைத் தன்பால்கொண்டுள்ள ஆத்யானுபூதி அடையப்பெற்ற சான்றோரின் இன்சொல் எங்கும் எல்லார்க்குமே ஏற்புடையதாகும் என்பது இக்கண்ணியின் கருத்தாம்.

141. ஆடுவதும் பாடுவதும் ஆனந்தம் ஆகநின்னைத்
தேடுவதும் நின்அடியார் செய்கை பராபரமே.

பரம்பொருளை அடைதற்குப் பாதைகள் பலவுள. அவைகளைத் தொகுத்து இயம்புங்கால் கர்மயோகம், இராஜயோகம், பக்தியோகம், ஞானயோகம் என நான்கு யோகங்களாக அப்பாதைகள் வடிவெடுக்கின்றன. அந்நான்கினுள் பக்தியோகத்தின் பாங்கு ஈண்டுப் பகரப்பெறுகிறது. இறைவனிடத்துப் பேரன்பு வைப்பது பக்தியோகமாகும். அன்பு ஓங்குதற்கு ஏற்ப அது இன்பமாகப் பரிணமிக்கிறது. மேலோங்கிய இன்பம் ஆட்டமாக வடிவெடுக்கிறது. இன்பம் நிறைந்த சிசு துள்ளிக்குதித்து ஆடுவது போன்று பக்தன் ஆண்டவனின் அருளில் ஊறியவனாக ஆடுகிறான். அது சிவனாரின் நடனத்திற்கு நிகரானது.

ஆடுவது போன்று பாடுவது எல்லாருக்கும் சாத்தியமன்று. இசையும் தாளமும் பொருந்திய பாடலே சரியான பாடலாக அங்கீகரிக்கப்படுகிறது. பக்தர்களுள் சிலருக்கு முறையாகப் பாடும் திறமை வாய்க்கிறது. ஆடலும் பாடலும் ஒன்றோடொன்று இசைந்திருக்குமாகில் அது சிவனாரின் ஆனந்தத் தாண்டவத்திற்கு நிகராகிறது. இறைவனுடைய திருநாமத்தை மனம் ஒன்றி உச்சரிப்பதும் நன்கு பாடுவதற்கு நிகராகிறது.

பக்தனின் மனம் திருவருளை நாடுதலை ஈண்டுத் தேடுதல் எனக் குறிப்பிடப்படுகிறது. பக்தர்கள் யாண்டும் இறைவனின் திருவடியையே சிந்திப்பதால் அவர்கள் அடியார்கள் என இயம்பப்படுகிறார்கள். அடியார்களின் அடையாளம் இக்கண்ணியில் நன்கு இயம்பப்பட்டுள்ளது. ஈண்டு இயம்பியுள்ளபடி அடியார்களாக முயலுகின்றவர்கள் பாக்கியவான்கள்.

142. பொங்கிய நின் தண் அருளைப் புஷ்கலமாப்
பெற்றவர்கட்கு
எங்குஎழுந்துஎன் ஞாயிறு இயம்பாய் பராபரமே.

பொங்கிய–ததும்பி எழுந்த. தண் அருளை–இனிய குளிர்ச்சி பொருந்திய திருவருளை. புட்கலமாய்–புஷ்கலமாய்–நிறைவாய். ஞாயிறு–சூரியன். இயம்பாய்–சொல்வாயாக.

கரைகாணாது எங்கும் வியாபித்து வருகிற இறைவனின் பேரருளைப் பொங்கிய அருள் என்று பகர்வது பொருத்தமானது. மனத்தின்கண் நிறைவை உண்டுபண்ணுதலால் திருவருள் புஷ்கலம் எனப் போற்றப்படுகிறது.

இறைவனுடைய பேரருளை அடையப் பெற்றவர்கள் இயற்கையின் நிகழ்ச்சி எதையும் பெருமைப்படுத்துவதோ சிறுமைப்படுத்துவதோ கிடையாது. மேல் கீழ் நடு என்பனவும் அவர்கட்கு இல்லை. அன்னவர்களுக்கு யாவும் பேரருள் மயமாம். இறைவனின் பேரருளில் இனிது ஊறி இருக்கின்றவர்களுக்கு உலகக் காட்சியும் உலகின் ஒழுங்கான நடைமுறையும் மறைந்து போகின்றன. சூரியன் எப்போது எத்திசையில் உதிக்கிறான் என்பதை அன்னவர்கள் கருத்தில் வாங்குவதில்லை என்பது இதன் பொருள்.

143. பாலரொடு பேயர்பித்தர் பான்மைஎன நிற்பதுவே
சீலம்மிகு ஞானியர்தம் செய்கை பராபரமே.

பாலர்-சிறு குழந்தைகள். பேயர்-மனநோயில் மிக வருந்திக்கொண்டு இருப்பவர்கள். பித்தர்-மனநோயையும் அறிந்து கொள்ளமுடியாத தடுமாற்றத்தில் இருப்பவர்கள். சீலம்மிகு-நல்லொழுக்கத்தில் முற்றிலும் ஈடுபட்டுள்ளவர்கள்.

பரிபூரணநிலையை அடைந்திருப்பவர்கள் ஞானியர் என இயம்பப்படுகின்றனர். நிறைவு அனைத்தையும் அவர்கள் பால் காணலாம். நல்லொழுக்கத்துக்கும் அவர்களே சான்று ஆகின்றனர். மறந்தும் புல்லிய இயல்புகள் அவர்களிடத் திருந்து வடிவெடுக்க மாட்டா. சிற்றியல்புகள் உள்ளத்தி னுள்ளே மறைந்து கிடந்தாலும் அவர்கள் ஞானத்திற்குத் தகுதியுடையவர்கள் ஆகமாட்டார்கள். மனம், மொழி, மெய் ஆகிய திரிகரணங்களில் தூய்மையடைந்துள்ளவர்கள் ஆகின்றனர். அன்னவர்கள் ஞானத்திற்குப் பரிபாகம் ஆகிக் கொண்டிருக்கின்றபொழுதும் ஞானத்தை முற்றிலும் அடைந்தான பிறகும் புறத்தோற்றத்தில் அவர்கள் சிறுகுழந்தைகள் போன்றோ பேய் பிடித்தவர் போன்றோ பித்துப்பிடித்தவர் போன்றோ தென்படலாம். இந்த மூன்று பாங்குகள் படைத் திருப்பவர்களுக்குள்ள சில அறிகுறிகள் ஞானியர்களிடத்தி லும் அமைந்துள்ளன. ஆயினும் நிறைஞானிகளுக்கும் இந்த மூன்றுவித மக்களுக்கும் இடையில் வெகுதூரமாம். பாலர், பேயர், பித்தர் ஆகிய பாங்குகளில் வாழும் ஞானியர்களைப் பயன்படுத்திப் பெருநிலையை அடைய ஆத்மசாதகர்கள் முயலுகின்றனர்.

144. உண்டுஉடுத்துப் பூண்டுஇங்கு உலகத்தார்
போல்திரியும்
தொண்டர்வினை யாட்டே சுகம்காண் பராபரமே.

பரஞானம் அடையப்பெற்றவர்கள் தொண்டர் என ஈண்டு இயம்பப் பெறுகின்றனர். தன்னை உடல் சொரூப மாக உணர்வது உலக ஞானம். தன்னை ஆத்ம சொரூப மாக உணர்வது பரஞானம்.

சாதாரணப் பொதுமக்களைப் போன்றே ஞானியர் களும் உண்பது உடுப்பது அணிகள் அணிவது ஆகிய செயல்களைச் செய்கின்றனர். உலகத்தவர்களுக்கு, தேசாபி மானம் கொண்டவர்களுக்கு ஆடம்பரமான உடையணிந்திருக் கும்பொழுது பகட்டான மனப்பான்மை வந்தமைகிறது. கந்தல் உடையணிந்திருக்கின்றபொழுது நாணம்கொள்ளும் பான்மை வடிவெடுக்கிறது. இத்தகைய மன விகாரம் பர ஞானம் அடையப்பெற்றவர்களுக்கு இல்லை. ஊருடன் கூடி வாழ் என்னும் கோட்பாட்டிற்கு ஒப்ப உலகத்தவர்களின் வசதிக்காக அவர்கள் ஏதேனும் ஓர் உடையை அணிகின் றனர். பிராரப்த கர்மமாக வாய்த்த உணவை இறைவனுக்கு அர்ப்பணம் பண்ணும் பாங்கில் உண்கின்றனர். சுவை பார்த்து அன்னவர்கள் உண்பதில்லை. உண்பதற்கு இடை யில் உண்ணுவதைப்பற்றிய உணர்ச்சியின்றி (மஹா போக் தாக்களாக) இருக்கின்றனர். பூணுதல் என்னும் பதம் அணிகள் அணிந்துகொள்வதற்கு ஏற்றதாகிறது. சமயச் சின்னங்களை அணிவதற்கும் ஏற்றதாகிறது. சமயச் சின் னங்களுள் எதை வேண்டுமானாலும் ஞானியர்கள் அணிகின் றனர்; அல்லது அணியாதிருக்கின்றனர்.

உண்பது உடுப்பது அணிவது ஆகிய செயல்கள் ஆன் றோர்களின் உள்ளத்தில் எந்த விதமான விகாரத்தையும் உண்டுபண்ணுவதில்லை. இவையாவிலும் தட்டுப்படாதவர் களாக அவர்கள் இருக்கின்றனர். உலகத்தவர்கள்போன்று அவைகளைப் பயன்படுத்துவது அவர்களுக்கு விளையாட்டாக

இருக்கிறது. அவைகள் வாய்க்காவிடில் உலகத்தவர்களுக் குத் திண்டாட்டம். ஞானியர்களுக்கோ அவைகள் வாய்க் காது போவது ஒரு விளையாட்டு. உலகத்தவர்களின் நியதி களில் பரஞானிகள் கட்டுப்படுவதில்லை என்பது இக்கண்ணி யின் கருத்து.

145. கங்குல்பகல் அற்றதிருக் காட்சியர்கள் கண்டவழி
எங்கும் ஒருவழியே எந்தாய் பராபரமே.

கங்குல்—இரவு. பகல்—சூரிய வெளிச்சத்தோடு சேர்ந்த நேரம்.

கங்குல் பகலற்ற திருக்காட்சி என்பது பரஞானத்தைக் குறிக்கிறது. பரவஸ்து காலத்தில் கட்டுப்பட்டதன்று. இர வும் பகலும் காலத்தின் கூறுகள். உடல் வாழ்க்கை காலத் திற்கு ஏற்றவாறு அமைக்கப்பெறுகிறது. உடலை உறங்கப் போடுவது இரவில். அதற்கு வேலை கொடுப்பது பகலில். ஆத்மாவோ காலத்தில் கட்டுப்படாதது. இரவு பகல் என் னும் நிலைகள் அதைப் பாதிப்பதில்லை. பரஞானத்தை அடைந்தவர்களின் நிலையும் அத்தகையதேயாம். சமயங்கள் பல இருக்கின்றன. ஒவ்வொரு சமயமும் பரத்தை அடைவ தற்கான வழியாகிறது. சமயங்களை நிறுவியவர்கள் எல்லாரும் பரஞானம் அடையப்பெற்றவர்கள் ஆகின்றனர். அன்னவர்கள் பலப்பல சமயங்களை நிறுவியிருக்கின்றனர். எனினும் அவையாவும் பரம்பொருளை அடைவதற்கான வழி கள் ஆகின்றன. காலதேச வர்த்தமானத்தை முன்னிட்டு அவைகள் பல வழிகள் எனப் பகரப்பெறுகின்றன. பரமனை அடைதல் முன்னிட்டு அவையாவும் ஒரே வழியென்று விளக் கப்படுகின்றன. மலை அடிவாரத்தில் மேலே ஏறுதற்கு வழி கள் பல இருக்கலாம். மலையுச்சியைக் கருத்தில் வைக்குங் கால் மலை ஏறுதல் என்னும் வழி மலையுச்சியை அடைவதற்கு

உற்ற உபாயம் என்று இயம்பப்படுகிறது. பரநாட்டமும் அத்தகையது.

146. காயம்நிலை அல்லஎன்று காண்பார் உறங்குவரோ
தூயஅருள் பற்றுத் தொடர்வார் பராபரமே.

காயம்-உடல். தோன்றின யாவும் அழியும். நமது உடல் நிலையும் அத்தகையது. உடல் அழியும் என்னும் உணர்வு பெற்றவர்கள் கண் உறங்குவாரோ? என்பதின் கருத்து உறக்கத்தின் வாயிலாக உடலிற்கு ஓய்வு தரமாட்டார்கள் என்பதன்று. உறக்கம் உடலைப் பாதுகாக்கிறது. உடலிற் குரிய உறக்கத்தை மேற்கொள்ளுதற்கிடையில் அது தானாக அழிந்துபட்டுப்போவதற்கு முன்பு பரநாட்டத்தில் அன்னவர் கள் வெகு தீவிரமாக ஈடுபடுகின்றனர் என்பதாம்.

பரீட்சித்தை இதற்குச் சான்றாக எடுத்துக்கொள்ள லாம். ஏழுநாளில் தன்சரீரம் அழிந்துபட்டுப் போகும் என் னும் உண்மையை அவன் அறிந்துகொண்டான். ஏழுநாள் அவனுக்குப் போதுமான அவகாசம் ஆயிற்று. அதற்குள்ளா கத் தன்னைத் தீவிரமாகப் பக்குவப்படுத்திக்கொண்டான். பிறகு உடலை உகுப்பது எளிதாயிற்று. பழுதுபட்டுப்போன உடையை நாம் களைவது போன்று உடலைத் துடைத்துத் தள்ளிவிட்டுப் பரீட்சித்துப் பரகதியடைந்தான். ஆத்மபோதம் அடையப்பெற்றவர்கள் அங்ஙனம் செய்கின்றனர். அருள் நிலையை அவர்கள் ஆழ்ந்து பற்றிப் பிடிக்கின்றனர். அவ் வுணர்விலேயே அவர்கள் நிலைபெற்றிருக்கின்றனர். பிறகு உடல் வாழ்க்கை பிராரப்த கர்மத்திற்கு ஏற்பத் தற்செயலாய் நிகழ்கிறது. உடலுக்குரிய உறக்கம் விழிப்பு முதலியன ஆத்மபோதத்தைத் தொடுவதில்லை. அருள்பற்றிலேயே அன்னவர்கள் நிலைபெற்றிருக்கிறார்கள். இதுவே இக்கண்ணி யின் கருத்தாம்.

147. அப்பும்உப்பும் போன்ற அயிக்கியபரா னந்தர் தமக்கு
ஒப்புஉவமை சொல்லவும்வாய் உண்டோ பராபரமே.

உப்பானது நீரில் கலக்கப்பெறும்பொழுது தனக்குள்ள வடிவத்தையும் வெண்மை நிறத்தையும் இழக்கிறது. உபாசகனுகிய ஜீவாத்மாவானது ஜீவ இயல்புகளோடு இருக்கிறது. உபாசனுமூர்த்தி அல்லது வழிபடு தெய்வத்தோடு இணக்கம் வைப்பதற்கேற்ப அந்த ஜீவன் தன்னுடைய சிற்றியல்புகளை ஒன்றன்பின் ஒன்ருக இழக்கிறது. உபாசனுமூர்த்தியினிடத்திலுள்ள பேரியல்புகளை அது ஒன்றன்பின் ஒன்ருகப் பெறுகிறது. இறுதியில் அது முற்றிலும் உபாசனுமூர்த்திமயமாகத் திருந்தி அமைகிறது. உபாசனுமூர்த்தியில் ஒன்றுபடுகிறது. சாதகனின் உபாசனைக்கு ஏற்ப அமைதியும் ஆனந்தமும் ஓங்குகின்றன. இறுதியில் ஆனந்தத்தில் சாதகன் ஒன்றுபடுகிருன். ஆனந்தத்தில் இருந்து ஜீவாத்மனைப் பிரித்து எடுக்க முடியாது. பரத்தில் ஜீவன் ஒன்றுபடுவதால் அந்த ஜீவனுக்கு ஒப்போ உவமையோ கூற முடியாது.

இறைவா, நான் உன்னையே உபாசித்து உப்பானது நீரில் ஐக்கியமாவது போன்று முற்றிலும் உன்மயம் ஆவதற்கு அருள் புரிவாயாக என்பது இக்கண்ணியின் கருத்து.

148. சித்தம் தெளிந்து சிவம்ஆனோர் எல்லோர்க்கும்
கொத்தடிமை ஆன குடிநான் பராபரமே.

கொத்து + அடிமை = கொத்தடிமை. கொத்தடிமை என்பது குடும்பம் முழுதும் பரம்பரையாக அடிமையாதல் என்பதாம். சித்தத்தோடு கூடியிருப்பவன் ஜீவாத்மன். சித்தம் என்பது மனம் அல்லது அந்தக்கரணம். அது குறை நிலையில் இருக்கிறது. குறைநிலையைச் சித்த மலம்

என்கிருேம். சித்தத்திலுள்ள மலத்தை நீக்க நமக்கு இயலும். அழுக்கு நீரை ஆவியாக மாற்றி உறையும்படி செய்தால் நன்னீராகிறது. அதேபோல் தவத்தின் வாயிலாகச் சித்தத்திலுள்ள சிறுமைகளை நீக்கிப் பெருநிலையாகிய சிவ நிலையை அடைய ஜீவனுக்கு இயலும். அவ்வாறு ஆன்ருேர்கள் தங்கள் சித்தத்திலுள்ள சிறுமைகளைக் களைந்து சிவநிலை எய்தியுள்ளனர். அப்பெருநிலை அடைந்த ஆன்ருேர்களுக்குப் பணிவிடை செய்கின்றவர்கள் நல்ல ஆத்ம சாதகர்கள் ஆகின்றனர். ஆன்ருேர்களுக்குத் தொண்டு புரிதலும் இறைவனுக்குத் தொண்டு புரிதலும் ஒன்றேயாம். பரம்பொருளே, நானும் உன்னடியவர்களுக்கு யாண்டும் பணிவிடை செய்து, அதன் வாயிலாக அவர்களுக்கும் உனக்கும் சொந்தம் ஆவேனாக.

149. **தம்உயிர்போல் எவ்உயிரும் தான்என்று**
தண்அருள்கூர்
செம்மையருக்கு ஏவல்என்று செய்வேன் பராபரமே.

தண்ணருள்—தண்மை + அருள். இனிமையோடுகூடிய அருள். கூர்—மிகுதி. செம்மையர்—நல்லொழுக்கமுடையவர். ஏவல்—பணிவிடை.

சான்ருேர்களிடத்துப் பேரியல்புகள் பல இருக்கின்றன. அவைகளுள் முக்கியமானது உயிர்கள் அனைத்தையும் ஒரே பாங்கில் நேசிப்பதாம். அரக்க இயல்பு படைத்த உயிர்கள் தங்களுக்குப் புறம்பானவைகளுக்குச் சதா தீங்கு செய்து கொண்டு இருக்கின்றன. அரக்க இயல்பைத் தாண்டி மானுட இயல்புக்கு வந்துள்ள ஜீவர்கள் தங்களுக்கு ஒத்துள்ள நல்ல உயிர்களுக்கு நலன் செய்கின்றனர்; துஷ்ட உயிர்களுக்குத் தீங்கு செய்கின்றனர். இனி, அருள்நிலையை எட்டியுள்ள நல்லோர் எவ்வுயிர்க்கும் தீங்கு செய்வதில்லை,

எல்லா நிலைகளிலுமுள்ள ஒவ்வொரு ஜீவனும் தன்னைத் தானே கண்ணுங்கருத்துமாய் ஓம்புவது போன்று மேலோர் உலகிலுள்ள உயிர்கள் அனைத்தையும் தங்களுடைய சொந்த சொரூபமாகவே கருதி அன்பு பாராட்டுகின்றனர். அத்தகைய அன்பே தண்மை + அருள் என்று ஈண்டு இயம்பப்பெறுகிறது. இனி, தண்ணருள்கூர் என்பது பேரன்பு நிறைந்திருத்தல் என்பதாம். பரமனே உயிரனைத்துமாய் மிளிர்கிறான் என்பதை அறிகிறவர்கள் அவை யாவற்றையும் நேசிக்கின்றனர். அத்தகைய அஹிம்சாமூர்த்திகளாகிய நல்லார்க்குப் பணிவிடை செய்வதும் நல்ல ஆத்மசாதனமாகிறது. அங்ஙனம் அவர்களுக்குக் குற்றேவல்புரிய எனக்கு அனுக்கிரகம் செய்வாயாக என்பது இக்கண்ணியில் அடங்கியுள்ள கருத்து.

150. விண்ணுக்கும் விண் ஆகி மேவும்உனக்கு யான்பூஜை
பண்ணிநிற்கும் ஆறு பகராய் பராபரமே.

விண்ணுக்கு-பூத ஆகாசத்துக்கு. விண்ணாகி-சித் ஆகாசம் ஆகி. மேவுதல்-பொருந்துதல்.

தெரிந்துள்ள ஒன்றை உபமானமாக எடுத்துக்கொண்டு தெரியாத ஒன்றைத் தெரிந்துகொள்ள முயல்வது கல்வியின் நோக்கமாகும். ஜட ஆகாசம் என்று சொல்லப்படுகின்ற வெட்டவெளி நமக்குக் கட்புலனாகிறது. இந்த ஜட ஆகாசத்தை ஆழ்ந்து எண்ணிப் பார்ப்பது முற்றிலும் அவசியம். அது அகண்டாகாரத்தில் விரிந்து ஓடிக்கொண்டேயிருக்கிறது. எவ்வளவு தூரம் நம் கற்பனையைச் செலுத்தினாலும் அதற்கு அப்பாலும் அது போய்க்கொண்டேயிருக்கிறது. ஆகையால் அந்த ஜட ஆகாசத்தை அகண்ட வஸ்து என்று இயம்புவது பொருந்தும். இனி, அதே ஜட ஆகாசத்தைச் சித் ஆகாசமாகப் பாவிப்பது பொருந்தும். ஏனென்றால் ஜடம்

என்று சொல்லப்படுவதும் சித்தினுடைய ஒரு கூறு ஆகும். நமக்கு ஜட ஆகாசமாய் இருப்பது நிறை ஞானிக்கு சித் ஆகாசம் ஆகிறது. சித் ஆகாசம் ஜட ஆகாசமாக அஞ்ஞானிகளுக்குத் தோன்றிக்கொண்டிருக்கிறது. பின்பு அனைத்தையும் சித் ஆகாசமாக அல்லது சிதம்பரமாகக் கருதுவது தலைசிறந்த சிவபூஜை ஆகிறது. அத்தகைய பெரிய வழிபாட்டில் இறைவா! என்னை ஈடுபடுத்துவாயாக என்பது இக்கண்ணியில் அடங்கியுள்ள கருத்தாகும்.

151. நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே
மஞ்சன நீர் பூசைகொள்ள வாராய் பராபரமே.

வழிபாட்டில் இரண்டு முறைகள் உண்டு. ஒன்று பாகிய பூஜை. மற்றது மானச பூஜை. பாகிய பூஜையில் மூர்த்தியைப் புறத்தில் ஓர் ஆலயத்தில் எழுந்தருளப் பண்ணு கிறோம். மானச பூஜையில் அந்த மூர்த்தியின் சாந்நித்தி யத்தை உள்ளத்தின் உள்ளே உணர முயலுகின்றோம். பாகிய பூஜையில் புறத்தில் கட்டுவிக்கப்பட்டது கோவில். மானச பூஜையில் உள்ளமே கோவில் ஆகிறது. பாகிய பூஜையில் சாம்பிராணி போன்ற வாசனைப் பொருள்கள் சுகந்தமாகின்றன. மானச பூஜையில் மேலான எண்ணமே சுகந்தமாகிறது. பாகிய பூஜையில் வாசனை தீட்டப்பெற்ற மஞ்சனநீர் அபிஷேகத்துக்குரியது ஆகிறது. மானச பூஜை யிலோ உள்ளத்தில் ஊற்றெடுக்கும் அன்பே அபிஷேகத்துக் குரிய நன்னீர் ஆகிறது. பாகிய பூஜையைப் பார்த்துப் பக்தியை வளர்ப்பவர்கள் மானச பூஜையில் ஈடுபட்டுப் பழக வேண்டும். மானச பூஜை யாண்டும் பாகிய பூஜையைவிட மேலானது. இறைவா, நான் மானச பூஜையில் ஆழ்ந்து ஈடு பட விரும்புகின்றேன். கிருபை கூர்ந்து அப்பூஜையை ஏற் றுக்கொள்வாயாக.

**152. கெட்டவழி ஆணவப்பேய் கீழ்ஆக மேல்ஆன
சிஷ்டர் உனைப்பூஜை செய்வார் பராபரமே.**

மனிதனைச் சிறுநெறியில் தூண்டவல்லது ஆணவம். அது பேயோடு ஒப்பிடப்படுகிறது. துஷ்டத்தனம் கொண்டுள்ளவன் பேய் என்று பகரப் பெறுகிறான். கீழ்மைகள் அனைத்தும் ஆணவம் அல்லது செருக்குப் படைத்திருப்பவனிடத்து இருக்கின்றன. அக்கீழ்மைகளை அகற்றுதற்குக் கீழ்மை போகவேண்டும் என்று எதிர்மறை எண்ணம் பூண்டிருப்பது போதாது. இருள் சூழ்ந்துள்ள அறையினின்று இருளை அகற்ற வேண்டுமெனப் பேசிக்கொண்டிருப்பதில் பயனில்லை. விளக்கைக் கொண்டுவந்தால் இருள் இருக்குமிடம் தெரியாது மறைந்துபட்டுப்போகிறது. விளக்கைக் கொண்டு வருவது உடன்பாட்டு முயற்சி. இருள் போக வேண்டுமென பேசிக்கொண்டிருப்பது எதிர்மறை முயற்சி. எப்பொழுதும் உடன்பாட்டு முயற்சியே நலன்தர வல்லது. செருக்கு முதலிய துஷ்டத்தனங்களை நீக்கவேண்டுமென எத்தனிக்கையில் பழைய துஷ்டத்தனம் ஏதேனும் ஒரு புதிய வடிவெடுத்து ஆதிக்கம் செலுத்துகிறது. ஆணவப் பேயை அகற்ற முயலுதற்கு மாறாகத் தீவிரமாகக் கடவுள் வழிபாட்டில் கருத்தைச் செலுத்த வேண்டும். பெருமக்கள் எல்லாரும் கடவுள் வழிபாட்டின் வாயிலாகவே பெருநிலை அடைந்திருக்கின்றனர். இறைவா! மேலோர்களைப் பின்பற்றி நானும் உனக்குப் பேரார்வத்தோடு வந்தனை வழிபாடு செய்கின்றேன். அப்படி வழிபடுகின்றவர்களிடமிருந்து துன்மார்க்கங்கள் யாவும் தாமாகவே அழிந்துபட்டுப் போகின்றன. நான் உன் வழிபாட்டிலேயே மூழ்கியிருக்குமாறு அருள்புரிவாயாக என்பது இக்கண்ணியின் கருத்து.

153. கால்பிடித்து மூலக் கனலைமதி மண்டலத்தின்
மேல்எழுப்பில் தேகம் விழுமோ பராபரமே.

யோகசாதனத்தை அடிப்படையாகக் கொண்டது இக் கண்ணி. கால் என்பது வாயு. கால்பிடித்தல் பிராணயாமம் என்னும் சாதனமாகிறது. முறையாகப் பூரகம், கும்பகம், ரேசகம் என்னும் பிராணயாமச் சாதனத்தைச் சாதகன் ஒருவன் செய்து வரவேண்டும். தடுமாற்றம் இல்லாது ஒழுங் குப்பாட்டோடு வாயுவை நிதானமாக நாசியின் வாயிலாக உள்ளே வாங்குவது பூரகம். உள்ளே வாங்கிய சுவாசத்தைச் சிரமப்படாது சில வினுடிகள் உள்ளே அடக்கி வைப்பது கும்பகம். பின்பு நிதானமாக அம்மூச்சை வெளிப்படுத்துவது ரேசகம். இந்தப் பிராணயாம சாதனத்தை முறைவழுவி முரட்டுத்தனமாகக் கையாண்டால் மண்டையிடி, நரம்புத் தளர்ச்சி, உடல் நடுக்கம் முதலிய நோய்கள் உண்டாகும். ஆதலால் இந்தச் சாதனத்தின் கடுமையான பகுதிகளில் யாரும் ஈடுபடலாகாது. இனிமையும் அமைதியும் வ ய்ந்த எளிய முறையில் ஆழ்ந்து அளந்து மூச்சை வாங்கு வதும் விடுவதும் கேடு செய்யமாட்டா. இயல்பாக நாம் எல்லாரும் சுவாசித்துக் கொண்டிருக்கிறோம். அப்படிச் சுவாசிப்பதைப் படபடப்பில்லாது ஒழுங்குப்பாட்டோடு செய்து வருவது நல்ல பிராணயாமம் ஆகும்.

மானுட சரீரத்தில் ஷட் சக்கரம் என்றும் ஷட் ஆதாரம் என்றும் பகரப்பெறுகிற ஆறு இடங்கள் உண்டு. அவை களுள் அடியில் இருப்பது மூலாதாரம். அது குறிக்கும் குய்யத்திற்கும் இடையில் இருக்கிறது. ஆங்குக் குண்டலினி என்னும் பெயர் பெற்றுள்ள தெய்வீக சக்தி மறைந்து கிடக் கிறது. பிரம்மச்சரிய விரதத்தில் நிலைபெறுகின்றவர்களுக்கு அந்தச் சக்தி உருவெடுக்கிறது. முற்றிலும் உருவெடுத்திருக்

கும் குண்டலினியிடத்துத் தனிக் கதகதப்பு ஒன்று உண்டு. அக்கதகதப்புக் கனல் என்று ஈண்டுப் பகரப்பட்டிருக்கிறது. அது ஆனந்தத்தை விளைவிக்கும் கதகதப்பாகிறது. அக்கதகதப்போடு கூடிய குண்டலினி சக்தியானது சர்ப்பம் போன்று வளைந்து வளைந்து சுஷும்னை நாடியின் வழியாக மேல் நோக்கிப் போகிறது. ஆங்குள்ள ஆறு சக்கரங்களையும் அச்சக்தியானது எட்டுகின்றபொழுது யோகி பலப்பலத் தெய்வீக அனுபவங்களைப் பெறுகிறான். ஆறாவது சக்கரம் ஆக்ஞை என்னும் பெயர் பெற்று நெற்றியிலே புருவங்களுக்கிடையிலே இருக்கிறது. அந்த ஆறாவது சக்கரத்தைக் குண்டலினி சக்தி எட்டுகிற வரையில் யோகி தன்னுடைய ஜீவ வியக்தியை வைத்திருக்கின்றான். உச்சந் தலையில் இருக்கும் ஏழாவது ஞான பூமிக்குச் சகஸ்ராரம் என்னும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மதிமண்டலம் என்பது மற்றொரு பெயர். சந்திரலோகம் என அது பொருள்படுகிறது. புறத்திலே தென்படுகிற சந்திரன் என்று அதை வைத்துக்கொள்ளலாகாது. அகத்திலே சிவனார்க்குரிய பீடமாகிறது அது. குண்டலினி சக்தி அந்த ஏழாவது ஞான பூமியை எட்டும் பொழுது ஜீவாத்மன் பரமாத்மனில் ஒன்றுபடுகிறான். அந்நிலையை எட்டியவனுக்கு உடல் இருப்பதும் அழிந்துபட்டுப் போவதும் தெரியாது. தேகம் செத்துவிடுவதற்கு முன்பே யோகி பரம் பொருளில் ஒன்றுபட்டுவிடுகிறான். அப்படிப் பரத்தில் ஒன்றுபடுகிற பாங்கை இறைவா, எனக்குத் தந்தருள்வாயாக என்னும் பிரார்த்தனை இக்கண்ணியில் அடங்கி இருக்கிறது.

154. பஞ்சசுத்திசெய்து நின்னைப் பாவித்துப்
பூஜைசெய்தால்
விஞ்சிய ஞானம் விளங்கும் பராபரமே.

பஞ்சசுத்தி என்னும் சாதனத்தைச் சாதகர் பலர் பலவிதங்களில் பொருள்படுத்துகின்றனர். பொருத்தமான வியாக்கியானம் மூன்று கூறுகளாகப் பிரிவுபடுகிறது. அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விக்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம் ஆகிய ஐந்து கோசங்களையும் தூய்மைப்படுத்துதல் பஞ்சசுத்தி ஆகிறது. நிலம், நீர், நெருப்பு, வாயு, ஆகாசம் ஆகிய ஐந்து பூதங்களைக் கொண்டு அமைந்திருப்பது இவ்வுடல். இந்த ஐந்து பூதங்களை முறையாகக் கையாளுவது பஞ்சசுத்தி ஆகிறது. இனி, சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் பெயர் பெற்றுள்ள ஐம்பொறிகளைப் பண்படுத்துவதும் பஞ்சசுத்தி எனப் பெயர் பெறுகிறது. நெறியான வாழ்க்கையின் மூலமாக மனிதன் தன் அமைப்பைப் புனிதம் வாய்ந்ததாகப் பண்படுத்திக் கொள்ளமுடியும். அப்பொழுது பஞ்சசுத்தி என்னும் சாதனம் நன்கு பூர்த்தியாகிறது. அதைத் தொடர்ந்து பரமனைப் பற்றிய சிந்தனையே சர்வகாலமும் உள்ளத்தில் குடிகொண்டிருக்க வேண்டும். பாவித்தல் என்பது ஆழ்ந்து கடவுள் எண்ணத்தில் ஈடுபடுதலாகப் பொருள் படுகிறது. அங்ஙனம் கடவுள் எண்ணத்தில் மூழ்கியிருப்பது உண்மையான பூஜை அல்லது வழிபாடு ஆகிறது. வழிபாடு அங்ஙனம் நிலைபேறு எய்துதற்கு ஏற்ப மேலான பரஞானம் உதயமாகிறது. அந்தப் பரஞானமே சிவஞானம் என்றும் பிரம்மஞானம் என்றும் பெயர் பெறுகிறது. அத்தகைய ஞானத்தை அடையப்பெறுகிறவனுக்கு ஜீவபோதம் அழிந்துபட்டுப் போகிறது. ஜீவன் பரத்தில் லயமாகிறான்.

155. அன்பர்பணி செய்யஎனை ஆள்ஆக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந்து எய்தும் பராபரமே.

சிலர் மானுடரனைவரையும் (நல்லவர்கள், கெட்டவர்கள்) கடவுளின் சொரூபமாகக் கருதிப் பிரதிபலன் எதிர்பாராது

பணிவிடை பண்ணுகிருர்கள். மற்றும் சிலர் அங்கவீனர்களுக்கும், நோயாளிகளுக்கும், வறியவர்களுக்கும் பணிவிடை பண்ணுகிருர்கள்.

ஈண்டு அன்பர்பணி எனக் குறிப்பிடுவது இறைவனிடத்துப் பக்தி பூண்டு உள்ள தொண்டர்களுக்குச் செய்கின்ற சேவையாகும். இறைவனிடம் பேரன்பு பூண்டவர்கள் அல்லும் பகலும் இறை நாட்டத்திலே இருப்பதால் தங்களின் தேவையில் கருத்துச் செலுத்தாதவர்களாகவும் தேவையைக் கவனிக்க நேரமில்லாதவர்களாகவும் இருக்கிருர்கள். ஆகையால் அவர்களுடைய சம்ரக்ஷணையைக் குறித்துப் பணிவிடை பண்ணுவது சிறந்த கைங்கரியம் ஆகிறது.

மானுடன் ஒருவன் யாருக்காகப் பணிவிடை பண்ணுகிருனே அதனின்று அவனுடைய வாழ்க்கையின் குறிக்கோள் வெளியாகிறது. ஒரு சிலர் பெரிய பதவி வகிக்கின்றவர்களுக்கும் கற்றவர்களுக்கும் பணிவிடை பண்ணுகின்ருர்கள். யாவற்றிற்கும் மேலானது அன்பர் பணி. அன்பர் பணியும்ஆண்டவன் பணியும் ஒன்றே. ஆண்டவனை வழுத்துவதால் வருகின்ற நலன்கள் யாவும் அன்பர் பணியினின்றும் வருகின்றன. பகவானும் பக்தனும் ஒன்றே என்பது கோட்பாடு. ஆதலால் பக்தர்களுக்குச் செய்கின்ற பணிவிடை சிறந்த கடவுள் வழிபாடு ஆகிறது. அவ்வாறு செய்கின்ற பணிவிடையின் வாயிலாக இன்ப நிலை அல்லது பரமானந்தம் தானுக வந்தமைகிறது. அன்டர்களுக்குப் பணிவிடை பண்ணும் பாக்கியம் கொடுத்தருளவேண்டுமென இக்கண்ணியின் வாயிலாகத் தாயுமானவர் வேண்டுகின்ருர்.

156. மூர்த்திதலம் தீர்த்தம் முறையால்
தொடங்கினர்க்குஓர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே.

கோயிலிலே பிரதிஷ்டை பண்ணப் பெற்றிருக்கும் வடிவமானது ஈண்டு மூர்த்தி எனப்படுகிறது. கல், தாமிரம் போன்ற உலோகத்தில் மூர்த்தி அமைக்கப்பெற்றதாயிருக் கலாம். அத்தகைய ஜடத்தினுல் ஆன வடிவத்தைத் தெய்வ சொருபமாகக் கருதவேண்டும். பஞ்ச பூதங்களால் ஆன மானுட மேனியை மேலானதாகக் கருதுதல் நலம். தாய் தந்தையரின் மேனியைத் தெய்வ சொருபமாகக் கருதி நன்மக்கள் மேன்மையுறுகின்றனர். ஜடப்பொருளினின்று செதுக்கி எடுக்கப்பட்டிருக்கிற விக்கிரகங்களைத் தெய்வ சொருபமாகக் கருதுவதில் நலன் மிக உண்டு. அத்தகைய எண்ணமே மனிதனை மேல் நிலைக்கு எடுத்துச் செல்லுகிறது.

அருள் துறையில் சான்றோர்கள் தெய்வ சாந்நித்தி யத்தை ஆவாகனம் (பிராணப் பிரதிஷ்டை) பண்ணுதல் என் னும் நியதி ஒன்று உண்டு. ஆவாகனம் அதாவது பிராணப் பிரதிஷ்டை செய்பவருடைய பண்புக்கு ஏற்பத் தெய்வ சாந்நித்தியம் மூர்த்தியில் மேலோங்குகிறது. அத்தகைய மூர்த்தியில் ஈசுவர சாந்நித்தியம் சிறப்புற்று மிளிர்கிறது. அப்படி மிளிர்வது சான்றோர்களுக்குப் புலனுகிறது. புலனு காதவிடத்தும் பிராணப் பிரதிஷ்டை செய்யப்பட்ட மூர்த் தியை வணங்குதற்கு ஏற்ப ஆத்ம சாதகன் நலன் எய்து கிறுன். மூர்த்தி வழிபாடு சாதகனுக்கு முற்றிலும் அவசியம்.

புண்ணிய க்ஷேத்திரங்கள் நாட்டில் ஆங்காங்கு உண்டு. பாரமார்த்திகப் பேரியக்கங்களுக்கு உறைவிடமாக அமை கின்றஇடங்கள் எல்லாம் க்ஷேத்திரங்கள் அல்லது ஸ்தலம் ஆகின்றன. சான்றோர்கள் வாழ்ந்த இடமும் ஸ்தலம் எனப் பகரப்படுகிறது. வடக்கே பத்ரிகாசிரமம், கிழக்கே பூரிஜகந் நாத்,தெற்கே ராமேஸ்வரம், மேற்கே துவாரகை ஆகியவை முக்கிய புண்ணிய க்ஷேத்திரங்களாகும். மற்ற புண்ணிய

க்ஷேத்திரங்களுக்கு இந்த நான்கும் எல்லை கட்டுகின்றன. பக்தி விசுவாசத்துடன் இந்தப் புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரைபோவது நல்ல ஆத்ம சாதன்மாகிறது.

தீர்த்தம் என்பது நதி, தடாகம், கடல் போன்ற நீர் நிலைகளைக் குறிக்கிறது. நீர்நிலைகளுள் கங்கா தீர்த்தம் தனி மகிமை வாய்க்கப் பெற்றதாக இருக்கிறது. அதற்கு நிகராகப் புண்ணிய தீர்த்தங்கள் ஆங்காங்கு க்ஷேத்திரங்களில் அமைந்திருக்கின்றன. அவைகளில் நீராடுவதால் ஆத்மசாதகன் மனபரிபாகம் அடைகிறான். ஆக மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவைகள் அமைந்துள்ள இடங்களுக்குப் பக்தி விசுவாசத்தோடு யாத்திரை சென்று அவைகளை முறைப்படி பயன் படுத்துவது நல்ல ஆத்ம சாதனமாகிறது.

இந்தப் புண்ணிய க்ஷேத்திரங்களில் சான்றோர்கள் வசித்திருப்பது இயல்பு. ஒவ்வொரு ஸ்தலத்திலும் உள்ள சான்றோர்களோடு தொடர்பு பூணுவதும் தீர்த்த யாத்திரையின் ஒரு பகுதி ஆகிறது. சான்றோர்களுடன் தொடர்புகொள்ளுதற்கேற்பப் பக்தியும் ஞானமும் சாதகனுக்கு வாய்க்கின்றன. அத்தகைய சான்றோர்களுள் யாரேனும் ஒருவர் சாதகனுக்கு ஏற்ற ஞான குருவாக வாய்ப்பதும் சாத்தியம். தீர்த்தயாத்திரையில் இத்தனைவித மேலான நலன்கள் அமைந்திருக்கின்றன என்பது இக்கண்ணியின் கருத்தாம்.

157. விரும்பும் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்புமலர் காய்கனிபோல் அன்றோ பராபரமே.

சன்மார்க்கத்தின் பகுதிகளாகச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு அமைந்துள்ளன. சரியை என்பது சதாசாரம் அல்லது நல்லொழுக்கம். மனிதனை மேன்மையுறச் செய்வது எதுவோ அது சதாசாரம். அது

நல்லொழுக்கமாகும். நல்லாராக விரும்புகின்றவர்கள் எல்லாரும் நல்லொழுக்கத்தில் நிலை நிற்கக் கடமைப்பட்டுள்ளனர்.

கிரியை என்பது அங்கீகரிக்கப்பட்டுள்ள மேலான கடமைகள் என்பதாகிறது. ஆலயவழிபாட்டை எங்ஙனம் நடத்துவது, பெற்றோர்களுக்கு எங்ஙனம் பணிவிடை செய்வது, சான்றோர்களுக்கு எங்ஙனம் சேவைபுரிவது, சமுதாயத்திற்கு எப்படிப் பயன்படுவது ஆகியவைகளின் தொகை கிரியை என்று கூறப்படுகிறது.

யோகம் என்னும் சொல்லுக்கு இணைத்து வைத்தல் என்பது பொருளாகும். ஜீவாத்மனைப் பரமாத்மனுடன் சேர்த்து வைக்கும் முறை யோகசாதனம் என்னும் பெயர் பெற்றுள்ளது. ஆறு தர்சனங்களுள் யோகம் ஐந்தாவது தர்சனமாக அமைந்துள்ளது. அதை இயற்றியவர் பதஞ்சலி முனிவர். அது ராஜயோகம் என்றும், சிவராஜயோகம் என்றும், அஷ்டாங்க யோகம் என்றும் பெயர் பெற்றுள்ளது. ஜீவாத்மனைச் சாதாரண நிலையில் இருந்து மகோன்னத நிலைக்கு எடுத்துச் செல்லவல்லது யோகம்.

ஞானம் என்பது பரம்பொருளைச் சுவானுபூதியில் அறிதலாம். அத்தகைய ஞானம் வரும்பொழுது தனக்கும் தன் தலைவனுக்கும் உள்ள இணக்கம் தானாகவே விளங்குகிறது. ஜீவாத்மன் யாண்டும் பரத்துக்கே உரியவன்;பிரபஞ்சத்துக்கு உரியவன் அல்லன் என்பது ஞான அனுபூதியில் தெளிவாகிறது. அந்த ஞானத்துக்கு மேல் பெறவேண்டியது ஏதும் ஜீவாத்மனுக்கு இல்லை. நல்வாழ்க்கையானது சரியையில் துவங்கி ஞானத்தில் பூர்த்தியாகிறது என்பது இக்கண்ணியில் அடங்கியுள்ள கருத்தாம்.

158. தானம் தவம்தருமம் சந்ததமும் செய்வர்சிவ
ஞானம் தனை அணைய நல்லோர் பராபரமே.

பரம்பொருளை அடைவதற்கு இக்கண்ணியில் அடங்கி யுள்ள சாதனவகைகளும் இன்றியமையாதவைகளாம். தானம் என்பது கொடை. நேர்மையான வழியில் சம்பாதித்த தனக்குப் பயன்படும் பொருள்களில் ஒருபகுதியை உள்ளன்போடும், பணிவோடும் பிறர்க்கு எடுத்து வழங்குதல் வேண்டும். அச்சீரிய செயல் தானம் என்று பெயர் பெறுகிறது.

தவம் என்பது தபம் என்னும் வடமொழிச் சொல்லின் திரிபாம். அடக்கம் நிறைந்த நல்வாழ்வு என்னும் தவக் கனலில் மனிதன் தன்னை மேலோனாகப் புதுப்பிக்கலாம். பாரமார்த்திகப் பெருவாழ்வு வாழ்கின்றவனுக்குத் தவம் இன்றியமையாதது ஆகிறது. தவத்தின் வாயிலாக மனிதன் தன்னைச் சான்றோனாகச் செப்பனிடுகிறான். ஐம்பொறிகளும் மனமும் சிறுநெறியில் செல்லாது பரநாட்டத்திலேயே செல்லுமாகில் அது தபசு ஆகிறது.

தருமம் என்பது அவரவர்களுக்கு ஏற்பட்டுள்ள வாழ்க்கைக் கடமையாகும். சிலர் தருமத்தைத் தானமெனத் தவறுதலாகக் கருதுகின்றனர். தானம் வேறு; தருமம் வேறு. மாணாக்கனின் தர்மம் கல்வி கற்பது. ஆசிரியரின் தர்மம் பாடம் புகட்டுவது. உலகத்தவரது தர்மம் நேர்மையாய்ப் பொருளீட்டுவது. சான்றோர்களின் தர்மம் தன்னுடைய வாழ்க்கை முழுதும் பரத்திற்குரியதாக்குவதாகும். பண்பாட்டில் மேலோங்குதற்கு ஏற்பத் தர்மம் கடினமானதாகிறது. மாந்தர் அனைவருக்கும் பொதுவாயிருக்கின்ற தருமம் தம்மை எல்லார்க்கும் பயன்படும் நல்லவன் ஆக்குவதாம்.

சந்ததமும் என்னும் சொல் யாண்டும் என்று பொருள் படுகிறது. சன்மார்க்கத்தில் ஈடுபடுகின்றவர்கள் ஏதோ சில காலங்களில் நல்வழியைக் கடைப்பிடித்து பின்பு அதினின்று விலகியிருத்தல் உதவாது. இடையீடின்றி மனிதன் நல்வழி யிலேயே ஆழ்ந்து செல்லவேண்டும். இதுவே நல்லாருடைய பாரமார்த்திகப் பெருவாழ்வு என்பது இக்கண்ணியின் கருத்து.

159. சொன்னதைச் சொல்லித் துடிக்கின்ற ஆணவப் பேய்க்கு
இன்னல்வருவது எந்நாள் எந்தாய் பராபரமே

அனுபூதி பெற்றுள்ள ஆன்றோர்கள் இறைவனைப்பற்றி யும் பாரமார்த்திகப் பெருவாழ்வைப் பற்றியும் அரிய பெரிய உண்மைகளைச் சொல்லியுள்ளார்கள். அவ்வாறான அனுபூதி மான்களுக்கு ஆணவம் இல்லை.

மனிதனைக் கீழ்நிலையில் வைத்திருப்பது எதுவோ அது ஆணவப் பேய். தற்பெருமையையும், பிறரைத் துச்சமெனச் சிறுமைப்படுத்துவதையும் ஆணவப் பேயினிடம் காணலாம். ஆணவம் பிடித்துள்ள மனிதனிடம் அமைதியில்லை. துடித் துக்கொண்டிருக்கும் பாங்கே அன்னவனிடம் நிறைந்திருக் கிறது. தான் எவ்விதத்திலும் பிறர்க்குக் கீழ்மைப்பட்டவன் அல்லன் என்று திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருப் பது ஆணவம் பிடித்தவன் போக்கு ஆகும். ஆணவத்தைப் பேயென்று சொன்னால் போதாது. அதைப் பொருந்தாத நோய் என்றும் பகரவேண்டும். நோய்க்கு இடங்கொடுக்க லாகாது என்பது கோட்பாடு. நோய்களுள் கொடியதாய் இருப்பது ஆணவநோய். அதை அகற்றுதல் அவசியம். அந்நோயை அறவே ஒதுக்கித் தள்ளுபவன் சான்றோனு கிறான்.

சான்றோர்கள், அனுபூதிமான்கள் சொல்லிச் சென்றுள்ள பேருண்மைகளை அனுபவத்தில் கொண்டுவருவதற்கு முன்பே மனத்தில் மட்டும் வாங்கிக்கொண்டு பிறர்க்குச் சொல்லுகிறேன், போதிக்கின்றேன் என்கின்ற ஆணவமாகிய கீழ்மை வராமல் என்னைப் பாதுகாக்க வேண்டும். மேன்மையான பரஞான அனுபவம் விரைவில் கிட்டவேண்டும் என்பன இக்கண்ணியின் கருத்துக்களாம்.

160. இன்றோ இருவினைவந்து ஏறியது நான்என்றோ
அன்றோ விளைந்ததுஅன்றோ ஆற்றேன் பராபரமே.

ஜீவாத்மன் நல்வினை தீவினைகளாகிய இருவினைகளில் கட்டுண்டவனாக இருக்கிறான். எந்த ஜீவனும் முற்றிலுமே நல்வினை வடிவெடுத்தவன் அல்லன்; முற்றிலுமே தீவினை வடிவெடுத்தவனும் அல்லன். ஏறத்தாழ இருவினைகளும் எல்லா ஜீவர்களுக்கும் உண்டு. நலம் கேடு ஆகிய இருவினைகளுக்கும் அப்பால் இருப்பது முக்தி. முக்தியை நாடியவனாக ஜீவன் இருக்கிறான். அதன் பொருட்டு அவன் இருவினைகளையும் தாண்டியவனாகவேண்டும்.

இருவினைகள் எப்போது, எப்படி உதித்தன என்பது கேள்வி. அக்கேள்வியை வேறு ஒரு பாங்கில் பகருமிடத்து ஜீவாத்மனுக்கு ஜீவ வியக்தி எப்பொழுது எப்படி உண்டாயிற்று என்னும் கேள்வியாக வந்து அமைகிறது. இக்கேள்விக்கு விடை காண யாருக்கும் இயலுவதில்லை. பிறவிகள் கடல் போன்று பெருகிக்கொண்டே போகின்றன. பழைய பிறவிகள் எண்ணிக்கையில் சுமார் ஐந்நூறு புத்தர் பெம்மானுக்குப் புலனாயின. அதற்கப்பால் இருந்த பிறவிகள் பிறவிக் கடலில் மறைந்து போயின. ஞானியர்களுடைய ஞானத்திற்கே பிறவியின் தொடக்கம் எட்டுவதில்லை. ஆதலால் வினையின் தொடக்கத்தைத் தேடியலைவதில் பயன்

ஒன்றுமில்லை. இப்பொழுது ஜீவாத்மனுக்கு லட்சியமாய் இருப்பது இருவினைகளையும் துடைப்பதாகும். வினைகளைத் துடைப்பதின் வாயிலாக ஜீவ வியக்தியையும் துடைத்தல் வேண்டும். முயற்சி முழுதையும் அதில் செலுத்துதல் வேண்டும். இறைவனுடைய அருளை நாடி வினையை ஒழித்தால் ஜீவன் முக்தியடைகிருன். இதுவே இக்கண்ணியின் கருத்தாகும்.

161. எண்ணமும்தான் நின்னைவிட இல்லைஎன்ருல்
யான்முனமே
பண்ணவினை ஏது பகராய் பராபரமே.

முனமே - முன்பாகவே. பகராய் - சொல்லாய். ஜீவாத்மன் கர்ம சொரூபமாக இருக்கிருன். அவனுக்கு அமைந்துள்ள பல விளக்கங்களுள் கர்ம சொரூபமாய் இருக்கிருன் என்பதும் ஒன்று. கர்மத்திற்கு ஏற்ற பிரகாரம் அவன் பிறப்பை வளர்த்துக்கொண்டே போகிருன். ஒரு பிறப்பில் பழவினைகள் சிலவற்றைப் பூர்த்தி பண்ணுகிருன். பூர்த்தி பண்ணுத பழவினைகள் அதிகமாகவே இருக்கின்றன. அதற்கு மேல் புதிதாக எடுத்த பிறப்பிலும் ஆசையினுல் தூண்டப் பெற்று அவன் வினையைப் பெருக்குகிருன். அத்தகைய கொடுவினைகளை வெல்லுதற்கு உபாயம் ஒன்றுளது. விவேகம் அடையப்பெற்ற ஜீவன் ஒருவன் தன்னுடைய ஜீவிதம் முழுவதையும் பரமாத்மனுக்கு உரியதாக ஒப்படைக்கிருன். எத்தொழிலைச் செய்தாலும் யாது கர்மத்தில் ஈடுபட்டு இருந்தாலும் அவையாவும் இறைவனுக்கு உரியவை என்னும் எண்ணத்தில் அவன் ஆழ்ந்து நிலைபெறுகிருன். அத்தகைய மனநிலையைப் பெற்ருன பிறகு அவன் புதிய கர்மம் எதையும் வளர்ப்பதில்லை. ஏனென்ருல் யான், எனது என்பனவற்றையெல்லாம் இறைவனுக்கு உரியவைகளாக அவன் ஒப்

படைத்துவிடுகிறான். முன்செய்த வினைகளும் பலன் அளிக்க இப்பொழுது முன் வந்து நிற்கின்றபொழுது அவ் வினைகளையும் (கர்ம பலன்களை) இறைவனுக்கு உரியவை களாக அவன் சமர்ப்பிக்கிறான். அங்ஙனம் அவனது மனப் பான்மை மாறியமைந்தான பின்பு பழவினை புதுவினை ஆகிய யாவும் அவனைப் பந்தப்படுத்துவதில்லை. அவை யாவும் ஆண் டவனுடைய ஆராதனையாக மாறியமைகின்றன. செய்கின்ற கர்மங்கள் அனைத்தையும் ஈசுவர ஆராதனையாகச் செய்வதே அச்சீரிய உபாயமாம். அக்கோட்பாட்டை அனுசரித்து "இறைவா, நான் எண்ணுகிற எண்ணமெல்லாம் உன்னைப் பற்றியவை; புரிகின்ற கர்மமெல்லாம் உன்னைப்பற்றியவை. அச்சீரிய நிலையிலே எந்த வினையும் என்னை வந்து தீண்டா. உன்னுடைய அருளால் அத்தகைய சீரிய நிலையில் என்னை நான் வைத்துக்கொள்வேனாக" என்பது இக்கண்ணியின் கருத்தாம்.

162. என்னைஇன்னது என்றுஅறியா ஏழைக்கும்
[ஆகெடுவேன்
முன்னைவினை கூடல் முறையோ பராபரமே.

ஜீவாத்மன் ஒருவன் தன்னுடைய அமைப்பை உள்ளபடி அறிந்து கொள்வானாகில் அவனுக்குக் கேடு ஒன்றுமில்லை. ஆனால் தன்னை அறிந்துகொள்ளுதல்தான் கடினத்திலும் மிகக் கடினமானதாய் இருக்கிறது. அறிந்துகொள்ள முடி யாத அக்ஞான நிலையில் இருப்பதுதான் ஜீவனுடைய இயல்பு. இனி, அவனைப்பற்றிய உண்மை யாதென்று பார்ப்போம். ஓர் அறையில் தீபம் ஒன்று ஏற்றி வைக்கப் பட்டுள்ளது. அவ்வறையில் கணக்கற்ற கண்ணாடிகள் இருக் கின்றன. அவைகளின் நிறங்கள் பலப்பல. அமைப்பிலும் ஒன்றுபோன்று மற்றொன்று இருப்பதில்லை. அத்தனை கண்

ணடிகளிலும் அந்த ஒரு விளக்கின் பிரதிபிம்பங்கள் தோன்று கின்றன. பிரதிபிம்பிக்கப்படுகிற தோற்றம் ஒன்றுபோன்று மற்ருென்று இருப்பதில்லை. இதுதான் ஜீவாத்மனைப்பற் றிய உண்மை. அந்தக்கரண பேதத்திற்கு ஏற்ப எண் ணிறந்த ஜீவாத்மாக்களாக ஒரே பரமாத்மா பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. கண்ணுடியிலுள்ள குறைநிலை எரிகின்ற தீபத்தைச் சிறுமைப்படுத்துவதில்லை; சிதறடையச் செய்வ தும் இல்லை. கண்ணுடியில் தென்படுகின்ற பிம்பத்தில்தான் மாறுபாடுகளும் வேறுபாடுகளும் தென்படுகின்றன.

அறியாமையினுல் ஜீவாத்மன் ஒருவன் தன்னுடைய பழவினைகளோடு தன்னை இணைத்துக்கொண்டு அவை தன்னைத் துன்புறுத்துவதாக மயங்கி வருந்துகிருன். வினைக் கேட்டுக்கும் தான் சுத்த சைதன்யமாய் இருப்பதற்கும் எந்த விதமான தொடர்பும் இல்லையென்கின்ற உண்மையை அறி கிறவனுக்குக் கேடு ஒன்றுமில்லை. அன்னவனே கேடு இலி ஆகிருன். வினையோடு தன்னை இணைத்துக்கொள்பவன் படாதபாடு படுகிருன். 'ஐயோ, நான் கெட்டொழிந்தேனே' என்று வருந்துகிருன். 'இறைவா, பழவினைக்கு நான் சாட்சி யாய் இருப்பதற்குப் பதிலாக அதனேடு என்னை இணைத் துக்கொண்டு நான் வருந்தலாகாது. வினையினின்று நான் பிரிந்திருக்க அனுக்கிரகம் செய்வாயாக!' என்பது இக் கண்ணியின் கருத்து.

163. அறியா நான் செய்வினையை ஐயா நீ கூட்டும்
குறிஏது எனக்குஉளவு கூருய் பராபரமே.

உளவு-உபாயம்; குறி — இலக்கணம்.

தன்னுடையது அல்லாததைத் தன்னுடையது என்று எண்ணி மயங்குதல் அக்ஞானம் தன்னுடையது அல்லாத

தைத் தன்னுடையது என்று மற்றொருவன் கற்பிப்பது அவனுடைய திறமை. அத்தகைய திறமைக்கு ஒருவன் உட்படுவது அவனிடத்துள்ள அஞ்ஞானத்தின் விளைவு.

பஞ்ச கிருத்தியங்களை உடையவனாக இறைவன் இருக்கிறான். பஞ்ச கிருத்தியங்களுள் திரோதானம் அல்லது மறைத்தல் என்பது ஒன்று ஆகிறது. ஒன்றை மற்றொன்றாக மறைத்துக் காட்டுவது திரோதானம். மாலை நேரத்தில் சுருண்டு கிடக்கும் கயிறு ஒன்றைப் பாம்பு என்று ஒருவன் குறிப்புக் காட்டுகிறான். மற்றவன் அவன் குறிப்புக்கு இணங்கி கயிற்றைப் பாம்பாகப் பொருள்படுத்துவது அவனுடைய மயக்கமாம்.

மற்றொருசான்று எடுத்துக்கொள்வோம். இருப்புப் பாதை வண்டித்தொடர் ஒன்றில் பிரயாணி ஒருவன் அமர்ந்திருக்கிறான். பக்கத்தில் மற்றொரு வண்டித்தொடர் நின்று கொண்டு இருக்கிறது. சிறிது நேரத்திற்குப் பின்பு பக்கத்தில் நின்று கொண்டிருந்த வண்டித்தொடர் ஓட ஆரம்பிக்கிறது. அதைப் பார்த்துக் கொண்டிருந்த பிரயாணி தன்னுடைய வண்டி ஓடுகிறது என்று பொருள்படுத்துகிறான். ஒரு வண்டியின் செயலை மற்றொரு வண்டியோடு கூட்டுகிற குறியானது அப்பிரயாணியிடம் இருக்கிறது. அவன் ஓடுகிற வண்டியைப் பார்ப்பதற்குப் பதிலாகத் தன் பார்வையை வேறு பக்கம் திருப்பித் தரையில் செலுத்துவானாகில் அத்தரையோடு இணங்கித் தன் வண்டி ஓடாது நிற்பது அவனுக்கு விளங்கும். ஜீவாத்மனிடம் பிரகிருதியின் கூறு, ஆத்மாவின் சொரூபம் ஆகிய இரண்டும் இணைக்கப்பெற்றுள்ளன. பிரகிருதியின் கூற்றினை ஆத்மாவின் கூறு என்று ஜீவாத்மன் மயக்கம் கொள்கிறான். வினையாற்றும் பாங்கு பிரகிருதிக்கு உரியது. ஆத்ம சொரூபம் எவ்வினையையும்

இயற்றுவதில்லை. மயக்கத்தால் பிரகிருதியின் வினையை ஆத்மாவின் வினையென்று எண்ணி ஜீவன் மயங்குகிறான். தன்னுடைய திருஷ்டியைப் பிரகிருதியினின்று பிரித்து எடுத்து ஆத்ம சொரூபத்தில் செலுத்துவானாகில் ஆத்ம சொரூபமாகிய தான் எவ்வினையிலும் கூட்டுக்கொண்டுள்ளவன் அல்லன் என்னும் உண்மை விளங்கும். பிரகிருதி திருஷ்டியை ஆத்ம திருஷ்டியாக மாற்றி அமைப்பதே உளவு அல்லது உபாயம் ஆகிறது. கர்ம சொரூபமாய் இருப்பது பிரகிருதியின் குறி. அகர்ம சொரூபமாய் அல்லது வினை எதிலும் சம்பந்தப்படாததாக இருப்பது ஆத்மாவின் குறி. இங்ஙனம் ஆத்மா, அனாத்மா ஆகிய இரண்டையும் சரியாகப் பொருள்படுத்துவதே மெய்ஞ்ஞானத்தைப் பெறுதற்கு உற்ற உபாயம் ஆகிறது. அத்தகைய தெளிந்த அறிவை, இறைவா! எனக்குத் தந்தருள்வாயாக என்பது இக்கண்ணியின் கருத்து.

164. என்னைக் கெடுக்க இசைந்த இருவினைநோய்
தன்னைக் கெடுக்கத் தகாதோ பராபரமே.

வினையில் கட்டுண்டு கிடப்பவன் ஜீவாத்மன். வினையில் இருந்து விடுபடுவது வாழ்வின் குறிக்கோள். நல்வினை தீவினை ஆகிய இருவினைகளும் மனிதனைக் கட்டுண்டு கிடக்கும்படி செய்கின்றன. இவ்விருவினைகளும் பிறவிப்பெருங் கடலை வளர்ப்பதற்கு ஏதுவாகின்றன. இவ்விருவினைகளையும் ஒழிப்பதற்கு உபாயங்கள் பல உள. அவைகளுள் மிக முக்கியமானது இறைவனுடைய பேர் அருள். பேர் அருளுக்குப் பாத்திரமாகிறவன் அக்கணமே விடுதலை அடைகிறான். இறைவனின் அருளை அறிய வருகிற ஆத்மசாதகன் அக்கணத்திலேயே தனக்கு நலம், கேடு யாவையும் மறந்து விடுகிறான். அருளானந்தத்தில் திளைத்து இருக்கிறான்.

கிருஷ்ணன் புல்லாங்குழல் ஓசையும் இதே தத்துவத்தை விளக்குகிறது. புல்லாங்குழல் ஓசையைக் கேட்டதும் உயிர் வகைகள் தத்தம் உலக வாழ்க்கையை மறந்துவிட்டுக் கிருஷ்ணனிடம் ஓடலாயின. இறைவா, உன்னுடைய பேர் அருளைத் தோற்றுவித்து என்னிடத்திலுள்ள இருவினைகளை யும் நீ அகற்றிவிட மாட்டாயா என்பது இக்கண்ணியில் அடங்கியுள்ள கருத்தாம்.

165. வல்லமையே காட்டுகின்ற மாமாயை நான்ஒருவன்
இல்லைஎனின் எங்கே இருக்கும் பராபரமே.

மாமாயை என்னும் சொல் மகாமாயை என்னும் சொல் லின் சிதைவாம். மாயா என்னும் ஸம்ஸ்கிருதச் சொல்லை மாயை என்று தமிழ்மயம் ஆக்குகிறோம். க்ஷணந்தோறும் மாறி மாறி வருவது மாயை. ஒரு நிமிஷத்திற்கு முன்பு இருந்த நிலை அடுத்த நிமிஷத்தில் இருப்பது இல்லை. நமது உடல், உள்ளம் அடிக்கடி மாறிவருவதால் இவைகள் மாயை ஆகும். இயற்கைக்கு மாயை என்பது ஒரு பெயர்.

மனிதனது சொரூபம் மாயையாகிய இயற்கையின் தத்துவத்தையும் ஆத்ம சொரூபத்தையும் பெற்றுள்ளதாகும். நான் என்னும் சொல் ஆத்ம தத்துவத்திற்கும் பிரகிருதி தத்துவத்துக்கும் பொதுவாய் இருக்கிறது. மாயையின் கூறு ஆகிய பிரகிருதி தத்துவத்தை நானென்று அபி மானித்து வருகிற ஜீவாத்மன் பிரகிருதியினின்று ஆத்ம தத்துவத்தைப் பிரித்து எடுத்துக்கொள்வானாகில் நிலைபேறு இல்லாத நான் ஆகிய பிரகிருதி தத்துவம் அடிபட்டுப் போகிறது. நிலைபேறுடைய நான் அல்லது ஆத்ம தத்து வம் எஞ்சி நிற்கிறது. அதை அகற்ற யாருக்கும் சாத்திய மன்று. நிலைபேறு இல்லாத எனது இயற்கைத் தத்து வத்தை நான் ஒதுக்கிவிடுவேனாயின் மாயாவிகாரங்கள்

ஆகிய இவ் இயற்கை என்னிடத்துத் தன்னுடைய ஆதிக்கத்தைச் செலுத்தமாட்டாது.

அக்ஞானத்தில் உழன்றுகொண்டு இருப்பவனிடத்து மாயையின் அதிகாரம் செல்லுகிறது. ஆகையால் அது வல்லமை படைத்தது என்று சொல்லப்படுகிறது. இறைவனின் அருளைத் துணையாகக்கொண்டு தன்னுடைய ஆத்ம போதத்தை நிலைநாட்டுபவனிடம் மாயையின் வல்லமை செல்லாது. இறைவனைப் பற்றிய இடையறாத சிந்தனையே மாயையின் வல்லமையை ஒதுக்குதற்கு உற்ற உபாயமாகிறது. இறைவனுடைய சிந்தனை வலுத்து வரும்போது மாயை இருப்பதற்கிடையில் அது இல்லாததற்கு நிகர் ஆகிறது.

**166. முக்குணத்தால் எல்லாம் முளைக்கப் பிரகிருதிக்கு
இக்குணத்தை நல்கியதுஆர் எந்தாய் பராபரமே.**

முக்குணங்கள் சத்துவம், ரஜஸ், தமஸ் எனக் கூறப்படுகின்றன. அவைகளுள் சத்துவ குணம் உயிர் வகைகளைத் தோற்றுவிக்க வல்லது. ரஜோகுணம் அனைத்தையும் செயலில் தூண்டுவதாகும். தமோகுணம் ஜடப்பொருள்களைத் தோற்றுவிக்கிறது. இக்குணங்கள் மயமாகப் பிரகிருதி (ஜகத்) உள்ளது. இரண்டாவது அடியில் இக்குணம் என்னும் சொல் இந்த இயல்பு அல்லது நடைமுறை எனப் பொருள்படுகிறது. உயிர்வகைகளாகவும் உயிரற்ற ஜடப் பொருள்களாகவும் உலகம் காட்சி கொடுத்துக் கொண்டிருக்கிறது. குணபேதத்தாலே இப்பாகுபாடுகள் வந்துள்ளன. பிரகிருதிக்குப் பிரளயம் வரும்பொழுது இக்குணங்களும் அவைகளின் தாரதம்மியங்களை ஒதுக்கிவிட்டு நடுநிலை எய்துகின்றன. அப்பொழுது அம்மூன்றுக்கும் பாகுபாடு இல்லை. தோன்றுநிலையில் அவைகள் மறைந்துபட்டுப்

போகின்றன. பின்பு சிருஷ்டியில் மூன்று குணங்களுக்கிடையில் பாகுபாடு உண்டாகிறது. அதற்கேற்ற பிரகாரம் பிரபஞ்சத்தில் தென்படுகிற சேதனம் அசேதனம் ஆகிய யாவும் வந்துள்ளன. குணங்களின் விளையாட்டு என்று அகிலாண்டங்களுக்கு விளக்கம் கொடுக்கலாம்.

செயலற்று ஜடமாகக் கிடக்கும் தமோகுணம் சிறிது சிறிதாக ஆவிர்பவித்து ரஜோர்குணம் ஆகிறது. அதன்பின் சத்துவகுணமாக வடிவெடுக்கிறது. சத்துவகுணத்தின் ஆதிக்கத்தில் உயிர்வகைகள் தோற்றத்திற்கு வருகின்றன. ஜடம் சேதனம் ஆகிய யாவும் முக்குணங்களில் கட்டுண்டு கிடப்பவைகளாம். முக்குணங்களை வென்று குண அதீதத்துக்குப் போவது வாழ்க்கையின் குறிக்கோள். குணஅதீத நிலை முக்தி எனப்படுகிறது.

ஆத்ம சாதகன் தூக்கம், சோம்பல் போன்ற ஜடநிலைகளை விலக்குவதன் வாயிலாகத் தமோகுணத்தை வெல்லுகிறான். ஆழ்ந்து செயலில் ஈடுபடுவதே தமோகுணத்தை வெல்லுதற்கு உற்ற உபாயமாம். நானாவிதமான செயல்களில் ஈடுபட்டு இருப்பது ரஜோகுணத்தின் பாங்கு. பின்பு கணக்கற்ற செயல்களுக்கிடையில் மனத்தை நடுநிலையில் வைத்திருக்கிற சாதகன் ரஜோகுணத்தை வென்று சத்துவ குணத்திற்கு வருகிறான். சத்துவ குணத்துக்கு வந்துள்ள ஆத்ம சாதகன் தன்னுடைய நிஜ சொருபமாகிய சச்சிதானந்தத்தில் மனத்தை ஒடுங்கப்பண்ணும்பொழுது சத்துவகுணத்தையும் அவன் வெல்லுகிறான். குண அதீதத்திற்குப் போவது சாத்தியமாகிறது. ஆக, குணங்களின் ஆதிக்கத்தை அடக்குவது ஆத்ம சாதனமாகும். அதில் சாதகன் வெற்றியடைய வேண்டும் என்பது இக்கண்ணியின் கருத்தாம்.

167. ஆற்றப் படாதுதுன்பம் ஐயஎன்னுல் என்மனது
தேற்றப் படாதுஇனிஎன் செய்வேன் பராபரமே.

பிரகிருதி வாழ்வில் யாண்டும் இன்பமும் துன்பமும் கலந்துள்ளன. சிற்றுயிர்கள் பேருயிர்களாகப் பரிணமிப் பதற்குத் துன்பம் தூண்டுகோல் ஆகிறது. சிற்றுயிர்கள் துன்பத்தை விரைவில் மறந்து விடுகின்றன. ஆனுல் மனி தன் போன்ற பேருயிர்கள் துன்பத்தை எளிதில் மறக்கமுடி யாது. பட்ட துன்பத்தை எண்ணி எண்ணி மனம் கொதிக் கிறது. எவ்வளவுதான் சமாதானப்படுத்திஞலும் மனத்துக் குத் தேற்றம் உண்டாவதில்லை.

மனிதனின் மனமானது சஞ்சலத்தில் மூழ்கியதாக யாண்டும் அல்லல்பட்டுக்கொண்டே இருக்கிறது. மன மானது பரிணமித்து மேல்நிலைக்கு வரும்பொழுது இன் பத்தை நன்கு ரசிப்பது போன்று துன்பத்திலும் அது ஆழ்ந்து உழல்கிறது. மானுட நிலையை எட்டியான பிறகு பலருக்கு இன்பத்தைவிடத் துன்பமே அதிகமாக வருகிறது. துடைக்க முடியாத துன்பத்தில் வருந்தும்போது மனித னுக்கு விசாரம் (ஆராயும் மனப்பான்மை) வருகிறது. விசா ரித்துப் பார்க்கிற மனிதன் ஆத்மசாதகனுக மாறியமை கிருன். ஆத்மசாதனத்தில் ஈடுபடுவது ஒன்றே துன்பத் தைத் துடைப்பதற்கு உற்ற உபாயம் என்னும் கோட்பாடு வெளியாகிறது. அக்கோட்பாட்டில் இக்கண்ணியானது மனிதனைக்கொண்டு செலுத்துகிறது.

168. பூராய மாய்மனதைப் போக்கஅறி யாமல்ஐயோ
ஆராய் அலைந்தேன் அரசே பராபரமே.

பூராயமாய்-ஆழ்ந்த ஆராய்ச்சியின் வாயிலாக.

ஆராய் அலைந்தேன்-என்னென்னவோ போக்குகளில் நிலை தடுமாறித் திரிந்தேன்,

ஆத்ம சாதனங்கள் அனைத்தும் மனத்தைப் பண்படுத்து தல் பொருட்டேயாம். அதைப் பண்படுத்துதற்கு அதன் கூறுகளை முதலில் அறிந்து கொள்ளுதல் அவசியமாகிறது. மனத்தின் போக்கைச் சரியாகத் தெரிந்துகொள்ளாது எத்தனை எத்தனையோ சாதனங்களைக் கையாளுகின்றவர்கள் இருக்கின்றனர். ஆத்ம சாதகர்கள் பலர் ஆயுள்காலம் எல்லாம் சாதனங்கள் புரிகின்றனர். ஆயினும் அவர்கள் முன்னேற்றம் அடைவதில்லை. மனத்தை முறையாகப் பண்படுத்தத் தெரியாமையே அதற்குக் காரணமாகும். முறையாகப் பண்படுத்தப்பட்ட மனது தெய்விக இயல்பு படைத்த தாகத் திருந்தியமைகிறது. நாள் ஏற ஏற அது அமைதி யுற்றதாகிறது. முன்னேற்றத்திற்கு ஏற்றவாறு அதன் விகாரங்கள் அழிந்துபட்டுப்போகின்றன. உலகப் பற்று தானாக அழிகிறது. மனமானது பண்பாடு அடைதற்கு மாறாகச் சிற்றியல்பு படைத்ததாகவே நிலைத்திருக்குமாகில் ஆத்ம சாதகன் சாதனத்தைச் சரியாகச் செய்யவில்லை என்பது வெளியாகிறது. இங்ஙனம் முறை தெரியாது பல ஜன்மங்கள் அனர்த்தமாய்ப் போவதுண்டு.

மனத்தை எங்ஙனம் பண்படுத்துதல் என்னும் கோட்பாட்டைச் சிவனார் தம் சொரூபத்தின் வாயிலாக விளக்குகிறார். மானை அவர் ஒரு கையில் ஏந்தியிருக்கிறார். அந்த மான் ஆனது சிவனார் முகத்தைப் பார்த்த வண்ணமாய் இருக்கிறது. மனத்துக்குச் சின்னமாய் அமைந்திருப்பது மான். ஏனென்றால் மான் போன்று மனதும் துள்ளிக் குதித்து நாலாபக்கமும் ஓடுகிற பாங்கு உடையது. அலைந்து திரிகிற மனத்தை ஓர் உயர்ந்த இலட்சியத்திற்கு ஒப்படைத்தல் வேண்டும். அந்த மனமானது தன்னுடைய முழு ஆற்றலையும் அந்த லட்சியத்துக்கே பயன்படுத்தவேண்டும். அப்படிச்

செய்தால் மனதும் பண்பாடு அடைகிறது. அது ஒடுங்கு கிறது. லட்சியமும் நிறைவேறுகிறது. அப்படியல்லாது பலப்பல அனர்த்தங்களிலே மனத்தைச் செல்ல விட்டுவிட் டால் லட்சியம் நிறைவேறுவது இல்லே. சாதனம் பயனற்ற தாகிறது.

169. சினம்இறக்கக் கற்ருலும் சித்திஎல்லாம் பெற்ருலும்
மனம்இறக்கக் கல்லார்க்கு வாய்ஏன் பராபரமே.

தடைப்பட்ட ஆசை சினமாக வடிவெடுக்கிறது. ஆசை நல்லதாக இருக்கலாம்; அல்லது கெட்டதாக இருக்கலாம். அதற்குப் பங்கம் வரும்பொழுது மாளாத கோபமாக வடி வெடுக்கிறது. ஆசையிருக்கும் வரையில் சினமும் இருப்பது உறுதி. ஆசையையும் சினத்தையும் ஒதுக்குதற்கு ஏற்ப மனமானது நல்ல மனமாகத் திருந்தி அமைகிறது.

யோக சாதனங்கள் புரிந்து அடக்கப்பட்ட மனத்தில் அஷ்ட சித்திகளுள் சில உருவெடுப்பது இயல்பு. நீர்மேல் நடப்பது, நெருப்பினுள் அமர்ந்திருப்பது போன்றவை சித்தி கள் எனப்பகரப்படுகின்றன. சித்திகள் வாய்க்கப்பெற்ற யோகிக்கு மறைமுகமாக அகங்காரம் வளருகிறது. அவன் ஆத்ம சாதனத்தில் மேலேறுவதில்லே. பெரும்பாலும் அவன் யோகப் பிரஷ்டன் ஆகிருன்.

மனம் படைத்திருக்கும் வரையில் மனிதன் பூரணத்தை எட்டியவனகான். மனமோ சத்துவம், ரஜஸ், தமஸ் ஆகிய முக்குணங்களில் மாறிமாறி உழன்றுகொண்டு இருக்கிறது. பிரபஞ்சத்தில் கட்டுண்டு கிடப்பதற்கு அது அறிகுறியா கிறது. மனே நாசம் அடைவதே வாழ்க்கையின் குறிக்கோள் ஆகும். வறுத்த விதையை மண்ணில் போட்டால் முளேக் காது. அது போன்று மனேநாசம் அடையப்பெற்றவன்

மீண்டும் பிறப்பு எடுப்பதில்லை. மனம் போனவிடத்துப் பிரபஞ்ச சம்பந்தமான அனைத்தும் ஒதுக்கித் தள்ளப்படு கின்றன. அதீதத்தில் இருக்கும் பரவெளியே எஞ்சி யிருக்கிறது. அதை யாரும் பாழ்படுத்த முடியாது. அதுவே கேடிலா கேவல வஸ்து. மனம் இறக்கக் கற்றுக்கொண்ட வன் அக்கேவல வஸ்துவின்கண் கைவல்ய முத்தியடை கிறான். வீடு, மோக்ஷசாம்ராஜ்யம், பிரம்ம நிர்வாணம் எனப் பல சொற்களால் முக்திநிலை குறிக்கப்படுகிறது. மனம் என் னும் சூரனைச் சம்ஹாரம் செய்துவிட்டு ஜீவன் பரத்தில் ஒன்றுபடவேண்டும் என்பதே இக்கண்ணியில் அடங்கி யுள்ள கருத்தாம்.

170. வாதுக்கு வந்துஎதிர்த்த மல்லரைப்போல் பாழ்த்த மனம்
ஏதுக்குக் கூத்துஆடுது எந்தாய் பராபரமே.

உடற்பயிற்சி செய்து உடல் வலிவு படைத்துள்ளவர் மல்லர். மல்லர்களுள் நல்லவர்களும் உண்டு; கெட்டவர் களும் உண்டு. நல்லவர்கள் தங்களுடைய உடல் திட்பத்தை முறைதவறிக் கையாளமாட்டார்கள். கெட்டவர்களோ உடல்திறனை முன்னிட்டுத் தற்பெருமை கொண்டவர்களாய்ப் பிறரோடு வம்புச் சண்டைக்குப் போவார்கள். பாழ்த்த மனமானது (அசுரமனம்) கெட்ட இயல்புகொண்ட மல்லரைப் போன்று ஹிம்சையைத் தனக்கும் ஏனைய உயிர்களுக்கும் சதா செய்துகொண்டிருக்கிறது.

மனத்தை இரண்டு பாங்குகளில் பகரலாம். அதைப் பாழ்த்த மனம் என்றும் பகரலாம், பாக்கிய மனம் என்றும் பகரலாம். உலகில் பெரும்பான்மையோர் படைத்திருப்பது பாழ்த்த மனம். பாக்கிய மனம் சிறுபான்மையோர்க்கே

அமைகிறது. பாண்டவர்கள் பாக்கியமனமுடையவர்களாக இருந்தார்கள். கௌரவர்கள் பாழ்த்த மனம் கொண்டிருந் தார்கள். உலக நடைமுறை இவர்களின் வாயிலாக விளக் கப்பட்டுள்ளது. ஆத்மசாதகன் பாண்டவர்கள் போன்று பாக்கியமனம் படைத்தவன் ஆகவேண்டும். அதற்குத் தன் னுடைய முயற்சியும் வேண்டும்; பரம்பொருளின் கிருபையை யும் நாடவேண்டும். பரம்பொருளை என்தாய் என்று கூறு வதன் வாயிலாகத் தாய்க்கும் சேய்க்கும் உள்ள இணக்கம் வருவிக்கப்படுகிறது. தன்னைக் காத்தருளவேண்டும் என்று சேய் ஆனது யாண்டும் தாயைச் சார்ந்திருந்து பரிவுடன் வேண்டுகிறது. அந்தச் சேயின் மனநிலையை ஆத்மசாதகன் வரவழைத்துக்கொள்ளவேண்டும். பின்பு நிர்க்குணப் பர வஸ்துவைச் சகுணத் தாயாகக் கருதுதல் வேண்டும். அத் தாயிடம் தன்னைக் காப்பாற்றும்படி பரிந்து விண்ணப்பிக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் பாழ்த்த மனத்தைத் திருத்தி அமைக்க முடியும் என்பது இக்கண்ணியில் அடங்கி யுள்ள கருத்தாம்.

171. **சூதுஆடு வார்போல் துவண்டு துவண்டுமனம்**
வாதாடின் என்னபலன் வாய்க்கும் பராபரமே.

மனத்தைப் பாழ்படுத்த உபாயங்கள் பலவுள. அவ் வுபாயங்களுள் மிகக் கொடியது சூதாட்டம். தர்மராஜா போன்ற நல்லறிவு படைத்தவர்களின் விவேகத்தையும் இக் கொடிய பழக்கம் பாழ்படுத்தியது. சூதாடுபவர்கள் படிப் படியாகக் கீழ்மையுறுவது போன்று அடக்கம் பழகாத மனத் துக்கு அடிமையாகிறவர்கள் துவண்டு துவண்டு கீழ்மையுறு கின்றனர். வீண் வாதம் செய்யக்கூடியவர்கள் அடைந் துள்ள கீழ்மையானது மேன்மை போன்று அவர்களுக்குத்

தோன்றுகிறது. ஆதலால் அவர்கள் புரிகின்ற வாதத்திற்கு முடிவு இல்லை. பெயரளவில் சம்வாதம் போன்று தென்படு கிறது. உண்மையில் அது விதண்டாவாதமே. சூதாட்டம் செய்கின்ற கேடுகள் அனைத்தையும் விதண்டாவாதம் செய் கிறது. வீண் விதண்டாவாதத்துக்கு அடிமையாகாது மனி தன் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். இல்லையேல் அவன் கீழ்மையுற்று அழிந்துபட்டுப்போவது திண்ணம் என்னும் பாடம் இக்கண்ணியில் அடங்கியிருக்கிறது.

172. கொள்ளித்தேள் கொட்டிக் குதிக்கின்ற
பேய்க்குரங்காய்க்
கள்ளமனம் துள்ளுவதுஎன் கண்டாய் பராபரமே.

குரங்கு தன்னளவில் சலன புத்தியுடையது. சிறிது நேரம் அது சும்மா இருப்பது இல்லை. அத்தகைய குரங்கைப் பேய் பிடித்துக்கொண்டால் அதன் குதியாட்டம் பன்மடங்கு அதிகமாகிறது. மேலும் அத்தகைய இயல்பு படைத்த குரங்கைத் தேள் ஒன்று கொட்டிவிட்டால் தீயால் சுடப் பட்டது போன்று அது வேதனைப்படும். அவ்வேதனைக்கு உட்பட்டுள்ள பேய்க்குரங்கானது என்னதான் பாடுபடாது! அத்தகைய நிலையில் என் கள்ளமனம் இருக்கிறது. மனத் தைக் கள்ளன் என்று சொல்லவேண்டும். ஏன் என்றால் அது மெய்ப்பொருளாகிய ஆத்மாவை மறைத்து வைத்துப் பொய்ப்பொருளாகிய பிரபஞ்சத்தை விளக்கிக்கொண்டு இருக்கிறது. என்ன ஊதியத்தைக் கண்டு மனம் இத்தகைய படாதபாடு படுகிறதோ தெரியவில்லை. இறைவா! இப் பொல்லா மனத்தைப் பண்படுத்தி அருள்வாயாக என்பது இக்கண்ணியின் கருத்து.

173. வந்ததையும் போனதையும் வைத்துவைத்துப்
பார்த்துஇருந்தால்
சிந்தை ஹிதம்அஹிதம் சேரும் பராபரமே.

சிந்தை-மனம். ஹிதம்-நலம். அஹிதம்-கேடு.

பிரபஞ்ச வாழ்வானது எத்தனை எத்தனையோ போக்கு வரத்து உடையதாய் இருக்கிறது. உலகில் பிறப்பின் வாயிலாக மக்கள் வந்துகொண்டே இருக்கின்றனர். மரணத்தின் வாயிலாகப் போய்க்கொண்டே இருக்கின்றனர். நிகழ்ச்சிகள் பல காலக்கிரமத்தில் வந்து கொண்டும் போய்க்கொண்டும் இருக்கின்றன. வந்துகொண்டும் போய்க்கொண்டும் இருக்கிற மக்களையும், செயல்களையும் சதா கருத்தில் வாங்கிக்கொண்டு இருந்தால், அதனுல் இன்ப துன்பங்கள் மாறி மாறி வந்துகொண்டேயிருக்கும். வேறு பயன் ஒன்றும் வாய்ப்பதில்லை. ஆதலால் மனத்தை அத்தகைய விசாரத்தில் ஈடுபடுத்துவது பொருந்தாது. பிரபஞ்ச நிகழ்ச்சிகள் அனைத்துக்கும் ஆத்ம சாதகனின் மனமானது சாட்சியாய் இருந்து பழகவேண்டும். நிகழ்ச்சிகளில் பங்கெடுக்கும் பாங்கு உதவாது. சாட்சியாய் இருந்து பழகினுல் மனத்தில் சலனம் குறைகிறது, முடிவில் அது சலனமற்றதாகிறது. சலனமற்ற மனமே ஆத்ம தரிசனத்துக்கு உற்ற கருவியாகிறது. சலன மற்ற மனத்தை நான் பெறுவதற்கு இறைவா! அருள்புரிவாயாக என்பது இக்கண்ணியின் கருத்து.

174. ஏறுமயிர்ப் பாலம்உணர்வு இந்தவிஷ யங்கள்நெருப்பு
ஆறுஎனவும் நன்ருய் அறிந்தேன் பராபரமே.

மனிதன் படைத்துள்ள உணர்வானது ஒரு மயிர்ப் பாலத்துக்கு ஒப்பானது. பஞ்சேந்திரியங்கள் மூலமாக மனிதன் அனுபவிக்கின்ற இந்திரியார்த்தங்கள் நெருப்பு

ஆற்றுதற்கு ஒப்பாகிறது. ஐந்து இந்திரியார்த்தங்களும் அறிவில்லாத மானுடனுல்முறை தவறிக் கையாளப்படுகின் றன. ஆதலால் அவன் தீயில் தகிக்கப்படுபவன் போன்று தேய்வுற்று வருகிறுன். மேலே மயிர்ப்பாலம் கட்டி வைக்கப் பட்டுள்ளது என்று கற்பனை பண்ணிக்கொள்வோம். கீழே ஐம்புலன்கள் என்னும் தீ கொழுந்து விட்டு எரிந்துகொண்டு இருக்கிறது என்றும் கற்பனை பண்ணிக்கொள்வோம். மயிர் தன்னளவில் உறுதியற்றது. தீயின் வெப்பம் அதைப் பொசுக்கிவிடும். விவேகமற்ற உணர்வு என்னும் மயிர்ப் பாலம் தன்னளவில் உறுதியற்றது. இனி அதற்குக் கீழ் இந்திரிய சுகபோகங்களை வேண்டியவாறு அனுபவித்தல் என்னும் நெருப்பும் எரிந்து கொண்டு இருந்தால் மயிர்ப் பாலம் தாண்டும் மனிதனின் கதி என்னவது? மயிர்ப்பாலம் கருகிப்போம். மானுடன் தீயில் வீழ்ந்து தகனமாவான். அத்தகைய ஆபத்தான நிலையில் மனிதன் யாண்டும் இருந்து வருகிறுன். ஏனென்றுல் அவனுடைய உணர்வானது விவேகம் என்னும் வலிவு படைத்ததன்று. புலன்களில் செல்லுகின்ற பொறிகளோ அவனைப் பொசுக்கிக்கொண்டு இருக்கின்றன. ஆத்மசாதகன் ஒருவன் ஏழை நெஞ்சம் படைத்தவனுக இருக்கலாகாது. இந்திரிய விஷயங்களில் அவன் அகப்பட்டுக் கொள்ளலாகாது. அகக்கரணம் என் னும் உணர்வையும் புறக்கரணங்கள் என்னும் பொறிகளையும் நன்கு கட்டியாள்கிறவனே பரமனை அடையவல்லவனு கிறுன். இவ்வுண்மையை அறிந்து அதற்கேற்றவாறு வாழ்ப வனே பாரமார்த்திகப் பெருவாழ்விற்குத் தகுதியுடையவன் ஆகிறுன் என்பது கோட்பாடு.

175. பொறிவழியே ஏழை பொறியாய் உழல்வதுநின்
அறிவின் விதித்தவிதி ஆமோ பராபரமே.

பொறிவழியே-பஞ்சேந்திரியங்கள் வாயிலாக; பொறியாய் உழல்வது-தீப்பொறி போன்று படாதபாடுபடுவது; விதித்த விதி-நியமம் அல்லது இயற்கையின் நடைமுறை.

இயற்கையின் நடைமுறையில் இரண்டுவித நிகழ்ச்சிகளை நாம் காணலாம். ஐம்பொறிகளை உபாயமாக வைத்துக்கொண்டு பிரபஞ்ச வாழ்க்கையில் வாழ்ந்து மூழ்குகின்றவர்கள் தீப்பொறி பறப்பது போன்று சிறிதுநேரம் மிளிர்ந்து (பிரகாசித்து)இருந்து பிறகு மறைந்துபட்டுப் போகின்றனர். ஐம்பொறிகளுக்கு அடிமையாகாதவர்கள் திண்ணியராகத் திருந்தியமைகின்றனர். பிறகு அவர்கள் வஜ்ராயுதத்துக்கு ஒப்பவலிவுபடைத்தவராகின்றனர்.பிரபஞ்சவாழ்வைப்பழுது ஏதுமின்றி நன்கு பயன்படுத்த அவர்களுக்கு இயலுகிறது. பிறகு பரத்தைச் சென்று அடைவதும் அவர்களுக்குச் சாத்தியமாகிறது. இந்த இரண்டுவித விதிகள் இறைவனுடைய படைப்பில் இடம்பெற்று இருக்கின்றன. பொறிகளைத் துணையாகக்கொண்டு மனிதன் தன்னைப் பாழ்படுத்துவது ஒரு விதி. பொறிகளைக் கட்டியாண்டு தன்னைப் பரத்துக்கு உரியவனுகச் செய்வது மற்றொரு விதி. ஒன்று சிறுநெறி. மற்றது பெருநெறி. சிறுநெறியைத் தவிர்த்துப் பெருநெறியைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

176. **பாசசா லங்கள்எல்லாம் பற்றுவிட ஞானவைவாள்**
வீசுநாள் எந்நாள் விளம்பாய் பராபரமே.

பாசசாலம் - பாசஜாலம் - கட்டுப்படுத்தும் கூட்டம். வைவாள்-கூர்மையான கத்தி.

வளர்ந்து வருகின்ற மரமொன்றை அருகில் வளர்கிற கொடிகளெல்லாம் ஒன்று கூடி வளைத்துக்கொண்டு அதை வளரவொட்டாது தடைப்படுத்துவதைக் காடுகளில் காண

லாம். மரங்களைப் பயிர் பண்ணுகிறவர்கள் அவைகளை வளைத்துப் பிடிக்கும் கொடிகளைக் கூரிய வாளால் வெட்டி அப்புறப்படுத்த வேண்டும். பிரபஞ்ச வாழ்க்கை வாழ்ந்து வருகிற மானுடன் ஒருவனை உலகப்பற்றுக்கள் அனைத்தும் ஒன்றுகூடி உலக வாழ்க்கையிலேயே கட்டிப்பிடித்து வைக்கின்றன. இந்தப் பந்த பாசங்கள் பொருளற்றவைகள் என்னும் விவேகம் உதயமானால் அது கூரிய வாளுக்கு நிகர். அத்தகைய விவேகம் என்னும் வாளைக்கொண்டு மனிதன் ஒரு நொடிப்பொழுதில் உலகத்தளைகளையெல்லாம் துண் டித்துவிட்டுத் தெய்வத்தின்பால் தன்னைத் திருப்புவது சாத்தியமாகிறது. அத்தகைய நன்னாள் விரைவில் வந்து அமையவேண்டும் என்பது இக்கண்ணியின் கருத்து.

177. எந்தஉட லேனும் எடுத்தஉடல் நல்லதுஎன்று
சிந்தைசெய வந்ததிறம் செப்பாய் பராபரமே.

ஒவ்வொரு ஜீவாத்மனும் தான் தான் எடுத்துள்ள சரீ ரத்தில் திருப்தி அடைந்து இருக்கிறான். ஆதலால்தான் மாயப் பிரபஞ்ச வாழ்க்கை இனிது நடைபெற்று வருகிறது. புழு, பூச்சி, பறவை, விலங்கு ஆகிய ஜீவவகைகள் யாவும் அதனதன் உடல் வாழ்க்கையில் இன்புற்று இருக்கின்றன. இத்தனைவித உடல் வகைகளின் வாயிலாக ஜீவாத்மன் கீழ் நிலையினின்று மேல் நிலைக்குப் பரிணமித்து வருகிறான்.

மானுட சரீரத்தை எடுக்கிற பெருநிலைக்கு வந்தான பிறகும் ஒவ்வொரு ஜீவனும் தான் தான் எடுத்துள்ள சரீரத் தில் அபிமானம் மிகப் படைத்து இருக்கிறான். ஆப்ரிக்கா வில் பிறந்துள்ள நீக்ரோ தன்னுடைய கன்னங்கரேலென்ற சரீரத்தில் அபிமானம் வைத்து இருக்கிறான். அதேபோல் ஐரோப்பிய தேசத்தான் தன்னுடைய வெண்மை உடலிலும்,

ஆசியாக் கண்டத்தின் கீழ்ப்பகுதியில் உள்ள மங்கோலியன் தன்னுடைய மஞ்சள் மேனி மீதும், இந்தியன் பழுப்புநிற உடலின் மீதும் அபிமானம் வைத்திருக்கிருர்கள். 'எவ்வுடல் எடுத்தார் அவ்வுடல் வாழ்க்கை இன்பம் எனவே, துன்பம் இலே என' என்பது தாயுமானவர் வாக்கு. உயிர்களின் மனநிலேயே இக்கூற்றுக்குச் சான்ருகிறது.

மானுட சரீரம் எடுத்துள்ள ஜீவனுல்தான் எண்ணிப் பார்க்கும் சாத்தியம் உள்ளது. இறைவனேப்பற்றிச் சிந்திக்கவும் சாத்தியமாகிறது. ஆகையால் மானுடன் யாவரும் உடலபிமானத்தை விட்டொழித்துப் பரநாட்டம் கொள்ளவேண்டும் என்பது இக்கண்ணியின் கருத்து.

178. பொய்எல்லாம் ஒன்ருய் பொருத்திவைத்த
பொய்உடலே
மெய்என்ருல் மெய்யாய் விடுமோ பராபரமே.

பொருத்தி வைத்தல்-சீராகச் சேர்த்துவைத்தல். மெய்-உடல், உண்மை.

மானுட உடல் ஐம்பூதங்களால் ஆனது. இந்த உடலுக்கு மெய் என்பது மற்ருெரு பெயர். உடல் நிலேயற்றது என்பதை நாள்தோறும் நாம் கண்டுவருகிருேம். பிறந்தது முதற்கொண்டு மேனியானது சதா மாறியமைந்துகொண்டு இருக்கிறது. அது ஜீரணமாவதால் சரீரம் என்னும் காரணப் பெயர் அதற்கு வந்துள்ளது. வாழ்ந்திருக்கும்பொழுதே அது தகனமாய்க்கொண்டிருப்பதால் தேகம் என்னும் காரணப் பெயர் அதற்கு வந்துள்ளது. செத்த பிணம் தகனம் செய்யப்படுகிறது. சில மணி நேரத்தில் பஞ்சபூதங்களுள் அது சிதறுண்டு இருக்குமிடம் தெரியாது மறைந்துபட்டுப் போகிறது. நாள்தோறும் இந்நிகழ்ச்சி நிகழ்ந்து வருகிறது.

எது ஒரு காலத்தில் இருந்து மற்றொரு காலத்தில் இல்லாது மறைந்துபட்டுப் போகிறதோ, அதுபொய் எனப் புறக்கணிக்கப்படுகிறது. வடிவெடுத்து இருக்கிறபொழுதும் அது மெய்ப் பொருளாகாது. அப்படி இருந்தும் பொய்யான உடலை நாம் உபசாரத்துக்காக மெய் என்று கூறுகிறோம். அப்படிக் கூறுவதை முன்னிட்டு அது ஒருபொழுதும் மெய்ப் பொருள் ஆகாது. இது உடலைப்பற்றிய உண்மை என்றாலும் மானுடர் எல்லாரும் மயக்கத்துக்கு ஆளாகித் தங்கள் உடலை மெய் என்றே கருதி வருகின்றனர். ஆனால் ஆத்ம சாதகர்கள் அங்ஙனம் கருதலாகாது. அவர்கள் யாண்டும் ஆத்மபோதத்தில் திளைத்திருப்பது முறை. நிழலை உலகத்தவர்கள் பொருள்படுத்தாது இருப்பதுபோன்று ஆத்ம சாதகன் உடலைப் பொருள்படுத்தாது இருக்கவேண்டும். உடலை நிலையற்றது என்று சதா உணர்கின்றவர்களே சாதனத்தில் முறையாக ஈடுபடுகின்றனர் என்பது இக்கண்ணியின் கருத்து.

179. மின்அனைய பொய்உடலை மெய்என்று நம்பிஐயோ
நின்னை மறக்கை நெறியோ பராபரமே.

மின்அனைய-மின்னலை ஒத்த; மறக்கை-மறந்திருப்பது; நெறியோ-நல்ல மார்க்கமாகுமோ?

அழிந்துபட்டுப்போம் பாங்கில் மின்னலுக்கு நிகரானது ஏதுமில்லை. அந்த மின்னலுக்கு ஒப்பானது மானுடன் படைத்துள்ள மெய் அல்லது உடல். இதில் வாஞ்சை வைப்பது பொருளற்றது. எப்பொழுதெல்லாம் உடலபிமானம் வருகிறதோ அப்பொழுது எல்லாம் அதன் நிலையாமையை ஞாபகத்துக்குக் கொண்டுவரவேண்டும். உடலினுள் நிலைபேறு உடையபொருளாகிய இறைவன் குடிகொண்டுள்ளான். அந்த இறைவனைப்பற்றிய எண்ணமே வலுத்துவர

வேண்டும்.வேதாந்தபரிபாஷையில் அது ஆத்மபோதம் எனப் படுகிறது. ஆத்ம போதம் ஓங்குதற்கேற்பத் தேகாத்ம புத்தி அல்லது உடலைத் தான் என்றுகருதுகிற மயக்கம் பின்னணிக் குப்போகிறது. வெயிலில் நடக்கும் பொழுது நம் மேனியின் நிழல் நிலத்தில் படுகிறது. அந்த நிழலை நாம் பொருள் படுத்துவது இல்லை. அதே பாங்கில் உடலை நாம் பொருள் படுத்தாது இருந்து பழகவேண்டும். உடலைப் பொருள்படுத் துவது தேகாத்மபுத்தி என்னும் பெயர் பெறுகிறது. தேகாத்மபுத்தியே ஆத்ம சாதனத்துக்கு விக்கினமாகிறது. ஆத்மபோதத்தைப் பெருக்கவும் தேகாத்ம புத்தியைத் துடைக்கவும் செய்வது நல்ல ஆத்ம சாதனமாகிறது. அத் தகைய தீவிர ஆத்ம போதத்தில் திளைத்திருத்தல் வேண்டும் என்பது இக்கண்ணியின் கருத்து.

180. நித்தியம்ஒன்று இல்லாத நீர்க்குமிழி போன்ற உடற்கு
இத்தனைதான் துன்பம்உண்டோ என்னே பராபரமே.

என்னே—என்ன விந்தை; நித்தியம் - நிலைபேறு.

எதற்குத் தொடக்கம் உண்டோ அதற்கு முடிவும் உண்டு. நித்தியமாய் இருப்பதற்குத் தொடக்கம் இல்லை. ஆதலால் அதற்கு முடிவும் இல்லை. ஆத்மா நித்தியமானது; அதற்குப் பிறப்பில்லை; இறப்பும் இல்லை. அத்தகைய ஆத்மா மயக்கத்தை முன்னிட்டுச் சரீரம் எடுத்துக்கொள் கிறது. சரீரத்தோடு சம்பந்தப்பட்ட ஆத்மா ஜீவாத்மன் எனப்படுகிறுன். சரீரத்தை உடல் என்கிறோம். அது நீர்க் குமிழிக்கு ஒப்பானது. நீரினுள் உருவெடுக்கும் குமிழி ஒரு நொடிப்பொழுதில் அழிந்துபட்டுப்போம் பாங்குடையது. அது எவ்வளவு நேரம் நிலைத்திருக்கும் என்று யாரும் இயம்ப இயலாது. அதே போன்று மனிதனின் உடல் எப்போது

அழியும் என்று கூறமுடியாது. எப்போது வேண்டுமானலும் உடலுக்கு அழிவு நேருமாகையால் அதன் அழிவுக்கு யாண்டும் மனிதன் ஆயத்தமாயிருக்கவேண்டும். உடல் நிலைத்திருக்கும் காலத்தில் அதை நன்கு காப்பாற்றி வைக்கலாம்; சத்காரியத் துக்குப் பயன்படுத்தலாம். ஆனல் அதன் இருப்பைப்பற் றியோ அழிவைப் பற்றியோ மனிதன் துன்பப்பட வேண்டிய அவசியமில்லை. அவசியமில்லாத துன்பத்தை அவன் தலை யில் தூக்கிப்போட்டுக் கொள்கிருன். அஞ்ஞானத்தால் துன்டத்தை அவனே சிருஷ்டித்துக் கொள்கிருன். அவன் சிருஷ்டித்துக் கொள்ளுகிற துன்பத்துக்கு முடிவில்லை. துன் பப்படாது இருக்க வேண்டிய மனிதன் ஏன் இவ்வளவு துன்பப்படுகிருன் என்பதுதான் விந்தை. உடலுக்கு வருகிற நோய் நொடிகளைக் குறித்தோ, அதனின் குறை நிலையைக் குறித்தோ கவலையற்று இருக்கவேண்டும். அது அழியுங் கால் அதைப் பொருள்படுத்தாது இருப்பவன் ஜீவன் முக்தன் ஆகிருன். அவன் படைத்துள்ள சாந்தமான மனப் பான்மையை எல்லாரும் பெறவேண்டும் என்பது இக் கண்ணியின் கருத்தாம்.

181. தேகம்இறும் என்றுஜடர் தேம்புவதுஎன் நித்திரை யில்
ஊகம்அறிந் தால்பயம்தான் உண்டோ பராபரமே.

இறுதல்-பழுதுபடுதல். ஜடர்-ஜடபுத்தியுள்ள (உலகப் பற்றுள்ள) மக்கள். தேம்புவது-விம்மியழுவது. ஊகம்-யுக்தி அல்லது நல்லறிவு.

நித்திரை அல்லது கனவற்ற உறக்கம் மரணத்துக்கு நிகரானது. அயர்ந்து உறங்குகிற ஒருவன் அதே சரீரத்தில் ஞாபகம் பெறுவானுகில் அந்த உறக்கத்துக்கு நித்திரை என்று பெயர். அதே சரீரத்தில் ஞாபகம் பெருது வேறு

ஒரு சரீரம் எடுக்க அந்த ஜீவன் போய்விடுவானுகில் பழைய சரீரத்துக்கு மரணம் என்னும் பெயர் வருகிறது. இதை நன்கு யூகித்து எண்ணிப் பார்த்தால் உறக்கத்தைக் குறித்து மனிதன் எப்படிப் பயப்படுவதில்லையோ அப்படி மரணத்தைக் குறித்தும் அவன் பயப்படாது இருத்தல் வேண்டும். ஆனல் அஞ்ஞானத்தில் உழலும் ஜடபுத்தியுள்ள மனிதனுக்கு அது சாத்தியமாவதில்லை. எடுத்த உடல் ஒன்றுக்கு மரணம் வருவது ஒரே ஒருதடவை. ஆனல் அதன் அழிவைக் குறித்து மனிதன் எத்தனை எத்தனை தடவை துயரப்பட்டுக்கொண்டு இருக்கிருன். சுடர் விளக்கு போன்று ஞானத் தெளிவுடன் மனிதன் வாழ்ந்து வருதல்வேண்டும். மனிதனின் உடலுக்கு நோய் நொடி ஏற்படும்போது உடல் அழியுமே என்று துன்புறுவதாலோ, விம்மி அழுவதாலோ அதன் அழிவையோ தேய்வையோ மாற்றமுடியாது. வீணே துன்பப்பட்டதுதான் அவனுக்கு வாய்த்த வினைப்பயன். இந்த உடல் இருக்கும்வரையில் சரியான ஞானத்தோடும், மகிழ்வோடும் வாழ்ந்திருப்பது முறை. உடல் அழிந்துபட்டுப் போம்பொழுது அமைதியாக அந்த அழிவுக்கு உடந்தையாய் இருப்பது முறை. இப்படி நடந்துகொள்வது சான்றோர் செயல். மற்றவர்கள் (ஜடர்) உடலின் பாங்கைக்குறித்துப் படாதபாடு படுகின்றனர். அவ்வாறு துன்புறுதல் பொருந்தாது என்பது இக்கண்ணியின் கருத்து.

182. ஏதைச் சுமையா எடுப்பார் எடுத்தஉடல்
சேதம்உறின் யாதுபின்னே செல்லும் பராபரமே.

சேதமுறின்-அழிந்துபட்டுப்போம்பொழுது.

ஜீவாத்மன் வாழ்ந்திருக்கும் காலமெல்லாம் ஸ்தூல சரீரத்தைச் சுமையாகக் கருதுகிருன். சூட்சும சரீரமாகிய மனத்தில் படுகிற அல்லல்களையும் மனச்சுமையாகச் சுமந்து

திரிகிறுன். சுமை சுமக்கும் வேலையாளாக இவன் வாழ்ந் திருக்கிறுன். செத்த பிறகு இவனுடைய ஸ்தூல சரீரத்தை வேறு சிலர் சுடுகாடு வரையில் தூக்கிச் செல்லுகின்றனர். இவனுடைய மனச் சுமை தோன்ருநிலை எய்துகிறது. வாழ்ந் திருக்கும் காலமெல்லாம் உடல் சுமையையும், மனச் சுமை யையும் தூக்கித் திரிகிறவர்கள் மரணதசையில் கொஞ்ச நாளைக்குச் சுமை சுமக்காதவர்களாக இருக்கிருர்கள். அயர்ந்த உறக்கத்தில் எப்படி ஒருசுமையும் இல்லையோ அப்படி மரணத்திலும் சுமையொன்றும் இல்லை. ஆனுல் மறுபிறவியில் உடல் சுமக்கும் வினைப்பயன் அவனிடத்து எஞ்சி இருக்கிறது. உடல் சுமக்க ஏதுவாயிருக்கும் கர்மச் சுமை ஒழியவேண்டும். கர்மச்சுமை ஒழிதற்கு அஞ்ஞான இருள் அகலவேண்டும். அத்தகைய ஞானத்தைப் பெறும் வரையில் சுமை தூக்கும் ஆளாக மனிதன் இருந்தாகவேண் டும். அத்தகைய பரிதாபகரமான நிலைக்குப் பரம்பொருளே முடிவு ஒன்று வரவேண்டும் என்பது இக்கண்ணியின் கருத் தாம்.

183. **தோல்பாவை நாலாள் சுமைஆகும்**
ஜீவன்ஒன்றுஇங்கு
ஆர்ப்பால் எடுத்ததுஎவ ராலே பராபரமே.

ஆர்ப்பால்-ஆரவாரத்துடன்; தோற்பாவை-தோலினுல் செய்த வடிவம். மானுட சரீரம் எலும்பு, தசை, இரத்தம், கொழுப்பு, தோல், உரோமம் ஆகியவைகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள பதுமையாகும். பிராரப்த கர்மம் இருக் கும் வரையில் மானுடன் ஒருவன் தனக்குத் தானே அமைத் துக்கொண்ட தோற்பாவையைத் தானே சுமந்து திரிகிறுன். பிராரப்த கர்மம் முடிவுறுங்கால் அந்தத் தோல்பாவை சவ மாகிறது. அச்சவமானது சுடுகாட்டுக்குத் தூக்கிச் செல்

லும் நான்கு ஆட்களுக்குத் தோளின் சுமையாகிறது. உயிர் வாழ்ந்திருக்குங் காலத்தில் இந்தத் தோல்பாவையை உண்டு பண்ணிக்கொண்டவன் மேலும் ஆரவாரம் செய்கின்றான். ஆரவாரம் என்பது அவன் புதிதாகச் செய்துகொண்ட கர்ம மாகிறது. ஒவ்வொரு பிறவியிலும் ஒவ்வொரு ஜீவனும் கர் மத்தை மேலும் மேலும் வளர்க்கிறான். கர்மம் வளர்வதால் அதற்கேற்றபடி புதிய உடல்களை அவன் எடுத்தாகவேண் டும். கர்மம் வித்து; உடல் அதன் விளைவு. இச்செயலை எண்ணிப் பார்க்குங்கால் இது பரிகாசத்துக்கு உரியதா கிறது. முடிவிலா கர்மத்தின் விளைவாகத் தோல்பாவை யைத் தோற்றுவித்துக்கொண்டேயிருக்கிறான். ஒரு தோல் பாவையைத்தான் தூக்கிச் சென்று சலித்துப் போன பிறகு வேறு நான்கு பேர்களிடம் அதை ஒப்படைத்துவிட்டுப் புதிய தோல்பாவையை எடுக்கப் போகிறான். இவ்வாறு கர்மம் வளர்ந்துகொண்டே போனால் தோல்பாவையை உண்டு பண் ணும் பொருளற்ற இச்செயல் வந்துகொண்டே இருக்கும். அக்ஞானத்தில் உழலும் ஜீவன் அடாத இச்செயலை ஞானோ தயத்தால் ஒதுக்கித் தள்ளிவிட்டுப் பரத்தை அடையக் கடமைப்பட்டு இருக்கிறான் என்பது இதன் கருத்தாம.

184. ஞாலத்தை மெய்எனவே நம்பிநம்பி நாளும்என் தன்
காலத்தைப் போக்கிஎன்ன கண்டேன் பராபரமே.

ஞாலம்-உலகம். முக்தி அடைவதே ஜீவாத்மாக்களின் குறிக்கோள் ஆகிறது. பிரபஞ்ச வாழ்வு முற்றிலும் பயனற் றது எனக் கருதலாகாது. அதில் பிரயோஜனம் ஒன்று உள் ளது. ஜீவாத்மாக்கள் சிற்றுயிர்களாயிருந்து பேருயிர்களாகப் பரிணமிப்பதற்குப் பிரபஞ்ச வாழ்வு முற்றிலும் அவசிய மானது. பக்குவம் அடைந்தான பிறகு மேலும் உலகில் கட்டுண்டு கிடப்பது பொருளற்றது. பிஞ்சானது முதிர்ந்து

கனியாகும் வரை மரத்தைப் பற்றிப்பிடித்துக்கொண்டு இருக்கிறது. மரத்தைப் பற்றிப் பிடித்துக்கொண்டு இருந்ததால் மரத்தினின்று அது சாரத்தை வாங்கியது. பக்குவமாகிக் கனியானவுடன் சிரமமின்றித் தன்னை மரத்தினின்று பிரித்துக் கொள்கிறது. கனி எவ்வாறு மரத்தினின்று எளிதாகப் பிரிகிறதோ அவ்வாறே ஆத்ம பரிபாகம் பெறுபவன் உலக வாழ்வினின்று தன்னை விடுவித்துக் கொள்கிறான்.

பக்குவமான பிறகு உலக வாழ்வில் வீண்காலம் போக்கலாகாது. வீணே கழிக்கின்ற ஒவ்வொரு கணமும் நெடுங் காலம் போன்று சஞ்சலத்துக்கு உரியதாகும். இறைவா! பிரபஞ்ச வாழ்க்கையில் நான் பெறவேண்டியதெல்லாம் பெற்றாயிற்று. இனி, இந்த வியவகாரம் எனக்கு வேண்டாம். உடனே வந்துன்னை அடைவேனாக என்பது இக்கண்ணியின் கருத்து.

185. பொய்உலக வாழ்க்கைப் புலைச்சேரி வாதனை நின்
மெய்அருளில் மூழ்கின் விடும்காண் பராபரமே.

வாதனை—துன்பம். உலக வியவகாரத்தில் அழுக்குப் பிடித்த கீழ்மக்கள் வாழ்கின்ற இடத்தைப் புலைச்சேரி எனப் பகர்வர். பின்பு ஆத்ம பரிபாகம் அடைந்துள்ளவர்களுக்குப் பஞ்சபூதங்களால் ஆகியுள்ள புலால் உடம்பே புலைச்சேரியாகிறது. இக்கோட்பாட்டின்படி புலால் உடம்பில் பற்று வைத்திருப்பவன் புலையன். அவனுக்குச் சேரியாய் அமைந்திருப்பது பூத உடல். உடலில் வாழ்ந்திருக்கும் காலமெலாம் அதை நாள்தோறும் நீராட்டிச் சுத்தமாய் வைத்திருக்க வேண்டும். இல்லையேல் அது நாற்றமெடுத்து உலகில் நாம் காண்கின்ற புலைச்சேரிக்கு நிகராய்விடும். உடலைத் தூயதாக வைத்திருந்தாலும் அது இடையிடையே நோய்வாய்ப் படுவது இயல்பு. நோய்க்கு அது ஆளாகிறபொழுது அதில்

வசித்துள்ள ஜீவாத்மன் துன்பப்படுகிறுன். இதை ஒரு உப மானத்தால் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் விளக்குகிறுர். தனக்குச் சொந்தமல்லாத வீடு ஒன்றில் வசித்து வருபவன் அந்த வீட்டுக்கு வாடகை கொடுத்தாகவேண்டும். உடலென்னும் வாடகை வீட்டில் மனிதன் வாழ்ந்து வருகிறுன். நோய் வாய்ப்படுதல் என்னும் வாடகையை அவன் கொடுத்தேயாக வேண்டும்.

இறைவனுடைய மெய்யருள் மனிதனுக்குச் சொந்த மானது. சாதனங்கள் புரிந்து மெய்யருளேக் கண்டறிந்த பின்பு பொய்யுலக வாழ்வில் பற்றுதல் தானுக மறைந்து போகிறது. பொய்யுலகுக்குச் சொந்தமாயுள்ள பூதஉடல் வாழ்க்கையும் பொருளற்றதாகிறது. அதில் உழன்று கொண்டு மனிதன் வேதனேப்பட வேண்டிய அவசிய மில்லே. இறைவனுடைய சாந்நித்தியத்தில் நிறைந்துள்ள பேரானந்தத்தில் புதைந்திருக்க ஆத்மசாதகன் விரும்புகிறுன். இறைவா, எனக்கு நிலேயற்ற நிலவுலக வாழ்வு வேண்டாம். துன்பம் நிறைந்துள்ள தேக வாழ்வு வேண்டாம். பேரானந்தம் நிறைந்துள்ள உன் சாந்நித்தியத்தையே நான் யாண்டும் சார்ந்திருப்பேனுக என்பது இக்கண்ணியின் கருத்து.

186. நூல்ஏணி விண்ஏற நூற்குப் பருத்திவைப்பார்
போலே கருவிநன்னூல் போதம் பராபரமே.

விண்-ஆகாசம். வெட்டவெளி எத்தகைய விசாலமானது என்பதை அதைப்பற்றி எண்ணிப் பார்ப்பவர்களுக்கெல் லாம் விளங்கக்கூடும். வெட்டவெளி எல்லேயில் அடங்காதது. அதன் முடிவைக் காண மனிதன் ஒருவன் நூலேணி தயாரித்து அதன் எல்லேயைக் கண்டுபிடிக்கத் திட்டமிடுகிறுன் என வைத்துக்கொள்வோம். அத் திட்டத்தை நிறைவேற்ற முதலாவதாகப் பருத்திச்செடி பயிரிடுவானுகில் அம்

முயற்சி பொருளற்ற திட்டமென்பது சொல்லாமலே விளங்கு கிறது. அத் திட்டத்துக்கு நிகரானது மானுடன் ஒருவன் நன்னூல் என்னும் இலக்கணம் கற்பதும், பிறகு அதன் துணைகொண்டு பாரமார்த்திக மேலான நூல்கள் கற்பதும், அந்த நூலறிவைக் கொண்டு பரம்பொருளைக் கிரகிக்க முயலுவதுமாம். இந்த முயற்சி ஒருபொழுதும் நிறைவேருது. ஆதலால் மானுடனெருவன் வெறும் நூலறிவைப் பெறு வதில் காலம் போக்கலாகாது. அவன் அருளை நாடியிருத் தல் வேண்டும். அருளின் துணை கிட்டுமாகில் அவன் இதே ஜன்மத்தில் பரம்பொருளை அனுபூதியில் அடையப்பெறுப வனுகிருன். அப்படியல்லாது ஏட்டுக் கல்வியின் துணை கொண்டு பரம்பொருளை அறிந்துகொள்ளத் திட்டமிடுவது நூல் ஏணி ஏறி வானின் எல்லையை (முடிவை) எட்ட முயல்வதற்கொப்பாகிறது. இறைவா, நான் ஏட்டுக்கல்வி யில் வீண்காலம் போக்காது, உன்னருளுக்குப் பாத்திர மாவேனுக என்பது இக்கண்ணியின் கருத்து.

187. சின்னஞ் சிறியார்கள் செய்தமணல் சோற்றைஒக்கும்
மன்னும் கலைஞான மார்க்கம் பராபரமே.

முதியோர்கள் செயலை விளையாட்டாகப் பின்பற்றுவது சின்னஞ்சிறு விளையாட்டுப் பிள்ளைகளின் போக்கு ஆகும். சின்னஞ் சிறுர்கள் மணலில் சோறு சமைத்துத் தங்களுக் குள்ளே வழங்குவதாகவும், உண்பதாகவும், பாவித்து விளை யாடுவார்கள். உண்மையில் அவர்களின் செயல்கள் யாவும் வெறும் கற்பனையாம். வெறும் நூலறிவைக்கொண்டு பரத்தை அறிந்திருப்பதாகக் கற்பனை பண்ணுகிற மானுடன் அச்சிறுர்கள் நிலையிலிருக்கிருன். பரஞானம் அனுபூதியை அடிப்படையாகக் கொண்டது. நூலறிவு அதற்கு உதவாது என்பது இக்கண்ணியின் கருத்து.

188. வாசகஞா னத்தால் வருமோ சுகம்பாழ்த்த
பூசல்என்று போமோ புகலாய் பராபரமே.

பூசல்-வீண் ஆரவாரம். புகலாய்-பகர்வாயாக.

கற்கண்டு தித்திக்கிறது என்று சொல்லுவதும், அச் சொல்லைக் கேட்டு அவ்வுண்மையை அறிந்து கொள்வதும் வாசாஞானமாகும். அது அனுபவமாகாது. மனிதனுக்குப் பரமானந்தத்தை ஊட்டுவது பரம்பொருளோடு மனிதன் வைக்கின்ற இணக்கம் என்று கேட்டும், நூலைப் படித்தும் வருகிற ஞானம் அதற்கு நிகராகிறது. இத்தகைய கேள்வி யையும், நூலறிவையும் பெற்றுள்ள ஒருவன் பரமானந்தப் பிராப்தியை அடையப்பெற்றவனுகான். ஆனல் பெரும் பாலோர் நூலறிவைப் பெறுவதோடு நின்றுவிடுகின்றனர். சாதனத்தில் ஈடுபடுவதில்லை. நூலறிவை ஆதாரமாக வைத்துக்கொண்டு பரமானந்தத்தைக் குறித்துப் பெருமித மாகப் பேசுகின்றனர். அப்படிப் பேசுவதால் ஆத்ம சாதகன் தனக்குத்தானே மனக்குழப்பத்தை உண்டுபண்ணிக்கொள் கிருன். உண்மையான சாதகன் வீண்பேச்சை ஒதுக்கி வைத்துவிட்டு ஆத்மசாதனத்தில் ஆழ்ந்து ஈடுபடுகிருன். இறைவா, வெறும் வாய்ப்பேச்சை ஒதுக்கிவைத்துவிட்டு, உன்னிடத்திலுள்ள பரம சுகத்தில் நான் ஒன்றித்திருப்பது எப்பொழுது என்பது இக்கண்ணியின் கருத்தாகும்.

189. கேட்டதையே சொல்லும் கிளிபோல நின்அருளின்
நாட்டம்இன்றி வாய்பேசல் நன்ருே பராபரமே.

கிளிக்குப் பாடம் புகட்டுகிறபொழுது அது கூர்ந்து கேட்கிறது. கேட்டதைப் பிறகு அது பேசுகிறது. பேசிஞ லும் கேட்ட சொல்லின் பொருள் கிளிக்கு விளங்காது. ஒரு கிளி சங்கரா, மகாதேவா என்கிறது. மற்ருெரு கிளி அடே

மடையா என்கிறது. கேட்டுப் பழகியதின் விளைவாக இங்ஙனம் இரண்டு கிளிகள் இரண்டுவிதங்களில் ஓலமிடுகின்றன. தான் பகர்ந்தது பரமனுடைய நாமம் என்பதை ஒரு கிளி அறிந்துகொள்வதில்லை. தான் பகர்ந்தது பொருந்தாத புன்சொல் என்பதை மற்றொருகிளி அறிந்துகொள்வதில்லை. கிளி வெறுமனே வார்த்தைகளைச் சொல்லும். ஆனால் அவ்வார்த்தைகளின் உட்பொருளை அது அறியாது. மக்களுள் பலர் கேட்டதையே சொல்லுகின்ற கிளியின் நிலையிலிருக்கின்றனர். அன்னவர்கள் வாய்ப்பேச்சு வீரர் ஆகின்றனர். பரமனிடம் அருள்நாட்டம் அவர்களுக்கு உண்டாவதில்லை. அருள்நாட்டம் படைத்தவர்கள் பாக்கியவான்கள். அருளுக்கு அவர்கள் பாத்திரமாகின்றனர். வெறும் வாய்ப்பேச்சு வீரர்கள் கிளி போன்று கீழ்நிலையிலேயே நின்றுவிடுகின்றனர். அதனால் பயனொன்றுமில்லை. இறைவா! நான் பொருளற்ற பேச்சில் வீண் காலம் போக்கலாகாது; உன்னுடைய அருள் நாட்டத்தில் ஆழ்ந்து ஈடுபடுவேனாக என்பது இக்கண்ணியின் கருத்து.

190. வெளியாய் அருளில் விரவும்அன்பர் தேகம்
ஒளியாய்ப் பிறங்கியதும் உண்டோ பராபரமே.

வெளி-சிதாகாசம். விரவுதல்-கலத்தல். பிறங்குதல்-பிரகாசித்தல்.

பக்குவமடைந்துள்ள ஆத்ம சாதகர்கள் அருள்மயமான பரவெளியில் கலக்கின்றனர். அவர்கள் அருள் நிலையை எட்டுதற்கேற்ப உள்ளொளிபெருகுகிறது. பஞ்சபூதங்களாலாகிய தேகம் அதற்கொப்ப ஜடப் பிரகாசத்தைப்பெற வேண்டுமென்பது அவசியமல்ல. அருள் ஒளி ஐம்பொறிகளுக்கு எட்டாதது. சந்திரன், சூரியன், அக்னி ஆகியவை

களின் ஒளிகள் கட்புலனுகக் கூடியவைகள். இவ்வொளி களுக்கும் பர ஒளிக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை. அது என்றைக்கும் மாருத ஒளி. பூத ஒளியோ தோன்றி யிருந்து ஒடுங்குகிற ஒளியாம். அருள் ஒளியைப் பூத ஒளி யுடன் இணைத்து மனக்குழப்பம் கொள்ளலாகாது என்பது இக்கண்ணியின் கருத்து.

191. காலம்ஒரு மூன்றும் கருத்தில்உணர்ந் தாலும்அதை
ஞாலம் தனக்குஉரையார் நல்லோர் பராபரமே.

ஞாலம் - உலகத்தவர்கள். மனபரிபாகம் அடைந்து இருக்கிறவர்கள் இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய முக்கால நிகழ்ச்சிகளையும் உணரவல்லவராகின்ருர் கள். ஆனல் சாதாரண மக்களுக்குத் தங்கள் ஜீவிதத்தில் முன்பு நிகழ்ந்த ஏதோ சில நிகழ்ச்சிகள் ஞாபகத்தில் இருக் கின்றன. பெரும் பகுதி மறந்துபட்டுப் போகின்றன. நிகழ் காலத்தில் இருப்பவைகள் பெரும்பகுதி சாதாரண மனிதர் களுக்கு விளங்குகின்றன. மற்று எதிர்கால நிகழ்ச்சிகளோ மறைந்துபட்டுக் கிடக்கின்றன. உலகத்தவர்களுக்கு அங்ஙனம் எதிர்கால நிகழ்ச்சிகள் கட்புலனுகாதிருப்பதுதான் பொருந்தும். முக்காலத்தை அறிந்துள்ள ஞானியொருவ னுக்கு ஜீவாத்மன் ஒருவனுடைய பூர்வஜன்மம் யாது என்பது விளங்கலாம். ஆனல் அவன் அதை உலகத்தவர்களுக்கு எடுத்து உரைப்பதில்லை. மற்ருெரு மனிதன் எப்பொழுது மரணமடையப் போகிருன் என்பதும் அந்த ஞானிக்குத் தெரிந்து இருக்கலாம். ஆயினும் அதை அவன் உலகத்தவர் களுக்கு எடுத்து இயம்புவதில்லை. இயம்பினல் உலக நடை முறைக்கு இழுக்கு ஏற்படும். ஆதலால் காலத்திரயத்தில் (முக்காலங்களில்) மறைந்து கிடப்பவைகளை வெளிப்படுத் தாது இருப்பது நல்லவர்களின் பாங்கு ஆகும்.

192\. கொல்லா விரதம்ஒன்று கொண்டவரே நல்லோர்மற்று
அல்லாதார் யாரோ அறியேன் பராபரமே.

உயிர்கள் அனைத்தும் பரத்தினின்று வடிவெடுத்து வந்திருக்கின்றன. ஆதலால் உயிர்கள் அனைத்தையும் நேசிப்பது பரம்பொருளை நேசிப்பதற்கு நிகராகிறது. உயிர்கள் ஒன்றையொன்று கொல்லும் பாங்குடையவைகளாய் இருக்கின்றன. அப்பாங்கை நல்லோர் ஒதுக்கித் தள்ளி விடுகின்றனர். பிற உயிர்களுக்குத் தீங்கு செய்ய வல்லவராயிருந்தும் நல்லோர் எவ்வுயிர்க்கும் தீங்கு செய்வதில்லை. எவ்வுயிரையும் வதைக்க அவர்கள் முற்படுவதில்லை. தம்முயிருக்கு நிகராக மற்ற உயிர்களையும் கருதுவதால் கொல்வதைப் பற்றிய எண்ணம் அவர்கள் உள்ளத்தில் உதிப்பதில்லை. பிற உயிர்கள்மூலம் வரும் தீங்கை சகித்துக்கொள்கின்றனர். அத்தகைய நல்லார்க்குப் புறம்பாக ஏனைய உயிர்கள் ஒன்றையொன்று கொல்லும் பிரபஞ்ச வாழ்வில் உழன்று கொண்டிருக்கின்றன. நல்லார் மட்டுமே பிரபஞ்சத்திலுள்ள செயல்களுள் கொல்லுதல் என்னும் புல்லிய செயலில் கலந்து கொள்வதில்லை. ஆக, நல்லார்க்கு அமைந்துள்ள பல விளக்கங்களுள் அவர்கள் கொல்லா விரதத்தில் நிலை பெற்றிருப்பது நல்லதொரு விளக்கமாகிறது.

193\. இல்லாத காரியத்தை இச்சித்துச் சிந்தைவழி
செல்லாமை நல்லோர் திறம்காண் பராபரமே.

சிந்தை—மனம்; திறம்—வல்லமை. மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம் என்பது கோட்பாடு. மனம் எவ்வழியில் செல்லுகிறது என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். சாதாரணமாக மக்களின் மனம் ஐம்பொறி வழியே புலன் இன்பத்தை நாடிச் செல்லும் பாங்குடையது.

பொறி வழியே மனத்தைச் செல்லவிடாமல் கட்டியாள்கின்ற வர்களே நல்லோராகின்றனர். அப்பெருமக்கள் அழிந்துப் பட்டுப் போகின்ற உலக இன்பங்களில் ஈடுபடுவதில்லை. மேலும் அழிந்து பட்டுப்போகிற பிரகிருதிக்குரிய கிருத்தி யங்களில் (காரியங்களில்) ஆசை வைப்பதில்லை. ஆசையை ஒழிப்பதற்கேற்பச் சிந்தையானது அடங்கியிருக்கிறது. சிறுநெறி சென்று, சிறிய காரியத்தைப் புரிந்து இன்பத்தைப் பெற்றுப் பிறகு துன்பத்தில் உழல்வது உலகத்தவர்போக்கு. ஆனால் நல்லோர் அத்தகைய அற்ப காரியங்களில் ஒருபொழு தும் ஈடுபடுவதில்லை. பரமனை அடைவதற்கேதுவான பார மார்த்திக பேரியக்கங்களிலேயே அவர்கள் யாண்டும் ஈடுபடு கின்றனர். அது அன்னவர்களின் உறுதிப்பாடு. ஆதலால் அவர்கள் பரமனை அடைய வல்லவராகின்றனர். அத்தகைய பாங்கை யானும் பெறுவேனாக என்பது இக்கண்ணியின் கருத்து ஆகும்.

194. ஏதுவந்தும் ஏதுஒழிந்தும் என்னதுயான் என்னார்கள்
போதநிலை கண்ட புலத்தோர் பராபரமே.

போத நிலை—ஞானநிலை; புலத்தோர்—மேலாம் ஞான பூமியில் வசிப்பவர். ஒன்றைப் பெறுவதும், பிறகு அதை இழப்பதும் பிரபஞ்ச வாழ்க்கையின் பாங்கு ஆகும். உலகப் பொருள்களைப் பெறும்போது மகிழ்வும் அதை இழக்கும் போது துக்கமும் உள்ளவர்களாக மக்கள் இருந்து வருகின் றனர். 'என்னுடையது' என்று உலகப்பொருள்களில் மனிதன் மமகாரம் பூணலாகாது. மனிதன் உலகப்பொருள் களைத் தன்னுடையவைகள் என்று மமகாரம் பூணாது இருப் பானாகில் அவன் பாக்கியவானாகிறான். சுவாசிக்கும் காற் றைத் தன்னுடையதென்று உரிமை பாராட்டாது இருப்பது போன்று உலகப்பொருள் அனைத்திடத்தும் உரிமை

பாராட்டாது மனிதன் இருப்பானாகில் அவன் மேலோன் ஆகிறான். அவனே வாழ்வாங்கு வாழ்பவனாகிறான்.

அடுத்தபடியாக யான் என்று அகங்கரிக்கும் பாங்குடையவனாக மனிதன் இருக்கிறான். உடலைத் தான் என்று அகங்கரிப்பது மனிதனுக்குச் சர்வசாதாரணம். உடலின் நிலையாமையை மனிதன் எண்ணிப்பார்க்கவேண்டும். போத நிலை அல்லது ஆத்ம சொரூபமே மனிதனுக்குச் சொந்தம். அது மேலான ஞான பூமியாகிறது. வீடு பேறு என்பது அதுவே. இங்கு வந்துள்ள காரியத்துக்கு மனிதன் உடலைப் பயன்படுத்தவேண்டும். காரியத்தை விரைவில் நிறைவேற்ற வேண்டும். பின்பு உடலை ஒதுக்கித் தள்ளவும் வேண்டும்.

ஞானபூமியைத் தங்களுக்குச் சொந்தமான இடமென்று தெளிந்துள்ள மேலோர் பிரபஞ்சத்தில் எதிலும் கட்டுண்டிராது இனிது வாழ்ந்திருந்துவிட்டுச் சொந்த இடமாகிய பரத்தை நோக்கி அவர்கள் அமைதியாக வெளியேறுகின்றனர். அத்தகைய பாங்கு எனக்கும் அமைவதாகுக என்பது இக் கண்ணியின் கருத்து.

195. ஆயிரம்சொன் னாலும் அறியாத வஞ்சநெஞ்சப்
பேயரொடு கூடின் பிழைகாண் பராபரமே.

நல்லார் எனவும் அதாவது தெய்வ சம்பத்துக்கள் வாய்க்கப் பெற்றவர்கள் எனவும், பொல்லார் எனவும் அசுர சம்பத்துக்கள் வாய்க்கப்பெற்றவர்கள் எனவும் இருவகையான மக்கள் உலகில் உண்டு. பேய்க்குணம் கொண்ட அசுரர்களை நல்வழிக்கு வரும்படி யுக்தி பூர்வமாக எவ்வளவுதான் தூண்டுதல் போட்டாலும் அவர்களுடைய மனம் மாறாது. கெட்ட வழியிலே மேலும் மேலும் செல்லும். பல பிறவிகளில் துன்மார்க்கத்தில் சென்று துன்பத்தை ஏராள

மாக அனுபவித்த பிறகே நல்வழிக்கு அன்னவர்கள் திரும்பு கின்றார்கள். பக்குவமாதற்கு முன்பு அவர்களுக்கு நல்வழி யைப் போதிப்பது பயன்படாது.

சன்மார்க்கத்தில் செல்லுபவர்கள் கெட்ட மக்களிட மிருந்து விலகியிருத்தல் நலம். பொல்லாத மக்களுடன்கூடி வாழ்ந்து அவர்களைத் திருத்தும் திறன் ஒரு சிலருக்கு இருக் கக்கூடும். அத்தகைய உயர்ந்தோர் பக்குவமுள்ள அசுரர் களை நல்வழிப்படுத்துகின்றனர். இவ் அரிய செயலைச் செய்ய எல்லார்க்கும் சாத்தியப்படாது. சன்மார்க்கத்தில் சென்று கொண்டு இருப்பவர்கள் தீயவர்களுடன் எவ்விதத்திலும் இணக்கம் கொள்ளலாகாது என்பது இக்கண்ணியின் கருத்து.

196. மாய மயக்குஒழிந்தார் மற்றுஒன்றை நாடுவரோ
நேய அருள்நிலையில் நிற்பார் பராபரமே.

இப்பிரபஞ்சம் கால தேச நிமித்த சொரூபமாய் இருக் கிறது. ஆதலால் காலத்தைக் கொண்டும், இடத்தைக் கொண்டும், நிகழ்ச்சியைக்கொண்டும் இதைப் பொருள் படுத்துகிறோம். பிரபஞ்சத்தில் இம் மூன்று இயல்புகளும் பொருளற்றவைகள் என்பதற்குச் சான்று அஞ்ஞான நிலை யில் இருக்கின்றவர்களுக்கும் நாள்தோறும் அவை வந்து கொண்டே இருக்கின்றன. ஆனால் அவற்றை முறையாகப் பொருள்படுத்துவது எல்லாருக்கும் சாத்தியமன்று. கன வற்ற அயர்ந்த உறக்கமே பிரபஞ்சம் நித்தியமானதன்று என்பதை விளக்குகிறது. அயர்ந்த உறக்கத்தில் சுமார் ஐந்து மணி நேரம் கடந்து போவது நொடிப்பொழுதுக்கு நிகராகிறது. உறக்கத்தில் மனிதன் கால அதீதத்தில் கிடக் கிறான். பின்பு இடத்தைப்பற்றிய உணர்வு மனத்தில் ஒடுங்கிவிடுகிறது. அயர்ந்து உறங்குகின்றவனுடைய உடல்

ஓரிடத்தில் இருக்கிறது. ஆனால் உறங்குகின்ற ஆத்மன் இடத்தில் கட்டுண்டு இருப்பவன் அல்லன். இடம் அடிபட்டுப் போகிறது. அடுத்தபடி அவ் உறக்கத்தில் உலக வியவகாரம் ஏதும் நிகழ்வதில்லை. கர்மாதீதத்தில் மனிதன் இருக்கிறான். இந்நிலையை மயக்கம் அல்லது அக்ஞான நிலையில் ஜீவாத்மன் அனுபவிக்கிறான். தெளிந்த நிலையில் இதை எட்டுவது சாத்தியம். சாதனங்களின் வாயிலாக மனம் தூயதாகிறது. தூயமனம் செயலற்றுப் போகவல்லது. மனம் செயலற்றதாகுமிடத்து ஆத்மசொரூபம் தன்னில் தானாய் இருக்கிறது. இதை அனுபவத்தில் பெறும்பொழுதே மனிதனுக்குப் பாரமார்த்திகப் பெருவாழ்வு தொடங்குகிறது. அப்பெருநிலையை அனுபூதியில் அடைகிறவன் உலக வியவகாரங்களில் ஈடுபடுவதில்லை. வியவகாரங்கள் பிராரப்த கர்மத்துக்கேற்பத் தற்செயலாய் நடைபெறுகின்றன. ஹிருதயம் அடிப்பதும், குழாய்கள் வாயிலாக ரத்தம் வியாபித்து ஓடுவதும் தற்செயலாய் நிகழ்வது போன்று ஞானியினுடைய நித்திய கர்மமும் தற்செயலாய் நிகழ்கிறது. அதற்கு அவன் தன்னைக் கர்த்தாவாக உணர்வதில்லை. பரத்தில் ஒன்றுபட்டவனாக இருக்கிறான். அது அருள்நிலை. பிரபஞ்ச வாழ்க்கையில் சம்பந்தப்பட்டவனாயிருப்பது மருள்நிலை. மருள்நிலைக்குத் தோற்றமும் ஒடுக்கமும் உண்டு. ஆதலால் அது மாயாகாரியம். அருள்நிலையோ யாண்டும் சாஸ்வதமானது. அஞ்ஞானத்தில் அருளை அறியாதிருக்கின்றபொழுதும் மனிதன் அருள்நிலைக்கு அன்னியன் ஆவதில்லை. அது தனக்கு யாண்டும் சொந்தமென்று அறிந்துகொள்வதே ஞானம். இத்தகைய பரஞானத்தைப் பெறுபவன் உள்ளன்போடு அருள்நிலையில் நிலைத்திருக்கிறான். மருள்நிலை தனக்குப் புறம்பாய்விடுகிறது. அதன்மீது எந்தவிதமான நாட்டமும்

கொள்வதில்லை. நாம் எங்ஙனம் நம் நிழலைப் பொருள் படுத்துவதில்லையோ அங்ஙனம் அருள்நிலையை அறிந்தவன் உலக வாழ்க்கை முறையில் கருத்தைச் செலுத்துவதில்லை. இதுவே இக்கண்ணியில் அடங்கியுள்ள கருத்தாம்.

197. நித்திரையில் செத்தபிணம் நேரும்உடற்கு இச்சை
சுத்தர்களே நல்ல துறவோர் பராபரமே. [வையாச்

உடல் வாஞ்சையை அகற்றுவது ஆத்ம சாதனத்துக்கு இன்றியமையாத செயலாகிறது. தேகாபிமானத்தை விட்டொழித்தவர்களே சுத்தர்கள் எனவும் நல்ல துறவியர் எனவும் இயம்பப்படுகின்றனர். சுகப்பிரம்மம் போன்றவர்கள் இவ் உயர்நிலையில் இருந்தார்கள். துறவு நெறியினைப் பின்பற்றுபவர்கள் யாவரும் பெண்ணாசையை அறவே விட்டொழிக்கவேண்டும் என்பது இக்கண்ணியின் கருத்து.

198. எந்நெஞ்ச மேனும் இரங்குமே நின்அருட்குக்
கல்நெஞ் சரும்உளரோ காட்டாய் பராபரமே.

உயிர் வகைகள் படிப்படியாய் வளர்ச்சி பெற்று மானுட நிலையை எட்டுகின்றன. மானுட நிலையில் திருவருளை உணரச் சாத்தியமாகிறது. சித்சக்தியின் உச்சநிலை இறைவனிடம் உள்ளது. எவ்வுயிரையும் தன்மயமாக்கும் பாங்கு பரமனின் அருளில் நிறைந்துள்ளது. அஞ்ஞான நிலையில் உள்ள மனிதர்களைத் திருவருள் படிப்படியாக ஞானநிலைக்கு மாற்றுகிறது. அத்தகைய பேராற்றல் படைத்துள்ள அருளுக்கு இலக்கு ஆகாத மானுடர் உலகில் இருப்பார்களாகில் அது வியப்புக்குரிய விஷயமாகும். ஆனால் அத்தகைய மாந்தரும் உலகில் இருக்கின்றனர். கல்லினும் கடைப்பட்ட நிலையில் அன்னவர்களின் உள்ளம் அமைந்திருக்கிறது. அசுர இயல்போடு கூடிய கல்நெஞ்சத்தவர்களை மாற்றத் திருவருள் விரும்புவ

தில்லை. திருவருளுக்குப் பாத்திரமாகாத அசுரர்களும் இவ்வுலகில் இருந்து வருகிறார்கள் என்பது இக்கண்ணியின் கருத்து.

199. மந்தஅறிவு ஆகிஇன்பம் வாயாது இருந்து அலைந்தால்
சிந்தைமயங் காதோஎன் செய்வேன் பராபரமே.

மந்த அறிவு—விவேகமின்மை. பொருளற்ற சிந்தனைகள் பலவற்றை மனிதன் தனக்குத் தானே சிருஷ்டித்துக் கொள்கிறான். அதற்கு அடிப்படைக் காரணம் மந்த அறிவு அல்லது விவேகமின்மையாம். எத்தகைய எண்ணத்தை வருவித்துக்கொள்ளுதல் எத்தகைய எண்ணத்தை ஒதுக்கித் தள்ளுதல் என்னும் விவேகம் மந்த அதிகாரி ஒருவனிடம் இல்லை. விவேகமின்மையில் பொருளற்ற ஆசைகள் பல உள்ளத்தில் உருவெடுக்க அவன் இடம் கொடுக்கிறான். மனிதன் ஒருவனுக்கு எவ்வளவு காலத்துக்கு விவேகமில்லாது இருக்கிறதோ, எவ்வளவு காலத்துக்கு ஆசையென்னும் விசை சிந்தையின்பால் செலுத்தப்படுகிறதோ அவ்வளவு காலத்துக்கு சிந்தை அடங்கியிராது. அது கூத்தாடிக்கொண்டே இருக்கும். இப்புன்மையைப் போக்குவதற்கு என்ன செய்யவேண்டும் என்னும் கேள்வி எழுகிறது. மனிதன் நல்லறிவு படைத்தவனாகவேண்டும். பொருளற்ற ஆசைகளை விசாரத்தின் மூலம் அகற்றவேண்டும். அப்பொழுது சிந்தை சலனம் நீங்கித் தெளிவுற்றதாகிறது. அது தெளிவுற்றதாகும்பொழுது தேங்கிய தடாகத்தில் சந்திரபிம்பம் உள்ளபடி தென்படுவது போன்று உள்ளத்தின் உள்ளே உள்ள ஆத்மானந்தம் மூலநிலையில் மிளிரும். அதற்காகச் சிந்தையைச் செப்பனிடவேண்டும் என்பதே இக்கண்ணியில் புதைந்துள்ள கருத்தாம்.

200. தேடினேன் திக்குஅனைத்தும் தெண்டனிட்டேன்
சிந்தைநைந்து
வாடினேன் என்மயக்கம் மாற்ருய் பராபரமே.

பகுத்தறிவு படைத்துள்ள மனிதன் ஒரு நிலைக்கு வந்த பின்பு இந்திரியசுகங்களை ஒதுக்கி வைத்துவிட்டுப் பரம னிடமுள்ள பேரானந்தத்தை நாடுகிருன். அப்படி நாடுகிற ஆத்மசாதகன் ஜன்மாந்தரங்களில் பெற்ற இயல்பினுல் தூண்டப்பெற்றுப் பரம்பொருளைப் புறவுலகில் தேடுகிருன். வெவ்வேறு க்ஷேத்திரங்களுக்கு அவன் யாத்திரை போகி ருன். நல்லாரிணக்கத்தைத் தேடியலைகிருன். பக்தியினுல் தூண்டப்பெற்றுப் புண்ணிய க்ஷேத்திரங்கள் இருக்கும் திக்குகளை நோக்கித் தெண்டமிடுகிருன். சான்ருேர்கள் இருக்கும் திக்குக்களை நோக்கியும் தெண்டமிடுகிருன். புண் ணிய க்ஷேத்திரங்களைச் சுற்றி வலம் வருகிருன். நல்லாரை வலம் வந்து வீழ்ந்து வணங்குகின்ருன். அருள் நாட்டம் பூண்டவனுய்ச் சிந்தை நைந்துருகுகிருன். அமைதி வ ப்க்க வில்லையே என்று வாடி இருக்கிருன். இத்தகைய டீ யற்சி களின் வாயிலாக அவனுக்குச் சிறிது சிறிதாக மனபரிபாகம் வருகிறது. முற்றிலும் மனம் தெளிந்தான பிறகு உண்மை ஒன்று அவன் உள்ளத்தில் உதயமாகிறது. புறவுலகில் தேடிய சாந்தி தன்னிடத்திலே இருக்கிறது. புறவுலகில் தேடிய அருள்நிலை தன்னிடத்திலேயே இருக்கிறது. புற வுலகில் தேடிய பரவஸ்து தன் உள்ளத்தினுள்ளேயே யாண்டும் ஒளிர்ந்துகொண்டிருக்கிறது. மதிமயக்கத்தால் அகத்திலுள்ள ஆத்மீகப் பேற்றினைப் புறவுலகில் பலகால் மனிதன் தேடியலைந்தான். மனிதன் தனக்குத் தானே அமைத்துக்கொண்ட மயக்கத்தை மாற்றி மனத்தெளிவை நிலைநாட்டுவானுகில் அவன் தானே பெருநிலையை எட்டிய

வனுகிருன். தான் தேடிய பேரானந்தம் தன்னிடத்தே இருக்கிறது. தெளிவடைந்தவனுக்கு அது விளங்குகிறது. தெளிவடையாதவன் சாதனங்கள் பல புரிந்து தன்னைப் பண்படுத்தக் கடமைப்பட்டுள்ளான். பண்பாடு மிக விரைவில் வாய்க்கவேண்டும் என்பதே இக்கண்ணியின் கருத்தாம்.

**201. மடிமைஎனும் ஒன்றை மறுத்துஅன்ருே என்னை
அடிமைகொளல் வேண்டும் அரசே பராபரமே.**

மடிமை – சோம்பல்.

வாழ்வில் முன்னேற்றமின்றிப் பிந்திக்கிடப்பதற்கு உற்ற காரணங்களுள் மடிமை அல்லது சோம்பல் ஒன்று ஆகும். சோம்பித் திரியேல் என்பது கோட்பாடு. மனிதனுக்கு ஹிதசத்ருவாயிருப்பது சோம்பல். காலையில் எழுந்து சோம்பேறியாய்க் கிடக்கும் ஜீவன் உளன். சோம்பித்திரிதலில் அவன் ஒருவித ஆனந்தம் காண்கிருன். மற்று மடிமையை அகற்றுதற்கு ஏற்ப மனிதன் இகலோக வாழ்வில் மேன்மையுறுகிருன். பாரமார்த்திகத்திலும் அவன் விரைந்து முன்னேறுகிருன். பூலோகத்தில் எல்லாவிதமான சம்பத்துக்களுடன் வாழ்ந்திருப்பவர்களைக் காண்கிருேம். அல்லும் பகலும் ஓயாது உழைத்ததின் விளைவாக அவர்கள் மேல்நிலைக்கு வந்திருக்கின்றனர். இகலோகத்தில் கல்வியிலும் கேள்வியிலும் மேல்நிலைக்கு வந்திருப்பவர்களைக் காண்கிருேம். வீண்காலம் போக்காது கல்வியில் கருத்தைச் செலுத்தியதின் விளைவாகவே அவர்கள் பாண்டித்தியம் மிகப் படைத்திருக்கின்றனர். இதற்கு மேல் பரநாட்டம் பூணுகிறவர்களுக்கு வீண்காலம் போக்க அவகாசமில்லை. எந்த க்ஷணத்தில் வேண்டுமென்ருலும் கூற்றுவன் வந்து தங்களைக் கொள்ளைகொண்டு போவான் என்பதை உணர்ந்து பரமனை நோக்கி வாயுவேகம் மனேவேகமாக முந்துகிற தீவிர

அதிகாரிகள் இருக்கிறூர்கள். மடிமைக்கும் இத்தீவிர அதிகாரி களுக்கும் வெகுதூரம். யார் ஒருவன் பேர்ஆர்வத்துடன் பரமனை நோக்கிச் சாதனம் புரிகின்றுனே அவன் அதிவிரை வில் பரமனை அடையப்பெறுவான். இறைவா, சோம்பலை அகற்றி உன்னை நான் பேர் ஆர்வத்தோடு நாடுவேனுக என் பது இக்கண்ணியின் கருத்து.

202. காலர்பயம் தீரஇன்பக் காற்குஅபயம் என்றுஎழுந்த
மாலை வளர்த்தனையே வாழி பராபரமே

காலர்பயம்—எமதூதர்களைப் பற்றிய அச்சம்; இன்பக் காற்கு அபயம்—இன்பக்காலுக்கு அபயம்—பேரானந்தத்தை உண்டுபண்ணுகிற தேவரீருடைய திருவடிக்கண் தஞ்சம். மால்—ஆசை; மாலை—ஆசையை.

அஞ்சுதல் ஜீவாத்மன் படைத்துள்ள இயல்புகளுள் ஒன்றுகும். ஏதேதோ உயிர்களைக் குறித்தும், பொருள்களைக் குறித்தும், நிகழ்ச்சிகளைக் குறித்தும், கால நிலைகளைக் குறித்தும் ஜீவர்கள் சர்வ காலமும் அச்சம் படைத்திருக்கின் றனர். பறவைகளையும், விலங்குகளையும், ஏனைய ஜந்துக் களையும் ஆராய்ந்து பார்த்தால் இவ்வுண்மை விளங்கும். அஞ்சுதலில் மனிதன் மற்ற உயிர்களுக்கெல்லாம் மிக்கானுக இருக்கிறுன். அவனுடைய அச்சத்திற்கு ஓர் அளவில்லை. ஆயுள், ஆரோக்கியம், லாப நஷ்டம், மான அவமானம், உற்றூர் வேற்றூர், புகழ்ச்சி இகழ்ச்சி ஆகியவைகளைக் குறித்து மனிதன் யாண்டும் மன ஏக்கம் கொண்டுள்ளான். இவை யாவற்றிற்கும் மேலாக மரணத்தைப் பற்றிய அச்சமே அவனைச் சதா வாட்டிக்கொண்டிருக்கிறது. மற்ற உயிர்கள் மரணம் வரும்போது அஞ்சுகின்றன. மனிதனே அதை எதிர்பார்த்து எப்போதும் கவலையில் மூழ்கி இருக்கிறுன்.

அச்சத்தைத் தவிர்ப்பதற்கு உபாயம் ஆசையை ஒழித்து இறைவனின் திருவடிகளில் தஞ்சம் புகுதலாகும். இறைவனின் திருவடிகளில் தஞ்சம் புகுபவன் பாக்கியவானுகிருன். 'பற்றுக பற்றற்ருன் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு' என்பது பொய்யாமொழி. ஏதோ ஒரு விதத்தில் இறைவா, உன் திருவடியின்கண் எனக்கு லவலேசமாக ஆசையுண்டாயிற்று. சிறு தீயைப் பெருந்தீயாக மூட்டுதற்கு ஏற்ப, இறைவா, நான் உன் திருவடியின்கண் கிளப்பிய அற்ப ஆசையை மிகப் பெரிதாக நீ வளர்த்துள்ளாய். இறைவா, உன்மீது வைத்துள்ள ஆசையின் விளைவாக மரணபயம் அடியோடு அகன்றுவிட்டது. இத்தகைய தெய்வீக ஆசையை என்பால் வளர்த்துள்ள தேவரீருக்கு நான் என்ன கைம்மாறு செய்ய முடியும்? உமது பேரருள் சதா வளர்ந்துகொண்டிருக்கட்டும். அது பூரணத்தில் நிலை பெற்று இருக்கட்டும். உமது பேரருளுக்கு உட்படுகிற அடியேன் போன்றவர்கள் யாண்டும் உய்வு அடையட்டும் என்று இயம்புவதைத் தவிர வேறு எவ்விதத்திலும் நன்றி காட்ட இயலாதவனுக இருக்கிறேன் என்பது இக்கண்ணியின் கருத்து ஆகும். ஆத்ம சாதகன் ஒருவனுக்கு இத்தகைய அருள் ஆசை, அருள் நாட்டம் ஓங்குமாகில் அவன் அதிவிரைவில் சாதனத்தில் முன்னேறுகிருன்.

203. நீர்ப்புற் புதமாய் நினைவுஅருட்கே நின்றுஅழியப்
பார்ப்பதுஅல்லால் வேறும்ஒன்றைப் பாரேன்
பராபரமே.

புற்புதம்-நீர்க் குமிழி; நினைவு-மனம். நீர்க்குமிழி நீரில் தோன்றிச் சிறிது நேரம் நீரின்மீது நிலைத்திருந்து பிறகு நீரினுள்ளேயே அழிந்துபட்டுப் போகிறது. நீருக்குப் புறம்பாக நீர்க்குமிழிக்கு வியக்திகிடையாது. அதாவது அதைத்

தனிப்பொருள் என்று கூற முடியாது. அந்த நீர்க்குமிழிக்கு ஒப்பானது மனிதன் படைத்துள்ள மனது. இது ஜன்மாந் திரங்களில் அழிந்துபட்டுப் போகாதிருக்கிறது. எத்தனை காலத்துக்கு மனமானது நிலைபெற்றிருக்கிறதோ, அத்தனை காலத்துக்கு எண்ணிறந்த பிறவிகளையெடுக்கிற பாங்கில் மனிதன் இருக்கிறான். மனோநாசம் உண்டாகும்பொழுதுதான் மனிதனுக்கு முக்தி வாய்க்கிறது. ஆனால் மனமோ அரசமரம் போன்றது. வெட்ட வெட்ட அது தளிர்த்துக்கொண்டே இருக்கும். கற்பாறைகளை அது பிளந்துவிடும். அரச மரத்தை அறவே அழித்துத் தள்ளுவது எளிதன்று. அங் ஙனம் மனத்தைத் தகர்த்துத் தள்ளுவது ஆகாத காரியம். அது என்னென்ன வடிவெடுத்து ஏதேதோ பாங்குகளில் வளர்ந்துகொண்டே வருகிறது. அதற்கு ஏற்பப் பிறவியை யும் பெருக்கிக்கொண்டே வருகிறது. அழிக்க முடியாத இந்த மனத்தை அழிக்க உபாயம் ஒன்றுள்ளது. பிரபஞ் சப் பொருள்களை நாடித்திரிகிற மனத்தைப் பிடித்து அருள் நாட்டத்தில் திருப்பிவிடுதல் வேண்டும். அழியும் பொருள் களை அது எவ்வளவு வேகமாக நாடுகிறதோ அவ்வளவு வேகமாக அழியாத அருளை நாடும்படி அதைத் தூண்ட வேண்டும். அருள்நாட்டம் படைப்பதற்கேற்ப மனத் துக்கு மேன்மையுண்டாகிறது. மனிதனை அல்லலுக்கு ஆளாக்கிய மனம் அருள்நாட்டம் கொள்கிறபொழுது ஆனந்தத்துக்கு ஆளாக்குகிறது. அருள்நாட்டம் கொள்ளு தற்கேற்ப மனத்தின் கொடுமை அழிந்துபட்டுப் போகிறது. இறுதியில் சித்தவிருத்தியென்னும் விகாரமும் அடிபட்டுப் போகிறது. பரத்துக்கென்றே மனத்தை ஒப்படைப்பதற்கு நிகரான செயல் வேறு எதுவும் இல்லை. பரநாட்டம் பூணு கிற அளவு பொல்லாத மனமானது பாராட்டத்தக்க மனதாக

மேன்மையுறுகிறது. பலகோடி பிறவிகளில் மனிதன் தன் மனத்தை ஏதேதோ விஷயங்களில் செலுத்தி வந்தான். ஆதலால் அதற்கு ஆதிக்கம் வளர்ந்தது. விவேகத்தைப் பெற்றுன பிறகு இந்த மனத்தை எடுத்துப் பரம்பொருள் நாட்டத்தில் பயன்படுத்தி வந்தால் மனிதன் பெறுதற்கரிய பேற்றினைப் பெறுவான். கடலில் போடப்படுகிற உப்புப் பொம்மையானது தன்னுருவத்தை இழப்பதற்கு ஒப்ப மனத்தை எடுத்துப் பரம்பொருளின்பால் போட்டுவிட்டால் அது பரத்தில் கரைந்து ஒன்றுபட்டுப் போகின்றது. மனிதன் பரத்துக்குச் சொந்தமாகிறுன். இந்த அரும்பெரும் செயலிலேயே நான் யாண்டும் ஈடுபட்டு இருப்பேனுக என்பது இக் கண்ணியின் கருத்து.

204. நீர்க்குமிழி போல்என் நினைவுவெளி யாய்க்கரையப்
பார்க்கும்இடம் எல்லாம்என் பார்வை பராபரமே.

நீர்க்குமிழி எங்ஙனம் நிலையற்றதோ, அங்ஙனம் மனத்தில் உதிக்கின்ற எண்ணமும் நிலையற்றது. ஆனல் எண்ணிக்கையில் அடங்காத எண்ணங்களை மனம் உண்டுபண்ணிக்கொண்டே இருக்கிறது. நினைவை அல்லது எண்ணத்தைத் தெய்வத்துக்குரியதாகச் செய்து வந்தால் மனத்தில் வேகம் தணிகிறது. கடைசியாக மனம் பரம்பொருளில் கரைந்து போகிறது. மனமானது தன் இயல்பை இழந்து விடுங்கால் நாம் படைத்துள்ள பார்வை தெளிவுடையதாகிறது. எங்குத் திரும்பி எதைப் பார்த்தாலும் அது பரம்பொருளாகவே தோன்றுகிறது. மனத்தைக் கரைத்து ஒடுக்கியவனுக்கு நாமரூபமயமான பிரபஞ்சக் காட்சி இல்லை. அதற்கு உபாதான காரணமாயிருக்கும் பரவஸ்துவே காட்சியில் இருக்கிறது. ஆதலால் பரமனைக் காண விரும்புகிறவர்கள் மனத்தைக் கரைத்தொடுக்கப் பழகவேண்டும். அது

ஒடுங்கியவிடத்து யாண்டும் பரத்தின் காட்சியே எஞ்சியிருக்கிறது. மனம் செயல்புரிகிறபொழுது ஐம்பூதங்களின் காட்சியும்; மனம் ஒடுங்கிய நிலையில் ஐம்பூதங்களின் நிஜநிலையாகிய பரம்பொருளின் காட்சியும் வாய்க்கிறது. இதுவே இக் கண்ணியின் கருத்து.

205. ஆடிஓய் பம்பரம்போல் ஆசையுடன் எங்கும்உனைத்
தேடிஓய் கின்றேன்என் செய்வேன் பராபரமே.

மனிதன் கொடுக்கின்ற விசைக்கு ஏற்றவாறு சிறிது நேரமோ சற்று அதிகநேரமோ பம்பரமானது சுழன்று ஓய்ந்து போகிறது. அந்த விசைக்கு நிகரானது மனிதனின் பிராரப்த கர்மம். பிராரப்த கர்மத்தை விசையாக வைத்துக் கொண்டு சரீர வாழ்க்கை நிகழ்கிறது. பிராரப்த கர்மம் ஓய்ந்ததும் சரீரம் வீழ்கிறது. அது வீழ்ந்த பின்பு அஞ்ஞானத்திலும் ஆகாமிய சஞ்சித கர்மத்திலும் உழல்பவர்கள் மறு பிறப்பெடுக்கப்போகின்றனர். பின்பு நிறைநிலையடைந்தவர்களுக்கு ஆகாமிய சஞ்சித கர்மமில்லை. அவர்கள் முக்தியடைகின்றனர். இது வாழ்க்கைத் தத்துவம். ஆசைதான் ஆகாமிய சஞ்சித கர்மத்தை வளர்க்கிறது. ஆசையை அறவே ஒதுக்கியவர்களுக்கு மறு பிறப்பில்லை. கடைசியாக வாய்த்துள்ள பிறவியைச் சாதனத்தில் செலுத்தி முடிவுக்குக் கொண்டுவருகின்றனர். இறைவா, நான் ஆசையையும் வளர்க்கின்றேன். உன்னையும் நாடி அலைகின்றேன். முரண்பாடுடைய என்னுடைய நிலை பரிதாபத்துக்கு உரியதாகிறது. என்னிடத்திலுள்ள ஆசை அழிதற்கு அனுக்கிரகம் செய்வாயாக என்பது இக்கண்ணியின் கருத்து.

206. வேதாந்தம் சித்தாந்தம் வேறுஎன்னார் கண்களிக்கும்
நாதாந்த மோன நலமே பராபரமே.

வேதத்தின் அந்தம் வேதாந்தம். உபநிஷதங்கள் வேதாந்தம் என்னும் பெயர் பெறுகின்றன. பரவஸ்துவைப் பற்றிய தத்துவங்களை உபநிஷதங்கள் விளக்குகின்றன. இப் பரவஸ்துவை அடைவதற்காக வேதாந்தத்தை (உபநிஷதங் களை) பிரமாணமாகக்கொண்டு ஆறு சமயங்களும் ஆறுவித சித்தாந்தங்கள் ஆகின்றன. இக்கோட்பாட்டை மேலும் தெளிவுபடுத்துவோம். காசிக்குச் செல்வதற்கு வெவ்வேறு பட்டணங்களில் இருந்து வெவ்வேறு பாதைகள் இருக்கின் றன. இத்தனை பாதைகளுள் நான் இன்னபாதையில் போகிறேன் என்று ஒருவன் தீர்மானம் பண்ணுகிறான். அவ னுக்குரிய பாதையை அவன் சித்தாந்தப்படுத்தினான் என் பது கோட்பாடு. பாதைகள் அனைத்தின் தொகை வேதாந் தம். அதில் தெள்ளி எடுத்த ஒரு பாதையானது அதை எடுத்தவனுக்குச் சித்தாந்தம். இதுவே அடிப்படை உண்மை. இது இப்படி இருக்க ஒரு சிலர் வேதாந்தம் என்பது ஒரு மார்க்கம்; சைவசித்தாந்தம் என்பது வேதாந்தத்தோடு சம்மந்தப்படாத மற்றொரு மார்க்கம் என்று வாதிக்கின்றனர். அத்தகைய வாதம் பொருளற்றது. நல்ல ஆத்மசாதகன் வேதாந்தத்தையும், சைவசித்தாந்தத்தையும் வெவ்வேறான வைகள் எனப்பொருள்படுத்தமாட்டான். இரண்டையும் இரண்டு கண்களாகப் பொருள்படுத்துகிறான். இரண்டு கண்களுக்கும் பொதுவாக ஒரே காட்சிதான் வாய்க்கிறது. ஒவ்வொரு கண்ணுக்கும் தனித்தனி காட்சியாக இரண்டு காட்சிகள் வாய்ப்பதில்லை. இரண்டு கண்களையும் கொண்டு ஒரே காட்சியைத்தான் மனிதன் கண்டு களிப்புறுகிறான். நல்ல ஆத்மசாதகன் வேதாந்தத்தில் அடங்கியுள்ள எந்தச் சித்தாந் தத்தைக் கையாண்டாலும் அல்லது வேதாந்தம் வேறு, சைவ சித்தாந்தம் வேறு என்று பாகுபடுத்தி இவ் இரண்டினுள்

எதை முறையாகக் கையாண்டாலும் அவன் ஒரே பரம் பொருளை அடைகிருன். பரம்பொருள் ஒன்று. அது பல ஆகமாட்டாது. அப்பரம்பொருள் ஓசைக்கு அப்பாற்பட்டது. நாதம் என்பது ஓசை. நாதத்தின் அந்தம் என்பது ஓசையைத் தாண்டிய நிலை. பரவஸ்துவானது ஓசை ஒலிக்கெல்லாம் அப்பாற்பட்டதாய் இருப்பதால் (நாத+அந்தம்) நாதாந்தப் பொருளாக இருக்கிறது. ஓசைக்கு அப்பால் இருப்பதால் அது மோனம் அல்லது மௌன நிலை. அதை அடையப்பெறுகிறவனுக்கு அதைவிடப் பெரியபேறு எதுவுமில்லை. ஆதலால் அது நலம் எனப்படுகிறது. இறைவா, நான் சமயச் சழக்கில் அகப்பட்டுக்கொண்டு வீண் விவாதம் செய்து பாழ்பட்டுப் போகாது வேதாந்தத்தையோ, அதன் அம்சமாக இருக்கின்ற சைவசித்தாந்தத்தையோ முறையாக அனுஷ்டித்து உன்னை அடையப் பெறுவேனாக என்பது இக்கண்ணியின் கருத்து.

207. ஆனந்தம் ஆனநின்னை அன்றிஒன்றை உன்னாத
மோனம் தமியேற்கு முக்தி பராபரமே.

பரம்பொருள் ஆனந்த சொரூபமாயும், பேரானந்த சொரூபமாயும் உள்ளது. ஆனந்தம் பிரம்மம் என்பது கடவுளுக்கு உற்ற விளக்கங்களுள் ஒன்று. சாதகன் முறையாகச் சாதனங்களைச் செய்து ஆனந்த சொரூபியாகிருன். மேலும் மேலும் ஆனந்த சொரூபியாகிய இறைவனையே எண்ணுகின்ருன். மற்றென்றை அதாவது விஷயாதிகளில் கருத்தைச் செலுத்துவதில்லை. அத்தகையவனுக்கு ஆனந்தம் பேரானந்தமாக உறுதிபெறுகிறது. கடவுளை அனுபூதியில் அறிகிறவர்களே பேரானந்தத்தில் திளைத்திருக்கின்றனர்.

இனி, கடவுளின் சொரூபம் ஆனந்தத்துக்கு அப்பாற்பட்டதாகவும் இருக்கிறது. அந்த அப்பாற்பட்ட நிலையைப்

பேரானந்தம் அடையப்பெற்றவர்களே அறிகின்றனர். ஆனந்தாதீதம் அதாவது ஆனந்தத்துக்கும் அப்பாற்பட்ட நிலை கடவுளுக்குரியதாகிறது. அப்பாற்பட்ட நிலையை எட்டுகிறவர்களுக்கு மோனம் அல்லது மௌனநிலை வாய்க்கிறது. அத்தகைய மௌனத்தை எட்டுவதே முக்தியாகிறது. இச் சிறந்த கோட்பாடு இக்கண்ணியில் அடங்கி இருக்கிறது.

208. ஏதுக்கும் உன்னைவிட இல்லையென்றால்
என்கருத்தைச்
சோதிக்க வேண்டாம் நான் சொன்னேன் பராபரமே.

பரமாத்மா என்னும் பெருங்கடலிலே ஜீவாத்மா என்னும் அலை உருவெடுக்கிறது. சிற்றுயிராக இருந்த ஜீவாத்மா படிப்படியாகப் பரிணமித்துப் பேருயிராகிறது. மானுட நிலையில் அதன் பரிணமம் உச்ச நிலையை எட்டுகிறது. பிறகு தனக்கும் தனது தலைவனுக்கும் உள்ள இணக்கத்தை அது அறிந்துகொள்கிறது. தனக்கு வாய்த்துள்ள நிலைகள் அனைத்தும் பரமாத்மாவினுடைய பஞ்ச கிருத்தியங்களுள் (சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், திரோதானம், அனுக்கிரகம்) அடங்கப்பெற்றவைகள் ஆகின்றன. இவ்வுண்மையை அறிகிற ஜீவாத்மா தன்னுடைய அமைப்பு முழுவதையும் பரமாத்மாவிடம் ஒப்படைத்து விடுகிறது. அப்படி ஒப்படைப்பதை அடைக்கலம் என்றும், சரணாகதி என்றும் சொல்லுகிறோம். அடைக்கலத்தின் விளைவாக முக்திநிலை தானே வந்தெய்துகிறது. இறைவா, உன்னுடைய திருவருளால் நான் படைத்துள்ள ஜீவவியக்தி உன்னுடைய பேரமைப்பின் ஒரு சிறு பகுதியென நான் அறிய வருகிறேன். இனி, எனக்கு இச்சா சுதந்திரம் இல்லை. என்னைக் கருவியாக வைத்துக் கொண்டு உன் திட்டத்தை நீ நிறைவேற்றுகின்றாய். என்னை

உனக்குரியவனுக உன்னிடம் ஒப்படைத்தான பிறகு இனி எனக்குச் சோதனை ஒன்றுமில்லை. என்னை உன் மயமாக உணருகிறேன். இதுவே இக்கண்ணியின் கருத்தாம்.

209. முக்தியிலும் தேகமிசை மூவிதம்ஆம் சித்திபெற்றோர்
எத்தனைபேர் என்றுஉரைப்பது எந்தாய் பராபரமே.

முக்தி என்பது தேகத்தினின்று ஜீவாத்மா அடைகிற விடுதலையாகிறது. தேகத்தைத் தான் என்று கருதிக் கொண்டிருக்கிற அக்ஞான காலத்தில் ஜீவாத்மனுக்கு முக்தி யில்லை. தன்னை விதேகன் என்று அதாவது தேகத்துக்குப் புறம்பானவன் என்று ஜீவாத்மன் அறிந்துகொள்ளுகிற பொழுதே அவன் முக்திக்குத் தகுதியுடையவனுகிருன்.

இனி, காயசித்தியைப்பற்றிய கொள்கை முக்தியை நாடு பவர்களுக்கிடையில் நிலவிவருகிறது. காயசித்தி வாய்க்கப் பெற்ருலொழிய ஜீவனுக்கு முக்தியில்லை என்னும் கோட் பாடு ஒரு சிலருக்கிடையில் இடம் பெற்றுள்ளது. காய சித்தி பெறுவது சாத்தியம். அதற்கான உபாயங்களைச் சித்தி மார்க்கத்தில் செல்லுகின்றவர்கள் வகுத்து வைத் திருக்கிருர்கள். காயசித்தி அடையும்போது அந்தச் சித்தி யானது மூன்று படித்தரங்களில் வைத்து விளக்கப்பெறு கிறது. அருவசித்தி, உருவசித்தி, அருஉருவசித்தி என மூன்றுவித சித்திகள் இருக்கின்றன. இங்ஙனம் காயசித்தி செய்து அதைக் காரண நிலையில் கரைத்துவிட்டு ஆத்மா முக்தியடைவது சித்தர்களின் முறையாகும். இப்படி எத்தனைபேர் சித்தர்களாகிப் பிறகு முக்தர்கள் ஆனுர்கள் என்று அறுதியிட்டு இயம்ப யாருக்கும் இயலாது.

தூய பக்தியின் மூலமாகவோ, ஞானத்தின் மூல மாகவோ, யோகத்தின் மூலமாகவோ, சரீரப்பற்றை

ஒதுக்குவது மற்றொரு முறையாகும். இம்முறையிலும் கணக் கற்ற பேர் முக்தியடைந்திருக்கின்றனர். இம்முறைகளையெல் லாம் கணக்கிட்டுப் பார்க்க ஆத்மசாதகனுக்கு அவகாச மில்லை. அக்ஞான நிலையில் சரீரத்தைத் தான் என்று அகங் கரித்து இருக்கின்ற வேளையில் அவன் பந்தபாசத்தில் இருக் கிறான். தன்னுடைய நிஜசொருபத்தை உணருகிற அதே வேளையில் அவன் முக்த புருஷனாகிறான். ஏதேனும் ஒரு மார்க்கத்தை உறுதியாகப் பிடித்து முக்தியடைவது குறிக் கோள். இதை யாண்டும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் என்பது இக் கண்ணியின் கருத்தாம்.

210. நீஅன்றி நான்ஆர் நினைவுஆர்என் நெஞ்சகம்ஆர்
தாய்அன்றிச் சூலும்உண்டோ சாற்றாய் பராபரமே.

நெஞ்சகம்-அந்தக்கரணம்; சூல்-சந்தானம்; சாற்றாய்-சொல்லாய்.

தங்கம் காரணம்; பலப்பல நகைகள் காரியம். எத் தனை எத்தனை நகைகளாக வடிவெடுத்தாலும் தங்கம் தன் தன்மையை இழந்து விடுவதில்லை. அதே விதத்தில் பரம் பொருள் காரணமாகவும், ஜகத்தும் ஜீவனும் காரியமாகவும் வடிவெடுத்துள்ளன. ஜகத்தை ஜடம் என்று பகர்வது ஐதிகம். ஆனால் சித்தால் கிரகிக்கப்படுவதெல்லாம் சித்தே என்னும் மற்றொரு கோட்பாடு உண்டு. ஆதலால் ஜகத்தும் சித்துவினுடைய ஒரு கூறாம். இனி ஜீவாத்மனிடம் ஜடம், சேதனமாகிய இரண்டு கூறுகளும் இடம் பெற்று இருக்கின் றன. பண்பட்டு மூலநிலையை எய்துங்கால் ஜகத்தும், ஜீவ னும் பரத்தில் ஒன்றுபட்டு விடுகின்றன. இனி, வியவகார நிலையில் இருக்கின்றபொழுதே பரத்துக்குப் புறம்பாக ஜகத் தும் ஜீவனும் இல்லை. இக்கோட்பாட்டின்படி என்னை நான் ஆராய்ந்து பார்த்தால், உனக்குப் புறம்பாக நான்

என்னும் பொருள் ஒன்றுமில்லை. என்னென்னவோ எண்ணங்களை நான் எண்ணுகிறேன். அத்தனை எண்ணங்களும் அந்தக்கரணத்தின் விகாரங்களாம். இனி அந்த அந்தக் கரணமோ உனக்குப் புறம்பானதன்று. அந்தக்கரணமாக பரிணமிக்கும் பாங்கு உன்னுடையதாம். எப்படித் தாய்க்குப் புறம்பாக சிசு இல்லையோ தாயே பிள்ளையாகப் பரிணமித்து இருக்கிறுளோ, அங்ஙனம் உனக்குப் புறம்பாக நான் இல்லை. என் வடிவத்தில் நீயே இலங்குகின்ருய். இவ்வுண்மையை நான் அறிந்துகொள்ளும்பொழுது நான் படைத்துள்ள ஜீவவியக்தி மறைந்துபட்டுப் போகிறது. யான், எனது என்பனவற்றை உன் சொரூபத்தில் கரைத்துவிடுவதுதான் நான் இறுதியாகச் செய்யக்கூடிய செயலாயிருக்கிறது. இதைத் தவிர எனக்கு வேறு ஏதேனும் பாங்கு உளதா என்பதை இறைவா, நீயே பகர்ந்தருள்வாயாக! என்னை உன்னில் ஒடுக்கிவிடுவதே நான் செய்யக்கூடிய ஒப்பற்ற செயலாம். இறைவா, அதற்கு நீ அருள்புரிவாயாக என்பது இக்கண்ணியின் கருத்து.

211. அங்கமே நின்வடிவம் ஆனசுகர் கூப்பிடநீ
எங்கும்ஏன் ஏன்என்றது என்னே பராபரமே.

அங்கமே-தேகமே; சுகர்-வியாசருடையஞானச் செல்வர்.

பிறப்பெடுக்கிற அனைவரும் ஜீவவியக்தி படைத்துள்ளவர்கள் ஆகின்றனர். ஆனல் இந்த விதிக்கு விலக்காகப் பிறந்தவர் சுகர் அல்லது சுகப்பிரம்மம். பிறந்தது முதற்கொண்டு பிரம்ம சைதன்யத்திலேயே நிலைபெற்றவராக அவர் இருந்துவிட்டார். உடல் வளர்ந்தது. ஆனல் உடல் ஞாபகம் அவரிடம் உருவெடுக்கவில்லை. பிரம்மாவஸ்தை ஒன்றே யாண்டும் அவருக்குச் சொந்தம். உடல் ஞாபகம் இல்லாததால் அதற்கு

உடையணிதல் என்னும் சித்தவிருத்தி அவருக்கு உண்டாக வில்லை. நிர்வாணியாகவே காலமெல்லாம் அவர் இருந்து விட்டார். வடிவத்தில் தனி இயல்பு படைத்திருப்பவர் போன்று அவர் தென்பட்டார் எனினும் சமஷ்டியாயுள்ள பேரமைப்புக்கு அவர் புறம்பாகிவிடவில்லை. சோகம்—நான் அதுவே என்னும் சொல்லை அவர் உச்சரிக்கும்பொழுது அதே உச்சரிப்பை அகிலாண்ட மயமாயுள்ள வஸ்துவும் உச்சரிக்கும். 'ஹே பிரம்மம்' என்று அவர் விளிக்குமிடத்து, 'இதோ இருக்கிறேன்' என்ற விடை வரும். இத்தனைக்கும் காரணம் அவர் பரவஸ்துவில் அபேதமாய் இருந்ததேயாம். அகம், புறம் என்னுதபடி பரவஸ்து ஒன்றே சுகப்பிரம்மம் என்னும் கூறுகக் காட்சி கொடுத்தது. இது பெறுதற்கரிய பெரிய பேறு. இப்பேற்றினைச் சுகப்பிரம்மம் பெற்று இருந்தது போன்று மற்றவர்களும் பெறமுடியும். மனத்தை அபேதநிலைக்கு ஏடுத்துச் செல்வதே அதற்கேற்ற உபாய மாம். சோகம் என்னும் பாரமார்த்திகப் பெருநிலையை அகிலாண்டங்களும் சதா உச்சரித்துக்கொண்டே இருக்கின் றன. ஏனென்றால் அதுதான் வஸ்துவைப் பற்றிய முடிவான உண்மையாம். மனிதன் தன்னைக் கீழ்நிலைக்கு இழுத்துச் சிறுமையைத் தன்னுடைய பெற்றி என்று மயங்குவது விபரீதமாம். எவ்வளவுக்கெவ்வளவு ஆத்மசாதகன் ஒருவன் தன்னுடைய பாரமார்த்திகப் பெருநிலையை நினைவில் வைக் கின்றானோ அவ்வளவுக்கவ்வளவு அவன் தன்னுடைய நிஜ சொரூபத்தில் நிலைத்திருக்கிறான். இப்பேர் உண்மையைச் சுகப்பிரம்மம் உலகுக்கு நினைவூட்டியவர் ஆகின்றார்.

212. கொள்ளைவெள்ளத் தண்அருள்மேல்
[கொண்டுசுழித்து ஆர்த்துஇழுத்தால்
கள்ளமனக் கப்பல்எங்கே காணும் பராபரமே.

தண்ணருள்—குளிர்ச்சி பொருந்திய இறைவனுடைய திருவருள்; சுழித்தல்—சுருண்டு சுருண்டு வருதல்; ஆர்த்தல்—ஓலமிடுதல்.

மனிதனைப் பெரிதும் துன்பத்துக்கு ஆளாக்குவது அவன் படைத்துள்ள கள்ளமனமாம். நிதானமாக ஆராய்ந்து பார்த்தால் மனிதனுக்கு உண்மை ஒன்று விளங்கும். கட்டில் அடங்காத அவனுடைய கள்ளமனமே அவன் படும் ஒவ்வொரு துன்பத்துக்கும் காரணமாகிறது. அத்தகைய பண்படாத மனது அழிந்துபட்டுப் போகுமானால் அதனோடு அவன்படும் துன்பமும் முடிவுக்கு வருகிறது. கப்பலைக் கொந்தளிப்பு நிறைந்த கடல் எடுத்து விழுங்குவது போன்று மனிதனுடைய கள்ள மனத்தை இறைவனுடைய பேரருள் வெள்ளம் பாழ்படுத்த வல்லதாகிறது. ஆத்ம சாதகன் ஒருவன் இறைவனுடைய அருள் பிரவாகத்தின்கண் தன்னை ஒப்படைத்து விடுவானாகில் அவனுக்கு மனோநாசம் பண்ணுவது மிகச் சுலபமாகிறது. மனத்தை ஒழிவில் ஒடுக்குவது தான் குறிக்கோள். மனம் ஒடுங்கப்பெற்றவன் பரத்தை அடைகிறான். இறைவனுடைய அருளின்கண் சாதகன் தன்னை ஒப்படைக்குமிடத்து அவனுக்கு மனோலயம் ஆகிறது; பரம் வாய்க்கப் பெறுகிறது. இறைவா, உன் அருளுக்குப் பாத்திரமாகி, நான் மனாதீத நிலை எய்துவேனாக என்பது இக்கண்ணியின் கருத்து.

213. எக்கலையும் கற்றுஉணர்ந்தோம் என்றவர்க்கும் சம்மதம்சொல்
வக்கணை யால் இன்பம் வருமோ பராபரமே.

வக்கணை—பாண்டித்தியம். நூல் ஆராய்ச்சிக்கு முடிவில்லை. நூல்களை ஏராளமாகக் கற்றவர்கள் இருக்கிறார்கள்.

அத்தகையவர்களுள் ஒருவனுக்கு எந்த நூலை எடுத்து ஓதி, எந்த விஷயத்தை ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்டாலும் அதற்கு ஏற்ற நல்ல விளக்கம் தரக்கூடிய பாண்டித்தியம், நுண்ணறிவு வாய்த்திருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். எந்தச் சாஸ்திரத்தில் எந்தப் பிரச்னையைக் கிளப்பினாலும் அந்த மகாபண்டிதன் அந்தப் பிரச்சனையை ஒழுங்காக ஓர்ந்து சொல்லுகிறான். அத்தகைய ப்ாண்டித்தியம் பாராட்டத்தக்கதே. ஆயினும் அப்பாண்டித்தியம் வேறு; பரம்பொருள் அனுபூதியினின்று பெருக்கெடுக்கும் பேரின்பம் வேறு. இந்நிலையை ஓர் உபமானத்தின் மூலம் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் விளக்குகிறார். சர்க்கரை தித்திக்கிறது என்று ஒரு புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அங்ஙனம் சொல்லப்பட்டுள்ள நூல் பகுதியை நக்கிப் பார்த்தால் அது தித்திக்குமா? ஒரு பொழுதும் அது தித்திக்காது. இந்த வருஷம் இத்தனை மரக்கால் மழை பெய்யுமென்று பஞ்சாங்கம் சொல்லுகிறது. அப்படிச் சொல்லுகின்ற பஞ்சாங்கத்தைக் கசக்கிப் பிழிந்தால் ஒரு சொட்டுத் தண்ணீரும் பெறமுடியாது. நூல் ஆராய்ச்சியில் மட்டும் திளைத்திருக்கின்றவர்கள் காகிதத்தை நக்குகிற நிலையிலும், அதைக் கசக்கிப் பிழிகிற நிலையிலும் இருக்கிறார்கள். நூலாராய்ச்சியில் உண்டாகிற மகிழ்வு வேறு; இறைவனுடைய அருளுக்குப் பாத்திரமாகி அதினின்று சுரக்கிற பேரின்பத்தைப் புசிப்பது வேறு. நூல் ஆராய்ச்சியினின்று உண்டாகிற இன்பத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, இறைவனுடைய பேரருள் இன்பத்துக்கு இலக்காகின்றவர்களே பாக்கியவான்கள். நூலறிவு அஹங்காரத்தை அடிப்படையாகக்கொண்டது. அதன்கண் ஆத்மசாதகன் நாட்டங்கொள்ளலாகாது. இறைவா, நான் நூலறிவை நாடு

வதை நிறுத்திவிட்டு, உன் அருள் நாட்டம் பிடித்தவன் ஆவேனாக என்பது இக்கண்ணியின் கருத்து.

214. கல்எறியப் பாசி கலைந்துநன்னீர் காணும்நல்லோர்
சொல்உணரின் ஞானம்வந்து தோன்றும் பராபரமே.

பருகுவதற்குரிய நன்னீரின் மீது பாசி பரவுவது உண்டு. அது பரவியிருப்பதால் கீழே உள்ள நீர் காட்சிக்கு எட்டுவதில்லை. அது நல்ல நீரோ நச்சு நீரோ என்பதும் புலப்படுவதில்லை. கல்வீசி அல்லது கையால் அலையை உண்டுபண்ணினால் பாசி ஒருபக்கம் ஒதுங்குகிறது. அப்பொழுது நீரின் பாங்கு உள்ளபடி தென்படுகிறது. பாசி படிந்தவையெல்லாம் நச்சு நீர் என முடிவு கட்டலாகாது. நன்னீர், நச்சுநீர் ஆகிய இரண்டின் மீதும் பாசி படர்வது இயல்பு. பாசியை ஒதுக்கிய பிறகே நல்ல நீரைக் கண்டுபிடிக்கிறோம். நல்ல நீருக்கு நிகர் நல்லோர் சொல்.

'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு'

என்பது கோட்பாடு. நல்லோர் சொல்லுக்குச் சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். விறகு வெட்டி ஒருவன் வனத்துக்குச் சென்று விறகு வெட்டி வயிறு வளர்த்து வந்தான். ஒரு நாள் வனத்தை நோக்கி அவன் வந்தபோது அவ்வனத்தினின்று வெளியே வந்தசாது ஒருவர் 'இன்னும் உள்நோக்கிச் செல்' என்று இயம்பிவிட்டுப் போனார். அவர் சொல்லை விறகுவெட்டி எண்ணிப்பார்த்தான். அதன்படி வனத்துக்குள் சற்று அதிக தூரம் சென்றான். சந்தனமரத்தைக் கண்டான். அதில் அவனுக்கு அதிக ஊதியம் கிடைத்தது. நாள் ஏற ஏற இன்னும் அதிகம் உள்ளே சென்றான். முதலில் விலையுயர்ந்த சந்தனமரங்கள் பிறகு தாமிரம், வெள்ளி,

தங்கம் ஆகியவைகளின் தாதுக்கள் அகப்பட்டன. பிறகு வெட்டி செல்வம் மிகப் படைத்தவன் ஆனான். 'இன்னும் உள்நோக்கிச் செல்' என்னும் சான்றோர் வாக்கில் பரதத்துவம் புதைந்து இருக்கிறது. அது விவேகிகளுக்கு விளங்குகிறது. பஞ்சேந்திரியங்களைப் பயன்படுத்திப் புறவுலகில் அலைந்து திரிகிற மனிதன் அந்த இந்திரியங்களை ஒதுக்கி வைத்துவிட்டு, உள்முகமாக மனத்தைச் செலுத்துவானாகில் அவன் ஆங்குத் தெய்வீகத்தின் பல படித்தரங்களைக் காண்பான். கடைசியில் உள்ளத்தின் உள்ளே தெய்வ சாந்நித்தியத்துக்கே வந்துவிடுவான். அந்நிலையில் அவனுக்கு ஞானம் வாய்க்கும். நல்லோர் சொல்லில் அத்தகைய செம்பொருள் புதைந்திருக்கிறது. அன்னவர் சொல்கேட்டு, அதன்படி நடக்கிறவர்கள் இறுதியில் பெறுவதற்கு அரிதிலும் அரிதாய் இருக்கிற பரஞானத்தையே அடையப்பெறுவர். ஆன்றோர் வாக்கே ஆப்த வாக்கியம் எனப்படுகிறது.

215. நின்னை உணர்ந் தோர்கடமை நிந்தித்த பேய் [அறிஞர்
என்ன கதிபெறுவார் எந்தாய் பராபரமே.

பரம்பொருளை அனுபூதியில் அறிகிறவர்கள் தாமே பரம்பொருளில் ஒன்றுபடுகின்றனர். ஆதலால் பரஞானிகளைப் போற்றுவதும் பரம்பொருளைப் போற்றுவதும் ஒன்றாகிறது. பக்தர்கள் கருதுவது அதிலும் மேலானது. பரமனைத் தூற்றினால் அதைப் பரமன் பொருள்படுத்துவது இல்லை. ஆனால் பரமனுடைய பக்தனைத் தூற்றினால் பரமன் அதைக் குறித்துப் பராமுகமாய் இருப்பதில்லை. தூற்றுகிறவனுக்கு ஏதேனும் ஒருபோக்கில் முதலில் எச்சரிக்கை வருகிறது. பிறகு தண்டனை வருகிறது. பரமன் அடியார்க்கு அடியார் என்பது வெறும் வாய்ப் பேச்சன்று; அது என்றைக்கும் மாறாத

உண்மை ஆகிறது. ஆதலால் சன்மார்க்கத்தில் செல்லு கின்றவர்களை ஏளனம் பண்ணுவது பொருந்தாது. செய்த வினைப்பயன் பன்மடங்கு பெரிதாகத் தன்னையே வந்து சாரும். நல்வினை தீவினையாகிய இரண்டுக்கும் அதுவே நியதியாகிறது. கடவுளைப் போற்றுவது போன்று கடவுளை நாடுகிற மேன்மக்களையும் போற்ற வேண்டும் என்பது இக் கண்ணியின் கருத்தாம்.

216. என்னதுயான் என்னல்அற்றோர் எங்குஇருந்து
[பார்க்கினும்நின்
சன்னிதிஆம் நீபெரிய சாமி பராபரமே.

என்னது-என்னுடையது, மமகாரம். யான்-அகங்காரம். அற்றோர்-ஒதுக்கித் தள்ளியவர்கள்.

ஆத்மசாதகர்கள் புரிகின்ற சாதனங்களெல்லாம் இரண்டு கோட்பாடுகளில் பூர்த்தியாகின்றன. உலகிலுள்ள பொருள்களில் சிலவற்றைத் தன்னுடையவைகள் என்று உரிமை பாராட்டுவது மமகாரமாம். தான் அல்லாத உடலைத் தான் என்று கருதுவது அகங்காரம். இந்த அகங்காரமும் மமகாரமும் மயக்கத்தால் உண்டானவைகள். நிஜநிலையில் அவைகள் இடம்பெறுவது இல்லை. இந்தக் கோட்பாட்டை 'யான், எனது என்னும் செருக்கறுப்பான், வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்' என்று பொய்யாமொழி பகர்கிறது. சிற்றுயிர் பேருயிராகப் பரிணமித்து வருவதற்கு அகங்கார மும், மமகாரமும் முற்றிலும் தேவை. பரிணாமத்தில் உயர் நிலையை எட்டிய மனிதன் பிறகு அகங்காரத்தையும், மமகா ரத்தையும் விலக்கியாகவேண்டும். அகங்காரத்தையும் மமகா ரத்தையும் நீக்கியவனுக்கு ஞானோதயம் ஏற்படுகிறது. அந்த ஞானத்தின் விளைவாகப் பிரபஞ்சம் முழுதையுமே பரம் பொருள் சொரூபமாக அவன் காண்கிறான். பரம்பொருளுக்கு

அன்னியமாக ஒன்றுமே இல்லை. ஆதலால் பரம்பொருள் பெரியசாமி எனப் பகரப் பெறுகிறது. மஹாதேவன் என்பது அதன் பொருள். பரம்பொருள் ஒன்றே பிரபஞ்சமாகவும், ஜீவகோடிகளாகவும் வடிவெடுத்து விளையாடுகிறது. மமகாரத்தையும் அகங்காரத்தையும் ஒதுக்கியவர்களுக்கு இவ்வுண்மை அனுபூதியில் வாய்க்கிறது. ஆத்மசாதகன் எவ்வளவுக்கெவ்வளவு அகங்காரத்தையும் மமகாரத்தையும் ஒதுக்குகின்றானோ அவ்வளவுக்கவ்வளவு அவன் சாதனத்தில் முன்னேறுகிறான். அவ் இரண்டையும் அறவே துறந்தவன் நிறைஞானி ஆகிறான்.

217. சோற்றுத் துருத்திச் சுமைசுமப்பக் கண்பிதுங்கக்
காற்றைப் பிடித்துஅலைந்தேன் கண்டாய் பராபரமே.

உடலில் அபிமானம் வைத்து அதை நெடுநாள் காப்பாற்றிவைக்க விரும்புகிறவர்கள் ஹடயோகத்தில் ஈடுபடுகின்றனர். ஹடயோகத்தில் பிராணாயாமம் முக்கியமான இடம்பெறுகிறது. காற்றை முறையாக உள்ளே வாங்குதற்குப் பூரகம் என்று பெயர். அதை உள்ளே அடக்கி வைக்க முயலுவதற்குக் கும்பகம் என்று பெயர். பிறகு முறையாக வெளிப்படுத்துதற்கு ரேசகம் என்று பெயர். கும்பகம் பண்ணி வருகிறபொழுது கண் சிவக்கிறது. அது பிதுங்கிக் கீழே விழப்போவது போன்று திணறுகிறது. அப்படித் திணறுவதால் உடலுக்குப் பல கேடுகள் வருகின்றன. வருகிற கேடுகளையும் பொருள்படுத்தாது அச்சாதனத்தில் ஈடுபடுகிறவர்கள் பரிதாபத்துக்குரியவர்கள் ஆகிறார்கள். தாயுமானவரும் கொஞ்சகாலம் ஹடயோகத்தில் ஈடுபட்டு இருந்ததாக இக்கண்ணி புலப்படுத்துகிறது. உடலினின்று முக்தி அடைவது வாழ்க்கையின் குறிக்கோள். அதற்கு மாறாக உடலைக் காப்பாற்றி வைப்பதை அவர்

ஏளனம் பண்ணுகிருர். சரீரத்தைச் சோற்றுத் துருத்தி என்று கூறுகிருர். தோலால் செய்த பை துருத்தியெனப் படுகிறது. நாள்தோறும் சோற்றைத் திணித்து, அடக்கி வைப்பதற்கு உடல் உதவுவதால் அதைச் சோற்றுத் துருத்தி யெனச் சொல்லுகிருர். வினையின் பயனுக வந்தது உடல். வினை ஒழியுங்கால் பிறகு உடலுக்கு வேலையில்லை. வினைக்கு வயப்பட்டு இருக்கிறபொழுது உடலை ஒரு சுமையெனத் தூக்கித் திரிவது பாராட்டுதற்கு உரிய செயலன்று. அத ஞல் ஆத்மசாதகன் அடைகிற நலன் ஒன்றுமில்லை. பக்தி யைப் பெருக்குதற்கோ, ஞானத்தை வளர்ப்பதற்கோ இந்தத் தோல் பை பாரம் உதவாது. அதன்மீது பற்று வைக்காது இருத்தல் வேண்டும். நிழல் பொருளைச் சார்ந்து இருப்பது போன்று, உடல் ஞானியைச் சார்ந்து இருத்தல் வேண்டும். பிராரப்த கர்மம் முடிந்த உடனே அந்த உடலும் தானுக ஒடுங்கிப்போகிறது. இது சாதனத்தின் குறிக்கோளாக இருக்க, நெறி பிறழ்ந்த பாங்கில் உடல் சுமையைப் பெருக்கி அதைத் தூக்கித் திரிவது பொருந்தாது என்பது இக் கண்ணியின் கருத்தாம். தேகாத்ம புத்தி அல்லது உடலைத் தான் என்று கருதுகிற எண்ணத்தை ஒதுக்கித் தள்ளுதல் நல்ல ஆத்மசாதனம் ஆகும்.

218. உள்ளபடி ஒன்றை உரைக்கின் அவர்க்கு
உள்உறவாய்க்
கள்ளம்இன்றி அன்பாய்க் களிப்பேன் பராபரமே.

உள்ளுறவாய் - நெருங்கிய சுற்றமாய். கள்ளமின்றி- கபடம் ஏதும் இல்லாது. களிப்பேன்-இன்புற்று இருப் பேன்.

மெய்ப்பொருளை அறிதற்கு மூன்று பிரமாணங்கள் இருக்கின்றன. அவை முறையே சுருதி, யுக்தி, அனுபவம்

எனப்படுகின்றன. இம்மூன்றனுள் அனுபவம் அல்லது அனுபூதி தலையாயது. பரம்பொருளை அனுபூதியில் அறிந்து கொள்ளுதல் வாழ்க்கையின் குறிக்கோள். அனுபூதிமான்களுக்கு ஐயம் உண்டாவதில்லை. ஐயமும் திரிவும் அவர்களை அணுகமாட்டா. சூரியனிடத்து எங்ஙனம் இருளுக்கு இடம் இல்லையோ அங்ஙனம் அனுபூதிமான்களிடத்துச் சந்தேகத்துக்கு இடமில்லை. அத்தகைய அனுபூதி வாய்க்கும் வரையில் சுருதியையும் யுக்தியையும் சார்ந்து இருக்கச் சாதகன் கடமைப்பட்டுள்ளான். சுருதி என்பது அனுபூதிமான்கள் இயற்றியுள்ள நூல்கள் ஆகின்றன. அவைகள் எண்ணிக்கையில் அடங்காதவைகள் எனினும் மூன்று பெரிய நூல்கள் முடிவான பிரமாணங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. உபநிஷதங்கள் ஒன்று சேர்ந்து ஒரு பிரமாணம். பிரம்ம சூத்திரம் அல்லது வேதாந்த சூத்திரம் இரண்டாவது இடம் பெறுகிறது. பகவத்கீதை மூன்றும் இடம் பெறுகிறது. இம் மூன்று நூல்களையும் முறையாக விளக்குபவர்கள் இருக்கிறார்கள். இவைகளைத் திரிவுபடுத்தி விளக்குபவர்களும் இருக்கிறார்கள். முறையாக விளக்குபவர்கள் அதற்கேற்ற யுக்தியைக் கையாளுகின்றனர். அங்ஙனமே முறை தவறிப் பொருள்படுத்துபவர்கள் அதற்கேற்ற யுக்தியைக் கையாளுகின்றனர். இனி யுக்தியோ மனிதன் கைவசத்தில் இருக்கும் ஓர் அரிய கருவியாகிறது. யுக்தியானது பகுத்தறிவு எனப் பொருள்படுகிறது. ‘எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு.’ அதை விவேகம் என்றும் இயம்பலாம். இந்த யுக்தியை ஒவ்வொரு சம்பிரதாயக்காரனும் தனக்கேற்றவாறு கையாண்டு வருகிறான். தத்துவத்துக்கு ஏற்ப இதைக் கையாளுகிறவன் உள்ளபடி ஒன்றை உரைப்பவனாகிறான்.

அத்தகையவனை அணுகி ஐயங்களை அகற்றிக்கொள்ளுவது முறை. அத்தகைய அறிஞர்களையே ஞானச்சாரியர்களாக ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். அன்னவர்களே நல்ல உறவினர் ஆகின்றனர்.

219. அடுத்தஇயல்பு ஆகஒன்றை யான்பகர்வது அல்லால்
தொடுத்ததுஒன்றை யான்வேண்டிச் சொல்லேன்
பராபரமே.

யுக்தி அல்லது பகுத்தறிவு மனிதன் கைவசத்தில் உள்ள ஒரு சிறந்த கருவியாகிறது. இந்த யுக்தியே சிலரிடம் குயுக்தியாகத் திரிவுபடுகிறது. சான்று ஒன்றின் மூலம் இக்கோட்பாட்டை விளக்குவது அவசியம். மகாபாரத பாத்திரங்களுள் துரியோதனனும் சகுனியும் குயுக்தி படைத்தவர்கள். கிருஷ்ண பரமாத்மா, பீஷ்மர், விதுரர் போன்ற நல்லார் பகர்ந்த நல்லறிவை அவர்கள் இருவரும் ஏற்றுக் கொள்ளவில்லை. தாங்கள் கொண்டுள்ள கருத்துத்தான் சரியானதென்று அவ்விருவரும் கருதினர். அவர்கள் படைத்திருந்ததை வக்ரபுத்தி அல்லது திரிவுபட்ட ஞானம் என்று சொல்ல வேண்டும். வக்ரபுத்தி மனிதனைப் பாழாக்கிவிடும்.

ஆத்மசாதகன் தனக்கு நல்லறிவு வாய்க்கவேண்டுமெனப் பரமனிடம் பிரார்த்திக்க வேண்டும். எக்கொள்கையிலும் ஓரம் சாராது மனத்தை நிடுநிலையில் வைத்திருக்கவேண்டும். மெய்ப்பொருள் காண்பதில் ஊக்கம் மிகப் படைத்திருக்க வேண்டும். கல்விச் செருக்கினின்று விலகியிருத்தல்வேண்டும். தன்னுடைய அறிவுத் திறமையை விளம்பரப்படுத்துதற்காகத் தத்துவத்தைத் தாறுமாறாக எடுத்து ஓதலாகாது. சத்தியமே தன் வாயினின்று வெளியாகவேண்டும் என்று வழிபடு தெய்வத்திடத்துப் பிரார்த்திக்க வேண்டும். சத்தியமே வெளியாகுங்கால் அது வாய்மை எனப்படுகிறது.

மெய்ப்பொருளை உள்ளபடி இயம்புவது ஒரு நல்ல ஆத்ம சாதனம் ஆகிறது. அத்தகைய சாதனத்தில் நான் கண்ணுங் கருத்துமாயிருப்பேன் என்பது இக்கண்ணியின் கோட்பாடு.

220. உள்ளம்அறி யாதுஒருவர் ஒன்றைஉன்னிப்
பேசில்ஐயோ
துள்ளிஇளங் கன்ருய்த் துடிப்பேன் பராபரமே.

இரண்டு பேர்களுக்கிடையில் சம்பாஷணை நிகழ்கின்ற பொழுது கருத்து வேற்றுமை இருக்கலாகாது. ஆனால் ஒருவர் கருத்தை மற்றொருவர் அறிந்துகொள்ளாது விவாதத்தைப் பெருக்குவதுதான் உலகத்தவர் போக்கு. சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். கோவிலுக்குச் சென்று ஒரு விக்கிரகத்தின் வாயிலாகக் கடவுள் வழிபாடு பண்ணுவது ஹிந்துக்களுடைய வழிபாட்டு முறையாகிறது. விக்கிரக ஆராதனை பண்ணுவது மூடத்தனம் என்று கருதுகிறவர்கள் இருக்கிருர்கள். கடவுளைக் கும்பிடுவதற்குப் பதிலாகக் கல்லை ஏன் வணங்குகிருய் என்று ஒருவன் ஆட்சேபிக்கிருன். அப்பொழுது பெரும்பாலும் (விக்கிரஹ ஆராதனை செய்பவர்களிடம்) உள்ளத்தில் பதைபதைப்பு உண்டாகிறது. ஆட்சேபிக்கின்றவனுடைய உள்ளத்தில் வழிபடுகின்றவனுடைய மடமையைக் குறித்துப் பதட்டம் வருகிறது. பின்பு வழிபடுகிறவனுக்கு ஆட்சேபிக்கின்றவனுடைய அறியாமையைக் குறித்து உள்ளக்கிளர்ச்சி உண்டாகிறது. கருத்து வேற்றுமையால் இருதரத்தினர்க்கிடையிலும் சீற்றம் உருவெடுக்கிறது. ஆட்சேபிக்கிறவன் தன்னுடைய அறியாமையை விளம்பரப்படுத்துகிருன் என்பது தேற்றம். ஆனால் விக்கிரக ஆராதனை செய்பவனே தத்துவத்தை அறிந்திருத்தல் வேண்டும். அவன் விக்கிரகத்தைக் கல் என்றோ, தாமிரம் என்றோ மனத்தில் எண்ணுவதில்லை. பரம்பொருளைப்

பற்றிய சிந்தனைதான் அவன் உள்ளத்தில் உருவெடுக்கிறது. ஒரு மனிதன் மற்றொரு மனிதனைப் பார்த்து வணங்குகின்ற பொழுது, அவன் மாமிசத்தையும், தோலையும், ரத்தத்தையும், உரோமத்தையும், எலும்பையும் வணங்குபவன் அல்லன். இவைகளால் ஆகிய உடற் கூட்டினுள் இலங்கும் உயிர்த் தத்துவத்தை அவன் வணங்குகிறான். இதே கோட்பாடு தான் விக்கிரக ஆராதனையிலும் அமைந்துள்ளது. பரதத்து வத்தை ஞாபகமூட்டுதற்கு விக்கிரகம் ஒரு சின்னமாய் அமைந்திருக்கிறது. வழிபடுகிறவர்களுக்கு அவ்வுண்மை தெரியும். பரிகசிப்பவனுக்கு அவ்வுண்மை தெரியாது. ஆதலால் அவன்மீது சீறிப் பாய்தல் பொருந்தாது. அத் தகைய நெருக்கடியான சூழ்நிலையில் அமைதியோடு இருந்து பழகவேண்டும். ஏளனம் பண்ணுகிறவனை நிராகரிக்கிற மனப்பான்மை வரலாகாது. நிராகரிப்பதால் ஆத்மசாதகன் தன்னுடைய பண்பை இழந்துவிடுவான். தப்பான வழி பாடு என்று தாக்குகிறவனை அமைதியுடனும் அன்புடனும் பாராட்டினால் அது நல்ல ஆத்மசாதனம் ஆகிறது. தாக்கு கிறவனுடைய உள்ளத்திலும் சிந்தித்துப்பார்க்கும் பாங்கை அவனுடைய அமைதி ஊட்டுகிறது. ஆக ஆத்மசாதகன் ஒருவன் கருத்து வேற்றுமையை முன்னிட்டு உள்ளக்கிளர்ச்சி யையும் குழப்பத்தையும் உண்டுபண்ணலாகாது. குத்தலான சூழ்நிலையிலும் சாந்தமாய் இருந்து பழகுதலே நல்ல ஆத்ம சாதனம் ஆகிறது என்பது இக்கண்ணியின் கருத்து.

221. எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறுஒன்று அறியேன் பராபரமே.

கணக்கற்ற எண்ணங்கள் உள்ளத்தில் உதித்துக் கொண்டிருப்பதே மனத்தின் இயல்பாகும். அனுகூலமாய் இருப்பவைகளைக் குறித்து உள்ளத்தில் நல்லெண்ணங்கள்

உதிக்கின்றன. பிரதிகூலமாய் இருப்பவைகளைக் குறித்து உள்ளத்தில் சீற்றமும், வெகுளியும் போன்ற எண்ணங்கள் உதிக்கின்றன. 'நண்பரை நேசி, பகைவரை வெறு' என்பது உலகத்தவர்களுக்கிடையிலுள்ள சாதாரணமான மனப் பான்மையாகும். ஆனால் ஆத்மசாதகன் தன் மனப்பான் மையை அடியோடு மாற்றிக்கொள்ள வேண்டும். பிரபஞ்சத்தி லுள்ள அனைத்தும் பரம்பொருளின் பலப்பல தோற்றங் களாம். கடவுளே இத்தனைவகை உயிர்வகைகளாக வடி வெடுத்து விளையாடுகிறார். இவ்வுண்மையை அறிதற்கு மனத்தைப் பண்படுத்தியாகவேண்டும். சித்தமலம் அறு பட்டு இருப்பவர்களுக்கே அனைத்தும் ஆண்டவன் சொரூபம் என்பது விளங்குகிறது. உள்ளத்தைப் பக்குவப்படுத்து தற்கு ஆத்மசாதகன் உற்றார் வேற்றார் என்னும் பான்மையை வளர்க்கலாகாது. அத்தகைய பேதபுத்தி மனபரிபாகத்தை உண்டுபண்ணாது. தனக்கு நலன் செய்கின்றவர்களையும், கேடு செய்கின்றவர்களையும் கடவுள் சொரூபமாகவே கருத வேண்டும். எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யலாகாது. எவ் வுயிரையும் வெறுக்கலாகாது. பிற உயிர்களுக்குத் தீங்கு செய்தால் மனிதன் தன்னைத்தானே கீழ்மைப்படுத்திக் கொள் கிறான். பிற உயிரை வெறுத்தால் தன் மனத்தை அவன் பாழ்படுத்துகிறான். மற்று எல்லா உயிர்களையும் கடவுளின் தோற்றங்கள் என்று நேசித்துப் பழகினால் மனபரிபாகம் விரைவில் வருகிறது. பிரஹ்லாதன் தீங்கு செய்தவர் களையும் திருமாலின் வடிவங்களாகவே கருதி நேசித்தான். ஆதலால் அவன் பரமபக்தனாகி அனுபூதிக்குத் தகுதியுடை யவன் ஆனான். அவன் செய்தது போன்று எல்லா உயிர் களின் நலத்திலேயே கண்ணுங்கருத்துமாயிருக்கவேண்டும் என்பது இக்கண்ணியின் கோட்பாடு.

222. முன்னுள்மெய்ஞ் ஞான முனிவர்தவம்
ஈட்டுதல்போல்
இந்நாளில் காணஎனக்கு இச்சை பராபரமே.

மனம், மொழி, மெய் ஆகிய திரிகரணங்களையும் பரத்தின்பால் செலுத்திவிட்டால் அது ஞான தபசு அல்லது நிஷ்காமிய தபசு ஆகிறது. பண்டைக் காலத்தில் பிரம்மரிஷிகள் பலர் அத்தகைய செயற்கரிய தபசைச் செய்தார்கள். இடைக் காலத்தில் தசரத குமாரர்கள் நால்வரும் அத்தகைய தவம் புரிந்தார்கள். அதன் பிறகு பாண்டவர்கள் ஐவரும் அதே பாங்கில் தவம் புரிந்தார்கள். புரிந்த தவத்திற்கேற்ப அவர்களிடம் தெய்வீகம் திகழ்வதாயிற்று. மனிதனை மேலோன் ஆக்குதற்குத் தவம் ஒன்றே உற்ற உபாயமாகிறது. அருள் தாகம் வாய்க்கப் பெற்றிருக்கின்றவர்களுக்குத் தவம்புரிதலில் சிரமம் ஒன்றுமில்லை. பிரிந்திருந்த தாயினிடம் குழந்தையொன்று பறந்தோடுவது போன்று பரம்பொருளிடத்துத் தவத்தின் வாயிலாக ஆத்மசாதகர்கள் பறந்தோடுகிறார்கள். அத்தகைய தவத்தை நானும் புரியவேண்டும் என்று தாயுமானவர் தெய்வத்திடம் பிரார்த்திக்கிறார். இதுவே இக் கண்ணியின் சாரமாகும்.

223. கன்மம்என்பது எல்லாம் கரிசுஅறவே மெய்ஞ்ஞான
தன்மநிலை சார்ந்தது அன்பர் தன்மை பராபரமே.

கரிசு அறவே-குற்றம் நீங்குதல் பொருட்டு; தன்மநிலை-தர்மத்தின் பாங்கு; சார்ந்தது - பின்பற்றியது; தன்மை-இயல்பு.

கர்மத்தை மேற்போக்காகப் பார்க்குமிடத்து அது பாபமாகவும், புண்ணியமாகவும் வடிவெடுப்பதாகத் தோன்றுகிறது. பாபகர்மம் வேறு புண்ணிய கர்மம் வேறு என்று நாம் எண்ணுகிறோம். ஆனால் கர்மத்தைப்பற்றிய உண்மை

ஒன்றுண்டு. அக்னியில் புகையிருப்பது போன்று ஒவ்வொரு கர்மத்திலும் நலன், கேடு ஆகிய இரண்டும் சேர்ந்தே இருக்கின்றன. முற்றிலும் புண்ணிய மயமான கர்மம் பிரபஞ்சத்தில் இல்லை. முற்றிலும் பாப மயமான கர்மமும் இவ்வுலகில் இல்லை. கர்மம் புரியாது உலகில் வாழ்ந்திருக்க முடியாது. புரிகின்ற கர்மத்தில் நன்மை அதிகமாகவும், தீமை குறைந்ததாகவும் இருக்குமாகில் அக்கருமத்தில் ஈடுபட்டு ஆகவேண்டும் என்று மெய்ஞ்ஞானிகள் துணிகின்றனர். எது தர்மம், எது அதர்மம் என்று பாகுபடுத்துவதும் மிகக் கடினம். தாய் தந்தையர் சொற்படி நடப்பது தர்மமென்று தசரத ராமன் தன் வாழ்க்கையின் வாயிலாக விளக்கினன். பின்பு அதற்கு நேர்மாருகப் பெற்ருேர் சொற்படி நடக்கமாட்டேன் என்று ராமனுடைய தம்பி பரதன் பெற்ருேரை எதிர்த்துச் செயல்புரிந்தான். அவன் புரிந்த செயலும் தர்மமெனவே அங்கீகரிக்கப்படுகிறது. தர்மநிலை சார்வது ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு பாங்கில் அமைகிறது. நடைமுறையில் செயல்கள் ஒன்ருேடு ஒன்று முரண்பட்டு இருப்பது இயல்பு. ஆயினும் ஒரு செயலில் ஈடுபடுவதின் விளைவாக ஒரு மனிதன் மேன்மையுறுவாளுகில் அது தர்மமென அங்கீகரிக்கப்படுகிறது. அச்செயலில் சிறிதளவு குற்றம் அமைந்திருந்தாலும் அதை அவன் பொருள்படுத்தலாகாது. இக் கோட்பாடுகளை ஒரு எளிய உபமானத்தின் வாயிலாக இராமகிருஷ்ண பரமஹம்சர் விளக்கியுள்ளார். சேற்று மீன் சேற்றில் வளர்ந்து வருகிறது. ஆயினும் சேறு தன்மீது படிவதற்கு அது இடம் தருவதில்லை. சேற்றைப் புறக்கணித்துவிட்டு அது வேறு ஓர் இடத்துக்குப் போவதும் இல்லை. அதே பாங்கில் கர்மத்தில் பிறந்துள்ள மனிதன் கருமத்தைப் புறக்கணித்துவிட்டு, கர்ம அதீதத்துக்கு எடுத்த

எடுப்பில் போகமுடியாது. கர்மத்தைக் கரிசு அறக் கையாள அவன் கற்றுக்கொள்ள வேண்டும். குறைபாடுள்ள கர்மத்தையும் பற்றற்ற பாங்கில் ஒருவன் அனுஷ்டிப்பானுகில் அது அவனுக்குரிய தர்மமாகிறது. கர்மத்தின் இந்தப் பாங்குகளெல்லாம் மெய்யறிவு படைத்துள்ள அன்பர்களுக்கு விளங்குகிறது. தங்களுக்குத் தற்செயலாய் வாய்த்த கடமைகளைச் சுவதர்மம் எனக் கருதி நன்கு கடைப்பிடிக்கின்றனர். அதன் விளைவாக அவர்கள் முதலில் அந்தக்கரண சுத்தியடைகின்றனர். அதாவது மனத்தெளிவு பெறுகின்றனர். பின்பு அதன் வாயிலாக அவர்கள் மேன்மையுறுகின்றனர். அத்தகைய அறிஞர் போக்கில் நானும் உலகில் வாழ்ந்திருப்பேனுக என்பது இக்கண்ணியின் கருத்தாகும்.

224. கண்துயிலாது என்அறிவின் கண்ணூடே காட்சிபெற
மண்டிய பேரொளிநீ வாழி பராபரமே.

மண்டுதல்—திரளுதல்; மிகவும் ஒளிவிடல்.

உண்ணுது உறங்காது இருந்தாய் போற்றி என்னும் விளக்கம் ஒன்று பரம்பொருளுக்கு வந்துள்ளது. பிரபஞ்சத்துக்கு அப்பாற்பட்டதாக அது இருப்பதால் உணவு உறக்கம் ஆகிய இரண்டும் அதற்குத் தேவையில்லை. யாண்டும் நித்திய ஜாக்கிரதாவஸ்தையில் அது நிலைத்திருக்கிறது. அதைத் திரண்ட பேரொளி எனவும் பகரலாம். அப்பேரொளிக்கு நிகராகப் பிரபஞ்சத்தில் இருப்பது சூரியன். இந்த ஞாயிறு புலர்வது போன்றும் மறைவது போன்றும் காட்சி கொடுக்கிறது. ஆனால் உண்மையில் அது உதிப்பதுமில்லை; அஸ்தமனம் ஆவதும் இல்லை. யாண்டும் தன்மயமாய் இருக்கிறது. நம்முடைய சூழ்நிலையை முகாமையாக வைத்துக்கொண்டு பொழுது புலர்ந்தது என்றும் பொழுது போயிற்று என்றும் நாம் பகர்கிறோம். பிரபஞ்சத்தில் கட்டுண்டு இருக்கிற நமக்கு

உறக்கமும், விழிப்பும் மாறி மாறி வந்துகொண்டிருக்கின்றன. விழித்திருக்கின்றபொழுது நம் அறிவுக்கு அறிவாய் இருக்கின்ற பேரொளியை நன்கு உணர்கிறோம். உறங்குகின்றபொழுது நாம் படைத்துள்ள தமோகுணத்தின் விளைவாகப் பரம்பொருள் மறைந்துபட்டுப் போனதாக நாம் பொருள்படுத்துகிறோம். கண்துயிலுதல் அஞ்ஞானத்தில் இருக்கிற நமக்குண்டு. கண்துயிலாது இருப்பது பரம்பொருளின் பாங்கு. நமக்கு ஞானோதயம் வருகிறபொழுது பரம்பொருளைப் பற்றிய உண்மை நன்கு விளங்குகிறது. நம்முடைய உறக்கத்திலும், விழிப்பிலும் கட்டுப்படாது நம்முடைய உள்ளத்தின் உள்ளே பரவஸ்துவானது திரண்ட பேரொளியாகச் சதா பிரகாசித்துக்கொண்டிருக்கிறது.அதன் காட்சியைப் பெறுவது பரஞானம். அப்பரஞானத்தைப் பெற்றன பிறகு நாம் உறங்குவதும், விழித்திருப்பதும் ஆகிய அவஸ்தைகளை முன்னிட்டுப் பரவஸ்துவுக்குப் பழுது ஒன்றுமில்லை என்பதை அறிய வருகிறோம். அத்தகைய பரவஸ்துவைப் போற்றுவதே நல்ல வழிபாடு ஆகிறது. அத்தகைய வழிபாட்டில் ஈடுபடுவதற்கு ஏற்ப நாம் அந்த வஸ்துவின் பாங்கை அடைந்து வருகிறோம். அத்தகைய வழிபாடு எனக்கு வாய்ப்பது ஆகுக என்பது இக்கண்ணியின் கருத்து.

225. நான்ஆன தன்மைஎன்றும் நாடாமல் நாடஇன்ப
வான்ஆகி நின்றனைநீ வாழி பராபரமே.

இன்பவான் ஆகி—சித் ஆகாச இன்பமாகி.

காற்று வீசும் பொழுது கடலில் அலைகள் பல தோன்றிக் கடல் தன்மையை மறைக்கின்றன. அங்நிலையிலும் கடலுக்குப் புறம்பாக அலையென்பதொன்றில்லை. அந்த அலைக்கு நிகர் நான் என்னும் ஜீவ வியக்தி. ஜீவ வியக்திகள் எண்ணிறந்தவை. சிதாகாசத்தின்கண் அவைகள் அலைபோன்று

உருவெடுத்து விளையாடுகின்றன. ஆயினும் இந்த ஜீவ வியக்திகளுக்குத் தற்போதம் இல்லை. நான் என்னும் ஜீவ போதம் கற்பனையாக வருவிக்கப்பட்டது. பூதங்களின் கூட்டுறவாலும், அதன்மீது பிரதிபிம்பிக்கிற ஆத்மசைதன்யத் தாலும் ஜீவனுக்குத் தனி வியக்தி இருப்பது போன்று தென் படுகிறது. அலையின்மீது பிரதிபிம்பிக்கிற சூரியனுக்கு நிகர் அந்தக்கரணத்தில் பிரதிபிம்பிக்கிற ஆத்ம சைதன்யம். அலை ஒடுங்குகிறபொழுது அதில் தென்பட்ட சூரியனும் தோற்றத் தில் இல்லாது போகிறது. அதேவிதத்தில் அந்தக்கர ணத்தை ஒதுக்கிவிட்டால், அதில் ஒளிர்கிற ஜீவ வியக்தியும் அடிபட்டுப் போகிறது. காற்று அற்ற இடத்தில் அலை இல்லை. அங்ஙனம் ஆசை அற்ற இடத்தில் அந்தக்கரணம் இல்லை. அந்தக்கரணம் அடிபட்டுப்போன இடத்து நான் என்னும் ஜீவவியக்தி இல்லை. அலை ஒடுங்குவதால் கடலுக் குப் பழுது இல்லை. அங்ஙனம் ஜீவவியக்தி ஒடுங்குவதால் சிதாகாசத்துக்குப் பழுது இல்லை. அது யாண்டும் தன்மய மாயிருக்கிறது. 'யான் எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும் என்பது கோட்பாடு. வானவரும் அல்லது தேவர்களும் ஜீவவியக்திகளாம். அவை கள் ஒடுங்குமிடத்துச் சிதாகாசம் எஞ்சியிருக்கிறது. அதற் குப் போக்குவரவு இல்லை. அது பேரின்பப் பேரறிவுப் பெருவெளி. அதுவே மனிதனுடைய நிஜநிலை. அந்நிலையை அறிகிறவன் அதை எட்டுகிறான். அன்னவனுக்குக் கைவல்ய முக்தி. அப்பெருநிலையே யாண்டும் போற்றுதற்குரியது. அப்பெருநிலையைப் பற்றிப் பிடிக்கப் பிடிக்கச் சிறு நிலையாகிய ஜீவ வியக்தி தேய்ந்து மறைகிறது. வழிபாடு என்பதன் உட்பொருள் ஈண்டு வெளியாகிறது. மனிதன் எதை வணங்குகிறானோ அதன் மயமாக அவன் மாறி அமைகிறான்.

ஆத்மசொரூபத்தை வழிபடுகின்றவன் ஆத்மசொரூப மயமாகிருன். ஆத்மசிந்தனே மனத்தைத் தூயதாக்குகிறது. மனம் தூய்மையடைதற்கேற்ப அது ஆத்மசொரூபத்தைக் கிரகிக்கிறது. ஆத்மசொரூபத்தைக் கிரகித்து அதில் திளைத்திருப்பதற்கு நிகரான வழிபாடு இல்லை. அப்பெரு நிலையைப் போற்றிப் பாராட்டி அதன்கண் நான் ஒடுங்கி விடுவேனுக என்பது இக்கண்ணியின் கருத்து.

226. அகத்தூடு அணுஅணுவாய் அண்டம்எல்லாம் தானுய்
மகத்துஆகி நின்றனே நீ வாழி பராபரமே.

அகம்—உள்ளிடம்; புறம் என்பதற்கு எதிரிடை.

பரம்பொருள் யாண்டும் என்ன பாங்கில் இருக்கிறது என்னும் கேள்விக்கு விடையாக இக் கண்ணி வந்து அமைந்துள்ளது. ‘அணோர் அணு மகதோர் மகத்’ என்பது சுருதி வாக்கியம். அணுவுக்குள் பரம அணுவாயிருப்பது அப் பரவஸ்துவே. பெரியதிலெல்லாம் மிகமிகப் பெரியதாயிருப்பது பரவஸ்து. மிகப் பெரியதாயிருப்பது மகத் என்னும் பெயர் பெற்றுள்ளது. பரம அணுவைவிட நுண்ணியது ஒன்றுமில்லை. நுண்ணியதிலெல்லாம் அது மிக நுண்ணியது. பரம அணுவைக் கிரகிப்பது எங்ஙனம் என்னும் கேள்வி எழுகிறது. உரோமம் ஒன்றின் நுனியைக் கத்தரிக்கோலால் வெட்டி எடுத்தல் வேண்டும். அந்நுண்ணிய துண்டை ஆயிரம் துண்டுகளாக மேலும் துண்டித்தல் வேண்டும். அப்படித் துண்டித்தான பிறகு அதினின்று ஒரு தனித் துண்டை எடுத்தல் வேண்டும். அத்துண்டை மேலும் ஆயிரம் துண்டுகளாக்கினல் அது ஓர் அணு ஆகிறது. அத்தகைய அணு ஒன்றை எடுத்து மேலும் ஓர் ஆயிரம் துண்டுகளாக்கினல் ஒவ்வொரு துண்டும் ஒவ்வொரு பரம அணு ஆகிறது. பரம அணுவைவிட நுண்ணியது ஒன்றுமில்லை. அத்தகைய பரம

அணுவாய்த் தன்னை வைத்திருப்பது பரவஸ்து. இக்கோட் பாட்டை ஆழ்ந்து எண்ணிப்பார்க்கவேண்டும்.

அகத்தில் இப்படி அணுவுக்கு அணுவாய் இருக்கிற பரவஸ்து புறத்தில் அண்டமாக வடிவெடுக்கிறது. அண்டம் என்னும் சொல் முட்டை என்று பொருள்படுகிறது. அது வட்ட வடிவாய் இருக்கிறது. பூமி வட்டவடிவாய் இருக் கிறது. சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள் ஆகிய கோளங் கள் வட்டவடிவாயிருக்கின்றன. எண்ணிக்கையிலடங்காத சூரியமண்டலங்கள் ஒன்றுகூடி ஓர் அண்டம் ஆகிறது. இந்த அண்டங்கள் கணக்கில் அடங்காதவைகளாக அகண்டா காரத்தில் விரிந்தோடுகின்றன. எந்த அண்டத்தில் நம் பூமி அடங்கியிருக்கிறதோ அந்த அண்டம் நமக்கு அகம் ஆகிறது. இதற்கு அப்பால் இருப்பவைகள் புறம் எனவும் பகிரண்டங்கள் எனவும் பெயர் பெறுகின்றன. ஓர் அண்டத் தின் வியாபகத்தைக் கிரகித்துக்கொள்ளுதற்கு உபாயம் ஒன்றை நாம் கையாளவேண்டும். நம் பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் உள்ள தூரம் ஒன்பது கோடி மைல் ஆகும். சூரியனிடத்து இருந்து புறப்படும் வெளிச்சம் பூமியை எட்டுதற்கு எட்டேகால் நிமிஷம் எடுத்துக்கொள்கிறது. சராசரி ஒரு நிமிஷத்துக்கு ஒரு கோடி மைல் வேகத்தில் வெளிச்சம் ஓடுகிறது. அப்படி ஓடுகிற வெளிச்சம் ஓர் அண்டத்தின் ஒருபக்கத்தில் இருந்து மற்றொரு பக்கம் போய்ச் சேருவதற்கு அனந்தங்கோடி வருஷங்கள் எடுத்துக்கொள் கிறது. இந்நிகழ்ச்சியைக்கொண்டு ஓர் அண்டத்தின் வண்ணம் எவ்வளவு பெரியது என்பதை ஒருவாறு நாம் கிரகிக்க லாம். இதே விதத்தில் எண்ணிக்கையில் அடங்காதவாறு அனந்தங்கோடி பகிரண்டங்கள் இருக்கின்றன. அவை யாவையும் தொகுத்து எடுக்குங்கால் அவைகளின் தொகை

மகத் என்னும் பெயர் பெறுகிறது. இந்தப் பேரமைப்பைச் சிந்திப்பதும் ஆத்மசாதனமாகிறது. பரவஸ்துவானது இப்படியெல்லாம் தன்னை விளக்கிக்கொண்டிருக்கிறது. அதன் மகிமைகளையெல்லாம் யார்தான் கிரகிக்க வல்லவரா கின்றனர்? இப்படியெல்லாம் சிறியதில் மிகச் சிறியதாகவும் பெரியதில் மிகப் பெரியதாகவும் அமைந்து விளையாடிக் கொண்டிருக்கின்ற பரவஸ்துவே, நீ வாழக்கடவாய் என்பது இக்கண்ணியின் கருத்தாம். பரவஸ்துவை இங்ஙனம் சிந்தனை பண்ணுகிறபொழுது சாதகனுடைய மனம் அகண்டா காரத்தில் விரிந்தோடுகிறது. அது ஒரு சிறந்த ஆத்ம சாதனமாகிறது.

**227. கார்அகம்ஆம் கர்ப்பஅறைக் கண்ணூடும்
என்கண்ணே
வாரம்வைத்துக் காத்தனைநீ வாழி பராபரமே.**

கார்-இருள். காரகம்-இருளுக்கு இருப்பிடம். கர்ப்ப வறை-கர்ப்ப+அறை-பிரளயகாலத்தில் அண்ட கோடிகள் ஒடுங்கியிருக்கிற கர்ப்பப் பை. வாரம்-அன்பு.

தோற்றத்துக்கு வந்திருக்கிறபொழுது பரவஸ்து வானது பரம அணுவிலிருந்து மகத் பரியந்தம் பலப்பல தோற்றங்கள் உடைத்திருக்கின்றன. இனி பிரளயகாலத்தில் அது என்ன பாங்கில் இருக்கிறது என்பதை இக்கண்ணி விளக்குகிறது. இருளுக்குள்ளே கார் இருள் சூழ்ந்து இருந்த பொழுது யாது இருந்தது என்னும் கேள்வியை ரிக்வேதம் கிளப்புகிறது. இருளுக்குள்ளே இருள் சூழ்ந்திருந்தபொழுது பரம அணுவுமில்லை; மகத்தும் இல்லை. அவை யாவும் ஒடுங்கிப்போய்விட்டன. பிரளயத்தில் படலம் படலமாகக் கார் இருளே இருந்தது. அந்தக் கார் இருளிலும் கட்டுப்

படாததாகப் பரவஸ்து இருக்கிறது. அது பிரக்ஞானம் என்னும் பெயர் பெறுகிறது. பிரக்ஞானம் என்னும் பர வெளியிலே அண்டங்கள் தோன்றவும், ஒடுங்கவும் செய் கின்றன. அத்தகைய தோற்றங்களும் ஒடுக்கங்களும் பிரக் ஞானத்தைப் பாதிப்பதில்லை. பிரக்ஞானமோ யாண்டும் மாருத பேரன்பு மயமாய் இருக்கிறது. அந்தப் பேரன்பானது ஒடுங்கியிருக்கிற ஜீவர்களை உள்ளன்போடு காத்து வரு கிறது. தாயின் கர்பத்திலிருக்கிற சிசுவைத் தாய் காப்பாற்று வது போன்று அனைத்தும் ஒடுங்கியிருக்கின்ற கார் இருள் கர்ப்ப அறை மயமாயிருந்து அதனுள் ஒடுங்கிக் கிடக்கிற ஜீவகோடிகளை அது அன்போடு காத்து வருகிறது. 'வாரம் வைத்துக் காத்தனை நீ' என்பது அக்கோட்பாட்டுக்கு விளக்கமாகிறது. தோன்றியுள்ள நிலையிலும், ஒடுங்கியுள்ள நிலையிலும், அண்டகோடிகள் அனைத்தையும், ஜீவகோடிகள் அனைத்தையும் பரவஸ்துவானது பேர் அன்போடு காப்பாற்றி வருகிறது. அத்தகைய பரவஸ்து போற்றப்படுவதாகுக என்பது இக்கண்ணியின் கருத்து.

228. புரந்தோர்தம் தேசம்என்பார் பூமியைப்போர் ஆடி
இறந்தோரும் தம்மதுஎன்பார் என்னே பராபரமே.

புரந்தோர்—அரசர்கள். ஜீவாத்மனைப் பிரபஞ்சத்தில் பந்தப்படுத்துவது அகங்காரம், மமகாரம் என்னும் செருக்கு. தான் அல்லாத உடலைத் தான் என்று அபிமானிப்பது அகங் காரம். தன்னுடையவைகள் அல்லாத பிரபஞ்சப்பொருள் களைத் தன்னுடையவைகள் என்று உரிமை பாராட்டுவது மமகாரம். அகங்காரத்தின் வலிவுக்கு ஏற்ப மமகாரமும் வலிவுபெறும். மண்ணுலகில் கணக்கற்ற வேந்தர்கள் கால மெல்லாம் தோன்றி வந்து ஆட்சி புரிந்திருக்கின்றனர். ஒவ்வோர் அரசரும் பூமியின் ஒவ்வொரு பகுதியைத் தம்தேச

மென்று மமகரித்தனர். அந்த மமகாரத்தில் நலன், கேடு ஆகிய இரண்டும் நிறைந்திருந்தன. தம் தேசத்துக்கு நலன் செய்யவேண்டும் என்னும் அபிமானம் ஓர் அளவு நலன் புரிந் தது. வேற்றரசனுக்குரிய நாட்டில் உரிமை பாராட்டியது போராட்டமாக முடிந்தது. அதனால் கேடுகள் பல விளைந் தன. இனி அந்தந்த நாட்டுக்குரிய பொதுமக்கள் படையாகத் திரள்கின்றனர். தங்கள் நாட்டைப் பாதுகாப்பதும், அதற் காகவென்று போர்புரிவதும் தங்களுடைய கடமைகள் என்று எண்ணிறந்த பேர் பட்டாளங்களாகத் திரண்டனர். ஒரு நாட்டுக்குரிய படை மற்றொரு நாட்டைத் தீவிரமாகத் தாக்கு கிறது. போர் மூள்கிறது. எண்ணிறந்த பேர் மடிகின்றனர். எம்முடைய நாடு என்று அபிமானித்த அரசர்களும், நாடு களுக்காகச் சண்டை செய்த சேனைகளும் மறைந்துபட்டுப் போயினர். வாழ்நாளில் அன்னவர்கள் பூண்டிருந்த மமகாரம் மாயமாய் மறைந்து போயிற்று. இது உலக சரித்திரம். மமகாரம் பொருளற்றது என்பதைக் கண்கூடாகப்பார்த்திருந் தும் மக்கள் அக்கேட்டினின்று விலகிக்கொள்ள முயலுவ தில்லை. உண்மையில் இவ்வுலகில் மனிதனுக்குச் சொந்த மானது ஒன்றுமேயில்லை. ஜீவவியக்தியும் பொய்; ஜீவ வியக்தி படைத்திருக்கிற உலக உடைமையும் பொய். இந்த மயக்கத்திலிருந்து விடுவித்துக்கொள்ள ஆத்மசாதகன் கடமைப்பட்டுள்ளான் என்பது இக்கண்ணியின் கருத்தாகும். அகங்காரமற்று, மமகாரமற்று ஆண்டவனுடைய ஆராதனை யாகத் தர்மயுத்தம் பண்ணலாம் என்பது பகவத்கீதையின் போதனை.

229. மூர்த்திஎல்லாம் வாழிஎங்கள் மோனகுரு
வாழிஅருள்
வார்த்தைஎன்றும் வாழிஅன்பர் வாழி பராபரமே.

மெய்ப்பொருள் ஒன்று. அப்பொருளுக்கு வடிவங்கள் பல இருக்கின்றன. சிவன் என்று சொன்னாலும், சக்தி என்று சொன்னாலும், கணபதி, முருகன், திருமால் இங்ஙனம் இயம்பினாலும், இந்தச் சொரூபங்கள் யாவும் ஒரே மெய்ப் பொருளைச் சுட்டிக் காட்டுகின்றன. ஆதலால் ஆத்மசாத கன் தெய்வத்தின் ஒரு வடிவத்தை மேலானதென்றும், மற் றொன்றைக் கீழானதென்றும் கருதலாகாது. உயர்வு, தாழ்வு பாராட்டிக் கருதுவது பக்திக்கு விக்கினமாகும். எத்தனை கோடி மூர்த்திகளாகத் தன்னைத் தோற்றுவித்துக்கொண்டா லும் பொருள் ஒன்றே. பல மூர்த்திகளாக மிளிரும் மெய்ப்பொருளே உன்னைப் போற்றுகிறேன் என்று வணங்கு வது முறை.

ஆத்மசாதகனைப் பாரமார்த்திகத்தில் செலுத்துதற்கு குரு ஒருவர் வாய்க்கிறார். அந்தக் குருவிடம் பக்தி செலுத்து மளவு சாதகன் சாதனத்தில் விரைந்து மேலேறுகிறான். தாயுமானசுவாமிகளுக்குத் திருமூலர் மரபில் வந்த மௌனி ஒருவர் குருவாக வாய்த்தார். அக் குருவிடம் சிஷ்யராகிய தாயுமானவர் பக்தி செலுத்தியது மற்ற பக்தர்களுக்கு முன் மாதிரியாகும். 'எங்கள் மோன குரு வாழி' என்று அவர் போற்றுகிறார்.

ஜீவாத்மனுக்கும் பரமாத்மனுக்கும் இடையிலுள்ள இணக்கத்தை மெய்நூல்கள் ஒரு வாக்கியத்தில் விளக்கு கின்றன. அத்தகைய வாக்கியத்தை மகாவாக்கியம் என்று இயம்புவது ஐதிகம். மகாவாக்கியங்கள் பல இருக்கின்றன. 'தத் த்வம் அஸி' என்பது அவைகளில் ஒன்று. 'நீ அதுவா கின்றாய்' என்பது அதன் பொருள். மகாவாக்கியத்தை அருள்வார்த்தை என்று அண்ணல் இயம்புகின்றார். அருளாளர் அருள்நிலையில் இருந்து இயம்பியதால் அதை

அருள்வார்த்தை என்று சொல்லுவது பொருந்தும். மகா வாக்கியம் காலத்தையோ, தேசத்தையோ, நிமித்தத்தையோ முன்னிட்டு மாறியமைவதில்லை. அது மாருத பேருண்மை. ஆதலால் எக்காலத்திலும் சான்ருேர் எல்லாராலும் அது போற்றப்படுகிறது. அக் கோட்பாட்டை 'அருள் வார்த்தை என்றும் வாழி' என இவ்வருளாளர் இயம்புகின்ருர்.

பக்தர்களைப்பற்றி ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் சில கோட்பாடுகளைக் கூறுகின்ருர். இப்பரந்த உலகில் நாடுகள் பல இருக்கின்றன. ஆயினும் எல்லா நாடுகளிலும் உள்ள நரிகள் ஒரே பாங்கில் ஊளையிடுகின்றன. அதே விதத்தில் பக்தர்கள் எல்லாரும் ஒரே தெய்வீகப் பாங்கு படைத்தவர் களாகத் திகழ்கின்றனர். அவர்களுக்கிடையில் மத வேற் மையோ, மொழிவேற்றுமையோ, இனவேற்றுமையோ, வேறு எந்த வேற்றுமையோ கிடையாது. மழைநீர் எக்காலத்தில் எவ்விடத்தில் பொழிந்தாலும் அது ஒரே பாங்குடையதாய் இருக்கிறது. பக்தர்களின் பரிபாகமும் அத்தகையதே. பக்தர்களை அண்ணல் 'அன்பர் வாழி' என்று போற்றுகிருர். பக்தர்களைப் போற்றுமளவு பக்தனுக்குப் பக்தி வளர்கிறது. பக்தர்களைப் போற்றுவது பகவானைப் போற்றுதற்கு நிகர் ஆகிறது. இங்ஙனம் போற்றவேண்டியவைகளை யெல்லாம் முறையாகப் போற்றுவது நல்ல ஆத்மசாதனமாகிறது என் னும் கோட்பாடு இக்கண்ணியில் அடங்கி இருக்கிறது.

230. சொல்லும் பொருளும் தொடரா அருள்நிறைவில்
செல்லும் படிக்குஅருள்நீ செய்தாய் பராபரமே.

நாம் கையாண்டு வருகிற சொல்லும் அதன் பொருளும் இணைபிரியாதவைகள். சொல் ஒன்றைக் காதால் கேட்கும் பொழுதே அதன் பொருள் ஞாபகத்துக்கு வருகிறது. தாய்

என்றோ .தந்தை என்றோ சொல் வடிவெடுக்கும்பொழுது அச் சொல்லைச் சொல்லுகிறவர் உள்ளத்திலும், கேட்கிறவர் உள் ளத்திலும் அதன் பொருளாகிய மானுடர் ஞாபகத்துக்கு வருகின்றனர். பிரபஞ்சத்திலுள்ள அனைத்தையும் சொல் லால் விளக்குகிறோம். சொல்லுக்கு அடிப்படையாய் உள்ள பொருளும் ஞாபகத்துக்குக் கொண்டுவரப்படுகிறது. ஆனால் இக்கோட்பாடு பரவஸ்துவைக் குறிப்பதற்கு உதவாது. இவ்வுண்மையை ஓர் உபமானத்தின்மூலம் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் வெளிப்படுத்துகிறார். அதாவது, உலகிலுள்ள பொருள்களெல்லாம் மனிதனுடைய நாவுக்கு இலக்கு ஆவ தால் அவையாவும் எச்சில்பட்டவைகள் ஆகின்றன. பரவஸ்து ஒன்றே எச்சில்படாதது. பரவஸ்து என்று பகர்ந்தாலேயே நாம் அதை விள்க்கியவர்கள் ஆக மாட் டோம். சொற்பதம் கடந்த தொல்லோன் என்பதும், மனம் வாக்குக்கு எட்டாதவன் என்பதும் பரவஸ்துவைப் பற்றிய கோட்பாடு ஆகும். கடவுள் என்னும் சொல்லைக் கேட்கும் பொழுது கடவுளை நாம் கற்பனை பண்ணுகிறோம். அப்படி நாம் செய்வது கற்பனையே ஒழிய சொல்லிலோ மனத்திலோ அது அடங்கியிருந்து விளக்கப்பட்டதாகாது. ஏனென்றால் சொல் ஏதும் அதை எட்டுவதில்லை. மனம் ஏதும் அதைக் கிரகிப்பது இல்லை. மனத்துக்கு அது அப்பாற்பட்டது. .சொல்லும் சிந்தையும் ஒடுங்கியவிடத்து அது தன்னில் தானாய் இருக்கிறது. சொல்லையும் சிந்தையை யும் ஒடுக்கியவர்களுக்கு அது வெளிப்படை. மற்றவர்களுக்கு அது மர்மம். சிதம்பர ரகசியம் என்றும் மனத்துக்கு எட்டாத அவ்வஸ்துவுக்குச் சொல்லளவில் விளக்கம் தரப்பட்டுள்ளது. மனத்துக்கு அப்பாற்பட்டதை ஊமையன் கண்ட கனவு என்று ஒரு போக்கில் ஓர் அருள் கூட்டத்தார் கூறியுள்ளார்

கள். பின்பு விஷயம்தான் என்ன? பண்பாடு அடைந்துள்ள சனகன், சனந்தன், சனுதனன், சனத்குமாரன் ஆகிய நால்வர் தக்ஷிணுமூர்த்தியின் முன்னிலேயில் வந்து அமர்ந் தனர். தக்ஷிணுமூர்த்தியோ மனம் மொழியை ஒதுக்கித் தள்ளிவிட்டுத் தன்னில் தாஞய் இருந்தார். அவர் மௌன முற்றிருந்தார். அப்பொழுதுமட்டுமன்று; எப்பொழுதுமே அவர் மௌனமுற்றிருக்கிருர். அது அவருடைய நிஜநிலே. வழக்கத்தில் அது மௌனேபதேசம் எனப்படுகிறது. மற்று உபதேசம் என்னும் சொல்லும் ஆங்குப் பொருளற்றது. நாம் அயர்ந்த நித்திரையில் மனதற்று நம்மை அக்ஞானம் மூடிய நிலேயில் இருக்கிரேம். பரமனே யாண்டும் மனத்துக்கு எட்டாது நிறை ஞானத்தில், வாலறிவில் திளேத்தவராக இருக்கிருர். பக்குவம் அடைந்திருந்த நால்வருக்கும் பார மார்த்திகப் பெருநிலே சொல்லாமலேயே விளங்கிவிட்டது. சொல்லே ஒடுக்கு. சிந்தையை ஒடுக்கு. இவைகளுக்கு ஆதார மாயிருக்கும் பிரக்ஞை தன்னில் தாஞய் இருக்கிறது. இந் நிலேயை எட்டியவர் முன்னிலேக்கு முற்றிலும் பக்குவமானவர் கள் வந்தால் அது தாஞகவே விளங்குகிறது. ‘அருள் நிறை வில் செல்லும் படிக்கு நீ செய்தாய்’ என்று சொல்லற்கரிய பொருளே ஒரு சொல்லில் தாயுமானவர் இக்கண்ணியில் விளக்குகிருர். சொல்லேயும் சிந்தையையும் ஒடுக்கியவருக்கு இது மெத்தச் சுலபம். புறத்தில் மூர்த்தி ஒன்று முன்னே தோன்றி இந்நிலேயைக் காட்டினுலும் சரி; காட்டாதிருந்தா லும் சரி. அகத்தில் அது தனக்குத்தானே அருள் குருவா யிருந்து அது தன்னில் தான் நிறைவுற்றிருக்கிறது. இந்த அதீத நிலேயை எட்டுவதற்கே இத்தனேவிதமான வியவ காரங்களும் பயன்படுத்தப்படுகின்றன என்பது இக்கண்ணி யின் கருத்து.

231. இற்றைவரைக்கு உள்ஆக எண்ணரிய சித்திமுக்தி
பெற்றவர்கள் எத்தனைபேர் பேசாய் பராபரமே.

சித்தி என்னும் சொல்லுக்குப் பொருள்கள் இரண்டு உள. பாமரர்கள் வியக்கும் வண்ணம் நீர்மேல் நடப்பது, வெட்ட வெளியில் இடம் மாறிப் போவது, ஏக காலத்தில் பல இடங்களில் காட்சி கொடுப்பது போன்றவைகள் சித்திகள் எனப்படுகின்றன. இத்தகையவைகளை யோகசாஸ்திரம் அஷ்டசித்திகள் அல்லது எட்டுவிதப் பேராற்றல்கள் எனப்பகருகிறது. சித்திகளைப் பெற்றவர்கள் அகங்காரத்திற்கு உட்பட்டுக் கீழ்நிலை அடைகின்றனர். அத்தகையவர்களைப் பதிதர்களாக (வீழ்ந்தவர்களாக) அறிஞர்கள் ஒதுக்குகின்றனர்.

இனி சித்தி என்பதற்குக் குறையிலா நிறைநிலை என்னும் பொருள் உள்ளது. பிரபஞ்ச வாழ்வு குறைபாடு உடையது. காமம், குரோதம், லோபம் போன்றவைகள் குறை நிலைகளாம். உடலமைப்பிலும் சிறப்பாக மன அமைப்பிலும் உள்ள குறைகளையெல்லாம் நீக்கி நிறைநிலை எய்தி இருப்பவன் சித்தன். அப்படிப் பரிபாகம் அடைந்திருப்பவன் பிரபஞ்ச வாழ்வைத் தாண்டி அதீத நிலை எய்துகிறான். இதுவே சித்தியின் சரியான உச்ச நிலை ஆகும். இந்நிலை பாராட்டுதற்கு உரியதாகும்.

முக்தி என்பது விடுதலை. ஜீவாத்மாக்கள் பிரபஞ்சத்தில் கட்டுண்டு கிடக்கின்றன. அதன் விளைவாக ஜனன மரணத்துக்கு அவையாவும் ஆளாகின்றன. ஜீவர்களுள் உச்சநிலை எய்தியிருப்பவன் மானுடன். மனிதன் தன்னைச் சாதனத்தின் வாயிலாக ஒரு சித்தன் ஆக்கலாம். மேலே இயம்பியுள்ளபடி குறையிலா நிறைநிலை பெறுவது மனித

னுக்குச் சாத்தியம். பிறவிப் பெருங்கடலில் இருந்து அவன் விடுபடுகிறான். அப்படி விடுபடும்பொழுது அவன் முக்தன் என இயம்பப்பெறுகிறான்.

ஒரு பிரம்மாவின் ஆதிக்ககாலம் ஒரு கற்ப காலம் எனக் கூறப்படுகிறது. ஒவ்வொரு கற்பத்திலும் கணக்கற்ற பேர் சித்தர்களாகவும் முக்தர்களாகவும் மேல்நிலை அடைந்து கொண்டே இருக்கின்றனர். அவர்களைக் கணக்கிட யாருக்குமே இயலாது. காலமெல்லாம் கணக்கற்ற பேர் சித்தர்களாகவும், முக்தர்களாகவும் ஆவது இயற்கையின் பெரிய திட்டம். தீவிரமாகச் சாதனத்தில் ஈடுபட்டுள்ள நான் இந்தப் பெருங்கூட்டத்தில் விரைவில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டேனோ? சேர்த்துக்கொள்ளப்படுதல் பொருட்டு, இறைவா, என்மீது கிருபைவைப்பாயாக என்பது இக் கண்ணியின் கருத்து.

232. நாடும்நக ரும்நிசான் நாட்டிய பாளயமும்
ஈடுசெயு மோமுடிவில் எந்தாய் பராபரமே.

பெரிய பட்டணங்கள் நகரம் எனப் பகரப்பெறுகின்றன. நிசான் என்பது ஒரு அரசாங்கத்துக்குரிய கொடி எனப் பொருள்படுகிறது. இன்றைக்கு நம் நாட்டிற்குத் தர்ம சக்கரம் நடுவில் பொறிக்கபெற்ற மூவர்ணக்கொடி நிசான் ஆக இலங்குகிறது. இதற்கு முன்பு வேறு எத்தனை எத்தனையோ நிசான்களை நம்நாடு பார்த்திருக்கிறது. பாளையம் என்பதற்குப் பட்டாளம் என இவ்விடத்தில் பொருள்கொள்ள வேண்டும்.

ஒரு நாட்டின் சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தால் அதன்கண் காலக்கிரமத்தில் கணக்கற்றஅரசாங்கங்கள் வந்து கொண்டும் போய்க்கொண்டும் இருக்கின்றன. அந்தந்தக்

காலங்களில் பெரிய பெரிய நகரங்கள் தோன்றுவதும் பின்பு அவைகள் மறைந்துபட்டுப் போவதும் இயற்கையின் போக்கு. சேனைகள் அந்தந்தக் காலங்களில் ஆற்றல் மிகப் படைத்தவைகளாக இருக்கின்றன. நகரங்களிலும் பட்டா ளங்கள் தங்கியிருக்கும் இடங்களிலும் நிசான்கள் அல்லது கொடிகள் கம்பங்கள் மீது கம்பீரமாக அசைந்துகொண்டு இருக்கின்றன. இவையாவும் உலக சம்பத்துக்களுக்கு விளக்கங்களாகின்றன. இத்தகைய வாய்ப்புகளை அனுப வித்துக்கொண்டிருப்பவர்கள் சாஸ்வதமாக உலகில் வாழ்ந் திருக்கப் போவதாக எண்ணுகின்றனர். ஆயினும் நாள் தோறும் உலகப்பொருள் படைத்தவர்கள் மடிந்துகொண்டே இருக்கின்றனர். மரணம் வந்து வாய்க்கின்ற வேளையில் இவைகள் மரணத்துக்கு ஈடாகமாட்டா. உலகப்பொருள் எதையுமே ஈடாகக் கொடுத்து மரணத்தை வெல்ல யாருக் குமே இயலாது. இவ்வுண்மையை விவேகி அறிந்திருப்பது அவசியமாகிறது. இவைகளைப்பெற்று அனுபவித்துக் கொண்டு இருப்பதற்கிடையில் அறிஞனொருவன் இவை களில் கட்டுண்டு போகலாகாது. உலக வைபவங்களில் மயங்கியிருப்பதில் பயனொன்றுமில்லை. இறைவா, தாயின் கிருபை பூண்டு என்னை இம் மயக்கத்தினின்று காப்பாற்றி யருள்வாயாக என்பது இக்கண்ணியின் கருத்து.

233. தேடும் திரவியமும் சேர்ந்தமணிப் பெட்டகமும்
கூட வரும்துணையோ கூருய் பராபரமே.

திரவியம்—செல்வம்; மணிப்பெட்டகம்—விலையுயர்ந்த ரத்தினங்கள் வைக்கப்பெற்றுள்ள பெட்டி. மானுடராகப் பிறந்துள்ளவர்கள் ஏதேனும் ஒருவிதத்தில் திரவியம் தேடு வது முற்றிலும் அவசியம். அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை; பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்பது

கோட்பாடு. இவ்வுலக வாழ்க்கையை இன்னல் இல்லாத வாழ்க்கையாக அமைத்தல் பொருட்டுச் செல்வம் சேகரிப்பது அவசியம். ஆனால் மனிதன் செல்வத்துக்கு அடிமையாய் விடலாகாது. பற்றற்ற பாங்கில் மனிதன் செல்வத்துக்கு அதிபதியாய் இருக்கவேண்டும். செல்வத்தைச் சேகரிப்பது போன்று அதை நல்வழியில் செலவிட்டுக் கொண்டும் இருக்கவேண்டும். மக்களில் பெரும்பாலர் படாதபாடுபட்டுச் செல்வத்தைச் சேகரிக்கின்றனர். ஆனால் அதை செலவழிக்கவியலாத அடிமைத்தனத்தையும் கஞ்சத்தனத்தையும் படைத்தவர்களாக அவர்கள் இருக்கின்றனர்.

உடை, உணவு போன்ற செல்வங்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாதவைகள். விலையுயர்ந்த ரத்தினங்களும், அவைகளைப் பாதுகாப்பதற்கு அமைக்கிற அரிய பெட்டிகளும் பொருளற்றவைகளாம். விவேகம் படைத்திருக்கின்றவர்கள் அவைகளில் கருத்தைச் செலுத்தலாகாது. இன்றைக்குக் கணக்கற்றபேர் தங்கம், வெள்ளி, வைரம் ஆகியவைகளுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கின்றனர். உயிரைக் கொடுத்து அவைகளைச் சேகரிக்கின்றனர். வாழ்ந்திருக்கும்பொழுதே பலபேர் அவைகளை இழக்கச் செய்கின்றனர். இழந்துவிடாது ஜாக்கிரதையாக அவைகளைப் பாதுகாத்து வைத்திருந்தாலும் சாகும்பொழுது அவைகள் கூடவரமாட்டா. பல தடவைகளில் அவைகள் வாழ்க்கைக்குத் துணையாய் இருப்பதற்கு மாறாக, உயிரை இழப்பதற்கு ஏதுவாக அமைந்துவிடுகின்றன. ஆத்மசாதனத்தில் ஈடுபடுகிறவன் அப்பொருள்களின் பாங்குகளை உள்ளபடி ஓர்ந்திருந்து அவைகளில் கட்டுண்டு போகலாகாது என்பது இக்கண்ணியின் கருத்தாம்.

234. தேடாத தேட்டினரே செங்கைத் துலாக்கோல்போல்
வாடாச் சமன்நிலையில் வாழ்வார் பராபரமே.

தேட்டையைத் தேடுவது உயிர்கள் அனைத்துக்கும் பொதுவானது. உண்ண உணவு, உடுக்க உடை, தங்க இடம் ஆகியவைகளை முறையாகத் தேடுதலும் பிற உயிர்களுக்கு அவைகளை வழங்குதலும் சரியான செயல்கள் என ஆமோதிக்கப்படுகின்றன. அதற்குமேல் சொகுசான உடை, விலையுயர்ந்த ஆபரணம், படாடோபமான மாளிகை முதலியன வாழ்க்கைக்கு அவசியமில்லை. இன்றியமையாதவைகள்மீதும் மனிதன் மிகைபடக் கருத்தையும், காலத்தையும், உழைப்பையும் செலவழிப்பது முறையன்று. மானுட ஜன்மத்தை அவர்கள் வீண்விரயம் செய்கின்றனர்.

இனி மக்களுள் மேலோர் இருக்கின்றனர். அன்னவர் உணவு உடை முதலியவைகளை இவ்வுலக சம்பந்தமான சொத்து எனக் கருதுகின்றனர். அவைகளில் மிகைப்பட்ட நாட்டம் கொள்வதில்லை. தற்செயலாய்க் கிடைப்பவைகளைக் கொண்டு திருப்தியடைகின்றனர். பரம்பொருள் நாட்டத்தைத்தான் அவர்கள் உண்மையான செல்வமெனக் கருதுகின்றனர். உலகத்தவர்கள் தேடுவது பொருட்செல்வம். சான்றோர்கள் தேடுவது அருட்செல்வம். பொருட்செல்வம் நிலைத்ததன்று. போக்கு வரவு அதற்கு உண்டு. அருட்செல்வம் நிலையானது; மேலும் ஒப்பு உயர்வு அற்றது. அதை அடையப்பெறும் ஞானி அதை இழப்பதில்லை. இகலோகச் செல்வத்தின் போக்கும் வரவும் சான்றோரைப் பாதிப்பதில்லை. அருட்செல்வத்திலேயே அவர் திளைத்திருக்கிறார். உலகத்தவர்கள் தேடாத தேட்டையை அவர் தேடிப் பெற்றவர் ஆகிறார். உண்மையில் அவரே பாக்கியவான். அத்தகையவர் தேடாத தேட்டினர் எனப் போற்றப்படுகின்றனர்.

செங்கை என்பது செம்மையான வழியினின்று பிசகாத நல்ல கை எனப்பொருள்படுகிறது. நல்ல வியாபாரி சரியான தராசைக் கையாண்டு பொருள்களை வழங்குகிறான். நேர்மையாக வாணிபம் பண்ணுவது கடவுள் வழிபாட்டுக்கு நிகர். நல்ல வியாபாரி எத்தகைய சூழ்நிலையிலும் எடையைக் குறைத்துப் பொருள்களைக் கொடுக்கமாட்டான். அவனுடைய தராசு எப்போதும் ஓரம்சாராது. அதேபோன்று சான்றோர்களின் உள்ளம் எப்போதும் நடுநிலையையே கொண்டு இருக்கும். உலகின் நலன் கேடுகள் அவர்களின் உள்ளத்தைப் பாதிக்கமாட்டா. அவர்களின் உள்ளம் யாண்டும் பரம்பொருளைப் பற்றியதாகவே இருக்கும். பரம்பொருளைச் சார்ந்துள்ள வாழ்வே பெருவாழ்வு ஆகும். அப்பெருவாழ்வை அடையப்பெற்ற சான்றோர்களே தேடாத தேட்டினர் ஆகின்றனர். அத்தகைய பெருவாழ்வு நன்னெறியினைக் கடைப்பிடிக்கின்ற ஆத்மசாதகனுக்கும் வாய்க்கவேண்டும் என்பது இக்கண்ணியின் கருத்தாம்.

**235. நீராய்க் கசிந்துஉருகி நெட்டுயிர்த்து நின்றேனைப்
பாராதது என்னோ பகராய் பராபரமே.**

நீராய்க் கசிந்துருகுதல் தவத்தின் விளைவு. உறைபனிக்கட்டி ஒன்றைத் துணியில் கட்டி வெயிலில் வைத்துவிட்டால் அது உருகிக் கசிகிறது. இரும்பை உலையில் இட்டுக் காய்ச்சினால் அது உருகி, இளகி நீர் போன்று ஆகிறது. பின்பு அதைக் கருவில் (அச்சில்) வார்த்து வேண்டிய வடிவத்தைத் தரலாம். இயற்கையிலுள்ள இச்செயலுக்கு நிகராக ஆத்மசாதகனுடைய உள்ளம் பரம்பொருளை நாடிக் கசிந்துருகவேண்டும். உள்ளம் உருகுவதில் படித்தரங்கள் பல இருக்கின்றன. இரும்பை உருக்கும்பொழுது அதற்குத் தருகிற வெப்பத்துக்கு ஏற்ப அது பண்பட்ட எஃகு ஆகிறது.

ஆத்மசாதகனின் உள்ளக்கசிவுக்கு வரம்பு கிடையாது. எலும்பையே நீராகக் கரைத்துவிடும்படியான உள்ளக் கசிவு உளது. அத்தகைய மேலான மனநெகிழ்ச்சியைப் பெறுவது துர்லபம். ஆத்மசாதகன் அதை நாடுதல் வேண்டும்.

நெட்டுயிர்த்தல் என்பது பெருமூச்சு விடுவதாகிறது. அது மனக்கசிவின் புறச்சின்னமாகிறது. மனநிலைக்கேற்ற வாறு சுவாசத்தின் போக்கு வரத்து மாறியமைகிறது. இது பிராணாயாமத்தைப் பற்றிய கோட்பாடு ஆகும். பரநாட்டம் பூண்டு தவிக்கிறவன் விடுகிற பெருமூச்சு பிராணாயாமத்தின் உச்சநிலையாகும். ஆத்ம பரிபாகத்துக்கு இவ்விரண்டும் நல்ல அறிகுறிகளாகின்றன. இறைவா, நான் உள்ளக் கசிவோடும் பெருமூச்செறிகிற பாங்கோடும் இருப்பதை நீ பார்த்துக்கொண்டு இருக்கிறாய். அத்தகைய நீ, என்னை ஆட்கொள்ளாதிருப்பதற்குக் காரணம் யாதோ பகர்ந்து அருள்வாயாக என்பது இக்கண்ணியின் கருத்து.

236. உள்ள பொருள்ஆவி உடல்மூன்றும் அன்றேதான்
கொள்ளைகொண்ட நீஎன் குறைதீர் பராபரமே.

ஆத்மசாதகன் தன்னையும் தன் உடைமைகளையும் பரம னுக்கு உரியவைகளாக ஒப்படைத்துவிடுகிறான். உலகில் தேடி வைத்துள்ள செல்வங்களெல்லாம் அவனுடைய பொருள்கள் ஆகின்றன. அவைகளை உடைத்திருப்பதாகக் கருதுவது மமகாரம். சம்பாதித்து வைத்துள்ள பொருள்கள் அனைத்தும் தனக்குச் சொந்தமல்ல; பரமனுக்கே உரியவை கள் என்று கொடுத்துவிடுகிறபொழுது மமகாரம் அகலு கிறது. தன்னைவிட்டுப் பிரியாது தன்மயமாய் இருப்பது உடல். உடலைத் தன்மயமாய் உணர்வது அகங்காரம். ஜீவாத்மன் பரிணமித்து மேல்நிலைக்கு வரவரத் தன் உடலை மேலானதாகத் திருத்தியமைக்கின்றான். அந்த உடலைத்

தான் என்று கருதுவதால் தனக்கு மேலான பிறவி வாய்த்து வருவதாக உணருகிருன். ஜீவனுடைய உயிர் ஆவி எனக் கருதப்படுகிறது. உயிர்ப்பற்று மற்றப் பற்றுகளையெல்லாம் விட உறுதியானது. உயிரைக் காப்பாற்றுதல் பொருட்டுத் தன்னிடத்தில் உள்ள வேறு எதையும் தியாகம் பண்ண மனிதன் ஆயத்தமாய் இருக்கிருன். கடைசியாகத் தான் படைத்துள்ள ஜீவபோதமே உயிர் எனவும் ஆவி எனவும் இயம்பப்படுகிறது. புற உடைமைகளை நீப்பது மமகாரத் தியாகம் ஆகிறது. அக உடைமையாகிய உடலை இறைவனுக்கு ஒப்படைப்பது அகங்காரத் தியாகமாகிறது. 'யான் எனது என்னும் செருக்கறுப்பான் வானேர்க்கு உயர்ந்த உலகம் புகும்' என்னும் பொய்யா மொழி இதற்குச் சான்ருகிறது. பிறகு தனது ஜீவவியக்தியையே பரமனுக்கு நிவேதனமாகப் படைப்பது ஆத்மசமர்ப்பணம் ஆகிறது. ஜீவன் செய்கின்ற அரிய பெரிய செயல்களுள் தன்னைத் தெய்வத்துக்குக் கொடுத்துவிடுவது முடிவானதாகிறது. நதி தன்னைக் கடலுக்குக் கொடுத்துவிடுகிறது. அதன் விளைவாக அது தானே கடலாகிறது. அங்ஙனம் ஆத்ம நிவேதனம் பண்ணுகிறவன் பரம்பொருள் சொரூபமாகிருன். 'என் குறை தீர்' என்னும் விண்ணப்பம் வெறும் உபசாரத்துக்காக இக் கண்ணியில் வந்து அமைந்துள்ளது. அப்படி விண்ணப்பிக்கிற ஆள் மிச்சமில்லை. அந்தச் சாதகன் பூரணம் என்னும் நிறைநிலை எய்துகிருன். ஜீவவியக்தியுமில்லை. அந்த வியக்தி கற்பனை பண்ணுகிற குறையும் இல்லை. இதுவே இக்கண்ணியின் கோட்பாடாம்.

237. ஆழ்ந்தாயே இவ்உலகில் அல்லல்எல்லாம்
[தீர்ந்து அருளால்
வாழ்ந்தாயே என்றனை நீ வாழி பராபரமே.

மனிதனைப் பண்படுத்துதற்கு நன்மை தீமையாகிய இரண்டும் நன்கு பயன்படுகின்றன. ஒருவிதத்தில் நன்மை பயன்படுவதைவிட அதிகமாகத் தீமை பயன்படுகிறது. உணவு உண்பது நன்மை. அது உடலுக்கு உறுதி தருகிறது. உள்ளத்துக்குத் திருப்தி தருகிறது. பின்பு இந்த நன்மையை விளக்கிக் காட்டுதற்குப் பசியென்னும் தீமை முற்றிலும் அவசியமானது. பசியைப் பசிப்பிணி என்கிறோம். இப்பிணியை நிரந்தரமாக நீக்கிவிட முடியாது. திரும்பத் திரும்ப பசி வருவதாலேயே உணவைப் புசிப்பதில் இன்பம் உண்டாகிறது. இன்பத்தின் சிறப்பை விளக்கிக் காட்டுதற்குத் துன்பம் முற்றிலும் அவசியமாகிறது. இன்ப துன்பமாகிய இரண்டும் கலந்தது இவ்வுலகம். இதைக் குறித்து சிஷ்யன் ஒருவனிடம் குருவானவர் 'ஆழ்ந்தாயே இவ்வுலகில்' என்று ஞாபக மூட்டுகிறார். இவ்வுலக வாழ்வினின்று விடுதலையடைந்துள்ள சிஷ்யன் கழிந்துபோன அந்நிலையை ஞாபகத்துக்குக்கொண்டு வருகிறான். முன் பாரு கால் பட்ட துன்பங்களையெல்லாம் பின்பொருகால் நல்ல நிலையிலிருக்கின்றபொழுது ஞாபகத்துக்குக் கொண்டுவர வேண்டும். அங்ஙனம் செய்தால் பட்ட துன்பங்களைக் குறித்து மகிழ்ச்சி உண்டாகிறது. தனது வனவாச துன்பத்தைக் குறித்துத் தசரத ராமன் உத்தர காண்டத்தில் ரிஷிகள் கூட்டத்தில் விமர்சனம் பண்ணி மகிழ்வுற்றான். இக்கோட்பாடு மக்கள் அனைவர்க்கும் பொதுவானது. ஈண்டு இக் கண்ணியில் குருவானவர் இப்பொழுது உய்விக்கப்பெற்றுள்ள சிஷ்யன் முன்பு பிரபஞ்ச வாழ்க்கையில் பட்ட இன்னல்களையெல்லாம் ஞாபக மூட்டுகிறார். அது சிஷ்யனுக்குப் பரமானந்தத்தை ஊட்டுகிறது. மற்று அதனோடு சீர்தூக்குதற்கு அல்லலெல்லாம் தீர்ந்து அருளால் வாழ்ந்தாயே என்று

இயம்புகிறார். முன்பிருந்த பிறவிப் பெருங்கடலும் இப்பொழுது அடைந்துள்ள மரணமிலாப் பெருவாழ்வும் பக்கம் பக்கம் வைத்துச் சீர்தூக்கப்படுகின்றன. அப்படிச் சீர்தூக்கப்படுகிறபொழுதே கழிந்துபோன புல்லிய வாழ்வும், நிரந்தரமாக நிலைநாட்டப் பெற்றுள்ள புனித வாழ்வும் மனக்கண்ணெதிரே காட்சி தருகின்றன. பெறுதற்கரிய பேறு அதனைப் பெற்றான சிஷ்யன் குருவைப் பார்த்து 'நீ வாழி' என்று நன்றி கூறுகிறான். ஆத்மசாதனத்தில் ஈடுபடுகின்ற அனைவர்க்கும் இப்பெருநிலை ஒரு காலம் இல்லாவிட்டால் மற்றொரு காலத்தில் நிகழ்வது திண்ணம். இதுவே இக்கண்ணியில் அடங்கியுள்ள கருத்தாம்.

238. தாரா அருளையெல்லாம் தந்துஎனையும் நின்அருளில்
வாராயோ என்றனைநீ வாழி பராபரமே.

வாழ்விலே அருள்நிலை என்றும் மருள்நிலை என்றும் இரண்டு நிலைகள் உள. உயிர்வகைகள் அனைத்தும் மருள் நிலையில் வாழ்வைத் தொடங்கி அருள் நிலையில் பூர்த்தி பண்ணுகின்றன. உயிர்வகைகளின் முன்னேற்றத்துக்குத் துன்பம் எவ்வளவு அவசியமோ மருள்நிலையும் அவ்வளவு அவசியமாகிறது. உயிர்களிடத்துள்ள மருள்நிலைக்குச் சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். நாரத மகரிஷி கிருஷ்ணபரமாத்மாவை அணுகி அவருடைய மோகன சக்தியைத் தமக்கு விளக்கிக் காட்டும்படி விண்ணப்பித்தார். கிருஷ்ணபரமாத்மா புன்னகை பூத்தவராகச் சும்மா இருந்து விட்டார். மற்றொரு நாள் அவ்விருவரும் உலாவச் சென்றனர். தமக்கு நீர்வேட்கை உண்டாயிருப்பதாகப் பகவான் பகர்ந்தார். நாரதர் உடனே எதிரே தென்பட்ட குக்கிராமத்துக்கு ஓடினார். ஒரு குடிசையின் கதவைத் தட்டினார். கட்டழகே வடிவெடுத்திருந்த கன்னிகை ஒருத்தி கதவைத் திறந்தாள்.

கிருஷ்ணபரமாத்மாவுக்குத் தூய பாண்டம் ஒன்றில் நன்னீர் தரவேண்டுமென நாரதர் வேண்டினர். அது தரப்பட்டது. முனிவரோ நங்கையுடன் வீண்பேச்சை வளர்த்தார். அப்படி நாழிகையொன்று கடந்துபோனது. வயலுக்குச் சென்றிருந்த கன்னிகையின் பெற்றேர் திரும்பி வந்தனர். அவர்களுடைய செல்வியைத் தமக்கு மணம் முடித்துத் தரவேண்டுமென நாரதர் நாணமின்றி விண்ணப்பித்தார். அவர் விரும்பியபடி அம்மடந்தை அவருக்கு வாழ்க்கைத் துணைவியாக்கப் பட்டாள். மணந்துகொண்டவருக்கு இல்வாழ்வு தொடங் கிற்று. ஆண்டுகள் பன்னிரண்டு கடந்துபோயின. மகப்பேறு மூன்று. நதியில் திடீரென்று பிரவாகம் பெருக்கெடுத்தது. ஊரைக் காலிபண்ண வேண்டியது அவசியமாயிற்று. மற்ற கிராமவாசிகளைப் போன்று நாரதர் குடும்பமும் வெளியேறி யது. நெஞ்சளவிருந்த நீரில் திணறிக்கொண்டு நடந்த பொழுது ஒரு சுழலிலே மனைவியும் மக்கள் மூவரும் மூழ்கலா யினர். 'ஐயோ மனைவியையும் மக்களையும் இழந்துவிட் டேனே' என்று மண்டையிலடித்துக்கொண்டு புலம்பினர் நாரதர். அப்பொழுது யாரோ தம் முதுகைத் தொடுவது போன்று உணர்ந்தார். 'கடந்த அரைமணி நேரம் நீருக்காகக் காத்திருக்கிறேன்' என்றுர் கிருஷ்ணபரமாத்மா. 'பிரபோ! உமக்கும் உமது மோகன சக்திக்கும் நமஸ்காரம். இந்த மோகன வலையில் நான் மீண்டும் அகப்பட்டுக்கொள்ளாது என்னைக் காப்பாற்றுவீராக!' என்று நாரதர் விண்ணப்பித் தார். அவர் அடைந்திருந்ததுதான் மருள்நிலை. சற்று ஏறத் தாழ எல்லா உயிர்களுக்கும் இந்த மருள்நிலை வருகிறது. பின்பு குருவின் திருவருளால் அந்த மருள்நிலை ஒதுக்கப்படுகிறது. அருள்நிலை உதயமாகிறது. அவ்வரிய பேற்றினைத் 'தாரா அருளையெல்லாம் தந்து' என்று இக்கண்ணியில் பகரப்பெறு

கிறது. அருளுக்குப் பாத்திரமாகிற ஜீவாத்மாவினுடைய வாழ்வு புதியதோர் வடிவெடுக்கிறது. அவன் பிரபஞ்சத்தில் வாழ்ந்து இருக்கலாம்.ஆனால் அதில் அவன் கட்டுண்பதில்லை. பிரபஞ்சத்தில் கட்டுப்படாதவனாகப் புதியவாழ்வு அவன் வாழ்கிறான். அத்தகைய நிலைக்கு வருவது அரிதிலும் அரிது. அப்படி வருகின்ற மேலோனைப் பார்த்துப் பெருவாழ்வுக்கு 'வாராயோ' என ஞானியர் போற்றுகின்றனர். இத்தகைய பெருவாழ்வைப் பாராட்டுகின்றவர் எல்லாரும் வாழ்ந்திருப்பார்களாக என்பது இக்கண்ணியில் அடங்கியுள்ள கருத்தாம்.

239. ஆசைஉன்மீது அல்லால் அருள்அறிய
வேறும் ஒன்றில்
பாசம்வையேன் நின்கருணைப் பாங்கால் பராபரமே.

ஆசை பூணுவது உயிர்கள் அனைத்துக்கும் பொது. சிற்றுயிர் பேருயிர் ஆகிய உயிர்களனைத்தும் ஏதேதோ குறியின்மீது ஆசை வைத்துள்ளன. குறிக்கேற்ப வெவ்வேறு விதங்களில் அவைகள் பாடுபட்டு வருகின்றன. அப்படிப் பாடுபடுவது வாழ்க்கையின் முயற்சிகளாம். ஆசையினால் தூண்டப்பெற்றாலன்றி முயற்சி ஏதும் நிகழ்வதில்லை. உயிர் வகைகள் அத்தனையும் வெவ்வேறு விதங்களில் முயன்று கொண்டே இருக்கின்றனவென்றால் அதற்குத் தூண்டுதலாய் இருக்கின்ற ஆசைகளும் எண்ணிறந்தவைகளாம். ஆசையின் வேகத்தைப் பித்தம் எனலாம். உயிர்களெல்லாம் பித்துப்பிடித்து அலைகின்றன. பொருள் வேண்டும் என்ற பித்தம், போகம் வேண்டும் என்ற பித்தம், பதவி வேண்டுமென்ற பித்தம், பேரும் புகழும் வேண்டுமென்ற பித்தம்— இங்ஙனம் பித்தத்தின் போக்குகள் பலப்பலவாம். அவைகளுள் அருள் பித்தம் கிடைப்பதற்கரிய பேறும். கடவுள்மீது

வைத்துள்ள ஆசை அருள்பித்தம் எனப் பொருள்படுகிறது. அது மனிதனைப் படிப்படியாக மேல்நிலைக்கு உயர்த்துகிறது. ஏனைய பித்தங்கள் யாவும் பிரபஞ்ச சம்பந்தமானவைகள். அவைகள் பாசம் எனப் பொருள்படுகின்றன. பாசங்களி னின்று தங்களை விடுவித்துக்கொள்கின்றவர்களே பாக்கிய வான்கள். பரம்பொருளின்மீது ஆசை வைக்கின்ற பித்தம் அரிதிலும் அரிதாக யாரோ சிலருக்குத்தான் வாய்க்கிறது. அதற்கு இறைவனுடைய கருணை வேண்டும். குருமூர்த்தி யின் அனுக்கிரகம் வேண்டும். நல்லாரிணக்கம் என்னும் பாதுகாப்பு வேண்டும். இவை யாவையும் தொகுத்துக் கருணைப் பாங்கு எனலாம். கருணைப் பாங்கைப் பயன்படுத் திப் பரம்பொருள் ஆசையை வளர்த்து வருகின்றவர்கள் பிறவிப் பெருங்கடலின் எல்லையை எட்டியிருக்கின்றனர். அக்கடலைக் கடந்து முக்தியாம் கரையேறுவது மிகச் சுலபம். அத்தகைய பெருநிலையை இக்கண்ணி பாராட்டிப் பேசு கிறது.

240. **ஆதிஅந்தம் நீகுருவாய் ஆண்டதுஅல்லால்**
நின்னைஅன்றிப்
போதனையும் உண்டோ புகலாய் பராபரமே.

போதனை - நல்லறிவு புகட்டுதல். உயிர் வகைகளனைத் தும் வாழ்வு என்னும் வழியிலே போய்க்கொண்டிருக்கின்றன. கணக்கற்ற பிறவிகளின் வாயிலாக இப்பயணம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. பயணமோ வழிநெடுக இன்பகரமான தன்று. இன்பமும் துன்பமும் மாறி மாறி வந்துகொண்டே இருக்கின்றன. பல தடவைகளில் இன்பத்தைவிடத் துன்பம் அதிகமாகிறது. துன்பத்திலின்று நாம் கற்கின்ற பாடம் நன்கு பயன்படுகிறது. துன்ம் புகட்டுகின்ற பாடம் பல தடவைகளில் இன்பம் புகட்டுகின்ற பாடத்திலும் மேலானது.

துன்பத்தை நமக்கு நல்கியவர் யார் என்னும் கேள்வி வருகிறது. பெரும்பாலும் துன்பத்தை விளைவிப்பவர்கள் துஷ்டர்கள். துஷ்டர்கள் இல்லாது போய்விட்டால் உலகம் இன்புற்றிருக்குமென்று நாம் யூகிக்கிறோம். ஆனால் நம்மைத் திருத்தியமைப்பதற்குத் துஷ்டர்களின் தீய செயல்களும் பயன்படுகின்றன. ஆதலால் துஷ்டர்கள் மறைமுகமாக மக்களைத் திருத்தியமைக்க உதவுகின்றனர்.

அடுத்தபடியாக இந்தத் துஷ்டர்கள் யார் என்னும் கேள்வி எழுகிறது. கடவுளே உலகனைத்தும் ஆயிருக்கிறார். நல்லவர்களாக வடிவெடுத்து விளையாடுபவர் கடவுளே. கெட்டவர்களாக வடிவெடுத்து விளையாடுகிறவர்களும் கடவுளே. உலக நடைமுறைக்கு நல்லார் பொல்லார் ஆகிய இருதரத்தாரும் வெவ்வேறு விதங்களில் உதவி புரிந்து வருகின்றனர். பொல்லாராக வந்திருப்பதும் பரம் பொருளேயாதலால் அவர் இரண்டு விதங்களில் நம்முடைய முன்னேற்றத்துக்கு உதவிபுரிகிறார். நல்லார்களாயிருந்து புரிகிற உதவி ஒருவிதமானது. பொல்லார்களாயிருந்து மறைமுகமாகச் செய்கின்ற உதவி மற்றொருவிதமானது. ஒன்றை அனுக்கிரகம் எனலாம். மற்றதை விக்கினம் எனலாம். நம்மைப் பண்படுத்துதற்கு அனுக்கிரகம், விக்கினம் ஆகிய இரண்டும் இன்றியமையாதவைகளாம். இது வாழ்க்கையைப்பற்றிய அடிப்படைக் கோட்பாடு. இதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு இக்கண்ணியை ஆராய்ந்து பார்ப்போம்.

வெவ்வேறு படித்தரங்களில் ஜீவாத்மன் வெவ்வேறு விதங்களில் பண்பாடு அடைந்து வந்துள்ளான். அதற்கு நல்லவர்களும் கெட்டவர்களும் தத்தம் போக்கில் முகாமையாயிருந்தனர். விவேகம் என்னும் ஞானக்கண்ணைப்

பெற்றுள்ள ஆத்மசாதகன் தன்னுடைய பழைய ஜீவிதத்தை விமர்சனம் பண்ணுகிறன். நலம்கேடுகள் வாயிலாகப் பரமன் தானே நல்லானுகவும் பொல்லானுகவும் வடிவெடுத்து வந்து தன்னைப் பக்குவப்படுத்தினுன் என்பதை ஆத்மசாதகன் அறிகிறன். அவ்வுண்மை இக்கண்ணியில் அடங்கியிருக்கிறது.

241. தான்ஆக வந்து தடுத்துஆண்டு எனைஇன்ப
வான்ஆகச் செய்தஇன்ப வானே பராபரமே.

வான்-வெட்டவெளி; தடுத்தாளுதல்-பிரபஞ்ச வாழ்வைப் பாரமார்த்திக வாழ்வாகத் திருத்தியமைத்தல்.

உயிர் வகைகளனைத்தும் சிதாகாசத்திலிருந்து உருவெடுத்தவைகள். அந்தச் சிதாகாசம் இன்பவான் என ஈண்டு இயம்பப்பெறுகிறது. இயற்கையை ஆராய்ந்து பார்க்குங்கால் உண்மையொன்று வெளியாகிறது. ஐம்பூதங்களும் புறப்பட்ட இடத்துக்கே திரும்பிப் போய்க்கொண்டிருக்கின்றன. அதற்கு நல்ல சான்றுயிருப்பது நீர். அது கடல் மயமாயிருக்கிறது. அப்படியிருப்பது அதன் யதாஸ்தானம். கடலினின்று நீர் ஆவியாகக் கிளம்பி மேலே போகிறது. வானத்தில் அது வெவ்வேறு வடிவெடுத்து விளையாடுகிறது. பின்பு அது நிலவுலகில் மழையாகப் பொழிகிறது. ஹிமாசலத்தில் உறைபனிக்கட்டியாக வீழ்ந்து நெடுங்காலம் செயலற்றுக் கிடக்கிறது. நாளடைவில் சிறிது சிறிதாக உருகிச் சிற்ரேடையாகிறது. பின்பு அது பெரிய நதியாகப் பரிணமிக்கிறது. வழிநெடுக மழையாக வீழ்ந்த நீரையும் தன்னேடு சேர்த்துக்கொண்டு கடலைப்போய் எட்டுகிறது. அங்ஙனம் புறப்பட்ட இடத்துக்கே அது திரும்பிப் போகிறது. அதே விதத்தில் ஜீவாத்மாக்கள் பரமாத்மாவிடமிருந்து தோன்றி வந்தவைகள். பரமாத்மாவோ பேரின்ப சொரூபம். ஆதலால் அப்பேரின்பம் ஜீவாத்மாக்

களிடத்தும் புதைந்திருக்கிறது. ஜீவாத்மாக்கள் தங்களிடம் புதைந்துள்ள பேரின்பத்தை அறியாமையினால் புறவுலகில் தேடி அலைகின்றன. இறுதியில் தாங்கள் தேடுகின்ற பாரமார்த்திகப் பெருநிலை தங்களிடத்தே இருப்பதை அவைகள் அறிய வருகின்றன. அதை அறியும்பொழுது பக்குவமடைந்துள்ள ஜீவாத்மாக்கள் பரமாத்மனில் ஒடுங்குகின்றன. அப்படிப் பக்குவமாகின்றபொழுது பகிர்முகமாகச் சென்றுவந்த வாழ்வை இறைவனுடைய திருவருள் அந்தர்முகமாகத் திருத்தியமைக்கிறது. அதன் பின்னர் முன்னேற்றம் அதிவிரைவில் நிகழ்கிறது. அந்தர்முகமாகத் திரும்பும் பாங்கே தடுத்தாட்கொள்ளுதல் என்னும் பெயர் பெறுகிறது. இதுவே இக்கண்ணியில் அடங்கியுள்ள கருத்தாம்.

242. பற்றுஅற்று இருக்கும்நெறி பற்றின் கடல்மலையும்
சுற்ற நினைக்கும்மனம் சொன்னேன் பராபரமே.

பற்றற்றிருக்கும் நெறி–பிரபஞ்சப் பற்றை நீக்குதற்கான மார்க்கம்.

பற்றுடைத்திருப்பது ஜீவாத்மாக்களின் பாங்கு ஆகும். எது பிரபஞ்சத்தைப் பற்றிப்பிடித்துக்கொண்டிருக்கிறதோ அது ஜீவாத்மன். இந்தப்பற்றை அகற்றுதற்கு மரணம் இன்றியமையாதது. இடையறாது நிகழ்ந்துகொண்டிருக்கின்ற மரணங்களின் வாயிலாக ஜீவாத்மாக்கள் படைத்துள்ள பற்றுதல்களினின்று பிரிக்கப்படுகின்றன. புதிய பிறவி எடுக்கிறபொழுது பற்றுதல் புதிய சூழ்நிலைக்கு ஏற்றதாக மாறுகிறது. அனந்தங்கோடி புதிய புதிய இடங்களிலும், புதிய புதிய உற்றார் உறவினர்களிடமும் பற்றுதலை ஜீவாத்மாக்கள் வளர்த்துக்கொண்டே போகின்றன. நாளடைவில் மனபரிபாகம் ஆகின்றபொழுது உலகப் பற்றானது சிறிது சிறிதாகத் தெய்வப் பற்றாக மாறு

கிறது. அப்படித் தெய்வப் பற்ருக மாறுகிறபொழுது பிறந்த இடத்தில் வைத்துள்ள பற்றுதல் புண்ணிய க்ஷேத்திரப் பற்றுதலாகவும் பாரமார்த்திகத்துக்கு அனுகூலமாயிருக்கும் கடல் கரையிலுள்ள க்ஷேத்திரங்கள், மலை மீது உள்ள க்ஷேத்திரங்கள் ஆகியவைகளைச் சென்று பார்க்கும் மனப்பான்மையாகவும் மாறுகிறது. இப்படி க்ஷேத்திர யாத்திரை பண்ணுவதால் சொந்த ஊர்ப்பற்றின் வேகம் தணிகிறது. பிறகு விவேகத்தின் விளைவாக உற்ருர் உறவினர் மீது வைத்துள்ள பற்றுதல் ஜன சமூகப் பற்ருக விரிவடைகிறது. ஓர் இடத்தில் வைத்துள்ள பற்றுதல் இடத்தைக் கடந்து அகண்டாகாரப் பற்றுதலாக விரிவடைகிறது. மக்களுள் ஒரு சிறு கூட்டத்தாரிடத்து வைத்துள்ள பற்றுதல் உயிர்களனைத்துக்கும் பொதுவான பற்றுதலாக விரிவடைகிறது. ஆதலால் இடத்துப்பற்றுதலையும், இனத்துப் பற்றுதலையும் விரித்துக்கொண்டே போனல் அது அகண்டாகாரத்தை எட்டுகிறது. அந்நிலையை அடையுங்கால் பற்றுதல் தன் கொடுமையை இழந்து விடுகிறது. எந்த இடத்தில் இருந்தாலும் அது இறைவனுக்குரியது என்னும் எண்ணம் வருகிறது. எந்த உயிரோடு இணக்கம்கொண்டாலும் அந்த உயிர் இறைவனுடைய சொரூபம் என்னும் எண்ணம் வருகிறது. அண்டங்களனைத்தையும், ஜீவகோடிகளனைத்தையும், இறைவன் மயமாகக் காணுமிடத்துப் பற்றுதல் என்னும் குறைநிலையை ஆத்மசாதகன் தாண்டுகிருன். அனைத்தையும் இறைவன் மயமாகக் காணுதல் என்னும் மனபரிபாகம் பாராட்டத்தக்கதாகிறது. மனத்தின் பாங்குக்கேற்ப ஜீவாத்மன் சிறுநிலை எய்துகிருன் அல்லது பாரமார்த்திகப் பெரிய பேறு பெறுகிருன். மனத்தைத் திருத்தியமைப்பதே சாதனத்தின் நோக்கமாகும். பண்பட்ட மனம் அனைத்தையும்

இறைவன் மயமாகக் கண்டு இறைவனுடைய சாந்நித்தியத்துக்கு உரியதாகத் திருந்தியமைகிறது. பந்தத்துக்கும் விடுதலைக்கும் ஏதுவாயிருப்பது மனம். மனதை விடுதலைக்கு உரியதாகத் திருத்தியமைப்பதற்கே ஆத்மசாதகன் பல பிறவிகளை எடுக்கிறான். இறுதியில் மனத்தை இறைவனுடைய சந்நிதியில் படைத்துவிடுகிறான். இதுவே இக்கண்ணியில் அடங்கியுள்ள கருத்தாம்.

243. படிப்புஅற்றுக் கேள்விஅற்றுப் பற்றுஅற்றுச்
சிந்தைதத்
துடிப்புஅற்றார்க்கு அன்றோ சுகம்காண் பராபரமே.

துடிப்பற்றார்-மனக்கொதிப்பு இல்லாதார். சான்றோர் ஒருவர் ஆத்மசாதன சம்பந்தமான கோட்பாடு ஒன்றை அற்புதமாக ஆங்கிலத்தில் பகர்ந்தருளினர். **"A learned ignorance is the end of philosophy and the beginning of religion."** இதன் கருத்தாவது: "கற்கவேண்டியவைகளை ஏராளமாகக் கற்றான பிறகு கற்ற யாவையும் மனத்தினின்று ஒதுக்கித்தள்ளிவிட்டு, அந்த மனத்தை முற்றிலும் விருத்தியற்றதாகச் செய்கின்றபொழுதே அது ஆத்மசாதனத்துக்குத் தகுதியுடையதாகிறது. மனிதன் படிப்பிலும் கேள்வியிலும் ஈடுபடலாகாது என்பதன்று இக்கண்ணியில் உள்ள கருத்து. ஆத்மசாதகர்கள் ஆரம்பத்தில் சான்றோர்களுடன் நேரடியாய்த் தொடர்புகொண்டு சாதன சம்பந்தமான கோட்பாடுகளையெல்லாம் கேட்கவேண்டும். 'கேள்வி முயல்' என்பது கோட்பாடு. அவ்வாய்ப்பு அமையாதபோது ஆன்றோர்கள்(அனுபூதிமான்கள்) பகர்ந்தருளியுள்ள சாஸ்திரங்களை முறையாகப் பயின்று வருதல் வேண்டும். படிப்பதும், கேட்பதும் இவ்வுலக நிலையாமையை அறியவும், உலகப் பற்றை ஒழித்துத் தெய்வப்பற்றை வளர்க்கவும் ஆகும்.

காலப்போக்கில் கேள்வியையும் நூல்களையும் ஒதுக்கித் தள்ளிவிட்டுச் சாதனத்தில் ஆழ்ந்து ஈடுபடவேண்டும். சாதனத்தில் ஆழ்ந்து ஈடுபடுவதற்கேற்ப மனக்கொதிப்பு குறைந்து வருகிறது. மனக்கொதிப்பை அறவே ஒதுக்கித் தள்ளுதலே ஆத்மசாதனத்தின் நோக்கமாகும். மனக் கொதிப்பு அடங்கியபின் மனமும் தானாகவே மாய்ந்து போகிறது. எஞ்சியிருப்பது தூய பேரின்பம். அதை அவரவர் ஐதிகத்திற்கு ஒப்ப ஆத்மானந்தம் என்றும், சிவானந்தம் என்றும், பரமானந்தம் என்றும் மொழிவார் கள். அதை அடைதற்கு மனோநாசம் பண்ணுவதே உற்ற உபாயம். மனோநாசம் செய்தநிலையில் மெய்ப்பொருள் என்று போற்றப்படும் சொரூபம்தான் எஞ்சியிருக்கிறது. அந்த சொரூபமே சுகம் என்றும், பேரானந்தம் என்றும் பகரப்பெறுகிறது. இதுவே இக்கண்ணியில் அடங்கியுள்ள கருத்தாம்.

244. சத்துஆகி நின்றோர் ஜடங்கள் இலிங்கம்என
வைத்தாரும் உண்டோஎன் வாழ்வே பராபரமே.

சத்தாகி-பரமாத்ம சொரூபமாகி. நிறைஞானிக்கும் அக் ஞானிக்கும் பெரிய வேற்றுமை உண்டு. நிறைஞானி சுத்த சைதன்யமாய் இலங்குகின்றான். உடலம் நிழல்போன்று அவனைச் சார்ந்திருக்கிறது. பிராரப்த கர்மத்துக்கேற்ப அந்த உடலத்துக்கு உண்டி முதலியன தற்செயலாய் வந் தமைகின்றன. உடல் ஜடம் ஆதலால் அதற்கு நல்வினைப் பயன் என்றும் தீவினைப்பயன் என்றும் பாகுபாடு இல்லை.

பறவை ஒன்று கூடுகட்டி முட்டையிட்டு அடைகாத்துக் குஞ்சு பொரிக்கிறது. குஞ்சு பறக்கும் பாங்கைப் பெற்ற பிறகு கூட்டையும் முட்டை ஓட்டையும் புறக்கணித்துவிட்டுத் தாய்ப்பறவையும் குஞ்சுப்பறவையும் பறந்தோடி விடுகின்

றன. அக்கூட்டைப்பற்றிய கவலேயேதும் அவ்விரு பறவை களுக்கில்லே. அவ்விரு பறவைகளுக்கு நிகர் ஜீவாத்ம பரமாத்ம ஐக்கியம். அத்தகைய யோகம் நிகழ்ந்தான பிறகு நிழல் போன்று இருந்த உடலுக்கும், பறவைகளுக்குப் பயன்படுகிற நிலேயிலிருந்த கூடுபோன்ற உடலுக்கும் யாதொரு தொடர்புமில்லே. பறவைகளின் பாங்கு வேறு கூட்டின் பாங்கு வேறு. பறவைகள் உயிர்த்தத்துவம். கூடோ வெறும் ஜடவஸ்து. பரமாத்மனுக்கும் தனக்கு முள்ள தொடர்பை அனுபூதியில் உணர்கிறவன் பரமாத்ம னில் ஒன்றுபடுகிருன். அதன்பிறகு ஜீவவியக்தி அவனுக்கு இல்லே. ஞானியின் போக்கு இத்தகையது.

ஜடப்பற்றுள்ள உலகத்தவர்கள் அந்த ஞானிக்காக இடம் ஒதுக்கி அந்த ஞானியின் உடலேச் சமாதி வைத்துப் பூஜை, வந்தனே வழிபாடு செய்து வருகின்றனர். ஞானிக்குப் பரவஸ்துவோடு ஒன்றுபடுவது சமாதி. உலகத்தவர்களுக்கு அவன் களேந்த உடலேப் பாதுகாத்து வைப்பது சமாதி. ஞானிக்கும் அவன் ஒதுக்கிய உடலுக்கும் எவ்விதத் தொடர் பும் இல்லே. ஞானி தனக்கு வாழ்முதலாகிய பரத்தில் ஒன்றுபட்டுவிடுகிருன். உலகத்தவர்களோ சமாதியில் வைக்கப்பட்ட சடலத்தினின்று வாழ்வுபெற முயல்கின்ற னர். என்வாழ்முதலே ஞானியர் பாங்கில் உன்னே நான் அடைவேனுக. அந்த ஞானிகள் போக்கில் ஜடமாய் உள்ள சரீரத்தை எவ்விதத்திலும் பொருள்படுத்தாது இருப்பே னுக என்பது இக்கண்ணியின் கருத்து.

245. *சித்த நிர்விகற்பம் சேர்ந்தார் உடல்தீபம்*
வைத்தகர்ப்பூ ரம்போல் வயங்கும் பராபரமே.

சித்தம்—மனம் அல்லது அந்தக்கரணம். *வயங்கும்*—தனக்குரிய நிலேயை அடையும்.

மனத்தை உடையவன் மனிதன். அந்த மனத்தைச் சித்தம் என்றும் அந்தக்கரணம் என்றும் உள்ளம் என்றும் இயம்பலாம். சித்த விருத்தியே பிரபஞ்ச வாழ்வாகிறது. சித்தத்தின் ஒடுக்கமே பிரபஞ்சத்தின் மறைப்பு ஆகிறது. ஜாக்கிரதாவஸ்தையும், சுஷுப்தி அவஸ்தையும் இதற்கு நல்ல சான்றுகள் ஆகின்றன. உடலின் விழிப்புக்கும் உறக்கத்திற்கும் ஏற்ப உலகின் காட்சியும் மறைவும் மாறிமாறி அமைந்துகொண்டே இருக்கின்றன.

இந்தச் சித்தம் அல்லது மனத்தை ஞானக்கினியில் தகிப்பது வாழ்க்கையின் குறிக்கோள். சித்தமோ சங்கல்ப விகல்ப சொருபமாக இருக்கிறது. ஆசையினால் தூண்டப் பெற்றுச் சித்தத்தில் எழுகின்ற எண்ணம், உணர்ச்சி முதலியன சங்கல்பம் எனப் பெயர் பெறுகின்றன. ஆசை கொள்ளாதிருக்கிறவிடத்தும் முன்பு கொண்டிருந்த ஆசையின் விளைவாக இப்பொழுது தாமாகவே ஆசையின் தூண்டுகோலின்றிச் சித்தத்தில் எழும் எண்ணங்களும் உணர்ச்சிகளும் விகல்பம் எனப் பெயர் பெறுகின்றன. சங்கல்பம் ஓய்வதற்கு ஏற்ப விகல்பமும் குறைகிறது. சங்கல்பத்தை அடியோடு ஒதுக்கிவிட்டால் விகல்பத்துக்கும் முடிவு வருகிறது. விகல்பமற்ற தூயநிலை நிர்விகல்ப சமாதி என்னும் பெயர் பெறுகிறது. அந்நிலையில் ஜீவாத்மன் தன்னுடைய ஜீவவியக்தியை ஒழித்துவிட்டுப் பரமாத்மனில் ஒன்றுபடுகிறான். அன்னவர்களின் சூட்சும சரீரமாகிய சித்தமும் ஸ்தூல சரீரமாகிய அன்னமயகோசமும் என்னகதி அடைகின்றன என்பது கேள்வி. அருள்தீபம் என்பது ஞானக்கினி. சாதாரண தீபத்தில் கற்பூரத்தைப் பற்றவைத்தால் அது எரிந்து மறைந்து போகிறது. சாம்பல் எஞ்சியிருப்பதில்லை. சுத்த கற்பூரம் எரிந்து போனதின் அறிகுறி

ஏதும் தட்டில் தென்படுவதில்லை. அதற்கு நிகராக ஞானுக்னி யானது மனோநாசத்தை விளைவிக்கிறது. மனம் எங்கிருந்து தோன்றி எப்படி நிலைபெற்றிருந்து பின்பு எங்கு எதில் ஒடுங்கிப்போனது என்னும் அறிகுறி ஏதுமில்லை. இனிப் பஞ்சபூதமாயுள்ள ஸ்தூல சரீரமோ பஞ்சபூதங்களாகப் பிரிந்து போகிறது. ஸ்தூல உடலை அவரவர் வசதிக்கும் கருத்துக்கும் ஒப்ப எப்படி வேண்டுமானாலும் அழித்துவிட லாம். அது ஆத்மசொரூபத்தைப் பாதிக்காது. இதுவே இக்கண்ணியின் கருத்து.

246. ஆதிகா லத்திலெனை ஆண்டனையே இப்பால்நீ
போதிஎனில் எங்கேநான் போவேன் பராபரமே.

முன்பொருகாலத்தில் என்னை நீ உன் சொரூபத்தில் ஓர் அம்சமாக வைத்து என்னை ஆதரித்து வந்தாய். இப்பொழுது என்னை நீ உனக்கு வேற்றுனாக வைத்துப் புறக்கணித்தால் எனக்குப் புகலிடம் யாது உளது என்பது இக்கண்ணியின் கருத்து. மானுட வாழ்க்கையிலுள்ள நிலையினை உபமானமாக வைத்துப் பாரமார்த்திகக் கோட்பாட்டை ஆராய்ந்து பார்ப் போம். இப்பொழுது மைந்தனாக வந்திருப்பவன் முன்பொரு காலத்தில் தந்தையின் சொரூபத்தில் (விந்துவாக) இடம் பெற்றிருந்தான். பின்பு தாயின் கர்ப்பத்தில் இடம் பெற்று உருவெடுத்தான். அந்த இரண்டு நிலைகளிலும் அவன் தந்தைக்கோ, தாய்க்கோ புறம்பானவனாகக் கருதப்பட வில்லை. அவர்களின் சொரூபமாகவே வைத்து அவன் ஆதரிக்கப்பட்டு இருந்தான். பிறந்து வளர்ந்து பெரியவனான பிறகு அவனை வேற்றான் என்று தாய் தந்தையர்கள் புறக் கணிக்கலாகாது. அப்படி புறக்கணித்தாலும் வேறு தாய் தந்தையருக்கு அவன் மகன் ஆகமாட்டான். மற்றவர்களுக்கு வேற்றானாகவே இருந்து வருவான். இது உலக நடைமுறை

யின் கோட்பாடு. ஜீவன் வியக்தியை உண்டுபண்ணிக் கொள்வதற்கு முன்பு சுத்த சைதன்யமாயிருந்தான். உபாதிகளை உருவாக்கித் தன்னை ஒரு ஜீவனாகப் பின்பு அமைத்துக் கொண்டான். அப்படி அமைந்திருக்கிற வேளையிலும் அவன் சுத்த சைதன்யத்துக்குப் புறம்பானவன் அல்லன். இறைவா, என்னை நீ அருள் நோக்கோடு அங்கீகரித்திருக்கிற வேளையிலும் வேண்டுமென்றே தாற்காலிகமாகப் பராமுகமாக என்னை நீ புறக்கணித்திருக்கிற வேளையிலும் நான் உனக்கே சொந்தம். எனக்குப் புகலிடம் நீயே. இப்படிப் பக்தன் தனக்கும் தான் வழிபடும் தெய்வத்துக்கும் உள்ள இணக்கத்தை நிலைநாட்டுகிறான். உள்ளது ஒன்று. அதில் வேற்றுமை காண்பது எப்படி என்பது இக்கண்ணியின் கருத்தாம்.

247. நாவழுத்தும் சொல்மலரோ நாள்உதிக்கும் பொன்மலரோ
தேவைஉனக்கு இன்னதுஎன்று செப்பாய் பராபரமே.

மலர்தூவிப் பரமனைப் போற்றுவது அடியார்கள் ஐதிகமாகக் கையாண்டுவரும் வழிபாடாகும். பின்பு மலர்களுள் பலவகையுண்டு. அவைகளுள் முதலிடம் பெறுவது நாவால் வழுத்தப்படும் சொல்மலர் ஆகிறது. இருள்சேர் இருவினையும் சேரா இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு என்பது பொய்யாமொழி. இறைவனுடைய புகழே பொருள் சேர்ந்த புகழாகிறது. அவனுடைய புகழைப் பேசுமளவு நா புனிதமடைகிறது. மனம் மேன்மையுறுகிறது. அவனுடைய மகிமையை மொழிவதற்கே நா அமைந்திருக்கிறது. அந்த மேலான காரியத்தின் பொருட்டு நாவைப் பயன்படுத்துகிறவர்கள் நல்லார் ஆகின்றனர். அன்னவர்களுடைய போற்றுதல் சொல்மலர்கள் எனப் பாராட்டப்படுகின்றன. அத்தகைய சொல்மலருக்கு அடுத்த படியில் இருப்பது

நாள்தோறும் உதித்துவரும் மரம், செடி, கொடிகளிலுள்ள மலர்களாம். அவைகள் பொன்மலர்கள் என்று பாராட்டப் படுவது உபசாரத்துக்காகவேயாம். வழிபாடு பூர்த்தியாகும் வரையில் அவைகள் பொன்போன்று பாதுகாத்து வைக்கப் பெறுகின்றன. வழிபாட்டுக்குப் பயன்படுத்தியான பிறகு அவைகள் நிர்மால்யம் என ஒதுக்கப்படுகின்றன. சொல் மலருக்கு அத்தகைய குறைநிலை வருவதில்லை. இறைவா, உன்னை நான் மரம், செடி, கொடிகளினின்று வரும் அன்ரு டம் வாடிப்போம் மலர்களைக்கொண்டு வழுத்துவதா? என் றென்றும் வாடாதிருக்கும் சொல்மலரைக்கொண்டு வழுத்து வதா? எது சிறந்தது என்று பகர்ந்தருளுவாயாக என்பது இக்கண்ணியின் கருத்து. செடி மலர்களைக் கையால் தூவி யும் சொல்மலர்களை நாவால் சொரிந்தும் இறைவனை வழுத்த வேண்டும்.

248. கன்னல்தரும் பாகாய்ப் கருப்புவட்டாய்க்
கற்கண்டாய்
இன்னமுதாய் என்உள் இருந்தாய் பராபரமே.

கன்னல் (கரும்பு) ஆகிய தித்திப்பு வஸ்து, பாகாகவும், கருப்புவட்டாகவும் கற்கண்டாகவும் பல படித்தரங்களில் விளங்குவதை நாம் காணலாம். அந்தத் தித்திப்புப் பண்டம் பரிபாகத்தில் அடைந்துள்ள உச்சநிலை கற்கண்டுக்கு உடைய தாம். அதற்கு நிகராகப் பரம்பொருளிடத்திலுள்ள இன்பம் பல படித்தரங்களில் மிளிர்கிறது. சரீரத்துள் வியாபித்திருப் பது பரவஸ்து. அதன் சாந்தித்தியம் இருப்பதால் மேனி யைத் தீண்டுவதில் மக்கள் இன்பம் காண்கின்றனர். வெவ் வேறு இந்திரியங்களின் வாயிலாகப் பரவஸ்துவின் இன்பம் வெளியாகிறது. சுவைத்தும், பார்த்தும், கேட்டும் உயிர் வகைகள் இன்பம் அடைவது இயல்பு. இந்த இன்பம்

உண்மையில் பரவஸ்துவுக்கு உரியதாம். ஜீவாத்ம சொரூபத்திலும் ஆனந்தம் மிளிர்கிறது. பின்பு ஜீவபோதத்தைக் கடந்து அப்பால் போவது ஆத்மசாதகனுக்குச் சாத்தியமாகிறது. பண்பாட்டில் மேல்நிலைக்குப் போகப்போக இன்பம் பேரின்பமாக விரிவடைகிறது. கருவி கரணங்களையெல்லாம் கடந்து அப்பால் ஆத்மசாதகன் போகுமிடத்து அவன் தூய பேரின்பத்திலேயே திளைத்திருக்கிருன். அதுவே அவனுக்குச் சொந்தமான இருப்பிடமாகிறது. 'வீடுபெறநில்' என்னும் கோட்பாடு இந்தத் தூய ஆத்மானந்தத்தையே குறிக்கிறது. இறைவா, என்னை நான் முறையாகப் பக்குவப் படுத்திப் பிரகிருதி தத்துவங்களையெல்லாம் கடந்து மேலே வருவேனாகில் உன்னுடைய சாந்நித்தியத்தை உள்ளபடி உள்ளத்தினுள்ளே உணர்ந்து அதில் திளைத்திருப்பேன். அத்தகைய பெருநிலையை எனக்குக் கொடுத்தருள்வாயாக என்பது இக்கண்ணியின் கருத்து.

249. சிற்பரமே தற்பரமே தெய்வச் சுருதிசொன்ன
அற்புதமே அன்பே அறிவே பராபரமே.

சொற்பதத்தை யெல்லாம் தாண்டியுள்ள பரவஸ்துவை ஏகதேசம் சொல்லால் விளக்கலாம். மொழியில் அடங்காததை மொழியைக்கொண்டு விளக்குங்கால் அந்த விளக்கம் வீண்போவதில்லை. அது ஏகதேசம் பயன்படுகிறது. ஆதலால் சொல்லைத் துணையாகக்கொண்டு அதைக் கிரஹிக்க முயல்வோம். சிற்பரமே என்பது சித்பரம் எனப் பொருள் படுகிறது. சித்சொரூபமாயிருப்பது ஆத்மா. ஜடமாயிருப்பது பிரகிருதி. மனிதனுடைய அமைப்பில் சித்பகுதியும் ஜடப்பகுதியும் சேர்ந்தே இருக்கின்றன. 'நான் இருக்கிறேன்' என்னும் உணர்வு ஆத்ம தத்துவம். தான் இருப்பதை அது தானே அறிகிறது. தன்னைத்தான் அறிந்து

கொள்ளுதற்கு வேறு யாருடைய துணையும் தேவையில்லை. எது தன்னைத்தான் அறிகிறதோ அது ஆத்ம தத்துவம் என்பதை ஆத்மசாதகன் உறுதியாகப் பிடித்துக்கொள்ள வேண்டும். பிறகு அவன் அந்தக்கரண சுத்தி அடைந்து வருதற்கேற்பத் தன்னைத்தான் அறிகிற திறமை பன்மடங்கு வலிவு பெறுகிறது. அதைச் சித்கணம் எனவும் திரண்ட பேரறிவு எனவும் சொல்லால் விளக்க முயல்கிறோம்.

இனி சித்பரம் என்பதற்கு மேலும் விளக்கம் தருவது அவசியமாகிறது. பிரகிருதியின் கூறு ஆகிய சூரியன் அக் கோட்பாட்டை அறிந்துகொள்வதற்கு நன்கு பயன்படுகிறது. சூரியனை வசதிக்காகச் சித்சொரூபமாக வைத்துக்கொள்ள லாம். பூமியை ஜடசொரூபமாக வைத்துக்கொள்ளலாம். ஜடசொரூபமாயுள்ள பூமி முன்பொருகால் சூரியனிடத்தில் சித்சொரூபமாயிருந்து சிதறடைந்து வந்து ஆறிப்போய் ஜட மயமான மண்ணுலகாக இருக்கிறது. இந்த மண்ணுலகுக்கு வெளிச்சமும், வெப்பமும் தருவது சூரியன். சூரியனிடத் திருந்து வெப்பமும், வெளிச்சமும் வாராது போய்விடுமாயின் மண்ணுலகம் ஒன்றுக்கும் உதவாது. அதே பாங்கில் ஜட சொரூபமாயுள்ள பிரகிருதி ஆத்ம தத்துவத்துக்குப் புறம் பானதன்று. ஆத்மதத்துவமே ஜடதத்துவமாக விளங்கிக் கொண்டு இருக்கிறது. பிரகிருதியை விளக்கிக்கொண்டிருக் கிற ஆத்மதத்துவத்தைச் சித் எனலாம். அது மண்ணுல கைச் சூரியன் விளக்குதற்கு ஒப்பாகிறது. பின்பு அந்தச் சூரியன் தன்னில்தானாய் இருக்கிறது. அந்த நிலை சூரியனுக் குரிய பரநிலையாம். அதே விதத்தில் பரமாத்ம தத்துவம் பிரகிருதித் தத்துவத்துக்கு அப்பாற்பட்டதாய் இருக்கும் பொழுது அது சித்பரம் எனப்படுகிறது. அதனுடைய பூரண மகிமை சித்பரத்தில் ஒளிர்ந்துகொண்டிருக்கிறது.

ஆக,சித்கணம் அல்லது பிரக்ஞானம் சிதம்பரம் எனப் பெயர் பெறுகிறது. இத்தகைய சொற்களைக்கொண்டு சொல்லில் அடங்காத பொருளை ஒருவாறு அறிந்துகொள்கிறோம்.

அடுத்தபடியாகத் தற்பரம் என்னும் பதம் வருகிறது. தன்னிடத்திருந்து தோன்றி வந்துள்ள மற்ற கிரகங்களைப் பொருள்படுத்தாது சூரியன் தன்னில்தானாய் இருக்கும் பொழுது அது தற்பரத்தில் நிலைபெற்றிருப்பது ஆகிறது. அதேவிதத்தில் ஜகத் ஜீவன் என்கின்ற இரண்டு தத்துவங்களையெல்லாம் பொருள்படுத்தாது பரமாத்ம தத்துவம் தன்னில் தானாய்த் திகழ்ந்துகொண்டிருக்கும்பொழுது அது தற்பரம் எனப்படுகிறது. இதைச் சுத்தசைதன்யம் என்றும் வாலறிவு என்றும் பகர்வது மரபு. அது ஏகமாய் இருக்கிறது.

சுருதி என்பது வேதம். காதால் கேட்டு ரிஷிகள் அதைப் பரம்பரையாக அறிந்திருந்ததனால் அது சுருதி என்னும் பெயர் பெற்றுள்ளது. கேட்டறியப்பட்டது எனப் பொருள்படுகிறது. சொல்லற்கரிய பொருளை எண்ணிறந்த சொற்களால் விளக்க வேதம் முயலுகிறது. தெய்வத்தையே விளக்க வேதம் முயலுவதால் அது தெய்வச் சுருதி எனச் சிலாகித்துச் சொல்லப்படுகிறது. சுருதி தருகிற விளக்கத்தை எண்ணிப் பார்க்கப் பார்க்க வியப்புமிக உண்டாகிறது. பரவஸ்துவானது வியப்பை ஊட்டுவதால் அது அற்புதம் எனப் போற்றப் பெறுகிறது. அந்த அற்புத வஸ்துவை ஆராய்ந்து பார்க்கப் பார்க்க அன்பாய்த் திகழ்வதும் அதே பொருள் என்பது தெளிவாகிறது. அவ்வுண்மையை அனுபூதியில் உணருகிறவர்கள் அன்பே சிவம் என்னும் முடிவுக்கு வருகின்றனர்.

அப்பொருள் அறிவு எனவும் இயம்பப் பெறுகிறது. 'சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே' எனத் தாயு

மானவர் அப்பொருளே விளக்குகிருர். நாம் படைத்துள்ள அறிவு அந்தப் பேரறிவின் பிரதிபிம்பமாம். சூரிய வெளிச்சம் சந்திரன்மீது பிரகாசிப்பது போன்று ஆத்மப் பிரகாசம் நம்முடைய அந்தக்கரணத்தில் பிரதிபிம்பிக்கிறபொழுது நாம் நம்முடைய ஜீவவியக்தியைப் பெறுகிருேம். ஜீவர்களாகிய நாம் நம் அறிவுக்கு அறிவாயிருக்கிற மூல அறிவைத் தியானிக்கவேண்டும். அத்தகைய தியானம் முதிருங்கால் அது சமாதியாகப் பரிணமிக்கிறது. சமாதிநிலேயில் ஜீவ போதம் நழுவிப்போய்விடுகிறது. பரபோதம் ஒன்றே எஞ்சியிருக்கிறது. அப் பரபோதத்தை மூல அறிவு எனவும் வாலறிவு எனவும் இயம்புவது மரபு. அப்பேரறிவு சொரூபமாக ஜீவனுகிய நான் திருந்தியமைவேனுக என்பது இக்கண்ணியின் கருத்து.

250. அறிவிப்பான் நீஎன்ருல் ஐம்புலம்க டந்துஅந்
நெறிநிற்பார் யாரே நிகழ்த்தாய் பராபரமே.

ஐந்து பொறிகளுக்கு ஐந்து புலன்கள் இருக்கின்றன. நா என்னும் பொறிக்குப் புலனுயிருப்பது சுவை. கண், மேனி. காது, மூக்கு ஆகிய பொறிகளுக்குப் புலனுயிருப்பவைகள் முறையே வடிவம், ஊறு, ஓசை, நாற்றம் ஆகியவைகளாகும். ஐம்பொறிகள் குறையின்றி முறையாக அமைக்கப்பெறுமாகில் புறவுலகின் பாங்கை அவைகள் உள்ளபடி புலப்படுத்துகின்றன. பொறிகளில் கேடு இருந்தால் புறப்பொருள்களே அவைகள் சரியாகப் புலப்படுத்தமாட்டா. ஐந்து இந்திரியங்களோடு மனம் கூடித் தொழில் புரிகிறபொழுதே இவைகள் தத்தம் செயல்களே வெளிப்படுத்துகின்றன. அந்தக்கரணமாகிய மனதும் இவைகளுடன் இணையாது இருக்கும் வேளைகளில் இவ் ஐந்தும் சரியாகச் செயல்படமாட்டா. தூங்கும்பொழுது மனம் முற்றிலும் ஒடுங்கிவிடு

வதால் புறவுலகக்காட்சி அறவே மறைகிறது. மனம் ஐம் பொறிகளுக்கும் கர்த்தாவாகும். மனத்தின் பான்மை (மனப் பான்மை)க்கு ஏற்பப் பொறிகள் புறப்பொருள்களைப் புலப் படுத்துகின்றன. இருண்ட நேரத்தில் வழியில் சிலர் போய்க் கொண்டிருந்தனர். பாதைக்குப் பக்கத்தில் வடிவம் ஒன்று தென்பட்டது. அந்த வடிவத்தைப் போலீஸ்காரன் திருடன் எனவும், திருடன் அதே வடிவத்தைப் போலீஸ்காரன் என வும், பயங்கொள்ளி பேய் எனவும் பொருள்படுத்தினர்கள். வழியில் சென்ற ஆராய்ச்சிக்காரன் மனதில் எந்த வியாக்கி யானமும் செய்யாமல் கையில் உள்ள சிறிய மின்விளக்கைக் கொண்டு மரக்கட்டை என உள்ளது உள்ளபடி அறிந்து கொண்டான். ஆக, மனப்பான்மைக்கு ஏற்ப ஒரே பொருள் பலப்பலவாகப் புலப்படுவது தேற்றம்.

அறிவிப்பவனயிருப்பது பரமாத்மா. அறிவிப்பதை வியாக்கியானப்படுத்துவது மனத்தோடு கூடியுள்ள ஜீவாத்மா. ஒவ்வொரு ஜீவாத்மாவுக்கும் ஒவ்வொரு வித மனப்பான்மை. அறிவிக்கப்படுகின்ற புறப்பொருள்களை அந்தந்த ஜீவாத்மாவானவன் அவனவனுக்குற்ற மனப்பான் மைக்கேற்றவாறு பொருள்படுத்துகிருன். அதன் விளைவாகப் பிரபஞ்சம் பலபடித்தரங்களில் காட்சி கொடுக்கிறது. பண்பட்டுள்ள மனிதன் நல்ல கருவி கரணங்களை உடையவ னக இருக்கிருன். உள்ளிருந்துவரும் ஆத்மாவின் ஞானஒளி புறப்பொருள்களைப் பாங்குடன் பொருள்படுத்துதற்கு உதவு கிறது. அத்தகைய பெருநிலையை எட்டிய மனிதன் ஞான பரிபாகம் அடைவதற்குத் தகுதியுடையவனுகிருன். புறக் கரணங்களும், அகக்கரணங்களும் அவன் ஞானக்காட்சி பெறுவதற்கு ஏற்றவைகளாக அமைகின்றன. இப்பெரு நிலைக்குச் சான்ருக ஸ்ரீ ராமகிருஷ்ணரை எடுத்துக்கொள்ள

லாம். சின்னஞ்சிறு வயதிலிருந்தே அவர் அகத்திலும் புறத்திலும் கண்டவைகள் தெய்வீகம் நிறைந்தவைகளாய் இருந்தன. ஐந்து இந்திரியங்களும் உள்ளும் புறமும் அவருக்குத் தெய்வீகத்தையே புலப்படுத்தின.

ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய மனத்தை முதன் முதல் பரத்தின்கண் எடுத்துச் சென்றது கண் என்னும் புறக் கருவியாம். கோவில் ஒன்றுக்குச் சில தாய்மார்களுடன் வயல் வழியே போய்க்கொண்டிருந்தார். அவ்வாறு போகையில் பசுமை நிறைந்த வயல் பரப்பையும் மேலே ஆகாயத்தில் கூடியுள்ள கருமேகக் கூட்டத்தையும், அக்கருமேகக் கூட்டத்தின் கீழ் வெள்ளைநிறக் கொக்குகள் பறந்து போவதுமாகிய அழகிய காட்சியைக் கண்டார். அக்காட்சி அவருடைய மனத்தை அதீதத்தில் எடுத்துச் சென்றது. மூர்ச்சை போனவர் போன்று கீழே விழுந்தார். ஆனல் உள்ளிருக்கும் ஞான வெளிச்சம் பன்மடங்கு அதிகரித்தது. காண்போனைப் புறக் காட்சிக்கு அப்பால் பரத்தின் அனுபவத்தில் கொண்டு சேர்த்தது. ஆக, கண்ணின் துணைகொண்டு அவர் முதல் முதல் சமாதிநிலை எய்தினர். இதுபோன்றே ஏனைய இந்திரியங்களும் தத்தம் தூயபோக்கில் செயல்புரிந்து இறை அனுபவத்தையே அவருக்குப் புலப்படுத்தின. புறவுலகை நுகர்தற்கு இருக்கிற பஞ்சேந்திரியங்களையும் பரமஹம்சர் நன்கு பயன்படுத்தினர். அதன் விளைவாக அகவுலகில் அறிவிப்பவனுயிருக்கும் பரமாத்மாவினுடைய சந்நிதி செல்லுதற்கு அவருக்கு ஐம்பொறிகளும் பயன்பட்டன. சாதாரண ஜீவர்களுக்கு விக்கினமாயுள்ள ஐம்பொறிகளை அவர் வாகனங்களாக மாற்றினர். இது செயற்கரிய செயலாகும்.

அறிவுக்கறிவாய் எல்லார் உள்ளத்திலும் வீற்றிருப்பவர் பரமாத்மா. அவரிடத்திருந்து ஞான ஒளியை ஏற்று ஜீவாத்

மன் புறத்திலிருக்கும் பிரபஞ்சத்தைப் பொருள்படுத்தப் பயன்படுத்துகிருன். மனம் அதற்கு உற்ற அகக்கருவியாகிறது. மனத்திலுள்ள குணதோஷத்திற்கேற்பப் புறவுலகம் நல்லதாகவோ, கெட்டதாகவோ காட்சி கொடுக்கிறது. அந்த மனத்தைச் செப்பனிடுவதும் ஐம்பொறிகளை ஆண்டவனுடைய பணிவிடையில் செலுத்துவதும் வாழ்க்கையின் சிறந்த குறிக்கோளாகிறது. அந்நிலையை எய்துங்கால் அகத்தில் இருக்கும் அறிவிப்பவனே புறத்தில் தென்படுகிற திரிவுபட்ட பிரபஞ்சக் காட்சியைக் கடவுள் காட்சியாகக் காட்டுகிருன். கருவிகரணங்களைச் செப்பனிட்டுவிட்டால் அறிவிப்பவனே அகம் புறமாக இலங்குகிருன் என்பதும் வெளியாகிறது. பார்ப்பவன் குறைபட்ட கருவிகரணங்களைக்கொண்டு உலகையும், நிறை கருவிகளைக்கொண்டு தெய்வத்தையும் காண்கிருன். இதுவே இக்கண்ணியில் அடங்கியுள்ள கருத்து.

251. அந்தக் கரணம்எனும் ஆகாத பேய்கள்எனை
வந்துபிடித்து ஆட்ட வழக்கோ பராபரமே.

அந்தக்கரணம், பாஹியக்கரணம் என இரண்டுவித கரணங்கள் உள்ளன. உள்ளத்தினுள்ளே சூட்சுமமாயிருப்பவைகள் அந்தக் கரணங்கள் எனப்படுகின்றன. அவை முறையே மனம், சித்தம், புத்தி, அகங்காரம் என்பனவாம். பாகிய கரணங்கள் நா, கண், காது, மூக்கு, மேனி ஆக ஐந்து உள. பாகிய கரணங்கள் ஸ்தூல உடலுக்கு உரியவைகள். அவைகளுக்குத் தம்மளவில் ஆதிக்கம் ஏதுமில்லை. மற்று, கட்டிலடங்காத அந்தக்கரணங்கள் நான்கையும் நமக்கு நல்ல காரியத்துக்கு உதவாத பேய்கள் எனப் பகரலாம். கட்டில் அடங்கியுள்ளபொழுது அவை நான்கும் தெய்விக சம்பத்து வாய்க்கப்பெற்றவை எனலாம். அந்நிலையை

அடைவதற்குச் சாதகன் ஏராளமாய்ச் சாதனங்கள் புரிய வேண்டும். பொருந்தியனவும், பொருந்ாதவைகளுமான பாங்குகளின் தொகை சித்தம் எனப்படுகிறது. பொருந்தாத வைகள் முன்னணிக்கு வருகின்றபொழுது அவைகள் மனித ஜனப் படாதபாடுபடுத்துகின்றன. மற்றும் விருப்பு, வெறுப்பு மயமாய் இருப்பது மனம். கீழ்த்தரமான மனம் கெட்டதை விரும்பவும் நல்லதை வெறுக்கவும் செய்கின்றது. மேலும் தனக்கு நிகரானவன் உலகில் யார் இருக்கிறுன் என்று அகங்காரம் என்னும் பேய் ஆதிக்கம் செலுத்துகிறது. புத்தியின் பாங்கோ நல்லதையும் கெட்டதையும் பாகு படுத்துவதாகும். இந்தப் புத்தி விபரீத புத்தியாக வடிவெடுக் கும்பொழுது கெட்டதை நல்லதென்று நிரூபித்துக்காட்டும். சான்றோர்கள் நல்லது என அங்கீகரிப்பதைப் பொருளற்ற தென விபரீத புத்தி வியாக்கியானம் பண்ணும். இந்த நான்குவித அந்தக்கரணங்கள் ஆட்டுகிற பிரகாரம் புறத்தி லுள்ள பஞ்சேந்திரியங்கள் செயல்புரிகின்றன. அந்தக் கரணங்களின் அல்பத்தனத்தை அகற்றுவதுதான் மிகக் கடினம். கட்டுக்கடங்காதபொழுது அவைகளைப் பேய்கள் எனப் பகர்வது முற்றிலும் பொருத்தமானது. அவைகளின் ஆதிக்கத்துக்கு ஆத்மசாதகன் ஒருபொழுதும் இடந்தரலா காது. அவைகளை வெல்லுவது அசுர ஸம்ஹாரத்துக்கு நிகரானது. அவைகளை வெல்லும்பொழுதே ஆத்மசாதகன் பரத்தை நாடி முன்னேற்றமடைகிறுன் என்பது இக் கண்ணி யின் கருத்தாம்.

252. ஐவரொடும் கூடாமல் அந்தரங்க சேவைதந்த
தெய்வ அறிவே சிவமே பராபரமே.

ஐம்பொறிகளைப் (மெய், வாய், கண், மூக்கு, செவி) பயன்படுத்தியே அந்தக்கரணங்கள் நான்கும் அல்பச் செயல்

களில் ஈடுபடுகின்றன. ஆதலால் அந்தக்கரணங்களுக்கும் புறக்கரணங்கள் ஐந்திற்கும் இடையில் தொடர்பு ஏற்படாது பிரித்து வைப்பது அவசியமாகிறது. ஆத்மசாதகன் தியானத்தில் அமருகிறபொழுது ஐம்பொறிகளினின்று அந்தக்கரணங்களைப் பிரித்தெடுக்கிறுன். பிறகு அவைகள் கூண்டுக்குள்ளே அடைபட்டுள்ள பறவைகள் போன்று பலப்பல எண்ணங்களில் பிரவேசிக்கின்றன. அந்த எண்ணங்களை ஒதுக்கித் தள்ள யாருக்கும் இயலாது. அந்தக்கரணங்கள் நான்கையும் ஹிருதய கமலத்திலே வீற்றிருக்கின்ற இறைவன் சேவையில் ஈடுபடுத்தவேண்டும். சித்தத்திலே நல்ல விருத்திகளை வரவழைத்து அவைகளை அர்ச்சனைக்குரிய மலர்களாக உள்ளத்தினுள்ளேயிருக்கும் இறைவனுடைய திருவடிகளில் சமர்ப்பிக்க வேண்டும். விருப்பு, வெறுப்பு மயமாயிருக்கின்ற மனத்தையும் இறைவணக்கத்துக்குப் பயன்படுத்தலாம். வழிபாட்டுக்கு உதவுகிற எண்ணங்களிடத்து விருப்பம் வைக்கவும் இடைஞ்சலாயிருக்கிற எண்ணங்களை வெறுத்துத் தள்ளவும் வேண்டும். அந்தக் கட்டுப்பாட்டையும் மீறி வெறுப்புத் தலையெடுக்குமாகில் அதை இறைவன்பால் செலுத்தவேண்டும். இறைவா, என்னை நீ ஏன் இத்தகைய கீழ்மையில் உழ்லும்படி வைத்திருக்கிருய்? என்று இறைவனிடம் கோபித்துக்கொண்டால் அந்தக் கோபத்தில் தோஷமில்லை. அத்தகைய சினமும் ஆராதனையாக அங்கீகரிக்கப்படுகிறது. அகங்காரம் தலையெடுக்கிறபொழுது நான் கடவுளுடைய பக்தன் என அகங்கரிக்கலாம். அத்தகைய அகங்காரம் மனிதனைப் பந்தப்படுத்தாது. மேல்நிலை எய்துதற்கு அது உதவுகிறது. மரத்தினின்று வழிபாட்டுக்காக மலர் கொய்கின்றபொழுது பழுதுபட்டுப்போன மலரைப் புறக்கணித்துவிட்டு அன்று அலர்ந்த புதிய நல்ல மலரைக்

கொய்து எடுக்கிறோம். அதே விதத்தில் புத்தியானது இறைவனைப் போற்றுதற்குற்ற விவேகத்தை வளர்க்க வேண்டும். இறைவனிடமிருந்து சாதகனைப் பிரித்துவைக்கும் அக்ஞானத்தை அகற்றவேண்டும். புத்தியானது அச்செயலைச் செய்கின்றபொழுது அது ஈசுவர ஆராதனை பண்ணுகிறது. இப்படி அந்தக்கரணங்கள் நான்கும் இறைவனுடைய வழி பாட்டுக்கு உள்ளத்தினுள்ளே உலவி வருமாகில் அது அந்த ரங்க சேவை எனப்படுகிறது. புறக்கரணங்கள் செயலற்றுக் கிடக்கையில் அந்தக்கரணங்கள் நான்கும் இறைவனுடைய வழிபாட்டில் தீவிரமாக ஈடுபடுகின்றன. அந்தநிலை வருகின்ற பொழுது அது புத்தி ஸம்யோகம் எனப்படுகிறது. புத்தி ஸம்யோகமே இக்கண்ணியில் தெய்வ அறிவென இயம்பப் படுகிறது. இங்ஙனம் பொறிகளை ஒதுக்கி வைத்துவிட்டு அந்தக்கரண விருத்திகளை இறைவனுக்கு உரியவைகளாக அமைகின்றபொழுது அது நல்ல சிவபூஜையாகிறது என்பது இக்கண்ணியில் அடங்கியுள்ள கருத்தாம்.

253. அருள்ஆகி நின்றசுகம் ஆகாமல் ஐயோ
இருள்ஆகி நிற்க இயல்போ பராபரமே.

உலகனைத்தும் ஆனாய் நீயே என்பது ஆப்த வாக்கியம். இறைவன் உலகிலுள்ள பலப்பல உயிர்களாகவும், ஜடப் பொருள்களாகவும் இலங்குகிறான். சேதனத்திலும், அசேத னத்திலும் இறைவனுடைய சாந்நித்தியத்தைக் காணமுயலு வது அருளாக நிற்பதாகும். சேதனத்தையும், அசேதனத் தையும் பிரபஞ்சமாகப் பொருள்படுத்தி அவைகளைச் சுக போகத்துக்குப் பயன்படுத்தவும், போகத்துக்குப் பயன் படாதவைகளிடத்து வெறுப்புக்கொள்வதும் இருளாகி நிற்ப தாகும். ஆத்மசாதகன் அனைத்தையும் தெய்வமாகக் கருது வது அருளாகி நிற்பதாகும். ஐம்பூதங்களாய் வடிவெடுத்

திருப்பவன் இறைவன். ஆதலால் மண்ணைப் பிருதிவி லிங்கமாகக் காணுதல் வேண்டும். அப்பாடம் காஞ்சியில் உள்ள சிவன் கோவிலில் புகட்டப்படுகிறது. நீரை அப்பு லிங்கமாகக் காணுதல் வேண்டும். அப்பாடம் திருவானைக் கோயிலில் புகட்டப்படுகிறது. நெருப்பை ஜோதிர்லிங்க மாகக் காணுதல் வேண்டும். அண்ணாமலையில் அது விளக் கப்பெறுகிறது. காற்றைக் கடவுள் மயமாகக் காணும் பாடம் காளஹஸ்தியில் புகட்டப்படுகிறது. ஆகாசம் அவன் மயமாகச் சிதம்பரத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இங்ஙனம் பூதங்களிடத்து இறைவனைக் காண்பது அருளாகி நிற்பதா கிறது. இறைவனுடைய மேனியின்மீது நச்சுப் பாம்புகள் நெளிந்துகொண்டிருக்கின்றன. அவனுடைய திரிலோகக் குடும்பத்தில் காளை, சிங்கம், எலி, மயில் ஆகியவைகள் இடம் பெறுகின்றன. உயிர்கள் அனைத்தையும் இறை வனுக்குரியவைகள் என்று கருதுவது அருளாகி நிற்பதாகும். அதற்கு மாறாக உலகப்பற்றில் உழலுகிறவர்கள் ஒரு ஜந்து வைத் தங்கள் காரியத்துக்குப் பயன்படுத்தவும், மற்றொரு ஜந்துவைத் துன்புறுத்தவும் செய்கின்றனர். அப்படிச் செய் வது அக்ஞான இருளாகி நிற்பதாகும். உலகைச் சுகபோகத் துக்குரிய போகபூமியாகக் காண்பது இருளாகி நிற்பதா கிறது. அதே உலகை இறைவனுடைய எண்ணிறந்த தோற்றங்கள் எனப் பொருள்படுத்தி அவைகளிடத்துத் தெய்வீக இணக்கம் வைப்பது அருளாகி நிற்பதாகிறது. மனப்பான்மையை மாற்றி அமைப்பது ஆத்மசாதனமாகிறது. அருளாகி நிற்பது ஆத்மசாதகர்களுடைய பாங்கு என்பது இக்கண்ணியில் அடங்கியுள்ள கருத்தாகும்.

**254. அன்பர்எல்லாம் இன்பம்அருந்திடவும் யான்ஒருவன்
துன்புறுதல் நன்றோநீ சொல்லாய் பராபரமே.**

மானுடன் ஒருவன் இன்புற்று இருப்பதும் துன்புற்று இருப்பதும் அவன் அடைந்துள்ள பரிபாகத்தைப் பொறுத்த தாம். பரமனை அணுகுதற்கேற்ப மனிதன் அடையும் இன்பம் நிலைபேறு உடையதாகிறது. பரமனிடமிருந்து வழுவு வதற்கேற்ப இன்பம் குறைகிறது; துன்பம் அதிகரிக்கிறது.

அடியார்கள் அடைந்துள்ள பெருநிலைகளைப் பாராட்டு தல் பரமனை வழுத்துதற்கு ஒப்பாகிறது. சான்றோர்களைச் சிறுமைப்படுத்துவது அல்லது அவர்களைக் குறித்துப் பொருமை பூணுதல் சன்மார்க்கமாகாது. பிறரைச் சிறுமைப் படுத்துகிறவன் தானே சிறுமையுறுகிருன். பிறரைக் குறித் துப் பொருமைப்படுகிறவன் மேலும் மேலும் கீழ்மையுறு கிருன். இனி, சான்ருேரைக் குறித்துப் பொருமைப்பட்டால் அதினின்று வரும் கேடு பன்மடங்கு அதிகமாகிறது. தாயு மான சுவாமிகள் அன்பர்கள் அடைந்துள்ள அருள்நிலையைக் குறித்து அசூயை (பொருமை) கொள்வதுபோன்று இக் கண்ணி தொனிக்கிறது. உண்மையில் அசூயைக்கும் அவரு டைய அருள் நாட்டத்துக்கும் வெகுதூரம். சான்று ஒன்றின் மூலம் தாயுமானசுவாமிகளின் மனநிலையைப் படம் பிடிப் போம். தாய் ஒருத்திக்குச் செல்வர்களும் செல்விகளும் சிலர் இருக்கின்றனர். அவர்கள் எல்லாரையும் தன்ேேடு அழைத்துக்கொண்டு ஒரு ஸ்தலத்துக்கு யாத்திரை புறப் படுகிருள். ஒரு குழந்தைக்குக் காலில் காயம் ஒன்று இருப் பதை முன்னிட்டு அவள் அக்குழந்தையை மற்றவர் பாது காப்பில் வீட்டில் விட்டுவைத்துப் புறப்படுகிருள். அப் பொழுது அக்குழந்தை என்னபாடுபடும் என்பதை நாம் யூகிக்க முடியும். தன் காலில் காயம் இருப்பதை அது கருத் தில் வாங்காது. தான் ஆரோக்கியமாக இருப்பதாகவே அது எண்ணிக்கொள்ளும். தாய் அதைத் தன்ேேடு அழைத்

துச் சென்றால் மட்டுமே அது இன்புற்றிருக்கும். அதற்குப் பதிலாக வேறு என்ன ஈடுகொடுத்தாலும் அக்குழந்தை அமைதியுறாது. தாயுமான சுவாமிகளின் மனநிலையும் அத் தகையது. எத்தனை எத்தனை அன்பர்கள் இறைவனுடைய அருளுக்குப் பாத்திரமாகி உள்ளார்கள் என்பதை அகக் கண்ணால் அவர் யூகிக்கிறார். தாம் இன்னும் அதுபோன்று அருளுக்குப் பாத்திரமாகாதிருப்பது பெரும் வேதனையை உண்டுபண்ணுகிறது. அதே மனவேதனையை ஏனைய ஆத்ம சாதகர்களும் தங்களுக்குத் தாங்களே உண்டுபண்ணிக் கொள்ளவேண்டும். சாதனத்தில் முன்னேறியவனுக்கு அந்த வேதனை நன்கு பயன்படுகிறது. இங்ஙனம் அருள்தாகம் வடிவெடுத்துள்ள மனநிலையை இக்கண்ணி நன்கு எடுத்துக் காட்டுகிறது.

255. **சந்ததமும் நின்கருணை சாற்றுவதுஅல் லால்வேறு**
சிந்தை அறியேன்உன் சித்தம் பராபரமே.

சந்ததமும்-காலமெல்லாம்; சாற்றுவது-சொல்லுவது; உன் சித்தம்-தேவரீருடைய மனப்பாங்கு.

இறைவனுடைய கருணை எத்தகையது என்பதை எண்ணிப் பார்ப்பதும் அதைப்பற்றிப் பிறரோடு பேசுவதும் நல்ல ஆத்மசாதனமாகிறது. எத்தனை எத்தனை பெருமக்கள் எத்தனை எத்தனை விதங்களில் இறைவனுடைய அருளுக்குப் பாத்திரமாகியுள்ளார்கள் என்பதை ஆழ்ந்து சிந்திப்பதும் அதைப்பற்றிப் பிற ஆத்மசாதகர்களோடு ஆழ்ந்து சர்ச்சை பண்ணுவதும் சிறந்த ஆத்மசாதனமாகிறது. இறைவனுடைய கருணையை எண்ணிப் பார்ப்பதற்கேற்பச் சாதகன் ஒருவன் தானே மனபரிபாகம் அடைகிறான். இறைவனுடைய கருணையைப் பிறரோடு பேசிக் களித்திருப்பதற்கேற்ப ஆத்ம

சாதகன் தானே மனபரிபாகம் அடைகிருன். இறைவா, நீ காலமெல்லாம் செய்துள்ள கருணையைப்பற்றி யாண்டும் கருதவும் கூறவும் நான் எண்ணியுள்ளேன். அதைத் தவிர வேறு எந்தச் செயலிலும் நான் ஈடுபடேன். உன் கருணையை எண்ணி எண்ணித் திரும்பத் திரும்பச் சொல்லிச் சொல்லி இன்புற்றிருக்கிற என்னை உய்வித்தருள், அல்லது புறக் கணித்துவிடு. அதைக் குறித்து நான் கவலைப்படேன். உன் திருவுளப்பாங்கின்படி என்னை நீ எந்த நிலையில் வேண்டுமா ளுலும் வைத்துக்கொள். நான்மட்டும் சர்வகாலமும் உன் னுடைய கிருபையைப்பற்றியே பேசிப் பரவசமடைந்திருப் பேன் என்பது இக்கண்ணியின் கருத்து.

256. நான்நான் எனக்குளரும் நாட்டத்தால் என்னை விட்டுப்
போனுலும் உன்னைவிட்டுப் போகேன் பராபரமே.

குளறுதல்-பொருளற்ற பேச்சைப் பேசுதல்.

நான் நான் என்று தன்னுடைய தனி வியக்தியை நிலை நாட்டுதல் ஜீவாத்மாக்களின் பாங்கு ஆகும். அப்படிச் செய் வது அகங்காரத்தின் விளைவு ஆகும். இனி அகங்காரம் என்ருல் என்ன என்பதை அறிந்துகொள்ளுவது அவசிய மாகிறது. தான் அல்லாததைத் தான் என்று கருதுவது அகங்காரம். மனிதனுடைய நிஜசொரூபம் ஆத்மா. அதை அறிந்துகொள்ளாத அக்ஞானநிலையில் அவன் இருக்கிருன். கர்மத்தின் விளைவாக அவன் எடுத்துள்ள உடலைத் தான் என்று கருதுகிருன். அந்த உடலோ பூமியில் ஆங்காங்கு வெவ்வேறு கூறுகளுடன் பிறப்பெடுப்பதாகிறது. ஐரோப்பா வில் பிறக்கிறவர்கள் வெள்ளை உடல் படைத்தவர்கள். மஞ் சள் அல்லது செம்பட்டை முடி படைத்தவர்கள். ஆப்பிரிக்கா கண்டத்தில் பிறக்கிறவர்கள் கன்னங்கரேலென்ற காயம்

உடையவர்கள். தடித்த உதடு, சுருட்டை முடி. ஆசியா கண்டத்தின் வடக்குப் பகுதியில் பிறப்பவர்கள் மங்கோலி யர்கள். மஞ்சள் மேனி படைத்தவர்கள்; குட்டையர்கள். ஒட்டிய மூக்கு உடையவர்கள்; சுருங்கிய கண் உடையவர்கள். மேனிகள் இத்தனைவிதப் பாங்குகளில் பூவுலகில் அமைந் திருக்கின்றன.

அந்தந்த நாட்டில் பிறக்கிற ஜீவாத்மாக்கள் அது அதற் குரிய மேனிமயமாகத் தங்களைக் கருதுகின்றன. வெவ் வேறு இனத்தவர்கள் என்னும் கொள்கை மேனியை முன் னிட்டு வருகிறது. மற்று ஆத்ம சொருபமோ அத்தனை பேருக்கும் ஒன்றேயாம். தன்னைச் சச்சிதானந்த சொருப மாகக் கருதுவது ஆத்ம ஞானம். தன்னை உடல் மயமாகக் கருதுவது அகங்காரம். வெவ்வேறு நாட்டவர்களுக்கு வெவ் வேறு விதமான அகங்காரங்கள் இருக்கின்றன. அங்ஙனம் தேசாச்சாரம், மொழி முதலியவைகளை முன்னிட்டு அகங் காரம் அமைகின்றது. எங்கெங்கோ எத்தனை எத்தனையோ விதப் பிறவிகளில் அத்தனை அத்தனைவித அகங்காரங் கள். அவையாவும் நான் நான் எனத் தங்களை விளக்கிக் கொள்கின்றன. பின்பு அவைகள் இடத்துக்கேற்பவும் பிறப்புக்கேற்பவும் மாறி மாறி அமைந்துகொண்டிருக்கின் றன. அவையாவும் ஜீவாத்மனைப் பற்றிய நிலையற்ற சொரு பங்களாம். ஒருவித அகங்காரம் இன்னொருவித அகங் காரத்தை அகற்றுகிறது. கடைசியாக ஆத்ம சாதனத்தில் எல்லாவித அகங்காரங்களும் ஒதுக்கித் தள்ளப்படுகின்றன. அவையாவும் நிலையற்ற உபாதிகளாம். உபாதிகளை ஒழிக்கு மளவு ஜீவாத்மாக்கள் பரமாத்மனுக்குரியவர்களாகின்றார் கள். ஜீவாத்மாக்கள் எல்லாரும் பரமாத்மாவைச் சேர்ந்தவர் கள். பொருளற்ற நான் என்பதை ஒதுக்கித் தள்ளிவிட்டுப்

பொருளுற்ற ஆத்ம சொரூபத்தை நிலைநாட்ட வேண்டும் என்பது இக்கண்ணியின் உட்கருத்தாம்.

257. இக்காயம் பொய்என்றோர் ஈட்டத்து உனக்குஅபயம்
புக்காதார் உண்டோ புகலாய் பராபரமே.

ஈட்டம் — கூட்டம்; புகலுதல் — சொல்லுதல். தர்ம தேவதை கேட்ட கேள்விகளுள் 'அதிசயங்களுள் பெரிய அதிசயம் யாது? என்பது ஒன்று. அதற்கு யுதிஷ்டிரன் மறுமொழி கூறினன். உலக மக்கள் ஒருவர் பின் ஒருவராக நாள்தோறும், கணந்தோறும் மடிந்துகொண்டேயிருக்கிறார்கள். அப்படி மடிகின்றவர்களை உற்றார் உறவினர்கள் கதறிப் பதறி அழுதுகொண்டு மறுமைக்கு விடைகொடுத்து அனுப்பிக்கொண்டே இருக்கின்றனர். இந்நிகழ்ச்சிகளுக்கிடையில் ஒவ்வொரு மனிதனும் தான்மட்டும் சாகப்போவதில்லை என்று மனக்கோட்டை கட்டுகிறான். இதுவே அதிசயங்களுள் பெரிய அதிசயமாம்! அன்றும் இன்றும் என்றும் இதுதான் உலகத்தவர்களுடைய போக்கு. இவர்களுக்கிடையில் விவேகம் படைத்த ஒருசிலர் இருக்கின்றனர். இக்காயம் பொய்யென்று அன்னவர்கள் இடையிடையே உணர்கின்றனர். அத்தகைய விவேகரின் கூட்டம் சிறியதாயிருக்கலாம். ஆயினும் அறிவுடைய அந்தக் கூட்டம் எக்காலத்திலும் உலகில் உண்டு. காயத்தைப் பொய்யென்று அறிகிற மனிதன் என்ன செய்யவேண்டும் என்பது கேள்வி. நண்பன் என்று நம்பி ஒரு மனிதனோடு வனாந்தரத்துள் பொருள் எடுத்துக்கொண்டு போகத்துணிந்த பிரயாணி ஒருவன் வனாந்தரத்துக்குள் புகுதற்கு முன்பே அவன் திருடன், கொலைகாரன் என அறியவந்தான். அப்படி அறிந்த பின்பு அவனோடு சேர்ந்து வனத்தினுள் போகத் துணியமாட்டான். அந்தக் கள்ளனுக்கு ஒப்பானது மானுடன் படைத்திருக்கிற

காயம். காயம் என்னும் சொல்லுக்கு இரண்டு பொருள்கள் உண்டு. உடல் என்பது ஒரு பொருள். வெட்டுப்பட்டது என்பது மற்றொரு பொருள். ஓய்வில்லாது உருண்டோடிக் கொண்டிருக்கின்ற காலம் மக்களின் காயத்தைக் கரந்து கொண்டே இருக்கிறது. பிறந்து சில விநாடிகளுள் சில உடல்கள் சவங்கள் ஆகின்றன. சில நாட்களில், வாரங் களில், மாதங்களில், வருஷங்களில் காயங்கள் சதா மடிந்த வண்ணமாயிருக்கின்றன. அதற்கிடையில் அவிவேகி ஒரு வன் தான்மட்டும் சாசுவதமாக நிலையற்ற இந்நிலவுலகில் நிலைத்திருக்கப்போவதாக மனக்கோட்டை கட்டுவது விந்தை யினுள் விந்தையன்றோ! நித்திய அநித்திய வஸ்து விவேகம் படைத்திருக்கிறவர்கள் கூட்டம் நித்தியவஸ்துவாகிய பரம னிடத்து அடைக்கலம் புகும். காயத்தையோ நிலவுலக வாழ்க்கையையோ நிலைத்ததென அக்கூட்டம் பொருள் படுத்தாது.

ஆக, மக்களுள் விவேகி யார் என்பது வெளியா றது. பொய்யெல்லாம் ஒன்றாகப் பொருத்தி வைத்துள்ள பொய் யுடலை மெய்யென்று அன்னவர்கள் அதை நம்பியிருக்கமாட் டார்கள். அதைக் கருவியாக வைத்துக்கொண்டு பரமனையே அன்னவர்கள் சார்வார்கள். அவனிடத்து அடைக்கலம் புகுவார்கள். அடைக்கலம் புகுதற்கேற்பப் பரமனிடத் திருந்து அபயம் பெறுவார்கள். பயமற்ற நிலை அபயம் எனப்படுகிறது. உடலை நம்பியிருக்குமளவு பயம் அதிகரிக் கிறது. பரமனைச் சார்ந்திருக்குமளவு பயம் நீங்கி அபயம் மேலோங்குகிறது. மெய்ப்பொருளாகிய பரமனை யாண்டும் சார்ந்திருப்பவர்கள் முமுக்ஷுக்கள். மண்ணுலக வாழ்வை நம்பியுள்ளவர்கள் மயக்கத்தில் மூழ்கியவர்கள். ஈசா, உலக வாழ்வை ஒதுக்கிவிட்டு உன்னையே நான் சார்ந்திருப்பேனாக என்பது இக்கண்ணியின் கருத்து.

258. தான்ஆதல் பூரணமே சாரும்இடம் உண்டுஉயிரும்
வான்ஆதி யும்ஒழுங்காய் மன்னும் பராபரமே.

உயிர்—ஜீவாத்மா. வான்—ஆகாசம். மன்னுதல் — தங்கியிருத்தல். தோற்றத்துக்கு வந்துள்ள பிரபஞ்சத்தில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. ஒன்று சேதனம்; மற்றது அசேதனம். புல் முதல் பிரம்மா வரையில் உள்ள ஜீவகோடிகளனைத்தும் உயிர் என்றோ, சேதனம் என்றோ இயம்பப் பெறுகின்றன. ஆகாசம், வாயு, அக்னி, அப்பு, பிருதிவி ஆகிய ஐந்து பூதங்கள் அசேதனம். சதா மாறியமைந்து கொண்டிருக்கும் தன்மை ஜகத்துக்கு உண்டு. ஜகத்திலுள்ள ஜீவர்களும் சதா மாறியமைந்துகொண்டிருக்கின்றனர். ஜடப் பொருளாயிருக்கின்ற பஞ்ச பூதங்களும் சதா மாறியமைந்து கொண்டிருக்கின்றன. நிலைமாறியமைந்துகொண்டிருப்பவைகளுக்கு ஆதாரமாக நிலைத்துள்ள வஸ்து ஒன்று அவசியம். சித்ஆகாசம் எனப்பகரப்பெறுகிற அறிவுப் பெருவெளியே நிலைபேறு உடையது. அது எல்லையில் அடங்காதது. கால தேச நிமித்தத்துக்கு அது அப்பாற்பட்டது. ஆகையால் அது பூரணம் என்னும் பெயர் பெற்றுள்ளது. போக்கும் வரவும் புணர்வும் அப்பெரிய பொருளுக்கு இல்லை. அதை ஆதாரமாக வைத்துக்கொண்டு அதன் மீது சேதனப்பொருள்களும், ஜடப்பொருள்களும் தோன்றவும், நிலைபெற்று இருக்கவும் ஒடுங்கவும் செய்கின்றன.

சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். கடல் அகண்டமானது. அது யாண்டும் இருந்தபடி இருக்கிறது. அதன் மீது அலையொன்று தோன்றுகிறது. தோன்றிய அலை உருண்டோடுகிறது. ஓட ஓட அது வண்ணத்தில் பெரிதாகிறது. பின்பு தேய்ந்து அது ஒடுங்குகிறது. அலை எடுத்துக்கொள்கிற எல்லா நிலைகளுக்கும் ஆதாரமாயிருப்பது

கடல். அலையின் தோற்றத்துக்கே மூலப்பொருளாயிருப்பது கடல். அங்ஙனம் உயிர் வகைகளுக்கும், ஜடப்பொருள்களுக்கும் பிறப்பிடமாயிருப்பது பூரணம். பிரபஞ்சத்தின் நிலைபேற்றுக்கு ஆதாரமாயிருப்பது பூரணம். இறுதியில் பிரபஞ்சம் பூரணத்தில் ஒடுங்குகிறது. இந்தப் பூரணமே மனிதனுக்கு நிலைக்களமாகிறது. பூரணத்தோடு தன்னை இணைத்துக்கொள்கிறவன் விவேகி. அழிந்து பட்டுப்போம் உடலோடும், ஐம்பூதங்களாலாகிய உலகோடும் தன்னை இணைத்துக்கொள்கிறவன் அவிவேகி. பரம்பொருளே, உடல் எடுத்துள்ள உயிராய் நான் இருக்கும்பொழுதே யாண்டும் எனக்கு ஆதாரமாயுள்ள உன்னையே நான் சார்ந்திருப்பேனாக. வினையின் விளைவாக நான் எடுத்துள்ள உடலையும் வாழ்ந்திருக்கிற உலகையும் பொருள்படுத்தேன் என்பது இக்கண்ணியின் கருத்து.

259. உன்னும்மனம் கர்ப்பூர உண்டைபோ லேகரைய
மின்னும்ஆ னந்த விளக்கே பராபரமே.

உன்னுதல்-நினைத்தல். மின்னுதல்-பிரகாசித்தல்.

கடவுள் வழிபாட்டைக் கிரியா விசேஷங்களுடன்கூடி நடாத்துவது ஐதிகம். கிரியா விசேஷங்களின் வாயிலாகப் பரதத்துவம் மானுடனுக்குப் புகட்டப்படுகிறது. அப்படிப் புகட்டப்படுகிற பரதத்துவத்தை உறுதிப்படுத்துதற்குக் கிரியைகளைக் கையாண்டால் அது நல்ல வழிபாடாகிறது. பரதத்துவத்தை அறிந்துகொள்ளாது வெறும் கிரியைகளை வளர்த்துக்கொண்டு போவது கர்மகாண்டமாகிறது. அதனால் மனிதன் முன்னேற்றமடைவது இல்லை. பிறவிக் கடலிலேயே அன்னவன் மூழ்கிக்கிடக்கிறான். மின்னும் ஆனந்த விளக்கு பரமாத்ம சொரூபம். அது அனந்தங்கோடி ஜீவர்களாகவும் மின்னிக்கொண்டிருக்கிறது. இக்கோட்பாடு

கோயில் வழிபாட்டில் நன்கு புகட்டப்பெறுகிறது. கோட்பாட்டை அறிந்துகொள்ளாது கோடிக்கணக்கில் விளக்கேற்றி வைத்தாலும் அதில் ஞானப் பயன் ஒன்றுமில்லை.

கற்பூர தீபாராதனையோடு வழிபாடு முற்றுப்பெறுகிறது. சுத்த கற்பூரத்தில் சிறப்பு ஒன்று உண்டு. எறிந்துபோன பிறகு அதன் அறிகுறியாகக் கரியோ, சாம்பலோ தட்டில் எஞ்சியிருப்பதில்லை. அந்தக் கற்பூரத்துக்கு நிகர் பண்பட்ட மனம். தூய மனத்தில் மனிதனுடைய ஆத்மப் பிரகாசம் மிளிர்கிறது. கற்பூரம் சூன்யமாக மறைவதுபோன்று மனம் தூயதாகும்பொழுது அது பரத்தில் மறைந்துபட்டுப் போகிறது. எஞ்சியிருப்பது அணையா விளக்காகிய பரவஸ்து ஒன்றே. அந்தப் பரவஸ்துவில் கற்பூரம் போன்று தன்னை எரித்துத்தள்ளுவது ஜீவாத்மனின் குறிக்கோள் ஆகிறது. இக்கோட்பாட்டை இக்கண்ணி நன்கு எடுத்து விளக்குகிறது.

260. நாள்பட்டு அலைந்த நடுக்கம்எலாம் தீரஉனக்கு
ஆள்பட்டும் துன்பம்எனக்கு ஆமோ பராபரமே.

கோடைக் காலத்தில் சுடு மணலில் மானுடன் ஒருவன் நடந்து சென்று கால் கொப்பளித்துப் போய்விட்டது. மண்டையிடியும், மயக்கமும் வந்து வாட்டின. அந்நிலையில் குளிர்ச்சியான மண்டபம் ஒன்றினுள் அவன் நுழைகிறான். ஆயினும் காலிலும், தலையிலும் அவன் படுகிற வேதனை தணிந்தபாடில்லை. துன்பத்துக்கேதுவான சூழ்நிலையினின்று விலகி இன்பத்துக்கேதுவான சூழ்நிலைக்கு வந்த பின்பும் பட்ட கஷ்டம் உடனடியாகத் தணியாது. அதற்கொப்பானது அஞ்ஞான நிலையிலிருந்து ஞானநிலைக்கு வந்துள்ள நன்மகனுடைய நிலை. பிரபஞ்ச வாழ்வு யாண்டும் துன்பம் நிறைந்தது. துன்பம் கலவாத இன்பம் இவ்வையகத்தில்

யாருக்குமே கிடையாது. அப்படி மனிதன் படுகிற துன்பங்கள் அனைத்துக்கும் அடிப்படைக் காரணம் அஞ்ஞானம். ஞானேதயத்தில் துக்கத்துக்குக் காரணமாயிருந்த அஞ்ஞானம் அடிபடுகிறது. ஆயினும் பழைய உடலிலேயே அந்த ஞானி ஜீவன் முக்தன் நிலையில் வாழ்ந்திருக்கிறுன். உடலில் வாய்த்துள்ள பிராரப்த கர்மம் ஞானிக்கும் உண்டு. அதைச் சகிப்பது அவனுக்குச் சாத்தியமென்ருலும் நோயைத் தடுக்கவோ, அக்ஞானத்தோடு கூடிய உடலை ஒதுக்கவோ ஞானிக்கு இயலாது. இக்கோட்பாடு பக்தன் ஒருவன் பரமனிடம் முறையிடும் பாங்கில் இக்கண்ணியில் அமைந்துள்ளது.

261. பாவிபடும் கண்கலக்கம் பார்த்தும்இரங் காதுஇருந்
ஆவிக்கு உறுதுணையார் ஐயா பராபரமே. [தால்

பாவி-தீவினைப்பயனை அனுபவிப்பவன். கண்கலக்கம்-மிகுந்த துன்பம். ஆவிக்கு-உயிருக்கு. உறுதுணை-நல்ல உதவி.

அனுதைப்பிள்ளை ஒருவன் ஐயம் ஏற்று உண்டு குற்றுயிர் உற்று இருந்தான். கந்தையொன்றை இடுப்பில் கட்டியிருந்தான். ஓரிடத்தில் நின்றுகொண்டு அவன் தேம்பித் தேம்பி அழுதான். வழியில் சென்ற பிரமுகன் ஒருவன் அச்சிறுவனைக் கூர்ந்து கவனித்தான். சில வருஷங்களுக்கு முன்பு தன்னிடமிருந்து காணுமல் போன செல்வன் இவன் தான் என்பதை அப்பிரமுகன் கண்டுகொண்டான். தந்தையைச் சிறுவன் அடையாளம் கண்டுகொள்ளவில்லை. ஆனுல் தந்தைக்கு அவதிப்படும் அவன் யார் என்பது விளங்கிற்று. அப்படி விளங்கியான பிறகு தன் மைந்தன் அல்லல்பட்டுக்கொண்டிருப்பதைப் பார்த்துச் சும்மா இருப்பானு? அவன் ஒருநாளும் அப்படி இருக்கமாட்டான். உடனே மைந்தனை

வாரியெடுத்துக் குளிப்பாட்டி நல்ல உடை, உணவு கொடுத்து அவனுக்குப் புத்துயிர் ஊட்டுவான். சிறுவனுக்கும் தனக்குமுள்ள சொந்தத்தை அவனுக்கு ஞாபகமூட்டுவான். பிள்ளையைப் பெற்றெடுத்த தந்தைக்கு அத்தகைய இரக்கம் வருவது இயல்பு.

ஜீவாத்மாக்கள் அனைவரும் பரமனுக்குப் பிள்ளைகள் ஆகின்றார்கள். அத்தனை கோடி ஜீவர்களில் யாரோ ஒருவன் தனக்கு உலகப்பற்று ஒன்றும் வேண்டாம், பரமனுடைய அருளுக்கே பாத்திரமாகவேண்டும் என்று அருள்நாட்டம் பிடித்துத் தவித்துக்கொண்டிருக்கிறான். அத்தகையவனுக்கு அதிவிரைவில் அருளமுதம் ஊட்டி ஆட்கொள்ள இறைவன் கடமைப்பட்டிருக்கிறான். கருணாகரனாகிய அவன் அக்கடமையைச் செய்யாவிட்டால் அருள்பித்தம் பிடித்தவனுக்கு ஆத்ம சாந்தி எங்கிருந்து உண்டாகும்? இறைவனை நோக்கி ஜீவன் ஓரடி வைத்தால் அந்த ஜீவாத்மனை நோக்கிப் பரமாத்மா பத்தடி முன்வருகிறான் என்பது ஆன்றோர் வாக்கு. இது ஆத்மசாதனத்தைப்பற்றிய நியதி. இறைவா, நான் உன்னையே நாடிக் கதறிப் பதறி அழுதுகொண்டிருக்கிறேன். அப்படி வருந்துகின்ற என்னை ஆட்கொள்ள நீ திருவுள்ளம் கொள்ளாது இருந்தால் என் கதி என்னாவது என்பது இக்கண்ணியின் கருத்து.

262. நின்நிறைவே தாரகமாய் நின்றுசுகம் எய்தாமல்
என்நிறைவே பாவித்தேன் என்னே பராபரமே.

நின்நிறைவு—பரபோதம்; தாரகம்—மேலான இலட்சியம்; என்நிறைவு—ஜீவபோதம்.

மழைத்துளி ஒன்று வானத்தினின்று பூமியை நோக்கி வருகிறது. அப்படி வருகின்ற துளி கடலினுள் வீழ்ந்தால்

அது அகண்டாகார நிலை எய்துகிறது. அடுப்பில் காய்ந் திருக்கும் இரும்புச் சட்டி ஒன்றில் வீழ்ந்தால் அது அக் கணமே சுவறிப் போய்விடும்.

ஜீவாத்மன் ஒருவனுக்குப் பரம்பொருள் இச்சா சுதந் திரம் ஒன்றைக் கொடுத்திருக்கிறுன். ஜீவாத்மன் வேண்டு மானல் தன்னுடைய ஜீவபோதத்தை வளர்த்து வரலாம். அல்லது தன்னைப் பரமனுக்கு உரியவனுக்கிப் பரமனிடத் திருந்து வேண்டிய யாவையும் பெறலாம்.

ஜீவாத்மன் ஒருவன் தன்னுடைய சொந்த நிறைவை அல்லது ஜீவவியக்தியைக் காப்பாற்ற முயன்ருல் அது பிர விருத்தி என்னும் பெயர் பெறுகிறது. அதன் விளைவாக ஜீவாத்மன் பிறவிப்பெருங்கடலிலேயே உழன்றுகொண்டிருக் கிறுன். நல்ல விவேகமும் வைராக்கியமும் வந்துள்ள ஜீவாத்மன் தன்னைப் பரம்பொருளுக்கென்றே ஒப்படைக்க முயலுகிறுன். அத்தகைய முயற்சிக்கு நிவிருத்தி என்று பெயர். நிவிருத்தி மார்க்கத்தில் செல்லுகிற ஜீவாத்மன் மேலும் மேலும் ஆத்ம பரிபாகம் அடைகிறுன். உலக வாழ்க்கைக்குரிய நலனும் கேடும் வந்து சூழலாம். ஆயி னும் அவன் நலனில் நாட்டம் கொள்ளுவதுமில்லை; கேட்டைக்கண்டு மருளுவதுமில்லை. அவை இரண்டையும் பற்றற்ற நிலையிலிருந்துகொண்டு அவன் சமாளிக்கிறுன். அத்தகைய ஆத்மசாதகனுக்குப் பரபோதம் மேலோங்கு கிறது. ஜீவபோதம் படிப்படியாகத் தேய்வுறுகிறது. இத்தகைய நிவிருத்திமார்க்கத்தில் நிலைபெற்றிருப்பதற்கு மாருகப் பிரவிருத்தி மார்க்கத்தில் நான் ஏன் செல்லத் துணிந்தேன் என்று ஜீவாத்மன் தன்னைத்தானே நொந்து கொள்கிறுன் என்னும் கருத்து இக்கண்ணியில் அடங்கி யிருக்கிறது.

263. நின்னைச் சரண்புகுந்தால் நீகாக்கல் வேண்டும் [அல்லால்
என்னைப் புறம்விடுதல் என்னே பராபரமே.

சரண்புகுதல்-அடைக்கலம் புகுதல்; நீ காக்கல்-நீ காப்பாற்றுவது.

சிறுவன் ஒருவனுக்கு ஏதேனும் இடைஞ்சல் ஏற்பட்டால் அவன் உடனே தாயிடம் ஓடுகிறான். இடைஞ்சலினின்று தன்னைக் காப்பாற்ற வேண்டுமெனத் தாயிடம் அவன் முறையிடுகிறான். ஆத்மசாதகன் இதற்கு நிகராகத் தக்கதொரு காலத்தில் இறைவனிடம் சரணாகதி அடைகிறான். சரணாகதி அடைவது ஜீவாத்மனுடைய முடிவான முயற்சியாகிறது. பரமாத்மனுடைய பெருந்திட்டத்துக்குப் புறம்பாகத் தன்னிடத்து இச்சா சுதந்திரம் ஏதுமில்லை என்பதை அவன் உணருகிறான். சாதனங்கள் புரிந்து மனபரிபாகம் அடைந்திருக்கும் ஆத்மசாதகனுக்கே இவ்வுண்மை விளங்குகிறது. ஆதலால் அவன் தன்னுடைய இச்சா சுதந்திரத்தை இறைவனுடைய பெருந்திட்டத்துக்கு உட்படுத்துகிறான். அப்படி உட்படுத்தும் செயலே அடைக்கலம் எனவும், தஞ்சம் எனவும், சரணாகதி எனவும் பெயர் பெறுகிறது. அடைக்கலம் புகுந்துள்ள ஜீவாத்மன் மற்றவர்களைப் போலவே வாழ்க்கை முறைகளில் ஈடுபடுகிறான். ஆனால் அவன் ஆசைக்கு உட்பட்டு அங்ஙனம் செய்வதில்லை. இறைவனுடைய பெருந்திட்டத்தில் கருவியாகத் தன்னை ஒப்படைப்பதே அவனுடைய கொள்கையாகிறது. அங்ஙனம் தன்னை முற்றிலும் இறைவனிடம் ஒப்படைப்பவனுக்குக் குறையொன்றுமில்லை. தனக்கு நன்றே நிகழினும் தீதே நிகழினும் அவையாவும் இறைவனுடைய திருவுளத்துக்கு ஒத்தவை என்று அவன் கருதுகிறான். அப்பர் வாழ்வும் பிரஹ்லாதன்

வாழ்வும் இதற்குச் சான்றுகளாகின்றன. உன்னிடம் சரண் புகுந்துள்ள என்னைக் காப்பாற்றுதற்கு மாருகப் புறக்கணிப் பதற்குக் காரணம் யாதோ என்று கேட்பதாக இக்கண்ணி அமைந்திருக்கிறது. முற்றிலும் சரணகதி அடையாதவனு டைய மனப்பான்மை இத்தகையது என்பதை இக்கண்ணி யின் மூலம் நமக்கு விளக்கப்படுகிறது.

264. மாருத துன்பம்எல்லாம் வந்துஉரைத்தால்
நின்செவியில்
ஏருத வாறுஏது இயம்பாய் பராபரமே.

பிரபஞ்ச வாழ்க்கையைப் பற்றிய கோட்பாடு ஒன்று உளது. அது இன்பம் துன்பம் ஆகிய இரண்டும் கலந்தது. இன்பமே பிறகு துன்பமாக மாறுகிறது. மனிதன் இன் பத்தை நாடுகிருன். துன்பத்தை ஒருநாளும் நாடுவதில்லை. வருகிற துன்பத்தை அவன் ஒதுக்கிவைக்க முயலுகின்ருன். ஆயினும் அவன் அடைகிற ஏமாற்றத்துக்குக் காரணம் ஒன்று உண்டு. இன்பத்தை நாடாது இருக்க அவனுக்கு இயலாது. அவன் நாடுகிற இன்பம் பிறகு துன்பமாக மாறி யமையும் என்னும் கோட்பாடு அவனுக்கு விளங்குவதில்லை. எவ்வளவுக்கெவ்வளவு இவ்வுலக இன்பத்தைப் பெருக்க முயலுகிருனே அவ்வளவுக்கவ்வளவு துன்பத்துக்கும் ஆளா வது திண்ணம். பலப்பல பிறவிகள் எடுத்துத் துன்பத் துக்கு ஆளாகி இறுதியில் இவ்வரிய கோட்பாட்டை அனுப வத்தின் வாயிலாக அவன் அறிந்துகொள்கிருன். இவ்வுலக இன்பத்தை நாடுதற்கிடையில் துன்பம் வேண்டாமென்று தெய்வத்திடத்து எவ்வளவுதான் விண்ணப்பித்தாலும் இவன் அடைகிற துன்பத்தை மாற்றத் தெய்வத்துக்கே இயலாது. ஏனென்ருல் இன்பமும் துன்பமும் வினைப்பய ஞக மனிதனுக்கு வந்தமைகிறது. துன்பத்துக்கு முதல்

காரணமாயிருக்கிற இன்பத்தைத் துடைத்தல் வேண்டும். அவ்வுண்மையை அறிந்துகொள்ளும் பரியந்தம் மனிதன் அழுகையை நிறுத்த முடியாது. தெய்வத்தினிடத்து விண்ணப்பிப்பதின் வாயிலாக உண்மையை மனிதன் அறிந்து கொள்ள வல்லவனுகிருன். தெய்வத்தினிடத்து விண்ணப்பிப்பதின் விளைவு நல்ல விவேகத்தை விரைவில் பெறுவதாம். இதுவே இக்கண்ணியில் அடங்கியிருக்கும் கருத்தாம்.

265. விஞ்சுபுலப் பாடுஅனைத்தும் வீறுதுன்பம் செய்யவந்த
அஞ்சுபுல வேடருக்கும் ஆற்றேன் பராபரமே.

விஞ்சுப் புலப்பாடு அனைத்தும்-மேலான விவேகத்தையெல்லாம். வீறு துன்பம்-பெருந் துன்பமாக. அஞ்சுபுல வேடருக்கும் ஆற்றேன்-பஞ்சேந்திரியங்களாகிய குறும்புக்காரருக்கும் சகிக்கேன்.

ஞானேந்திரியங்கள் ஐந்தும் மனிதனுக்குத் தெளிந்த அறிவை நல்குதற்கு அமைந்திருக்கின்றன. ஐந்து இந்திரியங்களின் வாயிலாக சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றமென ஐந்து வகைப்பட்ட ஞானங்கள் மனிதனுக்கு வந்து வாய்க்கின்றன. ஒவ்வொரு இந்திரியமும் பண்பாட்டில் மேல்நிலைக்குப் போகின்ற உயிர்களுக்கு மேல்நிலை வந்தமைய உதவுகிறது. நாவால் சுவைப்பது நாவினைப் படைத்துள்ள உயிர்களனைத்துக்கும் பொதுவானது. அகப்படுகிற தீனியை மீன் அப்படியே எடுத்து விழுங்குகிறது. சுவைத்துப் பார்ப்பதில் அவ்வுயிர் ஆரம்பதசையில் இருக்கிறது. சுவைத்துப் பார்ப்பதில் உச்சநிலையை எட்டியவன் மனிதன். ஆறுசுவைகளோடு கூடிய உணவுவகைகளை இன்னும் எத்தனையெத்தனையோ படித்தரங்களில் இருக்கிற சுவைகளாக மாற்றிச் சமைக்க மனிதனுக்கு இயலுகிறது. உணவை நன்ருகச் சுவைக்கவல்ல ஒருவனுக்குச் சுவையானது சிறிது கெட்டுப்

போனாலும் அதற்கேற்றவாறு அவன் துன்பத்துக்கு ஆளாகிறான். எத்தனை எத்தனைவிதச் சுவை இன்பத்தை மனிதன் ரசிக்கிறானோ அத்தனை அத்தனை விதங்களில் (அவைகளின் தரம் கெட்டுப்போனால்) அவன் துன்பத்துக்கு ஆளாகிறான். கண்கொண்டு பார்த்து அறிவைப் பெருக்குவதும் இன்பத்தைப் பெருக்குவதும் மனிதனுக்குச் சாத்தியம். அதே கண் பார்வை இன்பம் என்னும் செய்தியைக் கொண்டுவருவது போன்று துன்பம் என்னும் செய்தியையும் கொண்டுவருகிறது. இனிய ஓசையை மனிதன் ரசிக்கிறான். அதே ஓசையை விலங்குகளும் ரசிக்கின்றன. பாடுகிற ராகம் ஒன்றில் பிழைவந்தால் அதைக் குறித்து விலங்கு வருந்துவதில்லை. ஆனால் இசைஞானம் படைத்துள்ள மானுடன் ஒருவனுக்கு அபஸ்வரத்தில் பாடுவது பெருந்துன்பத்தை விளைவிக்கிறது. பின்பு புகழ்ச்சியைக் கேட்டு மனிதன் இன்புறுவது போன்று மற்ற உயிர்கள் இன்புறுவதில்லை. இகழ்ச்சியைக் கேட்டு மனிதன் துன்புறுவதுபோன்று மற்ற உயிர்கள் துன்புறுவதில்லை. ஐம்பொறிகள் வாயிலாகச் சீரிய ஞானத்தைப் பெற மனிதனுக்கு இயலுகிறது. அந்த ஞானம் இன்பத்துக்கு ஏதுவானதாக இருக்கலாம். அல்லது துன்பத்துக்கு ஏதுவானதாகவும் இருக்கலாம். ஞானேந்திரியங்கள் ஐந்தையும் பண்பட்ட நிலைக்குக் கொண்டுவருகிற மனிதன் அந்த இந்திரியங்களின் வாயிலாக இன்பத்தைப் பெறுவது போன்று துன்பத்தையும் பெறுகிறான். இன்பம் எவ்வளவுக்கெவ்வளவு அதிகரிக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு துன்பமும் அதிகரிக்கிறது. இந்த நியதியினின்று விலகிக்கொள்ள மனிதனுக்கு இயலாது. ஐந்து இந்திரியங்கள் மனிதனுக்கு மித்துருக்களாக இருப்பது போன்று சத்துருக்களாகவும் இருக்கின்றன. நண்பர்கள் போன்று

இருந்து அவைகள் பகைவர்களாக மாறுகின்றன. ஆதலால் ஐந்து புலன்களும் ஐந்து வேடர்களுக்கு ஒப்பானவைகள். பொறிவாயில் ஐந்தையும் புறக்கணிக்குமளவு மனிதன் பரஞானத்துக்குத் தகுதியுடையவனாகிறான். ஐம்பொறிகள் வாயிலாக வாய்ப்பது இகலோகத்துக்குரிய ஞானம். இக லோகத்துக்குரிய ஞானம் இன்பத்தை நல்குவது போன்று துன்பத்தையும் நல்குகிறது. பரஞானம் அடைய விரும்புகிற ஆத்மசாதகன் ஐம்பொறிகளை ஐந்து வேடர்களாகக் கருதி அவைகளை வெல்ல வல்லவனாக வேண்டும். பொறிவாயில் ஐந்தையும் அடக்கியாள வல்லவனேபரஞானத்துக்குத்தகுதி யுடையவனாகிறான் என்பது இக்கண்ணியின் கோட்பாடு.

266. கன்னம் கரியநிறக் காமாதி ராக்ஷசப்பேய்க்கு
என்னை இலக்கு ஆகவைத்தது என்னே பராபரமே.

கன்னங்கரிய நிறம்-கறுப்பு நிறம்; காமாதி-காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் ஆகிய ஆறுவித குற்றங்கள்; இராக்ஷசப்பேய்-மனிதனைப் பாழ்படுத்தும் கேடுகள்; இலக்கு-குறி.

ஆறுவிதமான குறைபாடுகளுக்கு என்னை ஏன் ஆளாக்கி வைத்துள்ளாய் என்பது இக்கண்ணியின் கருத்து.

பிரபஞ்ச அமைப்பில் மூன்று குணங்கள் இருக்கின்றன. அவைகள் முறையே சத்துவம், ரஜஸ், தமஸ் எனப் பெயர் பெறுகின்றன. சத்துவத்தின் நிறம் வெண்மை. ரஜோகுணத்தின் நிறம் சிகப்பு. தமோகுணத்தின் நிறம் கறுப்பு. ஞான மயமாயிருப்பது சத்துவம்; செயல் மயமாயிருப்பது ரஜஸ்; அக்ஞான மயமாயிருப்பது தமஸ். அக்ஞானத்தை கார் இருள் எனக் கூறுவது முறை. குறைகள் யாவும் அக்ஞான இருளில் நிகழ்வனவாகின்றன. அக்குறைபாடுகளை

ஆறு வகைகளாகப் பிரிப்பது மரபு. தனக்குரியதல்லாத இன்பப் பொருள் ஒன்றை முறை வழுவித் தனக்குரியதாக்க முயல்வது காமம். ஆண் பெண்பாலுக்கிடையில் எழுகிற கவர்ச்சியும் காமம் எனப்படுகிறது. குரோதம் என்பது சினம். காமம் அகலுமிடத்தே குரோதமும் தானுக அடிபட்டுப் போகிறது. லோபம் அல்லது உலோபம் பாராட்டத் தகாத செட்டு எனப் பொருள்படுகிறது. வேண்டிய அளவு பொருள் படைத்திருக்கிற மாந்தன் ஒருவன் எதற்காகவும் அப்பொருளைச் செலவழிப்பதில்லை. பெரும் பற்றுதலோடு அப்பொருளைப் பற்றிக்கொண்டிருக்கிறுன். அன்னவன் உலோபி என இயம்பப்படுகிறுன். மோகம் என்பது திரிவுபட்ட ஞானம். நல்லது கெட்டதாகவும், கெட்டது நல்லதாகவும் மோகம் பிடித்தவனுக்கு விளங்குகிறது. மதம் என்பது செருக்கு அல்லது தற்பெருமை. மாச்சரியம் என்பது பொருமை. பொருமைக்காரன் பிறரிடமுள்ள பொருளையோ, பெருமையையோ பார்த்துச் சகிக்கமாட்டான். பொருமை பிடித்தவன் மேலும் மேலும் க்ஷீண தசையடைகிறுன். தான் அழிந்துபட்டுப் போவதற்குப் பொருமை ஒன்றே அவனைப் பிடித்துள்ள நோய் ஆகிறது. இந்த ஆறுவிதமான கேடுகளும் இராட்சசர்களுக்கு நிகரானவைகள். இராட்சசர்கள் பிறருக்குப் பொல்லாங்கு விளைவிப்பதிலேயே மகிழ்வடைந்திருக்கின்றனர். ஆதலால் இராட்சசர்களுக்கு நிகரானவைகள் இந்த ஆறுவித மன நோய்கள். இவைகளினின்று விடுபடுகிறவனே பரம்பொருளின் அருளுக்குப் பாத்திரமாகிறுன். இவைகளுக்கு அடிமையாகுபவன் இன்பம் துன்பம் என்னும் நோய்களுக்கு ஆளாகின்றுன்.

267. சித்திநெறி கேட்டல் ஜெகமயக்கம் ஜன்மம்அற
முக்திநெறி கேட்டல் முறைகாண் பராபரமே.

ஜெகமயக்கம்-உலகத்தவர்கள் கொண்டுள்ள ஆசை.

திரிவுபட்ட அறிவானது மயக்கம் எனப்படுகிறது. உலகெங்குமுள்ள ஜீவாத்மாக்கள் மயக்கத்தில் அழுந்திக் கிடக்கின்றனர். அதற்கிடையில் அவர்கள் தங்கள் நிஜ நிலையை நாடி அலைந்து கொண்டிருக்கின்றனர். சித்திநெறி கேட்டல் என்பது பிரபஞ்சத்திலே அசாதாரணமான வல்லமையைப்பெற முயலுதலாம். சித்திகளைப் பொதுவாக அஷ்ட சித்திகள் எனப் பாகுபடுத்துவது மரபு. உடலை வானத்தில் பறக்கும்படி இலகுவாகச் செய்தல், அது யாண்டும் அழிந்துபட்டுப் போகாதிருக்கும்படி காயசித்தி பண்ணுதல், உடல் கண்ணுக்குத் தெரியாதபடி சூட்சும நிலையை அடைதல் முதலியவைகள் சித்திகள் எனப்படுகின்றன. விவேகமின்மையால் உயிர்வகைகளுக்குச் சித்திகளில் நாட்டம் உண்டாகிறது. ஜீவாத்மன் தன்னைப் பிரகிருதியோடு இணைத்துக்கொண்டிருக்கிறான். அந்த இணக்கம் மயக்கத்தால் வந்தது. சரீரத்தின் துணைகொண்டு ஆத்ம சொரூபத்தை நிலைநாட்ட முயலுதல் மயக்கமாம். ஆத்மா அழியாதது. சரீரம் அழியும் பாங்குடையது. சரீரத்தில் இருந்து கொண்டே அழிந்துபட்டுப்போகாத நிலையை நாடுவது சித்திநெறி எனப்படுகிறது. கூடுமானால் ஒரு கல்பகாலத்துக்குக் காயசித்தி பெற்றுக் காயத்தோடு இருக்கலாம். பிரளயத்தில் பஞ்சபூதங்கள் ஒடுங்குகிறபொழுது காயம் நிலைத்திருக்க முடியாது. இவ்வுண்மையை அறிந்துகொள்ளாததினால் உலகத்தவர்கள் சித்தியைக் கண்டு மயங்குகின்றனர். ஓரிடத்தில் வைத்த பொருளை மற்றோர் இடத்தில் தோன்றும்படி அபிச்சார முறையில் ஏவலாம். அது மிக அல்பமான சித்தி. அத்தகைய சித்தி செய்பவனை மேலோன் எனப் பாராட்டுவது மயக்கத்தில் உழல்பவர்களுடைய போக்கு ஆகும். பிறகு சித்தி பண்ணுகிறவனுக்குத் தான் ஒரு சித்தபுருஷன்

என அகங்காரம் உருவெடுக்கிறது. ஆக, சித்திநெறியில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறவன் தனக்கும் கேடு சூழ்கிறுன்; உலகத்தவர்களுக்கும் மதிமயக்கத்தை வளர்க்கிறுன். ஓரிடத்தில் வைத்திருக்கும் திருநீறு அல்லது குங்குமம் மற்றோர் இடத்தில் வந்து விழும்படி செய்து உலகத்தவர்களை ஏமாற்று கிறவன் மழை இல்லாத காலத்து மழைவந்து கொட்டும்படி செய்கின்ற வல்லமை பெற்றவன் ஆகமாட்டான். ஆக சித்தி விளையாட்டு எல்லாப் பாங்கிலும் கேடு உடையது. அதில் நலன் ஒன்றும் வாய்க்காது. பிறவிப் பிணியை அது பெருக்கு கிறது. ஜென்மம் அற்றுப் போகும்படி செய்யச் சித்திக்கு இயலாது. ஜென்மத்தை முடிவுக்குக் கொண்டுவருவதும் பிரபஞ்சத்தினின்று விடுபடுகிற முக்திநெறி கேட்பதும் சான்றோருடைய சீரிய செயலாகும். முக்தி நெறியைக் கேட்கின்றவர்களே பிரபஞ்ச வாழ்க்கையின் மயக்கத்தினின்று விலகியவர்கள் ஆகின்றனர்.

இறைவா, பொருளற்ற சித்திநெறியில் நான் மயங்கிக் கிடக்கலாகாது. பிறவிப்பிணியை நீக்குகிற முக்தி நெறியிலேயே நாட்டம் உடையவனுக நான் இருக்கும்படி அனுக்ரஹம் பண்ணுவாயாக என்பது இக்கண்ணியின் கருத்து.

268. சிந்தை சிதையச் சிதையாத ஆனந்தம்
எந்தவகை யாலேவந்து எய்தும் பராபரமே.

சிந்தை—மனம்; சிதைத்தல்—துண்டித்துப் போதல்; எய்துதல்-அடைதல். சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். நிறைநிலா வானத்தில் ஒளிர்ந்துகொண்டிருக்கிறது. தரையில் தடாகம் (குளம்) வரைந்த படம் போன்று அசைவற்று இருக்கிறது. அப்பொழுது நிறைநிலாவின் பிம்பம் உள்ளபடி தடாகத்திலுள்ள தண்ணீரில் பிரதிபிம்பிக்கிறது. மற்றுக்

காற்றடித்துத் தடாகத்தில் கணக்கற்ற சிற்றலைகள் உண்டாகுமாயின் நிறைநிலாவின் பிம்பம் அச்சிற்றலைகளின்மீது உள்ளபடி பிரதிபிம்பிக்க மாட்டாது. எத்தனை எத்தனை சிற்றலைகளோ அத்தனை அத்தனை சிதறடைந்த நிலாத் துண்டுகளைத் தண்ணீரில் காணலாம். தடாகத்துக்கு நிகர் சிந்தை. காற்றுக்கு நிகர் ஆசை. ஆசை என்னும் காற்று சிந்தையில் மோதுவதால் அச்சிந்தையானது கணக்கற்ற விருத்திகளாகச் சிதைவடைகிறது. எண்ணரிய எண்ணங்களே விருத்திகள் எனப்படுகின்றன. ஒவ்வொரு எண்ணமும் ஒவ்வொருவித இன்ப துன்பமாகப் பரிணமிக்கிறது. சிந்தையின் சிதைவே அதற்குக் காரணமாகிறது. ஆசை ஒடுங்குதற்கேற்ப சிந்தையானது நிறைவு எய்துகிறது. ஆசையை அறவே ஒதுக்கித் தள்ளுங்கால் மனம் நிறை மனம் ஆகிறது. ஆசையைஒதுக்குதற்கேற்ப மனம் மாசற்றதாகிறது. மாசற்ற மனத்தில் அதற்கு அடிப்படையாயிருக்கும் ஆத்ம சொரூபம் உள்ளபடி ஒளிர்கிறது. ஆத்மாவுக்குரிய ஆனந்தம் நிறை மனத்தில் சிதறடைந்து போகாது நிறைநிலையில் உள்ளபடி மிளிர்கிறது. பேரானந்தம் அடைதற்கு வகையாது என்னும் கேள்வி இக்கண்ணியில் எழுகிறது. ஆசையை ஒதுக்குதல், மனத்தைநிர்மலமாக்குதல்,மனத்தை சிதறடைய வொட்டாது நிறைநிலையில் வைத்திருத்தல் ஆகிய உபாயங்களைக் கையாண்டால் ஜீவாத்மனுக்கு யாண்டும் சொந்தமாயுள்ள பரமானந்தம் தானகத் தென்படுவதாகும். இறைவா, நான் சிந்தையை அடக்கி அதை நிர்மலப்படுத்தி நிறை நிலையில் வைத்திருப்பேனுக. அப்பொழுது எனக்குச் சொந்தமாயுள்ள தெவிட்டாத ஆனந்தத்தை உன்னுடைய திருவருளால் அடையப்பெறுவேன் என்பது இக்கண்ணியின் கருத்தாம்.

269. கூர்த்தஅறி வால்அறியக் கூடாது எனக்குரவன்
தேர்த்தபடி தானே திரிந்தேன் பராபரமே.

கூர்த்தஅறிவு-பிரபஞ்சமயமான நுண்ணறிவு; குரவன்-சத்குரு; தேர்த்தபடி—தெளிவுபடுத்திய பிரகாரம்; திரிந்தேன்-முயற்சி பண்ணினேன்.

கற்கின்ற பல கலைகள் வாயிலாக மழுங்கிய அறிவை நுண்ணறிவாக மாற்றலாம். நுண்ணறிவிலே இரண்டு பாங்குகள் உண்டு. ஒன்று இறைவனைச் சார்ந்தது. மற்றொன்று பிரபஞ்சத்தைச் சார்ந்தது. பிரபஞ்சத்தைச் சார்ந்த நுண்ணறிவை ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சதேவர் ஓர் உபமானத்தைக் கொண்டு தெளிவுபடுத்துகிறார். கழுகு வானத்தில் உயரப் பறக்கிறது. நெடுந்தூரத்தில் இருப்பவைகளைப் பார்க்கும் திறமை அக்கழுகுக்கு உண்டு. ஆனால் உயரப் பறந்துகொண்டு அப்புள்ளினம் என்ன செய்கிறது? கீழே தரையில் எந்த இடத்தில் செத்தபிணம் கிடக்கிறது என்று தேடிப் பார்ப்பதற்கு அது தன் கண் பார்வையைப் பயன்படுத்துகிறது. உலக மக்களில் பலபேர் கழுகு போன்றவர்கள். கலைகள் பல கற்றுத் தங்களுடைய அறிவை நுண்ணறிவாகத் தீட்டுகின்றனர். அந்த நுண்ணறிவை இவ்வையகம் தருகின்ற நிலையற்ற இன்பத்தை அடைவதற்கென்றே அவர்கள் பயன்படுத்துகின்றனர். அத்தகைய தீட்டி எடுக்கப்பெற்ற அறிவைக்கொண்டு இறைவனிடத்திருந்து வருகிற பரமானந்தத்தைப் பெற முடியாது. பெரும் சிரமம் எடுத்துக்கொண்டு பல பிறவிகளில் உருவாக்கப்பட்ட கூர்த்த அறிவைத் துறத்தல் வேண்டும். குழந்தையின் பாங்கை மீண்டும் பெறவேண்டும். கள்ளங்கபடமற்ற மனப்பான்மையை நிலைநாட்டவேண்டும். சிந்தையை சம்ஹாரம்பண்ணுகிறவனுக்கே இது சாத்தியமாகிறது என்று சத்குரு புகட்டியருள்கின்

ரர். அவர் போதனைக்கேற்ப குழந்தையின் பாங்குக்குத் திரும்பிப் போதல் நல்ல ஆத்ம சாதனமாகும். கலைகளினின்று வந்துள்ள நுண்ணறிவைக் குழந்தையின் கபடமற்ற நல்லறிவாகத் தெளிவுபடுத்தவேண்டும். அதற்கு உற்ற உபாயம் யாது என்னும் கேள்வி எழுகிறது. தான் ஒரு கலைஞன்; தான் ஒரு அறிஞன் என்ற உபாதிகளை ஒதுக்கவேண்டும். கலைகள் பல கற்றிருப்பதற்கிடையில் ஒன்றும் கல்லாதவனுடைய காலி மனத்தை வருவித்துக்கொள்ள வேண்டும். சாஸ்திர ஞான விருத்தி அகன்றுபட்டுப் போகவேண்டும். வீட்டிலுள்ள பொருள்களைக் காலிப்படுத்துவதுபோன்று சிந்தையிலுள்ள எண்ணங்களை நீக்கவேண்டும். அந்தக்கரணத்தை நிர்விகார நிலைக்கு எடுத்துச் செல்லுங்கால் ஆனந்தம் தன்னிடத்தே இருப்பது வெளியாகிறது. இதுவே இக்கண்ணியின் கருத்து.

270. **பக்தர் அருந்தும் பரமசுகம் யான்அருந்த**
எத்தனைநாள் செல்லும் இயம்பாய் பராபரமே.

இயம்பாய்-சொல்லுவாயாக. உலக மக்கள் பூண்டுள்ள இயக்கம் இரண்டுவிதமாகப் பாகுபடுத்தப்படுகிறது. ஒன்று சிரேயஸ்; மற்றொன்று பிரேயஸ். சிரேயஸ் பேரின்பத்துக்கு ஏதுவானது; பிரேயஸ் சிற்றின்பத்தை நல்குவது. ஆசையை வெல்லுவதால் முந்தியது வாய்க்கிறது. ஆசைக்கு அடிமைப்படுவதால் பிந்தியது கிட்டுகிறது. ஐம்பொறிகளை வெல்லுவதால் சிரேயஸ் சித்திக்கிறது. ஐம்பொறிகளுக்கு அடிமைப்படுவதால் பிரேயஸ் அகப்படுகிறது. பக்தர்களும், யோகிகளும், ஞானிகளும் சிரேயஸ் மார்க்கத்தை மேவினர். உலகப் பற்றுடையவர்கள் ஐம்பொறிகளின் மூலமாகப் பெறும் உலக இன்பங்களில் உழல்வாராயினர். எவ்வளவுதான் துன்பத்துக்கு ஆளானாலும் அவர்கள் சிற்றின்பத்தை நீக்க

மாட்டார்கள். இறைவா, அவர்கள் நாடும் சிறுநெறியில் நான் செல்லலாகாது. பக்தர்களும் மற்ற பெருமக்களும் நாடுகிற பேரானந்த மார்க்கத்தையே நான் கடைப்பிடிக்க வேண்டும். அதற்கு நீ அருள்புரிவாயாக என்பது இக்கண்ணி யின் கருத்து.

271. தீரத்தி ஞல்துறவு சேராமல் இவ்வுலகில்
பாரத் தனம்பேசல் பண்போ பராபரமே.

தீரத்தினுல் - விவேகத்தின் விளைவால் வருகிற மன உறுதியினுல். பாரத்தனம்-வீருப்பு.

பிரவிருத்தி, நிவிருத்தி ஆகிய இரண்டு மார்க்கங்கள் உலகில் உள. உலக வாழ்வையும் உலகம் நல்குகின்ற இன்பங்களையும் நாடுவது பிரவிருத்தி. உலகம் தருகிற இன்பங்களைத் துறந்துவிட்டுப் பரநாட்டம் பூணுவது நிவிருத்தி. நிவிருத்தி நாட்டம் எளிதில் வாய்ப்பதன்று. பல ஜன்மங்களில் ஜீவாத்மன் பிரபஞ்ச வாழ்க்கையில் உழன்று அதன் பாங்கை அவன் உள்ளபடி உணருகிறுன். அத்தகைய நல்லுணர்ச்சி ஓங்குதற்கேற்ப உலகப்பற்றுப் பின்னணிக்குப் போகிறது. அதன் பிறகு அவன் எடுக்கின்ற ஜென்மங்களில் பிரவிருத்தி நாட்டம் தலையெடுப்பதில்லை. நிவிருத்தியிலேயே மேலும் மேலும் அவன் நிலைபெற்று வரு கிறுன். சரியான விவேகத்தினின்று வைராக்கியம் அல்லது பற்றற்றநிலை தானுக வந்து வாய்க்கிறது. அதற்குச் சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். குழந்தை ஒன்று எரிகிற தீபத்தின் ஒளிப்பிழம்பைப் பற்றிப்பிடிக்க விரும்புகிறது. ஆனுல் தாய் அதற்கு இடந்தராது தடுத்து வைக்கிறுள். ஒருவேளையில் தாயின் தடையின்றி விலகியிருந்த குழந்தை ஒளிப்பிழம்பைப் பிடித்தது. விரல் காந்திப்போனதினுல்

அது 'கோ' வென்று கதறியழுதது. அதன் பிறகு தாயின் பாதுகாப்பு குழந்தைக்குத் தேவையில்லை. தீக்குக் கிட்டப் போகாமல் அது எட்டவே இருக்கிறது. ஆத்ம சாதகனுக்கு இந்திரிய சுகம் அத்தகையது. அவன் அதைக் கனவிலும் நாடுவதில்லை. உலகப்பற்றுடையவனே வெறும் துறவினால் ஆவதென்ன என்று சொல்லுகிறான். உலக வாழ்வில் இனிது ஈடுபட்டிருந்தால் இன்னின்ன அரிய பெரிய காரியங்களை யெல்லாம் சாதிக்கலாம், இன்னின்ன பாங்குகளில் உலகுக்கு நலன் செய்யலாம். இப்படியெல்லாம் தற்பெருமை பேசி வருகிறான். இறைவா, நான் தெளிந்த விவேகம் படைத்தவனா யிருந்து துறவறத்தில் தீவிரமாகப் பிரவேசிப்பேனாக. உலகப் பற்றில் உழன்றுகொண்டு அதில் இன்னின்ன மேன்மைகள் இருக்கின்றனவென்று வெறும் ஆகாயக்கோட்டை கட்டுகிற மனப்பான்மை எனக்கு வரலாகாது என்பது இக்கண்ணி யின் கருத்து.

272. இந்த வெளியினைஉண்டு ஏப்பம்இடப் பேறிவாத்
தந்தவெளிக் கேவெளியாய்ச் சார்ந்தேன் பராபரமே.

வெளி என்பது ஆகாசம். ஐம்பூதங்களுள் ஆகாசம் முதலானது. அதனின்று காற்று, நெருப்பு, நீர், நிலம், முதலிய ஸ்தூல பூதங்கள் உருவெடுக்கின்றன. ஆகாசத்தை ஆராய்ந்து பார்த்தால் பரநாட்டம் பூணுதற்கு அது பேருதவி பண்ணுகிறது. நீக்கமற எங்கும் வியாபித்திருப்பது ஆகாசம். அது அகண்டாகாரத்தில் விரிந்தோடுகிறது. அதற்கு எல்லை கட்ட யாருக்குமே இயலாது. ஆகாசத்தை எவ்விடத்திலிருந் தாவது காலிபண்ண யாருக்கும் இயலாது. அதற்கு உதார ணம் ஒன்று எடுத்துக் கொள்வோம். மட்பாண்டத்துள் அடைப்பட்டு இருப்பதுபோல் தென்படுகிற ஆகாசத்தைக் கட ஆகாசம் என்கிறோம். நீக்கமற எங்கும் நிறைந்திருக்

கின்ற ஆகாசத்தை மஹா ஆகாசம் என்கின்ரேம். கட ஆகாசம் மஹா ஆகாசத்துக்குப் புறம்பானதா? மஹா ஆகா சத்தைப் பிளவுபடுத்த கடம் அல்லது மட்பாண்டத்துக்குச் சாத்தியமா? எங்கும் நிறைந்துள்ள ஒரே ஆகாசத்தைப் பிளவுபட்டதாக நாம் கற்பனை பண்ணுகிரேம். அத்தகைய மஹா ஆகாசம் பூதங்களுள் ஒன்று ஆதலால் அதை ஜட ஆகாசம் என்கிரேம். ஜட ஆகாசமோ, சித் ஆகாசத்தில் இருக்குமிடம் தெரியாது ஒடுங்குகிறது. சித் ஆகாசம் என்பது எல்லை மருவாத, எல்லையில் அடங்காத பேரறிவுப் பெருவெளி. அண்டகோடிகள் அனைத்துக்கும் அதுவே பிறப்பிடம், அதுவே உறைவிடம், அதுவே ஒடுங்குமிடம். இவ்வுண்மையைக் கிரஹிக்க வல்லவன் தீவிர அதிகாரியாகிருன். சொப்பனத்தில் காண்கின்ற உலகனைத்தையும் உலக மனிதனொருவன் ஜாக்கிரதாவஸ்தையில் உண்டு ஏப்பமிடுகிருன். அதாவது ஒதுக்கித் தள்ளுகிருன். அதே விதத்தில் ஞானேதயம் வாய்க்கப்பெற்றுள்ள தீவிர அதிகாரி ஒருவன் ஜாக்கிராவஸ்தையில் காண்கின்ற உலகையும் வெறும் மனேகற்பிதமென்று உண்டு ஏப்பமிடுகிருன். நிஜசொருபத்தில் நிறைஞானி பகிரங்கமாக நிலைத்திருப்பது போன்று நானும் வெட்டவெளியாய் அப்பெருநிலையைச் சார்ந்திருப்பேனுக என்பது இக்கண்ணியின் கருத்து.

273. உணர்த்தும்உனை நாடாது உணர்ந்தவையே நாடி
இணக்குறும்என் ஏழைமைதான் என்னே
பராபரமே.

இணங்கு உறுதல்—இசைவுகொள்ளுதல். ஏழைமை—மடமை. இக்கண்ணியைச் சரியாக அறிந்துகொள்ளுவதற்குச் சான்ருென்று எடுத்துக்கொள்வோம். பிறந்த குழந்தையொன்று அறிவோடு கூடியதாகவும் ஐம்பொறிகளையுடைய

தாகவும் வளர்ந்து வருகிறது. அப்படி வளர்ந்து வருகின்ற குழந்தை கண்கொண்டு பார்த்துத் தன் தாயை முதலில் அடையாளம் தெரிந்துகொள்ளவேண்டும். தாய் காட்டித் தருகிற தந்தையைப் பின்பு அறிந்துகொள்ளல்வேண்டும். அப்படியல்லாது அக்குழந்தையானது உலகப்பொருள்களைப் பார்ப்பதிலும் அப்பொருள்களை உணருதலிலும் ஈடுபடு மாகில் அது வீணில் பிறந்து வளர்ந்து வருவதாகிறது. தாய் தந்தையரை உணர்வதுதான் அதன் முதல் கடமை. அந்த உணர்வினின்று ஆயுட்காலம் முழுதிலும் அது பிசகலாகாது. அது போன்று மக்களாகிய நாம் ஜீவாத்மாக்களாகப் பிறந் திருக்கிறோம். சிற்றுயிர்கள்போன்று நம்முடைய அறிவை யும், ஐம்பொறிகளையும் பிரபஞ்ச உணர்விலேயே செலுத்தி வருவோமாகில் மானுட ஜென்மத்தை நாம் சரியாகப் பயன் படுத்தியவர்கள் ஆகமாட்டோம். நாம் மானுடராய்ப் பிறந் திருப்பது நமக்குத் தாய் தந்தையராய் இருக்கும் பரமனை நாடுதல் பொருட்டேயாம். ஐம்பொறிகளைக்கொண்டு உலக நாட்டம் கொள்ளலாம். அவைகளைக்கொண்டு இறைநாட்டம் கொள்ளலாம். இறை நாட்டம் கொள்ளுதலே மானுட ஜென்மத்தின் நோக்கமாம். இவ் ஐம்பொறிகளுக்கும் ஒளி தருவது உள்ளிருக்கும் அறிவு. அந்த அறிவை ஐம்பொறி களின் மூலமாகப் பிரபஞ்சப்பொருள்களில் செலுத்துவது உலகநாட்டம். அறிவை ஐம்பொறிகளினின்று மீட்டெடுத்து உள்முகமாகத் திருப்பி நம் அறிவுக்கு அறிவாய் இருக்கும் வாலறிவனிடத்துச் செலுத்துவது யோக நிஷ்டை. இறைவா, நீ கொடுத்துள்ள அறிவை உன் உணர்விலேயே செலுத்தி உன்மயமாக இருந்து பழகுவேனாக. அதற்கு மாறாக உலக நாட்டத்தில் செலுத்தி நான் கீழ்மையுறுவது பொருந்தாது என்பது இக்கண்ணியின் கருத்து.

274. உண்டுபோல் இன்றும் உலகைத் திரம்எனஉள்
கொண்டுநான் பெற்றபலன் கூறாய் பராபரமே.

இன்றும்—இல்லாததாகிய இவ்வுலகமானது இருப்பது போல் காட்சி கொடுக்கிறது. இதைச் சரியாக ஆராய்ந்து பார்த்தால் இது மறைந்துபட்டுப் போகிறது. இத்தகைய இல்லாத உலகை இருக்கிறதென்று இதைக் கட்டிப்பிடித்து நான் அடைந்துள்ள பலன்தான் யாது? இறைவா, இத்தகைய உலகின் பாங்கை எனக்கு எடுத்துரைப்பாயாக என்பது பொருளாகும்.

இப்பிரபஞ்சம் சுஷுப்தி அவஸ்தையில் இல்லை. ஜாக்ரதா அவஸ்தையில் இது நிலைத்திருப்பதாக உணருகிறோம். இதே பிரபஞ்சம் சமாதியில் மறைந்துபட்டுப் போகிறது. சமாதியினின்று கீழ்நிலைக்கு இறங்கி வருகின்ற ஞானிக்கு இப்பிரபஞ்சம் கானல் நீருக்கு ஒப்பாகின்றது. ஆயினும் அந்த ஞானியும் அக்ஞானத்தில் இருக்கின்ற ஜீவர்களும் இப்பிரபஞ்சத்தில் பிரயோஜனம் ஒன்றைக் காண்கின்றனர். ஆத்மபரிபாகம் அடைவதற்கு இப்பிரபஞ்சம் பயன்படுகிறது. நெறிவழுவிப் போகின்றவனுக்கு இப்பிரபஞ்சம் மேலும் மேலும் துன்பத்தை நல்குகின்றது. நன்னெறி கடைப்பிடிப்பவனுக்கு ஆத்மபரிபாகம் அடைவதற்கு இப்பிரபஞ்சம் பயிற்சி சாலையாக அமைந்திருக்கிறது. ஞானோதயம் அமையும் வரையில் மனிதனுக்கு அடிமேல் அடி கொடுத்து அவனைப் பண்படுத்துகிற செயல் பிரபஞ்சத்தில் நிகழ்ந்து வருவதால் அதை நிஷ்பிரயோஜனம் என்று ஒதுக்கி வைக்கலாகாது. சமாதி நிலையினின்று வியாவகார அவஸ்தைக்கு வருகிற ஞானிகளும் பிரபஞ்ச வாழ்வை அற நெறியில் செப்பனிடுவதற்கான வழியை அக்ஞானத்திலிருக்கும் ஜீவாத்மாக்களுக்குப் புகட்டுகின்றார்கள். அப்படிப்

புகட்டுதற்கு இப்பிரபஞ்சம் பயன்படுகிறது. ஆதலால் அதை வெறும் தோற்றமென ஒதுக்கித்தள்ள முயல்வது பொருளற்ற முயற்சியாம். முற்றிலும் பண்பாடடைந்து பரத்தில் ஒன்றுபட்டவர்களுக்கே பிரபஞ்சத்தின் காட்சியில்லை. யாருக்கு அது காட்சியிலிருக்கிறதோ அவர்களுக்கு அது பயிற்சிக்கூடமாக அமைந்திருக்கிறது என்னும் உண்மையைப் புறக்கணிக்கலாகாது. நோயாளிக்கு மருந்து தேவை. நோயைக் களைந்தவனுக்கு அதில் பயனில்லை. பரத்தில் ஒன்றுபட்டவனுக்குப் பிரபஞ்சக் காட்சி இல்லை. அதன் காட்சியைக் காண்கின்ற ஆத்ம சாதகர்களும் ஆச்சாரியர்களும் இப்பிரபஞ்சத்தைப் பரமனுடைய லீலையெனப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றனர். மாணுக்கன் ஒருவனுக்கு ஆயுள்கால முழுவதிலும் பள்ளிக்கூடம் பயன்படுவதன்று. கல்வி பயிலுகின்றபொழுது அது பயன்படுகிறது. அங்ஙனம் இப்பிரபஞ்சமாகத் தோன்றிக்கொண்டிருக்கின்ற பரமன் இத்தோற்றத்தை முகாமையாக வைத்துக்கொண்டு ஜீவர்களைப் பண்படுத்துகிருன். இவ்வுண்மையைச் சாதகர்களும், சித்த புருஷர்களும் மறந்துவிடலாகாது. பரஞானம் அடையப்பெற்றவர்களுக்குப் பிரபஞ்சத்தில் பலன் ஒன்றுமில்லை என்பது இக்கண்ணியின் உட்கருத்தாம்.

275. உள்ளபடி யாதும்என உற்றுஉணர்ந்தேன்
அக்கணமே
கள்ளமனம் போனவழி காணேன் பராபரமே.

நாம் படைத்துள்ள மனம் ஜாக்கிரதா அவஸ்தையில் வியவஹாரம் பண்ணுகிறது. அப்பொழுது புறத்திலே பிரபஞ்சம் காலதேச நிமித்தமாகக் காட்சி கொடுக்கிறது. சொப்பனவஸ்தையிலே மனிதன் கனவு கண்டுகொண்டிருக்கிருன். அப்படி கனவு காண்கின்றபொழுது புறவுலகுக்கு நிகராக

மனதுக்குள்ளேயே அவன் ஓர் உலகைத் தனக்குத்தானே உண்டுபண்ணிக்கொள்கிறான். புறவுலகம் கனவு காண்பவனுக்கு நீங்கலாக ஏனையவர்களுக்குப் பயன்படுகிறது. கனவில் அனுபவிக்கிற அகவுலகம் கனவு காண்பவனுக்குமட்டும் பயன்படுகிறது. கனவில் அவன் காண்கின்ற உயிர்வகைகளுக்கு நிலைபேறு கிடையாது. கனவு காண்பவனுடைய மன விகாரத்துக்குப் புறம்பாக ஜீவர்களும், ஜகத்தும் புறத்தில் இல்லை. ஆனால் அகத்திலிருக்கும் ஜகத்தும், ஜீவனும் காலதேச நிமித்தத்தில் கட்டுண்டவர்களாகக் காட்சி கொடுக்கின்றனர். இதினின்று உண்மை ஒன்று வெளியாகிறது. எங்கு மன விகாரம் இருக்கிறதோ அங்குக் கால தேச நிமித்தம் உண்டு. ஜாக்ரதமும், சொப்பனமும் அதற்குச் சான்றாகின்றன. சுஷுப்தியில் மனம் ஒடுங்குகிறது. அதே வேளையில் அந்த மனம் உண்டுபண்ணுகின்ற கால தேச நிமித்தமும் ஒடுங்கிப் போகின்றன. எங்கு மனம் இருக்கிறதோ அங்கு அம் மனம் சிருஷ்டி பண்ணுகின்ற கால, தேச, நிமித்தம் உண்டு. எங்கு மனம் இல்லையோ, அங்கு கால தேச நிமித்தமில்லை. இனி, இப்பிரபஞ்சமே கால தேச நிமித்தம் என்னும் கோட்பாட்டில் அடங்கியதாம். மனிதன் ஜாக்கிரதம், சொப்பனம், சுஷுப்தி ஆகிய மூன்று அவஸ்தைகளில் மாறிமாறி இருந்து வருகிறான். மாறுபடும் தன்மை இவைகளுக்கு இருப்பதால் இந்த அவஸ்தாத்ரயம் நித்தியமாகமாட்டா. மூன்று அவஸ்தைகளையும் அநித்தியமென ஒதுக்கித்தள்ளுவது ஆத்மசாதனம். மூன்று அவஸ்தைகளுக்குப் பொதுவாக ஏதேனும் உளதா என்னும் கேள்வி அடுத்தபடியாக வருகிறது. மூன்று அவஸ்தைகளுக்கும் பொதுவாக விகாரம் ஏதும் அடையாது துரியம் என்னும் பொருள் ஒன்று உளது. இதற்குச் சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். சினிமாப்

படங்கள் மாறி மாறி அமைகின்றன. ஆனல் திரையானது யாண்டும் இருந்தபடி இருக்கிறது. படங்களை விளக்கிக் காட்டுதற்கு இடையில் திரை தன் மயமாய் இருக்கிறது. அங்ஙனம் மூன்று அவஸ்தைகளுக்கும் இது ஆதாரமாய் இருக்கிறது. இதற்குப் போக்கு வரவு இல்லை. உள்ளது துரியமே. சமயவாதிகள் இதைத் துரியம் என்றும் துரியாதீதம் என்றும் இரண்டாகப் பாகுபடுத்துகின்றனர். ஆனல் சுருதி அங்ஙனம் செய்வதில்லை. துரியமே மனிதனது நிஜ சொரூபம். துரியமே ஆத்மா. துரியமே பிரம்மம். துரியம் தான் உள்ளது. அது மனிதனுடைய நிஜசொரூபம், அனுபூதியில் ஆத்மசாதகன் தன்னுடைய நிஜசொரூபத்தை அறிகிறபொழுது மனம் மாயமாக மறைந்துபோகிறது. அந்த மனம் கற்பனை பண்ணுகிற கால, தேச, நிமித்தமும் அடிபட்டுப் போகின்றன. அந்நிலையில் பிரபஞ்சக் காட்சியுமில்லை, மனமும் இல்லை, அவஸ்தாத்திரயமும் இல்லை, கால தேச நிமித்தமுமில்லை. மெய்ப்பொருளாகிய பிரக்ஞானமே யாண்டும் உளது என்பது இக்கண்ணியின் கருத்து.

276. சித்தம் மவுனம் செயல்வாக்கு எலாம்மவுனம்
சுத்த மவுனம்என்பால் தோன்றின் பராபரமே.

சுத்தமௌனம் என்பது ஆத்ம சொரூபம். ஆத்மாவின் கண் சலனம் ஏதும் இல்லை. எது சலிக்கின்றதோ அது ஓசையை உண்டுபண்ணுகிறது. ஆத்மாவினிடத்துச் சலனம் ஏதுமில்லை. ஆதலால் அதனிடத்திருந்து ஓசையைக் கிளப்புதற்கு இடமில்லை. அது அகண்டாகாரத்தில் தன்னில் தானுயிருக்கிறது. அததகைய ஆன்மீகப் பெருநிலை சாதகன் ஒருவனுக்கு வாய்க்குங்கால் அவனுடைய சித்தம் அல்லது மனம் அடங்கப்பெறுகிறது. அடங்கிய மனத்தினின்று ஓசை ஏதும் உண்டாவதில்லை. ஆதலால் மனம் மௌன நிலையை

எட்டுகிறது. செயல்கள் யாவும் சரீரத்துக்கு உரியனவாகின்றன. மனமொடுங்கியவிடத்துச் சரீரம் செயலற்றதாகிறது. சவ ஆசனத்தில் இருப்பதற்கு அது நிகராகிறது. செயலற்ற சரீரம் மௌனம் சாதிப்பதற்கு ஒப்பானதாகிறது. மனத்தின் வேகம் இருக்கின்றபொழுதே வாக்குக்கு வலிவு வருகிறது. மனமற்ற நிலையில் பேச்சுக்கு இடமில்லை. வாக்குத் தானாக அடங்குகிறது. ஆக ஆத்மசொரூபத்தில் நிலைபெற்றிருக்கிற சாதகன் ஒருவனுடைய திரிகரணங்களாகிய மனம், வாக்கு, காயம் ஆகியவைகள் ஓய்வடைந்திருக்கின்றன. ஆதலால் அது நல்ல மௌனமாகிறது. சாதகன் ஒருவன் ஆத்மசொரூபத்தில் நன்கு திளைத்திருப்பானாகில் அதேவேளையில் அவன் மௌனத்திலும் நன்கு நிலைபெற்றவன் ஆகின்றான் என்பது இக்கண்ணியின் கருத்து.

277. எண்ணில்பல கோடிஉயிர் எத்தனையோ அத்தனைக்கும்
கண்ணில் கலந்தஅருள் கண்ணே பராபரமே.

ஜீவகோடிகள் அனந்தம். அவைகள் எண்ணிக்கையில் அடங்கமாட்டா. ஜங்கமங்களாக அமைந்துள்ள அத்தனை கோடி ஜீவாத்மாக்களும் ஊனக்கண் படைத்தவைகளாக இலங்குகின்றன. கணக்கற்ற கண்களில் சிறப்பு ஒன்றைக் காணலாம். காணும் திறமை ஆத்மாவுக்குள்ளது. ஆதலால் தான் பரமாத்மாவாகிய கிருஷ்ணன் கண்ணன் எனப் பெயர் பெறுகிறான். பின்பு, கடவுளும் அம்பிகையும் கணபதியும் முக்கண்ணர்களாகின்றனர். அவர்களுக்கு வாய்த்துள்ள நெற்றிக்கண்கள் ஞானக் கண்ணின் புறச்சின்னங்களாம். ஞானக் கண்ணே அருட்கண் எனவும் இயம்பப்பெறுகிறது. உள்ளத்தின் உள்ளே இருக்கும் அருட் கண்ணுக்குப் புறச்சின்னமாக அமைந்திருப்பவை முகக்கண்களாம். எண்ணிக்

கையில் அடங்காத ஜீவகோடிகளின் முகக்கண்களை உற்று நோக்கிப்பார்த்தால் அவைகள் படைத்துள்ள அகக்கண் ஒருவாறு புலனாகும். ஞானபரிபாகம் அடைந்து வரவர அதற்கேற்ப முகக்கண்ணின் பொலிவும் மேலோங்குகிறது. முகக்கண் படைத்திருக்கிற பொலிவு ஆத்மப் பிரகாசத்தின் புறத்தோற்றமாம். உள்ளத்தினுள்ளே கண்ணன் மயமாக ஜீவாத்மா இலங்குவதை முகக்கண்ணே ஒருவாறு விளக்கு கிறது என்பது இக்கண்ணியின் கருத்தாம்.

278. எனக்குஇனியார் உன்போலும் இல்லையென்றால் யானும்
உனக்குஇனியான் ஆகா உளவுஏன் பராபரமே.

உளவு-இரகசியம். ஜீவாத்மாக்கள் ஜன்மாந்திரங்களில் கணக்கற்ற பேர்களுக்கு இனியவர்களாக இருந்து மடிந்திருக் கிறார்கள். ஒரு ஜன்மத்தில் இனியவர்களாக இருக்கிறவர்கள் அடுத்த ஜன்மத்துக்கு வேற்றார்களாகக் காட்சியில் இல்லாது வேறு எங்கேயோ பிறப்பு எடுக்கப்போகின்றனர். ஆகையி னால் உலகத்தவர்களுக்கிடையில் இனியவர்களாக இருப்ப வர்கள் சந்தைக்கடை உறவினர்களுக்கு ஒப்பாகின்றனர். உலகில் அவரவர் வந்த காரியத்தை முடித்துக்கொள்ளுதற் கிடையில் தாற்காலிகமாக யாராருடனே உறவு கொண்டாடு கிறார்கள். அத்தகைய உறவு முற்றிலும் நிலையற்றது. ஆனால் எத்தனைகோடி பிறவிகள் எடுத்தாலும் அத்தனைகோடிப் பிறவிகளில் நமக்கு இனியனாக இறைவன் உள்ளத்தினுள்ளே குடிகொண்டிருக்கிறான். அவனுடைய உறவை யாருமே புறக்கணிக்க முடியாது. ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் இடையிலுள்ள இணக்கம் எக்காரணத்தை முன்னிட்டும் எக்காலத்திலும் மறைந்துபட்டுப் போவதில்லை. அப்படி யிருந்தும் ஜீவாத்மன் ஒருவன் பரமாத்மாவோடு பிரியாத

இணக்கம் கொள்ளாது போய்விடுவானுகில் அது விந்தைகளுள் பெரு விந்தையாம். அதைப்பற்றிய ரகசியத்தை அந்த ஜீவாத்மனே அறிந்துகொள்ளாது இருக்கிறுன். அது அவனைப்பற்றிய பரிதாபகரமான நிலையாகும். ஆகையினுல் நல்ல ஆத்மசாதகன் ஒருவன் செய்யக்கிடக்கும் கடமை ஒன்று உள்ளது. இறைவா, வேறு கதியின்றி நான் உனக்கே சொந்தமாய் இருப்பது உண்மை. ஆயினும், இதை நான் அங்கீகரியாது இருக்கிறேன். என்னுடைய மடமையை நீ மாற்றியருள்வாயாக. நான் உனக்கே ஆட்படவேண்டும். உனக்கே நான் பணிவிடை செய்யவேண்டும். உன்னை நான் மறவாது இருக்கவேண்டும். இத்தகைய நல்லொழுக்கத்தை எனக்குத் தந்தருள்வாயாக என்று பிரார்த்தனை பண்ண வேண்டும் என்னும் கருத்து இக்கண்ணியில் அடங்கியிருக்கிறது.

279. அண்டபிண்டம் காணேன் அகமும் புறமும்ஒன்றுக்
கண்டஎன்னை நீகலந்த காலம் பராபரமே.

சில ஜீவாத்மாக்கள் பல பிரம்மாக்களுடைய கணக்கிலடங்காத காலங்களில் படிப்படியாகத் தங்களைப் பக்குவப்படுத்திக்கொண்டு வருகிறுர்கள். அப்படிப் பக்குவப்படுத்திக் கொண்டிருக்கின்றபொழுது அந்தந்தப் பிரம்மாக்களுடைய காலங்களில் தோன்றுகின்ற அண்டங்களுக்குப் புறம்பான பிண்டங்களாக அவர்கள் பரிணமித்து வருகின்றுர்கள். பரிபாகம் ஆய்க்கொண்டு வருகிற காலங்களிலெல்லாம் அவர்களுக்கு அகம்புறம் என்னும் வேற்றுமையும் நிலைபெற்றிருக்கிறது. முன்னேற்றம் அடைவதற்கு அந்த வேற்றுமை முற்றிலும் அவசியமாகிறது. புறத்தில் இருப்பவைகள் பாராட்டத் தக்கவைகளாகக் காட்சி கொடுக்கின்றபொழுது ஜீவாத்மாக்கள் தங்களைத் திருத்தியமைக்கிறுர்கள். எனவே அவர்களு

டைய முன்னேற்றத்துக்குப் பெரிய தூண்டுதல் சர்வகாலமும் புறத்தில் வந்து கொண்டேயிருக்கிறது. இதற்கோர் உபமானம் எடுத்துக்கொள்ளலாம். கடலை நோக்கிப் பாய்ந்து கொண்டிருக்கிற நதிக்கு வெவ்வேறு இடங்கள் வெவ்வேறு சூழ்நிலைகளாக வாய்க்கின்றன. சூழ்நிலையை முன்னிட்டு ஓர் இடத்தில் நதியானது பேர் அருவியாக வடிவெடுக்கிறது. மற்றோர் இடத்தில் சூழ்நிலையை முன்னிட்டு மலை இடுக்கைப் பிளந்துகொண்டு பாய்கிறது. இன்னோரிடத்தில் அது சுழன்று வருகிறது. மற்றுமோர் இடத்தில் தேங்கி நிற்பது போல் அது தென்படுகிறது. இத்தனை விதமான மாறுபாடுகளுக்கிடையில் கடலை நோக்கிப் பாயும் பிரயாணம் நின்று விடுவதில்லை. அங்ஙனம் ஜீவாத்மன் பிரபஞ்ச வாழ்க்கையில் கட்டுண்டு கிடக்கிற காலமெல்லாம் அண்டம் வேறு பிண்டம் வேறு, அகம் வேறு புறம் வேறு என்னும் வேற்றுமை உணர்ச்சி படைத்தவனாய் இருக்கிறான். கடலை அடைகின்ற நதி கடலோடு ஒன்றுபடுகிறது. அதன் ஓட்டம் முற்றுப் பெறுகிறது. நதி என்னும் நாமத்தை இழக்கிறது. யாண்டும் நிலைபேறு படைத்துள்ள கடலாக நதி தன் தனி வியக்தியைக் கலைத்து விடுகிறது. அங்ஙனம் ஜீவாத்மன் பரமாத்மனோடு யோகம் பூணுகிற காலத்தில் அவன் தனது ஜீவ வியக்தியைக் கலைக்கிறான். அவனுக்கு அண்டம் பிண்டம் என்னும் பாகுபாடு இல்லை. அகம்புறம் என்னும் வேற்றுமை இல்லை. அகண்ட சத்-சித்-ஆனந்தம் அவனுக்குச் சொந்தமாகிறது. அத்தகைய பெருநிலையை வீடுபேறாகக் கருதி அதைத் தீவிரமாக நாடுதல் வேண்டும். நதி ஓயாது கடலை நோக்கிப் போய்க்கொண்டே இருப்பதுபோன்று ஜீவாத்மன் பரமனை நோக்கிப் போய்க்கொண்டே இருக்கவேண்டும். அச்செயல் அதிதீவிரமாக நிகழவேண்டும். அபேத நாட்டமே ஆத்ம

சாதனமாகிறது. அபேத நாட்டமே இவ்வுலகோடு ஒட்டி உறவாட உதவுகிறது. துன்பங்கள் யாவையும் துடைப்ப தற்கும் அபேத நாட்டமே உதவுகிறது. ஆதலால் அபேதத் தில் இரண்டறக் கலத்தல் மேலான சாதனம் என்னும் கருத்து இக்கண்ணியில் அடங்கியிருக்கிறது.

280. எத்தனையோ கோடி எடுத்துஎடுத்துச் சொன்னாலும்
சித்தம் இரங்கிலேஎன் செய்வேன் பராபரமே.

ஜீவாத்மன் ஒருவனுக்கு என்றைக்கு ஜீவவியக்தி உரு வெடுக்கிறதோ அன்றைக்கே அவன் பிரார்த்தனை மயமாக மாறி அமைகின்றான். அவனுடைய நெடும் பயணத்தில் ஆங்காங்கு அவன் பண்ணிய பிரார்த்தனையைப் படம் பிடித் துப் பார்ப்பது அவசியம். பறவையின் குஞ்சாக ஒருகாலத் தில் அவன் இருந்தான். இரையை நாடித் தாய்ப்பறவையிடம் குஞ்சானது பரிந்து கத்தி உணவு கேட்கிறது. அப்படி அது உணவை வேண்டுவது அது தன்னுடைய யதார்த்த நிலையை எட்டுவதற்காக அது எடுத்துக்கொள்ளும் முயற்சியாம். அதே ஜீவாத்மன் விலங்கு ஒன்றுக்குக் குட்டியாகப் பிறக்கிற பொழுது உணவை நாடித் தள்ளாடிக்கொண்டு தாயின் மடியை எட்ட முயலுகிறது. அத்தகைய முயற்சியும் தன் னுடைய யதார்த்த நிலையை எட்டுவதற்காக எடுத்துக்கொள் ளும் யத்தனமாம். பசு ஒன்றைக் காணாது இருக்கின்ற பொழுது கன்றானது கதறிப்பதறிக் கத்துகிறது. அது அப் படிச் செய்வதும் தன்னுடைய யதார்த்தநிலையை எட்டுவ தற்கு எடுத்துக்கொள்ளும் முயற்சியாம். இது கீழ்நிலையில் உள்ள உயிர்வகைகள் செய்யும் பிரார்த்தனையாம்.

இனி மானுடப் பிறவியை எடுத்தான பிறகு அந்த ஜீவ னானவன் கடவுளைச் சென்றடைவதே தன்னுடைய குறிக் கோள் என்பதை அறிய வருகிறான். அதற்காக அவன்

எண்ணிறந்த மானுடப் பிறவிகளை எடுக்கிறான். 'நான் படும் பாடு பஞ்சுதான் படுமோ?' என்னும் கேள்விக்கு ஒப்ப எண்ணிறந்த விண்ணப்பங்களை அவன் இறைவனிடம் சமர்ப்பிக்கிறான். அப்படிச் செய்தும் இறைவனுக்குச் சித்தம் இரங்கவில்லையென்றால் அதற்குத் தக்க காரணம் ஒன்று உண்டு. நங்கூரம் நிலத்தில் மாட்டிக்கொண்டிருக்கின்றபொழுது படகுக்கு எவ்வளவுதான் துடுப்பைப் போட்டாலும் பாயை விரித்துக் கட்டினாலும் படகு இடத்தைவிட்டு அசையாது. அதே போக்கில் விவேகம் படையாத ஆத்மசாதகன் ஒருவன் உலகப்பற்றை உறுதியாகப் பிடித்துக்கொள்கிறான். அதற்கிடையில் இறைவனுடைய அருளுக்குப் பாத்திரமாகவேண்டும் என்றும் தான் உய்வு அடைய வேண்டுமென்றும் அவன் அல்லும் பகலும் ஓயாது ஓலமிடுகிறான். அப்படிக் கெஞ்சிக் கேட்கவேண்டிய அவசியமில்லை. ஓசையைக் கிளப்பவேண்டிய நிபந்தனையுமில்லை. கேட்கின்ற சாதகனுக்குத் தேவை எது என்பதை இறைவன் நன்கு அறிகிறான். உலகப்பற்றை ஒழிக்கின்ற அதே கணத்தில் அவன் தெய்வத்துக்கு உரியவன் ஆகிறான். அது அமைதியாக நிகழ்கிறது. அத்தகைய பரிபாகம் அடைதல் அவசியம் என இக்கண்ணி விளக்குகிறது.

281. அன்றுஅந்த நால்வருக்கும் அற்புதமாய் நீஉரைத்தது
ஒன்றுஅந்த வார்த்தைஎனக்கு உண்டோ பராபரமே.

அற்புதமாய்-வியப்புக்குரியதாய்; வார்த்தை-மஹாவாக்கியம்.

சிவனுருக்குச் சொரூபங்கள் பல இருக்கின்றன. அவைகளுள் உச்சநிலையில் இருப்பது சதாசிவமூர்த்தி. அனைத்தையும் தன்னகத்து ஒடுக்கிக்கொண்டு தன்னில் தானாய்

திகழும் முழுமுதற்பொருள் என்பது அம்மூர்த்தியைப்பற்றிய உண்மை. அதே மூர்த்தி ஒருபடி கீழே இறங்கி வந்து தக்ஷிணாமூர்த்தியாகத் திகழ்கிறார். அவர் குருமூர்த்தியாக மிளிர்கிறார். மகோன்னதமான நிலையாம் அது. மௌனோபதேசம் ஆங்கு நிகழ்கிறது. அந்த உபதேசமானது சொல்லாகப் பரிணமிக்குமிடத்து 'தத்துவம் அஸி' என்னும் மஹா வாக்கியமாகிறது. எதை நீ நாடுகிறாயோ அதுவாகவே நீ இலங்குகிறாய் என்பது அதன் பொருள். சிவனார் நடராஜமூர்த்தியாக ஆனந்தத் தாண்டவம் ஆடுகிறபொழுது ஆயிரக்கணக்கான ஆத்ம சாதகர்கள் அக்காட்சியைக்கண்டு களிக்கின்றனர். பரிபாகத்தில் மேல்நிலைக்குப் போகப் போகப் பண்பட்டுள்ள எண்ணிக்கை மிகக் குறைகிறது. தக்ஷிணாமூர்த்தியின் மௌனோபதேசத்துக்குச் சனகன், சனந்தன், சனாதனன், சனத்குமாரன் ஆகிய நால்வரே தகுதி உடையவராயிருந்தனர். அந்நால்வரும் வயதில் முதிர்ந்த விருத்தர்கள். அவர்களுக்குக் குருவாக வாய்த்த சிவனாரோ இளமை மாறாத மாபெரும் பொருள் ஆவார். சிவனார் காலத்தால் பாதிக்கப்படாதவர். அதனால் அவர் யாண்டும் இளமை வடிவினர். சிஷ்யர்கள் நால்வரும அனந்தங்கோடி பிறவிகள் எடுத்துத் தங்களைப் பக்குவப்படுத்தியவர்கள். ஆதலால் கிழவர்களாக அவர்கள் அமைந்திருக்கின்றனர். கிழவர்களாகிய சிஷ்யர்களுக்கு இளைஞனாயுள்ள குரு தத்துவ விளக்கம் வழங்குவது அற்புதமாம். அவர் வழங்கிய பேர் உபதேசம் 'தத்துவம் அஸி' என்பதாம். எந்த உண்மைப் பொருளை நாடுகின்றாயோ அந்த உண்மைப் பொருளாக நீயும் இறுதியில் பரிணமிக்கிறாய் என்பது கோட்பாடு. நால்வருக்கு நல்கிய நல்லுபதேசம் எனக்கும் கிட்டுமோவென்று தாயுமானவர் கேட்கின்றார். அனந்தகோடி ஜீவர்களுக்கும்

அந்த உபதேசம் பொதுவானது. நால்வர் தங்களைப் பக்குவப்படுத்தியது போன்று யாரெல்லாம் தங்களைப் பக்குவப் படுத்துகின்றூர்களோ அவர்களுக்கெல்லாம் இந்த நல்லுபதேசம் நிச்சயமாகவே வாய்க்கும் என்பது இக்கண்ணியின் கருத்து.

282. அப்பன்என்றும் அன்னைஎன்றும் ஆரியன்என்றும் உனையே
செப்புவதும் உன் நிலையின் சீர்காண் பராபரமே.

செப்புவது—சொல்லுவது; சீர்—மகிமை. இறைவா, உன்னை ஒரு சாரார் அப்பன் அல்லது தந்தை எனப் பாராட்டிப் போற்றுகின்றனர். தந்தையின் மற்றொரு சொரூபம் மைந்தன். இயற்கையின் நடைமுறையில் இது வெளிப் படையாகிறது. பரதத்துவத்துக்கும் இக்கோட்பாடு உண்மை யாகிறது. தந்தையினுடைய நிலையில் சிவனார் இருக்கிறார். மைந்தனுடைய நிலையில் மயில்வாகனனும், மூஷிக வாகனனும் அமைந்திருக்கின்றனர். அப்பரதத்துவத்தில் தந்தையையும், மைந்தர்களையும் வெவ்வேறு சொரூபங்களென்று பாகுபடுத்த முடியாது. வழிபடுகிறவர்களுடைய வசதிக்காக அவர்கள் வெவ்வேறு மூர்த்திகளாக இலங்குகின்றனர். இனி, ஜீவாத்மாக்களும் தங்கள் போக்கில் சிவக்குமாரர்களாக வாய்த்திருக்கின்றனர். ஆகையால் பக்தர்கள் தெய்வத்தை உரிமையோடு அப்பனென்று அழைக்கலாம். அந்தந்தப் பிறவிகளில் சரீரத்துக்கு அப்பனாக வாய்க்கின்ற உலகத் தந்தைகள் உபசாரத்துக்காகப் போற்றப்படுகின்றனர். மற்று இறைவனே ஜீவாத்மாக்களுக்கு அனந்தங்கோடி பிறவிகளிலும் தந்தையாகவே நிலைத்துள்ளார். ஆதலால் அவரை அப்பன் என்று போற்றுவது பொருள்சேர்ந்த பாராட்டுதலாகிறது.

சிவனே சக்தியாக இலங்குவதும் சக்தியே பின்பு சிவ நிலை எய்துவதும் பரவஸ்துவைப் பற்றிய பேருண்மையாம். சிவம் பராசக்தியாகப் பரிணமித்துப் பிரபஞ்சமெங்குமுள்ள உயிர்வகைகளைப் பேணி வருகிறது. அப்படிப் பேணி வருவதால் பரம்பொருள் ஆனவர் உயிர்வகைகளுக்குத் தந்தை மட்டுமல்ல தாயும் ஆனவர் எனப் பாராட்டப் பெறுகிறார். அவரே தாயாக இலங்குவது தத்துவத்தைப் பற்றிய பேருண்மை. தாயின் நிலையில் பரமனை வைத்து வணங்குவது மிக எளிது. தாயைப் பேணிப் பழகிய பின்பே தந்தையைப் பேணும் பாங்கு உருவெடுக்கிறது. அம்மையே, அப்பா என்று கூறுவதும், 'த்வமேவ மாதா ச பிதா' என மொழிவதும் பக்தர்களின் இயல்பு. தாய் பக்தி தந்தையின் பக்திக்கு முந்தியது. ஆதலால் அப்பாங்கில் பரமனை வழுத்துவதும் போற்றுவதும் முற்றிலும் பொருத்தமானது.

இனி, இறைவன் ஆரியன் என ஆராதிக்கப்பெறுகிறான். பலர் கருதுகிறபடி ஆரியன் என்னும் சொல் ஒரு ஜாதியைக் குறிப்பதன்று. பண்பட்டுள்ள மேலோன் ஆரியன் என இயம்பப்பெறுகிறான். பண்பாட்டின் உச்ச நிலையிலிருப்பவன் பரமன். ஆகையால் அவனை ஆரியன் என்பது பொருள் சேர்ந்த புகழாகிறது. இவ்வாறெல்லாம் இயம்பிப் பரமனைப் போற்றுவது பக்தர்களின் பாங்கு ஆகிறது என்னும் கோட்பாடு இக்கண்ணியில் அடங்கியிருக்கிறது.

283. கட்டும் கனமும்அந்தக் காலர்வரும் போதுஎதிர்த்து
வெட்டும் தளமோ விளம்பாய் பராபரமே.

கட்டு—கட்டுப்பாடு; கனம்—மக்களின் கூட்டம்; தளம்—ஆயுதம்; விளம்பு—சொல்; காலர்—யமபடர்.

மனிதனுடைய ஆயுளைக் காலம் அளந்துகொண்டே போகிறது. கணந்தோறும் மனிதன் மரணத்துக்கு அருகில் போய்க் கொண்டேயிருக்கிறுன். அப்படியிருந்தும் அந்த மரணத்தைப் பற்றி மனிதன் கவலைப்படுவதில்லை. தான் சாசுவதமாக மண்ணுலகில் வாழ்ந்திருக்கப் போவதாக மனிதன் மனக்கோட்டை கட்டுகிறுன். தான் பெரிய அந்தஸ்தில் இருந்தால் தன்னை எதிரிகள் வந்து தாக்காது இருத்தல் பொருட்டுக் கட்டுப்பாடுகள் பலவற்றை அவன் அமைத்துக் கொள்கிறுன்.வாயில் காப்பாளர்களும் மேனியைக் காக்கின்றவர்களும் ஆங்காங்கு எச்சரிக்கையாய் நின்று கொண்டிருக்கிறுர்கள். அத்தகைய காப்பாளர்கள் அரிய ஆயுதங்கள் பலவற்றைத் தங்கள் கையில் ஏந்தியிருக்கிறுர்கள். எதிரி எத்தகையவனுக இருந்தாலும் அவனை மாய்க்க அந்த ஆயுதங்கள் நன்கு பயன்படும். இந்த ஏற்பாடுகளுக்கெல்லாம் மேலாக மக்கள் பலபேர் தங்களைப் புடை சூழ்ந்திருக்கும்படியும் ஏற்பாடு செய்து கொள்கிறுன். மண்ணுலகத்தவர்களுள் எதிரியாயிருப்பவர்கள் அண்டையில் அணுகாதபடி இப்பாதுகாப்பு நன்கு பயன்படுகிறது. இந்த எதிரிகளுக்கெல்லாம் மேலாக எமபடர்கள் என்னும் எதிரிகள் இருக்கிறுர்கள். அவர்களை விரட்டியோட்ட இத்தகைய பாதுகாப்புக்கள் பயன்படமாட்டா. உற்றுர் உறவினர்கள் எத்தனைபேர் கூடி நின்ருலும் அவர்களால் மரணத்தை விரட்டியோட்ட முடியாது. ஆயுத வகைகளோ, மருந்து வகைகளோ, சாவைத் தவிர்க்கமாட்டா. ஆயுள்ஹோமம் பண்ணிக்கொண்டு இருக்க இருக்க ஆவி நின்றுவிடும். ஆக இந்த ஏற்பாடுகளும் பாதுகாப்பு முறையும் சாவை வெல்ல உதவமாட்டா. மரணத்தை வெல்லுதற்கு உற்ற உபாயம் ஒன்றே உள்ளது. உடலை எடுத்து மரணம் விழுங்குகிறது.

அது ஆத்மாவை அணுகாது. மானுடன் ஒருவன் தன்னை ஆத்மாவென்று அனுபூதியில் அறிந்து, அந்த ஆத்மாவானது பரமாத்மாவுக்குரியது, பிரபஞ்சத்துக்கு அது உரியதன்று என்னும் சிவஞான சித்தி பெறுகிறபொழுதே மனிதன் மரணத்தை வெல்லுகிறான். பரஞானத்தில் பற்று வைக்காது எடுத்துக்கொள்ளுகிற ஏனைய நடவடிக்கைகளெல்லாம் யம தூதர்களை விரட்ட உதவமாட்டா என்பது இக்கண்ணியின் கருத்து.

284. பேசாத மோன நிலை பெற்றுஅன்றோ நின் அருள்ஆம்
வாசாம் அகோசரந்தான் வாய்க்கும் பராபரமே.

வாசாம் அகோசரம் — சொல்லால் விளக்கப்படாத பரநிலை. முக்கரணங்களை உடைத்திருப்பவன் மனிதன். அவை முறையே மனம் வாக்கு காயமென மொழியப்பெறு கின்றன. அம்மூன்றனுள் வாக்கு இடைநிலையில் இருக் கிறது. அது பொருள் உற்றவைகளையும் பொருள் அற்றவை களையும் ஓயாது பேசிக்கொண்டேயிருக்கிறது. அப்படிப் பேசுபவைகளுள் பல பேச்சுக்கள் காயத்தால் செய்யப்படும் கர்மங்களாக வடிவெடுக்கின்றன. இன்னும் பல பேச்சுக்கள் எண்ணிறந்த மனோகல்பிதங்களாக வடிவெடுக்கின்றன. வரம்பு கடந்து பேசுகிறவன் ஆத்ம சாதனத்துக்கு உதவமாட் டான். முற்றிலும் அவசியமானவைகளை ஆத்மசாதகன் அளந்தெடுத்துப் பேசுகிறான். பேச்சுக் குறைவதற்கேற்ப மேனியின் இயக்கம் தணிகிறது. சிலர் வாய்ப்பேசாது இருக்கின்றபொழுதும் கை, கால்களைக் கிடுகிடுவென்று அசைத்துக் கொண்டிருப்பார்கள். அத்தகைய அசைவு அடக்கமின்மைக்கு அறிகுறியாகும். பேச்சுக் குறைவதற் கேற்ப உடலியக்கம் ஓய்வு பெறுகிறது. மனதில் வேகம் குறைகிறது. பேச்சை அறவே நிறுத்துவது மௌனத்தின்

முதல்படி. மனத்தை சங்கல்ப விகல்பமற்றிருக்கச் செய்வது கடைசிப்படி. யாரொருவன் முக்கரணங்களின் செயல்களை அடக்குகின்றானோ அவனே கருவி கரணங்களை வென்றவனா கிறான். மௌனத்தின் மகிமையை உணர்பவன் ஆகிறான். உண்மையான மௌனம் மனத்துக்கு அப்பாற்பட்டது. மனத்துக்கு அப்பாலிருப்பதைச் சொல்லால் விளக்கமுடி யாது. ஆதலால் அது வாசாம் அகோசரம் என விளக்கப் பெறுகிறது. பிரபஞ்சம் அசையும் பாங்குடையது. எது அசைகிறதோ அது ஓசையை உண்டு பண்ணுகிறது. ஓசை மயமாயிருப்பது மௌனத்தை அறியாது. மனிதன் வாய் பேசாதிருந்தாலும் அவனுடைய மனம் எண்ணிக்கொண்டிருக் கிறது. எண்ணமோ சூட்சும மயமான ஓசையாய் அமைந் துள்ளது. ஆத்ம சொரூபமோ அசைவற்றது. ஆதலால் அதன்கண் ஓசை ஒன்றுமில்லை. ஆத்ம சொரூபம் தன்னில் தானாய்த் திருப்தியடைந்திருக்கும் நிலை அதனுடைய நிஜ நிலையாகிறது. அது பிரபஞ்சப் பேரொலிக்கு அப்பாற் பட்டது. ஓசை ஒலியெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு ஆத்மா தன்னில் தானாய் இருக்கவேண்டும். வீடுபேறு அதுவே என் னும் கருத்து இக்கண்ணியில் அடங்கியிருக்கிறது.

285. கற்றாலும் கேட்டாலும் காயம்அழி யாதசித்தி
பெற்றாலும் இன்பம்உண்டோ பேசாய் பராபரமே.

கலைகள் அனைத்தும் பிரபஞ்சத்தைப் பற்றியவைகளாம். அவைகள் எண்ணிக்கையில் அடங்கா. உபசாரத்துக்காக கலைகள் அறுபத்து நான்கு என இயம்பப்பெறுகின்றன. எண் ணிக்கையிலடங்காத உபகலைகளாக அவைகள் விரிவடைந்து கொண்டே போகின்றன. அவைகளைக் கற்பதற்குத் திரி கரணங்களையும் மனிதன் பயன்படுத்தியாகவேண்டும். திரி கரணங்கள் செயல்புரிவதை வினைப்பெருக்கம் அல்லது

கர்மபந்தம் என்கிறோம். பலகோடி பிறவிகளில் பலகோடி கலைகளில் ஈடுபட்டிருக்கும் ஜீவர்கள் அனைவரும் வினையில் தளைக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள்.

கற்பதைவிட எளியது கேட்பது. ஆதலால்தான் 'கேள்வி முயல்' என்னும் கோட்பாடு வந்துள்ளது. அமைதி யாகக் கேட்டுக்கொண்டிருக்கிறவன் காயத்தையும் வாக்கை யும் பயன்படுத்துவதில்லை. ஆனால் மனதுக்கு வேண்டிய வாறு அவன் வேலைகொடுக்கிறான். சித்தவிருத்தி என்னும் செயல் ஓயாது நிகழ்ந்துகொண்டிருக்கிறது. அது சூட்சும கர்மம். மனிதனைத் தளைக்கும் திறமை ஸ்தூல கர்மத்துக்கு இருப்பதைவிட அதிகமாக சூட்சும கர்மத்துக்கு இருக்கிறது. ஆதலால் கேள்வியில் கருத்தைச் செலுத்துகிறவன் சூட்சும கர்மத்தைப் பெருக்கிக்கொண்டே போகிறான். அதற்கு ஏற்ப மனத்தின் வேகமும் அதிகரிக்கிறது. மனத்தின் வேகத்தை அடக்குவது ஆத்ம சாதனம். மனத்தின் வேகத்தை வளர்ப்பது பிறவிப் பெருங்கடலுக்குரிய பிரவிருத்தி மார்க்க மாகிறது.

காயசித்தி என்னும் நிலையொன்று சித்தர்களுக்கிடை யில் உண்டு. காயசித்தி பண்ணுவதில் வெற்றியடைகிற சித்தன் ஒருவன் கல்பகாலம்வரையில் தன்னுடைய காயம் அழியாது பாதுகாக்கலாம். கட்புலனாகாதபடி காயத்தைச் சூட்சுமநிலைக்குக் கொண்டுபோகலாம். விரும்பிய இடங்களை யெல்லாம் அவன் சென்றடையலாம். ஆயினும் அன்னவன் காயத்தில் கட்டுண்டவனாகிறான். காயத்தில் பற்றுதல் என்னும் ஆசைக்கு உட்பட்டவனாகின்றான். கல்பாந்தரத்தில் பிரபஞ்சமனைத்தும் மூலப்பிரகிருதியில் ஒடுங்கும்பொழுது காயசித்தி பண்ணியவனுடைய உடல் மட்டும் ஒடுங்காதிருக்க முடியாது. பிரளயத்தில் அத்தகைய காயமும் ஒடுங்கி அடுத்த

சிருஷ்டியில் மீண்டும் அது தோற்றத்துக்கு வருகிறது. ஆதலால் காயசித்தி பண்ணியவனும் கர்மத்தில் கட்டுண்டவனும்.

ஆனந்தமும் ஆத்மாவும் ஒன்று. ஆனந்தமே ஆத்மா. ஆத்மாவே ஆனந்தம். இது மூல நிலை. ஆதலால்தான் 'ஆனந்தம் பிரம்மம்' என்னும் மகாவாக்கியம் வந்துள்ளது. நிராசையில் நிலைநிற்பவன் ஆனந்தத்தில் திளைத்திருக்கிறான். அந்த ஆனந்தம் புறத்திலிருந்து பெறுவதன்று. அது மனிதனுடைய சொரூபம். ஆசைக்கு அடிமைப்படுபவன் அல்லலுக்கு ஆளாகிறான். கருவி கரணங்களை ஒடுக்கிவிட்டுப் பேரானந்தத்தில் திளைத்திருக்கவேண்டிய நான் கலைகள் கற்பதிலும் சித்த விருத்தியை வளர்ப்பதிலும் உடலைப் பேணுதலிலும் அலைந்து திரிவது பொருந்தாது என்பது இக்கண்ணியின் கருத்து.

286. கண்டவடிவு எல்லாம் கரைக்கின்ற அஞ்சனம்போல்
அண்டம்எல்லாம் நின்அருளே அன்றோ பராபரமே.

அஞ்சனம் என்னும் சொல்லுக்குப் பொருள்கள் பல உள. கண் இமைக்குத் தீட்டும் மைக்கு அஞ்சனம் என்று பெயர். இனி மாந்திரீக சக்தி வாய்ந்த அஞ்சனங்கள் பல உள. மறைந்து கிடப்பவைகளை ஒருவகை மாந்த்ரீக அஞ்சனம் விளக்கிக் காட்ட வல்லதாகிறது. கரைக்க முடியாத பொருளைத் தன்மயமாய்க் கரைக்கவல்ல அஞ்சனம் உளது. அத்தகைய அஞ்சனம் ஈண்டு உவமானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஸ்பரிசவேதி தீண்டியதை யெல்லாம் தங்கமாக்குவது போன்று இந்த அஞ்சனம் தீட்டப்பெற்ற பொருள்கள் எல்லாம் இந்த அஞ்சனமயமாகக் கரைந்து போகின்றன. இது ஜடவுலகைப் பற்றிய உண்மை. இதற்கு நிகராகப் பாரமார்த்திக உண்மை ஒன்று உளது. இறைவ

னுடைய அருளுக்குப் பாத்திரமாகிற ஆத்மசாதகனுடைய ஜீவபோதம் கரைந்துபட்டுப் போகிறது. அவன் தானே பரம்பொருள்மயமாகத் திருந்தியமைகிருன். அவன் காண்ப தெல்லாம் பரம்பொருளே. இது மதிமயக்கத்தால் வருவ தன்று; அறிவுத் தெளிவின் விளைவாம் இது. அஞ்ஞான நிலையிலிருக்கும் உலகத்தவர்களுக்கு உலகப்பொருள்களும், உயிர்வகைகளும் பலப்பல படித்தரங்களில் விளங்குகின்றன. பஞ்சபூதங்களில் ஒன்ருகிய பிருதிவியில் உலகத்தவர் மண்ணையும், கல்லையும், ரத்தினத்தையும் காண்கின்றனர். ஆனல் பரத்தின் காட்சி அடையப்பெற்ற ஞானி ஒருவனுக் குப் பிருதிவி முழுதும் பரம்பொருள் சொரூபமாம். உயிர் வகைகள் மேலானவை கீழானவை, நல்லவை கெட்டவை, தெய்வசம்பத்து வாய்க்கப்பெற்றவை அசுரசம்பத்து வாய்க் கப்பெற்றவை இப்படியெல்லாம் உலகத்தவர்களுக்குத் தென் படுகின்றன. ஒன்ருேடொன்று முரண்படுகிற பலப்பல பொருள்களாகவும் பலப்பல உயிர்வகைகளாகவும் காண்பது அஞ்ஞான நிலையாகும். பரம்பொருள் காட்சி ஒன்றையே காண்பது ஞான நிலையாகும். அத்தகைய ஞானநிலையை எட்டுவது வாழ்க்கையின் குறிக்கோள் அதற்குமேல் அடை வதற்கு ஒன்றுமில்லை. இறைவா, உன்னருளால் அனைத்தை யும் உன் சொரூபமாகக் காண்கின்ற பாரமார்த்திகப் பெரு நிலை எனக்கு வாய்க்கவேண்டும் என்பது இக்கண்ணியின் கருத்து.

287. தன்செயலால் ஒன்றும்இலை தான்என்ருல் நான் பாவி
நின்செயலாய் நில்லா நினைவுஏன் பராபரமே.

அஞ்ஞானத்திலிருக்கும் ஜீவாத்மன் தான் புரிகின்ற செயல்களனைத்துக்கும் தன்னைக் கர்த்தாவாக வைத்துக்

கொள்கிருன். செயல்களின் விளேவாக வருகிற இன்பதுன்பங்களுக்கு அவன் ஆளாகிருன். உண்மையில் ஜீவகோடிகள் அனேத்தின் வாயிலாக நிகழ்ந்து வருகின்ற செயல்களெல்லாம் இறைவனுடைய செயல்களாம். இவ்வுண்மையை அனுபூதியில் அறிகிறவன் தான் என்கின்ற ஜீவவியக்தியையும் தன் செயல் என்ற கர்த்ருத்துவத்தையும் விட்டொழிக்கிருன். அன்னவன் வாயிலாக நிகழ்கின்ற காரியங்களெல்லாம் இறைவனுடைய மேன்மை தங்கிய செயல்களாகின்கின்றன. தீமை எதையும் ஆங்குக் காணமுடியாது. இதற்குச் சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். 'யமுனே நதிக்கரையில் வியாசபகவான் அமர்ந்திருந்தார். அக்கரையில் உள்ள கிராமங்களுக்குப் பால் பட்சணம் விற்கச் சென்ற கோபிமார்கள் மாலே நேரம் நதிக்கரை வந்து சேர்ந்தனர். ஓடக்காரனே தென்படவில்லே. 'பகவானே நாங்கள் பிருந்தாவனம் போகவேண்டும். நதியைக் கடப்பதற்கு என் செய்வது?' என்று விண்ணப்பித்தார்கள். வியாசர் விடுத்த விடையாவது: 'முதலில் உங்கள் பாண்டங்களில் எஞ்சியுள்ள பண்டங்களே யெல்லாம் ஈண்டு எடுத்து வையுங்கள்' என்ருர். கோபிமார்களும் அங்ஙனமே செய்தனர். பட்சணங்களேயெல்லாம் முனிவர் எடுத்துப் புசித்தார். பிறகு நதிக்கரையில் நின்றுகொண்டு, "யமுனுதேவி இன்று நான் உபவாசம் இருப்பது உண்மையானல் உன் ஓட்டத்தை நிறுத்தி நாங்கள் அக்கரை செல்லுவதற்கு வழிவிடு" என்ருர். அவர் ஆணேப்படி நதி ஒதுங்கி நின்றது. எதிர்க்கரை வந்த கோபிமார்கள் 'நாங்கள் படைத்த பண்டங்களேத் தாங்கள் புசித்தீர்கள். உபவாசம் இருப்பது உண்மையானல் வழிவிடு என்று யமுனுதேவியிடம் ஆணேயிட்டீர். நதியும் உங்களின் ஆணேக்கு உட்பட்டது. இதன் மர்மம் எங்களுக்கு விளங்க

வில்லை' என்றார்கள். அதற்கு வியாசர் 'உண்பது உட்பட இச் சரீரத்தின்மூலம் நிகழ்கிற நிகழ்ச்சிகளனைத்தையும் ஈசன் செயலாகக் கருதுகிறேன். அது சத்தியம். ஆதலால் யமுனா தேவியும் சத்தியத்துக்கு இணங்கி தன் ஓட்டத்தைச் சிறிது நிறுத்தி அருளினாள்' என்றார். வெறும் வாய்ப்பேச்சில் எல்லாம் ஈசன் செயல் என்று சொல்லுவதற்கும் அவ்வுண்மைக்கு ஒப்ப வாழ்ந்திருப்பதற்கும் இடையிலுள்ள வித்தியாசம் இதுவேயாம். அஞ்ஞானியின் வாய் ஒன்று சொல்லுகிறது. மனம் அதற்கு நேர்மாறாக நினைக்கிறது. நினைப்போடு முரண் படுகின்ற பாங்கில் காயம் காரியம் பண்ணுகிறது. இத்தகைய பிளவுபட்ட பாங்கு உலகத்தவர்களுடைய வாழ்க்கை. தன்னைப் பரத்தின் பால் அறவே ஒப்படைத்தவன் தான் என்ற தனி வியக்தியையும் தன் செயல் என்கின்ற கர்த்ருத்வத்தையும் துறந்தவனாகிறான். அத்தகைய பெருநிலைக்குச் சான்றாக வியாசபகவான் விளங்கினார். அத்தகைய பெருநிலை இன்னும் தமக்கு வாய்க்கவில்லையென்று தாயுமானவர் முறையிடுகின்றார். ஈசா, என் செயலால் ஒன்றுமில்லை என்று நா நவிலுகிறது. ஆனால் பாவியாகிய நான் எல்லாம் நின் செயல் என்னும் பெருநிலையில் நில்லாதவனாக இருக்கிறேன். நான் என்கின்ற அகங்காரம் முளைத்து விடுகிறது. இதினின்று என்னை நான் விடுவிப்பது எங்ஙனம்? என்பது இக் கண்ணியின் கருத்தாம்.

288. கொலைகளவு கள்காமம் கோபம்விட்டால் அன்றோ
மலைஇலக்கா நின்அருள்தான் வாய்க்கும் பராபரமே.

ஆத்ம சாதகன் ஒருவன் இறைவனது அருளுக்குப் பாத்திரமாவது வெறும் குருட்டு வாய்ப்பு அன்று. அதற்காக வென்றே அவன் தன்னைப் பக்குவப்படுத்தவேண்டும். பக்குவம் விளையாட்டாக வாய்ப்பதன்று. முற்றிலும் மனபரிபாகம்

அடையப்பெற்றுள்ள ஆத்மசாதகனிடத்து ஜீவவியக்திகள் அனைத்தும் கரைந்துபோகின்றன. அது எப்படி என்று பார்ப்போம். மானுடன் ஒருவனை மாய்ப்பது மட்டும் கொலையன்று. மற்றவர்களைத் தனக்குப் புறம்பானவர்களாகக் கருதுகின்றபொழுதே ஆத்ம சாதகன் கொலை செய்தவனாகிறான். ஜீவகோடிகள் அனைத்தையும் தன் மயமாகவும் தன்னை ஜீவகோடிகள் அனைத்தின் மயமாகவும் கருதுகின்றவனே கொலைபாதகத்துக்கு அப்பாற்பட்டவனாகிறான். பொருள்கள் அனைத்தும் பரமனுக்கு உரியவைகள். ஏதேனும் ஒரு பொருளையோ அல்லது தன் உடலையோ ஆத்ம சாதகன் தன் உடைமை எனக் கருதுவானாகில் அவன் களவாடியவனாகிறான். தான் தனது என்பன ஆத்ம சாதகனுக்கு இல்லை. பின்பு தான் தனது என்னும் எண்ணத்தை வரவழைக்கின்றபொழுதே அவன களவாடியவனாகிறான். உலகத்தவன் கள்ளைக் குடித்து மதிமயக்கம் பூணுகிறான். ஆத்ம சாதகன் 'யான்' என்னும் அகங்காரத்தை உருவாக்குகின்றபொழுதே கள் மயக்கத்துக்கு உட்பட்டவனாகிறான். காமம் என்பது ஆசை. ஆசைகளுள் கொடிய ஆசையாயிருப்பது பால்வேற்றுமையைப் பூணுதலாம். அதாவது, தன்னை ஆண்பாலாகவோ, பெண்பாலகவோ கருதி மற்றொரு பாலோடு சேர எண்ணுவது காமம். ஆத்ம சொரூபத்துக்குப் பால் இல்லை. சொரூபத்தினின்று கீழே இறங்குவது காமம். அப்படி இறங்காதிருப்பவனே இறைவனது அருளுக்குப் பாத்திரமாகிறான். இனித் தடைப்பட்ட காமம் கோபமாகத் திரிவுபடுகிறது. ஒரு மனிதன் எதைக் குறித்துக் கோபித்துக்கொள்கிறான் என்பதைக் கவனித்துப்பார்க்க வேண்டும். அவனுக்குக் காமம் எதனிடத்து இருக்கிறது என்பது அவன் பூணுகிற கோபத்தினின்று வெளியாகும். இத்தகைய குறைநிலைகளை

யெல்லாம் களைந்து மனபரிபாகம் அடையும் ஆத்ம சாதக னுக்கே மலையிலக்காக இறைவனது திருவருள் வந்து வாய்க் கிறது என்பது இக்கண்ணியின் கருத்து.

289. தன்னை அறி யாதுஜகம் தானாய் இருந்துவிட்டால்
உன்னை அறியஅருள் உண்டோ பராபரமே.

ஞானத்தில் பராவித்யா அபராவித்யா ஆகிய பகுதிகள் உண்டு. பராவித்யா என்பது மெய்ப்பொருளாகிய கடவுளைப் பற்றிய ஞானம். அபராவித்யா என்பது நிலைபேறு இல்லாத பிரபஞ்சத்தைப்பற்றிய ஞானம். ஜீவாத்மனிடத்தில் பரம் பொருளின் பாங்கும் பிரபஞ்சத்தின் பாங்கும் சேர்ந்து அமைந் திருக்கின்றன. பிரபஞ்சஞானத்தை முகாமையாக வைத்துக் கொண்டு ஜீவாத்மாவானவன் தன்னுடைய நிஜசொருபமா கிய ஆத்மாவின்கண் கருத்தைச் செலுத்தவேண்டும். ஆனால் இத்தகைய சன்மார்க்கத்தை எல்லாரும் பின்பற்றுவதில்லை. உலக ஞானத்தை வளர்ப்பதிலேயே பெரும்பான்மையான மக்கள் கண்ணுங்கருத்துமாக இருக்கிறார்கள். அவர்கள் எடுத் துக்கொள்ளும் முயற்சியும் அபராஞானத்துக்கு உரியதா கிறது. நல்ல வீடு அமைப்பது, ஆடை ஆபரணங்களைத் தேடு வது, நல்ல உணவு வசதிகளை உண்டுபண்ணிக்கொள்ளுதல் ஆகிய இவையாவும் பிரபஞ்சத்தின் கூறாக இருக்கின்ற உடல் வாழ்க்கையைப் பற்றியவைகளாம். உடல் வாழ்க்கை எத்தகையது என்பதை மனிதன் ஆராய்வதில்லை. வீடு கட்டு வதற்குச் சாரம்போடுவது அவசியம். சாரத்தை அருமை யாக அமைத்து வைப்பதிலேயே மனிதன் ஈடுபடுவானாகில் வீட்டை எழுப்ப அவனுக்கு இயலாது. நல்ல சாரம் அமைப் பதற்கிடையில் வீடு எழாது போமாகில் மனிதனுடைய முயற்சி வீணாய்ப் போகிறது. அதேவிதத்தில் வீடு வாசல் சொத்து சுகம் உடை உணவு ஆகியவைகளில் மனிதன்

கருத்தை ஏராளமாகச் செலுத்தவும் தன்னுடைய நிஜசொரு பத்தில் கருத்தைச் செலுத்தாது போகவும் மனிதன் செய் வானாகில் அவனுடைய வாழ்வு அனர்த்தமாய்ப் போகிறது. பிரபஞ்ச வாழ்வு எவ்வளவு பகட்டாக அமைந்திருந்தாலும் அந்திய காலத்தில் அது ஒன்றுக்கும் உதவாது.

சரியான கோட்பாடு 'சிறுகக் கட்டிப் பெருக வாழ்' என்பதாகும். பிரபஞ்ச வசதியை விரிவாக அமைப்பதால் நீ பெருமகன் ஆகமாட்டாய். பழங்காலத்து ரிஷிகள் வாழ்ந் திருந்தது போன்று ஒரு சிறிய குடிலில் வாழ்ந்திருப்பதற் கிடையில் மனத்தைப் பரநாட்டம் என்னும் மகோன்னத நிலைக்கு மனிதன் கொண்டுபோவானாகில் அப்பொழுதே அவன் பெருவாழ்வு வாழ்ந்திருப்பவனாகிறான். பரநாட்டம் படைத்திருப்பவனுக்கே இறைவனது அருள் சொந்தமாகி றது. பிரபஞ்ச வாழ்வில் மயங்கி இருப்பதற்கேற்ப மனிதன் ஒருவன் பரமனுடைய அருளுக்குப் புறம்பானவனாகிறான். இறைவா! நிலையற்ற நிலவுலக வாழ்வில் நான் மிகைபடக் கருத்தைச் செலுத்தாது நிலைபேறு உடைய உன்னையே நாடி இருப்பேனாக. அப்பொழுதுதான் உன்னுடைய அரு ளுக்கு நான் பாத்திரமாகிறேன் என்பது இக்கண்ணியின் கருத்து.

290. ஒன்றுஇரண்டுஎன்று உன்னா உணர்வுகொடுத்து
உள்ளபடி
என்றும்என்னை வையாய் இறையே பராபரமே.

உன்னுதல்-நினைத்தல். உன்னா உணர்வு - மனத்தின் நடுநிலை.

பரநாட்டம் படைத்திருக்கிறவர்கள் பாக்கியவான்கள். ஆயினும் அத்தகைய பாக்கியவான்களுக்கிடையில் ஒரு சிலர் பொருளற்ற தத்துவ விசாரத்தில் வாழ்நாளை வீண்

நாளாக விரயம் பண்ணுகின்றனர். பரமாத்மாவும் ஜீவாத்மாவும் ஒன்ரு, பிளவுபட்ட நிலேயில் உள்ள வஸ்துக்களா, எப்பொழுது அவை இரண்டும் பிளவுபட்டிருக்கின்றன, எப்பொழுது அவைகள் ஒன்றுபட்டிருக்கின்றன போன்ற ஆராய்ச்சிகளில் பலபேர் தீவிரமாக ஈடுபடுகின்றனர். இவர்களுடைய பரிதாபகரமான நிலேக்குச் சான்ருக உலக நடைமுறையில் உள்ள நிகழ்ச்சி ஒன்றை எடுத்துக்கொள்ளலாம். இங்கிலாந்தில் நாய்களின் ஓட்டப்பந்தயம் ஒன்று உண்டு. பந்தயத்தில் ஓடோடி முதலில் வருகிற நாய்களுக்குப் பரிசு வழங்குகிருர்கள். ஓடத்துவங்கிய நாய்களில் சில இடைவழியில் ஒன்ரேடு ஒன்று சண்டைபோட்டுக்கொண்டு குரைத்தும் கடித்தும் தங்கள் நோக்கத்தினின்று வழுவியவைகள் ஆகின்றன. ஆத்மசாதகர்கள் சிலர் தங்களுக்கும் தெய்வத்துக்கும் இடையில் உள்ள இணக்கத்தைச் சுவானுபூதியில் அறிந்துகொள்வதற்கு மாருகப் பொருளற்ற வீண்விவாதத்திலேயே வாழ்வை விரயம் பண்ணுகின்றனர். அருள்நாட்டம் என்னும் நேரான மனப்பான்மை சாதகர்கள் எல்லார்க்கும் தொடர்ந்து இருப்பதில்லே. உலகப்பற்று நீங்கப் பெற்றிருப்பது பெரிய பேறு ஆகும். பிறகு விவாதப்பற்று என்னும் தொல்லேயில் அகப்பட்டுக்கொண்டு அந்நிலேயிலேயே பலர் நின்று விடுகின்றனர். இறைவா! சரியான அருள்நாட்டம் கொண்டு உன்னே நான் அனுபூதியில் அறிந்து கொள்வேனு கில் உனக்கும் எனக்கும் உள்ள இணக்கம் உள்ளபடி உள்ளத்தில் ஒளிர்கிறது. அப்படி அருள்நாட்டம் கொள்ளாது நான் வீண் விவாதத்தில் அகப்பட்டுக் கொள்ளலாகாது என்பது இக்கண்ணியின் கருத்து.

291. கருதும்அடி யார்கள்உளம் காணவெளி ஆகும்
துரியநிறைவு ஆன சுகமே பராபரமே.

மனிதனுடைய உள்ளத்தில் ஏதேதோ கருத்துக்கள் நிரம்பப் பெற்றிருக்கின்றன. அவைகளுள் பெரும்பான்மை ஆராய்ச்சிக்குத் தகுதியற்றவை ஆகின்றன. பொருந்தாத புல்லிய எண்ணங்களையே பெரும்பாலர் எண்ணி வருகின்றனர். ஆதலால் மக்களுடைய உள்ளம் புறத்தில் தென்படாது உள்ளேயே மறைந்து கிடப்பது ஒருவிதத்தில் இயற்கையின் நல்ல திட்டமாகிறது. பின்பு இந்த உள்ளத்தினுள் பர சிந்தனையையே பேணி வருகிற பெருமக்கள் யாரோ சிலர் இருக்கின்றனர். அன்னவர்களுடைய உள்ளம் பெருங்கோவில் ஆகிறது. உள்ளத்தின் புறத்தோற்றமே ஊன் உடம்பு ஆகிறது. கடவுள் சிந்தனையில் ஊறி இருக்கின்ற சான்றோர்களுடைய ஊன் உடம்பு ஆலயமாகிறது. கடவுள் சிந்தனையிலேயே ஊறியிருக்கின்ற அடியவர்கள் உள்ளத்தில் ஒளிர்வது ஆத்ம ஜோதி. சிந்தனையின் சிறப்பை முன்னிட்டு மானுட உள்ளம் ஆத்ம சாந்நித்தியத்துக்கு இருப்பிடமாகிறது. நீக்கமற எங்கும் நிறைந்துள்ள ஆத்ம சொரூபத்தைச் சிறப்பாகக் காணுமிடம் அடியார்களுடைய உள்ளம் ஆகிறது. அந்த உள்ளத்தினுள் ஒளிர்வது ஆத்மப்பிரகாசம். அந்த ஆத்மப் பிரகாசமே துரியம் எனவும் பெயர் பெறுகிறது. துரியம் என்பது மூலநிலை. அது அகண்டமாய் இருப்பதனால் நிறைவு எனவும் நவிலப்பெறுகிறது. எங்கு நிறைவு இருக்கிறதோ அங்கு ஆனந்தம் ஓங்குகிறது. ஆனந்தத்தின் பாங்கே சுகம் எனவும் இயம்பப்பெறுகிறது. முடிந்த நிறைவு நிலை எது, அகண்டாகார ஆனந்தப்பெருக்கு எது என்பதை அறிந்துகொள்ள முயலுகிறவர்கள் இறைவனுடைய அடியார்களின் உள்ளத்தைக் காண்பார்களாகில் அன்னவர்களுக்கு, ஆத்ம தரிசனம் தானாக இலங்குகிறது என்னும் கோட்பாடு இக்கண்ணியில் அடங்கியிருக்கிறது.

292. பொய்குவித்த நெஞ்சன்அருள் பொற்புஅறிந்து திக்குஅனைத்தும்
கைகுவித்து நிற்பதுஎந்தக் காலம் பராபரமே.

மக்கள் எல்லாரும் தங்கள் உள்ளம் என்னும் அறையினுள் ஏதேதோ பொருள்களைப் போட்டு நிரப்பி வைக்கின்றனர். இப்பிரபஞ்ச சம்பந்தமான கருத்துக்கள் இப்பிரபஞ்ச சம்பந்தமான புள்ளி விவரங்கள் யாவும் பொய்யெனக் கருதப்படுகின்றன. ஏனென்றால் அவைகள் ஒரு காலத்தில் இருந்து இன்னொரு காலத்தில் இல்லாது மறைந்து போகின்றன. உள்ளத்தினுள் அருள் சிந்தனையையே வளர்த்து வந்தால் அது அழிந்துபட்டுப் போவதில்லை. கண்மூடியிருந்து உள்ளத்தினுள் அருள் ஜோதியைத் தரிசிக்க முயல்வது ஒருவித சாதனமாகிறது. கண் விழித்திருந்து பார்க்கின்றவைகளையெல்லாம் பிரபஞ்ச மயமாகக் காணாது தெய்வ சொரூபமாகக் காணுங்கால் அதன் வாயிலாக மனம் பரிபாகம் அடைகிறது. ஆக அகத்திலும் புறத்திலும் ஆத்ம ஜோதியையே கண்டு பழகுதல் மெய்ப்பொருள் காட்சிக்கு உற்ற உபாயமாகிறது. அகத்திலும் புறத்திலும் இப்பிரபஞ்ச சம்பந்தமான எண்ணங்களிலேயே ஊறியிருக்கின்றவன் ஜடநிலை எய்துகிறான். அவன் உள்ளத்தினுள் நிலைத்திருப்பது நிலையற்ற பிரபஞ்சப் பொருளாகிறது. பரிபாகத்துக்கு ஏற்ப மனிதன் காண்கின்ற காட்சி நிலைபேறு இல்லாத பிரபஞ்சமாகிறது அல்லது நிலைபேறு உடைய பரம்பொருள் சொரூபமாகிறது. இருப்பது ஒன்று; அதை ஆத்ம சொரூபமாகக் காண்பது மெய்க்காட்சி, அதைப் பிரபஞ்ச சொரூபமாகக் காண்பது பொய்க்காட்சி என்னும் கருத்து இக்கண்ணியில் அடங்கியிருக்கிறது.

293. அத்வைதம் ஆன அயிக்ய அனுபவமே
சுத்தநிலை அந்நிலையார் சொல்வார் பராபரமே.

ஜீவாத்மாவுக்கும், பரமாத்மாவுக்கும் இடையிலுள்ள இணக்கம் மூன்று படித்தரங்களில் இருக்கின்றன. அவை களை முறையே துவைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் என்று இயம்புகிறோம். துவைதநிலையில் ஜீவாத்மன் பரமாத்மனுடைய தொண்டனாக இருக்கிறான். அந்நிலையில் ஜீவாத்மா வேறு பரமாத்மா வேறு. துவைதம் என்பதின் பொருள் இரண்டு என்பதாம். விசிஷ்டாத்வைதநிலையில் ஜீவாத்மனும் பிரபஞ்சமும் பரமாத்மனுக்குச் சரீரமாக அமைந்திருக்கின்றன. சரீரத்தைச் சரீரியிடமிருந்து பிரித்து எடுக்க முடியாது. இரண்டும் ஒன்றே. ஆனால் ஒரு தனி இயல்போடு கூடிய இணக்கமாக சரீரத்துக்கும் சரீரிக்கும் இடையிலிருப்பதால் அது விசிஷ்டாத்வைதம் எனப்படு கிறது. ஒரு பாகுபாடோடு கூடிய அத்வைதம் அல்லது இரண்டற்றநிலை என்பது அதன் பொருள். சரீரம் சரீரி என இரண்டு பகுதிகள் ஈசனிடத்திருக்கின்றன. சரீரம் சரீரி ஆகாது. அதே விதத்தில் சரீரி சரீரம் ஆகான். ஆகையால் இவ்விரண்டினுள் பேதமுண்டு. ஆனால் சரீரத்தைச் சரீரி யிடமிருந்து பிரிக்கமுடியாது. ஆதலால் அது அபேதம். அத்வைதம் என்றால் இரண்டற்ற நிலை. நிறைஞானத்தில் ஜீவாத்மன் பரமாத்மனில் இரண்டறக் கலக்கிறான். இந்த மூன்று நிலைகளைப்பற்றி ஆஞ்சநேயன் ராமனிடம் இயம்பு கிறான். 'என்னிடம் உடல் உணர்வு இருக்கின்றபொழுது ராமா நீ ஆண்டவன், நான் உன்னுடைய அடிமை. என்னிடம் ஜீவபோதம் தலையெடுக்கும்பொழுது நீ பூரணம், அதில் நான் ஓர் அம்சமாக இருக்கிறேன். என்னிடம் ஆத்மபோதம் உதிக்கும்பொழுது நீயே நான், நானே நீ'. இங்ஙனம் ஆஞ்ச நேயன் பகர்ந்தான். இந்நிலைகள் முறையே துவைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் என இயம்பப் பெறுகின்

றன. ஆத்ம சாதகர்களுள் யாரோ சிலர்தான் அத்வைத நிலையை எட்டுகின்றனர். இரண்டு பொருள்கள் காட்சியி லிருக்கின்றபொழுது ஒன்று மற்றொன்றைப் பிரித்துவைப்ப தாகிறது. இரண்டில் எது மேலானது, எது கீழானது என்னும் கேள்வி எழுகிறது. அப்படி வேற்றுமை வருகிற பொழுது ஏதேனும் ஒன்று சுத்தநிலையாகாது. இரண்டு பாத்திரங்களில் இருக்கின்ற சுத்த ஜலங்கள் பாத்திரங்களின் பாங்குகளை அனுசரித்து மேலானது கீழானது எனப் பகரப் பெறலாம். இரண்டு ஜலங்களும் ஒரே பாத்திரத்தில் வார்த்து வைக்கப்படும்பொழுது அவைகள் அபேத நிலையை அடை கின்றன. அந்த அபேத நிலையே சுத்தநிலையெனச் சொல்லப் படுகிறது. ஜீவாத்மனுக்கு ஜீவ உபாதி அசுத்தமாக அமைந் திருக்கிறது. உபாதியைத் துடைத்துத்தள்ள ஜீவனுக்கு இயலுகிறது. உபாதி நீங்குமிடத்து அத்துவித ஐக்கிய அனுபவமே நிலைத்திருக்கிறது. அத்தகைய பரிபாகம்தான் முடிந்த நிலையென்று பரமகுரு யாரோ ஒருவர் பகர்கிறார். அத்தகைய முடிந்தநிலை எனக்கு எப்பொழுது வாய்க்கும் என்பது இக்கண்ணியின் கருத்து.

294. வைத்த சுவர்அலம்பின் மண்போமோ மாயையி
னோர்க்கு
எத்தனைபோ தித்தும்என்ஆம் எந்தாய் பராபரமே.

மண்ணிலே சுவர் எழுப்பப் பெற்றிருக்கிறது. அந்தச் சுவரைத் தண்ணீர்போட்டு அலம்பினால் மண்ணில் ஏதோ சிறுபகுதி தண்ணீரில் கரைந்து பிரிந்து போகிறது. ஆயினும் மண்சுவர் பழையபடி மண்சுவராகவே இருக்கிறது. அங்ங னம் மாயையில் உழல்பவர்களுக்கு அந்த மாயையின் ஒரு பகுதியை நிலையற்றதென விசாரித்து நீக்கினால் நிலையற்ற மற்றொரு பகுதி எஞ்சி நிற்கிறது.

கனவு கண்டுகொண்டிருப்பவர்களுக்கு அக்கனவுக்குள்ளே இருந்துகொண்டு இது கனவு இது கனவு என்று எவ்வளவு எடுத்துச்சொன்னலும் கனவு அகன்று போவதில்லை. விழிப்பு நிலைக்கு வந்த பிறகே கனவைக் கனவு என ஒதுக்கித் தள்ளுகிருன். மனிதன் நனவுநிலையில் இருந்துகொண்டு இப்பிரபஞ்சத்தைப் பொய்க்காட்சியென்று எவ்வளவுதான் ஒதுக்கித்தள்ள முயன்ருலும் அப்பொய்க் காட்சியினுள்ளேயே அவன் இருந்து வருகிருன். நனவு அல்லது ஜாக்கிரதாவஸ்தையும் நீண்டதோர் கனவு என ஆன்ருேர் இயம்புகின்றனர். ஆத்மபோதம் வாய்க்கின்றபொழுது நனவு மாயமாய் மறைந்து போகிறது. ஆக இந்த மாயப் பிரபஞ்சத்தை மாயை என ஒதுக்கித்துள்ளுதற்கு உற்ற உபாயம் யாது எனக் கேள்வி எழுகிறது. மாயையின் வசத்திலிருக்கும் பரியந்தம் அதை ஒதுக்க முடியாது. அதனுடைய ஆதிக்கமே முன்னணியில் வந்து நிற்கும். ஜீவாத்மனுக்கு ஆத்மபோதம் அல்லது பரபோதம் வாய்க்கக் கூடும். பரபோதம் வந்தவுடனேயே ஜீவபோதமும் பிரபஞ்சபோதமும் தாமாக அடிபட்டுப் போகின்றன. ஜீவபோதமும் பிரபஞ்சபோதமும் ஒன்று சேர்ந்து மாயையின் ஆதிக்கத்தில் இடம் பெற்றிருக்கின்றன. கனவில் அழுதுகொண்டிருப்பவனைத் தட்டி எழுப்பினல் கனவும் போகிறது, அழுகையும் நிற்கிறது. அதற்கு நிகராகத் தன்னை ஒரு ஜீவன் என்று கனவு கண்டுகொண்டிருப்பவனைப் பரபோதத்தின்கண் எழுப்பினல் அக்கணத்திலேயே ஜீவபோதம் மாயமாய் மறைந்து போகிறது. அப்படி எழுப்புவதற்கு மாருக ஜீவபோதத்தில் இருந்துகொண்டே இப்பிரபஞ்சக் காட்சி வெறும் தோற்றம் என்று எவ்வளவுதான் பேசிக்கொண்டிருந்தாலும் அதில் பயனொன்றுமில்லை. பரபோதத்தில் விழித்து எழுகிற பெரிய

வாய்ப்பு அமையப்பெற்றவன் அமைதியாகப் பரத்தில் ஒன்று படுகிருன். மாயப்பிரபஞ்சம் என்னும் வாய்ப்பேச்சுக்கோ அதற்கு இலக்காக இருக்கிற பிரபஞ்சத்துக்கோ பரபோதத்தில் இடமில்லை என்பது இக்கண்ணியின் கருத்து.

295. பூட்டுஅற்றுத் தேகம்அற்றுப் போகும்முன்னே நின் அருளைக்
காட்டத் தகாதோஎன் கண்ணே பராபரமே.

பூட்டு அற்று-நரம்புக் கட்டுகள் நீங்கி. சாவதற்கும் சமாதிநிலை எய்துவதற்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை ஆத்மசாதகன் அறிந்திருக்கவேண்டும். பஞ்சபூதங்களாலாகிய ஸ்தூல சரீரத்தை ஒதுக்கித்தள்ளுதல் இரண்டு நிகழ்ச்சிகளுக்கும் பொதுவானது. சாகின்றவன் ஸ்தூல சரீரத்தினின்று விலகிக்கொள்கிருன். ஆயினும் சூட்சும சரீரமும், காரண சரீரமும் அவனுக்குச் சொந்தமாயிருக்கின்றன. ஆதலால்தான் அவன் ஜீவாத்மன் என்னும் பெயர் படைத்திருக்கிருன். சமாதிநிலை எய்துகின்றவனுக்கு ஸ்தூல சரீரம் சவமாகப் போவது உலகத்தவர்களுக்குப் பிரத்யட்சம். ஆனல் அவனுடைய சூட்சும சரீரமும் காரண சரீரமும் அவனுக்குச் சொந்தமாயிருக்கின்றன. ஆதலால்தான் அவன் ஜீவாத்மன் என்னும் பெயர் படைத்திருக்கிருன். சமாதிநிலை எய்துகின்றவனுக்கு ஸ்தூல சரீரம் சவமாகப் போவது உலகத்தவர்களுக்குப் பிரத்யட்சம். ஆனல் அவனுடைய சூட்சும சரீரமும் காரண சரீரமும் நிரந்தரமாக அழிந்துபட்டுப் போவது சமாதியின் விளைவாம். பரம்பொருளை இக்கண்ணியில் கண்ணே என்று அழைப்பது சமாதிநிலை அடையப் பெற்றவனுக்கே முற்றிலும் பொருத்தமானதாகிறது. ஊனக் கண் உண்மையில் கண் அன்று. ஞானக்கண்ணே ஆத்ம சொருபமாகிறது. ஞானக்கண்ணே மனிதனுடைய நிஜ

சொரூபமாகிறது. சிவனும், அம்பிகையும், கணபதியும் புருவத்திலே ஞானக்கண் படைத்திருப்பதாக ஸ்தூல வர்ணனை அமைந்திருக்கிறது. உண்மையில் இந்த மூர்த்திகள் ஆத்மசொரூபமே. அதே பாங்கில் கிருஷ்ணனையும் கண்ணன் என ஐதிகம் போற்றுகிறது. சமாதிநிலை அடைந்தவனுக்கு ஞானக்கண் திறக்கிறது. தன் நிஜசொரூபத்தை அவன் யாண்டும் கண்டு கொண்டே இருக்கிறான். காண்பவனும் காணப்படுபவைகளும் நானே. ஆதலால் காண்போன், காணப்படுபொருள், காட்சி என்னும் திரிபுடி ஞானிக்கில்லை. தன்னை தன்மயமாயிருந்து யாண்டும் தன்னிலேயே திளைத்திருக்கிறான். அந்த நிலையே கண் என்று மொழியின்மூலமாக விளக்கப்படுகிறது.

உடலமைப்பில் எலும்புகள், தசைகள் ஆகியவைகள் நரம்பைக்கொண்டு இணைக்கப்பட்டிருக்கின்றன. ஸ்தூல உடலை உகுப்பதற்கு முன்பு அந்தக் கட்டுக்களெல்லாம் பொருளற்றவைகளாகப் போகின்றன. பிறகு ஸ்தூல தேகமும் புறக்கணிக்கப்படுகிறது. அருளுக்குப் பாத்திரமாயிருக்கிற ஞானி தனக்கு அழியாத கண்ணுயிருக்கின்ற தன் சொருபத்திலேயே நிலைத்திருப்பதால் இப்படித் தேகத்துக்கு முடிவு வருவதை அவன் கருத்தில் வாங்குவதில்லை. நண்பகல் வருகின்றபொழுது வெட்டவெளியில் நிற்கின்ற நம்முடைய தேகத்தின் நிழல் பாதத்தினடியில் ஒடுங்குகிறது. அப்படி அது ஒடுங்குவது நம் காட்சியில் இல்லை. நாம் இருப்பது மட்டுமே நம் காட்சியில் இருக்கிறது. அதே விதத்தில் கண்ணுக்குக் கண்ணுயிருக்கிற ஆத்மசொரூபத்தில் திளைத்திருப்பவனுக்குத் தன்னுடைய நிரந்தர சாந்நித்தியமே நிலைத்திருக்கிறது. தேகத்தின் தோற்றமோ, மறைவோ அவனுக்குத் தெரியாது. அத்தகைய பெருநிலையில் இறைவா நான் இருப்பேனாக என்பது இக்கண்ணியின் கருத்து.

296. சொல்லில் பதர்களைந்து சொல்முடிவு காணுதார்
நெல்லில் பதர்போல் நிற்பார் பராபரமே.

சாஸ்திரங்கள் ஏராளமாக அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு சமயத்துக்கும் ஏற்ற நூல்கள் பல இருக்கின்றன. அந்தந்தச் சமயத்துக்குரிய மெய்ப்பொருளைச் சிலாகிக்கவும் ஏனையவைகளைப் பின்னணியில் தள்ளவும் சில நூல்கள் முனைகின்றன. அத்தனைவிதமான விளக்கங்களுக்கும் அடிப்படையாயிருக்கும் மெய்ப்பொருள் ஒன்றே என்னும் தெளிவை ஆத்மசாதகன் முதலில் பெறுதல் வேண்டும். முரண்படுகிற சொற்களும் வெவ்வேறு பாங்குகளில் ஒரே மெய்ப்பொருளைத்தான் விளக்குகின்றன என்னும் விவேகம் படைத்திருப்பதும் அவசியமாகிறது. அத்தகைய அறிவுத் தெளிவு அமையப்பெற்றிருக்கிற சாதகன் வேற்றுமைகளுக்கு அடிப்படையாக உள்ள ஒற்றுமையைக் காண்கிருன். அப்படியல்லாது ஒரு சமயத்தை மற்றெரு சமயத்தோடு சீர்தூக்கி வேற்றுமை காண்பதிலேயே கருத்தைச் செலுத்துகின்றவன் நெல்லினுள் தோன்றிய பதர்போன்று ஆத்மசாதனத்துக்கு உதவாதவன் ஆகிருன். உமியைக் களைந்து அரிசியை உணவுக்கு எடுத்துக்கொள்வது போன்று சொல் வேற்றுமையை ஒதுக்கிவிட்டுக் கருத்து ஒற்றுமையை மனத்தில் வாங்குகின்றவன் நல்ல ஆத்மசாதகனுகிருன். அத்தகைய மனத்தெளிவு அடையப்பெற்றிருப்பதே முன்னேற்றத்துக்கு உற்ற உபாயம் என்பது இக்கண்ணியின் கருத்து.

297. அழுக்காற்ருல் நெஞ்சம் அழுங்கியபுன் மாக்கள்
இழுக்காற்ருல் இன்பநலம் எய்தார் பராபரமே.

அழுக்காறு-பிறர் முன்னேற்றத்தைக் கண்டு சகியாது இருக்கும் பொருமை; அழுங்குதல்-அறிவுகெட்டுப்போதல். புன்மாக்கள்-அற்பர்கள். இழுக்காறு-தீநெறி.

மனிதனுடைய முன்னேற்றத்துக்குப் பேரிடைஞ்சலா யிருப்பது பொறாமை. பிறர் அடைந்துவரும் நலனையும் முன்னேற்றத்தையும் காண்கிற எவன் ஒருவனிடத்துச் சகிப் பின்மை ஓங்குகிறதோ அவன் பொறாமை படைத்தவனா கிறான். அது மனத்தைப் பிடித்துள்ள கொடிய நோய். பொறாமை படைத்திருப்பவன் எவ்விதத்திலும் முன்னேற்ற மடையமாட்டான். பொறாமைகளுள் அருள்துறையைப் பற்றிய பொறாமை மிகக் கொடியது. புற மதஸ்தர்கள் முன்னேற்றமடைந்து வருவதைப் பார்த்து சிலர் சகிக்கமாட் டார்கள். சமயத்துறையிலோ சன்மார்க்கத்திலோ பொறாமை புகுங்கால் அது மனிதனை அடியோடு அழித்து விடுகிறது. புறமதச் சகிப்பின்மை தீமைகளுள் கொடிய தீமையாகும். சமயம் எதுவாயினும் ஆகுக. சாதனம் எதுவாயினும் ஆகுக. பலப்பல சமயங்களையும் சாதன்ங்களையும் அனுஷ் டித்து முன்னேற்றம் அடைந்து வருகிறவர்களைப் பார்த்து அகமகிழ்வு கொள்ளவேண்டும். ஆராதிக்கிற பாங்கில் அன்னவர்களுக்கு வணக்கம் செலுத்த வேண்டும். அப்படி யல்லாது வெண்டுமென்றே நன்னெறியில் செல்கிறவர்களைச் சிறுமைப்படுத்துகிற மனிதன் தானே கீழ்மையடைகிறான். முன்னேற்றத்துக்கும் அவனுக்கும் வெகுதூரம். அத்தகைய பொல்லாங்கு ஆத்மசாதகனுடைய உள்ளத்தில் புகாதிருக் கும்படி பரமனிடத்துப் பிரார்த்தனை பண்ணிக்கொள்ள வேண்டும் என்பது இக்கண்ணியின் கருத்தாம்.

298. தேகாதி பொய்எனவே தேர்ந்தஉப சாந்தருக்கு
மோகாதி உண்டோ மொழியாய் பராபரமே.

நித்திய அநித்திய வஸ்து விசாரம் ஆத்மசாதனத்துக்கு முற்றிலும் இன்றியமையாதது. உடல், உள்ளம் முதலிய கருவி கரணங்கள் பிரகிருதியின் கூறுகள் ஆகின்றன.

அவையாவும் நித்தியமானவைகள் ஆகா. உடலும் உள்ளமும் ஓயாது மாறியமைந்துகொண்டே இருக்கின்றன. இன்றைக்கு இருப்பது போன்று உடல் நாளைக்கு இருப்பதில்லை. இன்றைக்கு இருக்கிற மனப்பான்மை நாளைக்கு இருப்பதில்லை. நிலையற்ற அக்கருவிகரணங்கள் வெறுமனே சாதனத்துக்காகவென்று பயன்படுத்தப்படுகின்றன. அவைகளில் வாஞ்சை வைப்பது விவேகிகளின் பாங்கு ஆகாது. மனிதனது நிஜசொரூபம் ஆத்மா. ஆத்மாவானது பேரறிவாகவும் பரமானந்தமாகவும் யாண்டும் நிலைத்திருக்கிறது. அதுவே தனது நிஜசொரூபம் எனத் தெளிகிறவன் உபசாந்தன் ஆகிறான். ஆத்மசொரூபத்திலேயே திளைத்திருப்பது உபசாந்தனுடைய பாங்கு ஆகிறது. அங்ஙனம் ஆத்மபோதத்தில் திளைத்திருப்பவனுக்குப் பக்கத்தில் காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம் ஆகிய கிலேசங்கள் அணுகமாட்டா. வெளிச்சம் இருக்குமிடத்தில் எங்ஙனம் இருளுக்கு இடமில்லையோ அங்ஙனம் யாண்டும் ஆத்மசொரூபத்தில் திளைத்திருப்பவனுக்கு மனநோய் ஏதும் வாராது. அவனுடைய தெளிந்த மனம் ஆத்மசொரூபத்திலேயே லயமாகிறது. அத்தகைய பெருநிலையை இறைவா, எனக்குத் தந்தருள்வாயாக என்பது இக்கண்ணியின் கருத்து.

299. சாதனைஎல் லாம்அவிழத் தற்போதம் காட்டாதோர்
போதனைநீ நல்குவதுஎப் போதோ பராபரமே.

அவிழுதல் - நின்றுவிடல்; தற்போதம் - ஜீவபோதம். போதனை-ஆத்மானுபவம். நல்குவது-கொடுத்து உதவுவது.

ஜீவாத்மனுக்குத் தான் ஒரு ஜீவ வியக்தி என்னும் உணர்வு இருக்கும்பரியந்தம் அவன் செயலற்று இருக்கமுடியாது. தன்னிடத்து ஏதோ ஒரு குறைநிலை இருப்பதாக

உணர்பவன் ஜீவாத்மன். அக்குறை நிலையை நிறைநிலையாக்க அவன் முயற்சி எடுத்துக்கொள்கிறான். இத்தகைய முயற்சி ஜீவகோடிகள் அனைத்திடத்தும் உண்டு. அந்த முயற்சிகள் பலகோடிப் பிறவிகளில் திருந்தியமைகிறது. கடைசியாகப் பரம்பொருளை அடைவதற்குரிய முயற்சியாக அது மேலோங்குகிறது. அத்தகைய முயற்சியே ஆத்மசாதனம் எனப் பெயர் பெறுகிறது. ஆத்ம சாதனத்தில் ஜீவாத்மன் முன்னேற்றமடைவதற்கு ஏற்ப ஜீவபோதம் குறைகிறது; பரபோதம் அதிகரிக்கிறது. அது முற்றிலும் பரபோதமாக மேலோங்குமிடத்துச் சாதனங்கள் யாவும் தாமாக நின்று விடுகின்றன. எந்த ஜீவாத்மனுக்குத் தன்னுடைய முயற்சியோடு இறைவனுடைய அருளும் துணைபுரிகிறதோ அவனுக்குப் பரபோதம் உச்சநிலையை எட்டுகிறது. இறைவா, அத்தகைய நல்ல நாள் எனக்கு எப்பொழுது வந்து வாய்க்கும் என்பது இக்கண்ணியின் கருத்து.

300. ஒன்றும்அறி யாஇருள்ஆம் உள்ளம் படைத்தஎனக்கு
என்று கதிவருவது எந்தாய் பராபரமே.

கதி—பரத்தை அடைகின்ற பெரியபேறு; ஜீவாத்மனுக்கு ஜீவபோதம் நிலைத்திருக்கும் காலமெல்லாம் அவனுடைய உள்ளம் இருள் சூழ்ந்ததாக இருக்கிறது. கண்மூடி தியானம் பண்ண முயலுகின்றபொழுது உள்ளிருப்பதெல்லாம் காரிருள் என்பது சொல்லாமலே விளங்குகிறது. அக்காரிருளே அஞ்ஞான இருள் எனவும் இயம்பப்பெறுகிறது. கார்இருளில் இருக்கிற மனிதன் ஒருவனுக்குத் தன் உடலையே காண முடியாது. உடலில் அழுக்குப் படிந்திருக்கிறதா சுத்தமாயிருக்கிறதா என்னும் கேள்விக்கு இருளில் இருக்கின்றபொழுது விடை சொல்ல முடியாது. வெளிச்சத்துக்கு வந்த பிறகே உடலில் அழுக்குப் படிந்திருக்கிறது

என்றோ அது சுத்தமாக இருக்கிறது என்றோ இயம்ப முடியும். புறத்தில் இருக்கிற கார்இருள் ஊனக்கண்ணைச் செயலற்றதாக்குகிறது. அகத்தில் இருக்கிற அக்ஞான இருள் ஞானக்கண்ணைச் செயலற்றதாக்குகிறது. சாதகன் ஒருவன் சாதனத்தில் முன்னேற்றம் அடைவதற்கேற்ப அந்தக்கரண சுத்தியடைகிறான். அதற்கேற்றபடி ஞானக் கண் உருவெடுக்கிறது. அந்தக்கரணம் முற்றிலும் சுத்தி யடைந்தான பிறகு ஜீவாத்மன் தனக்கும் தன் தலைவனுக்கும் உள்ள இணக்கத்தை உள்ளபடி அறிகிறான். அத்தகைய அறிவே கதியென ஈண்டு இயம்பப்பெறுகிறது. இறைவா, என் உள்ளத்தில் சூழ்ந்துள்ள அக்ஞான இருள் அதிவிரை வில் அகலவேண்டும். ஞான ஒளி ஓங்கவேண்டும். அத்த கைய பெருநிலையை எனக்குக் கொடுத்தருள்வாயாக என்பது இக்கண்ணியின் கருத்து.

301. சிந்திக்குந் தோறும்என்உள் சிற்சுகமாய்
ஊற்றுஊறிப்
புந்திக்குள் நின்றஅருள் பொற்பே பராபரமே.

சிற்சுகம்-ஞான இன்பம்; புந்தி-அறிவு: அருள்பொற்பு-கிருபையின் பொலிவு.

இவ்வுலக சம்பந்தமான சிந்தனைகள் மனிதனுக்கு அல்லலை உண்டுபண்ணுகின்றன. யாண்டும் பகவத் சிந்தனை யிலேயே ஊறியிருப்பவனுக்குச் சிற்சுகம் அல்லது ஆத்மா னந்தம் ஓங்குகிறது. அதற்கேற்ப அவனுடைய அறிவு அருட்பெருக்கில் ஒன்றுபடுகிறது. யாண்டும் பரமானந்தமே மேலும் மேலும் ஓங்குகிறது. காரணம் சாமானியமானது; காரியமோ மதிப்பிட முடியாத பெருநிலையாகிறது. சிந்திக் கும் தன்மை எல்லார்க்கும் இருக்கிறது. இந்தச் சிந்தனை யானது யாண்டும் தெய்வீகச் சிந்தனையாக உறுதிபெறு

மாகில் அந்த ஆத்ம சாதகனுக்குப் பிறகு தடையேதுமில்லை. மேலும் மேலும் பரத்தில் ஒன்றுபட்டுப் பரமாக அவன் மேன்மையுறுகிறான். இறைவா, என் சிந்தனையை நான் உனக்கு உரியதாக்குவேனாகில் அதிவிரைவில் நான் உன் மயம் ஆவேன் என்பது உறுதி. அத்தகைய பெருநிலையினை அருள்வாயாக என்பது இக்கண்ணியின் கருத்து.

302. என்றும்அடைந் தோர்கட்கு இரங்கார் குறிப்பு
அனைத்தும்
கன்றைஉதை காலி கதைகாண் பராபரமே.

ஏதோ சில பசுக்கள் தம் கன்றுகளைக் கிட்ட அணுக வொட்டாது உதைத்து ஓட்டும். அது அசாதாரணமான செயல். அவ்விதத்தில் ஆத்மசாதகர்களுக்கு நன்னெறியில் பெருமக்கள் உதவிசெய்ய மறுப்பார்களானால் அதுவும் அசாதாரணமான செயலாகும். ஆத்ம சாதகனுடைய தௌர் பாக்கியமென்றே அந்நிலையைப்பற்றி இயம்பவேண்டும். ஆனால் அந்த தௌர்பாக்கியத்தை ஆத்ம சாதகன் சௌ பாக்கியமாக மாற்றியமைத்துக்கொள்ளக் கற்றுக்கொள் வானாகில் அவன் பாக்கியசாலியாகிறான். இதற்குச் சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். சிறையில் வைக்கப்பட்ட சீதாபிராட்டி ராமனிடத்திருந்து பிரித்தெடுக்கப்பட்டாள். அது அவளுக்குத் தௌர்பாக்கியம். ஆனால் அந்நிலையில் வைக்கப்பட்ட அவள் ராமநாட்டத்தையும் அருள் தாகத்தை யும் பன்மடங்கு ஓங்குவித்தாள். அதன் விளைவாக ராமனி டத்தேயிருந்து அடைந்த பண்பைவிடப் பன்மடங்கு அதிக மான பண்பைச் சிறைவாசத்தில் பெற்றாள். ஆத்மசாதகன் சிறையிருந்த சீதா பிராட்டியாரை முன் மாதிரியாக வைத் துக்கொண்டு தன்னுடைய அருள் நாட்டத்தை வளர்த்து வரவேண்டும். அப்படிச் செய்கின்றவனுக்கு அடியார்களு

டைய அனுக்கிரஹம் வாய்க்காது போவது தௌர்பாக்கிய மாகாது. அடியார்களுடைய துணையைக்கொண்டும், துணை வாய்க்காவிடத்தும் அருள்நாட்டத்தை ஆத்ம சாதகன் வளர்த்துக்கொண்டே வரவேண்டும் என்பது இக்கண்ணி யின் கருத்தாகும்.

303. குற்றம் குறைய குணம்மே லிடஅருளை
உற்றவரே ஆவிக்கு உறவுஆம் பராபரமே.

உறவு—சொந்தம்; தம்தம் இயல்புக்கு ஒத்தபடியே ஒவ்வோர் உயிரும் வளர்ந்து வருகிறது. உடல் வளர்ச்சியில் மனிதனும் இந்த நியதிக்கு உட்பட்டவனாக இருக்கிறான். ஆனால் பண்பு வளர்ச்சியில் மனிதனுக்குத் தனிக்கடமை ஒன்று உண்டு. மனஅமைப்பில் ஒவ்வொரு மனிதனுக்கும் ஏற்ற இயல்பு உண்டு. மன அமைப்பை மேலானது என்றும் கீழானது என்றும் பாகுபடுத்தலாம். மேலான இயல்பு கீழான இயல்பாகக் கேடடைவதும் கீழான இயல்பு மேலான இயல்பாக முன்னேற்றமடைவதும் மனித வாழ்வில் நாம் காணலாம். கீழான இயல்புடையோர் தங்களை மேன்மைப் படுத்திக்கொள்வது அதாவது தமது இயல்பை மேலானதா கத் திருத்தியமைப்பது சாத்தியம். இயற்கை வேண்டிய அளவு வாய்ப்புத் தருகிறது. அவ்வாறு தன்னைத் திருத்தி யமைக்க மனிதன் கடமைப்பட்டுள்ளான். அவ்வாறு தன்னைத் திருத்தியமைக்கிறவன் மக்கள் இனத்தைச் சேர்ந்தவனா கிறான். மானுடனாகப் பிறந்திருப்பவனுடைய கடமை தன்னை மேலோனாகத் திருத்தியமைத்தலேயாம். வடிவத்தில் மக்க ளாய் இருப்பவர்கள் மன அமைப்பில் தேவர்களுக்கும் மேலானவர்கள் ஆகக்கூடும். அங்ஙனம் தங்களைத் திருத்தி யமைத்துக்கொண்டுவருகிறவர்கள் ஆத்ம சாதனங்கள் புரியத் தகுதியுடையவர்கள் ஆகின்றனர். அவர்களோடு

வைக்கின்ற இணக்கம் மற்ற ஆத்மசாதகர்களுக்கும் பேர் ஆதரவு அளிக்கிறது. தன்னைப் பண்படுத்தி வருகிற ஆத்ம சாதகன் யாரோடு இணக்கம் வைத்து வருகிறுன் என்பதைப் பற்றி எச்சரிக்கையாக இருக்கவேண்டும். நல்லார் இணக்கம் யாண்டும் நலன் தரும். மற்றவர்கள் இணக்கம் என்ன கேட்டை விளைவிக்கும் என்று அறுதியிட்டு இயம்ப முடியாது. இறைவா, அருள்நாட்டம் படைத்துள்ள நல்லார் களுடனேயே நான் யாண்டும் இணக்கம் வைத்து வருவேனுக என்பது இக்கண்ணியின் கருத்து.

304. ஓர்உரையால் வாய்க்கும் உண்மைக்கு ஓர்அனந்த நூல்கோடிப்
பேருரையால் பேசில்என்ன பேறுஆம் பராபரமே.

ஓர் உரை-ஒரு வேதவாக்கு. பேருரை-பலவேத வாக்கு கள். பேறு-பயன்.

சத்தியம், பிரக்ஞானம், ஆனந்தம் என்னும் சொற்களுள் எந்தச் சொல்லைச் சொன்னுலும் அது உண்மைப்பொருளை விளக்குகிறது. 'பிரக்ஞானம் பிரம்மம்' என்பது மஹாவாக் கியம். 'ஆனந்தம் பிரம்மம்' என்பதும் மெய்ப்பொருள் விளக்கம். மெய்ப்பொருளை இங்ஙனம் ஒரு சொல்லால் விளக்கி இருக்கின்றனர். ஆனுல் இவற்றின் மூலமாக உண்மையை உணர்பவர்கள் எத்தனைபேர்? மனபரிபாகம் அடைகின்றபொழுது தான் ஓர் உரையில் விளக்கும் உண் மைப் பொருள் விளங்குகிறது. 'செத்துத் தொலை' என்று சொன்னது ரமண மகரிஷிக்கு ஞான விழிப்பை உண்டாக்கி யது. அதை ஓர்ந்து ஓர்ந்து உண்மைப்பொருளை உணர்ந் தார். 'காதற்ற ஊசியும் வாராது' என்பது பட்டினத்தடி களைப் பெருவாழ்வுக்கு எடுத்துச் சென்றது. அதை ஓர்ந்து

ஓர்ந்து பிரபஞ்சத்தைத் தியாகம் செய்துவிட்டு அவர் பரத்தை நாடிச் சென்ருர். ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய நேர் சிஷ்யர் துரியானந்த சுவாமிகள். வேதாந்தத்தை அனுபூதி வாயிலாக உணர்ந்திருந்தார். அவர் பேசினது மிகவும் குறைவு. அனுஷ்டானத்தில் அவர் ஆழ்ந்து ஈடுபட்டிருந்தார். மெய்ப்பொருளைப்பற்றிப் பேருரை நிகழ்த்த வேண்டுமென மடத்திலிருந்த துறவிகள் அவரைக்கேட்டுக்கொண்டபொழுது அவர் யோகம் என்பது சித்தத்திலுள்ள விருத்திகளை அழிப்பதாகும் என்று கூறிச் சித்தத்திலுள்ள விருத்திகளை அழித்துவிட்டு வாருங்கள் அதன் பிறகு மேற்கொண்டு பேச லாம் என்று உண்மையை அடைவதற்குரிய உபாயத்தைக் காட்டித் தந்தார். உண்மையை அடைவதற்கு இத்தகைய சிறிய வாசகங்கள் போதுமானவையாயிருக்க ஏராளமான நூல்களைக் காலமெல்லாம் வெறுமனே படித்துக்கொண்டிருப் பதால் யாது பயன் என்று தாயுமானவர் கேட்கிருர். மனபரிபாகம் அடையாதவர்கள் ஏராளமாகப் பேசியும், படித் தும் காலத்தை வீணக்குகிருர்கள். உண்மைப் பொருளை உணரவேண்டுமென்ற அருள்தாகம் கொண்டவர்கள் மஹா வாக்கியம் போன்ற உண்மையை உணர்த்தும் ஒரு வாசகத் தைக்கொண்டு ஆத்மானுபூதி பெற்றுவிடுகிருர்கள். ஆத்ம ஞானம் பெறவேண்டுமென்ற அருள்தாகம் இல்லாதவர்கள் சாஸ்திரங்கள் பலவற்றைக் கற்று அறிவுச் செருக்குடைய வர்களாக வாதங்களில் இறங்குகின்றனர். கல்விச் செருக்கு பல நூல்களைப் படிப்பதால் வந்துவிடுவதுண்டு. கல்விச் செருக்கால் பயன் ஒன்றுமில்லை. கற்றதை ஆழ்ந்து சிந்தித்து அருள்நாட்டம் உடையவனுகி ஆத்மஞானம் பெறுவதில் நான் தீவிரம் உடையவனுவேனுக என்பது இக்கண்ணியின் கருத்து.

305\. சொல்லும் சமயநெறிச் சுற்றுக்கு ளேசுழலும்
அல்லல் ஒழிவதுஎன் றைக்கு ஐயா பராபரமே.

சுற்றுக்குள் - வட்டத்துக்குள்; சுழல்தல் - அகப்பட்டுக் கொள்ளுதல்; அல்லல்-துன்பம்.

மாணுக்கன் கல்வி கற்பதற்காகப் பள்ளிக்கு வருகிறுன். கல்வி கற்கும்வரை அங்கு இருப்பது அவசியம். கல்வி கற்றுன பிறகு பள்ளியைவிட்டு அவன் வெளியேற வேண்டும். காலமெல்லாம் அவன் பள்ளியிலேயே இருப்பது முன்னேற்றத்துக்கு அறிகுறியன்று. சன்மார்க்க நெறியை அறிந்துகொள்வதற்கு ஏதோ ஒரு சமய நெறியைப் பின்பற்று வது அவசியம். சன்மார்க்கநெறி எது என்று அறிந்தான பிறகு நாம் பின்பற்றிய சமயநெறிக்குள்ளேயே அகப்பட்டுக் கொண்டு சமயவெறி என்ற துன்பத்துக்கு ஆளாகிவிடக் கூடாது. ஆரம்பத்தில் ஒரு சமய நெறியைப் பின்பற்றி அதில் ஆழ்ந்து போகவேண்டும். ஆழ்ந்து போவதற்கிடை யில் எல்லாச் சமயநெறிகளும் உண்மையை அறிவதற்கு உபாயங்களாக இருக்கின்றன என்பதை அறிந்து மனத்தை விரிவடைந்து போகவும் செய்யவேண்டும். சமயநெறியில் ஆழ்ந்தும் அகன்றும் போவது நல்லது. சமயநெறி ஒன்றில் ஆழ்ந்துபோய் மனம் அகன்று போகாவிட்டால் அது வெறி யாக மாறிவிடும். ஏதாவது ஒரு நெறியில் ஆழ்ந்து போகா விட்டால் மனத்துக்கு ஒரு பிடிப்பும் உண்டாகாது. ஆனல் மக்களுள் பெரும்பாலோர் சமயப்பற்று அற்றவர்களாகவோ, சமயவெறி உடையவர்களாகவோ இருக்கிறுர்கள். அப்படி யிருப்பது சன்மார்க்கமாகாது. சமயப்பற்றுவேண்டும்; ஆனல் சமய வெறி கூடாது. சமய வெறியுடையவர்கள் சமயத்தின் பெயரால் உயிர்களுக்குப் பெருந்தீங்கு விளைவித்திருக்கிறுர் கள். சமய வெறியுடையவர்கள் தங்களை ஒரு குறுகிய வட்

டத்துக்குள் அகப்பட்டவர்களாக வைத்துக்கொள்வதோடு தங்களுடைய தெய்வத்தையும் சிறு தெய்வமாக்கிவிடுகிருர் கள். சில உயிர்களை நேசித்து, சில உயிர்களை வெறுக்கும் தெய்வத்தைச் சிறு தெய்வம் என்றுதானே பகரவேண்டும். தெய்வத்தின் பெயரால் பிற உயிர்களைத் துன்புறுத்துபவர் கள் தங்கள் தெய்வம் தங்களையே நேசிக்கிருர், மற்றவர்களை வெறுக்கிருர் என்பதைத்தானே தங்கள் செயலால் காட்டித் தருகிருர்கள். இத்தகையவர்கள் தங்களுக்குச் சிறுமையைத் தேடிக்கொள்வதோடு தங்கள் தெய்வத்துக்கும் இழுக்கைத் தேடியவர்களாகிருர்கள்.

உடலுக்குப் பலவகை உணவுகள் அவசியமாயிருப்பது போன்று உள்ளத்துக்குச் சமயநெறிகள் பல இருப்பது அவசியமாகும். அவரவர் மன இயல்புக்கேற்ற சமயநெறி யைப் பின்பற்றலாம். ஆனல் தாங்கள் பின்பற்றுகின்ற சமயநெறி வட்டத்துக்குள் அகப்பட்டுக்கொண்டு திண்டாடக் கூடாது. சமயநெறியைப் பின்பற்றுவதன்மூலம் மனத்தைத் தூய்மைப்படுத்திச் சன்மார்க்கம் எது என்பதை அறிந்து ஞானம்பெற முயலவேண்டும். இறைவா, நான் எந்தச் சமயத்துக்குள்ளும் அகப்பட்டுக்கொள்ளாது சமயச் சழக்கு என்னும் துன்பத்திலிருந்து விடுபட்டு ஞானம் அடைவதற் குரிய ஞானவான் ஆவேனக என்பது இக்கண்ணியின் கருத்து.

306. பிடித்ததையே ஸ்தாபிக்கும் பேரா ணவத்தை
அடித்துத் துரத்தவல்லார் ஆர்காண் பராபரமே.

மும்மலங்களுள் ஆணவம் ஒரு மலமாகும். அணு என் னும் அடிச்சொல்லிலிருந்து ஆணவம் என்னும் சொல் வந் துள்ளது. அணு என்ருல் மிக நுண்ணிய பொருள் என்று பொருள். ஜீவன் தன்னை ஒரு நுண்ணிய உயிராக எண்ணிக்

கொள்வது ஆணவம் எனப்படுகிறது. ஆணவம் உடைய மனிதன் தனக்கு ஒரு வியக்தியை உண்டுபண்ணிக்கொள்கிருன். தன்னை ஒரு மனிதனுகக் கருதுவது ஆணவ மலமாகும். உண்மையில் மனிதன் தெய்வசொரூபமாக இருக்கத் தன்னை மனிதனுக எண்ணிக்கொள்வது ஆணவத்தின் விளைவாகும். விவேகத்தைப் பயன்படுத்தி விசாரம் செய்து இந்த ஆணவத்தை அடித்துத் துரத்த முயலவேண்டும்.

"நாம் மனிதர்கள் அல்லர். நாம் சச்சிதானந்த சொரூபம்" என்று எவ்வளவுதான் எடுத்துப் போதித்தாலும் அவ்வுண்மை ஓரளவு நம் அறிவுக்கு விளங்குகிறதேயன்றி அனுபவத்துக்கு எட்டுவதில்லை. 'அஹம் பிரம்மாஸ்மி' என்பது மஹாவாக்கியம். நான் பிரம்மமாக இருக்கிறேன் என்பது அதன் பொருள். 'அகம் பிரம்மாஸ்மி' என்று சொல்வதற்கிடையில் சரீர உணர்வு நம்மை விட்டு அகலுவதில்லை. சரீர உணர்வு எவ்வளவுக்கெவ்வளவு அதிகம் படைத்திருக்கிருேமோ அவ்வளவுக்கவ்வளவு ஆணவம் நம்மிடத்துத் தடித்ததாக அமைகின்றது. சரீர உணர்வை வென்றவர்களே ஆணவத்தை அடித்துத் துரத்த வல்லவர்கள் ஆகின்ருர்கள். அண்டத்தின் பேரமைப்பில் தன் உணர்வை விரித்துச் செல்பவன் ஆணவத்தை அடித்துத் துரத்த வல்லவனுகிருன். இறைவா, நீயே இந்த சரீரமாய் இருக்கிருய். நீயே இந்த அண்டமாய் இருக்கிருய். இவ்வனைத்துக்கும் அப்பாலாய் இருக்கிருய். ஆனால் நான் உன்னை மறந்து இந்தச் சரீரத்தில் கட்டுண்டு கிடக்கிறேன். இந்தச் சரீர உணர்வைக் கடந்து உன்னுடைய அகண்டாகாரத்தில் என்னை லயமாக்கி என்னிடமுள்ள ஆணவத்தை அடித்துத் துரத்தும் வல்லவனுக என்னை ஆக்குவாயாக என்பது இக்கண்ணியின் கருத்து.

**307. நேசத்தால் நின்னை நினைக்கும் நினைவுஉடையார்
ஆசைக் கடலில் அழுந்தார் பராபரமே.**

உலக விஷய ஆசைகளும் கடவுளை அடையவேண்டும் என்னும் ஆசையும் ஒன்ருேடொன்று ஒவ்வா. உலக விஷய ஆசை மனிதனை மேலும் மேலும் இவ்வுலகிலுள்ள இன்ப துன்பங்களில் ஆழ்த்துகிறது. அத்தகைய ஆசை அதிகரிப் பதற்கேற்ப மனிதனுக்குச் சஞ்சலம் மிக உண்டாகிறது. மன அமைதி கலைகிறது. நவீன உலக வாழ்க்கை என்பது இவ்வுலக ஆசைகளை மேலும் மேலும் வளர்த்தலேயாம். அதன் விளைவாக மனிதனுக்கு மனச்சஞ்சலமும் அமைதியின் மையும் அதிகரிக்கின்றன. மனிதனுக்குச் சொந்தமாயுள்ள மேலான தெய்விகப் பண்புகள் மறைந்து கிடக்கின்றன. நவீன வாழ்க்கையில் மோகம் கொண்டுள்ள மக்களுக்கு உலக வியவகாரங்களே நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

அதற்கு நேர்மாருகத் தெய்வத்திடத்து அன்பை வளர்த்து வந்தால் அது உலக ஆசைகளை ஒதுக்கித் தள்ளு கிறது. உலக ஆசைகள் நிலையற்றவைகள் என்றும் துன்பத் துக்கு ஏதுவானவைகள் என்றும் பக்தன் ஒருவன் அறிய வருகிருன். தெய்விக நாட்டமும், உலக ஆசைகளும் வெளித் தோற்றத்துக்கு அவாவாகத் தென்படுகின்றன. ஆனல் அவை இரண்டுக்குமிடையிலுள்ள வேற்றுமை விளைவினின்று வெளியாகிறது. உலக ஆசைகள் மனிதனைக் கீழ்மையில் ஆழ்த்துகின்றன. தெய்வீக ஆசை மனிதனைப் படிப்படியாக மகோன்னத நிலைக்கு எடுத்துச் செல்லுகிறது. உலக ஆசை களை நிறைவேற்றுவதன் மூலமாக உண்டாகின்ற இன்பம் துன்பமாக வடிவெடுக்கிறது. கடவுள் நாட்டத்தை வளர்ப் பதால் வருகிற மனத்திட்பம் மனிதனை மேலோனுக்குகிறது.

உடலுக்கு வரும் கேடு எதுவானலும் அது அவனைப் பாதிக்காது. இவ்வுண்மையை 'நாளெரு சொல் கொள்ளாதது தோஷமன்றே' எனத் தாயுமானவர் இயம்புகிறர். அந்த ஒரு சொல் யாது? ஜீவாத்மன் உடல் சொரூபம் அல்லன். அவன் ஆத்மசொரூபம். அதைக் கேட்டறிந்து அதில் உறுதி பெற்றிருக்கிறவர்கள் பிரபஞ்ச சம்பந்தமான துன்பங்கள் எவ்வளவு வந்தாலும் அவைகளில் அவர்கள் தாக்குண்ணுர்கள். அப்பர் சுவாமிகளுக்குச் சமணர்கள் மூலம் கணக்கில் அடங்காத துன்பங்கள் வந்து சேர்ந்தன. சுண்ணும்புக்காளவாயில் போட்டு எரிக்க முயன்ருர்கள். கல்லைக் காலில் கட்டிக் கடலில் பாய்ச்சினர்கள். இச்செயல்களினல் அவர் எவ்விதத்திலும் பாதிக்கப்படாது இருந்ததற்குக் காரணம் யாது? அவர் தாம் உடல் சொரூபம் அல்ல; தாம் ஆத்ம சொரூபம் என்று உணர்ந்து அவ்வுணர்விலேயே இருந்தது தான் காரணமாகும்.

'கள்ளன் அறிவூடுமே மெள்ள மெள்ள வெளியாய்க் கலக்கவரு நல்ல உறவே' எனத் தாயுமானவர் மற்ருேர் இடத்தில் இயம்புகிறர். கள்ளனல்லாதவர் தம்மைக் கள்ளனென்று கூறுவதில் பொருள் உண்டு. தம் நெஞ்சத்தில் உறைவது பரம்பொருள் என்னும் பேருண்மை வாசா ஞானத்தின் மூலமாக அவருக்குத் தெரிந்திருந்தது. அப்படியிருந்தும் பரமனைப் பொருள்படுத்தாது மறந்திருந்தது கள்ளனுடைய செயலுக்கு நிகராகிறது. தனக்குக் கிடைத்தபொருளை இல்லையென்று மறைத்து வைப்பது திருட்டுச் செயலாகிறது. இறைவனைப் புறக்கணித்ததைக் கள்ளனுடைய செயல் என்றே அவர் தம்மீது குற்றம் சாட்டுகிறர். கள்ளாது கட்டுண்ணவும் அவர் தம்மைத் தாமே செய்து கொண்டார். இனி ஆத்ம சாதகன் ஒருவன் அப்படிச் செய்யலாகாது. இறைவனுடைய

சாந்நித்தியத்தை இடையருது உள்ளத்தில் உணரவேண்டும். இதுவே இக்கண்ணியில் அடங்கியிருக்கும் கருத்து ஆகும்.

309. சென்றஇடம் எல்லாம் திருஅருளே தாரகமா
நின்றவர்க்கே ஆனந்த நிஷ்டை பராபரமே

தாரகம்-ஆதாரம். ஆத்ம சாதனத்தில் ஈடுபட்டுமுறை யான வாழ்க்கை வாழக்கூடியவர்களும் ஏதேதோ காரணங் களை ஒட்டி வெவ்வேறு இடங்களுக்குச் சென்று வரவும் புதிய புதிய சூழ்நிலைகளில் புதியவர்களோடு பழகவும் நேரிடுகிறது. சாதனத்தில் முதிர்ச்சி பெருதவர்கள் இட வேறுபாட்டாலும் மற்ற காரணங்களாலும் வாழ்வின் ஆதார மான திருவருளை மறந்து புதிய இடத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப வாழ்பவர்களாக இருந்து வருகின்றனர். அவ்வாறு தமது மனப்பாங்கை அடிக்கடி சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றினுல் சாதனத்தின் முடிந்த நிலையாகிய நிஷ்டை கைகூடாது.

எனக்குத் தாரகமாக அல்லது இருப்பிடமாக அமைந் திருப்பது திருவருளே ஆகும். இறைவா, நான் எங்குச் சென் ருலும் எத்தகைய சூழ்நிலையில் இருந்தாலும் எத்தகைய வர்களோடு இணக்கம் வைத்திருந்தாலும் உன்னுடைய சாந்நித்தியத்திலேயே நிலைபேறு உடையவனுக இருக்கும் பாக்கியத்தையும் அதன் விளைவாக வருகின்ற பேரானந்த நிஷ்டையையும் கொடுத்தருள்வாயாக எனத் தாயுமானவர் வேண்டுகின்ருர்.

310. நீட்சி குறுகல்இல்லா நித்யசுகா ரம்பஜக
சாக்ஷிஆம் உன்னைவந்து சார்ந்தேன் பராபரமே.

சுகாரம்பஜக-சுகாரம்பத்தோடு இணைந்திருக்கிறது.

நீட்டுதல், குறுக்குதல் சில பொருள்களில் அமைகின் றன. நீட்டுதல் குறுக்குதல் பேசுகின்ற பேச்சிலும் அமை

கிறது. நீட்டுதல் குறுக்குதல் காலத்தைப் பயன்படுத்துவதில் அமைகிறது. நீட்டுதல் குறுக்குதல் நாம் வசித்து வரும் நில உலகில் செய்து கொள்ளலாம். ஆனல் நீட்டுதல் குறுக்குதல் வெட்டவெளியாகிய ஆகாசத்தின்கண் செய்ய முடியாது. அது யாண்டும் அகண்டமாகவே இருந்து வருகிறது. பஞ்சபூதங்களில் ஆகாசம் ஒன்றே பரதத்துவத்துக்கு ஏகதேசம் விளக்கமாகிறது. ஆகாசத்துக்கு எப்படி எல்லே கட்ட முடியாதோ அங்ஙனம் பரமாத்மனுக்குரிய நித்திய சுகத்தை அல்லது அகண்டமாயுள்ள ஆனந்தத்தை நீட்டவோ குறுக்கவோ முடியாது. அஞ்ஞானத்திலிருக்கும் ஜீவாத்மன் பிரபஞ்சத்தோடு தன்னை இணைத்துக்கொண்டு இடையிடையே சிறு சிறு இன்பங்களை அனுபவிப்பதில் திருப்தி அடைந்திருக்கிருன். ஆத்ம சாதகர்கள் அவ்வாறு வாழ்வது சரியன்று. ஆத்ம சாதனத்தை மறந்திருக்கும் ஜீவாத்மன் சாதனத்தை ஞாபகத்துக்குக் கொண்டுவருகின்ற பொழுது சுகஆரம்பத்தோடு இணைதல் எனப் பொருள்படுகிறது. தோற்றம், ஒடுக்கத்துக்கு நித்திய சுகமாகிய ஆத்மா சாட்சியாய் இருப்பதால் சாட்சியாம் உன்னை வந்து சார்ந்தேன் எனத் தாயுமானவர் பகர்கிருர். அகண்டாகார சித்சொருபத்தில் திளைத்திருப்பது வாழ்க்கையின் குறிக்கோள் என்பது இக்கண்ணியின் கருத்து.

311. **வான்ஆதி தத்துவமாய் மன்னிநின்ற காரணநீ**
நான்ஆகி நிற்பதுஎந்த நாளோ பராபரமே.

வான் - ஆகாயம்; தத்துவம் - மெய்ப்பொருள்; மன்னி நிற்பது-நிலைபெற்றிருப்பது; நீ-நானுகி நிற்பது. யாவற்றிற்கும் ஆதிமூலமாகிய காரணப் பரம்பொருளாகிய நீ (நானுகிய) ஜீவபோதமுடைய என்னிடத்துக் கலந்து நிற்பது.

பரவஸ்துவே ஜகத்தாகவும், ஜீவகோடிகளாகவும் தன்னைத் தோற்றுவித்துக்கொண்டு மாயப் பிரபஞ்சமாக விளையாடுகின்றார். ஆகாசம், வாயு, அக்னி, அப்பு, பிருதிவி ஆகிய பஞ்சபூதங்களாய்ப் பரிணமித்திருப்பது பரமன். சாங்கிய தர்சனத்தில் பகர்ந்துள்ள இருபத்து நான்கு தத்துவங்கள் சமயங்களுள் முப்பத்தாறு தத்துவங்களாகவும், தொண்ணூற்றாறு தத்துவங்களாகவும் கருதப்பட்டிருக்கின்றன. இந்தத் தத்துவங்கள் யாவும் ஜடவஸ்துவாயுள்ள ஜகத்தாகக் கருதப்படுகிறது. அதற்கு மூலகாரணமாயிருப்பவர் பரமாத்மன். அதே பரமாத்மன் ஜீவகோடிகளாகவும் பரிணமித்துள்ளார். ஒவ்வோர் ஜீவனும், தனக்குத் தனி வியக்தி உண்டு எனக் கருதி வருகிறான். அத்தகைய எண்ணமே ஜீவவியக்தியை நிலைத்திருக்கச் செய்வதற்குக் காரணமாகிறது. தனக்குத் தனி வியக்தி உண்டு என்னும் மயக்கத்தில் மூழ்கிக்கிடக்கும் அனந்தங்கோடி ஜீவர்களுக்கிடையில் நானும் ஒருவன். இப்போது நான் பெற்றுள்ள தடித்த ஜீவபோத நிலையினைத் துடைத்தால்தான் மெய்க்காட்சி கிட்டுமென என் யுக்திக்கு (அறிவுக்கு) விளங்குகிறது. ஆகையால் என்னுள் வந்து கலந்து ஜீவபோதத்தைத் துடைத்து உன்மயமாக்குவாயாக. அப்போது ஆதி காரணனாகிய நீயும் நானும் ஒன்றாகிவிடுவோம். அவ் ஐக்கியநிலை வெகுவிரைவில் வாய்க்கவேண்டும் என்பதே இக்கண்ணியின் கருத்து.

312. காஷ்டத்தில் அங்கி கடையவந்தால் என்னஉன்
னும்
நாட்டத்தி னூடுவந்த நட்பே பராபரமே.

காஷ்டம் - விறகுக் கட்டை; உன்னுதல் - நினைத்தல்.

பழங்காலத்தில் அரணி என்னும் ஒரு மரக்கட்டையை ஒருபீடத்தின்மீது வைத்து விரைந்து கடைவார்கள். அப்படிக் கடைவதால் அந்த அரணிக்கட்டையில் உஷ்ணம் கிளம்பித் தீப்பற்றிக்கொள்ளும். அப்படி உண்டுபண்ணிய நெருப்பை வேள்விக்கும் ஏனைய வீட்டுக் காரியங்களுக்கும் பயன்படுத்தினார்கள். விறகுக் கட்டையில் அக்னி தோன்றா நிலையில் புதைந்திருக்கிறது என்னும் கோட்பாடு இதனின்று வெளியாகிறது. அதே விதத்தில் ஜட சொரூபமாயுள்ள மனோ தத்துவத்தில் சேதனம் மறைந்திருக்கிறது என்னும் கோட்பாட்டை அக்ஞானத்திலிருக்கும் ஜீவாத்மன் அறிந்துகொள்வதில்லை. விறகுக் கட்டையில் அக்னி மறைந்திருப்பதற்கொப்ப மனத்தினுள் பரமன் மறைந்திருக்கிறான் என்னும் உண்மையைக் கேள்வியின் மூலமாக அறிந்து அப்பரமனைப் பற்றியே ஆழ்ந்து எண்ணவும் மனத்தின் நாட்டமனைத்தையும் அவன்பால் திருப்பவும் செய்தால் கிருபை கூர்ந்து அவன் தன்னுடைய சாந்நித்தியத்தை வெளிப்படுத்துகிறான். அப்படி வெளிப்படுத்தும்பொழுது அவன் ஜீவாத்மனை ஆட்கொள்ளுதற்கென்றே காத்திருந்தவன் என்ற உண்மையும் ஆத்மசாதகனுக்கு அப்பொழுது விளங்குகிறது. 'கள்ளன் அறிவூடுமே மெள்ளமெள வெளியாய்க் கலக்கவரு நல்லஉறவே' என்று தாயுமானவர் மற்றோர் இடத்தில் பகர்ந்தருளியுள்ளார். ஜீவாத்மனுக்கு உண்மையான உறவு அல்லது நட்பு பரமனிடத்தே இருக்கிறது. அத்தகைய கருணாகரா, நீ என்னை ஆட்கொள்ளுவதற்குச் சர்வகாலமும் உள்ளத்தினுள்ளே மறைந்திருக்கின்றாய். அத்தகைய உன்னை உள்ளன்போடு எண்ணவும் முயற்சி முழுதையும் உன்னிடத்தே செலுத்தவும் கற்றுக்கொள்வேனாக. என்னுடைய உண்மை நண்பனாகிய நீ அப்பொழுது எனக்கு உன் போதத்தை அருள்வாய் என்பது இக்கண்ணியின் கருத்து.

313. நித்திரையாய்த் தானே நினைவுஅயர்ந்தால்
நித்தம்நித்தம்
செத்தபிழைப்பு ஆனதுஎங்கள் செய்கை பராபரமே.

அயர்தல் — ஓய்தல்; நித்தம் நித்தம் — நாள்தோறும். ஜீவாத்மாக்களாகிய எங்களிடத்து ஓர் அதிசயம் உள்ளது. ஜாக்ரதம், சொப்பனம், சுஷுப்தி அல்லது நனவு, கனவு, கனவற்ற உறக்கம் ஆகிய மூன்று நிலைகளில் மாறி மாறி இருப்பது மக்களின் பாங்கு ஆகும். நனவு அல்லது ஜாக்ரத அவஸ்தையில் புறத்திலுள்ள மாயப்பிரபஞ்சத்தோடு ஜீவாத்மன் வெவ்வேறு விதங்களில் தொடர்பு வைக்கிறான். கனவு அல்லது சொப்பனவஸ்தையில் அவன் தனக்குத் தானே அவனுடைய மனத்தில் விசாலமான ஓர் உலகை உண்டுபண்ணிக்கொள்கிறான். நனவில் அனுபவிக்கின்ற அனுபவங்கள் அனைத்தையும் கனவிலும் ஜீவாத்மன் அனுபவிக்கிறான். நனவில் தென்படுவது பிரம்மதேவனுடைய சிருஷ்டி. கனவில் தென்படுவது ஜீவாத்மனுடைய சிருஷ்டி. பிரம்மதேவனுக்கு நிகராக ஜீவாத்மன் தனக்காகவென்று ஒரு தனி உலகை உண்டுபண்ணிக்கொள்ள வல்லவனாயிருக்கிறான். பிறகு அவன் சுஷுப்தி அவஸ்தைக்குச் சிறிது நேரமாவது போகிறான். நினைவு மயமாயுள்ள மனம் அயர்ந்த உறக்கத்தில் சிறிது நேரத்துக்கு ஒடுங்கியிருக்கிறது. அப்பொழுது ஜீவாத்மனுக்குப் புறவுலகுமில்லை; அகவுலகுமில்லை; ஜீவ வியக்தியுமில்லை. செத்தவனுக்கு நிகராகிறான். சாவு என்றால் என்ன என்பதை சுஷுப்தி அவஸ்தையில் ஜீவன் நாள்தோறும் அறிந்துவருகிறான். தூங்கப்போகிற ஒரு ஜீவன் பெருந்தூக்கமாகச் செத்துப்போவதுமுண்டு. நாள்தோறும் மரணத்தை அனுபவத்து வருகிற ஜீவாத்மன் பிழைத்திருப்பதாகவும் தன்னைப்பற்றி எண்ணிக் கொள்

கிறுன். ஜீவாத்மனுடைய ஜீவநிலை நிலையற்றது என்பதற்கு நனவு, கனவு, அயர்ந்த உறக்கம் ஆகிய மூன்று அவஸ்தை களே அத்தாட்சியாகின்றன. இவை நாள்தோறும் நிகழ்ந்து வருகின்றன. அப்படியிருந்தும் ஜீவாத்மன் ஒருவன் தனக்கு நிலைபேறு உண்டு எனக் கற்பனை பண்ணிக்கொள்வது மயக் கத்தாலேயாம். அத்தகைய மயக்கம் தெளிந்து மூன்று அவஸ்தைகளுக்கும் அப்பாலிருக்கும் பரம்பொருளோடு யோகம் பண்ணுவதுதான் மானுட வாழ்க்கையின் குறிக் கோள் என்பதை எங்களுக்கு இறைவா, நினைவூட்டுவாயாக என்பது இக்கண்ணியின் கருத்து.

314. இன்பநிஷ்டை எய்தாமல் யாதுஎனினும் சென்றுமனம்
துன்புறுதல் வன்பிறவித் துக்கம் பராபரமே.

இன்பநிட்டை — பரம்பொருளோடு சர்வகாலமும் கூடி யிருத்தல்.

மனிதனும் ஏனைய உயிரினங்கள் போலவே பஞ்சேந் திரியங்களின் வாயிலாக இன்பத்தைப்பெற விரும்பித் துன் பத்தில் சிக்கிக்கொள்கிறுன். இன்பத்தை நாடித் துன்பத் தைப் பெறுவது உயிர்வாழ்க்கையின் விளைவு ஆதலால் பிறவியானது வன்பிறவி என ஈண்டு இயம்பப்படுகிறது. சிற்றுயிர்களிடத்து மனம் என்னும் அந்தக்கரணம் சிறிது சிறிதாகப் பரிணமிக்கிறது. மனிதனிடத்து அது உச்சநிலை எய்துகிறது. ஆதலால் மனத்தையுடையவன் மனிதன் என் னும் கோட்பாடு வந்துள்ளது. மனமானது புறப்பொருள் களை நாடாது பரம்பொருளை நாடிச் செல்லுமாகில் அது நிரந் தரமான இன்பமாக வடிவெடுக்கிறது. மனிதனது பயிற்சிக் காகப் புறவுலகைப் பயன்படுத்த வேண்டும். மனநாட்ட மானது யாண்டும் பரமனுக்குரியதாகவேண்டும். அப்பொழுது

மாருத இன்பத்தை அடையலாம். மானுடப்பிறவியின் மேலான நோக்கம் கடவுள் நாட்டம் பூணுதல். அத்தகைய முயற்சியிலும் இன்பம் இருக்கிறது. அம்முயற்சியானது நிறைநிலையை எட்டுகின்ற இடத்தும் இன்பம் இருக்கிறது. அங்ஙனம் பேரின்பம் பரமனுடைய சந்நிதானத்தில் இருக்கிறது. மனிதனோ அதைப் புறக்கணித்து விட்டு நிலையற்ற பிரபஞ்சத்தில் இன்பத்தைத் தேடித் துக்கத்தை வரவழைத்துக்கொள்ளுகிறான். இறைவா, துன்பம் தருகிற பிரபஞ்சத்தில் என் பிறவியைப் பாழாக்காமல் உன்னிடத்திலேயே மெய்யான பேரின்பத்தை நான் நாடியிருப்பேனாக என்பது இக்கண்ணியின் கோட்பாடு.

315. பொய்அகல மெய்ஆன போதநிலை கண்டோர்க்குஓர்
ஐயம்இலை ஐயம்இலை ஐயா பராபரமே.

போதநிலை-பரம்பொருள் உணர்ச்சியில் திளைத்திருத்தல். திருடன் ஒருவன் கார் இருளில் வீடு ஒன்றனுள் நுழைகிறான். ஒவ்வொரு பொருளாக அவன் தடவிப்பார்க்கிறான். ஒவ்வொன்றையும் 'இஃது அன்று, இஃது அன்று' என்று ஒதுக்கித் தள்ளி விட்டுப் பெட்டிக்குள் இருக்கும் பணப்பையைத் தொடுகிறான். அதைக் குலுக்கிப் பார்க்கிறான். தான் நாடியது அதுதான் என்று அவன் முடிவு கட்டுகிறான். அதை எடுத்துக்கொண்டு அவன் வெளியேறுகிறான். அப்படி அவன் செய்கின்ற செயலுக்கு நிகரானது பரநாட்டம் பூணுதல். மையல் ஊட்டுகின்ற பிரபஞ்சப் பொருள்கள் மனிதனை ஏமாற்றுகின்றன. இன்பம் தருவன போன்று அவை மனிதனைக் கவர்ந்திழுத்துப் பிறகு துன்பத்தைத் தருகின்றன. ஆகையால் அவை பொய்யானவை எனப் புறக்கணிக்கப்படுகின்றன. பரம்பொருள் நாட்டம் பூணுதலில் தெளிவு உண்டு. அதற்குப் படாதபாடுபடுதலில்

தெளிவு உண்டு. பரம்பொருளை அடையப் பெறுதலில் தெளிதல் உச்சநிலைக்கு வருகிறது. மனந்தெளிதலே போத நிலை எனப் பகரப்பெறுகிறது. பரம்பொருள் உணர்ச்சியில் சர்வகாலமும் மூழ்கியிருப்பது போதநிலையாம். போதநிலையில் துன்பத்தை அனுபவித்தல் என்னும் எதிர்மறைச்செயல் இல்லை. தெவிட்டாத பேரின்பமே ஆங்கு மேலும் மேலும் ஓங்குகிறது. அப்படி அது ஓங்குவதால் அந்நிலை என்றும் இருக்கக் கூடியதா, சிறிது காலம் இருந்து பிறகு அழிந்து பட்டுப்போகக்கூடியதா என்னும் ஐயம் உள்ளத்தில் எழுவதில்லை. ஆதலால் ஐயமில்லை ஐயமில்லை என்று இரண்டு முறை அவ் உண்மை வற்புறுத்திக் கூறப்படுகிறது. யாண்டும் மனிதனுக்குச் சொந்தமாயிருப்பது பரவஸ்து. ஆதலால் அவ்வஸ்துவானது ஐயா என அழைக்கப்பெறுகிறது. அநித்தியமாயுள்ள உலக பாசங்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு யாண்டும் மனிதனுக்குச் சொந்தமாயுள்ள பரவஸ்துவினிடத்துப் பேரானந்தத்தைக் கண்டு அதிலேயே திளைத்திருப்பது குறிக்கோள் என்பது இக்கண்ணியின் கருத்தாகும்.

316. மந்திரத்தை உன்னி மயங்காது எனக்குஇனிஓர்
தந்திரத்தை வைக்கத் தகாதோ பராபரமே.

அம்பிகையின் உபாசனையில் யந்த்ரம், மந்த்ரம், தந்த்ரம் என்னும் மூன்று சொற்கள் அந்த மார்க்கத்துக்குத் திறவு கோல்களாக வந்தமைகின்றன. யந்த்ரம் என்றால் கருவி. மனிதனுக்கு மானுட சரீரமே யந்த்ரமாக அமைந்திருக்கிறது. எனக்கு என்னும் சொல் இக்கண்ணியில் யந்திரத்தைக் குறிக்கிறது. யந்த்ரமாகிய சரீரத்தைக் கடவுள் வழிபாட்டுக்கு உரியதாகப் பண்ணுவது தந்த்ர சாஸ்திர முறையாகும். தெய்வ வழிபாட்டுக்குரிய மந்த்ரங்களை அல்லது மேலாம்

கருத்துக்களை முறையாகக் கையாள்வதும் ஒரு தந்த்ரமாகும். தந்த்ரம் என்னும் சொல் நேர்வழி எனப்பொருள்படுகிறது. அம்பிகை உபாசனை செய்கின்றவர்களுக்கு யந்திரமாகிய உடல் தேவாலயமாகப் பாதுகாக்கப்படுகிறது. மந்த்ரத்தை அல்லது எண்ணங்களையெல்லாம் குறியின் கண்ணே செலுத்துவது அம்பிகையின் அருளைப் பெறுதற்கு உற்ற உபாயமாகிறது. அருளைப் பெறுவது குறிக்கோள். அதன் பொருட்டுத் தான் எடுத்துள்ள தேகத்தைத் தன்னுடையது என்று கருதாது அது தெய்வத்துக்குரிய ஆலயமெனக் கருதி அந்தத் தெய்வத்தின்கண் தன் மனத்தை ஒடுக்குதல் சாதனத்தின் குறிக்கோள் ஆகிறது. தந்திரமாக ஒரு காரியத் தைச் செய்தல் என்பது முறையாகவும் வெற்றிகரமாகவும் அதைச் சாதித்தல் எனப் பொருள்படுகிறது. அம்பிகை வழிபாட்டுக்குரிய தந்த்ர சாதனங்கள் அனைத்தும் தேகத் தைத் தெய்வத்துக்கு உரியதாக்கிப் பிறகு மனத்தையும் அத்தெய்வத்திலேயே ஒடுக்குதலாம். அப்படிச் செய்வதே மேலான தந்த்ரமாகிறது. வண்டி ஒன்றில் ஊர்ந்து ஓர் ஊருக்குப் போகிறோம். ஊரை எட்டியான பிறகு வண்டி அவசியமில்லை. அந்த வண்டிக்கு நிகர் மனம். மனத்தில் உண்டாகிற விருத்திகள் அனைத்தும் ஆத்மசாதகனுக்கு மந்த்ரங்களாகின்றன. மனம் ஒடுங்கப்பெறுவது சாதனத்தின் இலட்சியம். மனம் ஒடுங்குங்கால் மந்த்ரங்களும் தாமாக நின்றுவிடுகின்றன. மனம் ஒடுங்கிய பிறகு மந்த்ரத்தை ஓதித் திண்டாடுதல் என்பது தானே நின்றுவிடுகிறது. தெய்வக் காட்சியை அடையப்பெற்றான பிறகு அந்தத் தெய்வத்தைக் குறித்து மந்த்ரம் ஓதுதற்கு இடமில்லை. உடல் உணர்ச்சி தானாகவே மறைந்துபோகிறது. அத்தகைய பெருநிலையை அதிவிரைவில் இறைவா, எனக்குத் தரமாட்டாயா என வேண்டுதல் இக்கண்ணியின் கருத்து.

317. விண்கருணை பூத்ததுஎன்ன மேவிஉயிர்க்கு உயிராய்த்
தண்கருணை தோன்றஅருள் தாய்நீ பராபரமே.

மேவுதல்—அடைதல்; தண் கருணை—இனிய அருள்.

விண்கருணை பூத்தல் என்பது சித் ஆகாசத்தில் கருணை என்னும் புஷ்பம் மலர்தல் எனப் பொருள்படுகிறது. கருணை ததும்பியுள்ள புஷ்பத்தை சித் ஆகாசமானது யாண்டும் தூவிக்கொண்டே இருக்கிறது. அதற்கு ஓய்வு ஒழிச்சல் இல்லை. இத்தகைய கருணையைப் பரமஹம்சர் வேறோர் பாங்கில் பகர்கிறார். இறைவனுடைய அருள் என்னும் தென்றல் சதா வீசிக்கொண்டேயிருக்கிறது. அதில் எப்பொழுதும் குறைவு ஏற்படுவது இல்லை. எப்பொழுது வேண்டுமானாலும் ஆத்மசாதகன் அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம். அருள் பூமாரியை இறைவன் சதா வாரி வழங்கிக்கொண்டே இருக்கிறான். அது நமக்குப் புலப்படாவிட்டால் அது நம்முடைய குற்றமாகும். அதைப் பயன்படுத்தத் தெரிந்து கொள்ளாதிருந்தாலும் நம்முடைய குறைபாடாகும். நம்முடைய ஆணவத்தையும் அகங்காரத்தையும் ஒதுக்கித் தள்ளிவிட்டுப் பரம்பொருளினிடத்து நாம் விண்ணப்பிக்கின்றபொழுது கருணை என்னும் பூமாரிக்கு நாம் சொந்தமாகிறோம். சந்திர வெளிச்சத்துக்கு மூலகாரணமாய்ச் சூரியப் பிரகாசம் இருப்பதுபோன்று நம்முடைய உயிர்க்குயிராய் இறைவனுடைய இனிய கருணை நம்மை யாண்டும் தாங்கிக் கொண்டே இருக்கிறது. சாதனத்தில் நாம் பக்குவமடைகின்றபொழுது அவ்வுண்மை நமக்கு விளங்குகிறது. இறைவன் யாண்டும் நமக்குத் தந்தையாயும் தாயாயும் இலங்குகின்றார். மெய்ப்பொருளின் கருணைக்கு நாம் இலக்காகின்றபொழுது அப்பரம்பொருளைத் தாய் எனக் கருதுவதில்

நமக்குத் திருப்தி மிக உண்டாகிறது. உயிருக்குயிராய் இருக்கும் தாயே, நான் உய்வடைதல் பொருட்டு உன்னிடத்தில் சதா விளங்கிக்கொண்டிருக்கின்ற பேரருளை எனக்கு எடுத்து வழங்குவாயாக என்பது இக்கண்ணியின் கருத்து.

318. தன்மயமாய் நின்றநிலை தானேதான் ஆகிநின்றால்
நின்மயமாய் எல்லாம் நிகழும் பராபரமே.

தன்மயம் என்பது பரவஸ்துவுக்குச் சொந்தமாயுள்ள பேரின்பப் பெருநிலையாம். அப்பெருநிலையை உணர்ந்து உய்வடைவதற்கு இடையூறாயிருப்பது நான் என்னும் அகங்காரம். அகங்காரம் பிடித்து அக்ஞானத்தில் உழல்கின்ற ஜீவாத்மன் தன் செயலுக்குத் தானே கர்த்தாவாக எண்ணிக்கொள்கிறான். அதனால் அவன் இன்ப துன்பங்களுக்கு ஆளாகிறான். பரமன் தானே பிரபஞ்சமாகவும், அதில் இருக்கும் எண்ணிறந்த ஜீவகோடிகளாகவும் இலங்குகின்றான். இவ்வுண்மையை அறியாதிருக்கும் பரியந்தம் ஜீவாத்மன் எத்தனை எத்தனையோ இன்ப துன்பங்களுக்கு ஆளாகிறான். நெடுங்காலம் அவன் அல்லல்பட்டான பிறகு தன்னுடைய ஜீவ வியக்தியைப் பரமனிடம் ஒப்படைக்கிறான். அச்செயல் தஞ்சம் அடைதல் எனவும் அடைக்கலம் புகுதல் எனவும் சரணாகதி அடைதல் எனவும் பிரபத்தி அடைதல் எனவும் பெயர் பெறுகிறது. பிரபஞ்சத்தில் நிகழ்வன யாவும் பரமன் செயல் எனவும் பிரபஞ்சமாகவும் உயிர் வகைகளாகவும் இலங்குபவன் பரமனே என்னும் மெய்யுணர்வு உதயமாகும்பொழுது ஜீவாத்மன் இன்ப துன்பங்களுக்கு அப்பாலுள்ள பெருநிலையை அறிய வருகிறான். அவ் உண்மையை அனுபூதியில் அறிகிறவன் ஜீவன் முக்தன் ஆகின்றான் என்பது இக்கண்ணியின் கருத்து.

319. ஏங்கிஇடை யும்நெஞ்சம் ஏழையைநீ வாஎன்றே
பாங்குபெறச் செய்வதுஉன்மேல் பாரம் பராபரமே.

ஏங்குதல்—அருள்தாகம் பிடித்திருத்தல்; இடைதல்—சோர்வுற்று இருத்தல்; பாங்கு பெறுதல்—நன்மை அடைதல்.

ஜீவப் பிரயத்தனமும் இறைவனுடைய திருவருளும் ஒன்றித்திருக்குமிடத்து ஆங்கு யோகநிலை பூர்த்தியாகிறது. ஜீவாத்மன் செய்கின்ற முயற்சிகள் அனைத்திலும் மிக முக்கியமாயிருப்பது பரம்பொருளினிடத்துத் தன் குறைகளை எடுத்துரைத்து அவையாவற்றையும் நிறைநிலையாகச் செய்தருளவேண்டும் என விண்ணப்பிப்பதாம். சிறு குழந்தை ஒன்று ஏதேனும் ஒன்றைத் தன்போக்கில் பெற முயலுகிறது. அதை அடையப்பெற அக்குழந்தையால் முடியாது போய்விட்டால் அது தன் தாயிடம் சென்று பரிந்து அழுது அதைத் தனக்கெடுத்து வழங்கவேண்டும் என்று கேட்கிறது. ஆத்ம சாதகனொருவன் அதே மனநிலையைத் தன் வழிபடு தெய்வத்திடத்துக் கண்ணீரும் கம்பலையுமாக வரவழைத்துக் கொள்ளவேண்டும். 'வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே' என்கின்றார் மாணிக்கவாசகர். பக்தர்கள் எல்லார்க்கும் அதுவே கோட்பாடாகிறது. ஜீவாத்மன் பக்தி பூண்டு பரமாத்மாவிடம் ஓரடி போவானாகில் பரமாத்மாவானவர் அருள்சுரந்து பத்தடி அந்தப் பக்தனை நோக்கி வருகிறார் என்று பரமஹம்ச தேவர் பகருகிறார். அப்படி அவர் பகருவது அவருடைய அனுபூதியின் விளைவு. அருள்தாகம் பிடித்துள்ள அவ் அரிய கூற்று பெரிய ஆறுதலைத் தருகிறது. அதே அருள்தாகம் இக்கண்ணியிலும் பொலிகிறது. 'அருள் தாயே, என்னைக் காப்பாற்றுவது உன்னுடைய பொறுப்பு' என்று ஆத்ம சாதகன் பாரத்தையெல்லாம் பரமனிடத்தில் ஒப்படைக்கிறான் என்பது இக்கண்ணியின் கருத்தாகும்.

320. ஆண்டநின்னை நீங்கா அடிமைகள்யாம் ஆண வத்தைப்
பூண்டதுஎன்ன காமம் புகலாய் பராபரமே.

இறைவா, நீ ஆண்டவன். நாங்கள் உன்னுடைய அடிமைகள். உனக்கும் எங்களுக்கும் உள்ள இணக்கத்தை ஓர் உபமானத்தால் இயம்பலாம். கடல் இருக்கிறது. அந்தக் கடலுக்கு நிகரானவன் நீ. கடலில் வடிவெடுக்கின்ற எண்ணிறந்த அலைகளுக்கு நிகரானவர்கள் நாங்கள். அலைகள் என்றைக்குமே கடலுக்குப் புறம்பாக இருக்கமுடியாது. காற்று வீசுவதால் அலைகள் வடிவெடுக்கின்றன. காற்று அடியாதிருக்கும்பொழுது கடலும் அலையற்று இருக்கிறது. அலைகளுக்கு நிகரான ஜீவர்களாகிய எங்களுக்கு ஆணவம் எப்படி வந்தது? ஆணவம் படைத்தவர்களிடத்தும் கர்மம் சதா இருந்துகொண்டு இருக்கிறது. ஆணவத்திலிருந்து கர்மம் வந்ததா? கர்மத்தினின்று ஆணவம் வந்ததா? என்பது எங்களுக்கு விளங்கவில்லை. ஆணவம் என்பதற்குச் செருக்கு என்பது வருவிக்கப்பட்ட விளக்கமாகிறது. அணுத்தன்மை எய்துவது ஆணவம் என்பதன் மூலக்கருத்து. வடிவம் அற்று இருப்பதற்கு, வடிவம் கொடுப்பது அணுவின் செயலாகும். அலைக்கு வடிவம் உண்டு. கடலுக்கு வடிவமில்லை. அலை படைத்திருக்கிற வடிவம் பொருளற்றது. ஆகாய விமானத்தினின்று கீழே பார்க்கின்றபொழுது கடல்மட்டும் தென்படுகிறது. அலைகள் தென்படுவதில்லை. பெயரளவில் உள்ள அலைகள் கடலுக்குப் பக்கத்திலிருந்து பார்க்கிற பொழுது வடிவுடைத்திருக்கின்றன. வானத்தில் உயரத்திலிருந்து பார்க்கிறபொழுது அலைகள் இருந்தும் அவைகள் தென்படுவதில்லை. அதே விதத்தில் ஜீவாத்மன் ஒருவன் தன்னை ஒரு தனி வியக்தியாக அபிமானிக்கும்பொழுது அது

ஆணவமாகிறது. அபிமானத்தை ஒடுக்குமிடத்து ஆணவமு மில்லை. ஜீவவியக்தியும் இல்லை. பரபோதத்தில் ஊறி யிருக்கிறபொழுது உடலைக்கொண்டும், உள்ளத்தைக்கொண் டும் செய்கின்ற கர்மங்கள் தம் போக்கில் நிகழ்ந்துகொண் டிருக்கின்றன. கர்மத்துக்குத் தன்னைக் கர்த்தாவென்று அபிமானிக்கின்றபொழுது மட்டும் கர்மம் அந்த ஜீவனுக் குச் சொந்தமாகிறது. ஆக, தன்னை ஒரு ஜீவன் என்று ஜீவாத்மா அபிமானிக்கின்றபொழுது அவன் ஜீவனாகின்றான். கர்மத்துக்கும் அவன் கர்த்தாவாகின்றான். அபிமானத்தை ஒடுக்கியவிடத்து ஜீவபோதமில்லை. கர்த்ருத்துவம் அல்லது கர்வம் என்கின்ற உணர்வும் இல்லை. இதற்கு அயர்ந்த நித்திரையே சான்றாகிறது. அயர்ந்த நித்திரையில் ஜீவ வியக்தியும் இல்லை. சரீரத்தில் நிகழ்கின்ற கர்மங்களுக்குக் கர்த்ருத்துவமுமில்லை. ஆனால் ஜாக்கிரதாவஸ்தையில் ஜீவ னுக்கு எப்படியோ ஜீவபோதம் வருகிறது. ஜீவபோதத்தை ஒழித்தால் கர்மமும் ஒழிகிறது. அப்படியிருக்க அனுவசிய மாக ஜீவவியக்தியை எனக்கு நான் உண்டுபண்ணிக்கொள் கிறேன். அதை ஒழிப்பதற்கு இறைவா, நீ உபாயம் கொடுத் தருள்வாயாக என்பது இக்கண்ணியின் கருத்து.

321. எங்கணும்நீ என்றால் இருந்தபடி எய்தாமல்
அங்கும்இங்கும் என்றுஅலையல் ஆமோ பராபரமே.

ஆகாசத்தை நாடி எங்குமே போகவேண்டிய அவசிய மில்லை. இருக்குமிடமெல்லாம் ஆகாச மயமாய் இருக்கிறது. இந்த ஜட ஆகாசமே பின்பு சித் ஆகாசமாகவும் மிளிர்ந்து கொண்டிருக்கிறது. ஜட ஆகாசம் பிரளயத்தில் ஒடுங்கு கிறது. ஆனால் சித் ஆகாசமோ சிருஷ்டியிலோ பிரளயத் திலோ கட்டுப்படவில்லை. அது யாண்டும் தன்மயமாய் இருக்கிறது. எங்கும் வியாபகமாயுள்ள சித் ஆகாசத்தில்

ஜீவர்களாகிய நாம் இடம்பெற்றிருக்கிறோம். அந்தர்யாமி யாக நம் உள்ளத்தில் இலங்குவதும் சிதாகாசம். அறிவுப் பெருவெளியாகப் புறத்தில் எங்கும் வியாபகமாயிருப்பதும் சிதாகாசம். இது பரவஸ்துவைப் பற்றிய உண்மை. ஆதலால் பரவஸ்துவைத் தேடி நாம் இங்குமங்கும் அலைந்து திரிவதில் பொருளில்லை. இருந்தபடி இருக்குமிடத்தில் அப்பரவஸ்து வின் சாந்நித்தியத்தை உணர்வதே நல்ல வழிபாடாகிறது. 'கடவுளைக் காண், கடவுளைத் தேடி அலையாதே' என்பது கோட்பாடு. பஞ்சபூதங்களாகப் பரிணமித்திருப்பதும் பரவஸ்து. பஞ்சபூதங்களுக்கு அப்பால் சிதாகாசமாக எங்கும் நிறைந்திருப்பதும் பரவஸ்து. பரவஸ்துவே ஐம்பூதங் களாய், அண்டங்களாய், அனந்தங்கோடி ஜீவர்களாய், இவையாவுக்கும் அப்பாலுமாய் இருக்கிறது என்பதைக் கேள்வியால் அறிகிறவன் அதைச் சுவானுபூதியில் உணர வேண்டும். 'சென்றடையாத் திருவுடையான்' என்று இறைவனுடைய மகிமை தேவாரத்தில் சொல்லப்பட்டிருக் கிறது. கட்புலனாகிற பிரபஞ்சம் முழுதும் அவனுடைய தோற்றம். அவனுடைய திரு அல்லது மகிமை இவை யாவிலும் மிளிர்ந்துகொண்டிருக்கிறது. இந்த அடிப்படைக் கோட்பாட்டை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு தென்படுகிற பொருள்கள் அனைத்திடத்திலும் தெய்வீகத்தைக் கண்டு பழகுதல் நல்ல ஆத்மசாதனமாகிறது. அதன் பொருட்டு அவன் எங்கும் ஓடவேண்டியதில்லை. தன்னுடைய மனப் பான்மையை மட்டும் மாற்றிக்கொள்ளவேண்டும். 'ஆதி பகவன் முதற்றே உலகு' என்னும் கோட்பாட்டின்படி தென் படுகின்ற அனைத்துமாய் இலங்குவது தெய்வம். ஆதலால் அனைத்தும் என்கின்ற காட்சியைப் பின்னணிக்குத் தள்ளி விட்டு அது என்னும் காட்சியை முன்னணிக்குக் கொண்டு

வந்து நிலைநிறுத்துவது நல்ல சாதனமாகிறது. இறைவா உன்னைத்தேடி நான் அலைந்து திரியாமல் உன்னுடைய சாந்நித்தியத்தையே அகம், புறம் என்று கருதாதபடி யாண்டும் உணர்ந்து அதில் நிலைத்திருப்பேனாக என்பது இக் கண்ணியின் கருத்து.

**322. கற்கும்மது உண்டு களித்ததுஅல்லால் நின்அருளில்
நிற்கும்மது தந்ததுஉண்டோ நீதான் பராபரமே.**

மனிதன் என்னும் ஜீவன் நெடுநாளைக்குப் பிறகு ஐம் பொறிகளின் மூலம் வரும் இன்பத்தைக் கடந்தவனாகிறான். கல்வியின் வாயிலாக மனிதன் தன் அறிவைத் தீட்டுகிறான். கல்வியின் வாயிலாகப் பலப்பல கருத்துக்களை ரசிக்கும் மனப்பான்மை மனிதனுக்கு வருகிறது. ஐம்பொறிகளின் மூலமாக வருகிற இன்பங்கள் இடையிடையே தெவிட்டிப் போகின்றன. ஆனால் அறிவின் மூலமாக வரும் இன்பம் தெவிட்டுவதில்லை. ஆதலால் கல்விமான்களாக இருப்பவர் கள் கல்வியினின்று வருகிற ஆனந்தத்திலேயே பலப்பல பிறவிகளில் கட்டுண்டு கிடக்கின்றனர். ‘கல்வி என்னும் பல்கடல் பிழைத்தும்’ என்றார் மாணிக்கவாசகர். நூல் அறிவினின்று வருகின்ற இன்பம் வேறு; அருள் நிலையி னின்று சுரக்கின்ற இன்பம் வேறு என்பது பல பிறவிகளுக் குப் பிறகே விவேகிகளுக்கு விளங்குகிறது. அது விளங்கு கின்றபொழுது நிலையற்ற இன்பத்தைத் தருகிற உலகப் பொருள்களையெல்லாம் ஒதுக்கித் தள்ளுவது போன்று ஏட்டுக் கல்வியினின்று வருகிற ஆனந்தத்தையும் ஒதுக்கித் தள்ளுவது அவசியமாகிறது. அறிவு ஆனந்தமானது. கிட்டத்தட்ட அருளானந்தத்துக்கு நிகராயிருப்பதால் அறிவா னந்தத்தை ஒதுக்கித் தள்ளுவது பலர்க்குச் சாத்தியமாவ தில்லை. ஏட்டுக் கல்வியைக் குறித்து **A learned ignorance**

is the end of Philosophy and the beginning of Religion. ஏட்டுச் சுவையும் அஞ்ஞானத்துக்குரியது. அது பரஞானத்தோடு சேர்ந்ததன்று என்பதை அறிகிறவன் ஆத்மசாதனத்தில் ஈடுபடுகிருன் என்று விவேகானந்த சுவாமிகள் பகர்ந்துள்ளார்கள். ஏட்டுக்கல்வியைப் பற்றிப் பரமஹம்சதேவர் இங்ஙனம் பகர்ந்துள்ளார். சர்க்கரை தித்திக்கிறது என்று பல தடவை சொன்னுல் நீ தித்திப்பை அறிகின்றவனுகிருயா? சர்க்கரையைப் பெற்று அதைச் சுவைப்பவனே உண்மையில் சர்க்கரையின் தித்திப்பை அனுபவத்தில் பெற்றவனுகிருன். பரம்பொருளிடத்திருந்து வருகின்ற பேரானந்தத்தின் நிழல்கள் போன்று விஷய ஆனந்தமும் ஏட்டுக்கல்வி ஆனந்தமும் அமைந்துள்ளன. இவையாவையும் ஒதுக்கிவிட்டு, இறைவனுடைய பேரருளுக்குப் பாத்திரமாகின்றவர்களே பேரானந்தத்தை அனுபவிக்கின்றனர் என்பது இக்கண்ணியின் கருத்து.

323. அண்டபகி ரண்டம் அறியாத நின்வடிவைக்
கண்டவரைக் கண்டால் கதிஆம் பராபரமே.

அண்டம் பகிரண்டம் என்பன மூலப்பொருளாகிய பரமனுடைய வெறும் தோற்றங்களாம். இவைகள் எப்படித் தோற்றங்களாகின்றன என்பதற்கு உபமானம் வருமாறு: சூரியனிடமிருந்து கிளம்பி வருகிற சூரியகிரணம் வெட்ட வெளியில் கட்புலனுவதில்லை. வானத்திலுள்ள நீர் நிறைந்த மேகத்தின் வழியாக அது செல்லும்பொழுது ஏழு நிறங்களையுடைய வானவில்லாகத் தென்படுகிறது. இந்த ஏழு நிறங்களைக் கண்டு ரசிப்பது மூல வெளிச்சத்தை ரசிப்பதற்கு நிகராகாது. அதே விதத்தில் பரம்பொருளைக் கால தேச நிமித்தம் என்னும் மாயா கற்பிதத்தின் மூலமாகக் காணும்பொழுது அது கட்புலனுகின்ற அண்டங்களாகவும்

காட்சிக்கு எட்டாத பகிரண்டமாகவும் காட்சி கொடுத்துக் கொண்டிருக்கிறது. இக்காட்சிகளைக் காண்பது மூலப் பொருளின் காட்சியாகாது. மூலப்பொருளாயிருப்பது பர வஸ்து. அந்த மூலவஸ்துவானது கால தேச நிமித்தமாகிய மாயா காரியங்களின் விளைவாகக் கட்புலனாகின்ற அண்டங் களாகவும், காட்சிக்கு எட்டாத பகிரண்டங்களாகவும் இலங்கிக் கொண்டிருக்கிறது. மூலப்பொருளைக் காண்பது மெய்க்காட்சி. விகாரப்பட்டிருக்கின்ற அண்டபகிரண்டங் களைக் காண்பது பொய்க்காட்சி. பரவஸ்துவை மூலநிலையில் சுவானுபூதியில் தரிசிப்பவர்களே மெய்ஞ்ஞானிகளாகிறார் கள். அந்த மெய்ஞ்ஞானிகள் பெயரளவில் தாங்கள் படைத் திருக்கின்ற ஜீவ வியக்தியைக் கருத்தில் வாங்காது பர போதத்திலேயே திளைத்திருக்கிறார்கள். அவர்கள் இருக் கின்ற நிலையை உள்ளபடி அறிகிறவர்களும் அந்தப் பர ஞானிக்கு நிகராகின்றார்கள். அங்ஙனம் பரஞானத்தை அபரோக்ஷ அனுபூதியில் அடையப்பெறுகிறவர்கள் பிர பஞ்ச வாழ்வில் கட்டுண்பதில்லை. அவர்கள் ஜீவன்முக்தர் கள் ஆகின்றார்கள். ஜீவன்முக்தர்களைச் சரியாக அறிந்து கொள்ளுதல் பரம்பொருளை மூலநிலையில் அறிந்துகொள்வ தற்கு நிகராகிறது. ஆத்மசாதகர்களாகிய நமக்கு இத்த கைய வாய்ப்பு அமைவது ஆகுக என்பது இக்கண்ணியின் கருத்து.

324. கலக்கம்உற நெஞ்சைக் கலக்கித் திரும்பத்
துலக்குபவன் நீஅலையோ சொல்லாய் பராபரமே.

அண்டத்தில் நிகழ்கிற அதே நிகழ்ச்சி பிண்டத்திலும் நிகழ்ந்து வருகிறது. தோற்றத்துக்கு வந்து இயங்கிக்கொண் டிருப்பது சிருஷ்டி காலத்தில் நிகழ்கிற நிகழ்ச்சியாகிறது. பிரளயம் வரும்பொழுது அகண்டமாய் விரிந்திருக்கும்

அண்டம் தோற்றத்திலில்லாது ஒடுங்கிப் போகிறது. அதே நிகழ்ச்சி மானுடன் ஒருவனிடம் நாள்தோறும் நிகழ்ந்து வருகிறது. காலையில் அவன் எழுந்திருக்கிறபொழுது அவன் அனுபவிக்கிற உலகம் தோற்றத்துக்கு வந்து விரிவடைகிறது. விழித்திருக்கும் வேளையிலெல்லாம் திரிகரணங்களைக் கொண்டு கர்மம் செய்பவனாக அவன் அமைந்திருக்கிறான். இரவில் அவன் அயர்ந்து உறங்குகின்றபொழுது திரிகரணங்களும் செயலற்றுக் கிடக்கின்றன. அவன் அனுபவத்தில் உள்ள உலகமும் மறைந்துபட்டுப் போகிறது. விழித்திருக்கும் வேளையில் அவன் செயல் சொரூபமாக இருக்கிறான். அயர்ந்த உறக்கத்தில் அவன் செயலற்று இருக்கிறான். இப்படிச் செயல் புரிவதால் அவனுக்கு உண்டாகும் நலன் யாது? ஒரு பகற்பொழுதில் அவன் செய்யவேண்டிய கிருத்தியங்களை இனிது நிறைவேற்றினால் அவன் நிம்மதியாகத் தூங்கப் போகிறான். அன்றைய கிருத்தியம் நன்கு நிறைவேறாவிடில் அவன் கவலையோடு படுக்கப்போகிறான். ஆக, அவனுடைய நெஞ்சம் கலக்கமுற்றிருப்பதெல்லாம் அவன் எண்ணியுள்ள எண்ணத்தை நிறைவேற்றுதல் பொருட்டேயாம். இங்ஙனம் எண்ணிறந்த பிறவிகளில் மனம் கலங்கிக் கலங்கி அவன் மேன்மையடைந்து வருகிறான். அவன் கலக்கமுற்று இருந்ததினால் பலப்பல பயன்களை அடையப்பெற்றவனானான். மனிதன் அடைகிற பயன்களில் எல்லாம் உச்சநிலையில் இருப்பது பரமனை அடைதல் என்னும் பயனாம். பரமனை அடைகின்றபொழுது அவன் பரமதிருப்தியடைகின்றான். குறைநிலை என்னும் அழுக்கும் அவன் நெஞ்சை விட்டு அகன்று போகிறது. தூயதாகத் துலக்கப்பெற்ற தெள்ளிய நெஞ்சத்தைப் பெற்றவனாக அவன் மாறுகிறான். இத்தனை விதக் கிருத்தியங்களுக்கும் தூண்டுதல் பேறடுபவன்

இறைவன். அவனுடைய அருளால் பிரபஞ்ச வாழ்க்கையில் நெஞ்சம் கலங்கியிருந்து பிரபஞ்சாதீதத்தில் இறைவனுடைய சாந்நித்தியத்தில் நெஞ்சம் துலக்கப்பெற்றுப் பரமானந்தத்தில் திளைக்கப்பட்டிருக்கிறான். இவை யாவும் இறைவனுடைய திருவிளையாடல்களாம். இறைவா, உன்னுடைய அருளால் நான் விரைவில் மனத்தெளிவு அடைந்து உன் சாந்நித்தியத்தில் திளைத்திருப்பேனாக என்பது இக் கண்ணியின் கருத்து.

325. சிந்தையும்என் போலச் செயல்அற்று
அடங்கிவிட்டால்
வந்ததுஎலாம் நின்செயலா வாழ்வேன் பராபரமே.

ஜீவனுடைய அமைப்பில் பிரகிருதி தத்துவமும், புருஷ தத்துவமும் சேர்ந்தே அமைந்திருக்கின்றன. இவை இரண்டையும் சாதனத்தின் விளைவாகப் பாகுபடுத்தத் தெரிந்து கொள்ளுகிறவனுக்கு முக்தி எளிதில் வாய்க்கிறது. பிரகிருதி தத்துவமும், புருஷ தத்துவமும் எப்படி ஒன்றில் ஒன்று பின்னிக்கொண்டு இருக்கின்றன என்பதை ஒரு சான்றின் மூலம் விளக்குவோம். தித்திக்கும் பாங்குடையது சர்க்கரை. சுத்த ஜலத்துக்குச் சுவை கிடையாது. ஆனால் சர்க்கரையைத் தண்ணீரில் போட்டுக் கலக்கினால் தித்திக்கும் பாங்கு தண்ணீருக்கும் வருகிறது. அதே விதத்தில் பிரகிருதியின் பாங்கைப் புருஷதத்துவம் தன்னுடையதாக எடுத்துக் கொள்கிறது. அத்தகைய மயக்கமடைந்து பலப்பல கர்மங்களில் தான் கட்டுண்டு கிடப்பதாகப் புருஷதத்துவம் எண்ணிக்கொண்டு துயரத்துககு ஆளாகிறது. பிரகிருதியின் செயல் புருஷனைத் தொடமாட்டாது என்பதுதான் உண்மையாகும். இவ்வுண்மையை நன்கு விளங்கிக்கொள்ள மற்றொரு சான்றை எடுத்துக்கொள்ளலாம். காசிக்கு யாத்திரை

போகிற ஒருவன் இருப்புப்பாதை வண்டியிலமர்ந்து இருக்கிறன். அந்த வண்டி ஓடுகிறது. உட்கார்ந்து கொண்டிருக்கிற மனிதன் ‘ நான் போகிறேன் ’ என்கிறன். உண்மையில் போவது வண்டித்தொடர். உட்கார்ந்து கொண்டிருப்பவன் போவதாகப் பகர்கிறன். வண்டியோடு வைத்த இணக்கத்தின் விளைவு அது. வண்டியை விட்டு விலகித் தரையில் உட்கார்ந்து கொள்வானுகில் அப்போது ‘ போகிறேன் ’ என்கின்ற செயல் அவனுக்கு உரியதாகாது. மனம் என்னும் தத்துவம் பிரகிருதிக்கு உரியதாகிறது. அந்த மனத்தோடு தன்னைச் சம்பந்தப்படுத்திக் கொண்டிருப்பவன் ஜீவாத்மன். சாதனத்தின் விளைவாக மனத்துக்கும் புருஷதத்துவத்துக்கும் இடையிலுள்ள தொடர்பைப் பிரித்துவைப்பது சாத்தியமாகிறது. எண்ணிறந்த எண்ணங்கள் என்னும் விருத்திகள் மனத்தில் உதயமாகலாம். அந்த விருத்திகளைத் தன்னுடையவைகள் என்று சஞ்சலப்படுபவன் ஜீவாத்மா. மனவிருத்திக்கும் தனக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை என்று மனத்துக்குச் சாட்சியாய் இருந்து பழகுபவன் மனச்செயல்களுக்குப் பொறுப்பாளியாகமாட்டான். மனச் செயல்களினின்று தன்னைப் பிரித்து எடுத்துக்கொள்ள வல்லவன் தனக்கு அந்நியமாயுள்ள மனத்தின் செயல்களெல்லாம் இறைவனுடைய செயல்களெனப் பொருள்படுத்துகிறன். செயல்கள் யாவும் இறைவனுடைய திருவிளையாடல்கள் எனப் பொருள்படுத்துபவன் அச்செயல்களில் ஒரு புனிதம் காண்கிறன். இயற்கைச் செயல்கள் யாவும் உயிர்வகைகளைப் பண்படுத்துகின்றன. பண்பட்டுள்ள ஆத்மசாதகனுக்கு இவ்வுண்மை விளங்குகிறது. பிறகு பிரகிருதிச் செயல்கள் எதிலும் அவன் குறை காண்பதில்லை. அத்தகைய நிலையை எட்டியுள்ள ஆத்மசாதகனுக்குப் பிரபஞ்ச வாழ்வு பந்தபாசமன்று; இறைவனு

டைய ஆனந்தத்தாண்டவம் என விளங்குகிறது. இறைவா, மனச் செயலினின்று நான் விலகி அச்செயல்களெல்லாம் உன்னுடைய அருளால் நிகழ்கின்றன என்று இன்புற்றிருப் பேனாக என்பது இக்கண்ணியின் கருத்து.

326. பந்தம்எலாம் தீரப் பரஞ்ஜோதி நீ குருவாய்
வந்த வடிவை மறவேன் பராபரமே.

பரஞ்சோதி என்பது என்ன என்பதை அறிந்துகொள் வது அவசியமாகிறது. பொறிபுலன்களுக்கு அப்பால் உள் ளது எதுவோ அது பரம் எனப் பகரப்பெறுகிறது. பொறி புலன்களுக்கு அப்பால் ஏதேனும் இருக்கிறதா என்னும் கேள்வி எழுகிறது. நிச்சயமாக அப்பால் ஒன்றுள்ளது. யுக்தியைக்கொண்டு அதைக் கிரஹிக்க முயலுவோம். காரிரு ளில் ஒருவன் ஓரிடத்தில் அமர்ந்திருக்கிறான். அவனைத் தேடிப்பிடிக்க வந்தவர்கள் அவன் இங்கு இல்லையென்று தங்களுக்குள் பேசிக்கொள்கிறார்கள். அப்பேச்சு அம்மனிதன் காதில் படுகிறது. தான் இருப்பதைப்பற்றி அவனுக்குச் சந்தேகமில்லை. தன் உடலே அவனுக்குக் கட்புலனாவ தில்லை. அப்படியிருந்தும் தான் இருப்பதைப்பற்றி அவனுக் குச் சந்தேகமில்லை. இருக்கிறேன் என்ற உணர்வு ஆத்மா வுக்குரியது. அதைச் சுட்டிக்காட்டுவதற்குச் சூரியன், சந் திரன், அக்னி, நட்சத்திரம், மின்னல் முதலியன உதவ மாட்டா. தான் இருப்பதைத் தானே சுட்டிக் காட்டுகிறது. அது சுயஞ்ஜோதி. ஒவ்வொரு மனிதனும் சுயஞ்ஜோதியா யுள்ள ஆத்ம சொரூபம். அது பொறிபுலன்களில் கட்டுப் படாதிருப்பதால் அதைப் பரஞ்ஜோதி என்றும் பகரலாம். பரஞ்ஜோதி சொரூபமாக உள்ள மூர்த்தி ஒருவர் புறத்தில் தென்படுகிறார். அவர் தேகத்தில் கட்டுண்டு இருப்பவர் அல்லர். ஆத்ம திருப்தராய் இருக்கிறார். பந்தபாசம்

ஏதும் அவருக்கு இல்லை. பக்குவமடைந்துள்ள சிஷ்யன் ஒருவன் அத்தகைய பரஞ்ஜோதி முனிவரைப் பார்க்கிறான். அவர் இருக்கிற பெருநிலையில் தானும் இருக்கமுடியுமென சிஷ்யன் அறிகிறான். தனக்குப் பந்தத்தை உண்டுபண்ணியது தன்னுடைய மனம். அந்த மனத்தை ஒதுக்கித்தள்ளும் சுதந்திரம் எப்பொழுதும் எல்லாருக்கும் உண்டு. குருவைப் பார்த்த சிஷ்யன் இவ் உண்மையை அறிந்துகொண்டான். உடனே பந்தத்தை உதறித்தள்ளினான். சுதந்திர சொருப மாயிருந்த பரஞ்ஜோதி மூர்த்தியைக் குருவாக அறிந்து கொண்டான். அந்த அனுபவம் அவனைவிட்டு ஒருபொழுதும் மாறவில்லை. வெளிச்சம் வந்த இடத்தில் இருள் மறைவது போன்று பக்குவமடைந்துள்ளவனுடைய பந்தமும் அக் கணமே அகன்று போகிறது என்பது இக்கண்ணியின் கருத்து.

327. தான் அந்தம்ஆன சகஜ நிருவிகற்ப
ஆனந்த நிஷ்டைஅருள் ஐயா பராபரமே.

வேதத்தின் அந்தமாய் இருப்பது வேதாந்தம். அதே பாங்கில் நிஷ்டைகளுள் எது அந்தமானதாக இருக்கிறதோ அதுதான் அந்தமான நிஷ்டையென நவிலப் பெறுகிறது. அந்த மேலான நிஷ்டை சகஜநிஷ்டையென ஆரம்பிக்கிறது. சகஜ என்றால் தன்னுடன் ஜனித்த அல்லது தன்னுடனேயே உருவெடுத்துள்ள நிஷ்டையெனப் பொருள்படுகிறது. வேறு ஓர் இடத்தில் சகஜநிஷ்டைக்கும் என் சிந்தைக்கும் வெகு தூரம் என்கிறார் தாயுமானவர். சிந்தையில் உதிக்கிற ஒவ்வோர் எண்ணமும் உணர்வும் அறிவும் இறைவனுக்கு உரியவைகள் என்று கருதுவது சகஜநிஷ்டையாகும். இதற்கு அனுசரணையாக ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா அர்ஜுன னுக்குப் பகவத்கீதையில் 'நீ எதைச் செய்கின்றாய், எதை

அருந்துகின்ருய், எதை வேள்வியாக வேட்கின்ருய், எதைத் தானமாகச் செய்கின்ருய், எதைத் தபசாகப் புரிகின்ருய். அவை யாவையும் எனக்கு அர்ப்பணம் பண்ணு' என்று இயம்புகின்ருர். மனிதனெருவன் தான் புரிகிற கர்மத்துக்குத் தன்னைக் கர்த்தாவாக வைத்துக்கொள்ளுகிறபொழுது அவன் இன்பதுன்பங்களுக்கு ஆளாகிருன். மனம், மொழி, மெய்யாகிய திரிகரணங்களின் மூலம் தன்னிடம் நிகழ்கின்ற கிருத்தியங்கள் அனைத்தும் இறைவனுக்கு உரியவைகள் என்னும் மனநிலையில் உறுதிபெற்றிருப்பவன் சகஜ நிஷ்டையில் நிலைத்திருப்பவன் ஆகிருன். யான் எனது என்னும் அகங்காரம், மமகாரம் அறவே அகன்றுபோகுமிடத்தே சகஜநிஷ்டை சாத்தியமாகிறது. சகஜநிஷ்டையில் உறுதி பெற்றிருப்பவனுக்குப் பாபம், புண்ணியமாகிய இருவினைகள் இல்லை. பீஷ்மர் இதற்கு நல்ல சான்ருவார். துரியோதனனுக்காக அவர் சேனுபதியான பாபச் செயல் அவரைத் தீண்டவில்லை. பிறகு யுதிஷ்டிரனைச் சிம்மாசனத்தில் அமர்த்திய புண்ணியச் செயலும் அவரைத் தீண்டவில்லை. தம்மைக் கருவியாக வைத்துக்கொண்டு மகாபாரதத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் யாவும் கிருஷ்ண பரமாத்மாவின் செயல்கள் என்னும் எண்ணத்தில் அவர் நிலைபெற்றிருந்தார். அது சகஜநிஷ்டையாகும். பிறகு மனேவேகம் ஓயுமிடத்து அது நிர்விகல்ப நிஷ்டை அல்லது நிர்விகல்ப சமாதியாகிறது. நிர்விகல்ப சமாதியில் மனது ஓய்ந்து போகிறது. ஆதலால் செயல்கள் யாவும் தாமாகவே அடங்கிவிடுகின்றன. திரையற்ற கடல்போன்று மனத்தின் வேகம் ஒடுங்கிப் போகிறது. ஆனந்தம் ஆத்மாவின் நிஜ சொரூபம். மனமற்றவிடத்து ஆனந்தமே எஞ்சியிருக்கிறது. கனவற்ற உறக்கமே அதற்குச் சான்ருகிறது. ஆனந்தம்

பிரம்மம் என்பது ஓர் ஆப்த வாக்கியம். விகல்பமற்ற பேரானந்தத்தில் திளைத்திருப்பவன் தன்னுடைய வீடுபேறு ஆகிய பிரம்மசொரூபத்தில் ஒன்றுபட்டிருக்கிறுன். அறியாமையினுல் ஜீவாத்மன் தனக்கு ஒரு வியக்தியை உண்டுபண்ணிக் கொண்டு விடாப்பிடியாக அதைப்பிடித்துக் கொண்டிருக்கிறுன். அத்தகைய தான் என்பதற்கு அந்தம் அல்லது முடிவு வந்தால் அது சகஜநிஷ்டையாக மாறிப் பிறகு நிர்விகல்ப சமாதியாகப் பூர்த்தியாகிறது. அத்தகைய பெருநிலையை இறைவா, எனக்குத் தந்தருள்வாயாக என்பது இக்கண்ணியின் கருத்து.

328. அல்லல்எல்லாம் தீரஎனக்கு ஆனந்தம் ஆகஒரு
சொல்லைஎன்பால் வைத்ததைஎன் சொல்வேன்
பராபரமே.

மனிதனுடைய நிஜசொரூபத்தை அவனுக்கு ஞாபகமூட்டுதற்கு நிகரான மானுடசேவை வேறு ஒன்றுமில்லை. அக்ஞானத்தால் மனிதன் தன்னுடைய நிஜசொரூபத்தை மறந்து பிரகிருதியின் செயல்களைத் தன்னுடையவைகளாக எடுத்துக்கொண்டு அல்லல்பட்டுக்கொண்டிருக்கிறுன். பாத்திரம் ஒன்றில் நீர் ஊற்றி வைக்கப்பட்டிருக்கிறது. அப்பாத்திரத்தை அடுப்பில் ஏற்றித் தீ எரிந்துகொண்டிருக்கிறது. அப்பொழுது பாத்திரத்தின் அடிப்பாகம் நம்முடைய காட்சியில் இல்லை. ஆத்ம சொரூபம் என்னும் பாத்திரத்தில் அந்தக்கரணம் என்னும் ஜலம் கொட்டி வைக்கப்பட்டிருக்கிறது. ஆசை என்னும் கனல் சதா எரிந்துகொண்டிருக்கிறது. அதனுல் மனக்கொதிப்பு மிக உண்டாயிருக்கிறது. மயக்கத்தால் அந்தக் கொதிப்பைத் தன்னுடையது என்று ஆத்மா ஏற்றுக்கொள்கிறது. பிரபஞ்ச இன்ப துன்பங்களுக்கு அப்பாலுள்ள ஆத்மா தன்னைப் பிரபஞ்சமய

மாகக் கருதி அல்லல்பட்டுக்கொண்டிருக்கிறது. மகாவாக்கியங்களுள் நீ நாடுகிற பரவஸ்து சொரூபமாக நீ இருக்கிறாய். தத்-த்வம்-அஸி என்பது ஒன்று. 'நீ ஆத்மா; பிரகிருதி அல்ல' என்பது அதன் உட்கருத்து. தன்னைப் பிரகிருதி மயமாகக் கருதிக்கொள்பவன் படாதபாடு படுகிறான். பிரகிருதியின் செயல் தன்னைத் தீண்ட மாட்டாது. தான் நிஷ்கிரியன், கர்மாதீதன், குணாதீதன் என்று தன்னைப்பற்றிய உண்மையை அறிந்துகொள்ளுகிறவன் அக்கணமே பிரபஞ்சத்திற்கு அப்பாலுள்ள பேரானந்த சொரூபியாகிறான். பக்குவமடைந்து வருகிற ஆத்மசாதகனுக்குத் தக்க தருணத்தில் சான்றோர் ஒருவர் நீ ஆத்ம சொரூபம் என்னும் பேருண்மையை ஏதேனும் ஒருவிதத்தில் புகட்டியருள்கிறார். இவ்வுண்மையை ஓர்ந்து பார்க்கப் பார்க்கச் சாதகனுக்குப் பிரபஞ்சமயமான அல்லல் அறவே ஒழிந்துபோகிறது. ஆனந்த நிலை தானே வருகிறது. முன்புபட்ட அல்லலையும் தற்போதுள்ள ஆனந்தநிலையையும் எண்ணிப்பார்க்கிறான். அவ்வாறு எண்ணிப் பார்ப்பதன் வாயிலாகச் சான்றோரின் கிருபையை எண்ணி வியப்புறுகிறான் என்பதாம் இதன் கருத்து.

329. சிந்தை மயக்கம்அறச் சின்மயமாய் நின்றஉன்னைத்
தந்தஉனக்கு என்னையும்நான் தந்தேன் பராபரமே.

பிரகிருதி, புருஷன் ஆகிய இரண்டு தத்துவங்களின் கூட்டுறவை முன்னிட்டு மனிதனுக்கு ஜீவவியக்தி வடிவெடுக்கிறது. ஆதலால் ஜீவாத்மாவாகிய மனிதனிடம் பிரகிருதியின் இயல்பையும் ஆத்ம சைதன்யத்தையும் இணைத்து வைத்துப் பார்க்கிறோம். மனத்தை உடையவன் மனிதன். மனம் பெரும்பாலும் பிரகிருதியை நாடியதாகவே இருக்கும். மனத்துக்குச் சிந்தை என்பது மற்றொரு பெயர். சிந்தையிலே

மயக்கமும் தெளிவும் மாறிமாறி அமைகின்றன. அப்படி அமைவதுதான் அதன் போக்கு. சிந்தை பிரகிருதியில் நாட்டம்கொள்கின்றபொழுது அது மயக்கமுறுகிறது. அந்த மயக்கத்துக்கு உட்பட்டவனாக ஜீவாத்மன் இவ்வுலக சம்பந்த மான இன்ப துன்பங்களுக்கு ஆளாகிறான். சிந்தையானது பிரகிருதி மோகத்தினின்று தன்னை மீட்டெடுத்து ஆத்ம சொரூபத்தில் நாட்டம் கொள்ளுமாகில் அது மேன்மையுறு கிறது. பிரகிருதி மோகம் ஆத்மநாட்டம் ஆகிய இரண்டுக் கும் இடையில் ஊசலாடிக்கொண்டிருக்கும் ஜீவாத்மன் இடை யிடையே ஆத்மசாதனத்தில் ஈடுபடுபவனாகிறான். முக்த புருஷனே பிரகிருதி மோகத்தினின்று தன்னை மீட்டெடுத்து நிரந்தரமாக ஆத்ம சொரூபத்தில் நிலைத்திருக்கிறான். அப்படி நிலைத்திருப்பவனே முக்தியை நாடுகிற முமுட்சுக்களுக்கு முன்மாதிரியாகிறான். அப்பெருநிலையிலிருக்கும் ஞானியை 'சின்மயமாய் நின்ற உன்னை' என்று தாயுமானவர் இயம்பு கிறார். அப்பெருநிலையை அடையப்பெற்றுள்ள பரம புரு ஷன் ஒருவன் அந்நிலையை அடைய விரும்புகிற முமுட்சுவோடு நல்லிணக்கம் பூணுகிறான். அன்பு கூர்ந்து அன்னவன் செய் யும் செயலைத் 'தந்த உனக்கு' என்று தாயுமானவர் இங்கு பாராட்டுகிறார். முக்த புருஷனுடைய பேரன்புக்கு இலக்கா கிய தாம் தம்மையும் அப்பரமபுருஷனிடம் ஒப்படைக்கிறார். அச்செயலை 'என்னையும் நான் தந்தேன்' என்று இக்கண்ணி விளக்குகிறது. தகதகவென்று எரிகிற தீயினிடத்து உலர்ந்த விறகுக் கட்டையைப் போட்டால் அதுவும் தீயாக மாறு கிறது. அதே விதத்தில் முக்த புருஷனோடு இணக்கம் வைக்கின்ற முமுட்சுவும் பிரகிருதியின் கூறுகளினின்று அறவே தன்னைவிடுவித்துக்கொண்டு சித்சொரூபம் ஆகி றான். என்னை ஆட்கொண்டுள்ள அண்ணலே, என்னை நான்

உன்னிடம் ஒப்படைத்து ஆத்ம சொரூபமாயுள்ள உன் மயமாய் நான் மாறியமைவேனாக என்பது இக்கண்ணியின் கருத்து.

330. மைகாட்டும் மாயை மயக்கம்அற நீகுருவாய்க்
கைகாட்ட வும்கனவு கண்டேன் பராபரமே.

மை காட்டுதல்–அக்ஞான இருள் சூழ்ந்திருத்தல். கை காட்டுதல்–சின் முத்திரை தாங்கியிருந்து ஜீவ வியக்தி யானது மும்மலங்களினின்று தன்னை விடுவித்துக்கொண்டு பரமாத்மாவோடு ஒன்றுபடுதல் என்னும் கோட்பாட்டை விளக்குதல்.

கனவு, நனவு ஆகிய இரண்டையும் ஆராய்ச்சி பண்ணுதல் அவசியமாகிறது. நனவு அல்லது ஜாக்கிரதாவஸ்தையிலே ஸ்தூல சரீரமும் சூட்சும சரீரமாகிய மனமும் சேர்ந்து செயல்படுகின்றன. ஜாக்கிரதாவஸ்தையில் தென்படுகின்ற புறவுலகும் அவ்வுலகில் உள்ள உயிர்வகைகளும் காண்பவனுக்குப் புறம்பானவைகள். அவைகளை அவன் கண்டாலும் காணாதிருந்தாலும் உலகும், உயிர்வகைகளும் தம்போக்கில் இருந்து வருகின்றன. தூக்கத்தில் நாம் கனவு காண்கின்றோம். அக்கனவானது சொப்பனாவஸ்தை என்று சொல்லப்படுகிறது. கனவில் தென்படுகின்ற ஜகத்தும், ஜீவர்களும் கனவு காண்கின்ற மனிதனுடைய மனத்தின் கூறுகளாம். அதாவது அவையாவும் அம்மனிதனுடைய மனோ விகாரங்களாம். அவனுடைய மனத்துக்குப் புறம்பாக அவைகள் இல்லவே இல்லை. ஜாக்கிரதாவஸ்தையில் தென்படுகின்ற ஊரும் உயிர்வகைகளும் கனவு காண்போனுக்குப் புறம்பானவைகள். சொப்பனாவஸ்தையில் தென்படுகின்ற ஊரும் உயிர்வகைகளும் கனவு காண்பவனுடைய மனத்தின்

கற்பனைகளாம். அப்படிக் கற்பனைகளாய் இருந்தாலும் சொப்பனத்தில் ஒரு பிரயோஜனம் உண்டு. ஜாக்கிரதாவஸ்தையில் மனிதன் ஒருவன் வளர்த்து வருகிற மனப்பான்மைகளே அவனுடைய சொப்பனவஸ்தையாக உள்ளத்தில் பிரதிபலிக்கின்றன. ஜாக்கிரதாவஸ்தையில் சுத்தமான விருத்திகளை உண்டுபண்ணுபவன் சொப்பனத்திலும் நல்ல கனவுகளைக் காண்கின்றான். ஜாக்கிரதாவஸ்தையில் பொருந்தாத சித்தவிருத்திகளை வளர்த்து வருபவன் அதற்கேற்ற கீழ்த்தரமான கனவுகளைக் காண்கின்றான். சொப்பனவஸ்தையில் புதிய புதிய ஆத்மசாதனங்கள் தோற்றத்துக்கு வருவதுமுண்டு. அப்படி வந்து அவைகளின் வாயிலாக மனிதனுடைய ஜீவிதம் மேலானதாகத் திருந்தியமைந்தால் அது சொப்பன தீட்சை என்னும் பெயர் பெறுகிறது. அத்தகைய சொப்பன தீட்சை ஒன்று இக்கண்ணியின் வாயிலாக விளக்கப்பெறுகிறது. தீவிரமான ஆத்ம சாதனங்கள் புரிந்துவருகிறவர்களுக்கு ஜாக்கிரதாவஸ்தையில் சத்சங்கம் வாய்க்காவிட்டாலும் கனவின் வாயிலாக அது நிகழ்வதுண்டு. அத்தகைய கனவு மனிதனுடைய ஆன்மீக முன்னேற்றத்துக்குத் தூண்டுகோலாக அமையுமானால் அதைக்கிடைப்பதற்கரிய வாய்ப்பாகும் என்பது இக்கண்ணியின் கருத்து.

331. மால்வைத்த சிந்தை மயக்குஅறஎன் சென்னிமிசைக்
கால்வைக்க வும்கனவு கண்டேன் பராபரமே.

மால்-உலக ஆசை. இறைவன்பால் அமைந்துள்ள மகிமைகளுள் ஒன்று மோகனசக்தி என்பதாம். ஜீவகோடிகள் அனைத்தும் பிரபஞ்ச வாழ்வில் மோகம் கொண்டிருக்கின்றன. அதில் பிரபஞ்ச வாழ்வும் ஒழுங்காக நடைபெற்று வருகிறது. மோகன சக்திக்கு வசப்பட்டிருப்பதற்கிடையில் அதினின்று தான் விழித்து எழுந்திருக்க வேண்டுமென்றும்

அத்தளையினின்று தான் தப்பித்துக்கொள்ள வேண்டுமென்றும் முமுட்சுவாக இருக்கிற ஆத்மசாதகன் முயன்று வருகிறான். அவனுடைய முன்னேற்றத்துக்கு அறிகுறியாக உலக ஆசைகள் படிப்படியாக மறைந்து வருகின்றன. திடீரென்று ஒருநாள் ஞானோதயம் உண்டாகிறது. தன்னை மனிதன் என்று எண்ணிக்கொண்டிருந்த சாதகன் திடீரென்று அம்மயக்கத்தினின்று விழித்து எழுந்திருக்கிறான். சச்சிதானந்தம் தன்னுடைய நிஜசொரூபம் என்பதை அறியவருகிறான். இந்த ஞானவிழிப்பு ஜாக்கிரதாவஸ்தையில் வரலாம். அல்லது சொப்பனாவஸ்தையில் வரலாம். விவேகி ஒருவனுக்கு ஜாக்கிரதாவஸ்தை, சொப்பனாவஸ்தை ஆகிய இரண்டும் ஒன்றே. ஏனென்றால் அவை இரண்டும் மனத்தின் கூறுகளாம். எந்த நிகழ்ச்சி மனிதனுடைய ஆத்மபோதத்தைத் தூண்டுகிறதோ அது ஜாக்கிரதாவஸ்தையில் வரலாம் அல்லது சொப்பனாவஸ்தையில் வரலாம். எந்த அவஸ்தையில் வந்தாலும் அதற்குரிய மதிப்பை ஆத்மசாதகன் குறைவுபடுத்துவது இல்லை. ஸ்பரிச தீட்சையின் மூலமாக முமுட்சுவிடம் ஞான குரு ஆத்ம போதத்தை ஊட்டுகிறார். சுவாமி விவேகானந்தரிடம் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் அங்ஙனம் செய்தார். தாயுமான சுவாமிகளுக்கு அவரை ஆட்கொண்ட மௌனகுருவும் அங்ஙனமே செய்தார். கனவு போன்று தென்பட்ட நிகழ்ச்சி பிறகு நனவாகவும் நிறைவேறியது. அக்கோட்பாட்டை இக்கண்ணியின் மூலம் அவர் வெளிப்படுத்துகிறார்.

332. மண்ஆன மாயைஎல்லாம் மாண்டுவெளி ஆகஇரு
கண்ஆர வும்கனவு கண்டேன் பராபரமே.

மாயை அல்லது மாயாதத்துவத்துக்கு விளக்கங்கள் பல இருக்கின்றன. மாயா பிரபஞ்சம் என்பது ஒரு விளக்கம்.

மனம் என்னும் மாயை என்பது மற்றொரு விளக்கம். கால, தேச, நிமித்தம் எனவும் அது அழைக்கப்படுகிறது. பொருள் ஒன்று தன்னுடைய நிஜசொருபத்தை மறைத்துக்கொண்டு மற்றொரு பொருளாகக் காட்சி கொடுக்குமானால் அக்காட்சியை மாயை என்கிறோம். சூரியகிரணம் வெட்டவெளியிலுள்ள மேகத்தின் வாயிலாகப் பாயும்பொழுது அது ஏழு நிறங்களாகச் சிதறடைகிறது. அந்த நிறங்களை வானவில் என்றும் இந்திரதனுசு என்றும் இயம்புகிறோம். கால, தேச, நிமித்தம் என்னும் முப்பட்டைக் கண்ணாடியின் வாயிலாக நாம் காண்கின்ற காட்சி பிரபஞ்சமாகத் தென்படுகிறது. இக்காட்சியை மாயை என்கிறோம். ஞான விசாரத்தின் வாயிலாகவோ, பக்திப் பரவசத்தின் வாயிலாகவோ நம்முடைய மனத்தை ஒடுக்கினால் பிரபஞ்சத்தின் காட்சி மெய்ப்பொருளின் காட்சியாகத் திருந்தி அமைகிறது. சித்சொரூபம் அல்லது பிரக்ஞை அல்லது வாலறிவு மெய்ப்பொருளின் நிஜநிலையாகிறது. மனம் என்னும் கண்ணாடியைக் கொண்டு நுகருமிடத்து அது பஞ்சபூதங்களாகத் திரிவுபடுகிறது. பஞ்சபூதங்களில் ஒன்று மனம். அதை ஜடம் என்கிறோம். சேதனமற்றது ஜடம் என இயம்பப்படுகிறது. சேதனம் அழியும் பாங்குடையதா? அது அழியுமானால் மெய்ப்பொருளாகாது. வெளிச்சம் அழியும் பாங்குடையதா? அது அழியுமானால் வெளிச்சமாகாது. நண்பகலில் வெளிச்சம் இருக்கிறது. அமாவாசை இருளில் கார் இருள் இருக்கிறது. ஆனால் கார் இருளில் வெளிச்சம் இல்லையா? ஆந்தையின் கண்கொண்டு பார்த்தால் கார் இருள் வெளிச்சமாகக் காட்சி கொடுக்கிறது. அப்படியானால் வெளிச்சம் என்பதும் இருள் என்பதும் கண் அமைப்புக்கு ஒத்த காட்சிகளாம். சேதனம் ஜடம் என்பனவும் காண்பவனுடைய பாங்கை

ஒத்திருக்கின்றன. காண்பவன் ஞானக்கண்ணைப் பெறுவானாகில் அவனுக்கு ஜடமயமாயுள்ள பஞ்சபூதங்கள் சேதனமாக மிளிர்கின்றன. ஞானக் கண்ணானது சில வேளைகளில் ஊனக் கண்ணையும் பயன்படுத்தவல்லது. ஞானக்கண் கொண்டு பார்க்கிறவனுக்கு அசேதனம் அல்லது ஜடம் வெறும் கற்பனையாம்.

நிர்விகல்ப சமாதி அடையப்பெற்றான பிறகு சுவாமி விவேகானந்தருக்கு ஜடப்பொருள்கள் எல்லாம் சேதனப் பொருளாகக் காட்சி கொடுத்தன. காண்பவனுடைய பரிபாகம் மேல்நிலைக்குப் போகப்போகக் காணப்படும் பொருளினிடத்தில் இருக்கும் அசேதனம் அல்லது ஜடநிலை மறைந்து பட்டுப் போகிறது. சேதனம் ஒன்றுதான் யாண்டும் இருந்தபடி இருக்கிறது. இந்த ஞானக்காட்சிக்கு விளக்கமாக இக்கண்ணி வந்து அமைந்திருக்கிறது.

333. மண்நீர்மை யாலே மயங்காதுஉன் கையால்என்
கண்ணீர் துடைக்கவும்நான் கண்டேன் பராபரமே.

மண் நீர்மை என்பது மண்ணின் தன்மை அல்லது ஜடநிலை. கண்ணீர்—மயக்கம் அல்லது அக்ஞானநிலை. அக்ஞானம் என்பது திரிவுபட்ட ஞானக் காட்சி. ஒரு பொருள் மற்றொரு பொருளாகக் காட்சி கொடுக்குமானால் அது அக்ஞானம் எனப்படுகிறது. மனத்தின் நீர்மை அல்லது இயல்பு அதற்குக் காரணமாகிறது. கயிற்றைப் பாம்பாகக் காண்பது ஒருவனுடைய மன இயல்பு. கயிற்றைக் கொடியாகக் காண்பது இன்னொருவனுடைய மன இயல்பு.

மன இயல்புக்கு ஏற்ப ஒரு மெய்ப்பொருள் பலப்பல தோற்றப் பொருள்களாகக் காட்சி கொடுக்கிறது. அதனால்

தான் 'எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' என்னும் பொய்யாமொழி அமைந்துள்ளது. பரம்பொருள் ஒன்றே மெய்ப்பொருள். அது பிரபஞ்சத்திலுள்ள பலப்பல பாங்குகளை உடைய பலப் பல பொருள்களாகக் குறைஞான நிலையிலிருப்பவர்களுக்குத் தென்படுகிறது. குறைஞான நிலையே அக்ஞானம் எனவும், மயக்கம் எனவும் இயம்பப் பெறுகிறது. உண்மையில் எல் லாரும் ஞானக்கண் படைத்திருக்கின்றனர். அதற்கு இடைஞ்சலாயிருப்பது மனத்தோடுகூடிய ஊனக்கண். பண்பட்டுள்ள எந்த ஆத்மசாதகன் ஒருவன் மனத்தை ஒதுக்கி வைக்கிறானோ அவன் அப்பொழுதே ஞானக்கண் வாய்க்கப்பெற்றவனாகிறான். மனத்தை ஒதுக்கித் தள்ளிய ஞானகுருவின் சந்நிதியும் இதற்குப் பயன்படுகிறது. பரம ஹம்சதேவரின் அருளால் விவேகானந்த சுவாமிகள் நிர்வி கல்ப சமாதி அடையப்பெற்றது இதற்குச் சான்றாகிறது. மனத்தை ஒதுக்கித் தள்ளுதல் என்னும் அரிய செயல் கவிதை ரசத்தோடு கூடி 'என் கண்ணீர் துடைக்கவும் நான் கண்டேன்' என்று இயம்பப்பெறுகிறது. குருமூர்த்தியி னுடைய சந்நிதியிலோ தீவிர பக்குவத்தின் விளைவாகவோ யார் ஒருவன் மனத்தை ஒதுக்கித் தள்ளுகிறானோ அவன் அப்பொழுதே தனக்கு யதார்த்தமாயுள்ள சேதன சொருப மாக இலங்குகிறான். பிறகு அகம் புறம் என்று எண்ணுதை படி யாண்டும் இலங்குவது சேதனமயம் அல்லது சித்சொரு பம். ஜடப்பொருள் என்று கற்பனை செய்யப்பட்டதும் உண்மையில் சேதனமே. அதுவே மெய்க்காட்சி. அதி னின்று கீழிறங்கி வந்து மனத்தின் துணைகொண்டு பிரபஞ்ச மாகக் காண்பது வெறும் மயக்கமாம். இந்த ஞானக்கோட் பாடு இக்கண்ணியில் அடங்கியிருக்கிறது.

ஞானக் கண் என்பது ஆத்மசொரூபமே ஒழிய வேறு ஒன்றும் அன்று. ஆத்மசாதகர்களிடத்து அது இயற்கையாகவே அமைந்துள்ளது. மனம் என்னும் திரை அதை மறைத்துக்கொண்டிருக்கிறது. மனம் எவ்வளவுக்கெவ்வளவு உலக விஷயங்களில் உழன்றுகொண்டிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு சொரூபஞானம் பின்னணிக்குப் போகிறது. மனம் அல்லது அந்தக்கரணம் சாதனத்தின் வாயிலாகச் சுத்தியடைவதற்கு ஏற்ப சொரூபஞானம் தெளிவடைகிறது. பல தடவைகளில் ஆத்மசாதகனுடைய பரிபக்குவம் ஞானகுருவின் அருள்சாந்நித்தியமும் ஒன்றுகூடி மனது என்னும் மாயையை ஒதுக்கித் தள்ளுகின்றன. அப்பொழுது சமாதி அல்லது சொரூபஞானம் தானகத் திகழ்கிறது. பரமஹம்சதேவரின் சந்நிதியில் விவேகானந்த சுவாமிகளுக்குச் சமாதி கூடியது போன்றே மூலன் மரபில் வந்த மௌனகுருவின் சந்நிதியில் தாயுமானவருக்கு இப்பெருநிலை வாய்ப்பதாயிற்று. ஞானக்கண்ணைக் குருதேவர் நல்கியருளினர் என்று சிஷ்யன் குருவைப் போற்றுவது என்றென்றும் ஐதிகமாக வந்துள்ள மரபு ஆகும்.

334. உள்ளது உணரா உணர்விலிமா பாவிஎன்றே
மெள்ளமெள்ளக் கைநெகிழ விட்டாய் பராபரமே.

மானுடன் ஒருவனிடத்து உலகப்பற்று எவ்வளவுக்கெவ்வளவு உள்ளத்தினுள் ஊறிக்கிடக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அவன் மாபெரும் பாவி என்று மொழியப்பெறுகிறான். நித்திய அநித்திய வஸ்து விவேகம் தெளிவாகச் சாதகன் உள்ளத்தில் உருவெடுக்க வேண்டும். அப்பொழுது அநித்தியமாயுள்ள உலகப் பொருள்களும் உலக வாழ்வும் அவனுடைய உள்ளத்தினின்று ஒதுங்கிப்போவது சாத்தியமாகிறது. இந்திரியங்கள் மூலமாக வருகிற இன்பங்களி

விடத்துப் பற்று வைக்கின்றவர்களுக்கே இம்மைப்பற்றும் மறுமைப்பற்றும் உருவெடுக்கின்றன. சுகபோகங்களெல்லாம் மனிதனுடைய நிஜசொரூபத்தைப் பாழ்படுத்தி அவனைக் கீழ்மையில் ஆழ்த்துகின்றன என்னும் தெளிவு உருவெடுக்கின்றபொழுது அது வைராக்கியம் எனப்படுகிறது. தெளிந்த விவேகமும் தீவிர வைராக்கியமும் வாய்க்கப்பெற்றவனே நல்ல ஆத்மசாதகன் ஆகிறான். மற்றவன் ஜடபுத்தியுடையவன் ஆகிறான். அன்னவனுக்கு ஆத்மபோதம் வாய்க்காது பிறவிப் பெருங்கடலிலேயே அவன் மூழ்கிக்கொண்டு இருப்பான். ஆயினும் அதற்கு ஒரு முடிவு உண்டு. விரைவில் அல்லது நாளடைவில் மக்களாகப் பிறந்துள்ள எல்லாருக்கும் விவேகமும் வைராக்கியமும் உருவெடுக்கின்றன. அப்பொழுது பரத்தையடைய சாதகன் தகுதியுடையவனாகிறான் என்பது இக்கண்ணியினுடைய கருத்து.

335. **எல்லாம் நினதுசெயல் என்றுஎண்ணும்**
எண்ணமும்நீ
அல்லால் எனக்குஉளதோ ஐயா பராபரமே.

ஜீவாத்மன் ஒருவன் கீழ்நிலையிலிருந்து மேல்நிலைக்குப் போவதற்கு அவனே பொறுப்பாளியாகிறான். அவன் எடுத்துக்கொள்கிற முயற்சிக்கு ஏற்றவாறு கீழ்மையும் மேன்மையும் அவனுக்கு வந்தமைகின்றன. தான் அடைந்துள்ள நிலைக்குத் தானே பொறுப்பாளி என்னும் உணர்வு அவன் இன்னும் மேல் நிலைக்குப் போவதற்குத் தூண்டுகிறது. 'தானே தனக்குச் சுற்றமும் தானே தனக்கு விதிவகையும்' என்னும் கோட்பாடு பரிணமித்து மேன்மை அடைந்துவருகிற ஜீவாத்மனுக்கு முற்றிலும் பொருத்தமானது.

மானுட நிலையை எட்டியுள்ள ஜீவாத்மன் அந்நிலையில் கணக்கற்ற பிறவிகளை எடுக்கிறான். அப்பிறவிகளில் இப்

பிரபஞ்ச வாழ்வைப்பற்றிய உண்மை சிறிது சிறிதாக அவனுக்கு விளங்குகிறது. இன்பம் துன்பம் ஆகிய இரண்டும் கலந்தது பிரபஞ்ச வாழ்க்கை. துன்பம் கலவாத இன்பத்தை மானுடன் பிரபஞ்சத்தில் தேடுகிறுன். ஆனல் அது ஒருநாளும் அகப்படாது. துன்பம் என்னும் விலைகொடுத்தே இன்பத்தை ஈண்டுப் பெறமுடியும். இந்த நிர்ப்பந்தத்தை முன்னிட்டு விவேகம் படைத்துள்ள மனிதனுக்குப் பிரபஞ்ச வாழ்க்கையில் பற்று குறைகிறது. ஆத்மசாதனத்தில் அவன் ஈடுபடுகிறுன். ஆத்மசாதனம் ஓங்குதற்கேற்பப் பிரபஞ்சப் பற்றும் குறைந்து மறைந்து போகிறது.

அடுத்தபடியாகத் தனக்கும் தெய்வத்துக்கும் உள்ள இணக்கத்தை அவன் அறிய வருகிறுன். தெய்வத்தின் அருளாலேயே தன்னுடைய வாழ்வு பெருவாழ்வாகப் பரிணமித்து வருகிறது என அவன் உணருகிறுன். மேல்நிலைக்குப் போகப் போக யான் எனது என்னும் செருக்குப் பின்னணிக்குப் போகிறது. அவன் ஆட்டுவித்த பிரகாரம் நான் ஆடுகிறேன்; பேசுவித்த பிரகாரம் நான் பேசுகிறேன் என்னும் பரபோதம் முன்னணியில் வந்து நிற்கிறது. அதற்குமேல் ஒருபடி அவன் முன்னேறுகிறபொழுது நானுக வடிவெடுத்து வந்திருப்பதுவும் தானே என்னும் தெளிவு வருகிறது. கடைசியாக நான் என்னும் ஜீவவியக்தி அடியோடு மறைந்து போகிறது. கடலை எட்டுகின்ற நதி ஒன்றை இதற்குச் சான்றுகச் சொல்லலாம். கடலை அணுகுகின்றபொழுது கடலின் பாங்கு ஆகிய பொங்குதல் வடிதல் என்னும் செயல்கள் நதியினிடத்தும் காணலாம். கடலை அடைந்தானபிறகு நதியின் பாங்காகிய நல்லநீர் சிறிதளவு அதனிடத்து இருக்கிறது. கடலுக்குள்ளே முற்றிலும் நுழைந்தான பிறகு நதியின் பாங்கை அது இழக்கிறது. கடலாக அது நிலைத்

திருக்கிறது. அதேவிதத்தில் ஜீவாத்மன் பரமாத்மனில் லயமாகும் தருணத்தில் ஜீவபோதம் எப்படிப் பரபோதமாக மேலோங்குகிறது என்னும் கருத்து இக்கண்ணியில் அடங்கி யிருக்கிறது.

336. பந்தம் மயக்குஇருக்கப் பற்றுஒழிந்தேன் என்று உளறும்
இந்த மயக்கம் எனக்குஏன் பராபரமே.

பந்த மயக்கு-பிரபஞ்சப்பற்று என்னும் அக்ஞான நிலை. பற்றொழிதல்-பந்தம் அறவே நீங்குதல். உளறுதல்-பிதற்றுதல்.

பரதத்துவத்தைப் பகுத்தறிவால் அல்லது யுக்தியால் அறிந்துகொள்ளுதல் ஒரு நிலை. அது பாராட்டுதற்குரியது. ஆனால் அது சுவானுபூதியாய் வடிவெடுக்க வேண்டும்.

சுவானுபூதியாய் வடிவெடுக்குமிடத்தே மயக்கம் மறைந்து பட்டுப் போகிறது. ஜீவபோதம் அடிபட்டுப் போகிறது. பரபோதம் எஞ்சியிருக்கிறது. பள்ளியில் படித்து வருகிற மாணுக்கன் ஒருவன் தலை மாணுக்கனுகத் திகழ்கிருன். படிப்பில் நிபுணனுக இருக்கிருன். பரீட்சையில் தேர்வுபெற்றுப் பள்ளியினின்று வெற்றிகரமாக அவன் வெளியேறுவது திண்ணம். ஆனால் பரீட்சையில் கேட்ட கேள்விகளுக்கு விடை எழுதுதற்கு முன்பே தன்னைப் பரீட்சையில் தேர்ந்துவிட்டவனுகத் தன்னைப்பற்றி அவன் எண்ணிக்கொள்வானுகில் அது மயக்கமாகும். அவனுக்கு அது ஒவ்வாது. அதேவிதத்தில் ஆத்மசாதகன் ஒருவன் முறையாகச் சாதனங்கள் புரிந்துகொண்டிருப்பதற்கிடையில்

தனக்குச் சுவானுபூதி வாய்த்துவிட்டதாக எண்ணுவது ஒவ்வாது. அப்படி எண்ணுவதே மயக்கம். அந்த மயக்கத்தினின்று தெளிவு அடைவது குறிக்கோள். ஜீவபோதத்தை அறவே கலைத்துவிட்டால் ஜீவபோத ஒழிவும், பரபோத உதயமும் ஒருங்கே நிகழ்கின்றன. திருவருளை முன்னிட்டு அங்ஙனம் நிகழவேண்டிய அரியபெரிய செயலை நிகழ்ந்து விட்டதாகக் கற்பனைபண்ணுவது பொருந்தாது என்பது இக்கண்ணியின் கருத்து.

337. காட்சிஎல்லாம் கண்ணைவிடக் கண்டதுஉண்டோ யாதினுக்கும்
ஆட்சி உனதுஅருளே அன்றோ பராபரமே.

மாட்சி—மகிமை. பஞ்ச பூதங்களால் ஆகிய பிரபஞ்சத்தின் அமைப்பைக் காண்பதற்குப் பஞ்ச பூதங்களால் ஆகிய ஊனக்கண் உதவுகிறது. ஊனக்கண்கொண்டே இவ்வுலகின் நடைமுறைகளை நான் கண்டு வருகிறேன். அத்தகைய பிரபஞ்சம் உன்னருளால் வடிவெடுத்திருக்கிறது. இதே பிரபஞ்சத்தின்கண் உன்னுடைய மகிமையும் மிளிர்ந்துகொண்டிருக்கிறது. அந்த மகிமையைக் காண்பது எல்லாருக்கும் சாத்தியமன்று. உன்னுடைய அருளுக்குப் பாத்திரமாகின்றவர்களுக்கே உலகம் முழுவதையும் உன்மயமாகக் காண்பது சாத்தியமாகிறது. வெறும் ஊனக் கண்கொண்டு காண்பவருக்கு இப்பிரபஞ்சம் ஒரு பாங்கில் விளங்குகிறது. அது இன்பமும் துன்பமும் நிறைந்தது. போட்டிக்கும் பொறாமைக்கும் அதில் வேண்டியவாறு இடமிருக்கிறது. எளிய உயிர்வகைகளை வலிய உயிர்வகைகள் அடக்கி ஆளுதலும், அடிமைப்படுத்துதலும், துன்புறுத்துதலும், துடைத்துத் தள்ளுதலும் சாத்தியமாகின்றன. அப்பிரபஞ்சத்தில் ஓர் உயிர் மற்றோர் உயிரைப்பேணுதலும்,

பாராட்டுதலும் சாத்தியமாகின்றன. விதவிதமான காட்சிகளுக்கு இப்பிரபஞ்சம் இடம் தருகிறது. முரண்பாடுகள் அனைத்தும் இதில் நிறைந்திருக்கின்றன. இப்பிரபஞ்ச வாழ்வில் அலுப்புத் தட்டுகிற யாரோ சிலர்தாம் உன்னருளை நாடுகின்றனர். அப்படி நாடுகின்ற எல்லாருக்கும் உன்னருள் வாய்ப்பதில்லை. அதற்கும் காரணமாயிருப்பது அன்னவர்களின் அரைகுறையான ஆத்மபரிபாகமேயாகும். மற்று, ஆத்ம பரிபாகம் அடையப்பெற்று உன்னுடைய அருளையும் அடையப்பெற்றவர்களுடைய பாக்கியம் அலாதியானது. அப்படி அருளுக்குப் பாத்திரமானவர்கள் அணுமுதல் அண்டம் வரையில் உள்ள யாவையும் உன்மயமாகக் காண்கின்றனர். கோரக்காட்சி, அகோரக் காட்சி, கொடூரத்தன்மை, இரங்கிய மனப்பான்மை, பட்சபாதம் நேரான இணக்கம் ஆகிய முரண்பாடுகள் எல்லாம் அடிபட்டுப் போகின்றன. உன்னுடைய ஆனந்தத் தாண்டவமே யாண்டும் மிளிர்கின்றது. நலம் கேடு எனப்படுபவைகள் வேற்றுமைகளை இழந்து விடுகின்றன. உயர்ந்தவைகள், தாழ்ந்தவைகள் என்பன வித்தியாசமற்றுப் போகின்றன. கொலைபாதகம், போட்டி, பொறாமை என்னும் கொடிய செயல்களெல்லாம் பொருளற்றவைகளாய்ப் போகின்றன. அவையாவையும் உன் மயமாய்க் காணுதலிலும் அவைகளின் செயல்களை எல்லாம் உன்னுடைய விளையாட்டாகக் காணுதலிலும் உருவெடுக்கின்ற பரமானந்தம் ஒப்பற்றது. ஆகவே உன்னை வழுத்தி உன்னிடத்தில் ஒன்றுபடுவதற்கு முன்பு இம்மாயப்பிரபஞ்சம் முழுவதையும் உன்னுடைய மகிமை வாய்ந்த திருவிளையாடலே என்னும் அருள்காட்சி காண்பவர்கள் பாக்கியவான்கள். அப்பெரியபேறு அடியேனுக்கும் வாய்ப்பதாகுக என்பது இக்கண்ணியின் கருத்து.

338. எட்டுத் திசையும்ஒன்ருய் இன்பமாய் நின்றஉன்னை
விட்டுப் பிரியஇடம் வேருே பராபரமே.

நாம் விழித்திருக்கும் வேளையில் ஏதேனும் ஓர் இடத்தில் இருக்கிருேம். ஆதலால் இடம் நமக்கு ஆதாரமாகவும் அதில் நாம் ஆதேயமாகவும் அமைந்திருக்கிருேம். ஆனல் கனவற்ற உறக்கத்தில் நம் நிலைமை வேறு ஆகிறது. கருவி கரணங்களெல்லாம் ஆங்கு ஒடுங்கிப் போகின்றன. சித்த விருத்தி ஆங்கு இல்லை. வெறும் பிரக்ஞை தன்னில் தானய் இருக்கிறது. மனிதன் படுத்து உறங்குகின்ற அறையில் அவனுடைய உடல் நித்ராவஸ்தையில் கிடக்கிறது. பிரக்ஞை மயமாகிய அவன் உடலில் அடங்கியவனும் அல்லன். அறையில் கிடப்பவனும் அல்லன். அவன் தன்னில் தானய் இருக்கிருன்.

கால தேச நிமித்தமயமாக இப்பிரபஞ்சம் இருக்கிறது. மேலும் கால தேச நிமித்த மயமாக மனமும் இருக்கிறது. மனம் ஒடுங்கிய இடத்தில் கால தேச நிமித்தம் இல்லை. பிரபஞ்சமும் இல்லை. வெறும் பிரக்ஞை மட்டும் தன்னில் தானய் இருக்கிறது. மனே கற்பனையாக அமைந்துள்ள இடத்தில் பரவஸ்து அடங்காது. நீக்கமற எங்கும் நிறை பொருள் என்பது வெறும் பெயரளவிலாம். பரவஸ்துவோ நிறைபொருள், பூரணம். அதற்கு இடம் தேவையில்லை. இடம் என்னும் கற்பனை மனத்தில் இருக்கிறது. அந்த மனமோ பரவஸ்துவினின்று தோன்றியது. பரவஸ்துவை ஆதாரமாகக்கொண்டே அதில் நிலைத்திருக்கிறது. பிறகு பரவஸ்துவிலேயே ஒடுங்குகிறது. நாள்தோறும் நாம் அனுபவிக்கும் சுஷுப்தி அவஸ்தை அல்லது கனவற்ற உறக்கமே இதற்குச் சான்ருகிறது. எட்டுத் திசைகளைக் கற்பிப்பது மனம். அந்த மனமும் ஒரு கற்பனை. மனம்போன இடத்தில் அதன் கற்பனையாகிய திசைகளும் ஒடுங்கிப் போகின்றன,

இடத்திற்கு ஆகாசம் என்பது மற்றொரு பெயர். அந்த ஆகாசமே மனத்தின் கற்பனை என்றால் அந்த ஆகாசத்தினின்று பரிணமித்து வந்துள்ள வாயு, அக்னி, நீர், நிலம் முதலியனவும் கற்பனையாகும். இந்தப் பஞ்சபூதங்கள் கற்பனையென்றால் அவைகளால் ஆக்கப்பெற்றுள்ள பிரபஞ்சமும் கற்பனையாம். அயர்ந்த உறக்கமே இதற்குப் பிரமாணமாகிறது. உறக்கத்திற்குப் புறம்பாக வேறு சாஸ்திரப் பிரமாணம் இதற்குத் தேவையில்லை.

நான் என்னும் ஜீவவியக்தியில் அசேதனமாகிய உடல் உள்ளம் இடம் பெறுகின்றன. சேதனமும் இடம்பெறுகிறது. ஆக ஜீவவியக்தி சேதனம், அசேதனம் ஆகியவற்றின் கூட்டுறவால் இடம்பெறுகிறது. மானுடன் படைத்துள்ள உடலும் உள்ளமும் பிரபஞ்ச அமைப்பில் ஒரு சிறு அறைக்கு நிகர். மானுடன் சேதனம் அல்லது பிரக்ஞை, அல்லது பிரக்ஞானம் படைத்திருக்கிற கட ஆகாசத்திற்கு நிகர். கடஆகாசம் மஹா ஆகாசத்திற்குப் புறம்பானதன்று. அதேவிதத்தில் ஜீவாத்மனிடத்தில் இருக்கும் நிஜநிலையாகிய சேதனம் அல்லது பிரக்ஞை நிறைபொருளாகிய பூரணப் பிரக்ஞைக்குப் புறம்பானதன்று. அலை எங்ஙனம் சமுத்திரத்திற்குப் புறம்பானது அன்றோ அங்ஙனம் ஜீவப்பிரக்ஞை பூரணப் பிரக்ஞைக்குப் புறம்பானதன்று. இக்கோட்பாடே இக்கண்ணியில் அடங்கியுள்ள தத்துவமாகும். இதைச் சிந்தனை பண்ணுவது நல்ல ஆத்மசாதனமாகிறது.

339. பிரியாது உயிர்க்குஉயிராய்ப் பின்னம்அற ஓங்கும்
செறிவே அறிவே சிவமே பராபரமே.

பின்னம்-பேதம். பின்னமற-வேற்றுமையின்றி. ஓங்குதல்-வியாபித்திருத்தல். செறிவு-நிறைவு அல்லது பூரணம். அறிவு-சிதாகாசம். சிவம்-மங்கலப் பொருள்.

பேத உணர்ச்சி பூண்டிருப்பதை அக்ஞானம் என்றும் அபேதத்தில் நிலைத்திருப்பதை ஞானம் என்றும் ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்சர் பகர்ந்துள்ளார். கடற்கரையில் நின்று கொண்டு கடலைப் பார்க்கின்றபொழுது ஒன்றன்பின் ஒன்றாக எண்ணிறந்த அலைகள் காட்சிகொடுக்கின்றன. விமானத்தில் மேலே போகப்போக அலைகள் மறைந்துபட்டுப் போகின் றன. வெறும் கடலே காட்சிக்கு எட்டுகிறது. தரையில் நின்றுகொண்டு பூமியைப் பார்க்கின்றபொழுது மேடு மடுவு ஏராளமாகத் தென்படுகின்றன. மலையுச்சியினின்று பார்க் கின்றபொழுது மேடு, மடுவுகளெல்லாம் மறைந்துபட்டுப் போய் ஒரே சமவெளி தென்படுகிறது. சில வேளைகளில் கடல் அலை வீசுவதில்லை. சாந்தமான ஒரே நீர்ப்பரப்பாக அது காட்சி கொடுக்கிறது. அலைகள் எங்ஙனம் தாற்காலிக மாகக் கடலில் தென்படுகின்றனவோ அங்ஙனம் அறிவுப் பெருவெளியாகிய பரம்பொருளிடத்து அனந்தங்கோடி ஜீவ வியக்திகள் வடிவெடுத்து விளங்குகின்றன. அலைகளாகக் காட்சி கொடுக்கின்றவிடத்தும் அவ் அலைகள் கடலுக்குப் புறம்பானவைகள் ஆகமாட்டா. கடல் என்றும் அலைகள் என்றும் பின்னப்படுத்துவது வெறும் பெயரளவிலேயாம். உண்மையில் கடலும் அலைகளும் அபின்னம். அதேவிதத் தில் எண்ணிறந்த ஜீவகோடிகள் அகண்டமாயுள்ள அறிவுப் பெருவெளியிலுள்ள வெறும் தோற்றங்களாம். ஆக பேதத் தைப் பார்ப்பது அறிவின்மை. அபேதத்தைக் காண்பது மெய்யறிவு. இறைவா, மனத்தால் உண்டுபண்ணப்படுகிற எல்லாவிதமான பேதங்களையும் தாண்டி அபேதமாகிய உன் னுடைய நிஜநிலையில் நான் இருந்து பழகுவேனாக என்பது இக்கண்ணியின் கருத்து.

340. ஏதுஏது சொன்னாலும் எள்அளவும் நீஇரங்காச்
சூதுஏது எனக்குஉளவு சொல்லாய் பராபரமே.

சூது–கபடம்; உளவு–உட்பொருளை அறியும் உபாயம்.

ஈசனுடைய பஞ்சகிருத்தியங்களுள் மறைத்தல் என்பது ஒன்று. ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள இணக்கத்தை வெளிக்குக் காட்டாது மறைத்து வைப்பது ஈசனுடைய திருவிளையாடல்களில் ஒன்றாகும். திரோதானம் அல்லது மறைத்தல் என்னும் லீலையின் வாயிலாக இறைவன் காட்சிக்கு எட்டாதவனாக இருக்கின்றான். அவனுடைய அருளையும் திருக்காட்சியையும் நாடி ஆத்மசாதகன் கதறிப் பதறி அழுகின்றான். அத்தகைய அழுகையில் அவனுக்குப் பிரயோஜனம் இருக்கிறது. பரமனை நாடி ஆத்மசாதகன் அழுவதற்கு ஏற்ப அவன் ஆத்ம பரிபாகம் அடைகிறான். அத்தகைய ஆத்மபரிபாகத்தின் பொருட்டே இறைவன் ஆரம்பதசையில் மறைந்து இருக்கிறான். அழுகையின் மூலம் மனத்துக்கண் உள்ள மாசு முழுவதும் நீங்கப்பெறுகிறபொழுது பரமனுடைய காட்சி இயல்பாக வாய்க்கிறது. இதுவே பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கும் உள்ள பேத அபேத நிலைகளைப்பற்றிய உறவாம். அருள்நாட்டத்தில் உருகி ஆத்மசாதகன் பண்பாடு அடையவேண்டும். பண்பாடு அடையாது அருளுக்குப் பாத்திரம் ஆக வேண்டும் என்று பரமனைக் கேட்பது பொருளற்றது என்பது இக் கண்ணியின் கருத்து.

341. கற்பனையாப் பாடுகின்றேன் கண்ணீரும் கம்பலையும்
சொற்பனத்தும் காணேன்என் சொல்வேன்
பராபரமே.

வெறும் இசையிலேயே பயிற்சி பெற்றிருக்கின்ற மானுடனொருவன் எந்திரம் போன்று பாட்டைப் பாட வல்ல

வனுகிருன். அவன் பாடுகிற பாடலுக்கு உயிரூட்டுகின்ற உணர்ச்சி இல்லாவிட்டால் அது வெறும் கற்பனைப்பாட்டு ஆகிறது. வேண்டியவாறு அதில் அலங்காரம் அமைந்திருக் கலாம். அப்படியிருந்தும் அது பக்தியை வளர்க்காது. பக்தி யோடு கூடிய பாடலோ உள்ளத்தை உருக்குகின்றது. கண்ணீர் ததும்பிக்கொண்டு வரும்படி செய்கிறது. உடலை அது நடுநடுங்கச் செய்கிறது. வெறும் இசை ஞானம் படைத் திருக்கின்றவன் கற்பனையாகப் பாடுகின்ருன். பக்தன் ஒரு வனே உணர்ச்சியின் வேகத்தால் பாடுகின்ருன். உணர்ச்சி யின் வேகத்தால் பாடுகின்ற பான்மையை நான் கனவிலும் கண்டறியேன். வெறுமனே உயிர்வாழும் இயந்திரமாக இருக்கின்றேன். ஆண்டு ஆண்டுகளாக நாம் இசையைக் கிளப்பிக்கொண்டே இருக்கலாம். காற்று அடிக்கின்ற இடத் தில் வைக்கப்பட்ட மூங்கில் குழாய் ஓசையைக் கிளப்பிக் கொண்டிருந்தாலும் வெறும் ஜடப்பொருளாகவே இருக் கிறது. அத்தகைய பரிதாபகரமான நிலையில் நான் ,ருக் கின்றேன். இறைவா! உள்ளக் கசிவால் கண்ணீர் ஏ ராள மாகக் கொட்டிக்கொண்டு உடலில் உணர்ச்சி ததும்புகின்ற நடுக்கத்தை உண்டுபண்ணிக்கொண்டு உன்னைக் குறித்து நான் எப்போது போற்றிப் பாடுவேன் என்பது இக்கண்ணி யின் கருத்தாகும்.

342. வன்புஒன்று நீங்கா மனதுஇறப்ப மாருப்பேர்
அன்புஒன்றும் போதும்எனக்கு ஐயா பராபரமே.

வன்பு—கடினத்தன்மை: நீங்கா—நீங்கி; மனது இறத் தல்—மனோநாசம் ஆதல்.

ஒன்ருேடொன்று முரண்படுகின்ற இரண்டு விதமான இயல்புகள் மனிதனிடத்து உண்டு. வைரம் போன்று கடின

மாயிருப்பது ஓர் இயல்பு. வெண்ணெய் போன்று உருகும் பாங்குடையது மற்றொரு இயல்பு. வைரம் போன்று கல் நெஞ்சம் படைத்திருப்பது அரக்க இயல்பு. அன்பின் மேலீட்டால் உருகும் பாங்குடையது தெய்வீகப்பெற்றி பெற்றுள்ளது. தெய்வீகப் பெற்றியே ஆத்ம சாதனத்திற்கு இன்றியமையாத பேறு ஆகிறது. கல்நெஞ்சம் ஆத்ம சாதனத்துக்கு உதவாது. குழையும் பாங்குடைய நெஞ்சமே ஆத்ம சாதனத்துக்குப் பொருத்தமானது. இப்பிரபஞ்சம் வாழ்க்கைப் பயிற்சி தருதற்கு ஏற்ற கூடமாக அமைந்திருக்கிறது. பயிற்சி பெறுபவர்களில் அரக்கத் தன்மையை வளர்ப்பவர்கள் வன்நெஞ்சக்காரர்களாவே வளர்ந்து வருகிறார்கள். யாருக்கோ எதற்கோ இரக்கம் காட்டும் பான்மை வன்நெஞ்சத்தில் இல்லை. மற்றுத் தெய்வப்பெற்றியை உடைத்திருக்கும் மனம் எதையும் வெறுப்பதில்லை. அனைத்திடத்தும் அன்பைப் பெருக்குகிறது. அன்புக் கடலிலேயே அது கரைந்துபட்டுப் போகிறது. அத்தகைய மேலான அன்பில் ஊறி என் உள்ளம் ஒடுங்கிப்போகும்படி இறைவா, நீ அருள்புரிவாயாக என்பது இக்கண்ணியின் கருத்து.

343. ஏதும் தெரியா எளியேனை வாளாநின்
போதநிலை காட்டின் பொறாதோ பராபரமே.

ஏதும் தெரியாதிருத்தல்—கல்வியும் கேள்வியும் இல்லாத மடமைநிலை; போதநிலை—ஆத்மீகப் பேருணர்வு; பொறாதோ—தாங்க முடியாதோ.

பக்தி சாதனத்தில் சிறப்பு ஒன்று உண்டு. கல்வியும் கேள்வியும் அதற்குத் தேவையில்லை. குழந்தை ஒன்றின் சரள சுபாவமே அதற்குப் போதுமானது. ஆதலால் கற்றவர்கள் கல்லாதவர்கள் ஆகிய எல்லார்க்கும் பக்தி சாதனம்

பொதுவுடைமை ஆகிறது, பக்தி வாய்க்கப்பெற்றிருப்பவன் பரமபாக்கியவான் ஆகிறான். பக்தியின் எளிய பாங்கை உலகுக்கு எடுத்து விளக்குதல் பொருட்டே அதைக் கண்ணன் கோபிமார்களிடத்து ஊட்டி வந்தான். அத்தகைய ஆயர்பாடிச் சிறுமியர்கள் தூய உள்ளம் படைத்திருந்தார்கள். வேறு சிறப்பேதும் அவர்களிடத்து இல்லை. ஆயினும் நாள் ஏற ஏற அவர்களது உள்ளத்தில் பேரன்பு அளவு கடந்து பெருகி வந்தது. அன்பின் வேகத்தால் அவர்களுடைய அமைப்பு முழுதும் கண்ணனுக்கு உரியவைகள் ஆகி விட்டன. அந்தக் கோபிமார்களுள் ஒருத்தியின் பெயர் ராதை. அவள் வயதில் மூத்தவள். அவளிடத்துப் பேரன்பு புயல் காற்றுப் போன்று பெருகிற்று. புயல்காற்று அடித்தால் மரம் செடி கொடிகளையெல்லாம் அல்லோலகல்லோலப்படுத்துகிறது. ஆனால் மலையை எப்புயலும் அசைப்பதில்லை. பேரன்புக்கு எதையும் அசைத்துத் தள்ளுகிற சிறப்பு உண்டு. அத்தகைய பேரன்பை அல்லது பராபக்தியை ஆத்மசாதகன் வளர்க்கவேண்டும். அப்படி வளர்ப்பதற்கிடையில் ஸ்ரீமத் ராதை படைத்திருந்த உறுதிப்பாட்டையும் தெய்விகப் பண்பையும் பெறுதல் வேண்டும். தெய்விகப் பண்பின் விளைவாக அம்மாதரசி படைத்திருந்த பஞ்சேந்திரியங்களிடத்தும் தெய்விகப்பெற்றியே பொலிவதாயிற்று. பார்ப்பதற்கென்றே உரிய கண்ணானது ஓசையைக் கேட்கவும் வல்லதாயிற்று. கேட்பதற்கே உரிய காதானது தெய்வ வடிவத்தைக் காண்பதற்கு ஏற்ற பண்பையும் பெற்றது. அத்தகைய பண்பு பெறுவதற்கு உள்ளம் கனல் நெய் போன்று உருகவும் கற்பாறை போன்று அசையாது இருக்கவும் வல்லதாக வேண்டும். பராபக்தியில் முரண்பாடுகள் அனைத்தும் இணைந்து ஒன்று கூடுகின்றன. அதன் வேகத்

தைத் தாங்குதற்கான உறுதிப்பாடும் பக்தனிடத்து இருக்க வேண்டும். அத்தகைய பெருநிலையை இறைவா, எனக்குத் தந்தருள்வாயாக என்பது இக்கண்ணியின் கருத்து.

**344. ஓராமல் எல்லாம் ஒழிந்தேற்குஉன் தெய்வஅருள்
தாராது இருக்கத் தகுமோ பராபரமே.**

ஓராமல்-ஆராய்ச்சி செய்யாமல்; ஒழிந்தேற்கு-ஒதுக்கித் தள்ளியவனுக்கு.

பல பிறவிகளில் பெறுகிற பயிற்சிகளையெல்லாம் பெற்ற பிறகு ஜீவாத்மாக்கள் மானுடப் பிறவிக்கு வருகின்றன. மானுடநிலையில் பல பிறவிகள் எடுத்தபின் பிரபஞ்ச வாழ்வில் இன்பமும் துன்பமும் கலந்தே இருக்கின்றன என்னும் அனுபவம் வருகிறது. துன்பம் கலவாத இன்பம் பிரபஞ்ச வாழ்வில் இல்லை என்பது அனுபவபூர்வமாக வந்து அமைகிறது. அதன் பிறகு இயல்பாகவே உலகப்பற்று ஒழிந்து பட்டுப் போகிறது. விரக்தி அல்லது பற்றின்மை தானாகவே வந்தமைகிறது. பற்றின்மையைப் பெறுதற்கு மக்களாகப் பிறந்துள்ள ஜீவாத்மாக்கள் எடுத்துக்கொள்ளும் கால அளவிற்கு வரையறையில்லை. பெரும்பாலோர் கணக்கற்ற பிறவிகள் எடுத்த பின்பே உலகப்பற்றை விட்டொழிக்கின்றனர். ஒரு சிலர் உலக வாழ்வில் உள்ள குறைபாட்டை அதிவிரைவில் அனுபவபூர்வமாகக் கண்டறிகின்றனர். அடியேனுடைய உள்ளத்தினின்று உலகப்பற்று ஒழிந்துபட்டுப் போகிறது. ஆதலால் இறைவா, உன்னுடைய அருளுக்கு என்னைப் பாத்திரமாக்கு என்று விண்ணப்பிக்கின்றேன். எனக்கு வந்துள்ள விரக்தி உலக நடைமுறையின் பாங்கை முழுதும் அறிவதற்கு முன்பே வந்திருக்கலாம். ஆயினும் இனி எனக்கு உலகப்பற்று வேண்டாம் என்று இறைவா உன்னிடம் விண்ணப்பிக்கின்றேன். இன்னும் கொஞ்ச

காலம் இப்படியிருக்கிறபடியே இருந்துவா என்று ஒதுக்கி வைக்கவேண்டாம். கிருபைகூர்ந்து என்னை ஆட்கொண் டருள்வாயாக என்பது இக் கண்ணியின் கருத்தாகும்.

345. மோனம் தரும்ஞானம் ஊட்டி எனக்குஉவட்டா
ஆனந்த வாழ்க்கை அருளாய் பராபரமே.

மோனம்-மௌனம் அல்லது வாய்பேசாமை. ஞானம் ஊட்டி-ஞானத்தை வழங்கி; உவட்டா-தெவிட்டாத.

பேச்சுக்கு எதிரிடையாய் இருப்பது மௌனம். எங்குப் பேச்சு இருக்கிறதோ ஆங்குச் சலனம் உண்டு. சலனமே கர்மம் என விளக்கப்படுகிறது. பிரபஞ்சம் முழுவதும் சலித்துக்கொண்டிருக்கிறது. ஆதலால் அது கர்ம சொரூபம். ஓசை முழுதும் கர்மத்தின் கூறு ஆகும். எங்கு ஓசை இருக் கிறதோ அங்கு மௌனம் இல்லை.

'குஹ்யானும் மௌனம் சைவாஸ்மி' என்று கிருஷ்ண பரமாத்மா தமது விபூதியைப் பகவத்கீதையில் விளக்கு கிறார். எது சொல்லால் விளக்கப்படாதிருக்கிறதோ அது இரகசியம். இரகசியங்களுள் நான் மௌனம் என்பது இக் கூற்றின் உட்பொருளாகும். ஆதலால் மௌனம் பிரபஞ் சத்தோடு சம்பந்தப்படாதது. பிரபஞ்சத்தின் செயலனைத் தும் ஓசை மயமாய் இருக்கிறது. ஆதலால் அதில் இரகசியம் ஏதுமில்லை. ஆத்ம சொரூபமோ அசைவற்றது. ஆதலால் அதில் ஓசையில்லை. யாண்டும் அது மௌன சொரூபம். பேச்சுக்கு அப்பாலிருப்பதைப் பேச்சின் மூலமாக விளக்க முடியாது என்பதே கிருஷ்ண பரமாத்மாவின் கோட் பாடாகும்.

மனம் சலித்துக்கொண்டிருக்கிறபொழுது அது ஓசை மயமாய் இருக்கிறது. சலனம் அடங்குவதற்கேற்ப மனோ

வேகம் தணிகிறது. மனத்தின் சலனம் அறவே ஒடுங்குகிற இடத்து மனமும் மாயமாய் மறைந்து போகிறது. கனவற்ற உறக்கமே இதற்குச் சான்று ஆகிறது. கனவற்ற உறக்கத்தில் மனம் ஒடுங்கிக் கிடக்கிறபொழுது அது தமோகுணத்தின் ஆதிக்கத்தில் இருக்கிறது. ஆயினும் அதற்கேற்ற ஆனந்தம் ஆழ்ந்த சுஷுப்தி அல்லது உறக்கத்தில் இருக்கிறது. மனம் முற்றிலும் பரிபாகம் அடைந்து மேல்நிலைக்கு வருகிறபொழுது அது சத்துவகுணத்தில் நிலைத்திருக்கிறது. சத்துவகுணத்திலும் மனம் ஒடுங்குகிறது. ஆனால் அது தமோகுணத்தில் உறக்கத்தில் ஒடுங்குகிற நிலை வேறு, சத்துவகுணத்தில் ஞானத்தில் ஒடுங்குகிற நிலை வேறு. தமஸில் கார் இருள் ஓங்கியிருக்கிறது. சத்துவத்தில் பிரகாசம் உச்சநிலையில் இருக்கிறது. உறக்கத்தில் கார் இருளில் மனம் ஒடுங்கியிருக்கிறவேளையில் ஆனந்தம் அனுபவிக்கப்படுகிறது. சத்துவத்தில் மனம் ஒடுங்கியிருக்கிறபொழுதும் ஆனந்தம் அனுபவிக்கப்படுகிறது. ஆனால் ஒன்று ஒடுங்கிய ஆனந்தம்; மற்றது விரிவடைந்த ஆனந்தம். ஒன்று சுஷுப்தி; மற்றது சமாதிநிலை. சுஷுப்தியில் ஆனந்தத்தை அனுபவிக்கிற மனிதன் பழைய ஆளாகவே ஜாக்கிரதாவஸ்தைக்கு விழித்து எழுந்திருக்கிறான். சமாதியில் ஆனந்தத்தை அனுபவிக்கும் ஞானி ஜாக்கிரதாவஸ்தைக்கு வருகிறபொழுது நிறைஞானியாக வருகிறான். பிறகு அவன் அனுபவிக்கும் ஆனந்தம் எக்காரணத்தைக்கொண்டும் தடைபடுவதில்லை. அந்த நிலையை உவட்டாத ஆனந்த வாழ்க்கை என்றும், அதைத் தந்தருள வேண்டும் என்றும் அண்ணல் இறைவனிடம் விண்ணப்பிக்கின்றார். பிரபஞ்சாதீதத்தில் உள்ள மோனநிலையும், ஞானநிலையும், ஆனந்த நிலையும் ஒன்று என்பது இக் கண்ணியின் கருத்தாம்.

346. வாடுமுகம் கண்டுஎன்னை வாடாம லேகாத்த
நீடும் கருணை நிறைவே பராபரமே.

வாடுதல் - சுருங்கிப் போதல்; நீடுங்கருணை - பெருங் கருணை; நிறைவு-பூரணம்.

சின்னஞ்சிறு வயதினின்று ஆயுள் காலம் முழுவதிலும் மனிதன் இன்பத்தையும் துன்பத்தையும் மாறி மாறி அனுபவித்து வருகிறான். குழந்தை ஒன்று ஒருநாளில் எத்தனை முறை அழுகிறது, பிறகு சிரிக்கிறது என்பதைக் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும். குழந்தைப் பருவம் தாண்டிச் சிறுவர் பருவம் பெறுகிறபொழுதும் இன்பமும் துன்பமும் மாறி மாறி வருகின்றன. மனிதன் யுவனாகின்றபொழுதும் அவனுடைய நிலைமை அத்தகையதே. காளைப் பருவத்திலும் ஒரு நாளில் பல தடவை இன்புறவும் துன்புறவும் செய்கின்றான். பிறகு விருத்தாப்பியத்துக்குப் போகின்றபொழுது அவனுக்கு இன்பத்தைவிடத் துன்பமே அதிகம். வாடா முகம் அவனைவிட்டு ஓடிப்போகிறது. வாடுகிற முகமே அவனிடம் எஞ்சியிருக்கிறது. இவ்வுலக வாழ்வில் துன்பம் கலவாத இன்பம் இல்லை என்னும் பேருண்மையைப் பல பிறவிகளுக்குப் பிறகு மனிதன் அறிந்துகொள்கிறான். இந்த விவேகம் ஓங்குதற்கேற்ப அவனுக்கு இவ்வுலகில் விரக்தி வருகிறது. அதாவது பற்றுதல் குறைகிறது. துன்பம் கலவாத இன்பம் வேண்டுகின்றவன் அதைப் பரமனிடத்திலிருந்துதான் பெறமுடியும்; இவ்வுலக வாழ்க்கையில் வாய்க்காது என்னும் கருத்து இக்கண்ணியில் அடங்கியிருக்கிறது.

347. புந்தியினால் நின்அடியைப் போற்றுகின்ற
மெய்அடியார்
சிந்தைஇறப் போநின் தியானம் பராபரமே.

புந்தி—நல்லறிவு. சிந்தை—மனம்.

பொருள்களைப் பாகுபடுத்தும் பான்மை அறிவு எனப் படுகிறது. பொருள்களைப் பாகுபடுத்துதலிலும் அவை களை உள்ளது உள்ளபடி பொருள்படுத்துதலிலும் உள்ள வித்தியாசம் அவரவர்கள் படைத்துள்ள மனப்பான் மையை அனுசரித்ததாகும். ஒரே ஆசாரியரிடத்துக் கல்வி பயின்ற யுதிஷ்டிரனும் துரியோதனனும் ஒரே உலகை ஆராய்ந்து பார்த்து அவரவர்களின் கருத்தைத் தெரிவித் தார்கள். உலகில் கெட்டவர்களே இல்லையென யுதிஷ் டிரன் சொன்னான், உலகில் நல்லவர்களே இல்லையெனத் துரியோதனன் சொன்னான்.

அறிவு சொரூபமாயுள்ள மனிதன் நல்லறிவை வளர்க்க வேண்டும். நல்லறிவு ஓங்குதற்கேற்ப மானுட வாழ்க்கை யின் பயன் பரமனைப் போற்றுதல் என்பது புலனாகிறது. பின்பு பரமனைப் போற்றுதற்கேற்ப மானுட அறிவு புறப் பொருட்களையெல்லாம் பரம்பொருளின் தோற்றமெனப் பொருள்படுத்துகிறது. அத்தகைய தூய நிலையை அடைந்து வருகின்ற சிந்தை தியானத்துக்குத் தகுதியுடையதாகிறது. பின்பு நாமருபங்களையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு வஸ்துவில் லயித்திருப்பது நல்ல தியானமாகிறது. முதிர்ந்த தியானம் சமாதியில் பூர்த்தியாகிறது. இதே கோட் பாட்டை மற்றோர் இடத்தில் "அந்தக்கரணம் அடங்கத் துறப்பதுவே எந்தத் துறவினும் நன்று எந்தாய் பராபரமே" என அண்ணல் இயம்புகிறார். அந்தக்கரணம், உள்ளம், அறிவு, சிந்தை, புத்தி ஆகிய இச்சொற்கள் யாவும் அகக் கரணத்தையே குறிக்கின்றன. அது பரத்தில் லயமாகிற பொழுது ஆத்ம சாதகன் கைவல்ய முக்தியடைகிறான் என்கிற கோட்பாடு இக்கண்ணியில் அடங்கியுள்ளது.

348. உனக்குஉவமை யாக்கருணை உள்ளவரும்
வன்மைக்கு
எனக்குஉவமை ஆனவரும் இல்லை பராபரமே.

ஜீவாத்மனுக்கும் பரமாத்மனுக்கும் உள்ள வேறுபாடு இக்கண்ணியில் நன்கு வெளியாகிறது. உயிர்களனைத்தையும் தன்மயமாக்குதலில் கண்ணுங்கருத்துமாகக் கடவுள் இருக்கிறார். ஆதலால் அவர் கருணாகரன் எனப்படுகிறார். கருணையின் முதிர்ச்சியினால் அவர் பித்துப்பிடித்தவர் போன்று காட்சி கொடுக்கிறார். பித்தன் என்னும் பெயர் அதை முன்னிட்டே அவருக்கு வந்துள்ளது. உலகனைத்தையும் உய்விக்க உலகத்தவர் கிளப்பிய விஷத்தை அவர் ஏற்றுக்கொண்டார். அவருடைய கருணைக்கு அது சிறந்ததொரு சான்றாகிறது. ஜீவாத்மனுடைய பாங்கோ இதற்கு நேர்மாறானது. சுயநலமே வடிவெடுத்துள்ளவன் ஜீவாத்மன். மற்ற உயிர்களின் நலனைக் கருத்தில் வாங்கிக்கொள்ளாது தன் சொந்த நலனிலேயே யாண்டும் ஊறியிருப்பவன் வன்நெஞ்சம் படைத்தவனாகிறான். வன்நெஞ்சத்தை வளர்க்க வளர்க்கப் பிறவிப் பிணியும் பெருகிக்கொண்டே போகிறது. பிறரைத் துன்புறுத்தித் தன் சொந்தக் காரியத்தை நிறைவேற்றுகின்ற ஜீவாத்மன் அரக்கன் எனப்படுகிறான். அதாவது சுயநலத்தின் உச்சநிலையில் இருப்பவன் அரக்கன். அதற்கேற்றவாறு அவர் படைத்துள்ள பிரபஞ்சப் பற்றும் வருகிறது. மானுடன் ஒருவன் எவ்வளவுக்கெவ்வளவு சுயநலத்தை ஒதுக்குகின்றானோ அவ்வளவுக்கவ்வளவு அவன் ஆத்மபரிபாகம் அடைகிறான். சுயநலத்தை வளர்ப்பது பிரவிருத்தி. சுயநலத்தை ஒதுக்கித்தள்ளுவது நிவிருத்தி. மன்னுயிர்களையெல்லாம் தன்னுயிர்போன்று கருதி அவைகளுக்குத் தியாகபுத்தியுடன் பணிவிடை பண்ணுகின்ற

பொழுது நிவிருத்தி பூர்த்தியாகிறது. தங்குதடையின்றி ஜீவாத்மன் தன்னை உலக நலனுக்காக ஒப்படைத்துப் பழகுவானாகில் அவன் தெய்வத்துக்கு உரியவனாகிறான். அன்னவன் மீது கருணை கூர்ந்து கருணாகரக்கடவுள் அவனைத் தன்மயமாக்குகிறான் என்பது இக்கண்ணியின் கருத்து.

349. தாய்இருந்தும் பிள்ளை தளர்ந்தாற்போல் எவ்
இடத்தும்
நீஇருந்தும் நான் தளர்ந்து நின்றேன் பராபரமே.

தாயில்லாப் பிள்ளையின் பாங்கை ஓரளவு நாம் அறிந்துகொள்ள முடியும். ஏனைய வாய்ப்புக்கள் யாவையும் நிறைநிலையில் பெற்றிருப்பதற்கிடையில் தாயோடு இணங்கியிருப்பதை அடையப்பெறாத குழந்தை யொன்றுக்கு அவை யாவும் பொருளற்றவைகளாம். ஆயுட்காலம் முழுவதற்கும் தாயில்லாக் குழந்தையின் வாழ்வு அரைகுறையானதாம். பண்பிலும் அது மேல்நிலைக்கு வருவதில்லை.

ஆத்மசாதகனொருவனுக்கு அருள்தாகம் உருவெடுக்கும் பொழுது அவனுடைய மனநிலையும் கிட்டத்தட்ட தாயில்லாக் குழந்தையின் மனநிலைக்கு ஒப்பானதாகிறது. ஆனால் அத்தகைய அனுதாபத்துக்குரிய மனநிலையை அவன் அறியாமையினால் வரவழைத்துக்கொண்டான். நாம் சுவாசிக்கும் காற்று உலகெலாம் வியாபித்திருப்பது போன்றும், அதற்கு மேலும் ஆண்டவனுடைய அருள் எங்கும் வியாபித்து இருக்கிறது. காலத்தால் அது தடைபடுவதில்லை. நாடுபவர்க்கெல்லாம் அது சொந்தமானது. அப்படியிருந்தும் அதைப் பயன்படுத்தத் தெரிந்துகொள்ளாதவர்களின் நிலைதான் பரிதாபகரமானது. ஓர் அறையினுள் இருக்கும் நச்சுக்காற்றை ஜன்னலின் வாயிலாக வெளிப்படுத்துதற்கேற்பத் தூய

காற்று அவ்வறையினுள் நுழைகிறது. ஆத்மசாதகனுடைய நெஞ்சம் வீட்டிலுள்ள ஓர் அறைக்கு ஒப்பானது. நெஞ்சத்தினுள்ளே நஞ்சுக்கு நிகரான பொருந்தாத எண்ணங்களையும் ஆசாபாசங்களையும் மானுடன் நிறைத்து வைத்திருக்கிறான். அவைகளிடத்தில் பற்றுவைப்பதற்கிடையில் பற்றற்றவன் போன்று பாசாங்கு செய்தலும் கதறிப்பதறி அழுதலும் அவன் செய்கின்றான். புல்லிய பிரபஞ்ச ஆசைகளையும் பொருளற்ற கொள்கைகளையும் உதறித்தள்ளிவிட்டுப் பரமனுடைய அருளைநாடி வேண்டுவானாகில் அக்கணமே அவன் அருளுக்குப் பாத்திரமாவான் என்பது இக்கண்ணியின் கருத்து.

350. வாயால் கிணறுகெட்ட வாறேபோல் வாய்பேசிப்
பேய்ஆனார்க்கு இன்பம்உண்டோ பேசாய் பராபரமே.

கிணற்றின் வாய் முழுவதும் மூடப்பட்டதாக இருக்குமாகில் காற்று மற்றும் சிறுவர்களால் அதற்குக் கெடுதல் ஒன்றும் வாராது. கிணறு கெடுவதற்கு அதன் வாயே காரணமாகிறது. தான் படைத்திருக்கின்ற வாயைச் சரியாகப் பயன்படுத்த மனிதன் கடமைப்பட்டிருக்கின்றான். இரண்டு காரியங்களுக்கு வாய் உதவுகிறது. உணவை அளந்தெடுத்துப் பொருத்தமான வேளைகளில் உண்பவன் உத்தமமான மனிதனாகிறான். உணவு அகப்படுகின்ற வேளைகளில் எல்லாம் அளவு கடந்து அதைப் புசித்து தன் உடல் வாழ்வைப் பாழ்படுத்துபவன் அதமன் ஆகிறான். இனி, பேச்சைப் பற்றிய நியதி அதைவிடக் கடினமானது. அளந்தெடுத்துப் பொருத்தமான சமயத்தில் தக்கவர்களிடம் மட்டும் பேச மனிதன் கடமைப்பட்டிருக்கிறான். நாவுக்கு அரசராகிய திருநாவுக்கரசு சுவாமிகள் யாவருக்கும் முன்மாதிரியாக வாழ்ந்துள்ளார். முறைதவறி வாயைப் பயன்படுத்திக் கெட்

டுப்போன மக்களே பேய் ஆகின்றனர். அவர்கள் தங்களுக்குத் தாங்களே தீங்கு செய்துகொள்கின்றனர். பிறர்க்கும் ஓயாது அவர்கள் இன்னலை விளைவித்துக்கொண்டு இருக்கின்றனர். அத்தகைய வீண் பேச்சாளருக்கும் பேரின்பத்திற்கும் வெகுதூரம். நிறைகுடம் ததும்புவதில்லை. அங்ஙனம் அறிவில் சிறந்தவர்கள் அமைதியுற்றிருக்கின்றனர். பேரின்பத்தை ஓரளவு அன்னவர்கள் யூகிக்கின்றனர். ஆனல் பொருள்படாப் பேச்சில் புதைந்து கிடப்பவர்களுக்கும் பேரின்பத்திற்கும் வெகுதூரம் என்பது இக்கண்ணியின் கருத்து. வாயடங்கப்பெறுதற்கேற்ப மானுடன் நல்ல ஆத்ம சாதகனுகிருன்.

351. பாவம்என்ருல் ஏதும் பயம்இன்றிச் செய்யஇந்த
ஜீவனுக்குஆர் போதம் தெரித்தார் பராபரமே.

பாபம்-தீச்செயல்; பயம்-அச்சம்; ஜீவன்-பிரபஞ்சத்தில் கட்டுண்டு கிடக்கும் ஜீவாத்மன். போதம் - நல்லறிவு; தெரித்தல்-ஊட்டுதல்.

இறைவனுடைய அமைப்பிலே மூன்று பகுதிகள் இருக்கின்றன. அவை முறையே ஜகத், ஜீவன், பரம் என இயம்பப்பெறுகின்றன. பாசம், பசு, பதி எனவும் அந்த மூன்று கூறுகள் பெயர் பெற்றுள்ளன. பசுவானது பிரபஞ்சத்தில் கட்டுண்டு கிடக்கிறபொழுது அது ஜீவாத்மன் எனப்படுகிறது. கட்டுகிற பாங்கு பிரபஞ்சத்துக்கு இருப்பதால் அது பாசம் எனப்படுகிறது. இவை இரண்டையும் கடந்திருப்பது பதி அல்லது பரம். பரிபாகத்தில் ஜீவாத்மாக்கள் பலதரப்பட்டவர்களாக இருக்கிருர்கள். பரமனுக்குப் பக்கத்தில் வந்துள்ள பரிபாகம் அடையப்பெற்ற பெருமக்கள் இருக்கிருர்கள். பிரபஞ்சத்திலே ஊறிக்கிடந்து அதில்

திருப்தியடையும் கடைத்தரமான மக்களும் இருக்கின்றார்கள். மக்களை மேல்நிலைக்குக் கொண்டுவரும் செயல்கள் புண்ணியம் எனப்படுகின்றன. அவர்களைக் கீழ்மையில் ஆழ்த்தும் செயல்கள் பாபம் எனப்படுகின்றன. பாபத்துக்கு அஞ்சுவது நல்லார்களுடைய பாங்கு. பாபத்தில் துணிந்து மூழ்குவது பொல்லாதவர்களுடைய பாங்கு. பயத்தைவெல்ல மனிதன் கடமைப்பட்டிருக்கின்றான்.

பாபம் உருவெடுப்பது அஞ்ஞானத்தினின்றேயாம். கடவுளை அணுக அணுக மனிதன் நிர்ப்பயம் அல்லது அபயம் என்னும் மேலாம் பாங்கைப் பெறுகிறான். எதற்கும் பயப்படாது இருந்து பழகுதல் நல்ல பயிற்சி ஆகும். ஏனென்றால் ப்யம் ஒவ்வொன்றிற்கும் பிறப்பிடம் அக்ஞானம். ஆனால் கொடிய செயலில் ஈடுபடுவதற்கு மனிதன் பயப்படவேண்டும். அத்தகைய பாபம் அக்ஞானத்தை அடிப்படையாகக் கொண்டதன்று. நல்லறிவை அடிப்படையாகக் கொண்டதாக அது இருக்கிறது. ஆனால் புல்லிய பாங்குடைய ஜீவாத்மாக்கள் பாபம் செய்வதில் பயம் கொள்ளுவதில்லை. ஒரு விதத்தில் அவர்கள் ஒட்டகத்துக்கு ஒப்பானவர்கள். முள் செடியைத் தின்பதில் ஒட்டகத்துக்கு விருப்பம் அதிகம். செடியிலுள்ள முள் ஒட்டகத்தின் உதட்டைக் குத்தி ரத்தம் சொட்டச் செய்யும். அப்படியிருந்தும் முள்செடியைத் தின்னும் தீய பழக்கத்தினின்று ஒட்டகம் பின் வாங்குவதில்லை. பெரும்பாவிகள் அங்ஙனம் எந்தப் பாபத்திற்கும் அஞ்சாது புன்செயலில் ஈடுபடுகின்றனர். ஜீவாத்மாக்களுள் அவர்கள் கடைத்தரமானவர்கள். மக்களுள் யாருமே இத்தகைய கீழ்மையில் இறங்கலாகாது. புண்ணியத்தையே கடைப்பிடித்து அவர்கள் மேல்நிலைக்கு வரவேண்டும் என்பது இக் கண்ணியின் கருத்தாம்.

352. இன்ப நிருவிகற்பம் இன்றேதா அன்றுஎனிலோ
துன்பம் பொறுப்புஅரிது சொன்னேன் பராபரமே.

மனிதர் படுகிற இன்ப துன்பங்களுக்கு மனமே காரண மாகிறது. மனம் விருத்தி சொரூபமானது. நல்ல விருத்தி இன்பத்துக்கு ஏதுவாகிறது. கெட்ட விருத்தி மனிதனைத் துன்பத்தில் ஆழ்த்துகிறது. இச்சையினல் தூண்டப்பட்டு உதித்து வருகிற மனோவிருத்திகளைச் சங்கல்பம் என்கிறோம். இச்சையினல் தூண்டப்பெருது விருத்திகள் தாமாகத் தோன்றி வருமானல் அவைகள் விகல்பங்கள் எனப் பகரப் பெறுகின்றன. விகல்பங்களுக்கு முதல் காரணம் சங்கல்பம். சங்கல்பம் அதிகரிப்பதற்கேற்ப விகல்பமும் ஓயாது உதித் துக்கொண்டேயிருக்கும். ஆசையற்றவிடத்துச் சங்கல்பம் உண்டாவதில்லை. சங்கல்பம் ஓய்ந்து போனவிடத்து விகல்ப மும் தானக அடிபட்டுப் போகிறது. விகல்பங்கள் யாவும் மறைந்துபட்டுப் போனவிடத்துச் சுத்த மனம் எஞ்சியிருக் கிறது. அந்நிலையில் ஆத்மாவுக்குச் சொந்தமாயுள்ள ஆனந்தம் தானகத் திகழுகிறது. மனம் ஓய்ந்து இன்புற்று இருப்பதே மனிதனுடைய நிஜநிலை என்னும் கோட்பாடு இக்கண்ணியில் அடங்கியிருக்கிறது.

353. கற்கும்நிலை கற்ருல் கருவிஅவி ழாதுஅருளாய்
நிற்கும்நிலை கற்பதுவே நீதம் பராபரமே.

நீதம் – பொருத்தம்.

பிரபஞ்சத்தைப் பிரபஞ்சமாகவே கண்டு பழகுதல் அபரவித்தை அல்லது லௌகிக ஞானமாகும். அகக்கரணம் (மனம், புத்தி, சித்தம், அகங்காரம்) புறக்கரணங்களின் (மெய், வாய், கண், மூக்கு, செவி) துணையைக்கொண்டு பிர பஞ்ச அமைப்பை ஆராய்ந்துகொண்டே போனல் அந்த

ஆராய்ச்சிக்கு முடிவு இல்லை. நவீனப் பௌதிக விஞ்ஞானிகள் இம்முறையில்தான் பிரபஞ்சத்தைத் தொடர்ந்து ஆராய்ந்து கொண்டே போகின்றனர். இக்கோட்பாட்டைப் புராண பூர்வமாகப் பகருமிடத்து அறிவுப் பெரும்பிழம்பாகக் காட்சி கொடுத்த பரமனுடைய அடியைத் தேடிக்கொண்டு காத்தல் என்னும் கிருத்திய கர்த்தாவாக இருந்த திருமால் கீழ்நோக்கிச் சென்றார். அவருடைய முடியைத் தேடிக்கொண்டு சிருஷ்டி கர்த்தாவாக இருந்த பிரம்மதேவன் மேல்நோக்கிச் சென்றார். ஆனால் ஜீவவியத்தி படைத்திருந்த அம்மூர்த்தி இருவரால் அடிமுடிகாண இயலவில்லை. அகண்ட வஸ்துவைக் கண்ட நிலையில் இருக்கும் மூர்த்திகள் அளந்தறிய மாட்டார்கள் என்பது இதன் கருத்து. ஆழாக்கைக்கொண்டு ஆழ் கடலை அளக்க யாருக்கும் இயலாது. ஜடதத்துவ ஆராய்ச்சியிலே எத்தனை ஜன்மங்கள் போக்கினாலும் பாரமார்த்திக உண்மை விளங்காது.

ஆகையால் ஆத்மசாதகன் தன்னுடைய மனப்பான்மையை மாற்றியமைக்கவேண்டும். இந்திரிய சுகங்களை ஒதுக்கிவைத்துவிட்டு அருள்நாட்டம் படைத்தவனாக ஆத்மசாதகன் மாறியமையவேண்டும். பிரபஞ்சமாகத் தோன்றுகிற அனந்தங்கோடி வஸ்துக்களாக இலங்குபவர் அண்ணல் ஒருவரே என்னும் மனப்பான்மையை வளர்த்தால் அதன் வாயிலாக அருள்நாட்டம் ஓங்குகிறது. அருளைத் துணையாகக் கொண்டே அனைத்திடத்தும் இணக்கம் வைத்துப் பழகவேண்டும். இறைவா! நல்லவனாக வடிவெடுத்து விளையாடுபவனும் நீயே. கெட்டவனாக வடிவெடுத்து விளையாடுபவனும் நீயே. இன்ப துன்பங்களை நல்குபவன் நீ. அண்டகோடிகளைத் தோற்றுவிப்பவன் நீ. ஜீவ போதத்தை விரித்துக்கொண்டே போகிறவன் நீ. ஜீவபோதத்தை ஒடுக்கி

அருள்நாட்டத்தை வளர்ப்பவன் நீ. உன்னுடைய அருளைக் கொண்டு அருள்நாட்டத்தில் நான் நிலைத்திருந்து பழகுவேனாக. அருள்நிலை என்னிடம் உறுதி பெறுகின்றபொழுது அனைத்துமாய் இலங்குபவன் நீயே என்னும் தெளிவு எனக்கு உண்டாகிறது. அத்தெளிவிலே ஜடதத்துவ ஆராய்ச்சியின் தாண்டவமும் முடிகிறது. பரமனாகிய உன் சொரூபத்தை உள்ளது உள்ளபடி நான் கற்று (அறிந்து) மேலும் உன் சொரூபத்தில் ஊறி இருப்பதே பொருத்தமாகும். அத்தகைய அருள்நிலையை இறைவா, எனக்குத் தந்தருள்வாயாக என்பது இக்கண்ணியின் கருத்து.

354. காச்சச் சுடர்விடும்பொன் கட்டிபோல் நிர்மலமாய்ப்
பேச்சற் றவரே பிறவார் பராபரமே.

நிர்மலமாய்—அழுக்கு நீங்கப்பெற்றதாய்.

பொன்கட்டியை எத்தனை முறை உருக்கினாலும் அது கேடடைவதில்லை. அதன் மேலாம் பாங்கே மேலும் மேலும் மாசு நீங்கி மேல்நிலைக்குப் போகிறது. தவம் புரிகின்ற தவசிகளின் பாங்கு அத்தகையது. தவத்தில் வரம்பு கடந்து போதல் என்பது இல்லை. தவசி ஒருவன் தவத்திலே மோலோங்குதற்கேற்ப அவன் மாசு நீங்கப்பெற்றவனாய் ஆத்மப் பிரகாசத்தில் மோலோங்குகிறான். தவசிகள் எல்லார்க்கும் முன்மாதிரியாய் இருப்பவர் சிவபெருமான். பண்பாடடைவதற்காக ஜீவாத்மாக்கள் தவம் புரிகிறார்கள். தவத்தின் வாயிலாக அவர்கள்பால் ஆத்மப் பிரகாசம் மிளிர்கின்றது. ஜீவாத்மன் ஒருவனுக்குத் தவத்தில் நாட்டம் அதிகரிப்பதற்கேற்பப் பேசும் பாங்கு அவனிடத்திலிருந்து பின்னணிக்குப் போகிறது. தபஸ் முற்றுவதற்கேற்பப் பேச்சற்றநிலை அன்னவனிடம் அதிகரிக்கிறது. பேசும் பாங்கு

அறவே அழிந்துபட்டுப் போகுங்கால் அந்த ஜீவாத்மன் பரவஸ்துவில் லயமாகிருன். அது பிறப்பு இறப்பைக் கடந்த பெருநிலே. தவத்தை வளர்க்க முயலுகின்றவன் மேலோன். தவத்தின் வாயிலாகத் தன்னைத் தூய்மைப்படுத்திப் பேசாத பெருநிலையைப் பெறவேண்டும் என்பது இக்கண்ணியின் உட்பொருள்.

355. பற்றுஒழிந்து சிந்தைப் பதைப்புஒழிந்து
தானே தான்
அற்றிருப்பது என்றைக்கு அமைப்பாய் பராபரமே.

பிரபஞ்ச வாழ்வில் பற்று வைத்திருக்கும் ஜீவாத்மன் ஒருவன் புளியம்பிஞ்சுக்கு நிகராகிருன். பிறவிப்பெருங்கடலே அனுபவித்துப் பார்ப்பதற்கேற்பப் பிரபஞ்சப் பற்றுதல் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைகிறது. அப்படிக் குறைவதே பிரபஞ்ச வாழ்வின் பிரயோஜனமாம். பிறவிகள் எத்தனை எடுத்தாலும் பிரபஞ்ச வாழ்விலுள்ள இன்பதுன்பங்கள் ஒழிந்துபட்டுப் போகமாட்டா என்னும் விவேகம் உதயம் ஆகிறது. அந்த விவேகத்திற்கேற்ப உலகப்பற்றும் தானு கவே தணிகிறது.

மனிதனுக்கு உலகப்பற்று எவ்வளவு ஆழ்ந்ததோ அவ்வளவு பதைபதைப்பு அவனுடைய உள்ளத்தில் ததும் பிக்கொண்டிருக்கிறது. எண்ணிறந்த எண்ணங்களின் வேகம் அந்த ஜீவாத்மனைச் சர்வகாலமும் அலைக்கழித்துக் கொண்டிருக்கிறது. மனேவேகம் தணிவதற்கேற்ப எஞ்சி யிருப்பது பரபோதம். பரபோதத்தில் ஜீவபோதம் கரைந்து போகிறது. கடலில் விழுந்த மழைத்துளிக்கு நிகர் ஜீவ போதம். பரத்தை எட்டிய ஜீவாத்மன் ஜீவன் என்னும் வியக்தியைத் துறந்தவனுய்ப் பரத்தில் ஒன்றுபட்டு இருக் கிருன். இதுவே வாழ்க்கையின் குறிக்கோள்.

356. உருவெளிதான் வாதவூர் உத்தமர்க்குஅல்
லால்இனமும்
குருவழிநின் ரூர்க்கும்உண்டோ கூருய் பராபரமே.

உருவெளி—பரவஸ்து வடிவெடுத்துத் தன்னை விளக்கு தல்; வாதவூர் உத்தமர்—மாணிக்க வாசகர்; குருவழி—குரு சிஷ்ய பரம்பரை.

மாணிக்கவாசக சுவாமிகள் வாதவூரர் என்னும் நாமம் தரித்திருந்தார். பாண்டிய மன்னனிடம் அமைச்சராக நன்கு பணி ஆற்றி வந்தார். உலக வியவகாரங்களைத் திறமை யுடன் நிர்வகித்து வந்ததற்கிடையில் அவரின் மனத்தின் பெரும்பகுதி பரநாட்டத்தில் ஆழ்ந்து பதிந்து இருந்தது. கீழ்க்கரையில் விற்பனைக்காக வந்துள்ள வெளிநாட்டுக் குதிரைகளை விலைக்கு வாங்கத் திருவாதவூரரிடம் மன்னன் ஏராளமான திரவியத்தைக் கொடுத்தனுப்பினுன். கீழ்த் திசையை நோக்கிப் பயணம் சென்றுகொண்டிருந்த வாத வூரர் திருப்பெருந்துறை என்னும் சிவஸ்தலத்தை அணு கினுர். ஆங்குக் குருந்தமரம் ஒன்றின் கீழ் சிவாச்சாரியர் ஒருவர் சிவனடியார்களுக்கு சிவஞான போதம் பாடம் புகட் டிக்கொண்டிருந்தார். அக்காட்சியைக் கண்ட வாதவூரர் தம்மை மறந்தார். அரசாங்கத்திற்குத் தாம் ஆற்ற இருந்த கடமையை மறந்தார். ஆச்சாரியரிடம் தம்மை முற்றிலும் சமர்ப்பித்தார். சிவனுர் தாமே மானுடவேடம் தாங்கி அத் தகைய ஆச்சாரியனுக எழுந்தருளியது வாதவூரரின் தவப் பயனுகும். பரம்பொருளால் ஆட்கொள்ளப்பட்டதின் விளை வாக வாதவூரர் தமக்கு ஏற்பட்ட அல்லல்களையெல்லாம் பொறுமையுடன் சகித்துப் பரமனுக்கு உரியவரானுர். அவர் அறங்களுள் சிறந்ததான துறவறத்தைப் பூண்டார். திருவாசகம் என்னும் தெய்வீகப் பாடல்களைப் பகர்ந்தருளி

னர். இறைவனாலேயே 'மாணிக்கவாசகன்' என்று அழைக்கப்பெற்றார். பண்பட்டுள்ள ஜீவாத்மன் ஒருவனுக்குப் பரமாத்மன் எத்தகைய பேருதவி புரிகிறார் என்பதற்கு வாதவூரருடைய வரலாறே நல்ல எடுத்துக்காட்டு ஆகிறது. வாய்ப்பதற்கு அரிய அப்பெருநிகழ்ச்சி மீண்டும் வாய்க்குமா? வாய்க்குமாகில் அதற்கு இலக்காகக் கூடிய ஆத்மசாதகன் யாராக இருக்கக்கூடும் என்னும் திகைப்பு இக்கண்ணியில் திகழுகிறது. பக்தி ததும்புகின்ற பாங்கில் இந்த நிகழ்ச்சியைத் திரும்பத் திரும்ப உன்னுவதே நல்ல ஆத்மசாதனமாகும்.

357. தேகம்யா தேனும்ஒரு சித்திபெற ஜீவன்முக்தி
ஆகும்நெறி நல்லநெறி ஐயா பராபரமே.

ஜீவாத்மாவாயிருப்பவன் ஜீவன்முக்திபெறுவது மானுட ஜன்மத்தின் குறிக்கோள். ஸ்தூல சரீரம், சூட்சும சரீரம், காரண சரீரம் ஆகியவைகள் சித்தி பெறும்படியாக ஆத்மசாதகன் முயலவேண்டும். தெய்வத்திற்கும், குருவிற்கும், சான்றோர்களுக்கும் ஊக்கத்தோடு பணிவிடை செய்யவேண்டும். சரீரத்தைத் தேவாலயமாகக் கருதவேண்டும். பிரம்மச்சரியத்தில் நிலைநிற்கவேண்டும். அப்படிச் செய்வதால் மானுடமேனியில் தெய்வப்பெற்றி தானாக உருவெடுக்கிறது. அது தேவாலயமாக மாறி அமைகிறது. அதைத் தேகசித்தி எனலாம். மேலும் அவன் அஹிம்சையில் நிலைநிற்கிறான். சத்தியத்தைக் கடைப்பிடிக்கின்றான். சொல்லால் யாரையும் துன்புறுத்துவதில்லை. பிரீதிகரமானதும் நலனை விளைவிப்பதுமாகிய இன்சொல்லையே அவன் இயம்புகின்றான். பக்தி புகட்டும் ஆன்மீக நூல்களை அவன் ஊக்கத்துடன் ஓதிப் பழகுகிறான். நல்ல எண்ணங்களே உள்ளத்தில் உதிக்கின்றன. மௌனம் அல்லது பேச்சற்ற நிலையில் அவனது

மனம் திளைத்திருக்கிறது. இத்தகைய முறைகளைக் கையாளு வதின் வாயிலாக ஆத்ம சாதகனுடைய சூட்சும சரீரம் சித்தியடைந்து வருகிறது. உலக ஆசைகள் அனைத்தையும் ஆத்ம சாதகன் ஒதுக்கித் தள்ளுகிறான். அருள்நாட்டம் அவனிடத்து மேலும் மேலும் ஓங்குகிறது. தெய்வப்பெற்றி நாள் ஏறஏற முன்னணியில் வந்து நிற்கிறது. அதன் வாயி லாக ஆத்ம சாதகனுடைய காரண சரீரம் சித்தி பெறுகிறது. இந்தச் சாதன வகைகள் அனைத்தையும் ஒருங்கே தீவிரமாகக் கையாளுபவனுக்கு முத்தேக சித்தி இறைவனருளால் வாய்க்கிறது.

மூன்று தேகங்களும் மூன்று கவசங்களாய் ஆத்ம சொரு பத்தைச் சார்ந்திருக்கின்றன. சாதகன் சாதனத்திலே பக்கு வம் அடைந்து வருவதற்கேற்பத் தேகாத்ம புத்தி அல்லது தேகத்தைத் தானாகக் கருதுதல் மறைந்துபட்டுப் போகிறது. மூன்று தேகங்களையும் முறையாகச் சித்தி செய்கின்ற சாதகனே ஜீவபோதத்தைத் தாண்டிப் பரபோதத்தில் நிலை பெறுகிறான். அப்பொழுது அவன் ஜீவன் முக்தன் என இயம்பப்படுகிறான். ஜீவாத்மன் ஜீவன் முக்தியில் நிலை பெறுங்கால் மூன்று தேகங்களுக்கும் அப்பாற்பட்டவனாக அவன் தன் நிஜசொரூபத்தில் திகழ்கின்றான். இதற் காக மக்கள் தங்களைப் பக்குவப்படுத்துவது நல்ல நெறி ஆகும்.

358. உலகநெறி போல்ஜடலம் ஓய உயிர்முக்தி
இலகும்எனல் பந்த இயல்போ பராபரமே.

ஜடலம் ஓய-தேகம் விழும்பொழுது. பந்த இயல்போ-பிறவிப் பிணியின் பாங்கோ. உலகநெறி-உலக நடைமுறை. இலகுதல்-விலகுதல்.

எது பிறப்பெடுக்கிறதோ அது விரைவில் அல்லது நாளடைவில் இறப்பு என்னும் செயலுக்கு உட்பட்டாக வேண்டும். ஆத்ம சாதகன் ஒருவன் பழவினைப்பயனாக உடலை எடுக்கின்றான். ஆனால் அந்த உடல் அழிந்துபட்டுப் போகாது யாண்டும் நிலைத்திருக்கும்படி காயகல்பம் பண்ணுவதுதான் சரியான முக்திமார்க்கம் எனக் கருதுபவர் உளர். காய கற்பம் பண்ணி உடல் அழிந்துபட்டுப் போகாது நெடு நாளைக்கு அதைக் காத்து வைப்பது சாத்தியம். ஆனால் நிரந்தரமாக அதைப் பிடித்து வைப்பது உலக நடைமுறைக்கு ஒவ்வாது. நாள்தோறும் அயர்ந்த உறக்கத்தில் ஜீவாத்மன் ஒருவன் தன் உடலுக்கு அன்னியமாகத் தோன்றாநிலையில் இருக்கிறான். அச் செயலிலேயே வாழ்க்கைத் தத்துவம் ஒன்று அடங்கியிருக்கிறது. அண்டம் முழுவதற்கும் நிகழு கின்ற நிகழ்ச்சி பிண்டத்திலும் நிகழ்கிறது. பிண்டத்தில் நிகழுகின்ற நிகழ்ச்சி அண்டத்திலும் நடைபெறுகிறது. இது பிரபஞ்சத்தைப் பற்றிய அடிப்படைக் கோட்பாடு. சமஷ்டியாயிருக்கின்ற பிரபஞ்சம் முழுதுக்கும் வருகின்ற பிரளயம் வியஷ்டியாயிருக்கின்ற ஜீவாத்மன் ஒருவனுக்குச் சிறிதுநேரம் சுஷுப்தி அவஸ்தையில் வாய்க்கிறது. ஆதலால் பிரளயத்தை அறிந்துகொள்ளுதலில் சிரமம் ஒன்றுமில்லை. ஒரு மனிதனுக்குத் தாற்காலிகமாகச் சிறிதுநேரம் வாய்க் கின்ற சுஷுப்தி அவஸ்தை பிரளயத்திற்கு நிகர். அகிலாண்டங் களுக்கும் இந்நிகழ்ச்சி தொடர்ந்து நெடுங்காலம் நிகழ்கின்ற பொழுது அதைப் பிரளயம் என்கின்றோம். பிரளயத்தை நாள்தோறும் சிறிதுநேரம் அனுபவித்து வருகிறோம். அதைச் சுஷுப்தி அவஸ்தை (ஆழ்ந்த உறக்கநிலை) என்கிறோம். அதில் துன்பம் ஏதுமில்லை. உடலினின்று ஒதுங்கியிருப்பது இன்பநிலை என்பதற்கு அயர்ந்த உறக்கமே சான்று ஆகிறது.

நோய்வாய்ப்பட்டிருக்கிற ஒருவன் உடலுணர்ச்சியோடு படுத்திருக்கிறான். அது சரியான உறக்கமன்று. மனிதன் ஒருவனுக்கு எவ்வளவுக்கெவ்வளவு உடல் உணர்ச்சி ஓங்கு கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அவன் பரமானந்தத்திற்கு வேற்றான் ஆகிறான். ஆகையால் காயகல்பம் பண்ண அலைந்து திரிதலில் பயன் ஒன்றுமில்லை. மஹாப்பிரளயம் வருகின்ற பொழுது அகிலாண்டம் அதாவது எங்குமுள்ள ஐம்பூதங்கள் ஒன்றில் ஒன்று ஒடுங்கி மறைந்துபட்டுப் போகின்றன. அத்தகைய மறைவைச் சுஷுப்தி அவஸ்தையில் ஓரளவு நாம் அறிய வருகிறோம். அகிலாண்டங்களும் மறைந்துபட்டுப் போகிற நிலையில் காயகல்பம் பண்ணியவனுடைய உடல் மட்டும் அழியாதிருக்கும் என்று யூகிக்க இடம் எங்கே?

ஆசையை நிறைவேற்ற ஜீவாத்மன் ஒருவன் உடலை எடுக்கின்றான். அந்நிகழ்ச்சியைப் பிறப்பு என்கின்றோம். ஆசைகள் பலவற்றை அவன் நிறைவேற்றுகிறான். அதற் கிடையில் புதிய ஆசைகளையும் அவன் தனக்குத்தானே வரவழைத்துக்கொள்கிறான். நிறைவேறாத ஆசைகளுடன் மனிதன் ஒருவன் மடிகிறான். அந்த ஆசைகளை நிறைவேற்று வதற்கு மற்றுமொரு சரீரம் எடுக்கிறான். இந்தப் போக்கில் பிறவிப் பெருங்கடல் வளர்ந்துகொண்டே போகிறது. இதற்கு ஒரு முடிவு கொண்டுவர முயலுகின்ற முமுக்ஷு ஒருவன் விவேகத்தால் உள்ளத்திலுள்ள ஆசைகள் அத்தனை யையும் ஒதுக்கித் தள்ளுகிறான். நிராசையில் நிலைத்திருக் கிறான். அப்பொழுது அவன் எடுத்துள்ள சரீரம் பிராரப்த கர்மம் ஓயும் வரையில் நிலவுலகில் நிலைத்திருக்கிறது. பிராரப்த கர்மம் ஓய்ந்ததும் தேகமும் வீழ்கிறது. புதிய தேகம் எடுப்பதற்குத் தூண்டுகோலாக ஆசை ஏதுமில்லை. அன்னவன் தேகம் எடுப்பதினின்று முக்தியடைகின்றான்.

அவனுடைய நிஜ சொரூபமாகிய பேரானந்தத்தில் அவன் திளைத்திருக்கிறான். இத்தகைய பிரபஞ்ச அதீதநிலையை நாடுவதுதான் வாழ்க்கையின் குறிக்கோள் என்னும் கருத்து இக்கண்ணியில் அடங்கியிருக்கிறது.

359. பரமாப் பரவெளியாப் பார்ப்பதுஅல்லால்
மற்றுளவர்க்கும்
திரம்ஏதும் இல்லைநன்றாத் தேர்ந்தேன் பராபரமே.

பரமாப் பரவெளியாய் என்பது பரவஸ்துவானது சகுணப் பிரம்மமாகவும் நிர்க்குணப் பிரம்மமாகவும் இலங்கிக் கொண்டு இருக்கிறது எனப் பொருள்படுகிறது. அலைவீசிக் கொண்டும் அலை வீசாதும் கடல் இருக்கிறது. அலைவீசுகிற கடல் வேறு; அலை வீசாத கடல் வேறு எனப் பிரிப்பது பொருந்தாது. ஒரே கடல் இரண்டு நிலைகளிலும் இருந்து வருகிறது. அங்ஙனம் பரவஸ்துவானது சகுணச் சாகாரப் பொருளாகவும் நிர்க்குண நிராகாரப் பொருளாகவும் யாண்டும் இருந்து வருகிறது. பந்தபாசங்களினின்று விடுபடுகிற ஜீவாத்மன் ஒருவன் ஜீவன் முக்தன் ஆகின்றான். சரீரத்தில் கட்டுண்டு இருக்கிற ஜீவன் போன்று அவன் தென்படுகிறான். ஆனால் உடல் தளையை நீக்கிக் கொண்டதினால் அவன் முக்தனாகிறான். அன்னவனுக்குப் பிரபஞ்சத்தின் காட்சி பரம்பொருளின் காட்சியாக மாறுகிறது. அஞ்ஞான நிலையினின்று காண்கின்ற பிரபஞ்சமே ஞானநிலையில் வைத்துப் பார்க்கிறபொழுது பரம்பொருளாகத் தென்படுகிறது. பரம்பொருளாகக் காண்பதே மெய்க்காட்சி. பிரபஞ்சமாகக் காண்பது மயக்கத்தால் வந்துள்ள பொய்க்காட்சியாகும். முக்தி மார்க்கத்தில் சென்றுள்ள சான்றோர்கள் அனைவருக்கும் ஒப்ப முடிந்த முடிவாகும் இது. ஜீவன் முக்தி நிலையில் ஞானி காண்கின்ற காட்சியில் காண்பவனுடைய பாங்குக்

கேற்பப் பரவஸ்து சகுணப்பிரம்மமாகவும்,நிர்க்குணப் பிரம்ம மாகவும் காட்சியளிக்கிறது. நீராடக் கடலுக்குச் சென்ற உப்புப் பொம்மை ஒன்று நீராடிக்கொண்டு இருக்க இருக்க அதனுடைய வடிவத்தை இழக்கிறது. உப்புப் பொம்மை சூனியமாகப் போகவில்லை. நாமரூபத்தை மட்டுமே ஒதுக்கித் தள்ளிவிட்டுத் தன்னுடைய யதார்த்த நிலையில் இருக்கிறது. அங்ஙனம் ஜீவன் முக்தனாக இருக்கிற ஒருவன் விதேக முக்த னாகிறபொழுது பரவஸ்துவின்கண் உள்ள சகுண சாகாரம், நிர்க்குண நிராகாரம் என்பனவெல்லாம் ஒரே அகண்டாகார மாக அமைகிறது என்பதே இக்கண்ணியில் அடங்கியுள்ள கருத்தாகும்.

360. தேடுவேன் நின்அருளைத் தேடும்முன்னே
எய்தில்நடம்
ஆடுவேன் ஆனந்தம்ஆவேன் பராபரமே.

போகத்தை நாடுவதற்கும், யோகத்தை நாடுவதற்கும் இடையில் பெரிய வேற்றுமை இரண்டு உண்டு. பஞ்சேந் திரியங்கள் மூலமாகத் தாற்காலிகமாகப் பெறும் இன்பம் போகம் எனப்படுகிறது. பஞ்சேந்திரியங்களைக் கட்டி ஆண்டுகொண்டு பரமனை நாடுவது யோகம் எனப்படுகிறது. போக நாட்டத்தில் பனையளவு துன்பமும் தினையளவு இன்ப மும் உண்டு. ஆதலால் அந்த நாட்டத்தில் மனிதன் மேலும் மேலும் கீழ்மையுறுகிறான். யோக நாட்டம் அத்தகைய தன்று. யோகத்தினின்று உருவெடுக்கின்ற பேரின்பத்தைச் சாதகன் இன்னும் பெறாது இருக்கிறவிடத்தும் அதில் ஓர் இன்பமுண்டு. யோகத்தைத் தேடியலைதலில் இன்ப முண்டு. யோகம் கைகூடாது தோல்வியடைதலிலும் இன்ப முண்டு. எங்ஙனம் வெளிச்சத்தினிடம் இருள் இல்லையோ அங்ஙனம் யோகநாட்டத்தில் துன்பத்துக்குச் சிறிதேனும்

இடமில்லை. மேலே வீசிய கல் மீண்டும் பூமியை நோக்கித் திரும்பி வருகிறது. வர வர அதற்கு வேகம் அதிகரிக்கிறது. பிரபஞ்சத்திலுள்ள அனைத்தும் புறப்பட்ட இடத்தை நோக்கியே திரும்பிப் போய்க்கொண்டிருக்கின்றன. குறியைச் சென்றடையாதவிடத்தும் சென்றுகொண்டிருப்பதிலேயே சிறப்பு ஒன்று இருக்கிறது. ஜீவர்கள் அனைவரும் பரமனை நோக்கி மேல்நிலைக்குப் போக வழியறிந்தோ, அறியாமலோ முயன்று கொண்டிருக்கின்றனர். வழியறிந்து முயல்வது யோகம். அந்த முயற்சியே பேரின்பத்துக்கு ஏதுவாகிறது. பரமனை நாடுகிறவன் ஆடவும், பாடவும், தேடவும் செய்கின்றான். தோல்வியிலும் அவன் ஆனந்தத்தில் திளைத்திருக்கின்றான். ஏமாற்றம் அவனுக்கு இல்லை. இறுதியில் அவன் பரமனை அடைவது திண்ணம். இதுவே இக்கண்ணியின் கருத்தாகும்.

361. உள்ளம் குழைய உடல்குழைய உள்இருந்த
கள்ளம் குழையஎன்று காண்பேன் பராபரமே.

மனம், மொழி, மெய் ஆகிய திரிகரணங்களை உடையவன் மனிதன். இந்த மூன்று கருவிகளின் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருப்பது மனிதனுடைய பாங்கு. இந்த மூன்று கரணங்களையும் தூயவைகள் ஆக்குவதற்கேற்ப மனிதன் மேலோன் ஆகிறான். இம்மூன்றனுள் மிகச் சூட்சுமமாயிருப்பது மனம் அல்லது உள்ளம். அது பண்பாடடைந்து வருங்கால் ஏனைய கரணங்கள் இரண்டும் தாமாகவே திருந்தியமைகின்றன. உள்ளம் குழைதல் என்பது உள்ளம் கலைவதாகப் பொருள்படுகிறது. உள்ளத்தின் குழைவு அல்லது கரைவதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. ஒன்று உடன்பாட்டுக் காரணம். மற்றது எதிர்மறைக் காரணம். காமம், குரோதம், பொறாமை முதலியன எதிர்

மறைக் காரணங்களாம். அவைகளால் தூண்டடப்பட்டு மனம் கரைந்தால் மனிதன் கீழ்மையுறுகிறான். கடவுள் நாட்டத்தை முன்னிட்டு மனம் கரைந்தால் அது உடன்பாட்டுக் காரணம் ஆகிறது. பரம்பொருளை நாடி மனம் எவ்வளவுக்கெவ்வளவு பதைபதைக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அது புனிதத்தில் மேலோங்குகிறது. பரமனை நாடித் தவித்திருப்பவர்கள் பாக்கியவான்கள். படிப்படியாக அதன் வாயிலாக அவர்கள் மேன்மையுறுகின்றனர். அடுத்தபடியாக உடலின் குழைவு உண்டி சுருங்குதலை முன்னிட்டோ பணிவிடையை முன்னிட்டோ குளிரையும் வெப்பத்தையும் முன்னிட்டோ நிகழக் கூடும். உடலை மனிதன் கடவுள் வழிபாட்டில் பயன்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறான். ஆயினும் வழிபாட்டின் பெயரால் உடலைச் சித்திரவதை செய்யலாகாது. முறையாக அதைப் பயன்படுத்துவதை முன்னிட்டு அதன் செழுமை குறையு மாகில் அதில் கேடு ஒன்றுமில்லை. செழுமை குறைவதற் கேற்பத் தெய்வ மகிமை அதில் மிளிர்கிறது. உள்ளத்தில் உடன்பாட்டு உணர்ச்சி படைத்திருப்பதுபோன்று பாசாங்கு பண்ணலாம். அத்தகைய பாசாங்கில் கொடிய தீங்கு ஏதும் இல்லையெனினும் பாசாங்குக்காரன் காலமெல்லாம் பழைய ஆளாகவே இருக்கிறான். கள்ளம் கபடமற்ற மனநிலை முற்றி லும் வேண்டப்படுகிறது. உள்ளத்தினுள்ளே எத்தகைய சூட்சுமமான ஆசைகள் இருக்கின்றன என்பதைச் சாதகன் அறியவேண்டும். உலக ஆசைகள் உள்ளத்திலிருக்குமாகில் அவற்றை அடியோடு அழிக்க முயலவேண்டும். உள்ளத்தி லிருக்கும் உலக ஆசைகளை மறைத்து வைத்துக்கொண்டு புறத்தில் நல்லவனைப்போல் நடந்துகொள்பவன் கள்ளம் கபடத்தோடு கூடிய மனம் படைத்தவனாகிறான். அத்தகைய வன் முன்னேற்றம் அடைய முடியாது. உள்ளத்தினுள்ளே

நேர்மை ஓங்குதற்கேற்பக் கள்ளத்தனமும் கபடும் தாமாகவே மறைந்துப்பட்டுப்போகின்றன. இத்தகைய பண்பாடுகள் வாய்ப்பதற்கேற்ப ஆத்மசாதகன் இறைவனருளிற்குப் பாத்திரமாகிருன். அத்தகைய திரிகரணப்பண்பாட்டை நான் ஆவலோடு நாடியிருக்கிறேன் என்பது இக்கண்ணியின் கருத்து.

362. பட்டப் பகல்போலப் பாழ்த்தசிந்தை மாளின்எல்லாம்
வெட்டவெளி ஆக விளங்கும் பராபரமே.

மக்கள் அவரவர் மனப்பான்மைக்கு ஏற்பப் பிரபஞ்சத்தைப் பொருள்படுத்துகின்றனர். மனப்பான்மை தெளிவு அடைவதற்கேற்ப உலகக் காட்சியும் திருந்தியமைகிறது. மனம் என்னும் மாயையை மனிதன் அறவே மாய்த்துவிடுவாளுகில் அவன் கண்டு வந்த பிரபஞ்சத்தில் திடீரென்று புதியதொருகாட்சி காண்பான். யாண்டும் நிலைத்துள்ள பரவஸ்துவே பிரபஞ்சமாகக் காட்சி கொடுத்து வந்தது என்பது தெளிவுற அவனுக்கு விளங்கும். மனோநாசமும் மாயையின் விசித்திரமும் ஒன்ருேடொன்று சம்பந்தப்பட்டிருக்கின்றன. மனம்போனவிடத்து மாயையும் மறைந்துபட்டுப் போகிறது. மெய்க்காட்சியே மிஞ்சியிருக்கிறது. மனோநாசத்துக்கு நிகரான அதிசயச் செயல் வேறு ஏதுமில்லை. மனம் அழிந்துபட்டுப் போகுமிடத்து ஜீவவியக்தி ஒழிந்து பட்டுப்போகிறது. பிரபஞ்சக் காட்சியும் பகற்கனவு போன்று பாழாகப் போகிறது. தெய்வக்காட்சி ஒன்றே எஞ்சியிருக்கிறது. இதைப் பெறுவதற்காக மனிதன் படாத பாடுபட்டு வருகிருன். விவேகத்தால் மனிதன் மனத்தை மாய்க்க வல்லவனுகில் அதிவிரைவில் வியவஹாரத்தை ஒழித்துப் பரக்காட்சியில் அவன் நிலைபெறுவான் என்பது இக்கண்ணியின் கருத்து.

363. பார்க்கின்அணுப் போல்கிடந்த பாழ்ஞ்சிந்தை
மாளின்என்னை
யார்க்குச் சரிஇடலாம் ஐயா பராபரமே.

சரிஇடலாம்-ஒப்பாக அதாவது சமமாகச் சொல்லலாம்.

மனிதனுடைய மேன்மைக்கும் கீழ்மைக்கும் முகாமையா யிருப்பது மனம். நல்ல மனம் படைத்தவன் சான்றோன். துஷ்ட மனம் படைத்தவன் அரக்கன். தன் மனத்தைத் திருத்தியமைக்க மனிதன் கடமைப்பட்டிருக்கிறான். எவ் வளவுக்கெவ்வளவு மனம் திருந்துகிறதோ அவ்வளவுக்கவ் வளவு மனிதனிடம் தெய்வீகம் திகழ்கிறது. முற்றிலும் திருந்திய மனம் தெய்வீகத்தில் கரைந்துபோகிறது. ஆத லால் தூய மனமானது சுத்தமான கற்பூரத்தோடு ஒப்பிடப் படுகிறது. சுத்தமான கற்பூரம் எரிந்துபோன பிறகு எரிந்த தட்டில் சாம்பலோ, கரியோ எஞ்சியிருப்பது இல்லை. அங் ஙனம் தூய மனம் தன் பெயரை இழந்து தெய்வீகத்தில் இரண்டறக் கலக்கிறது. அத்தகைய மனத்தைப் படைத் திருப்பவன் பரம்பொருளோடு ஒன்றுபடுகிறான். மனிதன் அடைகிற பேறுகளுள் பரம்பொருளுக்கு நிகரான பேறு ஏது மில்லை. ஆதலால் மனம் மாய்ந்துபோனவிடத்து மனிதன் ஒப்பு உயர்வு அற்ற பரத்தினைப் பெறுகிறான். அத்தகைய வனே பாக்கியவான் என்னும் கருத்து இக்கண்ணியில் அடங்கியிருக்கிறது.

364. பாட்டுக்கோ அன்பினுக்கோ பக்திக்கோ அன்பர்
[தங்கள்
நீட்டுக்குஎல் லாம்குறுகி நின்றாய் பராபரமே.

இறைவனைப்பற்றிய பாடல்களை உருக்கத்துடன் பாடு வது நல்ல ஆத்மசாதனமாகிறது. பாமரனுக்குப் பரமன்

செவிசாய்த்துள்ள நிகழ்ச்சிகள் பல உள. தானே தொடுத்த அல்லது சான்றோர் தொடுத்த பாமாலைகளைப் பயன் படுத்த ஆத்மசாதகர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள். சாத கர்கள் நரஸ்துதி சம்பந்தமான பாடல்களைக் கையாள லாகாது. நரஸ்துதி தெய்வ பக்திக்கு இடையூறு.

ஜீவாத்மனுக்கும் பரமாத்மனுக்கும் உள்ள இணக்கம் அன்பில் தொடங்கிப் பக்தியில் பூர்த்தியாகிறது. இறைவ னுடைய மகிமைகளையெல்லாம் அறிந்துகொள்ளுவதற் கேற்ப அவனிடத்துப் பக்தி உருவெடுக்கிறது. பக்திவலை யில் படுவோன் காண்க என்பது கோட்பாடு. பக்தி ஓங்க ஓங்க ஆத்மசாதகன் தன்னுடைய ஜீவவியக்தியை மறக் கிறான். பரமனுடைய சொரூபத்திலேயே திளைத்திருக் கிறான். கண்ணனோடு கூடி விளையாடிய கோபியர்கள் அவனுடைய இணக்கத்தை அன்பின்மூலம் பெற்றனர். ஒரு சிலர் அன்பு பூணுவதற்கு மேல் அந்த இணக்கத்தை மேல் நிலைக்குக் கொண்டுபோகவில்லை. ஸ்ரீமதி ராதை போன்ற வர்கள் பராபக்தி வாய்க்கப்பெற்றுத் தங்களுடைய சொரூ பங்களையே கண்ணனுடைய அகண்ட சொரூபத்தில் லயப் படுத்தினார்கள். பக்தி அந்நிலையில் பூர்த்தியானது.

நீட்டுதல் என்னும் சொல் ஈதல், கொடுத்தல், படைத் தல் எனப் பொருள்படுகிறது. ஆகுதியாக வேள்வியில் கொடுத்தாலும் படைத்தல் என்பதில் அடங்குகிறது. மானு டன் ஒருவன் இரக்கத்தோடு ஏழை எளியவர்களுக்குப் பொருளை வழங்குவது ஈதல் எனப்படுகிறது. அது ஆத்ம சாதனமாகாது. கொடுத்தல் தனக்கு நிகராக இருப்பவர் களுக்கு வழங்குதல், அதுவும் ஆத்மசாதனமாகாது. படைத் தல் ஒன்றே ஆத்மசாதனமாகிறது. பக்தர்கள் எல்லாரும் தங்களுடைய வாழ்வைப் பரம்பொருளிடத்துப் படைத்துள்

ளார்கள். பரமனுக்கென்றே பணிவிடை புரிந்துள்ளார்கள். விறகுக் கட்டை தன்னைத் தீயிடம் ஒப்படைக்கிறது. அதன் விளைவாக அது தானே தீ ஆகிறது. அங்ஙனம் பரமனுக்கென்றே தங்களை ஒப்படைத்தவர்களிடத்து இறைவன் குறுகி நிற்கின்றார். அல்லது தன்மயமாக அவர்களை அவர் அமைத்து வைக்கிறார் என்பது இக்கண்ணியின் கருத்து.

365. முத்தாந்த வித்தே முளைக்குநில மாய்எழுந்த
சித்தாந்த மார்க்கச் சிறப்பே பராபரமே.

முக்திக்கு முயற்சி பண்ணுவது வாழ்க்கையின் மேலான குறிக்கோள். பூமியிலே வித்தை நடுவதோடு அச்செயல் ஒப்பிடப்படுகிறது. முக்தி மார்க்கம் மனநிலையைப் பொறுத்திருக்கிறது. இடையறாது உலக வாழ்வில் ஈடுபட்டுக் கிடந்த மனமானது தன்னை உலக வாழ்வினின்று விடுவித்துக்கொள்வதும் பரநாட்டத்தில் அது சதா ஈடுபட்டிருப்பதும் முக்தி மார்க்கமாகும். முக்தி நாட்டம் என்னும் விதையை எத்தகைய பூமியில் நடுவது என்பது கேள்வி. நல்ல விளைவைப் பெற விரும்புகின்றவர்கள் பூமியை நன்கு பண்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றனர். ஈண்டுப் பண்பட்ட நிலத்தோடு சித்தாந்த மார்க்கம் ஒப்பிடப்படுகிறது. சித்தாந்தம் என்னும் சொல் தீர்மானிக்கப்பட்ட முடிவு எனப் பொருள்படுகிறது. சமயங்கள் பலவும் இறைவனது திருவுளப் பாங்கின்படி அமைந்தவைகளாம். அந்தந்தச் சரீரத்திற்கேற்ற உணவுவகைகள் பலப்பல இருப்பது போன்று மனப்பான்மைக்கு ஏற்றவாறு சமயமார்க்கங்களும் பலப்பல உள. அவைகளுள் இன்ன சமயத்தை இன்ன முறையில் அனுஷ்டிப்பேன் என்று முடிவு கட்டுவதைச் சித்தாந்தப் படுத்துதல் என்று சொல்லுகிறோம். ஒவ்வொரு ஆத்ம

சாதகனும் அவனவனுடைய இயல்புக்கேற்ற சமயத்தை அனுஷ்டிப்பதே சாலச் சிறந்த முறையாகும். அவனவனுக்குகந்த மார்க்கத்தைச் சித்தாந்தப்படுத்துவது அவனவனுடைய கடமையாகும். ஆத்மசாதகன் ஒருவன் முக்தி மார்க்கத்திலே தான் கடைப்பிடிக்கும் சமய அனுஷ்டானத்தில் தீவிரமாக ஈடுபடவேண்டுமென்பது வாழ்க்கையின் குறிக்கோள். மலையுச்சியை எட்டுவதற்கு மலையின் எப்பக்கத்தினின்றும் மேலே ஏறலாம். மலையுச்சி எல்லார்க்கும் பொதுவானது. அங்ஙனம் இறைவன் எல்லார்க்கும் பொதுவானவன். ஆதலால் அவன் சித்தாந்த மார்க்க சிறப்பு என்று இக்கண்ணியிலே போற்றப் பெறுகிறான்.

366. உன்னா வெளியாய் உறங்காத பேருணர்வாய்
என் ஆவிக்கு உள்ளே இருந்தாய் பராபரமே.

உன்னா வெளியாய்-மனத்துக்கு எட்டாத சிதாகாசமாய்.

உன்னுதல் அல்லது எண்ணுதலாகிய செயல் மனத்துக்குரியது. உன்னுகின்ற மனம் ஆத்ம சைதன்யத்தை உன்னவல்லதன்று. மனத்தின் சலனம் அடங்கியிருக்கின்றபொழுது ஆத்மப் பிரகாசத்தை அது விளக்கவல்லது. அப்பொழுது அது செயலற்றுக்கிடக்கிறது. சூரியனையும் சந்திரனையும் உள்ளபடி பிரதிபிம்பிக்கவல்லது சலனமற்ற ஜலம். அப்படி மனம் சலனமற்றிருக்கும்பொழுது ஆத்மசைதன்யத்தை விளக்குவது போன்று அது தென்படுகிறது. அத்தகைய பாங்கு மனத்திற்கு உண்டு. ஆயினும் அது தானே ஆத்ம சைதன்யமாகாது. ஆத்மசைதன்யமோ மனத்தில் கட்டுப்படாத அறிவுப்பெருவெளி. ஆதலால் அது உன்னாவெளியென இயம்பப்படுகிறது. பிரகிருதி மயமாயிருக்கின்ற மனம் முக்குணத்தால் ஆக்கப்பெற்றது. அதனிடத்தில்

சத்துவகுணம் ஓங்கியிருக்கின்றபொழுது ஆத்ம பிரகாசத்தை விளக்குவது போன்று அது தென்படுகிறது. சலித்துக் கொண்டிருக்கின்றபொழுது பலப்பல எண்ணங்கள் மயமாக அது இலங்குகின்றது. அப்பொழுது அது ரஜோகுணத்தில் இருக்கிறது. பின்பு தமோகுணத்தில் மூழ்கியிருக்கின்ற பொழுது அது கார் இருள் மய்மாக இருந்து வருகிறது. அந்நிலை உறக்கம் எனப்படுகிறது. மனம் உறங்குகிறது. ஆத்மா ஒருபொழுதும் உறங்குவதில்லை. உறங்குகின்ற மனம் ஆத்ம சொரூபத்தைப் பிரதிபலிப்பதில்லை. ஆதலால் ஜடநிலையில் இருக்கும் அது இல்லாதது போன்று ஆகிறது. சூரியனுக்கு எங்ஙனம் உதயமும் அஸ்தமனமும் இல்லையோ அங்ஙனம் ஆத்மாவிற்கு உறக்கமும் விழிப்பும் இல்லை. அது யாண்டும் பேருணர்வாய் இருக்கிறது பேர் உணர் வாகிய ஆத்மா இடத்தில் அடங்குவதன்று. இடம் அதில் தோன்றி இருந்து ஒடுங்குகிறது. நிறைபொருளாகிய ஆத்மா மானுடனுடைய உயிருக்குள்ளே வீற்றிருப்பது போன்று தோன்றுகிறது. உண்மையில் ஆத்ம சைதன்யத்தின் சன்னி தானத்தில் ஆவி அல்லது உயிர் தனக்குரிய வியக்தியைப் பெறுகிறது. திரையின் மீது படக்காட்சி தென்படு வது போன்று அறிவுத்திரை அல்லது சிதாகாசத்தின்மீது ஜீவாத்மாவுக்குரிய உள்ளமும் உயிரும் இடம்பெறுகின்றன. அத்தகைய உள்ளத்தையும் ஆவியையும் தனக்குரியவைகள் என அபிமானிப்பது ஜீவாத்மா. இறைவா, உள்ளத்தையோ ஆவியையோ எனக்குரியவைகளாக அபிமானிக்காது நான் என்னும் ஜீவவியக்தியை உன் சொரூபத்தில் ஒடுங்கச் செய்து அந்த சொரூபமே என்னுடைய நிஜநிலை என்னும் பாங்கைப் பெறுவேனாக என்பது இக்கண்ணியின் கருத்து.

367. தத்துவம்எல் லாம்அகன்ற தன்மையர்க்குச் சின்மயம்ஆம்
நித்தமுக்த சுத்த நிறைவே பராபரமே.

பிரகிருதிக்குரிய தத்துவங்கள் இருபத்து நான்கு. அவைகள் முறையே ஐம்பூதங்கள், அவைகளின் ஐந்து தன் மாத்திரைகள், ஞானேந்திரியங்கள் ஐந்து, கர்மேந்திரியங்கள் ஐந்து, மனம், புத்தி, சித்தம், அகங்காரம் இங்ஙனம் இருபத்து நான்கு தத்துவங்கள் ஆகின்றன. ஆறு சாஸ்திரங்களில் ஒன்றாகிய சாங்கிய சாஸ்திரப்படி தத்துவங்கள் இருபத்து நான்கு. இவைகளையே சமய சாஸ்திரங்கள் முப்பத்து ஆறு தத்துவங்களாகவும், தொண்ணூற்று ஆறு தத்துவங்களாகவும் விரிவுபடுத்தி இருக்கின்றன. ஜீவாத்ம சொரூபத்தைப் பிரகிருதிக்குரிய இருபத்து நான்கு தத்துவங்கள், வெட்ட வெளியாகிய ஜடாகாசத்தை மேகங்கள் படலம் படலமாக மூடிக்கொண்டிருப்பதுபோன்று மூடிக்கொண்டிருக்கின்றன. மேகப் படலங்களை ஒன்றன்பின் ஒன்றாக நீக்கினால் ஆகாசம் தெளிவாக நன்கு விளங்குகிறது. அதே போன்று பிரகிருதிக்குரிய இருபத்து நான்கு தத்துவங்களை நீக்கினால் எஞ்சியிருப்பது சித்சொரூபமாகும். சுத்த சைதன்யம் என்றும் அது இயம்பப்படுகின்றது. ஜீவாத்மன் தன்மீது ஆரோபித்துக்கொண்டுள்ள தத்துவங்களையெல்லாம் ஒதுக்கித் தள்ளினால் எஞ்சியிருப்பது சுத்தசைதன்யம். அது சித் என்னும் பெயர் பெறுகிறது. அதற்கு ஆதி அந்தம் இல்லாததால் அது நித்திய வஸ்து. யாண்டும் இருந்தபடி அது இருக்கிறது. வேறு எப்பொருளோடும் அதைத் தளைக்க முடியாது. ஆதலால் அவ்வஸ்துவானது முக்திநிலையில் நிலைத்திருக்கிறது. இரண்டாவது பொருள் வந்து அதை மலினப்படுத்த முடியாது. ஆதலால் அது

சுத்தவஸ்துவாக இருக்கிறது. ஐம்பூதங்களுள் ஆகாசம் எங்கும் வியாபித்திருப்பதால் அது நிறைபொருள். அதே போன்று சித் ஆகாசம் அறிவுப் பெருவெளியாய் நிலைத்திருக்கிறது. அக்காரணத்தை முன்னிட்டு அது பூரணம் (நிறைவு) என்று போற்றப்படுகிறது. ஜீவாத்மன் தனக்குத்தானே அமைத்துக்கொண்டிருக்கும் தத்துவங்களை ஒதுக்கித்தள்ளுவது வாழ்க்கையின் குறிக்கோள் என்பதை இக்கண்ணி விளக்கிக் காட்டுகிறது.

368. உள்ளக் கொதிப்புஅகல உன்உள்ளே ஆனந்த
வெள்ள மலர்க்கருணை வேண்டும் பராபரமே.

உள்ளம் அல்லது மனத்துக்குப் புறத்தில் சின்னமாய் அமைந்திருப்பது மானச ஸரோவரம். மனோதத்துவத்தை விளக்கும் தடாகம் என்பது இதன் பொருள். இத்தடாகம் கயிலயங்கிரிக்குத் தென்பக்கத்திலிருக்கிறது. காற்று அடிக்கின்றபொழுது இத்தடாகத்தில் அலைகள் வடிவெடுக்கின்றன. அப்பொழுது கயிலயங்கிரியின் பிம்பமோ தடாகத்தின் அடிப்பாகத்தில் உள்ள மணலோ தென்படுவதில்லை. அதேவிதத்தில் ஆசையினால் தூண்டப்பெற்று உள்ளத்தில் கொதிப்பு உண்டாவதால் மனிதன் துயரத்துக்கு ஆளாகிறான். அவனுக்குச் சொந்தமாயுள்ள ஆனந்தம் அப்பொழுது மறைந்து கிடக்கிறது. ஆனால் எப்பொழுதெல்லாம் உள்ளத்தில் துடிப்பு அடங்குகிறதோ அப்பொழுதெல்லாம் ஆனந்தம் தானாக மிளிர்கிறது. யாண்டும் கொதிப்பற்ற நிலையில் மனிதன் தன் மனத்தை வைத்திருக்கமுடியும். ஆசையை அகற்றுதற்கேற்ப ஆனந்தம் தானாகத் திகழுகிறது. அத்தகைய ஆனந்தத்தில் நிலைத்திருக்கும் ஆத்ம சாதகனுடைய அந்தக்கரணத்தில் இறைவனுடைய திருவருள் தானாக மலர்கிறது. அத்தகைய பெருநிலை இறைவா எனக்கும் வேண்டும் என்பதே இக்கண்ணியின் உட்பொருள்.

**369. என்னைப் புரப்பதுஅரு ளின்கடன்ஆம்
என்கடன்ஆம்
நின்னில் பணிஅறவே நிற்கை பராபரமே.**

ஆத்ம சாதகனுக்கு ஜீவபோதம் இருக்கிற வரையில் அதை இறைவனுடைய திருத்தொண்டிற்கென்றே பயன் படுத்தலாம். அப்படி அண்ணலின் பொருட்டுப் பயன் படுத்துதலில் ஆத்ம சாதகன் பரமானந்தம் அடைகிறான். ஜீவவியக்தியைக் கலைத்துத் தள்ளுதலில் அவன் நாட்டம் வைப்பது இல்லை. இறைவனின் பணியின் பொருட்டே தன்னுடைய ஜீவவியக்தி நிலைத்திருக்கட்டும் என்று அவன் இறைவனிடம் பிரார்த்திக்கின்றான். இத்தகைய மனநிலை யில் ஊறியிருப்பவனுக்குப் பிறவிப் பெருங்கடல் ஒருபொழு தும் துன்பத்தை விளைவிக்காது. ஆண்டவனுக்கு அரும் பணிபுரிந்து இன்புற்று இருக்கும் அடியவன் 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்று உணர்ந்துகொண்டு பரவ சத்தில் தோய்ந்திருக்கிறான். இது துவைத பாவனையின் உச்ச நிலையாகும். இத்தகைய பெருநிலையில் இருப்பதில் நல்ல சாதகன் ஒருவனுக்கு ஆர்வம் மிக உண்டாகிறது என்பது இக்கண்ணியின் கருத்து.

**370. தானேஆம் நன்னிலையைத் தந்தஅருள் ஆனந்த
வானே மனாதீத வாழ்வே பராபரமே.**

மனதுக்கு உட்பட்ட வாழ்வெல்லாம் பிரபஞ்ச வாழ் வாகிறது. பிரபஞ்சவாழ்வில் இன்பமும் துன்பமும் சேர்ந்தே அமைந்திருக்கின்றன. துன்பம் கலவாத இன்பம் இவ்வையக வாழ்வில் இல்லை. மனம்போன இடத்தோ ஆனந்த சொரூப மாகிய சிதாகாசமே எஞ்சியிருக்கிறது. அதில் தோய்ந் திருப்பது ஜீவாத்மனுடைய நிஜநிலையாகிறது. அதை

உறுதியாகப் பெறுவதே வீடுபேறு ஆகிறது. முக்திநிலை ஒன்றுதான் நல்லநிலையென இயம்பப்பெறுகிறது. பந்தபாச நிலை ஒருபொழுதும் அதற்கு ஈடு ஆகாது. இறைவா, உன்னுடைய அகண்ட சச்சிதானந்த சொரூபத்தில் என்னுடைய ஜீவபோதத்தை ஒதுக்கித் தள்ளிவிட்டு உன்னுடைய சொரூபம் என்கின்ற நிலைபேருடைய வாழ்விலே நான் நிலைத்திருப்பேனாக என்பது இக்கண்ணியின் கருத்து.

371. மண் ஆதி பூதம்எல்லாம் வைத்திருந்த நின் நிறைவைக்
கண் ஆரக் கண்டு களித்தேன் பராபரமே.

பிரபஞ்சத்தின் தோற்றம், இருப்பு, ஒடுக்கம் ஆகியவைகள் சிவசொரூபம் என்னும் பூரணப்பெருவெளியில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்த விளையாட்டில் ஜீவனுடைய தோற்றம் இடம் பெறுகிறது. ஜீவநிலையைக் கலைத்து விடாது வைத்துக்கொண்டு இறைவனுடைய கிருத்தியங்கள் என்னும் விளையாட்டைக் காண்பதில் ஆத்மசாதகனுக்குப் பேரானந்தம் உண்டாகிறது. நல்ல நடிகன் ஒருவன் நாடக மேடையில் எந்தப் பாத்திரமாக நடித்தாலும் அதில் அவன் மகிழ்வுற்றிருக்கிறான். அங்ஙனம் ஆத்மசாதகன் தன்னை இறைவனுக்குச் சொந்தம் என்னும் உண்மையை அனுபூதியில் அறிந்தான பிறகு தன்னுடைய ஜீவவியக்தி உட்பட நிகழ்கின்ற நிகழ்ச்சிகளெல்லாம் இறைவனுடைய திருவிளையாடல் எனக் கண்டு களித்திருக்கிறான் என்பது இக்கண்ணியின் கருத்து.

372. அறியாமை ஈதுஎன்று அறிவித்த அன்றேதான்
பிறியா அருள் நிலையும் பெற்றேன் பராபரமே.

தாய் தந்தையரிடமிருந்து கல்வியின் பொருட்டு நெடு நாள் பிரிந்திருந்த மாணாக்கனொருவன் விடுமுறை நாட்களில் பெற்றோரைக் காண ஆவலோடு தன் ஊருக்குத் திரும்பி னான். திரும்பி வ்ந்தவன் பெற்றோரைக் காணவில்லை. வீடு பூட்டப்பெற்றிருந்தது. அதை முன்னிட்டு அவன் பெருந் துயரத்துக்கு ஆளானான். அப்பொழுது அவனுக்கு ஒரு செய்தி வந்தது. இவ்வூரில் நிகழ்ந்து வருகின்ற நாடகத்தில் உன் தாயும் தந்தையும் மாறுவேடம் பூண்டு கொண்டிருக் கின்றனர். நாடகம் முடியும் வரையில் காத்திருப்பாயாக என் னும் செய்தி வந்தது. அவனுடைய அறியாமை இது என்று அவனுக்கு அறிவிக்கப்பட்டது. தாய் தந்தையர் இன்னின்ன வேஷம் போட்டிருக்கின்றனர் என்ற செய்தியும் அவனுக்கு எட்டியது. அந்நிலையில் பேற்றோரை விட்டுப் பிரிந்திருந்த வன்போன்று தென்பட்டவன் உண்மையில் பெற்றோரிட மிருந்து பிரித்து வைக்கப்பட்டவன் அல்லன். அதைக் குறித்து அவன் மகிழ்வடைகிறான். அதேபாங்கில் மறைத்தல் என்னும் இறைவனுடைய கிருத்தியத்துக்கு ஜீவாத்மன் இலக்கு ஆகிறான். அருளல் என்னும் செயலுக்கு அவன் பிறகு இலக்கு ஆகுங்கால் மறைத்தல் நிலையை எண்ணி மகிழ்வுறுகிறான். ஜீவர்களாகிய நாம் அனைவரும் இறைவ னுடைய சந்நிதியிலேயே இருக்கிறோம். ஆயினும் இறைவ னுக்கும் நமக்கும் வெகுதூரம் என்று எண்ணி ஏங்கியிருக் கிறோம். அருள்நிலைக்கு நாம் பாத்திரமாகிறபொழுது இறைவனை விட்டு நாம் ஒரு பொழுதும் பிரிந்ததில்லை என்று உணர்ந்து மகிழ்வுறுகிறோம். இம்மேலாம் கருத்து இக்கண்ணியில் அடங்கியிருக்கிறது.

373. **தீதுளனவும் நன்றுளனவும் தேர்ந்துநான்**
தேர்ந்தபடி
ஏதும் நடக்கஒட்டாது என்னே பராபரமே.

இயற்கை முழுதும் கர்ம சொரூபம். அக்கர்மத்தில் தீங்கு விளைவிக்கும் பகுதியும் நலன் விளைவிக்கும் பகுதியும் சேர்ந்தே இருக்கின்றன. எக்கர்மத்தையாவது முற்றிலும் நலன் என்றோ, முற்றிலும் கேடு என்றோ பாகுபடுத்த முடியாது. ஒவ்வொரு கருமத்திலும் நலன் விளைவிக்கும் பகுதியும் கேடு விளைவிக்கும் பகுதியும் சேர்ந்தே இருக்கின்றன. ஆதலால் கருமத்தில் ஈடுபடுகிற ஆத்மசாதகன் ஒருவன் தீங்கையும் நலனையும் சீர்தூக்கிப் பார்த்து எந்தச் சூழ்நிலையில் எந்தக் கர்மத்தின் விளைவாக நலன் அதிகமாகவும் தீங்கு குறைந்ததாகவும் இருக்கிறதோ அந்தக் கர்மத்தை அவன் மேற்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறான். கர்மம் புரிவதை யாருமே தவிர்க்க முடியாது. ஆதலால் கேடு குறைந்ததும் நலன் ஓங்கியும் இருக்கின்ற கர்மத்தை உறுதியாகக் கடைப்பிடித்தல் வேண்டும். துறவறம் பூணுதலைச் சான்றாக எடுத்துக்கொள்ளலாம். ஒருவன் துறவியாகச் சமுதாயத்திலிருந்து விலகிக்கொள்ளும் பொழுது சமுதாய அமைப்பிற்கு அது குறைநிலையாகிறது. ஆயினும் துறவி ஒழுகுகிற பாரமார்த்திகப் பெருவாழ்வு பலபேருக்கு முன் மாதிரியாயிருந்து அவர்களை நல்வழியில் தூண்டுகிறது. ஆக, துறவறம் பூணுதலின் கேடு குறைந்தும் நலன் அதிகரித்தும் இருக்கின்றன. இதை அறிந்திருந்தும் விவேகி ஒருவன் தீவிரமாகத் துறவறத்தில் ஈடுபடாது இவ்வுலக வாழ்விலேயே உழன்று கொண்டிருப்பானாகில் அது பரிதாபகரமான நிலையாகிறது. இம்மேலான கோட்பாடு இக்கண்ணியில் அடங்கியிருக்கிறது.

374. கண்ட அறிவு அகண்டா காரம்என மெய்அறிவில்
கொண்டவர்க்கே முக்தி கொடுப்பாய் பராபரமே.

கண்ட அறிவு என்பதற்குப் பொருள்கள் இரண்டு உள. பஞ்சேந்திரியங்களைக் கொண்டு நுகர்கிற அறிவுகள் யாவும்

கண்கூடாகக் கண்ட அறிவு ஆகின்றன. பஞ்சேந்திரியங்கள் மூலமாக நுகர்கிற அறிவு ஏகதேச அறிவு ஆகிறது. அது முழு அறிவு ஆகாது. பிரபஞ்சத்தை நுகர்தற்கே பஞ்சேந் திரியங்கள் மூலமாக வரும் கண்ட அறிவு பயன்படுகிறது. பரவஸ்துவைச் சுவானுபூதியில் அறிவதற்குப் பஞ்சேந்திரி யங்கள் உதவமாட்டா. ஆதலால் "பொறிவாயில் ஐந்தவித் தான் பொய்தீர் ஒழுக்க நெறி நின்றார் நீடுவாழ்வார்" என் னும் பொய்யாமொழி வந்துள்ளது. பஞ்சேந்திரியங்களை வெல்லுவதால் ஞானக்கண் உருவெடுக்கிறது. பரத்தை அறிதற்கு அது பயன்படுகிறது.

கண்ட அறிவு என்பதற்கு அமைந்துள்ள இரண்டாவது பொருள் வருமாறு : கண்டம் என்றால் துண்டிக்கப்பட்டது. அகண்டம் என்றால் துண்டிக்கப்படாதது. பஞ்சபூதங்களுள் ஆகாசம் என்னும் முதல்பூதம் துண்டிக்கப்படாதது. ஏனைய நான்கு பூதங்களும் துண்டிக்கப்பட்டவைகள். இவற்றுக்கு மாறாகச் சிதாகாசம் அல்லது அறிவுப் பெருவெளி துண்டிக் கப்படாதது. ஜீவாத்மாவின் உள்ளத்தில் அமைந்துள்ள தகர ஆகாசம் துண்டிக்கப்பட்டது போன்று தென்படுகிறது. ஜீவபோதம் துண்டிக்கப்பட்டது. பரபோதமோ துண்டிக் கப்படாதது. கட ஆகாசம் துண்டிக்கப்பட்டது போன்று தென்படுகிறது. மகா ஆகாசமோ அகண்டமாய் யாண்டும் உளது. துண்டிக்கப்பட்டது போன்று தென்பட்டுக்கொண் டிருக்கிற கட ஆகாசம் உண்மையில் மகா ஆகாசத்துக்குப் புறம்பானது அன்று. அதே விதத்தில் துண்டிக்கப்பட்டது போன்று தன்னைக் கருதிக் கொள்கின்ற ஜீவாத்மன் உண் மையில் துண்டிக்கப்படாது யாண்டும் தன்மயமாயிருக்கும் பரமாத்மாவுக்குப் புறம்பானதன்று. இவ்வுண்மையைச் சுவானுபூதியில் அறிகிறவன் முக்த புருஷன் ஆகிறான் என் பது இக்கண்ணியின் கருத்து.

375. ஈறுஆக வல்வினை நான் என்னாமல் இன்பசுகம்
பேறுஆம் படிக்குஅடிமை பெற்றேன் பராபரமே.

ஈறு-முடிவு. வினைக்கும் ஆத்மாவுக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை. மற்றுப் பிரகிருதியோ கர்ம சொரூபம். வினைகள் யாவும் பிரகிருதியில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. உடலும் உள்ளமும் பிரகிருதியின் கூறுகள். அவைகளின் செயலைத் தன் செயல் என ஜீவாத்மன் அபிமானிக்கிறான். இந்த அபிமானத்துக்கு ஈறு அல்லது முற்றுப்புள்ளி போடவேண்டும். பிரகிருதியினுடைய வல்வினைகளினின்று ஜீவாத்மன் தன்னை விடுவித்துக்கொண்டு பரமாத்மாவைச் சார்ந்திருத்தல் வேண்டும். அப்பொழுது பரமாத்மாவின் கண் உள்ள பேரானந்தம் ஜீவாத்மனுக்கும் சொந்தமாகிறது. அதுவே ஜீவாத்மனுடைய யதார்த்த நிலை. தன்னைப் பிரகிருதியினின்று பிரித்தெடுத்துக்கொண்டு பரமாத்மாவினிடம் தன்னை ஒப்படைப்பது குறிக்கோள் என்னும் மேலாம் கருத்து இக்கண்ணியில் அடங்கியிருக்கிறது.

376. பெற்றார் அனுபூதி பேசாத மோனநிலை
கற்றார் உனைப்பிரியார் கண்டாய் பராபரமே.

பாலைப் பருகி அது செரித்து அதனைத் தன்மயமாக்குபவர்களே பாலை முற்றிலும் அறிந்தவர்களும் அனுபவித்தவர்களும் பயன்படுத்தியவர்களும் ஆகின்றனர். அன்னவர்களுடைய நிலைக்கு நிகர் சுவானுபூதியில் நிர்விகல்ப சமாதி அடைவதாம். விகல்பம் ஒன்றுக்கும் ஆங்கு இடமில்லை. எங்கு விகல்பம் இருக்கிறதோ அங்கு மனத்தின் செயல் அமைந்திருக்கிறது. மனமற்றநிலையில் விகல்பம் ஏதுமில்லை சுவானுபூதியின் முடிந்த நிலையில் ஜீவாத்மன் பரமாத்மனில் ஒன்றுபடுகிறான். அதன் பிறகு ஜீவபோதம் இம்மியளவும் எஞ்சியிருப்பது இல்லை. இந்நிலையை அடைவதே ஜீவாத்

மன் வாழ்ந்து வருகின்ற பிரபஞ்ச வாழ்வின் குறிக்கோளாகும்.

எங்குப் பேச்சு இருக்கிறதோ அங்கு ஓசை உண்டு. ஓசை இருக்குமிடத்தை மோனநிலை என்றோ மௌனநிலை என்றோ மொழியலாகாது. பிரபஞ்சம் முழுதும் இயங்கிக் கொண்டிருப்பதால் அது ஓசை மயமாய் அமைந்திருக்கிறது. ஆதலால் பிரபஞ்சத்தின்கண் முடிந்த மோன நிலை இல்லவே இல்லை. பிரபஞ்சத்துக்கு அப்பால் அதற்கு ஆதாரமாயிருப்பது பரவஸ்து. பரவஸ்துவிடம் அசைவு ஏதுமில்லை. ஆதலால் அதனிடத்து மௌனம் நிலைபெற்றிருக்கிறது. அந்த மௌனத்தைச் கற்பதும் அதில் ஜீவ வியக்தியைக் கலைத்துத் தள்ளுவதும் ஒன்றேயாம். கடலில் வீழ்ந்த மழைத்துளி எங்ஙனம் கடலினின்று பிரிவதில்லையோ அங்ஙனம் அனுபூதியின் வாயிலாகவோ மோன நிலையை எட்டுவதன் வாயிலாகவோ பரம்பொருளில் லயமான ஜீவாத்மா பரம்பொருளை விட்டுப் பிரிவதில்லை. இந்நிலையை அடைவதற்கே ஜீவாத்மன் படிப்படியாகத் தன்னைப் பக்குவப்படுத்தி வருகிறான். இதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும் என்னும் கோட்பாட்டைக் 'கண்டாய்' என்னும் சொல் குறித்துக் காட்டுகிறது. ஜீவாத்மன் தன்னைப் பரமாத்மாவிடத்து ஒப்படைத்துவிட வேண்டும் என்பது இக்கண்ணியின் உட்பொருள்.

377. நீயேநான் என்று நினைப்பும் மறப்பும்அறத்
தாயே அனையஅருள் தந்தாய் பராபரமே.

பரவஸ்து ஜீவாத்மனுக்குத் தந்தையாகவும், தாயாகவும் அமைந்துள்ளது. ஆதலால்தான் அப்பரமனுக்குத் தாயுமானவர் எனப்பெயர் வந்துள்ளது. ஜீவாத்மனைத்தோற்று

விப்பதும் பேணுவதும் அப்பரமாத்மாவின் அருள் நிறைந்த செயலாகின்றன. பேணுதல் அலாதியாகத் தாயின் செயலாகிறது. அர்த்த நாரீஸ்வரனாக இலங்குகின்ற பரமனைத் தந்தையாகவும் தாயாகவும் பாவிப்பது முறை. ஜீவனை முற்றிலும் பக்குவப்படுத்திப் பரமனிடம் கொண்டுசேர்ப்பது தாயின் செயல். உலக நடைமுறையில் இதற்கு நல்ல சான்றாகச் சீதாதேவி இலங்குகின்றாள். பிரகிருதித் தாயாகிய அவருடைய கர்ப்பத்தில் பரமாத்மாவின் சொரூபமாகிய ஸ்ரீராமன் தன்பீஜத்தைக் கர்ப்பாதானமாக நிலை நாட்டினான். அதன் பிறகு அவன் தனித்திருந்து கர்ப்பத்தில் வைக்கப்பட்டதை உருவாக்கிப் பெற்றெடுத்து வளர்த்துப் பக்குவப்படுத்தி பரமாத்மா சொரூபமாகிய இராமனிடத்து ஒப்படைக்கிறாள். இச்செயல் ஓயாது இயற்கையின்கண் நிகழ்ந்து வருகிறது. இராமன் தானே குசனாகவும் லவனாகவும் வடிவெடுத்து விளையாடினான். அங்ஙனம் பரமாத்மா தானே அனந்தங்கோடி ஜீவாத்மாக்களாக விளங்கிக்கொண்டிருக்கிறான். அத்தனை ஜீவாத்மாக்களைப் பிரகிருதித் தாய் கிருபை கூர்ந்து பேணிப் பக்குவப்படுத்தி வருகின்றாள். பக்குவமாகி வருகின்ற ஜீவாத்மனுக்கு நனவில் நினைப்பும், உறக்கத்தில் மறதியும் மாறி மாறியமைகின்றன. நனவையும் உறக்கத்தையும் கடந்துள்ள பரபோதத்தில் நினைப்புக்கும் மறப்புக்கும் இடமில்லை. அந்நிலையில் ஜீவாத்மன் பரமாத்மன் என்னும் பேதமில்லை சுத்த சைதன்யமே யாண்டும் உளதாகிறது என்னும் கோட்பாடு இக்கண்ணியில் இனிது அடங்கியிருக்கிறது.

378. சஞ்சலம்அற்று எல்லாம்நீ தான்என்று
உணர்ந்தேன்என்
அஞ்சலியும் கொள்ளாய் அரசே பராபரமே.

உலக நடைமுறைகளில் எனக்கு ஒத்தவைகள் இவை, எனக்கு ஒவ்வாதவைகள் இவை என்று மானுடன் ஒருவன் சஞ்சலப்படுகிறான். இத்தகைய நிலையில் இருந்து அவன் பிறவிகள் பல எடுக்கிறான். ஒவ்வொரு பிறவியிலும் தனக்கு ஒவ்வாதவைகளைத் தகர்த்துப் பேசுதல் பாராட்டுக்குரிய பெரிய செயல் என்று அம்மனிதன் கருதுகிறான். உண்மையில் அவனிடத்துப் பக்தி ஓங்குதற்கேற்ப அவனுடைய மனநிலை மாறியமைகிறது. பாமரர் பேசுகிற புன்மொழிகளிலும் அன்னவர்களுக்குத் தேவையான கோட்பாடுகள் சில புதைந்து கிடப்பதை அவன் அறியவருகிறான். பிறரிடம் குற்றம் காண்பதே தன்னிடத்துள்ள குறைநிலைக்கு அறிகுறி என்பதை அவன் அறிகிறான். அப்பொழுது அவனுக்கு நலன் கேடுகள் அனைத்திடத்தும் உதாசீனனாயிருக்கும் பரந்த மனப்பான்மை வருகிறது. ஈசனுடைய பெருந்திட்டத்தில் எல்லாவிதமான இயல்புகளுக்கும் எல்லாவிதமான பேச்சுக்களுக்கும் எல்லாவிதமான செயல்களுக்கும் இடம் உண்டு என்னும் விவேகம் வருகிறது. அந்த விவேகத்தின் விளைவாகப் பொருந்தாத பேச்சுக்களையும் அவன் பரமனோடே இணைத்துப் பொருள்படுத்துகிறான். அந்நிலையிலிருப்பவனுக்கு யாண்டும் அமைதியே நிலவுகிறது. பரமனுடைய மகிமைகளாகச் செயல்கள் யாவையும் அவன் பொருள்படுத்துகின்றான். அப்படி மனம்மாறி அமைந்தவன் எண்ணுவதும் பேசுவதும் ஒரு போக்கில் கடவுள் வழிபாடாகிறது. குழந்தை ஒன்றன் உள்ளத்தில் புறஉலகிலுள்ள தீமைகள் எங்ஙனம் புலனாவதில்லையோ அங்ஙனம் பக்தனுடைய உள்ளத்தில் நலம்கேடுகளாகிய யாவும் ஈசனுடைய விபூதிகளாகவே விளங்குகின்றன. அத்தகைய மனநிலையை வளர்ப்பது நல்ல ஆத்ம சாதனம் என்பது இக்கண்ணியின் கருத்து.

379. பூதம்முதல் நாதம்வரை பொய்என்ற மெய்யர் எல்லாம்
காதலித்த இன்பக் கடலே பராபரமே.

உயிர்வகைகள் யாவும் இந்திரியங்களின் வாயிலாகப் பஞ்சபூதங்களின் இணக்கத்தால் உண்டாகும் இன்பத்தையே நாடித் திரிகின்றன. மனிதர்களில் பெரும்பான்மையினர் அவ்வாறே பஞ்சபூதங்களின் தன்மாத்திரையாகிய இந்திரியார்த்தங்களில் இன்பம்காண முயலுகின்றனர். மானுட வடிவெடுத்திருக்கும் ஜீவாத்மன் குழந்தைப் பருவத்திலிருந்து விருத்தாப்பியதசைவரை இன்பத்தை ஏதேதோ முறைகளில் தேடித் திரிகின்றான். குழந்தைப் பருவத்தில் இன்பம் பொம்மைகளில் இருக்கிறது. இளமைப் பருவத்தில்இன்பம் விளையாட்டுக்களில் இருக்கிறது. யௌவனத்தில் இன்பம் போகத்தில் இருக்கிறது. காளைப் பருவத்தில் இன்பம் பொருளைச் சேகரிப்பதில் இருக்கிறது. முதுமையில் இன்பம் உறவு கொண்டாடுதலில் இருக்கிறது. ஆனால் இந்த இன்பங்கள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக மறைந்து பட்டுப்போகின்றன. கடைசியாகப் பேச்சின் மூலமாகத் தத்துவ விசாரத்தில் விவேகி இன்பம் காணுகின்றான். தத்துவ விசாரமும் முதுமையில் நோய் வந்து தாக்குமிடத்துப் பயன்படாது போகிறது. பஞ்சபூதங்களைச் சார்ந்துள்ள இன்பம் பூதங்களின் விகாரம் வரும்போது (சரீரத்தில் நோய் வரும்போது) அழிந்துபட்டுப் போகிறது. இறைவனுடைய நாமத்தையே கேட்டு ஆனந்தம் அடைந்துவந்த ஜீவன் அதைக்கேட்க முடியாத காலம் வருகிறபொழுது இன்பத்தை (நாத இன்பத்தை-ஓசை இன்பத்தை) இழக்கிறான்.

மெய்நாட்டமுடையோர் பிரபஞ்சத்தில் எதனிடத்திருந்தும் இன்பத்தை நாடவில்லை. இவையாவையும் ஒதுக்கித்

தள்ளுமிடத்து இன்பம் தங்களுடைய நிஜசொருபத்தி லேயே இருக்கிறது என அனுபூதியில் அறியலாயினர். வாழ்க்கையில் இது அரியதொரு விசித்திரம். எத்தனை எத்தனை பிறவிகளில் எத்தனை எத்தனை விதங்களில் முயன்று தேடிய இன்பம் தன்னிடத்திலேயே இருக்கிறது என்னும் அனுபூதி முற்றுபெறுகிறது. தன்னிடத்தே அமைந் துள்ள இன்பமோ கடலுக்கு ஒப்ப அகண்டாகாரத்தில் விரிந்தோடுகிறது. இதை சுவானுபூதியில் காணுவது வாழ்க்கையின் குறிக்கோள் என்பது இக்கண்ணியின் கருத்து.

380. வாக்குமனம் ஒன்றுபட்ட வார்த்தைஅல்லால் வெவ்வேறாய்ப்
போக்குடைய வார்த்தை பொருந்தேன் பராபரமே.

பலகோடி பிறவிகளில் போகத்தில் உழலுகிற ஜீவாத் மன் யோகத்தை நாடியாகவேண்டும். யோகநாட்டத்துக்கு முதல் படியாயிருப்பது சொல்லையும் செயலையும் ஒன்று படுத்துதலாம். உள்ளத்தில் இருப்பதுதான் உரையாக வடி வெடுக்கவேண்டும். ஆனால் மக்களில் பலர் அவ்வாறு இருப்பது இல்லை. உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும் என வள்ளலார் உரைத்துள்ளார்.

யோகத்தைப் புகட்ட வந்த கிருஷ்ணபரமாத்மா அர் ஜுனனைப் பார்த்து 'நீ பண்டிதன் போன்று பேசுகிறாய்; பாமரன் போன்று விசனப்படுகின்றாய். பண்டிதனோ உயிரோடிருப்பவரைக் குறித்தோ உயிரை இழந்தவரைக் குறித்தோ விசனப்படுவதில்லை. ஆதலால் உன் சொல் லுக்கும் சிந்தைக்கும் இடையில் பொருத்தமில்லை. சொல் லையும் சிந்தையையும் பொருந்தும்படி செய்வதே யோகத்

துக்கு முதல்படி. சிந்தையையும் சொல்லையும் பொருந்தப் பண்ணிய பிறகு செயலையும் அதனூடு பொருத்துதல் வேண்டும். இங்ஙனம் திரிகரணங்களை ஒன்றுபடுத்துபவனே யோகசாதனத்துக்குத் தகுதியுடையவனாகிறான். ஆதலால் சொல்லையும் சிந்தையையும் ஒன்றுபடுத்துவேனாக என்பது இக்கண்ணியின் உட்கருத்து.

381. வன்மைஇன்றி எல்லாம் மதித்துஉணர்வார்க்கு
ஆகெடுவேன்
தன்மைஒன்றும் தோயாத் தடையோ பராபரமே.

இறைவா, நீ கருணாகரன். தாயுள்ளம் படைத்தவன். உயிர்களிடத்து இரக்கம் பூண்டிருப்பவன். உயிர்களனைத்தையும் உனக்கு உரியவைகளாகக் கருதுவதால் வன்மை அல்லது கொடூரத்தன்மை உன்னிடத்துச் சிறிதேனுமில்லை. அறிந்தோ அறியாமலோ மக்கள் புரிகின்ற குற்றங்களை நீ குற்றங்களாகக் கருதுவதில்லை. குற்றத்தைக் குணமாகக் கருதும் பாங்குடையவன் நீ. உன்னுடைய இந்தப் பரந்த பாங்கை நான் அறியாமல் இருப்பது என் மடமை. உன்னை அடைதற்கு உன்னை நோக்கி ஓர் அடி உள்நோக்கி வருபவர்களை ஆட்கொள்ளப் பத்து அடி முந்துபவனாக நீ உள்ளாய். இதை அறிந்துகொள்ளாத பேதமையினால் உன் அருளுக்கு நெடுநாளைக்கு முன்பே சொந்தமாயிருக்க வேண்டிய நான் இதுகாறும் வேற்றானாகவே இருந்து வருகிறேன். குளிர் காலத்தில் சூரிய உதய வேளையில் சூரிய வெளிச்சத்திலிருந்து குளிரை அகற்றுவது முறை. அதற்கு மாறாக மானுடனொருவன் தனுப்பு நிறைந்துள்ள நிழலில் இருந்து கொண்டு குளிரால் நடுங்குவானாகில் அது அவனுடைய குற்றம். அதற்கு நிகராக இறைவா, அறிவின்மையினல் இது நான் என்மீது வருவித்துக்கொண்டுள்ள கேடு ஆகும்.

என் அழிவுக்கு நானே முகாமையாக இருந்து வருகிறேன். அத்தகைய என்னையும் இறைவா ஏதேனும் ஒரு விதத்தில் ஆட்கொண்டருள்வாயாக.

382. பக்தர்சித்தர் வாழிபரி பக்குவர்கள் வாழிசெங்கோல்
வைத்தவர்கள் வாழிகுரு வாழி பராபரமே

சித்தத்தைச் சர்வகாலமும் சிவன் பால் (இறைவன்பால்) வைத்திருப்பவர்கள் பக்தர்கள் எனப் பகரப்படுகின்றனர். பேரன்பே வடிவெடுத்தவர்களாக அன்னவர்கள் விளங்குகின்றனர். பக்தியைக்கொண்டு அவர்கள் பரம்பொருளைத் தங்களுக்குச் சொந்தமாக்குகின்றனர். மற்றும் சித்தர்கள் எனப்படும் சான்றோர்கள் உள்ளார்கள். அவர்கள் மனத்தை முற்றிலும் தன்வயப்படுத்தியவர்கள்; பல அற்புத நிகழ்ச்சிகளைச் செய்து காட்டும் ஆற்றல் மிகப்படைததவர்கள். இவர்களில் அஷ்ட சித்திகள் வாய்க்கப் பெற்றவர்களும் உண்டு. சித்திகள் பலவற்றைப் பெற்றிருந்தும் அவைகளைப் பயன் படுத்தாதிருப்பவர்களும் அவைகளில் மயக்குறாதிருப்பவர்களும் பாராட்டத்தக்க பெருமக்களாகின்றனர். அத்தகைய சித்தர்களும் பரிபூரணத்தை எட்டியவர்களாம்.

மனம், மொழி, மெய் ஆகியவைகளில் தூய்மையுடையவர்கள் பரிபக்குவ நிலையை அடைந்தவர்களாவார்கள். நாட்டின் நலன் கருதி செங்கோல் தாங்கி ஆட்சி நடாத்தும் சீரியர்களைப் பரிபக்குவமடைந்துள்ள பெருமக்களாகப் போற்றுவது முறை. ஈசுவர மகிமைகளை இயம்ப வருகிற கிருஷ்ண பரமாத்மா நரர்களுள் நர அதிபனாகி இருப்பது தெய்வத்தின் மகிமை என்று தெரிவிக்கிறார். நாடாளும் மகிமை வாய்க்கப்பெற்றிருப்பவர்களை மகாவிஷ்ணுவின் அம்சமெனப் பொருள்படுத்துவது ஐதீகம்.

குரு என்னும் சொல் மூத்தவன் எனப் பொருள்படுகிறது. வயதில் மூத்தவன், அனுபவத்தில் மூத்தவன், அறிவில் மூத்தவன், பண்பாட்டில் மூத்தவன், அருளுக்கு இலக்காவதில் மூத்தவன், பூரணததை எட்டுவதில் மூத்தவன்—ஆகிய இவர்கள் எல்லாரும் குரு ஸ்தானத்தைப் பெறத்தகுதியுடையவர்களாம். ஜீவகோடியனைத்துக்கும் குருவாகத் தக்ஷிணாமூர்த்தி இலங்குகின்றார். பேச்சற்றவராயிருந்து பரிபூரணத்தை அவர் தமது சொரூபத்தின் வாயிலாக யாண்டும் விளக்கிக்கொண்டிருக்கிறார்.

மேன்மையுற விரும்புகிற மக்கள் மேலோரைப் பின்பற்றுவதே முறையாகும். மேன்மையைப் போற்றுதற்கேற்ப மனிதனுக்கு மேன்மை வந்து வாய்க்கிறது. யார் யார் எல்லாம் போற்றுதற்குரியவன் என்னும் கோட்பாடு இக்கண்ணியில் இலங்குகிறது. போற்றுதற்குரிய பெருமக்கள் எல்லாரையும் போற்றிப் பரிபூரணத்தை எட்டுவோமாக என்பது இக்கண்ணியின் கருத்தாம்.

383. கல்லாதேன் ஆனாலும் கற்று உணர்ந்த மெய் அடியார்
சொல்லாலே நின்னைத் தொடர்ந்தேன் பராபரமே.

நூலறிவும் பரஞானமும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டவைகள் அல்ல. பண்டைக் காலத்து ரிஷிகள் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். அக்காலத்தில் நூல்களும் அமையவில்லை. ஆயினும் ரிஷிகள் எல்லாரும் தீர்க்கதரிசிகளாகத் திகழ்ந்தார்கள். இந்திரிய சுகபோகங்களை அறவே துறந்தவர்கள். மனத்தை முற்றிலும் தூயதாக்கியவர்கள். பரம்பொருள் நாட்டத்தில் தீவிரமாகக் கருத்தைச் செலுத்துகிறவர்கள் யாராயிருந்தாலும் சரி,

எக்காலத்தவர்களாயிருந்தாலும் சரி, எந்த நாட்டைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் சரி, எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் சரி அன்னவர்கள் பரஞானத்தைப் பெறுவது திண்ணம் என்பது இக்கண்ணியின் உட்கருத்து.

**384. சொல்இறப்பச் சற்குருவாய்த் தோன்றிச்
சுகம்கொடுத்த
நல்லவர்க்கே கொத்தடிமை நான்காண் பராபரமே.**

கொத்தடிமை-யாண்டும் அடிமையாயிருத்தல்.

இயற்கையில் அமைந்துள்ள கோட்பாடு ஒன்று ஞானத் துறைக்கும் பொருந்தியதாகிறது. நன்றாக முதிர்ந்து பழுக்கும் தருவாயில் உள்ள மாங்காய்கள் அடங்கிய கூடையில் பழுத்த மாம்பழத்தை வைத்தால் அவ்முதிர்ந்த காய்கள் அதிவிரைவில் பழங்களாக மாறுவதைக் காணலாம். நல்லார் இணக்கத்துக்கு இது சான்றாகும். அருளாளர்களிடமிருந்து அருளைப் பெறுதற்கு இயற்கையில் இது நல்ல சான்றாகிறது. ஆத்ம சாதகனுடைய மனபரிபாகத்திற்கு ஏற்ப சான்றோர்களின் இணக்கத்தால் ஞானபரிபாகம் விரைவில் அமைகிறது. சான்றோர்களுடன் கூடி வாழ்ந்திருப்பவர்கள் கேள்வி ஞானம் சிறிதும் இல்லாதிருந்தாலும் அவர்கள் பரஞானத்துக்குத் தகுதியுடையவர்கள் ஆகிறார்கள். தக்ஷிணாமூர்த்தியின் முன்னிலையில் முற்றிலும் பரிபாகம் அடைந்திருந்த நால்வர் வந்து அமர்ந்தனர். பேச்சுக்கு இடமில்லாமலேயே மௌனநிலையில் அந்நால்வரும் பரிபூரணத்தை அடையப்பெற்றனர். சத்சங்கத்தின் மகிமையால் ஆத்மசாதகன் ஒருவனுக்கு ஞானம் சாத்தியமாகும் என்னும் கோட்பாடு இக்கண்ணியில் அடங்கியிருக்கிறது.

385. முக்திக்கு வித்துஆன மோனக் கரும்புவழி
தித்தித் திடவிளைந்த தேனே பராபரமே.

முக்தி என்பது விடுதலை. ஜீவாத்மன் பிரபஞ்சத்தின் கூறுகளாகிய உடல், உள்ளம் ஆகியவைகளினின்று விடுதலை அடைவது முக்தியாம். முக்திக்குப் பக்குவமாய்க் கொண்டிருக்கும் பாங்கு இக்கண்ணியில் இயம்பப்படுகிறது. மோனக் கரும்பு என்னும் கூற்றில் கருத்து மிகப் புதைந் திருக்கிறது. மனம் கூத்தாடும் பொழுது அது சொல்லாகப் பரிணமிக்கிறது. மானுடன் ஒருவன் பேச்சைப் பெருக்குதற் கேற்ப அவனிடம் அசாந்தி அதிகரிக்கிறது. பேச்சைக் குறைப்பதற்கேற்ப அமைதி வாய்க்கிறது. மனம் ஒடுங்கி வரும்பொழுது எண்ணங்கள் குறைகின்றன. அதைத் தொடர்ந்து பேச்சும் பின்னணிக்குப் போகிறது. பேச்சற்ற நிலையில் ஆனந்தம் இருக்கிறது. அதற்குச் சான்று அயர்ந்த உறக்கம். அயர்ந்த உறக்கத்தில் மனத்துக்கு வேலையில்லை. அது ஒடுங்கிப் பின்னணியில் கிடக்கிறது. அதன் விளை வாகத் தூங்குகிற ஜீவன் ஆனந்தத்தில் திளைத்திருக் கிறான். இந்த ஆனந்தம் கரும்புக்கு நிகர். உடல் ஆரோக் கியமாக இருக்கிறபொழுது அதைப்பற்றிய உணர்வு மனித னுக்கு உண்டாவது இல்லை. நோய்களுள் கொடிய நோய் காமநோய். அதற்கு ஆளாகும் மானுடன் என்னென்ன விதங்களில் உடல் உணர்வில் திணறுகிறான் என்பது வெளிப்படை. நோய்வாய்ப்பட்டிருக்கின்ற பொழுது உட லைப் பற்றிய உணர்வே முன்னணியில் நிற்கிறது. அவ் வுணர்வு துன்பமயம். உடல் உணர்வினின்றும், உள்ளத்தின் செயல்களினின்றும் விலகி நிற்பதற்கேற்ப ஆனந்தம் ஓங்கு கிறது. ‘ஆனந்தம் பிரம்மம்’ என்பது வேத வாக்கு. ஆனந் தத்துக்கு ஈண்டு தேன் அறிகுறியாக அமைந்துள்ளது.

பரவித்தைக்கு மதுவித்யா என்பது மற்றொரு பெயர். மது என்னும் சொல் தேனைக் குறிக்கிறது. முக்திக்கு ஆயத்த மாய்க்கொண்டு வரும் ஆத்மசாதகன் உடல் உணர்வினின் றும் உள்ளத்தின் சலனத்தினின்றும் படிப்படியாக விடுதலை யடைந்து வருகிறான். அந்த விடுதலைக்கேற்ப அவனுடைய நிஜசொரூபமாகிய ஆனந்தம் தானாக முன்னணிக்கு வரு கிறது என்னும் கோட்பாடு இக்கண்ணியில் அடங்கியிருக் கிறது.

386. நித்திரையும் பாழ்த்த நினைவும்அற்று நிற்பதுவோ
சுத்த அருள் நிலை நீ சொல்லாய் பராபரமே.

நித்திரையில் இரண்டு கூறுகள் இருக்கின்றன. அவை கள் முறையே சொப்பனாவஸ்தை, சுஷுப்தி அவஸ்தை என இயம்பப்படுகின்றன. சொப்பனாவஸ்தையில் ஸ்தூல தேகம் செயலற்றுக் கிடக்கிறது. ஆனால் சூட்சும சரீர மாகிய உள்ளம் ஏதேதோ உலகங்களைக் கற்பனை பண்ணிக்கொள்கிறது. இன்ப துன்பங்களையும் அது வர வழைத்துக் கொள்கிறது. ஆதலால் சொப்பனாவஸ்தை ஜாக்கிரதாவஸ்தைக்கு நிகர். பிரபஞ்ச வாழ்வின் பாங்குகள் எல்லாம் இவ்விரண்டு அவஸ்தைகளில் இருக்கின்றன. பின்பு சுஷுப்தி அவஸ்தையில் மனம் ஒடுங்கிக் கிடக்கிறது. அப்பொழுது அகவுலகும் இல்லை; புறவுலகும் இல்லை. ஆயினும் ஆத்மன் தன்னுடைய நிஜநிலையாகிய ஆனந்தத் தில் திளைத்திருக்கிறான். தமோகுணத்தின் ஆதிக்கத்தால் அந்த ஆனந்தம் மூடப்பட்டிருக்கிறது. ஆயினும் அது அழிந்து போவதில்லை. இது ஜீவர்கள் எல்லாருடைய அனுபவம். இனி ஜாக்கிரதாவஸ்தையில் மனதினுடைய கூத்தாட்டத்தைக் குறைப்பதற்கேற்ப அமைதியும் ஆனந்த மும் மேலிடுகின்றன. மனத்தை அறவே ஒழித்துப் பாழ்

படுத்துவது வாழ்வின் குறிக்கோள். மனதற்ற நிலையைப் பரிசுத்த நிலையெனத் தாயுமானவர் மற்றொரு இடத்தில் தெரிவிக்கிறார். மனம் ஒடுங்கியிருக்கும் நிலைக்கு சுஷுப்தி என்று பெயர். மனம் ஒதுக்கப்பட்டிருக்கும் நிலைக்குச் சமாதி என்று பெயர். சமாதி, சுஷுப்தி ஆகிய இரண்டு நிலைகளிலும் கால, தேச, நிமித்தமில்லை. ஆனால் அக்ஞான மயமாயிருக்கும் சுஷுப்தி நிலைக்குப் போகிற மனிதன் பழையபடி கட்டுண்டவனாகவே அதனினின்று விழித்து எழுந்திருக்கின்றான். ஆனால் சமாதி நிலைக்குப் போகிற மனிதன் அக்ஞானத்தை அறவே ஒதுக்கி விட்டு நிறைஞானியாக மாறுகிறான். சமாதி எத்தகையது என்பதை ஒவ்வொரு ஜீவனும், தான் தான் அனுபவிக்கும் சுஷுப்தியினின்று யூகித்துக்கொள்ளலாம். நிரந்தரமாக மனத்தை ஒதுக்கித் தள்ளுவது வாழ்க்கையின் குறிக்கோள் என்னும் கோட்பாடு இக்கண்ணியில் அடங்கியிருக்கிறது.

387. மண்ணும் மறிகடலும் மற்றுஉளவும் எல்லாம்உன்
கண்ணில் இருக்கவும்நான் கண்டேன் பராபரமே.

மறிகடல்-அலை வீசிக்கொண்டிக்கும் கடல்.

பரவஸ்துவும் அதில் தோன்றி, இருந்து, ஒடுங்குகின்ற பிரபஞ்சமும் ஒருவிதத்தில் இன்று நாம் கண்டுவரும் திரைப் பட அமைப்பை ஒத்திருக்கின்றன. திரை நிரந்தரமானது அதில் தென்படும் படக்காட்சிக்குத் தொடக்கமும், இருப்பும், ஒடுக்கமும் உண்டு. இப்படக்காட்சியில் திரை வேறு, அதன் மீது ஆரோபிக்கப்பட்டிருக்கும் படம் வேறு. வெளிச்சம், இருள் ஆகியவற்றின் மயமாகப்படம் அதன் மீது மற்றொரு யந்திரத்தினிடத்திருந்து ஏற்படுகிறது. ஆனால் பரம்பொருள் என்னும் அறிவுப் பெருவெளி தன்னருளால் தன்னிடத்திருந்தே பிரபஞ்சத்தையும் உயிர்வகைகளையும்

தோற்றிக்கொள்கிறது. தோற்றத்துக்கு வந்துள்ள ஜகத்தும் ஜீவனும் பின்பு அந்தப் பரத்துக்குள்ளேயே ஒடுங்குகின்றன. ஆயினும் பரத்தின்கண் எந்தவிதமான விகாரமும் உண்டாவதில்லை. இதை அனுபூதியில் அறிந்துகொள்ளுதல் வாழ்க்கையின் குறிக்கோள் என்பது இக்கண்ணியில் அடங்கியிருக்கிறது.

388. பூட்டிவைத்து வஞ்சப் பொறிவழியே என்தனைநீ
ஆட்டுகின்றது ஏதோ அறியேன் பராபரமே.

பூட்டிவைத்து-சரீரத்தில் ஆத்மனாகிய என்னைப்பூட்டிவைத்து.

பொறிகளில் கட்டுண்டு இருப்பவன் ஜீவாத்மா. பொறிகள் ஐந்து உள. அவைகளின் துணைகொண்டு பிரபஞ்சம் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனப் புலப்படுத்தப்படுகிறது. ஐம்பொறிகளை ஒதுக்கிவைத்தால் பிரபஞ்சம் மறைந்துபட்டுப்போகிறது. அயர்ந்த உறக்கமே இதற்குச் சான்று. உறக்கத்தில் அடைகிற இந்நிலையைச் சாதனத்தின் வாயிலாகச் சாத்தியப்படுத்துவது வாழ்க்கையின் குறிக்கோள். பொறிகளை வென்றவனுககு மெய்க்காட்சி மிக எளிது. பொறிகளுக்கு அடிமைப்பட்டிருக்கிறவன் பிரபஞ்சக் காட்சியில் திணறிக்கொண்டிருக்கிறான். இந்த மயக்கத்தில் அவன் அகப்பட்டுக்கொண்டிருப்பது அதிசயமன்றோ என்பது இக்கண்ணியின் கருத்து.


389. பொய்உணர்வாய் இந்தப் புழுக்கூட்டைக் காத்திருந்தேன்
உய்யும் வகையும் உளதோ பராபரமே.

உய்யும்வழி-கடைத்தேறும் வழி.

மானுடனொருவன் தன்னந்தனியனாய் ஓர் அறையில் தாளிட்டுக்கொண்டு படுத்துறங்கினான். மங்கலான விளக்கு ஒன்று அவ்அறையினுள் எரிந்து கொண்டிருந்தது. படுத்தவன் கனவு கண்டான். கனவிலே பகைவன் ஒரு வனைச் சந்தித்தான். இருவர்களுக்கிடையில் காரசாரமான பேச்சுக் கனவிலே நடந்தது. பிறகு இருவரும் கை கலந் தார்கள். எதிரி வாளால் இவனை ஓங்கிக் குத்தினான். வாள் நெஞ்சைப் பொத்துக்கொண்டு முதுகுப்பக்கம் வெளியே வந்தது. 'செத்தேன்' என்று சொல்லிக்கொண்டு வீழ்ந்தான். கனவின் வேகத்தால் காலை ஓங்கித் தரையில் அடித்தான். தூக்கத்தினின்று அவன் எழுந்தான். அடி பட்ட காலைத் தடவிக்கொண்டான். நெஞ்சைத் தடவிப் பார்த்தான். வாளால் நெஞ்சு குத்தப்படவில்லை, தான் சாகவில்லை, எதிரி அறைக்குள் இல்லை, தான் இருந்தது உறுதியாயிற்று. அது ஸத் சொரூபம். அந்நிலை அறியப்பட் டது அது சித்சொரூபம். அந்நிலை அவனுக்குத் திருப்தியைக் கொடுத்தது. அது ஆனந்த சொரூபம். ஸத் சித் ஆனந்தம் மனிதனுடைய நிஜசொரூபம். கனவு நிலை நீங்கி நனவு நிலை வந்த பின்பு முந்தையது மறைந்துவிட்டது. நல்வாழ்க்கை வாழ்ந்து ஆத்மபோதம் வாய்க்கிறபொழுது நனவுலக வாழ்வு கனவுபோன்று அடிபட்டுப் போகின்றது. எண்ணறிய பிறவிகளை எடுத்து அவன் பண்ணுகிற ஆராய்ச்சிக நீண்டதொரு கனவேயாகும். பிரபஞ்ச வாழ்வாகிய கனவி னின்று விழித்துக்கொள்ளுதலே ஆத்மபோதம் எனப்படு கிறது. ஆத்ம போதத்தில் மனிதன் நிரந்தரமாக உய்வடை கிறான் என்பது இக்கண்ணியின் கருத்து.

இராமாயணம்

போவனத் தொடர் 128



இயற்றியவர்

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்